கலைஞரின்
கடிதங்கள்

41

25.11.2007 - முதல்
21.01.2009 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 41

25.11.2007 - 21.01.2009

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
அண்ணா அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00**

CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
அன்பழகன் நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது.‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,



(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3306. உடன்பிறப்பே, உன் இலட்சியப் பயணம் தொடரட்டும்!	25-11-2007	23
3307. உறவு வேலி உறுதிப்பட வாரீர் திருநெல்வேலி!	26-11-2007	33
3308. பொங்குற்ற சிங்கங்கள் எங்குற்றனவோ!	27-11-2007	39
3309. அன்று கண்டதும்; இன்று காண்பதும் அதே நிலா!	28-11-2007	50
3310. மாநாட்டில் அணிவிக்கும் மணி முத்து மாலை!	29-11-2007	60
3311. நெல்லை - கழக இளைஞரணி மாநில மாநாடு (23) பாதை மாறுவதுமில்லை; பயணம் நிற்பதுமில்லை!	30-11-2007	69
3312. நெல்லை - கழக இளைஞரணி மாநில மாநாடு (24) சிங்கத் தமிழன் செண்பக இராமன்!	1-12-2007	80
3313. நெல்லை - கழக இளைஞரணி மாநில மாநாடு (25) “கயிற்றில் தொங்கிய கணபதி!”	2-12-2007	88

3314. மருத்துவத் துறையில் மகத்தான சாதனைகள்!	6-12-2007	100
3315. நெல்லை இளைஞர் மாநாடு; இல்லை அதற்கோர் ஈடு!	19-12-2007	109
3316. வாய்மை ஆட்சி வழங்கும் வண்ணத் தொலைக்காட்சி!	27-12-2007	114
3317. வலிவோடும் பொலிவோடும் வளர்ப்போம் கழகத்தை!	9-1-2008	124
3318. மடலும் மருந்தின் துளிகளும்!	20-1-2008	131
3319. நடுவண் அரசுக்கு நமது வேண்டுகோள்!	6-2-2008	135
3320. குறைகுடம் கூத்தாடும் என்பது பழமொழி!	7-2-2008	142
3321. திரை விலகியதும் தெளிவாகும் புள்ளிவிவரம்!	8-2-2008	152
3322. இடையில் வீழ்ந்து, எழுந்த இன்பத் தமிழகம்!	9-2-2008	161
3323. விவரம் புரியாமல் வித்தாரம் பேசுவதா?	10-2-2008	169
3324. அடக்கம் தேவை; ஆணவமல்ல!	12-2-2008	176
3325. எமது தமிழ்நாட்டு மக்கள் ஏமாந்த சோணகிரிகள் அல்ல!	19-2-2008	182
3326. நெஞ்சுக்கு நீதி 5ஆம் பாகம்!	22-2-2008	189

3327. சலுகை, சலுகை; சகல உழவர்க்கும் உவகை, உவகை!	23-2-2008	191
3328. குல விளக்கே! கொடியேந்தி வருக கடலூருக்கு!	13-6-2008	198
3329. புல்லரித்ததோ; செல்லரித்ததோ!	17-6-2008	206
3330. மத்திய மாநில அரசுகள்; மக்கள் அரசுகளே!	4-8-2008	209
3331. மத்திய மாநில அரசுகள்; மக்கள் அரசுகளே! (2)	5-8-2008	216
3332. எங்கள் முகமும்; உங்கள் முதுகும்!	24-8-2008	223
3333. பண்பாளர்களும்; வீண் வம்பாளர்களும்!	5-10-2008	229
3334. “பத்திரிகா தர்மம்” படும்பாடு	8-10-2008	235
3335. தியாகுவின் நெஞ்சம் தீயோர்க்கு அமையுமா?	14-10-2008	240
3336. நெஞ்சுயர்த்தி வந்திடுக; சென்னைக்கு!	18-10-2008	245
3337. நாம் காணும் நம்பிக்கை நட்சத்திரம்!	19-10-2008	252
3338. உதவாதினி ஒரு மாதம்; உடனே விழி தமிழா!	20-10-2008	260

3339. ஒவ்வொரு தமிழனும் காட்டுகின்ற உணர்வு!	21-10-2008	271
3340. சங்கம் முழங்கிட; வங்கக் கடலென வருக!	23-10-2008	281
3341. அடிமை விலங்கு அறுபட; அமைதியின் சுகந்தம் வீசிட; அணிதிரண்டதே மனிதச் சங்கிலி!	25-10-2008	285
3342. இலங்கைத் தமிழருக்காக; இங்குள்ள தமிழர் ஒன்றாவோம்!	3-11-2008	294
3343. இன ஒற்றுமை; அடடா; எத்தனை எத்தனை குரல்கள்!	5-11-2008	303
3344. “தீக்கதிர்” கேலிச் சித்திரம்!	15-11-2008	308
3345. வரட்டும் பார்க்கலாம் வழக்கு!	19-11-2008	312
3346. கொடிய வேதனை - குமுறும் நெஞ்சம்!	21-11-2008	317
3347. மாசறு பொன்னே; வலம்புரி முத்தே!	23-11-2008	326
3348. தடைக்கல் ஆகாதீர்; தள்ளி நிற்பீர்!	1-12-2008	328
3349. “எத்தனைக் காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?”	3-12-2008	335
3350. நெடுமாறன் இப்படித் தடுமாறலாமா?	8-12-2008	340
3351. அண்ணா சொன்ன அமுத மொழி!	9-12-2008	345
3352. உன்னை நம்பித்தான் உடன்பிறப்பே!	10-12-2008	349

3353. தியாகிகளைப் போற்றும் தீரர் முகாம் தி.மு.க.	11-12-2008	353
3354. யார்தான் குறுக்கே நிற்க முடியும்?	14-12-2008	359
3355. திருமங்கலம் தேர்தலும் - திடீர் அறிவிப்பும்!	15-12-2008	363
3356. எளிதாகப் புரிந்து கொள்வாய்!	16-12-2008	367
3357. அகதிகளும் - ஆனந்த விகடனும்!	21-12-2008	371
3358. யெச்சூரியின் எச்சரிக்கை இஃது!	23-12-2008	376
3359. வளைந்த வாளாயினும்; விளைந்திடும் வெற்றி!	25-12-2008	380
3360. என் தோள் வலியே நீ தான்!	16-1-2009	386
3361. நடுவண் அரசை நம்பியிருப்போம்!	17-1-2009	388
3362. "அரக்கு மாளிகை" சதி!	20-1-2009	393
3363. சொல்லில் செயலில் பண்பாடு!	21-1-2009	397

3306. உடன்பிறப்பே, உன் இலட்சியப் பயணம் தொடரட்டும்!

உடன்பிறப்பே,

நெல்லைச் சீமையிலே தமிழ் வளர்த்த கால்டுவெல் பாதிரியார் குறித்து, நேற்றையக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதுபோலவே வீரமா முனிவர், ஜி.யு. போப் போன்ற கிறித்தவ மதப் போதகர்களும் நெல்லைச் சீமையிலே ஆற்றிய பணிகள் அதிகமாகும்.

கிறித்தவர்களைப் போலவே இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த உமறுப் புலவர் அவர்கள் கூட, நெல்லைப் பகுதியிலேதான் கல்வி பயின்று, நபிகள் நாயகத்தின் வரலாற்றினைச் சீறாப் புராணமாகப் பாடினார். காயல்பட்டினம், தென்காசி, மேலப் பாளையம், பாளையங்கோட்டை, கடையநல்லூர் போன்ற பகுதிகளில் இஸ்லாமிய சமுதாயத்தினர் பெருமளவில் உள்ளனர். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள், இந்த நெல்லைச் சீமையிலே "பேட்டை"யில் பிறந்தவர்தான்.

இந்துக்கள் என்ற வகையில் இந்தச் சீமையிலே மறவர் குலத்தினர், நாடார் சமுதாயத்தினர், ஆதி திராவிட சமுதாயத்தினர், யாதவ சமுதாயத்தினர், நெல்லை வெள்ளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த பிள்ளைமார்கள், கடற்கரை பகுதிகளில் மீனவர் சமுதாயத்தினர், ஒருசில பகுதிகளில் நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள்.

நெல்லைச் சீமைக்கு மற்றொரு பெருமை தாமிரபரணி நதி. பொருநை என்று போற்றப்படுவது இந்த நதி. சோழப் பெரு நாட்டின் காவேரி நதி, நெற்களஞ்சியத்துக்குக் காரணமான நதியெனினும் - நெல்லையில் "தாமிரபரணி" நதி, செழிப்புமிகு விளைச்சல் வழங்கும் நதியென இன்றளவும் பாராட்டப்படுகிறது.

திருநெல்வேலியில் இளைஞர் அணி சார்பில் மாநில மாநாடு நடைபெறுகிறது என்றபோதிலும், முன்பு நெல்லை மாவட்டத்தோடு இணைந்திருந்த தூத்துக்குடி மாவட்டத்திற்கும், அந்த மாவட்டங்களுக்குப் பக்கத்திலே உள்ள குமரி, விருதுநகர், ராமனாதபுரம் மாவட்டங்களுக்கும் இந்த மாநாட்டில் பெரும் பங்குண்டு. ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தின் பரப்பளவு சுமார் 4500 சதுர மைல்கள். தென் பாண்டி நாடு என்பதுதான் பண்டைக் காலத்துப் பெயர்.

வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக முதன் முதலாக போர்க் குரல் கொடுத்த பூலித் தேவர், வாழ்ந்த பூமியும் நெல்லைச் சீமைதான். இந்த மாவீரனுக்குத் தி.மு. கழக ஆட்சியில் சிலை அமைத்ததோடு, நெற்கட்டும் செவல் கிராமத்தில் அவரது இல்லத்தை வரலாற்றுச் சின்னமாகவும் அரசு அமைத்துள்ளது.

வெள்ளையரை எதிர்த்து போர்க் குரல் கொடுத்த வீரபாண்டிய கட்டபொம்மன், வாழ்ந்த பகுதியும் இந்தச் சீமையிலே உள்ள பாஞ்சாலங்குறிச்சி பகுதி தான். பாழடைந்து கிடந்த பாஞ்சாலங்குறிச்சிக்கு என்னை அழைத்துச் சென்று, கட்டபொம்மன் மாளிகை புதிதாக எழுவதற்கும், கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வீடு வாசல், மாதாந்திர நிதி உதவி வழங்குவதற்கும் அரசின் சார்பில் ஏற்பாடு செய்திட, எனக்கு ஊக்கமளித்தவர்கள் மாவீரர் மணலி கந்தசாமி அவர்களும், அன்புத் தம்பி க. சுப்புவும் என்பதை பெருமையுடன் நினைவுகூர்கிறேன்.

சுதந்திரக் கனலை எழுப்பும் பாடல்களை எழுதி மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிய மகாகவி பாரதி உலவிய மண்ணும் இந்த நெல்லைச் சீமை தான். தமிழறிஞர் சுந்தரனார் - இந்த மாவட்டத்தின் சில பகுதிகளை இணைத்து, அவர் எழுதிய "மனோன்மணீயம்" நூலை வெளியிட்டது குறிப்பிடத்தக்கதாம்.

இந்தப் பகுதியைச் சார்ந்த புலவர் பெருமக்கள் பலர் சங்கப் பாடல்களில் இடம் பெற்றவர்களாகும்.

தொல்காப்பியர், காக்கைப்பாடினியார், பனம் பாரனார், அதங்கோட்டாசான், நத்தத்தனார் போன்றோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தென்பாண்டி நாட்டை ஆட்சி செய்த மன்னர்கள் என்று எடுத்துக் கொண்டால் பராக்கிரம பாண்டியன், பராக்கிரம பாண்டிய

குலசேகரப் பாண்டியன், அழகன் பெருமாள் குலசேகரப் பாண்டியன், மாற வர்ம பாண்டியன், வீரபாண்டியன், மாறவர்ம சுந்தரபாண்டியன், குலசேகரப் பாண்டியன், வரதுங்கராம பாண்டியன், சீவலமாறன் பாண்டியன் போன்றோரை குறிப்பிடலாம். பெரும்பாலும் இந்த தென் பாண்டி நாட்டினை பாண்டியர்களே ஆட்சி செய்தார்கள் என்ற போதிலும், பல்லவர்களும், சோழர்களும் ஆட்சி செய்த காலமும் உண்டு.

வளமும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இந்த நெல்லைச் சீமையில், 26, 27-8-1950இல், ஆம்! 57 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட மாநாட்டிற்கு, நான் தான் தலைமை வகித்தேன். இன்றைய தலைமைக் கழக அமைப்புச் செயலாளர் தம்பி இளங்கோவனின் தந்தையும், தத்துவ மேதையுமான அருமை நண்பர் டி.கே. சீனிவாசன் அந்த மாநாட்டினைத் திறந்து வைத்தார். "ஆடும், மாடும்" என்ற அற்புதமான புதினத்தை அளித்தவர் அவர். அதை நாடும், ஏடும் பாராட்டி, நல்வாழ்த்துக் கூறியது. கோவில்பட்டி நகரத்தில் வெள்ளைச்சாமி பந்தலில் அந்த மாநாடு நடைபெற்றது.

அதன் பின்னர், 1954ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், இதே பாளையங்கோட்டையில் நண்பர் கவிஞர் கண்ணதாசன் தலைமையில், சமூகச் சீர்திருத்த மாநாடும், நண்பர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி தலைமையில் அரசியல் மாநாடும் நடைபெற்றது. முறையே அந்த மாநாடுகளை அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், தோழியர் பூங்கோதை அவர்களும் துவக்கி வைத்தார்கள்.

1959ஆம் ஆண்டு, நெல்லை மாவட்ட மூன்றாவது மாநாடு மே திங்களில் கே.வி.கே. சாமி பந்தலில், தாளமுத்து அரங்கத்தில் அருமை நண்பர் என்.வி. நடராசன் அவர்கள் தலைமையிலே நடைபெற்றது. நான் எழுதி, நடித்த உதய சூரியன் நாடகமும் அந்த மாநாட்டில் நடந்தது.

1963ஆம் ஆண்டு, நெல்லையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நண்பர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில், நண்பர் ப.உ. சண்முகம் திறந்து வைக்க நடைபெற்றது.

1975இல் நெல்லை மாவட்ட ஐந்தாவது மாநாடு நண்பர் செ. கந்தப்பன் தலைமையிலும், நெல்லை மாவட்ட ஆறாவது

மாநாடு 1980ஆம் ஆண்டு ஏ.வி.பி. ஆசைத்தம்பி பந்தலில் பண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. இந்த மாநாட்டினைப் புதுவை முன்னாள் முதல்வர் டி. ராமச்சந்திரன் திறந்து வைக்க தங்கை எஸ்.பி. சற்குணம் கொடியேற்றினார்.

1998ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், கழகத்தின் பொன்விழா தொடக்க சிறப்பு மாநாடு இதே நெல்லையில்தான் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் பேராசிரியர், மாநாட்டினை திறந்து வைத்தார்.

உடன்பிறப்பே, ஒன்றிரண்டு மாநாடுகளைத் தவிர மற்ற மாநாடுகளில் தலைமையேற்றும், திறப்பு விழா நடத்தியும், கொடியேற்று விழா செய்தும், வீறு பாய்ச்சும் விரிவுரை, விளக்கவுரை ஆற்றிய கழக முன்னோடிகள் பலர் இன்றைக்கு இல்லை. ஆனால் அவர்கள், ஏற்றி வைத்த இரு வண்ணக் கொடி நிழலும், அவர்கள் ஆற்றிய இன எழுச்சி உரைகளின் தாக்கமும் என்றும் நம் நினைவில் சுழன்றாடிக் கொண்டிருப்பவையாகும்.

இந்த வரிசையிலேதான் தி.மு.க. இளைஞர் அணியின் மாநில மாநாடு நெல்லையில் நடைபெறவுள்ளது.

இத்தனை மாநாடுகளைச் சிறப்பாக நடத்திய திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளிலே கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டோர் பலர் உண்டு. தூத்துக்குடி எம்.எஸ். சிவசாமி, உச்ச நீதி மன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் ரெத்தினவேல் பாண்டியன், கா.மு. கதிரவன், ஆலடி அருணா, புகழ் பெற்ற பத்திரிகையாளரும், நாம் தமிழர் இயக்கத்தைத் தோற்றுவித்து, பின்னர், கழகத்திலே இணைந்து பேரவைத் தலைவராகவும், அமைச்சராகவும் பொறுப்பேற்றுப் புகழ் பரப்பிய சி.பா. ஆதித்தனார், தினகரன் இதழை நிறுவிய திரு. கே.பி. கந்தசாமி, தூத்துக்குடி இரா. கிருஷ்ணன், இன்றைய சட்டப் பேரவைத் தலைவராக உள்ள இரா. ஆவுடையப்பன், இன்றைய மேயர் ஏ.எல். சுப்பிரமணியம், சங்கரன்கோவில் பழனிச்சாமி, ஜெயபாண்டியன், கருப்பசாமி பாண்டியன், சுப. சீத்தாராமன், தூத்துக்குடி இரா. ராமலிங்கம், தூத்துக்குடி பெரியசாமி, சவுந்தரபாண்டியன், கணபதி ராமசுப்பையா, கடையநல்லூர் ராஜாமணி, சங்கரன்கோவில் சுப்பையா, தங்கவேலு, ஜி.ஆர். எட்மண்ட், நெல்லை மஸ்தான், தம்பிதுரை, டாக்டர் பத்மநாபன்,

நெல்லை சூரியநாராயணன், பாளையங்கோட்டை உசேன், கோவில்பட்டி பெரியசாமி, கோவில்பட்டி தமிழரசன்,

விளாத்திகுளம் ரத்தினசபாபதி, தூத்துக்குடி தனசேகரன், மிசா ரெத்தினசாமி, ஆ. கருப்பையா, சங்கரன்கோவில் டி.ஆர். சுப்பிரமணியம், கேப்டன் நடராசன், தூத்துக்குடி அய்யாசாமி, புளியங்குடி பழனிச்சாமி, களந்தை ஜின்னா, நெல்லை மஜீத், நம்பி, தென்காசி திரவியம், கடையநல்லூர் சாகுல் அமீது, என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு எண்ணற்ற திட்டங்களும், சாதனைகளும் நிறைவேற்றப் பெற்றன. அவற்றில் சிலவற்றையாவது இந்த நேரத்தில் நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும்.

- திருநெல்வேலி மாநகராட்சிக்கு முதல் தேர்தலை 1996 ஆம் ஆண்டில் நடத்திய பெருமை கழக அரசுக்குத்தான் உண்டு.
- மாநகராட்சியின் மேயராக முதன் முதலாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த உமா மகேஸ்வரியை தேர்ந்தெடுத்த பெருமையும் கழக அரசுக்குத் தான் உண்டு.
- வேய்ந்தான்குளம் பகுதியில் 6 கோடியே 90 இலட்ச ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்க கழக அரசில் அனுமதி வழங்கப்பட்டு, பின்னர் கட்டி முடிக்கப்பட்டது.
- திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் 1990 ஆம் ஆண்டில் கழக அரசில் தொடங்கப்பட்டது.
- 1996இல் நெல்லையில் புதிய சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டு, அதற்கு புதிய கட்டடம் கழக அரசினால் கட்டப்பட்டு, 3.10.2000 அன்று திறக்கப்பட்டது.
- நெல்லை மாவட்டம் நெற்கட்டும்செவல் கிராமத்தில், 53 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் பூலித்தேவன் மாளிகை புதுப்பிக்கப்பட்டு,

அங்கு பூலித்தேவன் சிலையும் அமைக்கப்பட்டு 28.12.1998 அன்று திறப்பு விழா.

❖ 1970-ல் நெல்லைச் சந்திப்புக்கு அருகில் அய்யன் திருவள்ளுவன் பெயரால் ஈரடுக்கு மேம்பாலம். அப்போது அந்த நகராட்சி மன்றத் தலைவராக இருந்த மஜீத், அவர்களின் கடையை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டபோதிலும், பொது நன்மை கருதி, பெருந்தன்மையோடு அதனை விட்டுக் கொடுக்க முன்வந்ததும் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

❖ திருநெல்வேலி நகரில், மதுரை - கன்னியாகுமரி புறவழிச்சாலையுடன் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 8 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப் பாலம், 31.12.99 அன்று திறப்பு.

❖ திருநெல்வேலி பாளையங்கோட்டையில், விரைவில் அமையவிருக்கும் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மேம்பாலத்திற்குச் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் செல்லப்பாண்டியன் அவர்களின் பெயர் சூட்டப்படும் என்று, என்னால் அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு, திருவேங்கடம், அம்பாசமுத்திரம், திசையன் விளை, ராயகிரி, அச்சம்புதூர், தச்சநல்லூர், ஆயக்குடி, பண்பொழி ஆகிய பகுதிகளில் குடிநீர்த் திட்டங்கள் 1996-2001 கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டன.

❖ 6 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் பாளையங்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம்,

❖ 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வாசுதேவநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்,

❖ நம்பியாறு நீர்த் தேக்கத் திட்டம்: இதனால் இராதாபுரம் வட்டத்தில் உள்ள கோட்டைக் கருங்குளம், உருமான்குளம், இராதாபுரம்,

கரைச்சிட்டிபுதூர், கஸ்தூரிரங்கபுரம், குமாரபுரம், முத்துமோதுமொழி, திசையன்விளை ஆகிய கிராமங்களில் மொத்தம் ஏறத்தாழ 706 எக்டேர் பாசன நிலம் பயனடைகிறது.

- சர்குனியாறு பாசன மேம்பாட்டுத் திட்டம்: 36 இலட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு, 26,736 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறுகிறது.
- ராமாநதி அணை பாசன மேம்பாட்டுத் திட்டம்: 85 இலட்ச ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு, 4,942 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறுகிறது.
- குண்டாறு அணை பாசன மேம்பாட்டுத் திட்டம்: 80 இலட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு, 4,102 ஏக்கர் நிலம் பயன் அடைகிறது.
- மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களின் பெருமுயற்சியால், நாங்கு நேரியில் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2100 ஏக்கர் பரப்பில் அமெரிக்கா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் தொழில் தொடங்கத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுடனும் உருவாக்கத் திட்டமிடப்பட்டு, 11.2.2001 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டது. அந்த இடத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் முந்தைய அ.தி.மு.க.அரசு, இத்திட்டத் தைக் கிடப்பில் போட்டது.
- எனினும் நாங்குநேரிக்கும், நல்ல காலம் இந்த ஆட்சியில் மீண்டும் பிறக்க இருக்கிறது. ஆம், தற்போதைய கழக அரசு இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தும். பல்லாயிரக்கணக் கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.
- தூத்துக்குடி துறைமுகம்.

- ❖ தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற்சாலை.
- ❖ கட்டபொம்மன் நினைவுக் கோட்டை.
- ❖ கட்டபொம்மனின் வாரிசுகள் 204 பேருக்குக் குடியிருப்புகள்.
- ❖ கட்டபொம்மனின் தளபதி வீரன் சுந்தரலிங்கம் நகர் உருவாக்கப்பட்டு, அவனது உறவினர் 200 பேருக்குக் குடியிருப்புகள்.
- ❖ கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி இல்லம் நினைவுச் சின்னம்.
- ❖ தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி.
- ❖ தென்காசியில் அரசு கலைக் கல்லூரி.
- ❖ தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் கட்டி திறக்கப்பட்டது.
- ❖ தூத்துக்குடியில் இசைப் பள்ளி.
- ❖ இவற்றுக்கெல்லாம் மேலாக, தமிழர்களின் நூறாண்டு கனவான சேது சமுத்திரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதும் நம்முடைய முயற்சியிலேதான்.

உடன்பிறப்பே,

எழுச்சிமிகு நமது இளைஞர் அணியினர், நெல்லையில் நடத்தவிருக்கும் மாநில மாநாடு பற்றி, நேற்றும், இன்றும் நான், உனக்கு எழுதிய கடிதங்களில் மாநாட்டின் சாயல் எந்த மாவட்டம் முழுவதும் குற்றாலச் சாரலாக குளிர்ந்து வீசப் போகிறதோ, அந்த மாவட்டத்தின் பெருமைகளை யெல்லாம் தொகுத்து அளித்துள்ளேன். வெளிநாட்டவர் ஆயினும், ஒளிமிகு நமது தமிழ் மொழியைத் தமது தாய் மொழி போலக் கருதி, ஆய்வு நடத்தி, அரிய உண்மைகளை அவனிக்கு வழங்கியிருப்பதையும், வீரமும், தீரமும் கொண்டு வெற்றித் திருமக்களின் தலைவர்களாக நின்று, வெம்பகை வென்று, மானமும், மாண்பும் காத்த மண்ணின் மைந்தர்கள் குறித்தும், மடியிலிறுத்தி இரு கரங்களால் மார்புறத் தழுவி மழலைச் செல்வங்களைக் கொஞ்சுகின்ற மாதாவைப் போல்

இந்த மாநாடு நடைபெறவிருக்கும் மாவட்டமும் தருநிழலாய், குளிர் புனலாய் நம்மையெல்லாம் வரவேற்கக் காத்திருக்கிறது.

அதோ தெரிகிறதா?
அரிமா நெஞ்சர்களே!
அடலேறுகளே!
என் அன்புக்குரிய உடன்பிறப்புக்களே!

அன்றொரு நாள் "சென்று வா தம்பி! செறு முனை நோக்கி!" என்று சிவப்பும், கறுப்பும் கலந்த இந்த இரு வண்ணக் கொடியை அண்ணா நம் கரங்களில் ஒப்படைத்து, களம்புகச் செய்தாரே! அந்தக் கொடியை அல்லவா வீராங்கனையாம் ஒரு தமிழச்சித் மாநாட்டுப் பந்தல் முகப்பில் ஏற்றி வைக்கவிருக்கிறார்! அவர் தந்தை என் அருமைத் தம்பி தங்கப் பாண்டியன் அல்லவா? அவர் நெஞ்சில் மண்டியிருந்த மான உணர்வும், மட்டில்லா வீரமும், மாற்றார்க்குத் தலை வணங்கா தீரமும் ஒரு மகளாக வந்து பிறந்ததென்று நாம் நினைத்து மகிழக் கூடிய செல்வி அவர்.

இளமை முதல் எனக்கு நண்பர் கடலூர் இளம்வழுதி. தில்லையில் நான் என் திருமணத்திற்காகப் பெண் தேடிச் சென்ற போது, மணமகனின் தோழராக இருந்தவர். நம்மிலே ஒருவராக, நம் குடும்பத்துப் பிள்ளையாகத் திகழ்ந்தவர். அண்ணாவின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அன்று எழுந்த கழக வளர்ச்சிக்கு அவர் ஓர் அரண். அவர் மகன் தம்பி இள. புகழேந்தி, எதிர்கால இளைஞர்களின் வளமான வளர்ச்சிக்கு என் நண்பர் விட்டுச் சென்றுள்ள உரம் போன்றான். அந்தத் தம்பி புகழேந்தி, "இனி இகழேந்தி வாழ மாட்டான் தமிழன்" என்று சூளுரைக்கும் சுயமரியாதை உரையாற்றி, மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

சொல்லாற்றலால், சிங்க முழக்கப் பேச்சாற்றலால், தமிழர் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் சூடேற்றிச் சுற்றுலா நடத்தும் அருமைத் தம்பி பெரம்பலூர் ராசா, மாநாட்டினை ஒட்டி நடைபெறும் மாபெரும் அணிவகுப்பை தொடங்கி வைக்கும் தொண்டாற்ற வருகின்றார்.

நமது அண்ணா வளர்த்த இந்தக் கழகத்தின் அரும்புகழ், பரவிடும் அளவிற்கு அமெரிக்கா நாடு வரையிலே சென்று, நமது மூலக் கொள்கைகளின் முனை முறியாமல் முழங்கித் திரும்பியுள்ள

அசன் முகமது, மொழி காக்கப் போரிட்டு தியாகத் திருவிளக்குகளாக மாறியுள்ள தி.மு.கழக இளைஞர்களின் திருவுருவங்கள் அமைந்த படத்தைத் திறந்து வைக்கிறார்.

கூடிக் கலைவதற்காக அல்ல இந்த மாநாடு!
பாடிக் களிப்பதற்காக அல்ல இந்த மாநாடு!
கொள்கைகளை முழங்குவதற்காக!
முழக்கம் கேட்டு இளம் தமிழர்கள் மயக்கம் தீர்ப்பதற்காக!
இதை உணர்ந்து உமது பங்கினைச் செலுத்திட
உமது பணிகளை ஆற்றிட

பல லட்சம்பேர் கூடிடும் - பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் திடலில் - பேரறிஞர் அண்ணா நகரில் - தம்பி மு.க. ஸ்டாலின் தலைமையில் நிறைவேற்றப்படும் மாநாட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றிடவும் - செயல்படுத்திடவும் உடன்பிறப்பே, உன் இலட்சியப் பயணம் தொடரட்டும்.

அன்புள்ள,
மு.க.
25-11-2007

3307. உறவு வேலி உறுதிப்பட வாரீர் திருநெல்வேலி!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் மாநில மாநாடு நெல்லையிலே நடைபெறும்போது, தமிழக இளைஞர்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகக் பல்வேறு தகவல்களையும், செய்திகளையும் தொகுத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், நேற்றைய கடிதத்தில் நெல்லைச் சீமையிலே முதன் முதலாக வெள்ளையரை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பிய பூலித் தேவனைப் பற்றி குறிப்பிட்டு, தி.மு. கழக ஆட்சியில் அந்த மாவீரனுக்குச் சிலை அமைத்ததையும், அவர் வாழ்ந்த நெற்கட்டும் செவல் கிராமத்தில் அவரது இல்லத்தை வரலாற்றுச் சின்னமாக ஆக்கியதையும் குறிப்பிட்டிருந்தேன்.

"நேர்மையில் வீரம் நிமிர்ந்து காட்டும் நெற்கட்டும் செவல் கோட்டையன்றோ?" என்று புகழ்ந்து பாடப்படும் அந்த ஊருக்கு நான் நேரில் சென்று பூலித்தேவன் மாளிகையின் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டேன். அப்போது நான் ஆற்றிய உரையின் சில பகுதிகளை வருங்கால இளைஞர் சமுதாயம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு இங்கே தந்துள்ளேன்.

"இப்போது நடைபெறுகின்ற நிகழ்ச்சி சுதந்திரப் போராட்ட மாவீரன் பூலித் தேவனுடைய வீரத்தை நினைவுபடுத்த, அவன் வீரம் மிக்கவன் மாத்திரமல்ல, விவேகம் மிக்கவன் மாத்திரமல்ல, கருணை உள்ளவன், அன்பு உள்ளவன், பகைவரையும் மன்னிக்கக் கூடிய பண்பாளன் என்ற இந்தச் செய்திகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, அதைப் போல நாமும் வீரம் மிக்கவர்களாக, விவேகம் மிக்கவர்களாக, நம்முடைய தாய்நாட்டுப் பற்றுள்ளவர்களாக, மண்ணின் மைந்தர்களாக எதிரிகளுக்கு இடங்கொடுக்காதவர்களாக, அதே நேரத்தில் பகையைக் கூட

பண்போடு மன்னிப்பவர்களாக இருந்திட வேண்டும் என்ற அந்தச் செய்தியை சொல்கின்ற நிகழ்ச்சிதான் இந்த நிகழ்ச்சி.

இந்தியாவிலே, குறிப்பாகத் தமிழ்நாட்டிலே,

17 ஆண்டு காலம் போரிட்ட ஒரு பாளையக்காரன் உண்டென்றால் அது மாவீரன் பூலித் தேவன்தான். அவன் கட்டிய கோட்டையை இன்றைக்கு அதன் அடையாளம் மாறாமல் புதுப்பித்து ஏறத்தாழ, 3 இலட்ச ரூபாய் அந்தப் பூலித்தேவனின் உறவினர்களுக்கு அந்த மனையைப் பெறுவதற்காக அரசு சார்பில் வழங்கி, மேலும் ஐம்பது இலட்ச ரூபாய் செலவிட்டு திருமண மண்டபம், தர்பார் மண்டபம், பூலித்தேவனுடைய சிலை, நூலகம், காட்சியகம் அத்தனையையும் இங்கே அமைத்திருக்கிறோம்.

இந்தப் பூலித் தேவனுடைய பெயரை அடிக்கடி நினைவூட்டி பூலித் தேவனுக்கு சிலை எழுப்ப வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, இந்த மாளிகையை முன்பிருந்தவாறே மீண்டும் புதுப்பித்துத் தர வேண்டும் என்று என்னை வலியுறுத்தியவர் எல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்.

குறிப்பாக அருமை நண்பர் சீனிச்சாமி தேவர், டாக்டர் ராமகிருஷ்ணன், நண்பர் எல். சந்தானம், நண்பர் வல்லரசு, மற்றும் தி.மு. கழகத்தைச் சேர்ந்த தம்பி ஆலடி அருணா போன்றவர்கள், தம்பி தங்கவேலு போன்றவர்கள் - அத்தனை பேருமே தேவர், தேவர் அல்லாதோர் என்கிற பாகுபாடு இல்லாமல், பூலித் தேவனுடைய மாளிகையை இங்கே புதுப்பிக்க வேண்டும், இந்தக் கோட்டையை மீண்டும் கட்டித் தர வேண்டும், சிலை எழுப்ப வேண்டும் என்று என்னை பலமுறை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு முன்பே வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு வீர மரணமடைந்த பூலித் தேவன், 1715ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 16ஆம் நாள் பிறந்தார். 1715 முதல் 1767 வரை 53 ஆண்டுகள் வாழ்ந்தார். அதற்குள்ளாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர் உயிர் துறந்தார். அவருடைய இயற்பெயர் காத்தப்ப துரை. ஆறு வயது சிறுவனாக இருந்த போது திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்தார். 12வது வயதிலேயே குதிரையேற்றம், மல்யுத்தம், சிலம்பு விளையாட்டு, வாள் வீச்சு, அம்பு எறிதல், கவண் எறிதல், வல்லயம் எறிதல் ஆகிய போர்ப் பயிற்சிகள் பெற்றார். ஆறடிக்கு மேற்பட்ட உயரமும், வைரச்

சிலை போன்ற உடற்கட்டும் கொண்டவர் பூலித்தேவர் என்று வருணிக்கப்படுகிறார்.

வீரம், நேர்மை, தன்மான உணர்வு இவற்றின் வடிவம்தான் பூலித் தேவர். அது மாத்திரமல்ல, கொடை உள்ளம் கொண்டவர் என்பதற்கு அடையாளமாக ஏழை, எளியோர்களுக்கு அடிக்கடி அன்னதானமும், புத்தாடைகளும் வழங்கும் பழக்கவழக்க முடையவர். சாலை வசதிகளைச் செய்து மக்கள் பணியாற்றினார்.

ஏழையெளியவர்கள் தங்கிட மண்டபங்கள் பல கட்டி, அந்த மண்டபங்களிலே ஏழை எளியவர்களுக்கு உணவளித்தார்.

குளங்கள், கிணறுகள், ஏரிகள் அமைத்து வேளாண்மையை வளர்த்தார். பல கோயில்களுக்குத் திருப்பணியும் செய்துள்ளார்.

ஆர்க்காட்டு நவாபுதான் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டு முதன் முதலாகக் கதவைத் திறந்து விட்டவர். அந்த நவாபின் முதல் ஆங்கிலத் தளபதியின் பெயர் அலெக்சாண்டர். அவர் நெல்லைச் சீமைக்கு வரி வசூல் செய்ய வந்தார். அப்போது "கப்பம் என்ற பெயரால் ஒரு சல்லிக் காசும் கட்ட முடியாது" என்று அடித்துச் சொன்னவர்தான் பூலித் தேவர்.

"வரிக்குப் பதிலாக நெல்லாவது கொடு" என்று கேட்ட போது, "வரி என்று நீ கேட்டால், ஒரு மணி நெல்லைக் கூட நான் உனக்குத் தர முடியாது" என்று பூலித் தேவர் மறுத்துக் கூறினார். ஒரு மணி நெல் கூட தர முடியாது - கட்ட முடியாது என்று சொன்ன காரணத்தால்தான், "நெல் கட்டான் செவல்" என்று இந்த ஊருக்கே பெயர் வந்தது. நெல் கட்டான் செவல் என்பதுதான் திரிந்து, நெல் கட்டும் செவல் என்று ஆகிவிட்டது என்பார்கள்.

1750 முதல் 1767 வரை ஏறத்தாழ 17 ஆண்டுகளில் பலமுறை வெள்ளைக்காரர்களோடு பூலித் தேவன் யுத்தம் செய்திருக்கிறார்.

- திருச்சியில் ராபர்ட் கிளைவ் உடன், போர் புரிந்ததாகப் "பூலித் தேவன் சிந்து" கூறுகிறது.
- அலெக்சாண்டர் கெரானுடன், 1755இல் போர் நடத்தியிருக்கிறார்.
- களக்காட்டில் மாபுஸ்கானுடன், 1755இல் போர் நடத்தியிருக்கிறார். அந்தப் போரில் மாபுஸ்கான் தோல்வியுற்றார். மாபுஸ்கானை அழைத்துவந்து

தன்னுடைய மாளிகையிலேயே விருந்தாளியாக வைத்து மரியாதையோடு நடத்தினார் என்று வரலாறு கூறுகின்றது.

- திருவில்லிப்புத்தூரில் ரகீமுடன், 1755இல் போர் நடத்தினார்.
- திருநெல்வேலியில், 1756இல் போர் நடத்தினார்.
- நெல்கட்டும் செவலில், 1759இல் யூசுப்கான் என்று சொல்லப்படுகின்ற கான்சாகிப்போடு போர் நடத்தியிருக்கிறார்.
- வாசுதேவநல்லூரில் 1759 மற்றும் 1760 ஆகிய ஆண்டுகளில் யூசுப் கானுடன் மீண்டும் போர் நடத்தியிருக்கிறார்.
- 1761இல் நெல்கட்டும் செவல், வாசுதேவநல்லூர் கோட்டைகளில் அதே யூசுப்கானுடன் மறுபடியும் போர் நடத்தினார்.
- 1767இல் வாசுதேவநல்லூரில், ஆங்கிலத் தளபதி டோனால்டு காம்பெல் உடன், நடத்திய போர்தான் இறுதிப் போராகும்.

இவற்றைத் தவிர கங்கை கொண்டான், ஆழ்வார் குறிச்சி, சேத்தூர், கொல்லங் கொண்டான், ஊத்து மலை, சொக்கம்பட்டி, தலைவர் கோட்டை ஆகிய கோட்டைகளில் நடைபெற்ற போர்களிலும், பூலித் தேவன் பங்கு பெற்றார்.

கட்டபொம்மனின் தளபதிகளிலே ஒருவர் வெள்ளையத் தேவன் - அவருடைய ஆருயிர் நண்பன் சுந்தரலிங்கம். சுந்தரலிங்கம் ஆதி திராவிடச் சமுதாயத்தைச் சேர்ந்தவர். வெள்ளையத் தேவனும், வீரன் சுந்தரலிங்கமும் இணைந்து பல போராட்டங்களை வெள்ளைக்காரர்களை எதிர்த்து நடத்தி இருக்கின்றார்கள். கட்டபொம்மனைக் காப்பாற்றுவதற்காக, வெள்ளையத் தேவனைக் காப்பாற்றுவதற்காக, தன்னைத் தானே மாய்த்துக் கொள்கின்ற தற்கொலைப் படை வீரனாக மாறி உயிர் நீத்தான் வீரன் சுந்தரலிங்கம்.

கட்டபொம்மனுக்கு நான், கோட்டை கட்டியவன் மாத்திரமல்ல. அந்தச் சுந்தரலிங்கத்திற்கும், சுந்தரலிங்கம் நகர் என்ற ஒரு நகரை நிர்மாணித்து அண்மையிலே திறந்து வைத்தவன்தான் நான். ஏன் சொல்கிறேன் என்றால், அந்தப் போராட்டத்திலே வெள்ளையத் தேவன், சுந்தரலிங்கம் எனும் ஆதி திராவிடத் தோழன் ஆகிய இருவரும் ஒன்றாக இணைந்து நின்று உரிமைப் போராட்டத்தை நடத்த முடிந்தது.

அதைப்போலத்தான் பூலித் தேவனுக்கு உதவியாக முன்னணியில் இருந்தவர்கள் பகடை ஒண்டி வீரன், வெண்ணிக்காலாடி - இவர்கள் இருவரும் ஆதி திராவிடச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதுமாத்திரமல்ல, இவர்களுடன் ஆதி திராவிடச் சமுதாயத்தைச் சேர்ந்த தளபதிகள் 350 பேர், பூலித் தேவனுக்கு உதவியாக இருந்தார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

அந்தக் காலத்தையும் எண்ணிப் பாருங்கள், இந்தக் காலத்தையும் எண்ணிப் பாருங்கள். சமுதாய நல்லிணக்கத்திற்கு அன்று சாட்சியாக இருந்த நிகழ்வுகளையும் எண்ணிப் பாருங்கள். ஒரு வெள்ளையத் தேவனும், சுந்தரலிங்கமும் ஒன்றாக இருக்க முடிந்தது. அதைப் போல ஒரு பூலித் தேவனும், பகடை ஒண்டி வீரனும், வெண்ணிக்காலாடியும் ஒன்றாக இருக்க முடிந்தது. இன்றைக்கு முடியவில்லையே? என்ன காரணம்?

என்ன சதி இடையிலே குறுக்கிட்டது? அந்தச் சதியை முறியடிக்க வேண்டாமா? “நாமெல்லாம் தமிழர்கள். நடப்பது தமிழ்நாட்டு மக்களுக்கான அரசு என்கின்ற அந்த உணர்வைப் பெற வேண்டாமா? உண்மையை அறிய வேண்டாமா?”

உடன்பிறப்பே, என்னுடைய இந்த உரை தற்போது இளைஞர் அணியின் மாநாடு நடைபெறும் இதே திருநெல்வேலிச் சீமையில் நெற்கட்டும் செவலில் 28-12-1998 அன்று நிகழ்த்தப்பட்டதாகும். இதனை நான் பேசி ஒன்பதாண்டுகள் ஆகின்றது. ஆம், உடன்பிறப்பே, வெல்ல இயலாது என விரோதிகளால் கருதப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், வெள்ளைக் கம்பெனியாரால் வீழ்த்தப்பட்டுக் கயத்தாறில் தூக்கிலிடப்படவும், அந்தக் கட்டபொம்மனின் பெரும் படை வீழ்ச்சியுறவும், வெள்ளையர் ஆதிக்கத்திற்கு இந்த மண்ணில் விதை ஊன்றப்படவும் காரணமாக

அமைந்தது, நம்மிடையே ஒற்றுமை என்ற வேலி உறுதியாக இல்லாதது தான் என்பதையும் - அதே குறை, புலியொத்த வீராதி வீரர், போர் எனிலோ தோள் தினவெடுத்து பாய்ந்திடும் தீரர் பூலித் தேவர், வீழ்ச்சிக்கும் காரணமாயிற்று என்பதை மறக்க முடியுமா?

இவ்வாறு விடுதலைப் போராட்டம் நடத்திய பூலித் தேவனைப் போன்று - கட்டபொம்மனைப் போன்று நாட்டுப்பற்று மிக்க நாயகர்கள், தாங்கள் கொண்டிருந்த மான உணர்வின் காரணமாக - இந்த மண்ணின் பெருமையை நிலைநாட்டினார்களே தவிர, மாற்றாரிடமிருந்து இந்த மண்ணை மீட்க இயலாதவர்களாக ஆகி விட்டார்கள் என்பதற்குக் காரணமே - கூடவே இருந்து குழி பறித்தோர் செயலும், சமயம் பார்த்து காட்டிக் கொடுத்தோர் துரோகமும் - நாமனைவரும் இந்த மண் மாதா பெற்றெடுத்த மைந்தர்கள் தான் என்ற உணர்வின்றி, ஒருவருக்கொருவர் யார் மேலோர், யார் கீழோர் என்று மோதிக் கொண்ட நிகழ்வுகளும்தான் சரியான காரணங்கள் என்பதை, சரித்திரம் ஒருவேளை குறிப்பிடத் தவறினாலும், ஒளித்து வைக்க முடியாத அந்த நிகழ்வுகளை உள்ளத்தில் பதிய வைத்தே சரித்திர ஆசிரியர்கள் குமுறியிருப்பார்கள் என்பதை நம்மால் உணர முடிகிறது. எனினும், புதையுண்ட பூலித் தேவனின் நெற்கட்டும் செவல்களின் சரித்திரத்தை - பாழடைந்து புதுப்பிக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சி களின் வரலாற்றை - பூலித் தேவனையும், கட்ட பொம்மனையும் எண்ணிப் பார்த்து, புரிந்து கொண்டு ஒற்றுமைக்கு உரமளிப்போம் என்று ஒரே குரலில் முழங்க ஓராயிரம் - ஈராயிரம் - ஒரு இலட்சம் - பல இலட்சமென நெல்லைச் சீமையிலே கூடிட இருக்கின்ற ஒப்பற்ற இளைஞர் அணியின் தம்பிமார்கள், உறுதி மேற்கொள்ள வாரீர், வாரீர் என்று உங்கள் அன்பு அண்ணன் அழைக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

26-11-2007

3308. பொங்குற்ற சிங்கங்கள் எங்குற்றனவோ!

உடன்பிறப்பே,

டிசம்பர் திங்கள் 15, 16 ஆகிய நாட்களில் நடைபெறும் இளைஞர் அணியின் மாநில மாநாட்டிற்கு இளைஞர் அணியின் செயலாளரும், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளருமான தம்பி மு.க. ஸ்டாலின் தலைமை தாங்கவிருக்கிறார்.

இரண்டு நாட்களுக்கு முன் நான் எழுதிய கடிதத்தில், இதே நெல்லைச் சீமையில், 1950ஆம் ஆண்டு கோவில்பட்டியில் நடைபெற்ற நெல்லை மாவட்ட முதல் மாநாட்டிற்கு தலைமை தாங்கும் அரிய வாய்ப்பினை பேரறிஞர் அண்ணா அவர்கள், எனக்களித்திருந்தார்கள். அப்போது என்னுடைய வயது 25 முடிந்து 26ஆம் வயதிலே அடி வைத்த காலம். அதற்குப் பிறகு நான் எத்தனையோ மாநாடுகளுக்குத் தலைவராகவும், திறப்பாளராகவும், கொடியேற்றுபவராக இருந்த போதிலும், நெல்லைச் சீமையிலே நடைபெற்ற மாநாட்டிற்கு நான் தலைமை வகித்தது தான் முதல் வாய்ப்பாகும். அதிலும் அப்போது என்னுடைய வயது 26 தான். அந்த மாநாட்டிற்கு நான் தலைமை வகித்து ஆற்றிய உரையை, சென்னை முன்னேற்றப் பண்ணை எனும் பதிப்பகத்தார் சிறு நூலாக அச்சிட்டு, அப்போது இரண்டணா என்று விலை நிர்ணயம் செய்து ஆயிரக்கணக்கான பிரதிகளை விற்பனை செய்தார்கள்.

கோவில்பட்டி மாநாட்டிற்குப் பிறகு, நெல்லைச் சீமையிலே பல மாநாடுகள் நடைபெற்றது பற்றி யெல்லாம் நான் ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். நான் தலைமை தாங்கிய கோவில்பட்டி மாநாட்டில், 26 வயதிலே நான் ஆற்றிய உரையினை, 57 ஆண்டுகள் கழித்து, அதே நெல்லைச் சீமையிலே இளைஞர் அணியின் மாநில மாநாடு நடைபெறுகின்ற நேரத்தில் இளைஞர்

சமுதாயம் அப்போது நான் என்ன பேசினேன் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த கடிதத் தொடரில் அதனையும் இணைத்திட விரும்புகிறேன்.

"தோழர்களே! தோழியர்களே!

கோவில்பட்டியில் கூடும் இம்மாநாட்டில், நான் தலைமை வகிப்பதில் குறிப்பிடத்தக்க அம்ச மொன்றுள்ளது. சென்ற ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாவில், கோவில் பட்டியில் நானேதான் கலந்து கொண்டேன். இப்போது அதே நகரில் மாநாட்டிலும் கலந்து கொள்கிறேன் என்பதை நினைக்கும்போது மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறேன்.

என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதன் நோக்கம், இயக்கம், இளைஞர்களின் சொத்து - உழைப்பாளிகள் அமைத்த மாளிகை - அதில் உல்லாசபுரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும் - நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துகளை நடமாட விடுபவர்களுக்கும், எடுத்துக்காட்டத்தான் என்பது என் எண்ணம்.

தலைமை வகிப்பது என்பது கட்சியிலே ஒரு நட்சத்திரத்தை உண்டாக்குவது என்பதல்ல. அப்படித் தலைமை வகிப்பவர்கள் கருதினாலும் - அல்லது தலைமை வகிப்பவரைப் பற்றிக் கருதினாலும் அது பெரும் தவறு! வரப் போகும் போராட்டங்களிலே இதுவரை கழகத்தின் சார்பாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் தலைவர்கள், வரிசைக் கிரமமாக களத்திலே நிறுத்தப்பட வேண்டும். அந்தந்த மாவட்ட மாநாட்டுத் தலைவர்களின் சார்பாக நான், தலைமைக் கழகத்தைக் கேட்டுக் கொள்வதெல்லாம் 'எங்களை எதிர்காலப் போராட்டத்தின் தளபதிகளாக்குங்கள்' என்பதுதான்! மார்பிலே வேல்தாங்கி மரணத்தை அணைப்போமே தவிர, மாற்றாரிடம் சரண்புக மாட்டோம். மாசற்றக் கொள்கைகளை எதிரிகட்குக் காணிக்கையாக்க மாட்டோம். இந்த உறுதியோடு தான் இன்றைய மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக - ஜஸ்டிஸ் கட்சியாக - திராவிடர் கழகமாக - திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வளர்ந்திருக்கிறோம். ஒவ்வொரு மாறுதலின்போதும் ஒவ்வொரு

புதுமை ஏற்பட்டு வந்திருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளைத் தேயவிடாமல், சுயநலத்திற்காக இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தொண்டுபுரிந்த சுத்த வீரர்கள்தான் இன்று அணி வகுத்து நிற்கிறோம். ஆனால் இன்றைய மாறுதல், - அதாவது சென்ற ஆண்டு நமது இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதல் நாமாகத் தேடிக் கொண்டதல்ல. நமது தலைவர் தந்தை பெரியார் கட்டாயப்படுத்தித் திணித்த மாறுதலாகும்.

செப்டம்பர் 17....நாம் மறக்க முடியாத நாள்! பெரியார் பிறந்த நாள்! பெரியார் பிறந்த நாளும் - நாம் அவரை விட்டுப் பிரிந்த நாளும் அதுதான்! சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் செயலில் இறங்கப் புறப்பட்ட நாள். அந்நாள் தோன்றி ஒரு ஆண்டு நிறையப்போகிறது. இந்த ஒரு ஆண்டில் நாம் போட்ட திட்டங்கள் எத்தனை - நாம் புரிந்த செயல்கள் எத்தனை - நாம் அடைந்த வெற்றிகள் எத்தனை - நாம் செய்யாமல் விட்டு விட்ட காரியங்கள் எத்தனை - என்பதை நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

பிரச்சாரக் குழு அமைத்தோம். சட்ட திட்டக் குழு அமைத்தோம். செயற்குழு அமைத்தோம். அமைப்புக் குழு அமைத்தோம், பொதுக்குழு அமைத்தோம். இந்த அமைப்புகள் எப்படியெப்படி வேலை செய்திருக்கின்றன என்பதை வரப்போகும் மாகாண மாநாட்டிலே நினைக்கத்தான் போகிறோம். நினைப்பின் விளைவு முழு நிம்மதியாக இருக்காது. ஏனெனில் நாம், செய்யாமல் விட்ட பணிகள் நிரம்ப உண்டு!

குறை சொல்லப் போகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். இயக்கம் குழந்தையென்பதும் - அதன் குரல்வளையைப் பிடித்துக் கொல்லக் குள்ள நரிகள் சமயம் பார்த்திருப்பதும் யாரும் அறியாததல்ல. குழந்தை- ஓராண்டுக் குழந்தை - பேசிப் பாட வேண்டாம். ஆடியோட வேண்டாம். பாலாவது சாப்பிட்டு உடலைப் பலமாக்கிக் கொள்ள வேண்டாமா என்பதுதான் கவலை. 'குழந்தைக்குப் பாலுண்ண ஆசைதான் - கொடுப்பவர்கள் எங்கே?' என்று ஒரு குரல் கிளம்பலாம். அந்தத் தாய் வேலையைச் செய்ய வேண்டியவர்கள், இயக்கத்தின் முன்னணியினராக இருப்பவர்கள் மட்டுமல்ல - இயக்கத்தின் தொண்டர்களுங்கூடத்தான்.

ஒரே ஆண்டில் ஐந்நூறு கிளைகளை நிறுவியிருக்கிறோம். எந்த இயக்கமும் செய்து காட்ட முடியாத அரும்பெரும் செயல்! ஐந்நூறு கிளைகள். ஐம்பதுக்கு மேற்பட்ட பிரச்சாரக் காளையர்கள். அன்றாடம் கூட்டங்கள். மாவட்டந்தோறும் மாநாடுகள். இது தித்திப்பான செய்திதான். ஆனால் பூரண திருப்தியளிக்கக் கூடியதல்ல.

பல ஆண்டுகளாக இதைத்தான் செய்து பழக்கப் பட்டிருக்கிறோம். மேடைகள் அமைப்பதும் - பேச்சாளர்களை அழைத்து மேகமண்டலமதிரப் பேசச் செய்வதும் - அதன் விளைவாகப் பெரும் பகுதியினரை நம்மவராக்குவதும் தேவையற்ற வேலையென்று கூறவில்லை. நம் கொள்கையை கீதமாக்கிக் கொண்டவர்கள் - நம் பாதையில் நடந்து வரத் துணிந்தவர்கள் - நாலா பக்கங்களிலும் சிதறிக் கிடக்கிறார்கள். அவர்களை இணைக்க முடியவில்லை. இணைக்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப் படவில்லை.

ஐந்நூறு கிளைகள். அந்தக் கிளைகளுக்கும் மத்திய கழகத்திற்கும் தொடர்பு அறுந்துதான் போயிருக்கிறது. ஒரு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் - அந்தத் திட்டம் தீட்டப்பட்ட பிறகு . . மத்தியக் கழகத்திலிருந்து மாவட்டக் கழகத்திற்குச் சென்று, மாவட்டக் கழகம், கிளைக் கழகங்களுக்கு அறிவித்து, கிளைக்கழகம், அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்று ஏற்பாடு இருக்கிறது. ஆனால் முறைப்படி நடக்கவில்லை. தலைமைக் கழகம் ஒரு சங்கிலியின் பதக்கமாகவும், கிளைகள் முத்துகளாகவும் கோக்கப்படவில்லை. இந்தக் குறையை விரைவில் களைய வேண்டும். இந்த இணைப்பு உறுதியாக இருந்தால்தான் கிளைக் கழகத்தின் சந்தேகங்கள் - சச்சரவுகள் - நடவடிக்கைகள் - இவைகளை நல்ல முறையில் சீர்படுத்தி இயக்கத்தைச் செழிப்பாக்க முடியும். பிரச்சாரக் குழு மட்டும் வேலை செய்து பயன் இல்லவே இல்லை. சென்ற ஆண்டு போட்ட திட்டங்கள் அனைத்தும் செயல்முறைக்கு வந்தாக வேண்டும்.

நாம் வளர்ந்திருக்கிறோம். வளர்ந்து கொண்டே போகிறோம். அதற்கும் ஒரு கட்டுப்பாடு - ஒழுங்கு - நியதி வேண்டுமென்பதுதான் பிரச்சினை.

ஒருவனுக்கு லட்சம் லட்சமாய் பணம் வருகிறது. அவனும் கணக்கு வழக்கின்றி செலவு செய்கிறான். செலவுக்குக் கட்டுப்பாடுமில்லை - கணக்குமில்லை. கடைசியாக ஒருநாள் அவன் சம்பாதித்தது எவ்வளவு என்று கணக்குப் போட்டு, விஷயம் புரியாமல் கலங்கித் தவிக்கிறான். அந்தப் பணக்காரன் நிலைமை இயக்கத்திற்கு வரக் கூடாது, வர விடக் கூடாது.

கல்லடியும், சொல்லடியும் பட்ட காலத்திலே கரையாத இயக்கம் - பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்து போகாத இயக்கம் - மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள், ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டு போகாத இயக்கம் - பதவியும், பட்டமுமே தேவை என்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து விடுபட்ட இயக்கம் - சொந்த வாழ்வும், சுயநலமுமே பெரிதென்போரின் பிடியிலிருந்து தப்பிய இயக்கம் - கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை, மாயவரம் நடராசனை, ஆரூர் இராமனை, அழகிரிசாமியை அணைத்திருந்த இயக்கம் - மொழிக்காக உயிர்விட்ட தாளமுத்து, நடராசன்களைக் கொண்டிருந்த இயக்கம் - கொள்கைக்காக மரத்திலே பிணமாக ஊஞ்சலாட்டப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதங்களை உள்ளடக்கிய இயக்கம் - மதுரை மாநாட்டுத் தீயைக் கண்டு மனங்கலங்காத இயக்கம் - குடந்தைத் தெருவினிலே குருதி வெள்ளத்தைக் கண்டு குலை நடுங்காத இயக்கம் - இராமகாவியம் இழுக்குடையது என்பதை எடுத்துக்காட்டி, பாரதியார்களை, சேதுப் பிள்ளைகளைச் சொற்போரிலே வெற்றி கண்ட இயக்கம் - 'ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான், ஆனது ஆகட்டுமே' என்று பாடி வரும் ஆயிரமாயிரம் பட்டாளத் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம் - தம்பிகளின் நெஞ்சைத் தட்டிப் பார்த்து, "உறுதியானதுதானா இது!" என்று உணர்ந்து அறப்போருக்கு உரிய காலம் பார்த்திருக்கும் உலக அறிஞர்களில் ஒருவராம் அண்ணாவைப் பெற்றிருக்கும் இயக்கம் - குள்ள நரிக் கூட்டத்தின் குடல் கிழிக்கும் கூற்றம் - குமுறும் எரிமலை புதுவைக் கவிஞர் பாரதிதாசனைப் பெற்றுள்ள இயக்கம் - ஆரியம் ஒரு மாயை, அது பல உருவில் நடமாடும் என்பது கண்டு இலக்கியத் துறையிலே - நாடகத் துறையிலே - கலைத்துறைகளிலே - ஆரியத்தின்

கைவரிசையை எதிர்க்கப் பலப்பல அணுகுண்டுகளை நடமாட விட்டிருக்கும் இயக்கம் - இத்துணை மகத்தான இயக்கம் நிலவுபோல வளர்வதும், தேய்வதும் பின் வளர்வதுமாயுள்ளது. நிச்சயமாக நமக்குத் தெரியும், கழகத்திலே நான் மேலே குறிப்பிட்ட அமைப்பு முறைகள் சீர்திருத்தப்படாவிட்டாலுங்கூட, கழகம் அழிந்து விடாது என்று. ஆனாலும் சந்திரனைப் போல தேயும். பிறகு வளரும். ஆனால் சந்திரனைப் போல அழியாமலே இருக்கும். நம்முடைய ஆசையெல்லாம் இயக்கம், அழியாமலுமிருந்து அதோடு வளர்வதும் தேய்வதுமின்றி, எப்போதும் வளர்வது என்பதாகவே இருக்கவேண்டும் என்பது தான். அதற்காகத்தான் அழுத்தந்திருத்தமாகக் கூற வேண்டியிருக்கிறது, அமைப்பு முறை தேவையென்று. அந்தத் தேவையை மத்தியக் கழகத்திலிருந்துதான் பூர்த்தி செய்ய வேண்டு மென்பதல்ல, மாவட்ட, கிளைக் கழகங்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே அமைப்பு கண்டு, மாவட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு மத்திய கழகத்தைத் தங்களோடு இணைத்துச் செயல் புரியச் செய்ய வேண்டும். விழுதுகள் இருந்தால் தான் ஆலமரத்திற்கு அழகு. இது கழகத் தொண்டர்கள் - செயலாளர்கள் அறியாததல்ல.

நாட்டு நிலைமை மிக மிக நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது. இந்த நேரத்தில் நாடு நம்மை எதிர்பார்த்து நிற்கிறது. அவர்கள் எதிர்பார்ப்பது நம்மிடமிருந்துதான். நமது கொள்கை அவர்கட்கு தேளாயிருந்த காலம்போய் தேனாக மாறிவிட்டது இப்போது. இந்த நல்ல நேரத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயன்படுத்துவது என்றால் போலிப் பிரச்சாரம் செய்து தேர்தலிலே நாற்காலி பிடிப்பது என்பதல்ல, பொருள். நம்மிடையே நல்லெண்ணம் அரும்பியிருக்கும் இவ்வேளையில், மக்களுக்குள்ள கஷ்டங்களை - நாட்டுக்குள் படை யெடுக்கும் நானாவித ஆபத்துகளை முறியடிப்பதற்கு நம்முடைய உயிரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அர்ப்பணிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கூறுகிறேன்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பிலே வெற்றி பெற்று விட்டோம். வாகை மாலை சூடி விழாக்களும் நடத்தி விட்டோம். எலும்புகளை முறித்துக் கொடுத்து - நரம்புகளை அறுத்துக் கொடுத்து -

குருதியைக் கொட்டிக் கொடுத்து இத்தனைக்கும் அசையாத நிலை ஆளவந்தாருக்கு இருக்கிறது என்பது கண்டு, இறுதியாக கோவை முத்தமிழ் மாநாட்டிலே அபாய அறிவிப்பு சங்கம் முழங்கி, அதன் பிறகு ஆளவந்தவர் விழித்துப் பார்த்து, மொழிக்கு வந்த கொடுவாளைத் தடுத்து விட்டனர். இந்த வெற்றியைக் கொண்டாடும் நேரத்திலேயே நெஞ்சு கொதிக்கும் நெருப்புச் செய்தியொன்று நம்மை நெருங்கிற்று.

ஆம், அதுதான் அல்லாடியாரின் ஆனந்தத் தாண்டவம் - அக்கிரகாரத்தின் வெற்றி முரசம் - திராவிடத்தின் முன்னாள் பழம்பெருந்தலைவர்கள், உரிமைப் போர்த் தளபதிகள் தியாகராயர், டாக்டர் நாயர், பனகல் அரசர், டாக்டர் நடேசன் போன்ற பல தலைவர்கள் ஒன்று சேர்ந்து உண்டாக்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை (கம்யூனல் ஜி.ஓ.) யைக் குழியில் தள்ளிவிட்டு பார்ப்பனியம் பாடுகின்ற பள்ளுப்பாட்டைத்தான், தோழர்களே! குறிப்பிடுகிறேன். முப்பது ஆண்டுகளாக அமலிலிருந்து வரும் வகுப்புவாரி முறை அடியோடு சாய்கிறது. சட்டம் கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறானதாயிருக்கிறதாம். அதற்காகச் சமூக நீதியைச் சாய்த்து விட வேண்டுமாம். சட்டத்தை இயற்றுபவர்கள் மக்கள், மக்கள் வாழ வகுத்தது சட்டம். கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறுதலாக சட்டம் இருந்தால், சட்டத்தைச் சரிப்படுத்த வேண்டியது முறையா அல்லது ஒரு பெரிய சமுதாயத்தின் உரிமையை உடைத்து நொறுக்கி உள்ளம் எரியச் செய்வது முறையா என்றுதான் நாம் கேட்கிறோம்.

1920இல் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சைக்கு சென்ற மாணவர்களின் தொகை இருபதாயிரம். இன்று 1950-ல் அறுபத்தெட்டாயிரம். இப்படி வளர்ந்து வந்த திராவிடரின் கல்வி உயர்வைக் கருவறுக்கச் சட்டத்தை வாளாக்குகிறார்கள். சட்டம் செய்தவர்கள் ஐந்து பேர். அதில் மூன்று பேர் தென்னாட்டு நிலை தெரியாத வட நாட்டவர். இருவர் தென்னாட்டவர். அதில் ஒருவர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், மற்றவர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர். எங்கிருந்து நீதி கிடைக்கும் இந்த நிரபராதித் திராவிடருக்கு!. எங்கிருந்து உரிமை கிடைக்கும் உளுத்துப்போன சமுதாயத்துக்கு!..... சமூகநீதி தேவையென்றால் பரந்த நோக்கம்

பேசுகிறார்கள். தகுதி, திறமையென்கிறார்கள். இந்தத் தகுதியும், திறமையும் சமுதாயப் பிரச்சினை வரும்போது காட்டப்படுகிறதா? கல்விச் சாலைக்குச் செல்லத் தகுதி, திறமை என்று கர்ஜிக்கிற கனவான்களைக் கேட்கிறேன் - காலையில் எழுந்து ஸ்னானம், நேமம், நிஷ்டை, விரதம், அளவில்லாத ஆண்டவன் பக்தி, பழுத்த ஆஸ்திகம் இத்தனை திருக்குணங்களும் அமைந்த திராவிடன் ஒருவன், ஆலயத்துச் சென்று ஆண்டவனைத் தொட்டு அர்ச்சிக்க அபிஷேகிக்க முடியாதே, அதே நேரத்தில், இரவெல்லாம் இன்பவல்லியோடு கூடிக் கிடந்து வெற்றிலை காய்ந்த வாயுடனே ஆண்டவனைத் தொட்டுக் குளிப்பாட்டி, உணவூட்ட ஒரு பெரு வியாதி பிடித்த பார்ப்பனருக்குக் கூட உரிமை இருக்கிறதே - இதில் எங்கே தகுதி, திறமை? யாரிடமிருக்கிறது தகுதி..... ஆனால் யார் நுழைய முடிகிறது கோயிலில். இவைகளை ஒழித்துக் கட்டி விட்டு, உயர்ந்தோர் எனப் பேசும் ஆணவத்தை அகற்றி விட்டு பிறகு, கம்யூனல் ஜி.ஓ. தேவையற்றது என்றால்கூட அதில் அர்த்தமுண்டு. எப்படியோ அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்.

நாம் முன்பு கூறியபோது நையாண்டி பேசியவர்கள் இன்று நம்மோடு சேர்ந்து, 'அந்தோ! அநீதி!' என அலறுகிறார்கள். சென்னை அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று விட்டது நீதி கேட்க! அதுவும் நம் முயற்சியால்தான், கிளர்ச்சியால்தான் முடிந்தது என்பதை நினைத்துப் பெருமையடைகிறோம். உயர் நீதி மன்றத்துத் தீர்ப்பு கிடைத்ததும், அரசாங்கத்தின் அடுத்த திட்டம் என்ன என்பது அமுங்கித்தான் கிடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர், சென்னையில் துவக்கிய கிளர்ச்சி, திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் காட்டிய உணர்ச்சி, மந்திரி மாதவமேனனை வாய் திறக்கச் செய்தது. அப்பீல் செய்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம் என்றார்கள். அதன் பிறகு நாம், பொறுத்திருந்து பார்ப்போம் - போகாவிட்டால் கிளர்ச்சி துவக்குவோம்.

அப்பீலுக்கு போயிருக்கிறவர்கள், அங்கும் தோல்வி கண்டால் - அதன் பிறகும் அரசியல் சட்டம் திருத்தப் படாவிட்டால் அப்போது எரிமலையாகக் குமுறப்போகிறது நமது கிளர்ச்சி. மூன்று கடல்களும் பொங்கி, ஆதிக்க இமயத்தை மூழ்கடிக்கும் கிளர்ச்சி. சாவா? வாழ்வா? என்று முடிவு கட்டுகிற கிளர்ச்சி.

ஆளவந்தார், சுப்ரீம் கோர்ட்டிலிருந்து திரும்புகிற வரையில், நமக்கு வேறு பல வேலைகள் உண்டு. சமூக நீதி பற்றிய விளக்கவுரைகளாற்றி மக்களை விழிக்கச் செய்ய வேண்டும். மக்கள் விழிப்படைவார்கள். ஆனால் செயலாற்ற உடலில் வலுவில்லை. காரணந்தான் தெரியுமே - கொடுமையான காரணம். பசி. . . . பசி . . . . பருத்திக் கொட்டையை சாப்பிடு என முன்ஷி, சிபார்சு செய்யுமளவுக்கு வளர்ந்து விட்ட பசி - திருநெல்வேலியிலும், வேறிடங்களிலும் தான் பெற்ற செல்வத்தைத் தன் வயிற்றில் கிடந்த வைடூரியத்தை, தாயார், விலை கூறி விற்று வயிற்றைக் கழுவிக் கொள்ளும்படி செய்த கோரப் பசி - இந்தப் பசி நீக்க, பாராள வந்தவர் எடுத்துக் கொண்ட முயற்சி, எட்டு அவுன்ஸ் அரிசியை ஆறு அவுன்சாக்கியதுதான். இந்தப் பசி போக்கும் கைங்கர்யத்தை செவ்வனே செய்ய யாரும் முன்வரவில்லை. நாமோ நாட்டு மக்களில் ஒரு பகுதி. ஆனாலும் வாயில்லாப் பூச்சிகளல்ல! நமது வார்த்தைகள் முதலில் அலட்சியப்படுத்தப்பட்டாலும் பிறகு, அதுதான் "வேதவாக்"காக மாறியிருக்கிறது பலருக்கு.

பசியால், மக்கள் மாளும் நேரத்தில் பாராமுகமாயிருக்கும் சர்க்காருக்கு - ஒருமுறை நினைவுபடுத்தும் நிகழ்ச்சியை நாம் நடத்திக் காட்ட வேண்டும். சென்னையிலே பட்டினிப் பட்டாள ஊர்வலம் நடந்த பிறகு நல்லதொரு எதிரொலி ஏற்பட்டது. அதுபோல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாடெங்கும் ஒரு நாள் குறிக்கப்பட்டு பசியால் மாளும் மக்களின் பட்டியலை சர்க்காருக்குத் தர வேண்டும். அந்த நாள் சர்க்காரின் மந்தப் போக்கைக் குறைக்குமென்ற நம்பிக்கையோடு, இதைச் செய்யலாமா செய்யக் கூடாதா என்ற முடிவை - செய்யலாம் என்றால் நாள் குறிப்பிடுங்கள் என்ற தாழ்மையான வேண்டுகோளை தலைமைக் கழகத்தின் முன் வைக்கிறேன்.

நம்முடைய கிளர்ச்சிகள் என்றும் தோற்றதில்லை அடக்குமுறைகளை வீசியபோதும் - சிறைச் சாலையிலே அடைத்த போதும் - சிரச் சேதம் செய்வோம் என்று மிரட்டியபோதும் - நாம் பயந்து பின்னடைந்ததில்லை.

அந்த அஞ்சா நெஞ்சத்துடன் - அழகிரிசாமியை நினைத்துக் கொண்டு அண்ணாவின் படை வரிசையிலே சேர

வேண்டுமென்றுதான் திராவிடப் பெருமக்களை அழைக்கிறேன். அப்படி அழைக்கும் போதுதான் அழைக்கப்பட்டவர்களை அமைப்பு முறையில் நடத்திச் செல்லக் கழகம் இன்னும் செப்பனிடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செயல் முறைத் திட்டங்களின் அமைப்பு முறைகளில் சிறிது அயர்ந்து விட்டது கழகம் என்னும்போது அந்தக் குற்றவாளிப் பட்டியலிலே நானும் அடங்கியிருக்கிறேன் என்பதை நினைவுபடுத்திக் கொண்டுதான் சொல்லுகிறேன். நம் குற்றம் கொள்கையை மீறியதல்ல சிதறிக் கிடக்கும் சக்தியை ஒன்றுபடுத்தாததுதான் - சிந்திக் கிடக்கும் மலர்களை மாலையாக ஆக்காததுதான் - அந்த அருமையான செயல் இந்த ஆண்டு தொடங்கிவிடும் என்று நம்புகிறேன். அதற்கான விடிவெள்ளி முளைத்திருக்கிறதாக உணருகிறேன்.

சென்னைத் தங்கசாலை வீதியிலே தலைமை நிலையம் பணிபுரியத் தொடங்கி விட்டதையும், நீங்கள் அறிய வேண்டுமென்று கூறுகிறேன். இந்த ஆண்டிலே நாம் வளர்ந்து விட்டோம். வரும் ஆண்டிலே நம் கையில் வேலேந்திப் புறப்படப் போகிறோம், தோழர்களே! இந்த "வேலேந்தி" என்ற வார்த்தைகூட எதிரிகட்கும், சர்க்காருக்கும் பயங்கரமாகத் தோன்றும். பயப்படத் தேவையில்லை. கொள்கையை வேலாக்கி, அறப்போர் ஆரம்பமாகப் போகிறது என்பதை அறிவுறுத்துகிறேன், உங்கள் சார்பாக, அரசியலாருக்கு!

அகவிலை உயர்வை எதிர்த்து ஒரு போர்! அடக்குமுறையை எதிர்த்து ஒரு போர்! புத்தகங்களின் தடை உத்தரவை எதிர்த்து ஒரு போர்! நாடகத் தடைகளை மீறி ஒரு போர்! இப்படிப் போர்கள் நடக்கப் போவதில்லை. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே ஒரு போர்! அந்தப் போரிலே கலந்து, வாகை மாலை சூட - வாரீர் தோழர்களே! பாண்டியன் பரம்பரையினரே! சேரன் சந்ததியினரே! சோழனின் சொந்தக்காரரே! வாரீர்! சிறுத்தையின் உறுமல் - சிங்கத்தின் சீற்றம் - கறுத்த கழுதையே! அங்கேன் கனைக்கிறாய் என்று கேட்டிட வாரீர்! ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை - மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று என்று மார் தட்டிட வாரீர்! புரட்சிப்பண் பாடிட வாரீர்!

வாரீர் வாரீர் . . . வாலிப வீரர்களே! வைர நெஞ்சுடைத் தோழியர்களே! வண்மை நிறை பெரியோர்களே! . . . என அழைக்கிறேன்."

இளைய உடன்பிறப்புகளே!

இது இந்த இளைஞனின் குரல்! அன்று கோவில்பட்டியிலே ஒலித்தது. இன்றும் ஒலிக்கிறது! இந்தக் குரல் ஒலியிலே அணி வகுத்திடு! அறப்போர் விளைத்திடப் படை நடத்திடு!

அன்புள்ள,

மு.க.

27-11-2007

3309. அன்று கண்டதும்; இன்று காண்பதும் அதே நிலா!

உடன்பிறப்பே,

பழைய நினைவுகளை அசை போடும் பொழுது பனிக்கட்டியிலிருந்து கிளம்புகிற ஆவியை ரசிப்பது போன்ற ஓர் இன்பம்!

தம்பி மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெற விருக்கும் நெல்லை இளைஞர் அணி மாநாட்டுக்கு அணிவகுத்துச் செல்லும் அடுத்த தலைமுறை உடன்பிறப்புகளுக்கு; அதே நெல்லை மாவட்டம், கோவில்பட்டியில் 1950ஆம் ஆண்டு என்னுடைய 25வது வயதில் தலைமையேற்று, இரு நாட்கள் மாநாட்டை நடத்தியதையும் - நான் அங்கே ஆற்றிய உரையை அச்சியற்றி சென்னை முன்னேற்றப் பண்ணை எனும் பதிப்பகத்தார் புத்தகமாக வெளியிட்டதையும் - இதோ நினைவுபடுத்திக் கொள்கிறேன். அதற்கு 57 ஆண்டுகளுக்குப் பிறகு நெல்லையிலே இளைஞர் அணி மாநாடு நடைபெறுகிற நேரத்தில் - அப்போது என்ன பேசினேன் என்பதை இளைய திலகங்கள் இதயத்தில் பதித்துக் கொள்ள ஏதுவாக அதனை இப்போது இயக்க வளர்ச்சிக்கும் கட்டுக்கோப்புக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

“கோவில்பட்டியில் கூடும் இம்மாநாட்டில் நான் தலைமை வகிப்பதில் குறிப்பிடத்தக்க அம்சமொன் றுள்ளது. சென்ற ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாவில் கோவில்பட்டியில் நானேதான் கலந்து கொண்டேன். இப்போது அதே நகரில் மாநாட்டிலும் கலந்து கொள்கிறேன் என்பதை நினைக்கும்போது மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறேன்.

என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதின் நோக்கம் இயக்கம் இளைஞர்களின் சொத்து - உழைப்பாளிகள் அமைத்த மாளிகை - அதில் உல்லாசபுரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும் - நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக்

கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும், எடுத்துக்காட்டத்தான் என்பது என் எண்ணம்.

தலைமை வகிப்பது என்பது கட்சியிலே ஒரு நட்சத்திரத்தை உண்டாக்குவது என்பதல்ல. அப்படி தலைமை வகிப்பவர்கள் கருதினாலும் - அல்லது தலைமை வகிப்பவரைப் பற்றிக் கருதினாலும் அது பெரும் தவறு! வரப் போகும் போராட்டங்களிலே இதுவரை கழகத்தின் சார்பாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் தலைவர்கள் வரிசைக் கிரமமாக களத்திலே நிறுத்தப்பட வேண்டும். அந்தந்த மாவட்ட மாநாட்டுத் தலைவர்களின் சார்பாக நான் தலைமைக் கழகத்தை கேட்டுக் கொள்வதெல்லாம் 'எங்களை எதிர்காலப் போராட்டத்தின் தளபதிகளாக்குங்கள்' என்பதுதான்! மார்பிலே வேல்தாங்கி மரணத்தை அணைப்போமே தவிர மாற்றாரிடம் சரண்புக மாட்டோம். மாசற்றக் கொள்கைகளை எதிரிகட்குக் காணிக்கையாக்க மாட்டோம். இந்த உறுதியோடுதான் இன்றைய மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக ஜஸ்டிஸ் கட்சியாக - திராவிடர் கழகமாக - திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வளர்ந்திருக்கிறோம். ஒவ்வொரு மாறுதலின்போதும் ஒவ்வொரு புதுமை ஏற்பட்டு வந்திருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளைத் தேயவிடாமல் சுயநலத்திற்காக இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தொண்டுபுரிந்த சுத்த வீரர்கள்தான் இன்று அணி வகுத்து நிற்கிறோம். ஆனால் இன்றைய மாறுதல் - அதாவது சென்ற ஆண்டு நமது இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதல் நாமாகத் தேடிக் கொண்டதல்ல.

செப்டம்பர் 17.... நாம் மறக்க முடியாத நாள் பெரியார் பிறந்த நாள். பெரியார் பிறந்த நாளும் - நாம் அவரை விட்டுப் பிரிந்த நாளும் அதுதான்! சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் செயலில் இறங்கப் புறப்பட்ட நாள். அந்நாள் தோன்றி ஒரு ஆண்டு நிறையப்போகிறது. இந்த ஒரு ஆண்டில் நாம் போட்ட திட்டங்கள் எத்தனை - நாம் புரிந்த செயல்கள் எத்தனை - நாம் அடைந்த வெற்றிகள் எத்தனை - நாம் செய்யாமல் விட்டு விட்ட காரியங்கள் எத்தனை - என்பதை நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

பிரச்சாரக் குழு அமைத்தோம். சட்ட திட்டக் குழு அமைத்தோம். செயற்குழு அமைத்தோம். அமைப்புக் குழு அமைத்தோம், பொதுக்குழு அமைத்தோம். இந்த அமைப்புகள் எப்படியெப்படி வேலை செய்திருக்கின்றன என்பதை வரப்போகும் மாகாண மாநாட்டிலே நினைக்கத்தான் போகிறோம். நினைப்பின் விளைவு முழு நிம்மதியாக இருக்காது. ஏனெனில் நாம் செய்யாமல் விட்ட பணிகள் நிரம்ப உண்டு!

குறை சொல்லப் போகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். இயக்கம் குழந்தையென்பதும் - அதன் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல குள்ள நரிகள் சமயம் பார்த்திருப்பதும் யாரும் அறியாததல்ல. குழந்தை- ஓராண்டுக் குழந்தை - பேசிப் பாட வேண்டாம். ஆடியோட வேண்டாம். பாலாவது சாப்பிட்டு உடலைப் பலமாக்கிக் கொள்ள வேண்டாமா என்பதுதான் கவலை. 'குழந்தைக்குப் பாலுண்ண ஆசைதான் - கொடுப்பவர்கள் எங்கே?' என்று ஒரு குரல் கிளம்பலாம். அந்தத் தாய் வேலையைச் செய்ய வேண்டியவர்கள் இயக்கத்தின் முன்னணியினராக இருப்பவர்கள் மட்டுமல்ல - இயக்கத்தின் தொண்டர்களுங்கூடத்தான்.

ஒரே ஆண்டில் ஐந்நூறு கிளைகளை நிறுவியிருக்கிறோம். எந்த இயக்கமும் செய்து காட்ட முடியாத அரும்பெரும் செயல்! ஐந்நூறு கிளைகள். ஐம்பதுக்கு மேற்பட்ட பிரச்சாரக் காளையர்கள். அன்றாடம் கூட்டங்கள். மாவட்டந்தோறும் மாநாடுகள். இது தித்திப்பான செய்திதான். ஆனால் பூரண திருப்தியளிக்கக் கூடியதல்ல.

பல ஆண்டுகளாக இதைத்தான் செய்து பழக்கப்பட்டிருக்கிறோம். மேடைகள் அமைப்பதும் - பேச்சாளர்களை அழைத்து மேக மண்டலமதிரப் பேசச் செய்வதும் - அதன் விளைவாகப் பெரும் பகுதியினரை நம்மவராக்குவதும் தேவையற்ற வேலையென்று கூறவில்லை. நம் கொள்கையை கீதமாக்கிக் கொண்டவர்கள் - நம் பாதையில் நடந்து வரத் துணிந்தவர்கள் - நாலா பக்கங்களிலும் சிதறிக் கிடக்கிறார்கள். அவர்களை இணைக்க முடியவில்லை. இணைக்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஐந்நூறு கிளைகள். அந்தக் கிளைகளுக்கும் மத்திய கழகத்திற்கும் தொடர்பு அறுந்துதான் போயிருக்கிறது. ஒரு

திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் - அந்தத் திட்டம் தீட்டப்பட்ட பிறகு. . மத்தியக் கழகத்திலிருந்து மாவட்டக் கழகத்திற்குச் சென்று, மாவட்டக் கழகம், கிளைக் கழகங்களுக்கு அறிவித்து கிளைக்கழகம், அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்று ஏற்பாடு இருக்கிறது. ஆனால் முறைப்படி நடக்கவில்லை. தலைமைக் கழகம் ஒரு சங்கிலியின் பதக்கமாகவும் கிளைகள் முத்துக்களாகவும் கோக்கப்படவில்லை. இந்தக் குறையை விரைவில் களைய வேண்டும். இந்த இணைப்பு உறுதியாக இருந்தால்தான் கிளைக் கழகத்தின் சந்தேகங்கள் - சச்சரவுகள் - நடவடிக்கைகள் - இவைகளை நல்ல முறையில் சீர்படுத்தி இயக்கத்தைச் செழிப்பாக்க முடியும். பிரச்சாரக் குழு மட்டும் வேலை செய்து பயன் இல்லவே இல்லை. சென்ற ஆண்டு போட்ட திட்டங்கள் அனைத்தும் செயல்முறைக்கு வந்தாக வேண்டும்.

நாம் வளர்ந்திருக்கிறோம். வளர்ந்து கொண்டே போகிறோம். அதற்கும் ஒரு கட்டுப்பாடு - ஒழுங்கு - நியதி வேண்டுமென்பதுதான் பிரச்சினை.

ஒருவனுக்கு லட்சம் லட்சமாய் பணம் வருகிறது. அவனும் கணக்கு வழக்கின்றி செலவு செய்கிறான். செலவுக்கு கட்டுப்பாடுமில்லை - கணக்குமில்லை. கடைசியாக ஒருநாள் அவன் சம்பாதித்தது எவ்வளவு என்று கணக்குப் போட்டு விஷயம் புரியாமல் கலங்கித் தவிக்கிறான். அந்தப் பணக்காரன் நிலைமை இயக்கத்திற்கு வரக் கூடாது, வர விடக் கூடாது.

கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கரையாத இயக்கம் - பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்து போகாத இயக்கம் - மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள் ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டு போகாத இயக்கம் - பதவியும் பட்டமுமே தேவை என்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து விடுபட்ட இயக்கம் - சொந்த வாழ்வும் சுயநலமுமே பெரிதென்போரின் பிடியிலிருந்து தப்பிய இயக்கம் - கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை, மாயவரம் நடராசனை, ஆரூர் இராமனை, அழகிரிசாமியை அணைத்திருந்த இயக்கம் - மொழிக்காக உயிர்விட்ட தாளமுத்து நடராசன்களைக் கொண்டிருந்த இயக்கம் - கொள்கைக்காக மரத்திலே பிணமாக ஊஞ்சலாட்டப்பட்ட உடையார் பாளையம் வேலாயுதங்களை

உள்ளடக்கிய இயக்கம் - மதுரை மாநாட்டுத் தீயைக் கண்டு மனங்கலங்காத இயக்கம் - குடந்தைத் தெருவினிலே குருதி வெள்ளத்தைக் கண்டு குலை நடுங்காத இயக்கம் - இராமகாவியம் இழுக்குடையது என்பதை எடுத்துக்காட்டி பாரதியார்களை, சேதுப் பிள்ளைகளை சொற்போரிலே வெற்றி கண்ட இயக்கம் - 'ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான், ஆனது ஆகட்டுமே' என்று பாடி வரும் ஆயிரமாயிரம் பட்டாளத் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம் - தம்பிகளின் நெஞ்சைத் தட்டிப் பார்த்து "உறுதியானதுதானா இது!" என்று உணர்ந்து அறப்போருக்கு உரிய காலம் பார்த்திருக்கும் உலக அறிஞர்களில் ஒருவராம் அண்ணாவைப் பெற்றிருக்கும் இயக்கம் - குள்ள நரிக் கூட்டத்தின் குடல் கிழிக்கும் கூற்றம் - குமுறும் எரிமலை புதுவைக் கவிஞர் பாரதிதாசனைப் பெற்றுள்ள இயக்கம் - ஆரியம் ஒரு மாயை, அது பல உருவில் நடமாடும் என்பது கண்டு இலக்கியத் துறையிலே - நாடகத் துறையிலே - கலைத் துறைகளிலே - ஆரியத்தின் கைவரிசையை எதிர்க்கப் பலப்பல அணுகுண்டுகளை நடமாட விட்டிருக்கும் இயக்கம் - இத்துணை மகத்தான இயக்கம் நிலவுபோல வளர்வதும், தேய்வதும் பின் வளர்வதுமாயுள்ளது. நிச்சயமாக நமக்குத் தெரியும் கழகத்திலே நான் மேலே குறிப்பிட்ட அமைப்பு முறைகள் சீர்திருத்தப்படா விட்டாலுங்கூட கழகம் அழிந்து விடாது என்று. ஆனாலும் சந்திரனைப் போல தேயும். பிறகு வளரும். ஆனால் சந்திரனைப் போல அழியாமலே இருக்கும். நம்முடைய ஆசையெல்லாம் இயக்கம், அழியாமலுமிருந்து அதோடு வளர்வதும் தேய்வதுமின்றி எப்போதும் வளர்வது என்பதாகவே இருக்க வேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் அழுத்தந்திருத்தமாகக் கூற வேண்டியிருக்கிறது, அமைப்பு முறை தேவையென்று. அந்தத் தேவையை மத்தியக் கழகத்திலிருந்துதான் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதல்ல. மாவட்ட, கிளைக் கழகங்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே அமைப்பு கண்டு மாவட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு மத்திய கழகத்தை தங்களோடு இணைத்து செயல் புரியச் செய்ய வேண்டும். விழுதுகள் இருந்தால் தான் ஆலமரத்திற்கு அழகு. இது கழகத் தொண்டர்கள் - செயலாளர்கள் அறியாததல்ல.

நாட்டு நிலைமை மிக மிக நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது. இந்த நேரத்தில் நாடு நம்மை எதிர்பார்த்து நிற்கிறது. அவர்கள் எதிர்பார்ப்பது நம்மிடமிருந்துதான். நமது கொள்கை

அவர்கட்கு தேளாயிருந்த காலம்போய் தேனாக மாறிவிட்டது இப்போது. இந்த நல்ல நேரத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயன்படுத்துவது என்றால் போலிப் பிரச்சாரம் செய்து தேர்தலிலே நாற்காலி பிடிப்பது என்பதல்ல, பொருள். நம்மிடையே நல்லெண்ணம் அரும்பியிருக்கும் இவ்வேளையில் மக்களுக்குள்ள கஷ்டங்களை - நாட்டுக்குள் படையெடுக்கும் நானாவித ஆபத்துக்களை முறியடிப்பதற்கு நம்முடைய உயிரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அர்ப்பணிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கூறுகிறேன்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பிலே வெற்றி பெற்று விட்டோம். வாகை மாலை சூடி விழாக்களும் நடத்தி விட்டோம். எலும்புகளை முறித்துக் கொடுத்து - நரம்புகளை அறுத்துக் கொடுத்து - குருதியைக் கொட்டிக் கொடுத்து இத்தனைக்கும் அசையாத நிலை ஆளவந்தாருக்கு இருக்கிறது என்பது கண்டு, இறுதியாக கோவை முத்தமிழ் மாநாட்டிலே அபாய அறிவிப்பு சங்கம் முழங்கி, அதன் பிறகு ஆளவந்தவர் விழித்துப் பார்த்து, மொழிக்கு வந்த கொடுவாளைத் தடுத்து விட்டனர். இந்த வெற்றியைக் கொண்டாடும் நேரத்திலேயே நெஞ்சு கொதிக்கும் நெருப்புச் செய்தியொன்று நம்மை நெருங்கிற்று.

ஆம், அதுதான் அல்லாடியாரின் ஆனந்தத் தாண்டவம் - அக்கிரகாரத்தின் வெற்றி முரசம் - திராவிடத்தின் முன்னாள் பழம்பெருந்தலைவர்கள், உரிமைப் போர்த் தளபதிகள் தியாகராயர், டாக்டர் நாயர், பனகல் அரசர், டாக்டர் நடேசன், போன்ற பல தலைவர்கள் ஒன்று சேர்ந்து உண்டாக்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை (கம்யூனல் ஜி.ஓ.) யைக் குழியில் தள்ளிவிட்டு பார்ப்பனீயம் பாடுகின்ற பள்ளுப்பாட்டைத்தான், தோழர்களே! குறிப்பிடுகிறேன். முப்பது ஆண்டுகளாக அமலிலிருந்து வரும் வகுப்புவாரி முறை அடியோடு சாய்கிறது. சட்டம் கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறானதாயிருக்கிறதாம். அதற்காக சமூக நீதியை சாய்த்து விட வேண்டுமாம். சட்டத்தை இயற்றுபவர்கள் மக்கள், மக்கள் வாழ வகுத்தது சட்டம். கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறுதலாக சட்டம் இருந்தால் சட்டத்தைச் சரிப்படுத்த வேண்டியது முறையா அல்லது ஒரு பெரிய சமுதாயத்தின் உரிமையை உடைத்து நொறுக்கி உள்ளம் எரியச் செய்வது முறையா என்றுதான் நாம் கேட்கிறோம்.

1920இல் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சைக்கு சென்ற மாணவர்களின் தொகை இருபதாயிரம். இன்று 1950ல் அறுபத் தெட்டாயிரம். இப்படி வளர்ந்து வந்த திராவிடரின் கல்வி உயர்வைக் கருவறுக்க சட்டத்தை வாளாக்குகிறார்கள். சட்டம் செய்தவர்கள் ஐந்து பேர். அதில் மூன்று பேர் தென்னாட்டு நிலை தெரியாத வட நாட்டவர். இருவர் தென்னாட்டவர். அதில் ஒருவர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், மற்றவர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர். எங்கிருந்து நீதி கிடைக்கும் இந்த நிரபராதித் திராவிடருக்கு!. எங்கிருந்து உரிமை கிடைக்கும் உளுத்துப்போன சமுதாயத்துக்கு!..... சமூகநீதி தேவையென்றால் பரந்த நோக்கம் பேசுகிறார்கள். தகுதி, திறமையென்கிறார்கள். இந்தத் தகுதியும் திறமையும் சமுதாயப் பிரச்சினை வரும்போது காட்டப்படுகிறதா? கல்விச் சாலைக்குச் செல்ல தகுதி திறமை என்று கர்ஜிக்கிற கனவான்களைக் கேட்கிறேன் - காலையில் எழுந்து ஸ்னானம், நேமம், நிஷ்டை, விரதம், அளவில்லாத ஆண்டவன் பக்தி, பழுத்த ஆஸ்திகம் இத்தனை திருக்குணங்களும் அமைந்த திராவிடன் ஒருவன், ஆலயத்து சென்று ஆண்டவனைத் தொட்டு அர்ச்சிக்க அபிஷேகிக்க முடியாதே. அதே நேரத்தில் இரவெல்லாம் இன்பவல்லியோடு கூடிக் கிடந்து வெற்றிலை காய்ந்த வாயுடனே ஆண்டவனைத் தொட்டுக் குளிப்பாட்டி, உணவூட்ட ஒரு பெரு வியாதி பிடித்த பார்ப்பனருக்குக் கூட உரிமை இருக்கிறதே - இதில் எங்கே தகுதி, திறமை? யாரிடமிருக்கிறது தகுதி..... ஆனால் யார் நுழைய முடிகிறது கோயிலில். இவைகளை ஒழித்துக் கட்டி விட்டு, உயர்ந்தோர் எனப் பேசும் ஆணவத்தை அகற்றி விட்டு பிறகு கம்யூனல் ஜி.ஓ. தேவையற்றது என்றால்கூட அதில் அர்த்தமுண்டு. எப்படியோ அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்.

நாம் முன்பு கூறியபோது நையாண்டி பேசியவர்கள் இன்று நம்மோடு சேர்ந்து 'அந்தோ! அநீதி!' என அலறுகிறார்கள். சென்னை அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று விட்டது நீதி கேட்க! அதுவும் நம் முயற்சியால்தான், கிளர்ச்சியால்தான் முடிந்தது என்பதை நினைத்துப் பெருமையடைகிறோம். உயர் நீதி மன்றத்துத் தீர்ப்பு கிடைத்ததும் அரசாங்கத்தின் அடுத்த திட்டம் என்ன என்பது அமுங்கித்தான் கிடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்னையில் துவக்கிய கிளர்ச்சி, திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் காட்டிய உணர்ச்சி, மந்திரி மாதவமேனனை வாய் திறக்கச் செய்தது. அப்பீல் செய்து

சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம் என்றார்கள். அதன் பிறகு நாம், பொறுத்திருந்து பார்ப்போம் - போகாவிட்டால் கிளர்ச்சி துவக்குவோம்.

அப்பீலுக்கு போயிருக்கிறவர்கள் அங்கும் தோல்வி கண்டால் - அதன் பிறகு அரசியல் சட்டம் திருத்தப்படாவிட்டால் அப்போது எரிமலையாகக் குமுறப்போகிறது நமது கிளர்ச்சி. மூன்று கடல்களும் பொங்கி ஆதிக்க இமயத்தை மூழ்கடிக்கும் கிளர்ச்சி. சாவா? வாழ்வா? என்று முடிவு கட்டுகிற கிளர்ச்சி.

ஆளவந்தார் சுப்ரீம் கோர்ட்டிலிருந்து திரும்புகிற வரையில் நமக்கு வேறு பல வேலைகள் உண்டு. சமூக நீதி பற்றிய விளக்கவுரைகளாற்றி மக்களை விழிக்கச் செய்ய வேண்டும். மக்கள் விழிப்படைவார்கள். ஆனால் செயலாற்ற உடலில் வலுவில்லை. காரணந்தான் தெரியுமே - கொடுமையான காரணம். பசி. . . . பசி . . . . பருத்திக் கொட்டையை சாப்பிடு என முன்ஷி சிபார்சு செய்யுமளவுக்கு வளர்ந்து விட்ட பசி - திருநெல்வேலியிலும் வேறிடங்களிலும் தான் பெற்ற செல்வத்தைத் தன் வயிற்றில் கிடந்த வைடூரியத்தை, தாயார் விலை கூறி விற்று வயிற்றைக் கழுவிக் கொள்ளும்படி செய்த கோரப் பசி - இந்தப் பசி நீக்க, பாராள வந்தவர் எடுத்துக் கொண்ட முயற்சி, எட்டு அவுன்ஸ் அரிசியை ஆறு அவுன்சாக்கியதுதான். இந்தப் பசி போக்கும் கைங்கர்யத்தை செவ்வனே செய்ய யாரும் முன்வரவில்லை. நாமோ நாட்டு மக்களில் ஒரு பகுதி. ஆனாலும் வாயில்லாப் பூச்சிகளல்ல! நமது வார்த்தைகள் முதலில் அலட்சியப்படுத்தப்பட்டாலும் பிறகு அதுதான் "வேதவாக்"காக மாறியிருக்கிறது பலருக்கு.

பசியால், மக்கள் மாளும் நேரத்தில் பாராமுக மாயிருக்கும் சர்க்காருக்கு - ஒருமுறை நினைவு படுத்தும் நிகழ்ச்சியை நாம் நடத்திக் காட்ட வேண்டும். சென்னையிலே பட்டினிப் பட்டாள ஊர்வலம் நடந்த பிறகு நல்லதொரு எதிரொலி ஏற்பட்டது. அதுபோல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாடெங்கும் ஒரு நாள் குறிக்கப்பட்டு பசியால் மாளும் மக்களின் பட்டியலை சர்க்காருக்குத் தர வேண்டும். அந்த நாள் சர்க்காரின் மந்தப் போக்கைக் குறைக்குமென்ற நம்பிக்கையோடு, இதைச் செய்யலாமா செய்யக் கூடாதா என்ற முடிவை - செய்யலாம் என்றால் நாள் குறிப்பிடுங்கள் என்ற தாழ்மையான வேண்டுகோளை தலைமைக் கழகத்தின் முன் வைக்கிறேன். நம்முடைய கிளர்ச்சிகள்

என்றும் தோற்றதில்லை, அடக்குமுறைகளை வீசிய போதும் - சிறைச் சாலையிலே அடைத்தபோதும் - சிரச் சேதம் செய்வோம் என்று மிரட்டியபோதும் - நாம் பயந்து பின்னடைந்ததில்லை.

அந்த அஞ்சா நெஞ்சத்துடன் - அழகிரி சாமியை நினைத்துக் கொண்டு அண்ணாவின் படை வரிசையிலே சேர வேண்டுமென்றுதான் திராவிடப் பெருமக்களை அழைக்கிறேன். அப்படி அழைக்கும் போதுதான் அழைக்கப்பட்டவர்களை அமைப்பு முறையில் நடத்திச் செல்லக் கழகம் இன்னும் செப்பனிடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செயல்முறைத் திட்டங்களின் அமைப்பு முறைகளில் சிறிது அயர்ந்து விட்டது கழகம் என்னும்போது அந்தக் குற்றவாளிப் பட்டியலிலே நானும் அடங்கியிருக்கிறேன் என்பதை நினைவுபடுத்திக் கொண்டுதான் சொல்லுகிறேன். நம் குற்றம் கொள்கையை மீறியதல்ல, சிதறிக் கிடக்கும் சக்தியை ஒன்றுபடுத்தாததுதான் - சிந்திக் கிடக்கும் மலர்களை மாலையாக ஆக்காததுதான் - அந்த அருமையான செயல் இந்த ஆண்டு தொடங்கிவிடும் என்று நம்புகிறேன். அதற்கான விடிவெள்ளி முளைத்திருக்கிறதாக உணருகிறேன்.

சென்னை தங்கசாலை வீதியிலே தலைமை நிலையம் பணி புரியத் தொடங்கி விட்டதையும் நீங்கள் அறிய வேண்டுமென்று கூறுகிறேன். இந்த ஆண்டிலே நாம் வளர்ந்து விட்டோம். வரும் ஆண்டிலே நம் கையில் வேலேந்திப் புறப்படப் போகிறோம், தோழர்களே! இந்த "வேலேந்தி" என்ற வார்த்தைகூட எதிரிகட்கும், சர்க்காருக்கும் பயங்கரமாகத் தோன்றும். பயப்படத் தேவை யில்லை. கொள்கையை வேலாக்கி அறப்போர் ஆரம்பமாகப் போகிறது என்பதை அறிவுறுத்துகிறேன், உங்கள் சார்பாக, அரசியலாருக்கு!

அகவிலை உயர்வை எதிர்த்து ஒரு போர்! அடக்குமுறையை எதிர்த்து ஒரு போர்! புத்தகங்களின் தடை உத்தரவை எதிர்த்து ஒரு போர்! நாடகத் தடைகளை மீறி ஒரு போர்! இப்படிப் போர்கள் நடக்கப் போவதில்லை. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே ஒரு போர்! அந்தப் போரிலே கலந்து வாகை மாலை சூட - வாரீர் தோழர்களே! பாண்டியன் பரம்பரையினரே! சேரன் சந்ததியினரே! சோழனின் சொந்தக்காரரே! வாரீர்! சிறுத்தையின் உறுமல் -

சிங்கத்தின் சீற்றம் - கறுத்த கழுதையே அங்கேன் கனைக்கிறாய் என்று கேட்டிட வாரீர்! ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை - மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று என்று மார் தட்டிட வாரீர்! புரட்சிப்பண் பாடிட வாரீர்!

வாரீர் வாரீர் . . . வாலிப வீரர்களே! வைர நெஞ்சுடைத் தோழியர்களே! வண்மை நிறை பெரியோர்களே! . . . என அழைக்கிறேன்.”

இளைய உடன்பிறப்புகளே!

அன்று அரும்பு மீசை இளைஞனாக இருந்த என் குரல் இப்படிக் கோவில்பட்டியிலே ஒலித்தது. இன்றும் அந்த இளமைத் துடிப்புடன் ஒலிக்கிறது; இந்தக் குரல் ஒலியிலே அணிவகுத்திடு! பணி தொடர்ந்திடு!

அன்புள்ள,

மு.க.

28-11-2007

3310. மாநாட்டில் அணிவிக்கும் மணி முத்து மாலை!

உடன்பிறப்பே,

இளைஞரணி மாநில மாநாடு நடைபெறும் திருநெல்வேலி மாவட்டத்தில் 80 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் வேளாண்மையை நம்பித்தான் வாழ்கின்றனர். தாமிரபரணி ஆறு மாவட்டத்தின் பாசன வசதிக்கும் வேளாண்மைக்கும் பெரிதும் பயன்பட்டு வருகிறது. சிற்றாறு, மணிமுத்தாறு, சீராறு ஆகியனவும் நெல்லை மாவட்ட வேளாண்மைக்கு உதவிக்கரம் நீட்டுகின்றன.

நெல்லை மாவட்டத்துக்கு, வட கிழக்கு பருவ மழை தான் அதிகப் பயன் விளைக்கிறது. இந்த மழையின் உதவியால்தான் நெல் சாகுபடி வெற்றிகரமாக இங்கே நடைபெறுகிறது. தென் மேற்குப் பருவ மழை குறுகிய கால கார் நெல் விளைச்சலுக்கு உதவியாக இருக்கும்.

திருநெல்வேலி என்பது அழகான பெயர். “நெல்” என்ற சொல் இந்த ஊரின் பெயரிலேயே நடுநாயகமாக விளங்குகின்றது. எனவே நெல்லை மாவட்டத்தில் நெல் விளைச்சல் முக்கியமாக இருப்பது பொருத்தமானதுதானே? இந்த மாவட்டத்தின் மொத்த தானிய உற்பத்தியில் 70 சதவிகிதம் நெல்தான். நெல் தவிர பருத்தி, கம்பு, சோளம், எள், ராகி போன்ற தானியங்களும் பயிராகின்றன.

நெல்லைச் சீமையில் நீர்வளம், நிலவளம் பற்றிக் குறிப்பிட்டேன். மாநாட்டில் கூடிடும் இளைஞர்களின் மன வளம் பற்றியும் - அவர்களின் மகிமை பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டாமா? அவர்கள் நல்கிடும் தூய தொண்டு பற்றி அறிந்து கொள்ளல் வேண்டாமோ?

அங்கு நடைபெறும் இளைஞர் அணியின் மாநில மாநாட்டிற்கான ஏற்பாடுகள் எல்லாம் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. இது இளைஞர் அணி மாநாடு என்பதாலோ

என்னவோ, இந்த முறை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, அதற்கான பணிகள் எல்லாமே மிகவும் விறு விறுப்புடனும், விரிவாகவும் நடத்தப்பட்டு வருவதைக் காண்கிறேன். மாநாடு நடைபெறும் இடத்தை தேர்வு செய்யவும், அங்கே பந்தல் அமைப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவும் இளைஞர் அணியின் செயலாளரும், மாநாட்டின் தலைவருமான தம்பி மு.க. ஸ்டாலின் இரண்டு மூன்று முறை நெல்லைக்குச் சென்று வந்துள்ளார். நெல்லை மாவட்டத்திலே உள்ள கழக முன்னணியினர், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தம்பி கருப்பசாமி பாண்டியன் மற்றும் கழக முன்னணியினர் வழக்கறிஞரும், நெல்லை மாநகர மேயருமான ஏ.எல். சுப்பிரமணியம், மத்திய இணை அமைச்சர் ராதிகா செல்வி, மாநில அமைச்சர்கள் மைதீன் கான், பூங்கோதை, சட்டப் பேரவை உறுப்பினர்கள் மாலைராஜா, அப்பாவு, மற்றும் சுப சீத்தாராமன், ச. தங்கவேல். எஸ்.எஸ். மைதீன், வரவேற்புக் குழுத் தலைவர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கா. முத்துராம லிங்கம், வரவேற்புக் குழு செயலாளர்கள் வே. கோமதி நாயகம், யூ.எஸ்.டி. சீனிவாசன், க. ரவி, மற்றும் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள் அந்த மாவட்டத்திலே உள்ள இளைஞர்களின் ஒத்துழைப் போடும் பந்தல் வேலைகளில் முழுமையாக ஈடுபட்டு மாநாட்டுக்காக; கொட்டகைகள் அல்ல; கோட்டை கொத்தளங்களை அமைத்து வருகிறார்கள்.

மாநாட்டு வேலைகளை மேற்பார்வையிடச் சென்ற தம்பி ஸ்டாலினுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பே, மாநாட்டிற்கு வருகை தருவோருக்கு அளிக்கப்படும் மகத்தான வரவேற்பையொத்ததாக இருந்ததென்று என்னிடம் தெரிவித்தார்கள். மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக தம்பி ராஜா முன்னிலையேற்றிட இளைஞர் அணியினரின் எழுச்சி மிகு அணிவகுப்பு நடைபெறவுள்ளது. அணிவகுப்பிலே கலந்து கொள்வோர் கழகத்தின் இரு வண்ணக் கொடியேந்தி தான் கலந்து கொள்ள வேண்டுமென்று அறிவிக்க வேண்டுமா; என்ன? கொடிக்காடுகளே வீதிகளில் காண முடிகிறதே!

ஒவ்வொரு மாவட்டக் கழகத்தின் செயல் வீரர்களின் கூட்டங்கள் கூட்டப்பெற்று, அந்தந்த மாவட்டங்களின் சார்பில் நெல்லை மாநாட்டில் கலந்து கொள்ள செல்வதற்கான ஏற்பாடுகள் எல்லாம் வகுக்கப்பட்டுள்ளன. என்னைச் சந்திக்கும்

கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்கள் தங்கள் மாவட்டத்திலிருந்து 200 பேருந்துகள் புறப்படவுள்ளன, 100 பேருந்துகளுக்கு முன் தொகை கட்டப்பட்டுள்ளது என்றெல்லாம் தகவல் தெரிவித்து வருகிறார்கள். அவர்கள் சொல்கின்ற செய்திகளை கேட்கும்போது, இத்தனை பேருக்கும் நெல்லைச் சீமையிலே இடம் இருக்குமா என்ற ஐயம் எனக்கேற்பட்டுள்ளது.

மாநாட்டுப் பந்தல் 800 மீட்டர் நீளம், 400 மீட்டர் அகலத்தில் அமையவுள்ளது. சுமார் ஐந்து இலட்சம் பேர் வரை தாராளமாக கலந்து கொள்ளலாம். மேடை மட்டும் 70 அடி நீளம், 56 அடி அகலத்தில் நிறுவப்படுகிறதாம். இளைஞர் அணியினரின் அணி வகுப்பு 4 கி. மீட்டர் தொலைவிற்கு இருக்கும். நானும், பொதுச் செயலாளரும், கழகத்தின் மூத்த முன்னோடிகளும் அணிவகுப்பினை ஓரிடத்தில் அமர்ந்தவாறு பார்க்கவுள்ளோம். கழகத்தின் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களுக்கும், குறிப்பாக இளையவர்களுக்கும் மாநாட்டில் பேசுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். பேச்சாளர்களின் பெயர்களும், பேசுவதற்கான தலைப்பும் இளைஞர் அணியின் செயலாளரால் இரண்டொரு நாட்களில் வெளியிடப்படும். மாநாட்டில் அதிகம் பேர் பேசிட விரும்புவார்கள் என்பதால், பேச்சாளர்கள் தங்களது பேச்சினை குறள் போல அமைத்துக் கொண்டு, குறுந்தொகையென குறைந்த நேரத்தில் நிறைவாக பேசத்தக்க வகையில் முன்கூட்டியே தயாரித்துக் கொண்டு பேசுவார்கள்.

அணிவகுப்பிலே வரும்போது, தாங்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை விளக்கிடும் வகையில் மாவட்ட சார்பில் முன் பகுதியில் வருவோர் எந்த மாவட்டம் என்ற பதாகையினை ஏந்தி வருவார்கள். ஒவ்வொரு மாவட்டத்தின் சார்பிலும் பத்தாயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர், இருபதாயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர் என்றெல்லாம் அன்றாடம் ஏடுகளில் வரும் செய்திகள், வெறும் செய்திகளாக மட்டுமல்லாமல், உண்மையில் அத்தனை பேர் பங்கேற்கும் வகையில் இப்போதிருந்தே பணியாற்றுகின்றனர்.

நெல்லை மாவட்டக் கழகச் சார்பிலும், இளைஞர் அணியின் சார்பிலும், மாநாடு பற்றிய விவரங்களையெல்லாம் செய்தியாளர்களுக்கு ஏற்கெனவே தெரிவித்து அவை ஏடுகளில் வந்துள்ளன.

தமிழகத்தின் தென்கோடியில் நடைபெறும் மாநாட்டிற்கு நீண்ட தூரத்திலிருந்து பயணம் செய்து வருவோர் பாதுகாப்பாக வந்திட வேண்டும். வாகனங்களில் வருவோர் மிகுந்த எச்சரிக்கையாக இருந்திட வேண்டும். இரவுப் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது.

இதற்காகவே எழுதியது போல ஒரு கட்டுரை - நமது தமிழர் தலைவரும் - நெல்லை இளைஞர் அணி மாநாட்டில் முதல் நாள் மாலை நிகழ்ச்சிக்கு தலைமையேற்க இருப்பவருமான வீரமணி அவர்களின் "வாழ்வியல் சிந்தனைகள்" பற்றிய கருத்துப் புதையலை நினைவூட்ட விரும்புகிறேன். வாழ்வியலுக்கு வகையான - தேவையான - பல கருத்துக்களை - அறிவுரைகளை உள்ளடக்கிய கட்டுரைகளின் தொகுப்பு அது.

அதில் இந்தக் கட்டுரை வருமாறு :-

★ "நாளும் வானொலி, தொலைக்காட்சி, ஏடுகளில் செய்திகளில் தவறாது இடம் பெறுவது சாலை விபத்துக்கள். பல உயிர்கள் அன்றாடம் பலியாவது ஏதோ வானிலை, மார்க்கெட் நிலவரம் என்பன போன்று அன்றாட அவலச் செய்தியாகி வருவதும் மனித நேயம் படைத்தவர்களின் உள்ளத்தைப் பிழிந்தெடுக்கிறது!

மறைந்த ராம்நாத் கோயங்கா (தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனர்) அவர்களின் முக்கிய அறிவிப்பு ஒன்றை நான் அடிக்கடி நினைவு கூர்ந்து, மேற்கோளாகச் சொல்வதுண்டு.

"நான் எந்தச் சட்டங்களையும் மீறுவதற்குத் தயாராக இருப்பேன். ஆனால், ஒரே ஒரு சட்டத்தை மட்டும் மீறத் தயாராக இல்லை; அதுதான் போக்குவரத்து விதி பற்றிய சட்டம். காரணம், அது எனது உயிரைப் பாதுகாக்கவே ஏற்பட்டது என்ற நினைப்பு எனக்கு எப்போதும் உண்டு" என்பதே - அவரது அந்த அறிவுரை!

இது மிக வரவேற்கத்தக்க அறிவிப்பு அல்லவா? ஆனால், நம்மில் பலர் போக்குவரத்து விதிகளுக்கு கீழ்ப்படிவது என்பதை ஏதோ போலீஸ்காரருக்கு உதவுவது போல ஒரு தவறான சிந்தனையுடன் அல்லவா கீழ்ப்படிகிறோம்? இதைவிட வெட்கக் கேடு வேறு உண்டா?

மனித உயிர்களைப் பலி கொள்ளும் விபத்துக்கள் (accidents) என்பவை இமை மூடித் திறப்பதற்குள் எதிர்பாராது ஏற்படும் அதிர்ச்சிச் சம்பவம் ஆகும்!

வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது, நாம் கவனத்துடன் ஓட்டிச் சென்றால் மாத்திரம் போதாது; எதிர் வரும் வண்டி ஓட்டுநரின் கவனக் குறைவையும் எதிர்கொண்டு சமாளித்து ஓட்ட வேண்டிய இரட்டைப் பொறுப்பு உண்டு.

அதிவேகம் என்பது ஒரு ஓட்டுநருக்குப் பெருமை அல்ல; அதிக காலம் இவர் எந்தவிதத் தவறும் செய்யாத ஓட்டுநர் என்பதே நிரந்தரப் பெருமைக் குரியதாகும் என்பதை ஓட்டுநர் நண்பர்கள் மறக்கக் கூடாது!

சிலர் இரவு பத்து மணிக்கு மேல் போக்குவரத்து விதி செயல்முறை கிடையாது என்று அறியாமையால் உளறுவதுண்டு; சட்டத்தின் முன் இரவென்ன? பகலென்ன? எல்லாம் அதற்கு ஒன்றுதானே! நினைவிற்கொள்வோமாக!

இரு சக்கர வாகனங்கள் வைத்து ஓட்டும் நடுத்தர வயதுள்ள மக்கள் - இளைஞர்கள் - மாணவ - மாணவிகள் எண்ணிக்கை, மக்கள் தொகைப் பெருக்கம் போல நாள்தோறும் பெருகிக் கொண்டே போகிறது. “கண் மண் தெரியாத” - இளங்கன்றுகளுக்குப் பயம் தெரியாது என்ற பழமொழிக்கொப்ப - விமான வேகத்தில் அதிக ஓசையைக் கிளப்பி ஓட்டுவதில் தனி உற்சாகம் கொள்வது அவர்களுக்கே பற்பல நேரங்களில் உயிர்க்கொல்லி ஆகிவிடுகிறது.

இதில் “செல்” போனில் பேசிக் கொண்டே ஓட்டுவது, எரிதழலில் நெய்யூற்றலாகி விடுகிறது! எதிரில் வாகனம் வருவதை திடீர் எனக் கண்டு திருப்பவோ, “பிரேக்” போடவோ முயன்று, தூக்கி எறியப்பட்டோ அல்லது எதிர் வாகனங்களில் சிக்கியோ மாளும் மாந்தர்கள்தான் எத்தனை பேர்?

என்னே கொடுமை?

தலைக் கவசம் (ஹெல்மெட்) போடுவது மிக மிக அவசியம். மூளைப் பகுதியில் பின் தலைப் பகுதியில் அடிபட்டு, பிழைத்தால்கூட பல உறுப்புக்கள் செயலிழக்கும் பேரபாயம் உண்டே! அதை அணிவதை ஏன் தவிர்க்க வேண்டும்? நமது பாதுகாப்புக்குத்தானே அது?

அதைவிடக் கொடுமை, இரு சக்கர வாகன ஓட்டிகள், வரிசையாக வாகனங்கள் செல்லும்போது “இண்டு இடுக்கு” சந்து

தெரிந்தால்கூட உடனே நுழைந்து பறக்கத் தொடங்கி, ஒரே அடியாய் பறந்தே விடுகின்றனரே!

இதில் இன்னொரு கொடுமை - அந்த வாகனம் இன்னொருவரிடமிருந்து இரவல் வாங்கிய வாகனம். அதனால் ஏற்படும் நட்டம் உயிர்ச் சேதம், மற்றவருக்கு பொருள் இழப்பு, வழக்கில் சிக்குபவர் வாகன உரிமையாளரே! அதைவிட மேலும் ஒரு "போனஸ் கொடுமை" அந்த வண்டியில் எரிசக்தி நிரப்பித் தராமல், காலி செய்து விட்டு அவரிடம் திருப்பித் தரும் அநாகரிகச் செயல்.

இப்படியா வாழ்க்கையை ஓட்ட வேண்டும்?

எண்ணுக! உயிர்க் கொல்லிகளுக்கு அழைப்பு விடுத்து, ஆயுளை முடித்துக் கொள்ளாதீர்கள் நண்பர்களே!

மனித உயிர் விலை மதிப்பற்றது! நல்லவர்களை இழந்து கண்ணீர்க் கடலில் தத்தளிக்கும் பல குடும்பங்கள் - பெற்றோர்கள் சார்பாகவே இந்த வேண்டுகோள்.

போக்குவரத்து விதிகளின்படி பயணம் செய்யப் பழகுவீர்!

அவ்விதிகள் நம் உயிர் காக்கும் தோழன் - துணைவன் என்பதை மறவாதீர்!"

★ ★

உடன்பிறப்பே, பேராயர் வின்சென்ட் சின்னதுரை சிறப்புடன் ஏற்பாடு செய்துள்ள சீர்மிகு நிகழ்ச்சி - கலைஞர் காவியம் 84 - தமிழர் தலைவர் வீரமணியார் தலைமை ஏற்கும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு வாழ்த்துரை வழங்க - கவிப்பேரரசு தம்பி வைரமுத்து வருகிறார். அவர் எழுதிக் குவித்துள்ள கவிதைக் கருவூலத்தில் என் கண்ணில் பட்ட கருத்துக் கவிதையொன்றை இதோ; உன் போன்றோர் கருதிட தருகிறேன்.

"தெற்கே தெற்கே ஜாதிகள் முட்டும்
தீயே பற்றாதே! - பழங்
கற்காலத்துப் பாம்பே! எங்கள்
காலைச் சுற்றாதே!

மண்பானைகளும் மண்பானைகளும்
மல்லுக்கு நிற்பதுவோ - இங்கே

கண்ணீர்த்துளிகளும் கண்ணீர்த்துளிகளும்
கைகள் கலப்பதுவோ?

தாழ்த்தப்பட்டவர் ஒடுக்கப்பட்டவர்
சண்டை பிடிக்கையிலே - அங்கே
வீழ்த்தப்படுவதும் வெல்லப்படுவதும்
வேறோர் இனம(ல்)லவே!

முந்நூற்றாண்டை முன்னுக் கிழுக்குது
முரட்டு விஞ்ஞானம் - நாமோ
முந்நூறாண்டு பின்னே செல்வது
முழுக்க அஞ்ஞானம்

அந்நிய ரோடு சண்டை செய்தது
ஆறோ ஏழோதான் - சொந்த
மண்ணவரோடு சண்டை கொண்டது
மணலினும் அதிகம்தான்

செயற்கை மனிதன் செவ்வாய்த் தரையில்
சிற்றில் ஆடுகையில் - இங்கே
இயற்கை மனிதர் ஜாதிச் சண்டையில்
இடுப்பு முறிவதுவோ?

நீண்ட நாள்முதல் யாரோ விதைத்த
நெருப்பின் மிச்சத்தில் - மண்ணை
ஆண்ட பரம்பரை இன்று வரைக்கும்
அழிந்து கருகுவதோ?

புதைந்த தமிழின் சங்கம் முன்றைப்
புதுக்க எண்ணாமல் - நம்மைப்
புதைக்கும் ஜாதிச் சங்கத்துக்குள்
புதைந்து போவீரோ?

வறுமை ஏழ்மை பேதைமைக் கெதிராய்
வாளை எடுக்காமல் - நாம்
ஒருவரை ஒருவர் எரித்து மகிழும்
உற்சவம் நடத்துவதோ?

புத்தகம் ஈந்து கல்விச் சாலை
போகும் சிறுவர்களைக் - கையில்
கத்திகள் தந்து ஜாதிக் களத்தில்
கருகச் செய்வீரோ?

மனிதன் என்னும் நிஜத்தை நீங்கள்
மறந்து தொலைத்துவிட்டு - ஜாதிச்
சனியன் என்னும் கற்பனைக்காகச்
சமர்கள் புரிகுவதோ?

ஆயுதங்களைக் கட்டும் கைகாள்
அணைகள் கட்டுங்கள் - அந்த
ஆயுதங்களை உருக்கி உருக்கி
ஆலைகள் எழுப்புங்கள்

சிறைகள் எடுக்கும் செலவில் நீங்கள்
சிறகுகள் வாங்குங்கள் - வீணே
தரையில் சிதறும் ரத்தம் போதும்
தானம் புரியுங்கள்

முன்னே வள்ளுவன் பின்னே பாரதி
முழுங்கினர் ஊருக்கு - அட
இன்னும் நீங்கள் திருந்தா விட்டால்
இலக்கியம் ஏதுக்கு?''

★ ★

உடன்பிறப்பே, எழுதி எழுதிக் குவிக்கிறாயே; நோகாதா உடல்? தாங்குகிறதா வயது? கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு எழுதலாமே! இப்படி என்னைச் சுற்றிக் குரல்கள்!

என் செய்வது? எழுதும் வரையில்தான் வலி தெரிகிறது! எழுதிடப் பேனா எடுத்தவுடன் - உடன் பிறப்பே, என்று எழுதத் தொடங்கியவுடன்; அந்த வலியும் வேதனையும் எங்கே போயிற்றென்றே தெரியவில்லை!

ஆறு பக்கங்கள், ஏழு பக்கங்கள் எழுதும்போது அசதி வந்து எட்டிப் பார்க்கும் - அலுப்பு வந்து ஆட்டம் போடும் - ஆனால்

இறுதியாக "உடன்பிறப்பே" என்று எழுதி முடித்தவுடன் அந்தச் சொல்லுக்குத்தான் என்ன சிறப்பு? என்ன ஓர் உணர்ச்சி? என்ன அப்படியொரு மெய்ச் சிலிர்ப்பு?

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்தின் தலைப்பு "மணிமுத்து மாலை" என்பதற்குப் பொருள் புரிகிறதா?

வீரமணியின் கருத்துரையும், வைரமுத்துவின் கவிதை ஆக்கமும் இணைந்தால் - "மணிமுத்து மாலை" ஆகின்றதன்றோ? அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன்!

"மணிமுத்து" என்று! - அது மாலையாகும்போது எத்துணை மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியை மாநில மாநாட்டில் மலரும் இளைஞர் இதயம்; சமூகங்களுக்கிடையே உருவாக்கிட உதவட்டும்.

அன்புள்ள,

மு.க.

29-11-2007

3311. நெல்லை - கழக இளைஞரணி மாநில மாநாடு (23)

பாதை மாறுவதுமில்லை; பயணம் நிற்பதுமில்லை!

உடன்பிறப்பே,

நெல்லை இளைஞர் அணி மாநில மாநாட்டினையொட்டி, வரலாற்றுப் புகழ்பெற்ற தலைவர்கள், தியாகிகள், மாவீரர்கள், மேதைகள் பற்றியெல்லாம் பல எழுத்தோவியங்கள் - அதன் பின்னர், மாநாடு நடைபெறும் மாவட்டத்தின் சிறப்பு பற்றியும் - மாநாட்டில் பங்கேற்போர், மக்கள் மத்தியில் ஆற்றி வருகின்ற அரும்பணி பற்றியும் - நாள் தவறாமல் நான் உனக்குத் தீட்டுகிற கடிதங்கள் உனக்கு மட்டும் பயன்படாமல் எனக்கும் பயன்படுகின்றன. என் கடிதங்கள் படிக்கப்படுகின்றன - பாராட்டப்படுகின்றன என நான் அறியும்போது, என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

இதோ! நெல்லை மாவட்டக் கழகத்தின் அவைத் தலைவரும், நீண்ட நாள் என் நண்பருமான அருமைத் தம்பி சுப. சீத்தாராமன், நான் எழுதி வருகிற கட்டுரைத் தொடர்களைப் பற்றி எனக்கு எழுதியிருப்பதுடன், நெல்லை மாவட்டத்தில் சமயப் பணியும், தமிழ்ப் பணியும் ஆற்றியுள்ள வெளி நாட்டு ஆன்றோர், சான்றோர் குறித்து முனைவர் பா. வளன் அரசு எழுதிய சிறு நூல் ஒன்றையும் அனுப்பி, அந்நூலில் இடம் பெற்றுள்ளவர்களைப் பற்றியும் நான் எழுதினால், வருங்கால இளைஞர் சமுதாயம் விழிப்படைந்து செயல்பட உதவும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்று நேற்றல்ல, இந்த இயக்கத்துடன் இணைந்து இயங்கி வரும் நான், அன்று முதல் இன்று வரை, இளைஞர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம் - "படியுங்கள்! நன்றாகப் படியுங்கள்!

தேசத் தலைவர்களின் அறிவுரைகள் - பொன்மொழிகள் - ஆய்வுப் பனுவல்கள் - கட்டுரைகள் - கவிதைகள் - காவியங்கள் மற்றும் இலக்கியங்களைப் படியுங்கள் - அத்தனையும் இளைஞர்கள் நெஞ்சில் இப்போதிருந்தே நிழலாடினால்தான், அந்த நிழல் கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவின் நிழலாக அமைந்திடவும் - அந்நிழலில் நம் கொள்கைகள் வற்றாது வளர்ந்து செழித்திடவும் பயன்படும். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நமது இளைஞர்கள் கவனத்தில் வைத்துக் கொண்டு, எந்த நேரமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்தியைத் திணித்து, மற்ற தமிழ் உள்ளிட்ட தேசிய மொழிகளின் தகுதியை இரண்டாவது, மூன்றாவது இடத்துக்குத் தள்ள, இந்தி ஆதிக்க புரியினர் எப்போதும் கொக்கு போலக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் - அவர்களின் கனவு பலிக்காமல் தடுத்திட இளைஞர் சமுதாயம் விழிப்புடன் இருந்திட வேண்டும். மொழிப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்றும், தியாகங்கள் புரிந்தும் நமது இளைஞர்கள் காட்டிய அஞ்சா நெஞ்சம் தான், இன்று நமது தமிழ், செம்மொழி ஆகவும், வேறு எம்மொழியும் நம்மை ஆதிக்கம் செலுத்துகிற அதிகாரத்தைப் பெறாமல் அடங்கிக் கிடக்கவுமான நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது. மறந்திடவும் முடியாது.

நெல்லை மாநாடு என்றதும், பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் நான் அடைபட்டதும், அப்போது நடந்ததும் மறக்க முடியாமல்தான் நினைவுக்கு வருகின்றன.

ஆம்! 1965ஆம் ஆண்டு என்னுடைய 40வது வயதில் - பிப்ரவரி 16ஆம் நாளை, நான் மறக்க முடியாது.

அன்று தான் “வாழ்க தமிழ்” என்று வலிவு மிக்க இளைஞர் படை திரட்டி அறப்போர் தொடங்கி நடத்திய இந்த வாலிபன் மீது பாதுகாப்புச் சட்டம் பாய்ந்து, பருந்தாகத் தூக்கிச் சென்றது, பாளையங்கோட்டைக்கு - என்ன நடந்தது அன்று? இப்போது எண்ணிப் பார்க்கிலும் அந்த நாள் ஒரு இளைஞனுக்கு எழுச்சி நாள்தான் - என்னைப் போன்ற 40 வயது வாலிபனுக்கு நன்னாள்தான்.

ஆம்! அந்த நாள் நள்ளிரவை நோக்கி நகர்ந்த வண்ணமிருந்தது சென்னை மாநகர்!

"விடிந்தால் என்னென்ன இடிச் செய்திகள் இதயத்தைப் பிளந்திடுமோ? எங்கெங்கே துப்பாக்கிச் சூடுகள் நடந்திடுமோ? எத்தனை மங்கல மங்கையர் குங்குமம் இழப்பரோ? எத்தனை காளையர் காராக்கிரகம் ஏகுவரோ?" என்றெல்லாம் எண்ணங்கள் சுழன்றிடக் கோபாலபுரத்திலுள்ள இல்லம் நோக்கிச் சென்றேன் உள்ளம் கனத்திட.

அங்கே.....! எனக்கே காத்திருந்தது அரசாங்க அழைப்பு!

வேறு சில காவல் துறை அதிகாரிகளுடன் தம்முடைய கடமையினை ஆற்றிட வந்திருந்தார் சென்னை நகர உதவிப் போலீஸ் கமிஷனர், என்னிடம் சில கேள்விக் கணைகளையும் அவர் தொடுத்தார். மறுநாள் காலை "முரசொலி"யில் வெளிவருவதற்கென்று, "ஒரு கண்ணில் சுண்ணாம்பு" என்னும் தலையங்கத்தையும், "நீட்டோலை" என்னும் அரசியல் மடல் ஒன்றையும் நான் தீட்டியிருந்தேன்.

அவற்றின் "புரூப்"களைத் தந்திட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். எழுத்து வடிவில் கேட்டாலன்றி அவற்றை அளித்திட இயலாது என்று நான் மறுத்துவிட்டேன். உடனே தம்மோடு வரவேண்டும் என்றார்.

"பெட்டி, படுக்கைகளுடனேயே நான் புறப்படலாமா?"

என்று வினவினேன் சிரித்துக் கொண்டே.

அவரும் அதற்கு சரி என்று தலையசைத்தார் முறுவலுடன்! பின்னர் வீட்டினுள் சென்று பெட்டி, படுக்கைகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன்.

"போகலாமா?" என்றேன், காவல் துறை அதிகாரிகளை நோக்கி.

"போகலாம்" - என்றனர்.

அழுகை வெள்ளத்துக்கு அணைபோட்டு நின்றிருந்த குடும்பத்தாரிடம், விடை பெற்றுக் கொண்டு, போலீஸ் வண்டியிலே ஏறிக் கொண்டேன்.

எழும்பூரில் உள்ள காவல் துறை கமிஷனர் அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அப்பொழுது இரவு மணி பன்னிரண்டு.

அங்கும் அந்த உயர் அதிகாரி - "முரசொலி" ஏட்டிலே நான் தீட்டிய தலையங்கங்கள் பற்றியும், வெளியிட்ட செய்திகள், கட்டுரைகள் பற்றியும் விடாமல் வினா அம்புகளைத் தொடுத்தார். இரவு மணி 1-30 வரை விசாரணை நீடித்தது. பிறகே உறங்குவதற்கு இடம் கொடுத்தனர்.

16-2-1965 அன்று இரவே, நான் கைது செய்யப்பட்டுவிட்ட தகவலை அப்போது காஞ்சியிலிருந்த அண்ணா அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மணி நேரங்கூடச் சரியாகத் தூங்கிடவில்லை. மீண்டும் எழுப்பி போலீஸ் லாரியிலே என்னை ஏற்றினர்.

அப்போது விடியற்காலை 4-30 மணிகூட ஆகியிராது.

என்னைச் சுமந்து கொண்ட வாகனம், சென்னையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எங்கோ பறந்தது வேகமாக.

பனி கொட்டியது.

குளிர் நடுங்க வைத்தது.

தெற்குத் திக்கினை நோக்கியே லாரி ஓடிக் கொண்டிருந்தது. எந்தச் சிறையிலே தள்ளப் போகிறார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. தெரிவிக்கவும் இல்லை காவல் துறையினர்.

17-2-65 காலை 8.30 மணி அளவில் திண்டிவனம் தென்பட்டது. உளுந்தூர்பேட்டையும் தாண்டியாயிற்று.

"ஒருவேளை திருச்சி சிறைக்குத்தான் கொண்டு செல்வார்களோ?"

பழைய நினைவுகள் - நிகழ்ச்சிகள் படமாய் விரிந்தன மனத்திரையில். இதற்கு முன்னர் பெரும்பாலும் நெடுநாட்கள் சிறைப்பறவையாய் நான் அடைபட்டுக் கிடந்ததும் திருச்சியிலேதான்.

மும்முனைப் போராட்டம் -

கல்லக்குடி -

தண்டவாளத்திலே தலை -

அதற்காக ஆறு மாதச் சிறை -

இப்படிப் பொங்கிப் புரண்டன நெஞ்சின் அலைகள்.

இதற்கு இருபது நாட்களுக்கு முன்னர், குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாடக் கழகம் எடுத்திட்ட முடிவினையொட்டிக் கைதானபோதுகூடத் திருச்சிக்குத்தான் கொண்டு வந்து சப்-ஜெயிலிலே என்னைத் தள்ளினார்கள்.

"இப்போதும் அப்படித்தான் இருக்கலாமோ?" - என்றுதான் எண்ணிடத் தோன்றியது எனக்கு. ஆனால், நான் நினைத்தவாறு திருச்சி சிறை எனக்குக் கிட்டவில்லை இந்த முறை.

நடுப்பகல் 12 மணி அளவில், திருச்சியில் நுழைந்திட்ட போலீஸ் லாரி, நேரே ஆயுதப் படைப் போலீஸ் முகாமிற்குச் சென்றது. அங்கே எனக்கு மதிய உணவு வழங்கினார்கள். பின்னர் தொடங்கிற்றுப் பயணம்.

நேரம் செல்லச் செல்ல எனக்கு, நெஞ்சிலே வலி கண்டு தாங்கொணாத அளவுக்கு அதிகரித்துக் கொண்டே போயிற்று. அதற்கு லாரிப் பயணமும் ஒரு காரணம்! முந்திய இரவில் உறக்கமும் சரியானபடி இல்லையல்லவா?

ஒருவர், நீண்ட நெடுந்தொலைவு பேருந்துப் பயணம் புரிந்தாலே உடல் அலுக்கை வாட்டி வதைத்திடும். குலுங்கக் குலுங்க உடம்பைத் தூக்கிப் போடும் லாரிப் பயணம் என்றாலே கேட்க வேண்டுமா அவதிக்கு?

எனக்கு நெஞ்சு வலி கண்டதற்குக் கிஞ்சிற்றும் இரக்கமற்ற முறையிலே குதித்துக் குதித்து ஓடிக் கொண்டிருந்த லாரியையே நான் குறை கூறிட வேண்டும்.

இதைப் பற்றி நண்பர் ப.உ. சண்முகம், பின்னர் சட்ட மன்றத்திலே இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

".....இங்கே (சென்னையில்) கைது செய்யப்பட்ட கலைஞர் கருணாநிதி, நெஞ்சு வலியுடன் போலீஸ் லாரியில் அழைத்துச்

செல்லப்பட்டிருக்கிறார். நான் கேட்கிறேன்! அவரை அழைத்துச் செல்லப் போலீஸ் லாரிதான் உங்களுக்குக் கிடைத்ததா? அவர், தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக நான் கேட்கவில்லை! எங்கள் கட்சியிலே அவர், ஒரு முக்கியமான தலைவர் என்பதற்காகக்கூடக் கேட்கவில்லை! சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறைக்காவது, அவரை ஒரு காரிலே அழைத்துச் செல்லக் கூடாதா? நானூறு மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு சிறைச்சாலைக்கு, நெஞ்சு வலியோடு போலீஸ் லாரியிலே அழைத்துச் செல்வது, எந்த வகையிலே நியாயம்?"

என்னைப் பொறுத்தவரை, சிறைக்குள்ளே தங்குகின்ற வரையிலாவது இத்துணைக் கொடுமையான வலி ஏற்படாத வகையிலே கொண்டுபோகக் கூடாதா என்றுதான் நான் எண்ணினேன். எம்பி எம்பிக் குதிக்காதபடி லாரியை மெதுவாகவேனும் ஓட்டியிருக்கலாம்.

மற்றபடி, துன்பத்தைக் கூட்டிச் சுமக்கத் துணிந்திட்ட ஒரு தொண்டனுக்குத் தான் ஏறிச் சென்றிடும் வாகனம், காராய் இருந்தால் என்ன? லாரியாய் இருந்தால் என்ன? கட்டை வண்டியாய் இருந்தால் என்ன? "ஜட்கா" வண்டியாய் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். வாகனம் எதுவாக அமைந்த போதிலும், அவனுடைய பாதை மாறிடப் போவதில்லை, பயணமும் நின்றிடப் போவதில்லை.

என்னை ஏற்றிச் சென்றிட்ட லாரி, மதுரையை அடைந்த பொழுது, மாலை 4.30 மணி இருக்கலாம். ஆயுதப் படைப் போலீஸ் முகாமுக்கே என்னை முதலில் கொண்டு சென்றார்கள். நூற்றுக் கணக்கான போலீஸ்காரர்களுக்கு மத்தியிலே நான் காவலில் வைக்கப்பட்டேன்.

நெஞ்சு வலியோ நிமிடத்திற்கு நிமிடம் என்னை, துடியாய்த் துடிக்கச் செய்தது. எனவே, எனக்குச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, அரசாங்க மருத்துவமனையிலிருந்து டாக்டர் ஒருவர் வரவழைக்கப்பட்டார்.

அவரோ, என் நிலைமையைப் பார்த்துவிட்டு மேற்கொண்டு, என்னைப் பயணத்தில் ஈடுபடுத்துவது, என் உடல் நலனுக்கு உகந்தது அல்லவென்று உறுதியாகக் கூறிவிட்டார். அவருடைய

அறிவுரையைப் புறக்கணிக்க முடியாத நிலையில், என்னை மதுரை மத்தியச் சிறைச்சாலைக்கு இட்டுச் சென்றனர். மதுரை சிறையில் பயங்கர கொசுக்களின் படையெடுப்பு - கொட்டடிக்குள் அங்குமிங்கும் ஓடி, கொசுக்கடி தாங்காமல் அலறியே விட்டேன்.

இரவிலோ மேலும் கடுமையாயிற்று நெஞ்சு வலி. மார்பை இறுக்கிப் பற்றிக்கொண்டு நான், தவித்த தவிப்பு - துடித்த துடிப்பு - கொஞ்சம் நஞ்சமல்ல. வேதனையின் விளிம்பிற்கே நான் விரைந்த வண்ணம் இருந்தேன்.

மறுபடியும், அரசாங்க மருத்துவமனையிலிருந்து இரண்டு டாக்டர்கள் அழைத்து வரப்பட்டார்கள், எனக்குச் சிகிச்சை அளித்திட! உறக்கம் வருவதற்கென்றே ஊசியும் போடப்பட்டது.

நான் இப்படி நெஞ்சு வலியோடு போராடுவதை நேரிலே கண்டும்கூட, என்னை, மதுரைச் சிறையிலேயே வைத்திட மனம் வரவில்லை காவல் துறையினருக்கு.

18-2-1965 விடியற்காலை மறுபடியும், என்னை லாரியிலே ஏற்றினர். மதுரையை விட்ட பிறகும் தென் திசையை நோக்கியே தீராத பயணம்.

ஆனால் இப்போது, புதிய தகுதிகள் சில என் பயணத்திற்குப் பொலிவேற்றின. என்னுடைய லாரிக்கு முன்னே ரிசர்வ் போலீஸ் லாரியும், பின்னே ஒரு ரிசர்வ் போலீஸ் லாரியும் அணிவகுத்து வந்தன.

அண்ணாவின் மூன்று தாரக மந்திரங்களில் ஒன்றான கட்டுப்பாட்டினைக் கண்ணே போல் கருதக்கூடியவன் - அதனைக் கடுகளவு கூட மீறத் துணிவில்லாதவன் - என்கிற உண்மை காவல் துறையினருக்குப் புரிந்திடவில்லையோ என்னவோ? எனக்குரிய கட்டுக் காவலை மிகுதிப் படுத்தியிருந்தனர், தங்களுடைய கடமை உணர்வின் காரணமாக.

வழியிலே கயத்தாறு! கட்டபொம்மனின் காலடிச் சுவடு பதிந்திட்ட வீரஞ்செறிந்த மண்.

நெல்லை நகரின் எல்லையை அடைந்திட்ட பொழுது இன்னொரு ஏற்பாடும் என்னை வியப்புக் கடலிலே வீழ்த்தியது. அங்கிருந்து நகர் நெடுகிலும், பாளையங்கோட்டைச் சிறை

வரையிலும் இரும்புத் தொப்பி அணிந்த போலீசார், இரு மருங்கிலும் சுவர் எழுப்பியதுபோல் வரிசையாக நின்றனர்.

"ஓர் எதிர்க்கட்சித் தொண்டனுக்குக் கூட இவ்வளவு கோலாகல வரவேற்பா? அரசாங்க அணி வகுப்பு மரியாதையா?" என்று உள்ளூற எண்ணிச் சிரித்துக் கொண்டேன் நான்.

வேளா வேளைக்கு உணவு அருந்தாமல்கூட என்னால் வெறும் வயிற்றோடு இருந்திட முடியும். ஆனால் நாளைக் கடத்திடவே முடியாமல் தவியாய்த் தவிப்பேன், நண்பர்கள் முகங்காண முடியா விட்டால்.

அதனால்தான் பாளையங்கோட்டை தனிமைச் சிறைபடு மோசமான மனத் துயரத்தையே விருந்தாகப் படைத்தது எனக்கு!

என்றாலும், அந்தக் "கூண்டுக்கிளி" வாழ்க்கையும் பெருமிதத்தையே கொடுத்தது ஒரு விதத்தில்.

காரணம், நான் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு வரலாற்றுப் பெருமை நிரம்ப உண்டு அல்லவா?

"இமயம் நிகர்த்த பெருமனிதர்கள் - ஏகாதிபத்தியக் காரிருளை விரட்டிய எழு ஞாயிறுகள் - குகைப் புலிகளாக உலவிய கொட்டடிப் பகுதிக்குத்தான் நாமும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறோம் என்று எண்ணிய மாத்திரத்தில், என் உள்ளம் பூரித்தது, உடல் புல்லரித்தது.

முன்பொரு சமயம் வெள்ளையர் ஆண்டிட்ட காலத்தில், பெரிய மனிதர்களுக்குரிய மத்தியச் சிறையாக விளங்கிய அந்த பகுதி பின்னர், பதினெட்டு வயதுக்குக் குறைந்த இளங் குற்றவாளிகளின் சீர்திருத்தப் பள்ளியாக மாற்றப்பட்டு விட்டது.

சிறுவர்களுக்கானச் சிறைச்சாலை என்பதால், அங்கே விளையாட்டு அரங்கங்களும் உண்டு. கொட்டடிக் கதவுகளும் திறந்தே இருக்கும்.

ஆனால், என்னைக் கைதியாக அடைத்துவிட்ட பின்னரோ, அந்தச் சிறுவர் சிறைச்சாலையின் திறந்திருந்த கதவுகளும் கூட, மமதையாளர்களின் உதடுகளைப் போல இறுக்கி மூடிக்கொண்டு விட்டன கடுமையான காவலுடன்.

நெல்லை - நாகர்கோவில் நெடுஞ்சாலையில் அமைந்திருந்த அந்தச் சிறைச்சாலையிலே, தனிமைத் தணலிலே தள்ளப்பட்ட எனக்கு, உடல் நலமும் உருக்குலைந்த வண்ணமே இருந்தது. நாள்தோறும் மருத்துவர்கள் வந்து சிகிச்சை அளித்தனர். உடல் நோயைவிட நமக்குத் தெரிந்த முகங்களையே காணமுடியவில்லையே என்கிற உள்ள நோய்தான் தொல்லைப்படுத்தியது மிகுதியாக.

ஐந்தாவது நாள், வழக்கறிஞர் திரு. நாராயணசாமி முதலியார் (ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி), திரு. இரத்தினவேல் பாண்டியன் (ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி) ஆகியோர் என்னைச் சந்திக்க வந்தனர்.

பாளைச் சிரிப்பு -

பார்ப்பதற்கு அழகானது!

பளபளப்பாய் - பல அடுக்கு

மணிச் சரமாய் - ஒளி வீசுவது!

நான் இருந்த -

பாளைச் சிறை -

தென் பாண்டிப் பாளைச் சிறை -

பார்ப்பதற்கு அழகானதல்ல!

பார்வைக்கும் வேலை தருவதல்ல -

வார்டர் ஒருவரைத் தவிர, வேறு மனித முகங்களையே பல நாட்களுக்குக் காட்டாததால்!

பாளையங்கோட்டையில் நான் அடைபட்டுக் கிடந்த சிறைப் பகுதி, "குவாரன்டைன்" - என்று அழைக்கப்படுவதாகும். இளங் குற்றவாளிகள் பள்ளிக்கு வெளியேதான் அது அமைந்துள்ளது. அங்கே நாற்பது அறைகள் உள்ளன. அவற்றில் ஒன்று மட்டுமே எனக்காக ஒதுக்கப்பட்டது. மற்ற முப்பத்தொன்பதிலும் முழுமையாக நிரம்பி வழிந்தது தனிமை - வெறுமை! மனிதர்கள் அல்லர்!

காலையில் விழித்ததும் கண்ணிலே படுவது புளிய மரம் - களை இழந்த இலையுதிர்ந்த புளிய மரம்!

உடனே, கயத்தாற்றில் கட்டபொம்மன் தொங்க விடப்பட்ட அந்தப் புளிய மரமும் என் கண்ணுக்குப் படும்! புறக்கண்ணுக்கு அல்ல - அகக் கண்ணுக்கு!

செங்கதிரோனின் தங்கக் கதிர்கள் - கரங்கள் - தழுவி எடுக்கும் பூமிக் குழந்தையை. அந்த வெளிச்சத்தின் சாயல் மெல்லப் படர்ந்து வரும், நான் இருக்கும் வெறிச்சோடிய பகுதியிலும்.

பின்னரே நான் வெளியே வரும் பொருட்டுக் கதவைத் திறந்து விடுவார்கள். சிறைக் கதவை அல்ல - அறைக் கதவை!

சின்னஞ்சிறு கூட்டிலிருந்து சற்றுப் பெரிய கூண்டுக்கு வந்துவிட்ட உணர்வே மேலோங்கி நிற்கும்.

பகலிலோ வேக வைக்கும் "வெயில்!'' வேகமாகப் போக மறுக்கும் "பொழுது!''

அதனால் உடல் புழுங்கும். உள்ளமும் புழுங்கும்.

இரவு ஒன்பது மணிக்கு மறுபடியும் அறைக் கதவைப் பூட்டி விடுவார்கள், என்னை உள்ளே வைத்துத்தான்!

பசுந்தளிர்ப் பருவத்தில் எத்தனையோ வேடிக்கையான விடுகதைகள் போட்டு மகிழ்வது எனக்கு வாடிக்கை.

"அந்தரான காட்டில் சொக்கன் பந்தடிக்கிறான்" - என்பதும் அவற்றிலே ஒன்று. ஒரு நாள் அந்தச் "சொக்கன்" என் பக்கமும் பந்தடிக்க வந்து விட்டான்! ஆம்! அணில் ஒன்று நான் இருந்த சிறைக் கோட்டம் வந்து சேர்ந்தது! மனித முகம் காணாமல் மனந் தவித்துப் புழுங்கிய நான், அணில் முகத்தைக் கண்டதுமே அகங் குளிர்ந்தேன்! முகம் மலர்ந்தேன்! ஆறுதலும் மிக அடைந்தேன்! அதனைக் கனிவோடு கையில் எடுத்து அறையிலே உள்ள "கப்-போர்டில்" படுக்க வைத்தேன்.

ஆனால் பாவம், அதுவும் என்னைப் போல் ஒரு நோயாளி! காக்கையோ, குருவியோ கொத்தியதால் அதன் உடலில் காயம்! என்னைப் போல் உள்ளத்தில் அல்ல! காரணம் அதற்கு அரசியல் தெரியாதே!

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 30 (1) பிரிவின்படிதான், நான், கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டைச் சிறையிலே முடக்கப் பட்டேன். அந்தச் சட்டப்படி - அந்தப் பிரிவின்படி - முதன் முதல் கைது செய்யப்படும் பேறு பெற்றிட்ட கழகத் தொண்டன் நான்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தத் தியாகத்தை நான் வீரப் பதக்கமாகவே கருதினேன். அப்படியே கருதுகிற காளைகளாம் இளைஞர்கள்தான், இப்போதும் கழகத்தின் இளைஞர் அணியிலே இருக்கிறீர்கள்! உங்கள் அனைவரையும் உளமார வரவேற்கிறேன் நெல்லை மாநாட்டுக்கு!

அன்புள்ள,

மு.க.

30-11-2007

3312. நெல்லை - கழக இளைஞரணி மாநில மாநாடு (24)

சிங்கத் தமிழன் செண்பக இராமன்!

உடன்பிறப்பே,

தாய்மொழிப் பற்றும், தாய் நாட்டுப் பற்றும் - ஒருவர் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவரது ரத்தத்தில் கலந்த ஒன்றாகவே ஆகிவிடுகிறது. அதிலும் ஒரு தமிழனுக்கு மொழிப் பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று என்பது இரவலாகப் பெறக் கூடியதோ அல்லது விலை கொடுத்து வாங்கக் கூடிய பொருளோ அல்ல - உயிரோடு, மூச்சோடு, இரத்தத்தோடு, கலந்த உணர்வாகும் அது! அந்த உணர்வைப் பெற்ற ஒருவராக விளங்கி, இந்திய நாட்டின் உரிமைப் போராட்டத்தில் ஒரு வீரராக, ஐக்கியமானவர்தான் செண்பகராமன் - தமிழகத்தின் விடுதலை தளகர்த்தர்களின் வரலாறு என்பது அவரை விடுத்து, குறிக்கப்படுமேயானால் - அது கலசம் வைக்காத கோபுரம் போல்தான் இருக்கும். அதுவும், நெல்லை மாவட்டத்துடன் நெருங்கி ஒட்டியிருக்கிற நாகர்கோவில் பகுதியில் பிறந்த செண்பகராமன். தேச விடுதலைப் போரில் ஒரு திலகம் போன்றார், சுதந்திர தேவியின் நெற்றிக்கும் - அவள் பெற்ற வெற்றிக்கும் - என்றால் அது, மிகையாகாது. அவரைப் பற்றியும், நெல்லையில் கூட இருக்கும் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதால், இதோ, அவரது வாழ்க்கை ஓவியம் வரைந்திடுகிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில், விடுதலை பெற்ற இந்தியத் திருநாட்டைக் காண முடியாமலே கண் மூடியவர்களில் ஒருவர்தான், செண்பகராமன். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தை வெளிநாடுகளில் விளம்பரப்படுத்துவதற்கு வாய்ப்பாக விளங்கியவர்களில் அவர் ஒருவர் என்று சொல்வதை விட, அவரே அந்தப் போராட்டத்தில் பிரதான பாத்திரமாக விளங்கியவர் என்றே சொல்லலாம். அவர் வாழ்ந்த காலம் 43 ஆண்டுகள்தான். அதில் 26

ஆண்டுகள் தலைமறைவாகத் திரிந்து, சுதந்திரப் போராட்டத்தை ஊக்குவிக்கும் உந்து சக்தியாக விளங்கியுள்ளார். விரோதிகள் சிலர், அந்த வீரர் மீது பொறாமை கொண்டு, மெல்லக் கொல்லும் விஷத்தைக் கலந்து கொடுத்து அற்ப ஆயுளில் அவர் உயிரைத் துடிக்கத் துடிக்க முடித்து விட்டனர்.

நாகர்கோயில் பகுதியிலிருந்த திருவாங்கூரில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட வெள்ளாளப் பிள்ளைமார் குடும்பத்தில் சின்னசாமி - நாகம்மை தம்பதிகளுக்கு, 1891ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் மகனாகப் பிறந்த செண்பகராமன், திருவனந்தபுரத்தில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்து, அந்தக் கால கட்டத்தில் ராஜத் துரோகக் குற்றத்திற்கு ஆட்பட்டு சிறைப்பட்ட பாலகங்காதர திலகரின், தியாக உள்ளத்தினால் கவரப்பட்டு, அப்போது நடைபெற்ற அணிவகுப்பில் முதன் முதலாக "ஜெய்ஹிந்த்" என்ற முழக்கத்தை எழுப்பியவராவார்.

அவரது அறிவாற்றலையும், நாட்டுப்பற்றையும், துணிவையும் கண்டு வியந்த ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த உளவாளியும் - விஞ்ஞானியுமான - திரு. வால்டர் வில்லியம் என்பவர், அவரை ஜெர்மனிக்கே அழைத்துச் சென்று, இத்தாலியில் உள்ள நேபிள்ஸ் நகரத்து "பெர்லிஸ்ட் லாங்வேஜ்" என்ற கல்லூரியில், மேல்படிப்பில் சேர்த்து விட்டார். பின்னர் ஸ்விட்சர்லாந்து "சூரிச்" நகரில் "இஞ்சினீயரிங்" பட்டம் பெற்றார். மாணவனாக இருக்கும் போதே, ஆங்கிலேயர் ஆதிக்கம் இந்தியாவில் கொடி கட்டிப் பறப்பதை இடி முழக்கப் பேச்சினால், எதிர்த்து வந்தார்.

அடுத்து அவர் பெர்லின் சர்வகலாசாலையில், பொறியியல் டாக்டர் பட்டம் பெற்றார். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், செண்பகராமனுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இருவருமே செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் பிறந்தவர்களாகும்.

"சர்வதேச இந்திய ஆதரவுக் குழு" (International Pro-Indian Committee) என்றதோர் அமைப்பினை செண்பகராமன் அமைத்தார். இந்த அமைப்பின் சார்பில், இந்திய மக்களை ஆங்கிலேயர் பிடியிலிருந்து மீட்டிட, அகில உலக நாடுகளின் ஆதரவையெல்லாம் கோரிப் பெற்றிட பாடுபட்டார். இந்த அமைப்பின் சார்பில், "ப்ரோ - இண்டியா" (இந்திய ஆதரவு) என்ற இதழினை வெளியிட்ட பெருமையும், செண்பகராமனுக்கு

உண்டு. இந்த இதழ், ஜெர்மானிய மொழியிலும், ஆங்கிலத்திலும் ஸ்விட்சர்லாந்து நாட்டில், "சூரிச்" நகரிலிருந்து வெளியானது. வெள்ளைக்காரர்களின் ஆட்சியில் இந்திய நாட்டு மக்கள் அடைந்து வந்த துன்பங்களைப்பற்றியெல்லாம் தொடர்ந்து செண்பகராமன், தனது இதழில் எழுதியதோடு, ஆங்கில அரசின் நடவடிக்கைகளுக்கெல்லாம் தக்க பதில்களைத் தொடர்ந்து எழுதியதன் பயனாக இந்த இதழ், ஐரோப்பிய கண்டம் முழுவதும் வலம்வரத் தொடங்கியது.

என் நீண்ட நாள் அன்பிற்கும், மதிப்புக்கும் உரிய அண்ணன் கவி கா.மு. ஷெரீப் அவர்கள், கவிஞர் வானம்பாடி எழுதிய "செண்பகராமன்" என்ற ஒரு சிறு நூலுக்குப் பதிப்புரை ஒன்று எழுதியிருக்கிறார். நெல்லை மாநாடு நடைபெறும் நேரத்தில், அந்தப் பகுதியைச் சேர்ந்த வீரன் செண்பகராமன் குறித்து நான் எழுதும் இந்தக் கட்டுரைத் தொடரில் செண்பகராமன் பற்றி அவர் எழுதிய பதிப்புரையின் ஒரு பகுதியை வருங்கால இளைஞர் சமுதாயம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். அந்தப் பகுதி இதோ :-

"வீரன் செண்பகராமன் - இந்த மாமனிதன் தமிழ்க் குலமகன். சுதந்திரம் விரும்பி. வெளிநாட்டில் இருந்து கொண்டு, வெள்ளை ஏகாதிபத்தியத்தை கதிகலங்க வைத்த கரும வீரன்.

சுதந்திர வீரர்கள், தலைவர்கள் வரலாறுகள் மட்டுமல்ல, சுதந்திரம் எப்படிப் பெற்றோம் என்கின்ற விவரம் கூட இன்றைய இளைஞர்கட்கு தெரிந்திட வாய்ப்பில்லாமல் உள்ளது. வீரன் செண்பகராமன் வரலாறு, 1945க்குப் பின்னர் மேக மூட்டத்தினின்றும் வெளிப்படுகின்ற இளஞாயிறொப்ப, சிறிய சிறிய அளவில் வெளிவரத் தொடங்கிற்று. அவருடைய மனைவி லெட்சுமிபாய், ஆதரவற்ற நிலையில் பம்பாய் நகரில், தினம் ஒரு இடமாக அலைந்து கொண்டிருப்பதையும் அறிந்திட முடிந்தது. - பம்பாய் தாராவியில் உள்ள தமிழரசு கழகத் தோழர்களை ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திடும்படி கூறினேன். அதற்குச் செல்லுங்கால், வானம்பாடி என்கின்ற துரை சுந்தரேசனையும், உடன் அழைத்துச் சென்றேன். அப்பொழுது அவர், தமிழரசுக் கழகத்தின் இளம் பேச்சாளர். கூட்டம் நடைபெற்றது. பம்பாய் மாநிலக் காங்கிரஸ் கமிட்டியில் டெலிபோன் ஆப்பரேட்டராக வேலை செய்த நாகலட்சுமி என்கின்ற பெண் சொற்பொழிவு

கேட்டிட வந்திருந்தாள். கூட்டம் முடிந்ததும் தான் யார் எனக் கூறி அறிமுகம் செய்து கொண்டாள். பொதுத் தொண்டில் சிறந்த ஈடுபாடுடைய அப்பெண்ணைக் கொண்டு, லெட்சுமிபாய் செண்பகராமன், இருப்பிடத்தை அறிந்தோம். அவர் முதலில் எங்களுடன் பேசிடவே அஞ்சினார். பின்னர் தெளிவு பெற்று, வீரன் செண்பகராமனைப் பற்றிய விவரங்களைச் சுருக்கமாகக் கூறினார். சென்னை திரும்பிய பின்னர், அவர் கூறியதை ஆதாரமாக வைத்து, நான் நடத்திய "தமிழ் முழக்கம்" ஏட்டில், வானம்பாடியை எழுதப் பணித்தேன். பின்னர் நானே நூலாக வெளியிட்டேன்."

உடன்பிறப்பே, "சூரிச்" நகரில் இருந்தவாறு செண்பகராமன், ஆங்கில அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து வந்தபோது, ஜெர்மனியில் இருந்து செயல்பட்டு வந்த இந்தியத் தீவிரவாதிகளுடன் இவருக்கு நட்பு ஏற்பட்டது. குறிப்பாக, "மேடம் காமா" என்ற தீவிரவாதப் பெண்மணி ஒருவரை செண்பகராமன், பெர்லின் நகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபோது பார்த்தார். ஆனால் அதற்கு முன்பே, அந்தப் பெண்மணியைப் பற்றி செண்பகராமனுக்குத் தெரியும். தன்னைப் போலவே வெளிநாட்டிலே இருந்து கொண்டே, இந்திய விடுதலைக்காக செயல்பட்டு வந்த அந்த அம்மையாருடைய வீரம் செண்பகராமன் அவர்களைப் பெரிதும் ஆச்சரியப்பட வைத்தது.

இதே காலகட்டத்தில், பாரீஸ் மாநகரிலும், பெர்லின் மாநகரிலுமாக இரண்டு இந்தியப் புரட்சியாளர் குழுக்கள் மிக வேகமாக இயங்கி வந்தன. செண்பகராமன் பெர்லின் குழுவில் இணைந்து செயல்பட்டார். அந்தக் குழு தான் பிறகு "இந்தியன் இண்டிபெண்டென்ஸ் கமிட்டி" என்று அழைக்கப்பட்டது. அந்த இந்திய விடுதலைக் குழுவில் வீரேந்திர சட்டோபாத்யாயா, பூபேந்திரநாத், டாக்டர் பிரபாகர், அப்துல் ஹபீஸ் போன்ற இந்தியத் தீவிரவாதிகள் அங்கம் வகித்தார்கள். உலக நாடுகள் பலவற்றில் அடிமைப் பட்டுக் கிடந்த மக்களையெல்லாம் இந்தக் குழு, தொடர்பு கொண்டு, அவர்களையெல்லாம் ஓரணியில் கொண்டு வந்தது. இதுவே League of the Oppressed People (ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கம்) எனப் பின்னர் பெயர் பெற்றது. செண்பகராமன், ஓரியண்ட் கிளப் என்ற ஒரு அமைப்பையும் தோற்றுவித்து, உலகம் முழுவதும் அதன் கிளைகளை ஏற்படுத்திடச் செய்தார்.

ஜெர்மனியில் அப்போது வாழ்ந்து வந்த புரட்சிவாதி ஹர்தயாள் என்பவருடன், செண்பக ராமனுக்கு பின்னர் நட்பு தோன்றியது. இவரது துணைகொண்டு, செண்பகராமன் ஜெர்மானிய மன்னர் கெய்சருக்கும், நெருங்கியவரானார். ஒரு முறை கெய்சரிடம் பேசும்போது, ஆயுத பலம் மூலமாகத்தான் வெள்ளையரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற முடியும் என்றும், அதற்கான நேரத்தை எதிர்பார்த்துத்தான் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களைப் போல, தானும் காத்திருப்பதாகவும் தெரிவித்தாராம்.

செண்பகராமனின் திறமையையும், அவர் பொறியியல் வல்லுநராக பட்டம் பெற்றதையும் மனதிலே கொண்டு கெய்சர், முதலில் செண்பக ராமனைத் தன்னுடைய ஆலோசகராகவே நியமித்துக் கொண்டாராம். பின்னர், ஜெர்மனியில் தனது ராணுவத்தில் சேர்வதற்கும், கெய்சரே செண்பகராமனுக்கு உதவியிருக்கிறார். தொடக்கத்தில் ஒரு சிப்பாயாக ராணுவத்தில் சேர்ந்து, அதிலே அனைத்துப் பயிற்சிகளையும் பெற்று பின்னர், ராணுவத்தின் ஒரு அணிக்கே தலைவராகவும் அமர்த்தப்பட்டிருக்கிறார். இந்தியா விடுதலைபெற வேண்டும் என்பதற்காக, வெளிநாடு ஒன்றிலே சிப்பாயாக சேர்ந்து, அதன் ஓர் அணிக்கே தலைவராக வந்த ஒரே தமிழர் செண்பகராமன் தான்! ஜெர்மனியக் கப்பல் படையிலும் செண்பகராமன் பணியாற்றினார்.

“எம்டன்” என்ற வார்த்தை அந்தக் காலத்தில் தமிழகம் முழுவதும் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒன்றாகும். மிகவும் வயதானவர்களுக்குத்தான் அதுபற்றிய விவரம் தெரியும். தற்கால இளைஞர்கள், தெரிந்துகொள்ள வேண்டிய வார்த்தை அது. குறிப்பாக, “எம்டன்” என்பது ஒரு நபரின் பெயரல்ல. அது ஒரு போர்க்கப்பல். எம்டன் என்ற அந்தப் போர்க் கப்பல், ஜெர்மானியருக்குச் சொந்தமானது. பிரிட்டிஷ் அரசாங்கம் அப்போது “கடல்களின் ராணி” என்று அழைக்கப்பட்ட நேரத்தில், அவர்களுடைய கடல் ஆதிக்கத்தைத் தகர்க்க ஜெர்மனியரால் தயாரிக்கப்பட்டதுதான் எம்டன் போர்க் கப்பல். 1914 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில், இந்த எம்டன் போர்க் கப்பல், இந்தியாவை நோக்கி வரத் தொடங்கியது. வரும் வழியிலேயே பல பிரிட்டிஷ் கப்பல்களைக் கடலில் மூழ்கச் செய்தது எம்டன். 22-9-1914 அன்று இரவு, எம்டன் போர்க்கப்பல் சென்னைக் கடற்கரையை நோக்கி தன் பீரங்கிகளை வெடிக்கச் செய்தது. அதற்குக் காரணமானவரும்,

ஜெர்மானிய கப்பல்படை அதிகாரிகளுக்குத் தென்னிந்திய கடற்கரைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தவரும் செண்பக ராமன்தான். அப்போதுகூட சென்னையிலும், மற்ற கடற்கரை பகுதிகளிலும் உள்ள தமிழ் மக்கள் பாதிக்காத வகையில், ஆங்கிலேயரின் ராணுவ இலக்குகளை மட்டுமே தாக்குவதற்கு வழிவகை செய்தவர் செண்பகராமன்.

இந்தத் தாக்குதல் காரணமாக, ஆங்கிலேயருக்குச் சொந்தமான பர்மாஷெல் என்ற எண்ணெய் கம்பெனி, தீப்பிடித்து எரியத் தொடங்கியது. அந்தத் தாக்குதல் குறித்து, "இந்து" நாளிதழ் - மூன்று பேர் உயிர் இழந்ததாகவும், 13 பேர் படுகாயமுற்றதாகவும் செய்தி வெளியிட்டது. அடுத்தடுத்த பீரங்கி குண்டுகள் சென்னை உயர்நீதி மன்றத்தின் அருகில் வெடித்தது.

மற்றொரு குண்டு தலைமைச் செயலகம் அமைந்துள்ள சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை அருகிலே விழுந்த போதிலும், அது வெடிக்கவில்லை. அப்போதெல்லாம் பொழுது விடிந்தால் "எம்டன்" குண்டு, அங்கே வெடிக்கப் போகிறது, இங்கே வெடிக்கப்போகிறது என்பது தான் செய்தியாக இருந்தது. அந்தத் தாக்குதலுக்கு அஞ்சி, சென்னைவாழ் மக்கள், ஆயிரக்கணக்கில் இடம் பெயர்ந்தனர். நகர் முழுவதும் பல்வேறு வதந்திகள் பரவின. வதந்திகளைப் பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சென்னை மாநகர காவல் துறை அறிவிப்பு செய்தது.

இந்த நிகழ்வுகளுக்கு பிறகு ஜெர்மனிக்குத் திரும்பினார் செண்பகராமன். ஜெர்மன் ராணுவ உயர் அதிகாரிகள் எல்லாம் செண்பகராமனை ராணுவ மரியாதையோடு வரவேற்றுப் பாராட்டினர். மன்னர் கெய்சர், தனிப்பட்ட முறையில் செண்பக ராமனைப் புகழ்ந்ததோடு, அவருக்கு மிகப்பெரிய பரிசுப் பொருட்களையெல்லாம் வழங்கிட முன்வந்தார். ஆனால் பெருந்தன்மையோடு மறுத்த செண்பகராமன், தான் போரிலே கலந்து கொண்டு அனைவரும் பாராட்டத்தக்க வகையில் போரிட்டதெல்லாம், தனது தாய் நாடான இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காகத்தான் என்றும், வெள்ளைக்காரர்களிடமிருந்து இந்தியா விடுதலை பெற்று திகழ்ந்திட வேண்டுமென் பதற்காகத்தான், ஜெர்மானிய ராணுவத்தில் இணைந்ததாகவும் கூறினார்.

1931ஆம் ஆண்டு ஜெர்மனியில், செண்பகராமன், மேடம் காமா அம்மையாரின் வளர்ப்பு மகளான லெட்சுமிபாயை திருமணம் செய்து கொண்டார். அந்தக் காலத்தில், ஜெர்மனிக்குச் சென்ற ஜவகர்லால் நேரு அவர்கள், செண்பகராமன் வீட்டிலேதான் தங்கினாராம். முதல் உலகப் போர் நடைபெற்ற போது, இந்தியர்களை ஒடுக்குவதற்காக வெள்ளைக்காரர்கள் பயன்படுத்திய படை பலத்தை முறியடிப்பதற்காகச் செண்பகராமன், இந்தியத் தேசியத் தொண்டர் படை என்ற ஒரு அமைப்பினை உருவாக்கினார். அதுபோலவே இரண்டாம் உலகப் போரின்போது, ஜப்பானியரிடம் யுத்தக் கைதிகளாக அகப்பட்டுக் கொண்ட இந்தியர்களைக் கொண்டே இந்தியத் தேசிய ராணுவம் என்ற அமைப்பை சுபாஷ் சந்திரபோஸ் அமைப்பதற்கு முன்னோடியாக இருந்தது செண்பகராமன் உருவாக்கிய இந்தியத் தேசிய தொண்டர் படைதான்.

நான் ஏற்கெனவே தொடக்கத்தில் எழுதியிருந்தது போல, எதிரிகளின் துரோகத்திற்கு ஆளாகி 26-5-1934இல் செண்பகராமன் மறைந்தார். ஆனால் மறையும் தருவாயில் தன் மனைவியிடம், இந்தியா விடுதலை பெற்றதும், நம்முடைய சுதந்திரக் கொடி பறக்கும். அதே கப்பலில் எனக்காக, நீ சென்று நான் பிறந்த மண்ணில், என் தாயின் அஸ்தி கரைக்கப்பட்ட கரமனை ஆற்றில், என் அஸ்தியைக் கரைத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம்.

அவரது உடல் தகனம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட நேரத்தில்கூட, அவரது துணைவியாருக்கு அந்த உடலைப் பார்க்க அனுமதி வழங்கப் படவில்லை. அவரது உடலை எரிப்பதற்காகத் தயாராக நின்றவரின் காலடியில் வீழ்ந்து, லெட்சுமிபாய் கண்ணீர் வடித்த காட்சி அங்குள்ளவர்கள் இதயங்களைக் கசக்கி பிழிந்ததாம். கல் நெஞ்சம் கொண்ட காவலாளியின் இதயத்தையும் தொட்ட காரணத்தினால், லெட்சுமிபாயின் கோரிக்கைக்கு அவர் கடைசியாக இணங்கினாராம். பின்னர் கணவரின் வேண்டு கோளை நிறைவேற்ற, அவரது அஸ்தியைப் பாதுகாக்க எண்ணி பாடுபட்ட லட்சுமிபாயை, எதிரிகள், அவர் பைத்தியம் என்று கூறி, பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டார்கள். பின்னர் ஒருசில நண்பர்களின் உதவியால், அங்கிருந்து விடுதலை பெற்றார்.

கணவர் இறந்த போது லட்சுமிபாய் இளமையோடு இருந்த காரணத்தினால், அவரை மறுமணம் செய்து கொள்ள பலர் விரும்பிய போதிலும், அதற்கு அவர் இசையவில்லை. கணவனின் அஸ்தியை சுமந்து கொண்டு, இத்தாலிக்குச் சென்று, பின்னர் ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று, அங்கிருந்து கப்பல் மூலமாக 1936ஆம் ஆண்டு பம்பாய் வந்து சேர்ந்தார்.

இந்தியா 1947இல் விடுதலை பெற்ற பிறகு, தன் கணவரின் இறுதிக் கட்டளையை நிறைவேற்ற, அவரது துணைவியார் முயற்சிகளை மேற்கொண்டார். 1966ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில்தான் அவரது அந்த எண்ணம் நிறைவேறியது.

செண்பகராமன் பற்றி கவியோகி சுத்தானந்த பாரதியார் எழுதிய ஒரு கவிதையுடன் இன்றைய கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

சண்பகராமன் பிள்ளை - எனில்
சத்திய வீரந் துள்ளும்!
திண்மன வுறுதி கொண்டுழைத்தான்
தேச விடுதலை செழிக்க!
நீண்டுயர் திண்ணுட லுடையோன்!
நேர்மையாய்க் கடமையைக் காப்போன்!
மாண்புறு நேதாஜி தோழன்!
மாநிலம் போற்ற றிவாளன்!
சண்பகச் சங்கம் அமைப்போம்!
சரித்திரப் புகழை யுரைப்போம்!

அன்புள்ள,
மு.க.
1-12-2007

3313. நெல்லை - கழக இளைஞரணி மாநில மாநாடு (25)

"கயிற்றில் தொங்கிய கணபதி!"

உடன்பிறப்பே,

- மலேசிய அரசுக்கு டெல்லி மாநிலங்களவையில் கண்டனம் -
- நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு -
- மலேசியாவில் தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்கள் சம வாய்ப்பு கேட்டுப் பேரணி -
- அந்தப் பேரணியில் அடக்குமுறை -
- கண்ணீர்ப் புகை -

இப்படி மலேசியா குறித்து, ஏடுகளில் செய்திகள் இரண்டொரு நாட்களாக வந்து கொண்டே இருக்கின்றன.

அதன் தொடர்பாக, டெல்லியில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் அண்மையில் இந்தப் பிரச்சினையில் வாக்குவாதம் சற்றுச் சூடான அளவில் நடைபெற்று, இப்போது இதனால் இந்தியா - மலேசியா ஆகிய இரு நாடுகளின் நட்புறவுக்கு ஒரு துளியும் பின்னடைவு ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் இரு நாடுகளும் எச்சரிக்கை உணர்வுடன் செயல்பட்டதையும், செயல்பட்டுக் கொண்டிருப்பதையும் - பொறுப்பில் இருப்பவர்களும், அந்தப் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டுமென்பதிலும் குறையாத அக்கறை கொண்டுள்ளவர்கள் இரு தரப்பிலும் இருப்பதறிந்து மகிழ்கிறேன்.

இதில் என் பெயரும் இழுக்கப்படுவதால் - மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடன் - எனக்குள்ள உறவும், நட்புணர்வும் நீண்ட காலமாகத் தொடருகிற காரணத்தால், அந்தப் பகுதியில் பொறுப்பில் இருப்போர் -

இந்தப் பிரச்சினையில் இந்திய நாட்டு அணுகுமுறையைப் பின்பற்றுவார்கள் என்றே எதிர்பார்க்கிறேன்.

ஒரு நாட்டு வம்சாவளியினர், வெளிநாடுகளில் அவதியுற நேரும்போது பரிவு காட்டுவதும், பாதுகாப்புக் கோருவதும் ஒவ்வொரு நாட்டிலும் பொறுப்பில் உள்ளோர்க்குப் பொருந்துகின்ற இயல்பான உணர்வே ஆகும். அல்லால் ஒரு நாட்டினர், அயல் நாட்டில் வதைபடுவதை அனுமதித்து ஆதரிக்கிற குற்றம் நம்மைச் சேரும் என்பதில் அய்யமில்லை. இந்த உணர்வு இன்று திடீரென்று அல்ல, என்னைப் பொறுத்தவரையில், 1949ஆம் ஆண்டிலேயே அதாவது 58 ஆண்டுகளுக்கு முன்பே உதிரத்தோடு ஊறிய ஒன்றாகும்.

இதே மலேசியா நாட்டில், தமிழ்நாட்டைச் சேர்ந்த தம்பிக்கோட்டையில் பிறந்த கணபதி, மலேசியாவுக்குப் பிழைக்கப் போய், அங்கே தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டபோது - "கயிற்றில் தொங்கிய கணபதி" என்ற தலைப்பில், என்னுடைய 25 வது வயதில் ஒரு மணி நேரத்தில் 15 பக்கங்களில் எழுதித் தந்து சென்னை "அறிவுப் பண்ணை" பதிப்பகத்தினர் - அச்சியற்றி, அப்போது 3 அணா விலைக்கு விற்கப்பட்ட சிறிய நூல் - 1949 - ஜூலைத் திங்களில் வெளியிடப்பட்டது. அதன் சுருக்கம் இதோ:-

"பகவத்சிங்கை தூக்குமேடையிலே ஊஞ்சலாட்டி உவகை கொண்ட ஏகாதிபத்தியம் - திருப்பூர்க் குமரனை தடி கொண்டு தாக்கித் தெருவெல்லாம் குருதியோடச் செய்து, அதை நக்கிக் குடித்து எக்காளமிட்ட ஏகாதிபத்தியம் - இதோ, இன்றும் அதே ஏகாதிபத்திய குரலெடுத்து தன் சொர சொரப்பான ரத்த நாக்குகளால், கணபதியையும் ருசித்துப் பார்த்து விட்டது. தூக்குமேடை எத்தனையோ மனிதர்களை தனக்கு உணவாக்கிக் கொண்டு உல்லாசம் பாடியபடிதான் இருக்கிறது. அதன் கோரப் பற்களுக்கிடையே சிக்கிச் சீரழிந்த மனித உருவங்கள் கணக்கிலடங்கா. குற்றவாளிகளின் குரல்வளையை நெரிப்பது மட்டுமல்ல, நிரபராதிகளின் வாழ்வை அரை நொடியில் தீர்த்துக்கட்டி, தன் வயிற்றைப் புடைக்க வைத்துக் கொண்டிருக்கிறது தூக்குமேடை! தூக்குமேடையிலே உறைந்திருக்கும் ரத்தத்திலே, எத்தனை உத்தமர்களின் வரலாறு

எழுதப்பட்டிருக்கிறது தெரியுமா? அங்கே அறுத்தெறியப்பட்ட நரம்புகள் ஒவ்வொன்றும் - ஒடித்தெறியப்பட்ட எலும்புகள் ஒவ்வொன்றும் பேச ஆரம்பித்தால், எத்தனை நீதிபதிகளின் "நேர்மை" அம்பலத்திற்கு வரும்! குற்றவாளிக் கூண்டிலே மரண தண்டனை பெற்ற நிரபராதி - அவன் மேல் அபாண்டங்களைச் சுமத்தி, அவனை அழித்த ஆனந்தத்தில் வக்கீலோடு கை குலுக்கும் வறண்ட நெஞ்சத்தினன் - தூக்கிலே தொங்க வேண்டியவன் தோகை மயிலாளின் மடியிலே!.....எதிர்க்கத் தெரியாத ஏழை சுருக்குக் கயிற்றின் அணைப்பிலே!.....இப்படியெல்லாம் பேசத் துவங்கும், அந்த நிரபராதிப் பிணங்கள்.

அவன் சீமான்.

அடுத்த வீட்டுக்காரனும் சீமான்தான்.

ஒருவன் லட்சாதிபதி.

மற்றவன் கோடீஸ்வரன்.

கோடீஸ்வரன் நினைக்கிறான், "லட்சாதிபதி கோடீஸ்வரனாய் வளர்ந்து விட்டால் என்செய்வது? தன் பெருமை போய்விடுமே" என்று! அல்லது லட்சாதிபதிக்கு கோடீஸ்வரனிடத்தில் பொறாமை. இந்த எண்ணம் வளருகிறது. முடிவு கொலையில் முடிகிறது. இருவரில் ஒருவன் தூக்குமேடைக்கு நடக்கிறான். கொலைச் செய்தி பத்திரிகையில் வந்ததும் "கொடும்பாதகா" என்று திட்டினவர்கள், கொலையாளி தூக்கில் தொங்கி விட்டான் என்ற செய்தி கேட்டதும் சிறிது வருந்தத்தான் செய்கிறார்கள். ஏன்? முசோலினி அழிய மாட்டானா? அக்கிரமக்காரன்! என்றெல்லாம் "சாபம்" தந்தவர்கள், அவன் கொல்லப்பட்டதும், "அட பாபமே" என்று சோகக் குரல் எழுப்ப வில்லையா? குற்றவாளிகளுக்கேற்ற தண்டனைகள் நிறைவேறுகிற நேரத்திலேயே இந்த நிலை மக்களுக்கு என்றால், குற்றமற்றவன் - கொடுமையை நினைத்தும் பாராதவன் - கொஞ்சு மொழியினன் - நல் நெஞ்சினன், அநியாயமாகச் சாகப் போகிறான் என்று கேட்டால், அச்செய்தி காதிலே ஆயிரமாயிரம் மேகங்கள் சேர்ந்து முழக்கும் இடியொலியாகத்தான் விழும்!

"கணபதி தூக்கிலிடப்படுவார்" - இச்செய்தி திராவிடத்தை - ஏன் உலகத்தையே எட்டிய நேரத்தில் திராவிடம், சோர்ந்து வீழ்ந்தது. அதே வேளையில், ஆறுதல் சிறிது தலை நீட்டியது,

“சுதந்திர பூமியில் - சுதந்திர வீரர்களாய் - சுதந்திரத் தலைவர்களைப் பெற்றிருக்கிற நமக்கு ஏன் அச்சம்? நமக்கு ஏன் வீண் சஞ்சலம்? நமது சர்க்கார், நமது நாட்டுக் கணபதியை அநாதையாக மலேயாவில் மாள விடாது என மனத்தைத் திடப்படுத்திக் கொண்டோம். அது மட்டுமல்ல, ‘காமன் வெல்த்’தோடு ஏற்படும் உறவு, கணபதியைக் காப்பாற்றும் என நம்பி கண்ணீரைத் துடைத்துக் கொண்டோம். துடைத்த கையை எடுக்கவில்லை. தூக்குமேடை கணபதியைத் தின்று ஏப்பமிட்ட சப்தம் நமக்கு கேட்டு விட்டது.

“அய்யோ கணபதீ! அருமைத் தமிழகத்தின் அன்புச் செல்வா! எப்படியடா உன் உயிர் நீங்கிற்று? உன்னைப் பெற்ற வயிறு பற்றி எரிகிறதடா! ஆபத்து உன்னை அணுகிய நேரத்திலும், நம் அரசாங்கம் காப்பாற்றும் என நம்பியிருந்தேனடா - உன்னைக் காலில் மிதிபட்டு நசுங்கும் ஒரு எறும்பாக எண்ணிவிடுவரென்று தெரியாதேடா!.....”

- தமிழ்த் தாய் கதறுகிறாள் இங்கே!..... அவளைப் பார்த்து தூக்குமேடை சிரிக்கிறது.

“பார்த்தாயா, தமிழ்த் தாயே!. . . . வெள்ளைக்காரன் வெளியேறினால் நல்ல காலம் பிறக்குமென்றாயே..... இதோ பார்! . . . . உன் மகனின் சதைகளை, நான் பிய்த்துச் சாப்பிடுகிறேன். வெள்ளைக்காரன் தந்த தீனி இது! வெகு இனிப்பு! . . . . நானுந்தான் இங்கு விருந்து சாப்பிடுகிறேன்” - சிரிக்கிறது தூக்குமேடை. கைகொட்டிச் சிரிக்கிறது! கலகலவெனச் சிரிக்கிறது! பக்கத்திலே பிணம் சிரிக்கிறது.

உலகில் எத்தனையோ பேர் தினம் தினம் சாகிறார்கள். எல்லாவற்றுக்குமா எல்லோரும் கவலைப்படுகிறோம்? அதுபோலவே, எத்தனையோ பேர் தூக்கிலிடப்படுகிறார்கள்..... ஆனால் கணபதியின் தண்டனை, தமிழ்நாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கணபதியே ஒரு பாடமாகி விடுகிறார், தமிழ்நாட்டுக்கு! அவர் வாழ்வே தமிழர்க்கு ஒரு அரசியல் வகுப்பு. அவர் இறுதிக் கடிதம் தமிழர் பட்டாளத்துக்கு ஒரு போர்ப் பிரசங்கம்.

“மலர் மலரும். . . . . மணம் வீசும். . . . . .கருகி மடியும்” பூ மலர்வதும், கருகி மடிவதும், “காயமே இது பொய்யடா” எனக் கழறுபவர் பயன்படுத்திக் கொள்ளும் உதாரணங்கள். “மனிதன்

பிறக்கிறான், சாகிறான். வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போவதே மனிதனின் லட்சணம்" என, வாழ்வை வெறுத்தவர் பேசுவர். மலர் மலர்வதும், கருகி உதிர்வதும் தான் அவர்கள் கண்களில் படுமே தவிர, மலர் தரும் இன்ப வாசம் அவர்கள் உணர்வைத் தொடுவதில்லை. தொட்டாலும் அதை உரைக்க மறுக்கின்றனர். மடியப் போகிறோமே என்று மலர் மணம் தராமல் இருக்கிறதா?. . . . அப்படியிருக்கும் மலரைத்தான் மக்கள் விரும்புவரா? வயது நீண்ட, வாடா மல்லிகையை வரவேற்பவர் யார்? சாகப் போகிறோமே என்பதற்காக, சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய பணியைச் செய்யாமல் இருப்பதா? மலர் மணம் தர மறுப்பதா?. . . . மணம் தரும் மலராகத்தானிருந்தார் கணபதி. "முடி சார்ந்த மன்னரெலாம் வெந்து பிடி சாம்பலாயினர்" என்று பாடி, முனிவர் ஆஸ்ரமம் அமைத்துக் கொள்ளவில்லை..... தூக்குமேடையிலே இந்த முகாரியைப் பாடவுமில்லை, அந்த வீரர்! "நான் மணம் தரும் மலர். . . . கசக்கி எறியப்படுகிறேன்" என்ற இதய ஒலியை அவர் கடிதமாக்கினார். அவர் கடிதம் "அந்த லோக" ஆசைக்காரருக்கு ஒரு சவுக்கு!

"மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து தாழ்ந்துபோன ஒரு குடும்பத்தை, உருவாக்காது உழைக்கிறானாம், என்று பலர் என்னைப் பார்த்துப் பேசியதுண்டு. அதுபற்றி நான் கவலைப்படவில்லை!"

ஊருக்குழைத்த அந்த உத்தமர், தோழர் சற்குணத்திற்கு எழுதிய கடைசி கடிதத்தில் இதையும் குறிப்பிடுகிறார்.

எத்தனையோ பேர் பண பலத்தினால்.....குடும்பத்துக்குள்ள செல்வாக்கினால், நாட்டுக்குத் தலைவன் நான் என வருவர். நாட்டிலிருந்து வீட்டுக்கு மூட்டை கட்டுவர். அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், வீடு, வாசல், இவைகளே அவர்கள் கனவாயிருக்கும். உறவினருக்கு வேலை தேடிக் கொடுத்தல் - தனக்காக உழைத்தவர்கள், தன்னை தலைவனாக்கியவர்கள், சிறு உரிமை கொண்டாடினாலும் எட்டி உதைத்தல் - இது சில உயர் குடும்பத்து தலைவருக்குப் பிறவிக் குணமாகவே இருக்கும். ஆனால் தாழ்ந்துபோன குடும்பத்தைக் கூட கவனிக்க நேரமில்லை கணபதிக்கு!. .. உழைக்கச் சென்ற இடத்திலும் மக்களுக்காக உயிர் விட்டார். உயிர் பிரியும் நேரத்திலும் "வாழ்க வையம்" என உற்சாகப் பண் பாடினார்.

கடிதத்தில் நம்மையெல்லாம் வேல் கொண்டு குத்தும் பகுதி தான் அது!

“நமது குடும்பம் நசித்துப் போன பின், நான் எப்படி இங்கு வந்தேன் என்பதை நீ அறிவாய். அப்பம் விற்றுக் கொண்டும், இராணி வீட்டில் மங்கு கழுவிக் கொண்டும் ஆங்கிலம் படித்தேன்.”

தஞ்சை மாவட்டத்திலே.....தங்க நிற நெல் விளையும் சோழ வள நாட்டினிலே.....தம்பிக் கோட்டையிலே பிறந்த கணபதி, ஒரு சாண் வயிற்றுக்காக இளமையிலே மலேயாவுக்கு ஓடினார். தில்லை நடராசனுக்குத் தங்க வீடு . . . . திருப்பதி வெங்கடேசனுக்கு வைரக் குல்லாய். . . . .. ஆனால். . . தம்பிக்கோட்டை கணபதிக்கு தாங்காத பசி. . . மலேயாவில் வயிற்றுப் பிழைப்பு. தமிழகம் தானியக் களஞ்சியமாயிற்றே! முத்துக் குலுங்கும் கடல்களுண்டே! கணபதி ஏன் மலேயாவுக்கு ஓட வேண்டும்? ஒரு கணபதியா? எத்தனை கணபதிகளை. . . . ஏ! தாழ்ந்த தமிழகமே!. . . .நீ. . . மலேயாவுக்கும், இலங்கைக்கும் அனுப்பியிருக்கிறாய். செப்புச் சிலைகளுக்குத் தேருந் திருவிழாவும்!. . . .செல்வச் சீமான்களுக்கு சீரும் சிறப்பும்! கணபதிகள் காலந்தள்ள, “இலங்கையும் மலேயாவும்! இது அடுக்குமா, தமிழகமே! . . . . .அன்பு மகன் செத்தான் என்று அழுகிறாயே. . . . .ஆத்திரப்படுகிறாயே. . . . .அலறித் துடிக்கிறாயே. . . . .அவனை நீ தானே விரட்டி அடித்தாய்? அவனுக்குச் சோறில்லை என்று சொன்னது நீ தானே?. . . . அவன் நல்ல வீட்டில் வாழக் கூடாது என்று கூறியது நீ தானே? அவன் பொன்னையும், முத்தையும் தீண்டக் கூடாது எனத் தடை போட்டது நீ தானே?. . . . .

இப்போது அழு! நன்றாக அழு! கண் இமைகள் கனத்துப் போகும் வரையில் அழு! விழிகளில் ரத்தம் வழிய ஆரம்பிக்கும் வரையில் அழு!

இதைத்தான் கணபதியின் உரத்த குரல், உத்வேகத்தோடு ஒலிக்கின்றது. இல்லையென்று கூற முடியுமா?

ஆங்கிலேயராட்சியிலே மலேயா சென்ற கணபதி, அதே ஆங்கிலேய சர்க்காரால் சவமாகச் சாய்க்கப்பட்டார். பிறந்த நாட்டிலே “சுதந்திர தேவி”யின் சங்கநாதம்! அந்த நாதம், கணபதி பிழைக்கப்போன நாட்டிலே கேட்கவில்லை. கேட்கும் அளவுக்கு ஊதப்படவில்லை. ஏன்? சங்கு ஓட்டையா? அல்லது ஊதுபவர் குரலிலே உரமில்லையா?

கணபதி, எந்த வெள்ளை முதலாளியையும் சுட்டுக் கொன்றதாக வழக்கு கிடையாது. கையிலே துப்பாக்கி வைத்திருந்த ஒரே குற்றத்திற்காக இந்தக் கோர மரண தண்டனை! தீர்ப்பு கேட்டு திராவிடம் திகைத்தது. நமது தமிழர்களுக்கு அக்கறை இருந்திருந்தால், கணபதியின் கழுத்தை இறுக்கிய கயிறு, அடுத்து சாம்பசிவத்தின் முன்னே தொங்கிக் கொண்டிருக்குமா? அவர்கள் கண்களிலே நெருப்புக் கிளம்பியிருந்தால், வீர சேனனை நோக்கி, குண்டுகள் கிளம்பியிருக்குமா? இரண்டு கட்டிளங் காளைகளை மலேயா சர்க்காரின் அடக்குமுறைக்குக் காணிக்கையாகத் தந்து விட்டு, அறிக்கைகள் பறக்க விடுவது, உயிரோடிருக்கும்வரையில் உதாசீனம் செய்யப்பட்டவனுக்கு, செத்த பிறகு உத்தரகிரியை வெகு சிறப்பாக நடத்துவது போலத் தானே!

மலேயாவில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி தமிழர் வாழ்வில் ஒரு சோகத் தொடர் கதை. இந்தக் கதை, "பிழைக்கப் போகும் அத்தியாய"த்தைத் தாண்டி, "தமிழன் அநியாயமாய்க் கொல்லப்படும் அத்தியாய"த்திற்கு வந்து நிற்கிறது. அடுத்த அத்தியாயம் என்னவோ? எத்துணை பயங்கரமானதோ?''

★ ★ ★

உடன்பிறப்பே,

58 ஆண்டுகளுக்கு முன்பே இந்த உணர்வு எனக்கு இருந்திருக்கும்போது, இப்போது அந்த உணர்வு இல்லாமல் போய்விடுமா என்ன?

1999ஆம் ஆண்டு தி.மு. கழகம் பதவிப் பொறுப்பிலே இருந்தபோது, மலேசியா, சிங்கப்பூர் அரசுகளின் அழைப்பினையேற்று, ஜனவரி திங்களில் அந்த நாடுகளுக்குச் சென்றிருந்தேன். மலேசிய விமான நிலைய வரவேற்பிற்குப் பின் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தபோது கூட, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் நான் மேற்கொண்டுள்ள பயணம் முக்கியமாக தமிழகத்திற்கும், இந்த நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வருகிற கலாச்சாரத் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத்தான் என்று கூறினேன்.

மலேசியாவில் அப்போது பிரதமராக இருந்த டாக்டர் மகாதீர் முகமது அவர்களை, 9-1-1999 அன்று காலையில் சந்தித்து உரையாடினேன். அவருக்குப் பொன்னாடை அணிவித்து,

சந்தனத்தால் செய்யப்பட்ட வள்ளுவர் கோட்ட மாதிரி ஒன்றையும் வழங்கியதோடு, நான் எழுதிய சங்கத் தமிழ், குறளோவியம் ஆகியவற்றையும் அளித்தேன். அப்போது தமிழ்நாட்டிற்கும், மலேசியாவிற்கும் கடாரம் கொண்டான் காலந்தொட்டு, நீண்ட காலமாக நிலவி வரும் வலுவான சமூக மற்றும் கலாச்சார தொடர்புகளையெல்லாம் வரலாற்றுச் சான்றுகளோடு நான் விளக்கிக் கூறியபோது, மகாதீர் முகமது அவர்கள், அந்தச் சந்திப்பு மிகுந்த மனநிறைவைத் தந்ததாகவும், நேச உணர்வை வெளிப்படுத்தியதாகவும் கூறியது அன்றைய ஏடுகளில் செய்தியாக வெளிவந்தது.

கோலாலம்பூரில் "புத்ரா" உலக வாணிப மையத்தில் உள்ள "மெர்தேகா" அரங்கத்தில், 8-1-1999 அன்று பொது வரவேற்பில் கலந்து கொண்டேன். அப்போது நான் பேசிய பேச்சின் ஒரு பகுதி:-

"தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில், வெள்ளையரை எதிர்த்து முதலில் களம் சென்று கட்கம் ஏந்தி இறுதியாக சுதந்திரத்திற்காகத் தன்னையே பலி கொடுத்துக் கொண்ட பூலித்தேவன், தொடர்ந்து வீரபாண்டிய கட்டபொம்மன், தொடர்ந்து மருது பாண்டியர்கள் ஆகியோரைத் தொடர்ந்து 1802ஆம் ஆண்டு மருது பாண்டியர்களின் வழித் தோன்றல்கள், அவர்களுடைய உறவினர்களை - அந்தப் புரட்சிக்காரர்களை - போராளிகளை எஞ்சிய விடுதலைப் போர்த் தளபதிகளைத் தூத்துக்குடியிலிருந்து கப்பலில் ஏற்றி, ஜேம்ஸ் வால்ஷ் என்பவர், லெப்டினென்ட் ராக் ஹெட் என்பவரின் தலைமையில், மொத்தம் 73 பேரை 76 நாட்கள் பயணம் செய்ய வைத்து, கடைசியாகக் கொண்டு வந்து விட்ட இடம் பினாங்கு. மலேசியப் பகுதியிலே உள்ள பினாங்கில் தான் அவர்கள் கொண்டு வந்து விடப்பட்டார்கள். இது "சவுத் இண்டியன் ரிபல்லியன்" என்ற தலைப்புள்ள புத்தகத்தில் காணப்படுகின்ற உண்மை."

தூத்துக்குடியிலிருந்து 73 பேர் 76 நாட்கள் கப்பலில் பயணம் செய்தார்கள். அவர்களுடைய கைகளிலே, கால்களிலே விலங்கு மாட்டப் பட்டிருந்தது. நான்கைந்து பேர்களின் கைகள்தான் கட்டப்படவில்லை. காரணம் - அவர்கள், கப்பலில் சமையல் வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். அவர்களைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் விலங்கிடப்பட்டு பினாங்கில் 76

நாள் பயணத்திற்குப் பிறகு சேர்க்கப்பட்டார்கள். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட, அந்த நூலிலே உள்ள 73 பேரின் பெயர் களையும் உங்கள் முன்னால் படிக்க விரும்புகிறேன். அதுதான் நாம் அவர்களுக்கு ஆற்றுகின்ற கைமாறு. அவர்களுக்காக நாம் செய்கின்ற வீர வணக்கம். 73 பெயர்களைப் படிக்கும்போது, கொஞ்சம் உங்களுக்கு அயர்வு ஏற்படலாம். ஆனால் அயர்வு ஏற்படக் கூடாது.

அயர்வில்லாமல் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட மான மறவர்களின் பெயர்களைப் படிக்கின்ற நேரத்தில், அயர்வுக்குப் பதிலாக உணர்வு ஏற்பட வேண்டும். எனவே படிக்கின்றேன்.

1. வேங்கம் பெரிய உடையத் தேவர், சிவகங்கை - 2. துரைசாமி (தந்தை பெயர் மருதுபாண்டியன்) - 3. வேரப்பூர் பொம்ம நாயக் - 4. ஜெகநாத அய்யர், ராமனாதபுரம் - 5. ஆண்டியப்பத் தேவன் - 6. சடமாயன் - 7. கோனியாமி தேவன் - 8. தளவாய் குமாரசாமி நாயக், பாஞ்சாலங் குறிச்சி - 9. மேலூர் குமாரத்தேவர் -

10. பாண்டியன்புத்தூர் பாண்டியன் - 11. முத்து வீரா, அரங்குளம் - 12. சாமி, மணக்காடு -

13. ராமசுவாமி - 14. இருளப்ப தேவர், நாங்குனேரி - 15. பாண்டியன் நாயக், கம்பாடி

16. மாடத்தேவன் - 17. மாயில்மாடன் -

18. சின்ன பிச்சத் தேவன் - 19. வீரபாண்டியத் தேவன் 20. வீரப்பெருமாள் தேவன் - 21. கருப்பத் தேவன் - 22. சுலோமோனியா - 23. நந்தசாமி - 24. பெருமாள் - 25. சின்னபிச்சத் தேவன் உடையத் தேவன் - 26. சின்னபிச்சத் தேவன் மகன் தேவி நாயக் - 27. முத்துராமத் தேவன் - 28. மண்டத் தேவன் - 29. பேயன் - 30. அழகநம்பி - 31. வைகுண்டத் தேவன் -

32. சிரியண்ணத் தேவன் - 33. கோனியாலும் - 34. முல்லைவடிவு - 35. சந்தானம் - 36. வீரபத்திரன் - 37. சிலம்பன் - 38. பேயன் - 39. ராமசாமி - 40. இருளப்பன் - 41. குமாரசாமி - 42. வீரபாண்டியன் - 43. வெங்கட்டராயன் - 44. உடையார் - 45. முத்துராக்கு - 46. முத்துராக்கு, அணக்குளம் - 47. சொக்குத் தலவான் - 48. இருளப்பத் தேவன் -

49. மல்லையநாயக்கன் - 50. கலோமணி நாயக்கன் - 51. தொமாச்சி நாயக் - 52. சிலோமணி நாயக் - 53. இராமசாமி - 54. பிச்சாண்டி நாயக் - 55. கல்லுமாடம் தளவாய் - 56. சின்ன மாடன் -

57. வைத்திய மூர்த்தி - 58. தளவாய் பிள்ளை - 59. சுப்பிரமணியம் - 60. பெத்தன்ன நாயக் - 61. கிருஷ்ணமா நாயக் - 62. மயிலேனன் - 63. வயலமுத்து - 64. இராமன், 65. பாளை நாயக், 66. இராமன் - 67. வெள்ளையக் கொண்டன் -

68. இராமன் - 69. அழகு சொக்கு - 70. ஷேக் உசேன் - 71. அப்பா நாயக்- 72. இராமன் சூளை - 73. குப்பன்ன பிள்ளை.

இப்படி 73 பேர் 1802ஆம் ஆண்டு பினாங்கில் இறக்கிவிடப்பட்ட பிறகு, இதில் மூன்றில் ஒரு பங்கினர், பல்வேறு காரணங்களால் இறந்துவிடுகின்றனர்.

இவர்களைக் கப்பலேற்றி அனுப்பிய ஜேம்ஸ் வால்ஷ், 1818ஆம் ஆண்டு பினாங்குக்கு வருகிறான். அங்கே அவன் கண்ணில் பரட்டைத் தலையோடு, பராரி கோலத்தோடு, ஒடிந்து விழும் உடல் அமைப்போடு, எலும்பும் தோலுமாக, வாலிப வயதினன் - ஆனாலும் வயதானவனைப் போன்ற தோற்றமுடைய ஒருவனை அங்கே பார்க்கிறான். பார்த்தவுடன் அவன் யார் என்று தெரிகிறது. சந்தேகத்தோடு அவனைப் பார்த்து - உன் பெயர் துரைசாமி தானே? என்று கேட்க, அவன் "ஆமாம்" என்கிறான். அந்தத் துரைசாமி யார் தெரியுமா? நான் படித்தேனே பட்டியல்! அதில் இரண்டாவதாகப் படித்த மருதுபாண்டியனின் இளைய மகன் - வீரப் போரிட்டு மடிந்தானே வெள்ளையரை எதிர்த்து, அந்த மருது பாண்டியனின் மகன் துரைசாமிதான் அவன். அவன் தான் ஈளை கட்டி இருமலோடு - பரட்டைத் தலையோடு - பராரி கோலத்தோடு பரங்கியருக்கு முன்னால் நின்றான்.

இதைப் பற்றி அந்தப் பரங்கியன், ஜேம்ஸ் வால்ஷ், என்ன எழுதியிருக்கிறான் என்பதையும், நான், உங்களிடம் படித்துக் காட்ட விரும்புகிறேன் - "துரைசாமி என்ற பெயரைக் கேட்டதும், என் நெஞ்சில் யாரோ கட்டாரியால் குத்தியது போன்ற உணர்வைப் பெற்றேன். நான் சிறைப் பிடித்துக் கப்பலிலே 15 வயது பையனாக ஒப்படைத்த கைதி தான் இன்று பினாங்கில் என் முன் நின்றான். வெளித் தோற்றத்திலே மாற்றங்கள், ஆனால் உள்ளம் அதே உள்ளம். கடந்த கால நினைவுகளை என் முன்னால்

எதிரொலித்தது. என் பெயரை அவன் சாதாரணமாகத் தெரிந்து கொண்டதும், என்னுடைய பழைய கால நட்பை நினைவு கூர்ந்து, தன்னுடைய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கும் படி ஒரு கடிதத்தைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு நம்பிக்கை வயப்பட்டான். ஆனால் அப்போதிருந்த ஆங்கிலேய அரசின் ஆணையின்படி, அது விதிக்கு மாறானது என்பதால், நான் அந்த உதவியைச் செய்ய முடியவில்லை'' என்று எழுதியிருக்கிறான்.

அந்த துரைசாமி என்ன ஆனாரோ, எப்படி ஆனாரோ? இன்று அந்த துரைசாமியின் வாரிசுகளாக வந்தவர்கள் எத்தனைபேர் இந்த மண்டபத்தில் அமர்ந்திருக்கிறீர்களோ?

★ ★ ★

உடன்பிறப்பே, என்னுடைய அந்தப் பேச்சு இப்படியே தொடருகிறது. நெல்லையில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநில மாநாட்டினையொட்டி 25 மடல்கள் எழுதிய நிலையில் இத்துடன் இந்தக் கட்டுரை தொடர் நிறைவுறுகிறது.

இளைஞர் அணியினருக்கு நான் வழங்கிய ஆத்திச்சூடி :-

★ அண்ணா வழி நில்!

★ ஆற்றுக பொதுப்பணி!

★ இலக்கியம் புதுக்கிடு!

★ ஈனரை ஒதுக்கிடு!

★ உயிர் தமிழாம், உணர்ந்திடு!

★ ஊழலை நொறுக்கிடு!

★ எட்டப்பர் இகழ்ந்திடு!

★ ஏறு போல் வீறு கொள்!

★ ஐயம் களைந்து அறிவைப் பயிர் செய்!

★ ஒழுக்கம் போற்றிடு!

★ ஓம்புக மெலியோரை!

★ ஔவைக் குலம் போற்று!

★ கழகம் வில்லாம், நின் அணியே கணையாம்!

★ சாதியை விடுத்துச் சமத்துவம் முழக்கு!

★ ஞாயிறு வாழ்த்தி நாளும் உழைத்திடு!

★ தனியுடைமை தகர்த்திட தடந்தோள் தட்டு!

★ நாடு வாழ நலிவு தீர்த்திடு!

★ பகைவர்க்கு வளையேல்!

★ மாயைக்கு மயங்கேல்!

★ வாய்மையே போர்வாள்!

★ யானை போல் பயன்படு!

★ "ழ" கரமாய்ச் சிறப்புறு!

அன்புள்ள,

மு.க.

2-12-2007

3314. மருத்துவத் துறையில் மகத்தான சாதனைகள்!

உடன்பிறப்பே,

தி.மு. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, மருத்துவத் துறையில் எந்தவிதமான முன்னேற்றமும் செய்யப்படவில்லை என்றும், தேர்தல் அறிக்கையிலே கூறியதைக் கூடச் செய்யவில்லை என்றும், அரசு மெத்தனமாக நடந்து வருகிறது என்றும் கூறப்பட்ட தகவல்கள் குறித்து, அரசுத் துறையின் சார்பில் தரப்பட்டுள்ள விளக்கங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக எழுதுகிறேன்.

- 2006-ல் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1862 மருத்துவப் பணியிடங்கள் காலியாக இருந்தன. அதற்குப் பின் ஏற்பட்ட காலிப் பணியிடங்களையும் சேர்த்து இந்த ஒன்றரையாண்டில், இதுவரை 3000 மருத்துவர்கள், தேர்வாணையம் மற்றும் வேலைவாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 1405 மருத்துவர்கள், நவம்பர் 2006 முதல் கால முறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். இதேபோல் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 2540 செவிலியர்கள், 419 மருந்தாளுநர்கள், 280 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

- மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக இருந்த மருத்துவம் சாரா மற்றும் அடிப்படைப் பணியாளர்கள்

42248
கூ 8934-8116
கதை:41

தி.மு.க. அறக்கட்டளை
பொருளாளர்
நிலையம்
சென்னை-18

10,000 காலிப் பணியிடங்களை நிரப்ப அனுமதி அளிக்கப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

- **கடந்த ஒன்றரை ஆண்டில், 2400 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.** தற்பொழுது, 1000 செவிலியர்களுக்கு நியமன ஆணை தயாராக உள்ளது. இவர்கள் விரைவில் பணியில் சேர்வார்கள்.

- **தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 பல் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். 155 இந்திய முறை மருத்துவர்கள், (சித்தா மற்றும் யுனானி) தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட உள்ளனர். இதற்கான தேர்வு முடிந்து, நேர்காணல் நடைபெற உள்ளது.** 9 ஓமியோபதி மருத்துவர்கள் மற்றும் 10 யோகா மற்றும் இயற்கை மருத்துவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

- **பல ஆண்டுகளாக நகராட்சிகளில் சுகாதார அலுவலர்கள் நியமனம் செய்யப்படாமல் இருந்தனர். தற்பொழுது தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு,** 31 சுகாதார அலுவலர்கள் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

- **1992-93-ல் சுகாதார ஆய்வாளர் பயிற்சி முடித்து நியமனம் செய்யப்படாமல் இருந்த** 600 நபர்கள் **மற்றும் காந்தி கிராமம் மற்றும் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் சுகாதார ஆய்வாளர் பயிற்சி முடித்தவர்களையும் சேர்த்து, இதுவரை** 800 நபர்கள் தற்பொழுது சுகாதார ஆய்வாளர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிராம சுகாதார செவிலியர் பயிற்சி முடித்த 1100 அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள், கிராம சுகாதாரச் செவிலியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- **கிராம மற்றும் நகர்ப்புற மக்கள், தொற்று மற்றும் தொற்றாத நோய்களை ஆரம்ப நிலையிலேயே**

கண்டறிந்து மேல் சிகிச்சை அளிக்கும் பொருட்டு கொண்டுவரப்பட்ட மகத்தான திட்டம் "வருமுன் காப்போம்" திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் 2006 - 2007 மற்றும் 2007 - 2008 ஆம் ஆண்டுகளில் **9000 முகாம்கள் நடத்த ஆணையிடப்பட்டு, இதுவரை 4491 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.** இந்த முகாம்களினால் பயனடைந்தோரின் எண்ணிக்கை 47,26,944 ஆகும்.

- **இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் வியக்கும் வண்ணம், கருவிலே இருக்கும் குழந்தைக்கும் உணவு அளிக்கும் உன்னதத் திட்டமாக, ஏழைக் கர்ப்பிணிகள் பயன்பெறும் வகையில் "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்" மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஏழைக் கர்ப்பிணிப் பெண்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 6,000/- நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த 2006-2007-ஆம் ஆண்டில் 2,41,095 கர்ப்பிணிப் பெண்களுக்கு 100 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.** இத்திட்டத்தை செயல்படுத்த நடப்பாண்டில் ரூ. 200 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை 2,48,908 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ. 118.95 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

- **24 மணி நேர பிரசவ சேவைத் திட்டம் 2006 வரை 180 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமல்படுத்தப்பட்டது. இத் திட்டம் மேலும் 820 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு தற்பொழுது, 1000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமல்படுத்தப்படுகிறது.** இதனால் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் பிரசவங்கள் பெருமளவில் உயர்ந்துள்ளன. தனியார் மருத்துவ மனைகளில் நடந்து வந்த பிரசவங்களின் எண்ணிக்கையும்,

வீட்டிலேயே நடந்த பிரசவங்களின் எண்ணிக்கையும் குறைந்து தற்பொழுது அரசு மருத்துவமனை களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நிகழும் பிரசவங்கள் கணிசமாக உயர்ந்துள்ளன. நடப்பாண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் 87,881 பிரசவங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது நடப்பாண்டில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் 44000 பிரசவங்கள் அதிகம் நிகழ்ந்துள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 98.7 சதவிகித பிரசவங்கள் மருத்துவ நிலையங்களில் நடைபெறுகின்றன.

- **ரூ. 31 கோடி செலவில், 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன. இந்த இடங்களில் கூடுதல் கட்டிடப் பணிகள் தற்பொழுது தொடங்கப் பட்டு வருகின்றன. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும், 5 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.** ஏற்கெனவே உள்ள 106 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதலாக, 85 மருத்துவர்களும் மற்றும் மருத்துவம் சாராத பணியிடங்களும் உருவாக்கப் பட்டுள்ளன. 100 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இவைகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் ஒரு மருத்துவர், செவிலியர் மற்றும் ஓட்டுநர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- **2006 - 2007-ஆம் ஆண்டில் மட்டும், மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் எம்.ஆர்.ஐ ஸ்கேன், செமி ஆட்டோ அனலைசர், லித்தோடிரிப்ஸி, 64 ஸ்லைஸ் சி.டி ஸ்கேன் போன்ற நவீன மருத்துவ உபகரணங்கள் சுமார் ரூ. 83.00 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் சேலம் மருத்துவமனைகளுக்கு**

ரூ. 4 கோடி செலவில் கோபால்ட் சிகிச்சைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2006க்கு முன்னர், எம்.ஆர்.ஐ. ஸ்கேன், இரண்டு கல்லூரி மருத்துவமனையில் மட்டுமே இருந்தன. தற்பொழுது இந்தக் கருவி மேலும் 7 மருத்துவமனைகளில் நிறுவப்பட்டு வருகிறது. 64 ஸ்லைஸ் சி.டி. ஸ்கேன் மற்றும் லித்தோடிரிப்ஸி கருவிகள், 2006க்கு முன்னர் எந்த மருத்துவ மனையிலும் இல்லை. தற்பொழுது இந்த நவீன மருத்துவக் கருவிகள் சென்னை மருத்துவக் கல்லூரிக்கும், மதுரை இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

- **தமிழ் நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ், 2006 மே மாதத்திற்குப் பிறகுதான் மாவட்டங்களில் 35 மருத்துவ மனைகளில் கூடுதல் கட்டிடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டது . இப்பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. தற்பொழுது இந்தத் திட்டத்தின் கீழ், 227 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் கட்டிடங்கள் கட்ட ரூ. 220 கோடியும், இந்தக் கட்டிடங் களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்க ரூ.30 கோடியும், கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்ய ரூ. 21.27 கோடியும், ஆக மொத்தம் 271 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.** கட்டிடங்கள் கட்டுவதற்கு பொதுப் பணித் துறை ஒப்பந்தப் புள்ளிகள் கோரியுள்ளது.

- **மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் பல ஆண்டுகளுக்கு** முன்னர் கட்டப்பட்டவையாகும். அவைகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, தேவைப்படும் கட்டிடங்கள், உபகரணங்கள், பணியாளர்களின் எண்ணிக்கை, ஆகியவைகளை ஆய்ந்து அரசுக்கு வழங்கும் பொருட்டு, ஓய்வு பெற்ற கல்லூரி முதல்வர் திரு. கணேசன் அவர்கள், நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவரது

அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அனைத்து மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளின் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை காத்திராமல், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையை ரூ. 100 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, முதல் கட்டமாக ரூ. 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டிடப் பணி தொடங்கப்பட உள்ளது. மேலும் செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, தலா ரூ. 25 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. மதுரை இராஜாஜி மருத்துவமனை விரிவாக்கப் பணிகளுக்காக ரூ. 22 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, கீழ்ப்பாக்கம், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் சென்னை பல் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தங்கும் விடுதிகள் கட்ட ரூ. 21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு புதிய கட்டிடம் கட்ட ரூ. 13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

- **அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய அவசர கால ஊர்திகள், வட்டாரம் ஒன்றிற்கு ஒரு ஊர்தி வீதம், 187 வட்டாரங்களுக்கு வழங்கப்பட்டு அவைகள் உபயோகத்தில் உள்ளன. எஞ்சிய 198 வட்டாரங்களுக்கும் அவசர கால ஊர்திகள் வழங்கப்பட ஆணைகள் வெளியிடப்பட்டு கொள்முதல் செய்யும் நிலையில் உள்ளது.** இந்த ஊர்திகள் அனைத்தும் விரைவில் செயல்படத் தொடங்கும். இந்த ஊர்திகள் தன்னார்வ நிறுவனங்களால் இயக்கப்பட்டு, கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நோயாளிகளைக் குறைந்த

செலவில் அரசு மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப் படுகின்றன.

- பேறு காலத்தில் ஏற்படும் சிசு மரணம் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் மரணம் ஆகியவற்றைக் குறைப்பதற்காக 24 மணி நேரமும் செயல்படும் அவசர கால தாய் சேய் நல மையங்கள் 66 மருத்துவமனைகளில் துவக்கி வைக்கப்பட்டு செயல் படாமல் இருந்து வந்தன. **இந்த மருத்துவ மனைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு, சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 200 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் மேலும் 32 அரசு மருத்துவ மனைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன.**

- **விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு கட்டிடப் பணிகள் தொடங்க, ரூ. 41 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடப்பணி விரைவில் தொடங்கப்படும்.** திருவாரூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரிகள் துவங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு ஆரம்பப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- **1419 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்கள் மற்றும் 270 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில், "மருத்துவப் பயனாளிகள் நல சங்கங்கள்" ஆரம்பிக்கப் பட்டுள்ளது.** ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்ட மருத்துவமனைகளிலும் சேவையை மேம்படுத்த ஆண்டொன்றுக்கு, ரூ. 1 லட்சம் வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள சங்கங்களுக்கு, தலா ரூ. 5 இலட்சம் வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- 12619 கிராம சுகாதார மற்றும் குடிநீர் தூய்மைக் குழு அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் **கிராமங்களில் சுகாதார நடவடிக்கை மேற்கொள்ள ரூ. 12.619 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.**
- 2001-02-ஆம் ஆண்டில், எச்.ஐ.வி. யால் பாதிக்கப்பட்டோர் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டது. கருவுற்ற தாய்மார்களில் எச்.ஐ.வி.யால் பாதித்தோர் 1.13 சதவீதமாக கண்டறியப்பட்டது. இந்த அரசு எடுத்த தடுப்புப் பணிகள், மருத்துவ சிகிச்சைப் பணிகள் போன்ற முயற்சிகளால் 2006-ல் பாதிக்கப்பட்டோர் சதவிகிதம் 0.38 ஆக குறைக்கப்பட்டது. நாட்டிலேயே எச்.ஐ.வி. பாதித்தோரின் எண்ணிக்கையைக் குறைத்தது தமிழ்நாட்டில் மட்டும்தான்.
- **சென்னைக் குழந்தைகள் நல மருத்துவ மனையில், ரூ. 14 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடங்கள் கட்டவும், ராயப்பேட்டை மருத்துவமனையில், ரூ. 10 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடங்கள் கட்டவும் வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் மாநில பொதுப் பணித்துறையால் தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.** இதற்கான கட்டிடப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.
- கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பரிசோதனை சேவை கிடைப்பதற்கு, 10 நடமாடும் பரிசோதனை வாகனங்களும், இரண்டு நடமாடும் தகவல் கல்வி மற்றும் தொடர்பு வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.
- **பூச்சிகளால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களிலிருந்து, மக்களைப் பாதுகாக்க ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மருந்துகள் மற்றும் சிகிச்சை வசதிகள் செய்து**

தரப்பட்டுள்ளன. ஆய்வக பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தீவிர சிகிச்சை வசதிகள், தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

- மருந்துகள் குறித்து தகவல் அறியவும், அவற்றின் விலை சரிதானா என்பதை உறுதி செய்து கொள்ளவும், தரம் பற்றி தெரிந்து கொள்ளவும் ஏதுவாக, மருந்துகள் தகவல் மற்றும் மருந்தியல் விழிப்புணர்வு மையம் ஒன்று பொது மக்கள் நலன் கருதி நாளை முதல் தொடங்கப்படவுள்ளது.

உடன்பிறப்பே, இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து, இந்த அரசு, மெத்தனமாக நடைபெறவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அண்மையில் கூட கடந்த மாதம் சேலத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில், டெல்லியில் உள்ள All India Institute of Medical Sciences மருத்துவமனையைப் போல, அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாக அங்கேயுள்ள மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கான முயற்சியில் மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தம்பி அன்புமணி ஈடுபட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு நானே சென்று கலந்து கொண்டேன். மூன்றாண்டு கால முயற்சிகளுக்குப் பின்னர் தான் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது போன்ற கால தாமதம் அரசுத் துறைகளில் ஒன்றிரண்டில் ஏற்படுகின்றதென்றால், அதற்கான காரணம் நடைமுறைகளில் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளும், தவறுகள் எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதில் காட்டப்படும் அக்கறையும் தான். எனவே அரசு, மெத்தனமாக செயல்படுகிறது என்றெல்லாம் ஒட்டுமொத்தமான முடிவுக்கு வந்து விடக் கூடாது.

அன்புள்ள,

மு.க.

6-12-2007

3315. நெல்லை இளைஞர் மாநாடு; இல்லை அதற்கோர் ஈடு!

உடன்பிறப்பே,

என் பொது வாழ்க்கையில் அரசியல் ரீதியாகவும் - சமுதாய ரீதியாகவும் - மொழி காத்திடும் களப்பணி அடிப்படையிலும் எத்தனையோ எழுச்சிமிகு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் மகத்தான வெற்றி பெற வேண்டுமென்பதற்காக அவ்வப்போது அறிக்கைகள் விடுத்திருக்கிறேன். உடன்பிறப்புக் கடிதங்கள் எழுதியிருக்கிறேன். "இளைஞர்களுக்கு வழி விடுவோம்" என்றும், "திரும்பிப்பார்" என்றும் இருபத்தி ஐந்து கடிதங்கள், முரசொலியில் எழுதியவை அனைத்தும், இளைஞர்களின் சாதனை - அவர்கள் நாட்டுக்காக - மொழிக்காக - செய்துள்ள சாதனை - தியாகம் - ஆகியவை பற்றித்தான், அந்தக் கடிதங்கள் - இரு புத்தகங்களாக, வெளிவந்துள்ளன என்பது மட்டுமன்றி, நெல்லை மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து ஒரு வாரத்துக்கு மேலாக உடன்பிறப்புகளுக்கு மடல் எழுதினேன். நள்ளிரவு தொடங்கி விடிந்த பிறகும், எழுதி முடித்த பாடில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக எத்தனை கடிதங்கள் - அக்கடிதங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும், உடன்பிறப்பாம் நீ கொண்ட உணர்ச்சியும், எழுச்சியும் ஒருங்கிணைந்த எதிரொலி மடல்களாக நீ எழுதியவையாம் அத்தனையும் என்னிடம் குவிந்து கிடக்கின்றன. கழுத்து வலிக்கும் - கண் எரிச்சல் எடுக்கும் - கவலையுடன் என்னை அருகிருந்து கவனித்துக் கொண்டிருக்கும் என் வீட்டாரின் அன்புத் தொல்லையும்! பாசங் கலந்த கண்டிப்பும்! இப்போது நினைத்தாலும், அனைத்தையும் மீறி, அல்லும் பகலும் பட்ட பாடு வீண் போகவில்லை என்பதற்கு அடையாளமாக நெல்லை மாநாடு அமைந்ததே என்பதை எண்ணும்போது - அரசுத் துறைக் காவலர்கள் இருவரும் - கழகக் காவலர்கள் மூவரும் போக்குவரத்துச் சாலை விபத்தில் சிக்கி, போய் விட்டனரே நமை

விடுத்து! என்ற செய்தியைத் தவிர, - என் செவி புகுந்து, சிந்தை கலக்கிய நிகழ்வு இது ஒன்றைத் தவிர மற்ற நிகழ்வுகள் எல்லாம் "நெஞ்சினிக்கும் நெல்லை" என்றே நமது இதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன!

பத்திரிகைகள் மறைக்கவில்லை! மறைத்திட முயற்சி மேற்கொள்ளவுமில்லை! அவற்றின் செய்தியாளர்கள் நெல்லையிலிருந்து விடுத்தச் செய்திகளை - ஒவ்வொரு மணி நேரமும் காத்திருந்து, அந்தச் செய்திகளை வஞ்சகமில்லாமல் வெளியிட்டு, நெல்லையின் இளைஞர் அணி மாநாட்டுக்கு, நாம் தந்த விளம்பரத்தை விட - அந்த வீர இளைஞர்களுக்கு நான் தந்த ஊக்கத்தை விட அதிக ஊக்கத்தை, விருப்பு வெறுப்புக்கு இடமின்றி வழங்கிய காரணமாகத்தான் மாநாட்டுக்கு மாநிலப் புகழ் மட்டுமல்ல, நாட்டுப் புகழும்கூட, ஏன்! நானிலப் புகழே கிட்டியிருக்கிறது என்று சொன்னால், அது எட்டிக்காயாக எரிச்சல்காரர்களுக்கும், எட்டப்பர்களுக்கு மட்டுமே தோன்றும்!

ஒரு செய்தி ஊடகத்தில், ஒரு மாத காலமாகவே நெல்லை இளைஞர் அணி மாநாட்டுக்கு எதிரான பிரச்சாரமே செய்யப்பட்டு, மாநாட்டுக்கு கூட்டமே வருவதாயில்லை - அதனால் அரசாங்க ஆட்களைப் பிடித்து வரப்போகிறார்கள் என்று அவதூறுச் செய்திகளை அடுக்கடுக்காக வெளியிட்டுப் பார்த்து, சட்ட ரீதியாகவும் அணுகி மாநாட்டிற்கு எப்படியாவது தடை வாங்கிட எண்ணி, அத்தனை தடைகளுக்கும் முயற்சி மேற்கொண்டு, அதுவும் சட்டப்படி பலிக்காமல்போய், ஏமாந்தவர்கள் - வானத்திலிருந்து மழைத் துளிகள் விழுந்ததும் "ஆகா! இவர்களைக் காணச் சகிக்காது, வருண பகவானும் வந்து விட்டான்" என்று கூச்சலிட்டு, "பாவிகள் நடத்தும் மாநாட்டைப் பார்ப்பாரா எங்கள் பரந்தாமன்" என்று நெல்லையில் பஜனை பாடிடத் தொடங்கினராம்! எவ்வளவு உயர்ந்த பண்பாடு! எத்துணை அரசியல் நாகரிகம்!

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்றார் அண்ணா - அந்த அண்ணாவின் பெயரைக் கட்சிக்கு வைத்திருப்போர், மாற்றார் தோட்டத்தில் மழை பொழியாதா? மணம் பொழியும் இளம் மல்லிகை அரும்புகள் அழிந்து போகாதா என்று மனம் புழுங்கி, அதனையும் வெளியிட்டுத் தங்கள் ஆத்திரத்தைத் தணித்துக் கொள்கிறார்கள் எனில், அவர்களை நினைத்து அழுவதா? சிரிப்பதா? என்றே தெரியவில்லையே!

இது இளைஞர் அணி மாநாடு என்பதாலோ என்னவோ, அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அதற்கான பணிகள் எல்லாமே மிகவும் விறுவிறுப்புடனும், விரிவாகவும் நடத்தப்பட்டு - நெல்லையில் பந்தல் அமைப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க இளைஞர் அணியின் செயலாளரும், மாநாட்டின் தலைவருமான தம்பி மு.க. ஸ்டாலின், இரண்டு மூன்று முறை நெல்லைக்குச் சென்றதோடு, நான் ஏற்கெனவே எழுதியதைப் போல, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மாநாடுகளைப் போல செயல்வீரர்களைக் கூட்டி, மாநாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்ததன் பயனை நெல்லையிலே காண முடிந்தது.

நெல்லை மாவட்டத்திலே உள்ள கழக முன்னணியினர், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தம்பி கருப்பசாமி பாண்டியன் மற்றும் கழக முன்னணியினர், வழக்கறிஞரும், நெல்லை மாநகர மேயருமான தம்பி ஏ.எல். சுப்பிரமணியம், மத்திய இணை அமைச்சர் ராதிகா செல்வி, மாநில அமைச்சர்கள் மைதீன்கான், பூங்கோதை, சட்டப் பேரவை உறுப்பினர்கள் தம்பிகள் மாலைராஜா, அப்பாவு மற்றும் சுப. சீத்தாராமன், ச. தங்கவேல், எஸ்.எஸ். மைதீன் - வரவேற்புக் குழு தலைவர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கா.முத்துராமலிங்கம், வரவேற்புக் குழுச் செயலாளர்கள் வே. கோமதிநாயகம், யூ.எஸ்.டி. சீனிவாசன், க. ரவி, மற்றும் நிதிக்குழுத் தலைவர் மு.பெ.சாமிநாதன், செயலாளர்கள் சுப.த.சம்பத், ஆர்.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., இ.ஜி.சுகவனம் எம்.பி., சென்னை மேயர் மா.சுப்பிரமணியன், பிரச்சாரக் குழு உறுப்பினர்கள் நன்னியூர் இராசேந்திரன், சுபா. சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், இல.மேகநாதன், மாநாட்டு அலுவலகப் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் மு.அசன் முகமது, எம்.பி.சிவசுப்பிரமணியன், சீ.ரவி, ஜே.ராஜ்மோகன் செல்வின், ஆர்.மகேஷ், இராசா அருண்மொழி, பந்தல் குழு உறுப்பினர்கள் ஏ.கே.சுந்தரமூர்த்தி, இரா.ஸ்ரீதரன், ஆர்.ஜனகராஜ், ஆர்.எஸ்.எம். தணிகைசெல்வம், அன்பில் பெரியசாமி எம்.எல்.ஏ., ஆ.செந்தில்குமார், தாழை மு.அறிவழகன், மேடைக் குழு உறுப்பினர்கள் வீரபாண்டி ஆ.இராசேந்திரன் எம்.எல்.ஏ., பா.அருண்குமார், பி.இராமலிங்கம், இரா.ரவிச்சந்திரன், அ.யுவராஜ், பி.கே.பழனிச்சாமி, கே.ஏ.முஸ்தபா, தீர்மானக் குழு உறுப்பினர்கள் புதுவை ஆர்.சிவா எம்.எல்.ஏ., கே.நீலகண்டன், ஆ.துரைவேலு, எஸ்.தங்கமலைப் பாண்டியன், கே.குமார், மலர்க்குழுத் தலைவர் இரா.இரத்தின கிரி, செயலாளர் பொள்ளாச்சி

மா.உமாபதி, உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், வி.எஸ்.ராஜ் உள்ளிட்ட குழுக்களைச் சேர்ந்தவர்கள் அந்த மாவட்டத்திலே உள்ள இளைஞர்களின் ஒத்துழைப்போடும் முழுமையாக ஈடுபட்டு மாநாட்டுக்காக, கொட்டகைகள் அல்ல, கோட்டை கொத்தளங் களை அமைத்து வருகிறார்கள் என்று நான் முன்பே குறிப்பிட்டது உண்மையாகி விட்டது.

மாநாட்டிற்கு முன்பு என்னைச் சந்தித்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்கள் தங்கள் மாவட்டத்திலிருந்து 200 பேருந்துகள் புறப்பட வுள்ளன, 100 பேருந்துகளுக்கு முன் தொகை கட்டியிருக்கிறோம் என்றெல்லாம் தகவல் தெரிவித்தபோது, அந்தச் செய்திகளைக் கேட்டு அத்தனை பேருக்கும் நெல்லைச் சீமையிலே இடம் இருக்குமா என்று எனக்கேற்பட்ட ஐயம் சரியென்றே ஆகிவிட்டது. ஒளிவு மறைவு இன்றி ஏடுகள் வெளியிட்டுள்ள புகைப்படங்களே அதற்கு சான்று!

முதல் நாள் மாநாட்டில் நடைபெற்ற வெண்புறாக்களின் அணிவகுப்பினைத் தொடர்ந்து, பேராயர் வின்சென்ட் சின்னதுரை அவர்கள், சிறப்பாக ஏற்பாடு செய்த சீர்மிகு நிகழ்ச்சியும், அதிலே நம்முடைய தமிழர் தலைவர் வீரமணி அவர்களும், கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் ஆற்றிய உரைகளும் மாநாட்டின் வெற்றிக்குச் சிகரமாக அமைந்தன.

பகலிரவு பாராது பட்ட கவலையும் - அனுபவித்த கஷ்டமும் - வீண் போகாமல் - பத்து இலட்சம் பேரை இளைஞர் அணியினர் நெல்லையில் கூட்டிக் காட்டியது மட்டுமல்ல! அணு அளவு அசம்பாவிதத்துக்கும் இடமின்றி, அறிஞர் அண்ணா அடிக்கடி சொல்வாரே, அந்த இராணுவக் கட்டுப்பாட்டுடன் - ஒரு பிரமாண்டமான சைன்யத்தின் வரம்பு மீறாத அணி வகுப்பை நடத்திக் காட்டிய அருந்திறனைப் பாராட்டி, இன்னும் பத்துக் கடிதங்களாவது எழுத வேண்டும்.

எழுதிட உடலில் தெம்பு இருக்கிறதோ இல்லையோ, உள்ளத்தில் அதற்கான ஊக்கம் இருக்கத் தான் செய்கிறது! என் செய்வது, அத்துடன் ஆட்சிக் கடமை ஆற்றிட டெல்லி செல்ல வேண்டியுள்ளதே? இரண்டு மூன்று நாட்களாய் நெல்லையிலேயே பல் வலியுங்கூட - பல் மருத்துவர் தம்பி வெற்றி வேந்தனிடம், சென்னையில் அவசர சிகிச்சை மட்டும் செய்து கொண்டு டெல்லி விரைகிறேன்.

டெல்லியில் இந்த ஆண்டு (டிசம்பர் 19) நமது பேராசிரியர் பிறந்த நாளைக் கொண்டாடி விட்டு, அவருடன் நமது கழகத்தின் வலிவுக்கும், வளர்ச்சிக்குமான திட்டங்களை டெல்லியில் நான், நமது கழக முன்னோடிகளுடன் கலந்து பேசி விட்டு திரும்பலாமென்று தீர்மானித்திருக்கிறேன்.

இளைஞர் அணியின் அரும்பணி கண்டோம் - இது இயக்கத்தின் பேரணியாக இன்று வளர்ந்துள்ளது கண்டு பெருமிதம் கொண்டோம் - இந்த வளர்ச்சிக்கு நமக்கு ஊக்கமளித்து உந்து சக்தியாக இருந்து உதவிடும் பெரியார், அண்ணா எனும் இரு பெருந்தலைவர்களின் வாழ்த்தும், வழி காட்டுதலுமே காரணம் என்பதை உணர்ந்து அவர்களுக்கு நிறைந்த நெஞ்சுடன் நன்றியினைக் கூறி, பயணத்தைத் தொடர்வோம்.

இளைஞர் அணியினர்க்குவற்றாத ஊக்கமும் - வளமான சிந்தனையும் உருவாகிட நான் வாழ்த்திடும் நேரத்தில் - இதேபோல் இந்த இயக்கத்தின் அணிகளான மகளிர் அணி, அடுத்த கட்டமாகவும், அடுத்தடுத்து ஒவ்வொரு அணியின் சார்பிலும் கருத்தாய்வு நிகழ்வுகள் - மாநாடுகள் - நடைபெறுவதற்காக ஏற்பாடுகளும் விரைவில் துவங்கப்பட இருக்கின்றன என்பதையும் மகிழ்வுடன் குறிப்பிடுகிறேன்.

நெல்லை மாநாட்டில் இளைஞர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களுடன், அவர்கள் உடனடி செயல்பாடு என்ற வகையில், சேது சமுத்திரத் திட்டத்தின் தேவை குறித்து - அண்ணா தமிழகத்தில் ஒரு நாள் எழுச்சி நாள் கொண்டாட ஆணையிட்டார், கொண்டாடினார். இனி வரும் நாட்கள் எல்லாம் அதற்கான எழுச்சி நாட்களாக அமைந்திட. . . . . கழகத் தலைமையின் வேண்டுகோளை நிறைவேற்றும் பணியில் அனைவரும் ஈடுபட்டு வெற்றி காண வேண்டுமென்பதே,

நெல்லை இளைஞர் அணி மாநாட்டின் சார்பாக
அளித்திடும் அவசர - அவசிய - வேண்டுகோளாகும்!

அன்புள்ள,

மு.க.

19-12-2007

3316. வாய்மை ஆட்சி வழங்கும் வண்ணத் தொலைக்காட்சி!

உடன்பிறப்பே,

2006ஆம் ஆண்டு பொறுப்பேற்ற தி.மு.கழக அரசு சார்பில், கடந்த இரண்டாண்டு காலமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு, இலவசமாக அவற்றைத் தொடர்ந்து வழங்கி வருகிறோம். ஆனால் இந்தத் திட்டத்தைப் பற்றி, ஏற்கெனவே ஆட்சியிலே இருந்தவர்களும், புதிதாக ஆட்சிக்கு வரத் துடிப்பவர்களும் தொடர்ந்து பல குற்றச்சாட்டுகளைக் கூறி வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தத் திட்டத்தைப் பற்றி விளக்கமளிக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலும், 13.5.2006 அன்று கழக அரசு அமைந்த சில நாட்களில், அதாவது 24.5.2006 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் நிகழ்ந்த ஆளுநர் உரையிலும், அதனைத் தொடர்ந்து 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஏழைக் குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

30.5.2006 அன்று தமிழகச் சட்டப் பேரவையில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், அண்ணா பிறந்தநாள், பெரியார் பிறந்தநாள், கழகம் தொடங்கப்பட்ட நாள் ஆகிய முப்பெரும் விழாக்களையொட்டி இவ்வாண்டே தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 1.6.2006 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு, பயனாளிகளைத் தேர்வுசெய்ய குழுக்கள், தொலைக்காட்சிப் பெட்டிக்கான குறியீடுகளை மேற்கொள்ள நிபுணர் குழு ஆகியவை அமைக்க முடிவு செய்யப்பட்டது. பயனாளிகளைக் கண்டறிவதற்காக 20.6.2006 அன்று ஒவ்வொரு ஊராட்சியிலும்,

ஊராட்சி மன்றத் தலைவர்,

கிராம நிர்வாக அலுவலர்,

பள்ளித் தலைமை ஆசிரியர்,

மக்கள் நலப் பணியாளர்

ஆகியோர் அடங்கிய குழுவை அமைத்திட ஆணையிடப்பட்டது.

அதேபோல மாநகராட்சி, நகராட்சி, சிறப்பு ஊராட்சி ஆகியவற்றில்,

வார்டு உறுப்பினரைத் தலைவராகவும்,

வருவாய்த் துறை அலுவலரை உறுப்பினர், செயலராகவும்,

அப்பகுதியைச் சேர்ந்த அரசு / மாநகராட்சி / நகராட்சி பள்ளித் தலைமையாசிரியர் - வரி வசூலிப்பவர் (Bill Collector) ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழுவும் அமைக்கப் பட்டது.

இந்தக் குழுக்கள், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினால் கூறப்படும், ஊராட்சிப் பகுதிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெறும் பயனாளிகள் தேர்வுக்கான நெறிமுறைகளின் அடிப்படையில், பயனாளிகள் பட்டியலைத் தயாரித்து, மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

மேலும் எனது தலைமையில், மாநில அளவில் சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு 22.6.2006 அன்று அமைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்,

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் திரு.டி.சுதர்சனம்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு.கோ.க. மணி,

இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. சி. கோவிந்தசாமி ,

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம்,

இந்திய யூனியன் முஸ்லீம்லீக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு.எச். அப்துல் பாசித்,

புரட்சி பாரதம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.ஜகன்மூர்த்தி,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. கு. செல்வம்

அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய கட்சி உறுப்பினர்கள், குழுவில் இடம் பெற மறுத்துவிட்டனர்.

தற்போது இந்தத் திட்டத்திற்கு பல எதிர்ப்புகளைக் காட்டி வரும் தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.விஜய்காந்த், கட்சிப் பணிகள் காரணமாக சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருப்பதால், குழுவில் இடம் பெற இயலாத நிலையில் உள்ளதாகத் தெரிவித்தார். இவர் அந்தக் குழுவிலே அப்போது இடம்பெற ஒப்புக் கொண்டிருந்தால், தற்போது இந்த எதிர்ப்புகளையெல்லாம் தெரிவிக்க வேண்டிய சிரமம் அவருக்கு வந்திருக்காது.

சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் குழுவின் முதல் கூட்டம் 27.6.2006 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில், முதற்கட்டமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைச் செப்டம்பர் மாதத்தில் தொடங்குவது என்றும்,

முதலில், பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பங்களுக்கும்,

சமத்துவபுரங்கள் இல்லாத நீலகிரி மாவட்டத்தில் மலைவாழ் பழங்குடியின குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாக இரண்டு

குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

இதற்காக, முதலில் 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இந்திய அளவில் டெண்டர் கோரி முடிவு செய்வது என்றும், இரண்டாவது கட்டமாக, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத மற்ற குடும்பங்களுக்கு வழங்குவதற்கு, உலகளாவிய டெண்டர் கோரி முடிவு செய்வது என்றும் அந்த 27.6.2006 கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், முதற்கட்டமாக 2006 செப்டம்பர் திங்களுக்குள் 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, எல்காட் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்திட 30.6.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்காக, எல்காட் நிறுவனம், தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளிகளை 24.7.2006 அன்று மாலைவரை பெற்று, அன்றே அவைகள் திறக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் குழுவின் இரண்டாவது கூட்டம், என்னுடைய (முதலமைச்சர்) தலைமையில், 27.7.2006 அன்று நடைபெற்றது.

புதுடெல்லியிலுள்ள வீடியோகான் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், ரூ.2,965 என்ற விலையில் 15,000 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளையும்,

மும்பையில் உள்ள கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம், ரூ.2965 என்ற விலையில் 7500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும்,

நொய்டாவில் உள்ள டிக்சன் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், ரூ.2965 என்ற விலையில் 7500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க முன்வந்தன.

இந்த முடிவுகளைச் சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு, நீண்ட நேரம் விவாதித்து ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

இலவசத் தொலைக்காட்சிப் பெட்டியுடன், ஒற்றை விளக்கு எரிக்க இலவச மின்சாரம் பெறும் குடிசை வாழ் ஏழைகளுக்கு மின்சாரக் கட்டணமும் இலவசமாக அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தாய்மார்களின் பொழுதுபோக்கு வசதிகளை மனதில்கொண்டு, அறிவைப் பரப்புவதற்குப் பயன்படும் வகையில், தொலைக்காட்சிப் பெட்டியில்லாத ஒவ்வொரு வீட்டுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய 15.9.2006 அன்று, காஞ்சிபுரம் மாவட்டம், படப்பை கிராமத்தில் என்னால் தொடங்கி வைக்கப்பட்டு, கரசங்கால் பெரியார் நினைவு சமத்துவபுரம் குடியிருப்புகளில் வாழும் 100 குடும்பங்களுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள மற்ற 4 சமத்துவபுரக் குடியிருப்புகள் உட்பட அனைத்து மாவட்டங்களிலும், 16.09.2006 அன்று அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக,

2006-2007 நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவாறு, 750 கோடி ரூபாய் செலவில் தமிழகத்தில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட, 22.11.2006 அன்று மாலை 5.00 மணிக்கு எனது தலைமையில், சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்காக - உலகளாவிய 9 நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டன. குறைந்த விலைப்புள்ளி (L1) குறிப்பிட்ட திருவாளர் டிக்சன் நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தொலைக்காட்சிப் பெட்டிக்கான இறுதி விலையை நிர்ணயம் செய்தபின், மற்ற ஒப்பந்ததாரர்களிடம் இறுதி விலைப்புள்ளிக்கு வழங்க

ஒப்புதல் பெற்று, எந்தெந்த நிறுவனங் களிடமிருந்து எத்தனை எண்ணிக்கையில், கொள்முதல் செய்யலாம் என்பது குறித்து, 24.11.2006 அன்று காலை 11.30 மணி அளவில், குழு கூடி முடிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 24.11.2006 அன்று காலை 11.30 மணிக்குக் குறைந்த விலைப்புள்ளி அளித்த டிக்சன் நிறுவனத்திடம், தொழில்நுட்ப வல்லுநர்குழு, தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தியது.

டிக்சன் நிறுவனம், ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு ஏற்கெனவே விலைப்புள்ளியில் கொடுத்திருந்த ரூபாய் 2750 என்னும் விலையினைக் குறைத்து, ரூபாய் 2740 என ஒப்புக்கொண்டு, கடிதம் கொடுத்தது.

இதனடிப்படையில், எஞ்சிய 8 நிறுவனங்களில் 4 நிறுவனத்தினர் இதே விலைக்குத் தர மறுத்துவிட்டனர். மற்ற 4 நிறுவனங்களான ஏர்விஷன் பிரைவேட் இந்தியா லிமிடெட், எல்.பி. எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், வீடியோகான் கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட், கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் ஆகியவைகள் ரூபாய் 2740 விலைக்கு கொடுக்க ஒப்புதல் தெரிவித்தன.

இந்த அடிப்படையில் குறைந்தபட்ச விலை, ரூபாய் 2740 எனத் தெரிவித்த டிக்சன் டெக்னாலஜிஸ் நிறுவனத்திடமிருந்து, 9 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும்,

ஏர்விஷன் இந்தியா பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து, 2 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் கொள்முதல் செய்வதென்றும், அந்த நிறுவனம் 3 மாத காலத்திற்குள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலாக 3 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும்,

எல்.பி எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து,

2 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்,

வீடியோகான் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திடமிருந்து 6 இலட்சம்,

கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து, 3 இலட்சம் என வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும், அந்த நிறுவனங்களின் உற்பத்தித் திறன் மற்றும் அவர்கள் வழங்க ஒப்புக்கொண்ட எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அந்நிறுவனங்களுக்குக் கொள்முதல் ஆணை வழங்க சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, இரண்டாம் கட்டமாகத் தமிழகம் முழுவதும், 685 கோடி ரூபாய் செலவில் கொள்முதலாகும் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் பணிகள், 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில், என்னால் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழகம் முழுவதிலுமுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 10 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டு, 13.12.2007 வரை 24 இலட்சத்து 48 ஆயிரத்து 698 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

அடுத்து, 2007-2008 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 750 கோடி ரூபாய் மூலம், மேலும் 30 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்காக, சர்வதேச அளவில் விலைப் புள்ளிகள் கோரப்பட்டு, வரப்பெற்ற 22 ஒப்பந்தப்புள்ளிகளும் 15.10.2007 அன்று முறைப்படி பத்திரிகையாளர்கள் முன்னிலையிலும், குழுவினர் முன்னிலையிலும் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாகத் திறக்கப்பட்டன. இந்த 22 நிறுவனங்களில், தொழில் மதிப்பீட்டில் ஒப்பந்தப் புள்ளி முழுவதும் நிறைவு செய்த 17 நிறுவனங்கள் அடுத்த கட்டமான விலைப்புள்ளிகளைத் திறக்கும் கட்டத்திற்குத் தகுதி பெற்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்யாத 5 நிறுவனங்கள் நிராகரிக்கப்பட்டன.

18.10.2007 அன்று என்னுடைய தலைமையில், சட்டமன்றப் பிரதிநிதிகள் குழு, தலைமைச் செயலகத்தில் கூடியது. 17 ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டதில்,

குறைந்தபட்ச விலைப்புள்ளியான ரூ.2197-ஐ அளித்த திருவாளர்கள் வீடியோகான் நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, தொலைக்காட்சிப் பெட்டிக்கான இறுதி விலையை நிர்ணயம் செய்தபின், மற்ற ஒப்பந்ததாரர்களிடம் இறுதி விலைப்புள்ளிக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க ஒப்புதல் பெற்று, எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து, எவ்வளவு கொள்முதல் செய்யலாம் என்பது குறித்து, 19.10.2007 அன்று கூட்டம் நடத்தி அதில் முடிவு செய்யலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, 19.10.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாண்டு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்காகப் பெறப்பட்ட விலைப் புள்ளிகள் கடந்த ஆண்டைவிட குறைவாக இருந்ததால் அரசுக்கு, ரூ.162.90 கோடி சேமிப்பு ஏற்பட்டது. அந்த சேமிப்பையும் பயன்படுத்தி மொத்தம், 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒன்று ரூபாய் 2197 விலையில் கொள்முதல் செய்திட ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

அந்த முடிவின்படி,

வீடியோகான் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
நிறுவனத்திடமிருந்து, 20 இலட்சம்,

கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட்
நிறுவனத்திடமிருந்து, 3 இலட்சத்து 25 ஆயிரம்,

டிக்சன் டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து,
3 இலட்சத்து 25 ஆயிரம்,

ஏர்விஷன் இந்தியா (பி) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து,
3 இலட்சத்து 25 ஆயிரம்,

எல்.பி. எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து,
1 இலட்சம்,

டிரென்ட் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து,
50 ஆயிரம்,

ஜீனஸ் எலக்ட்ரோடெக் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து,
50 ஆயிரம்,

பெல்டெக் இந்தியா (பி) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து, 50 ஆயிரம்,

பாரதி எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து, 50 ஆயிரம்,

எம்.ஐ.சி எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து, 50 ஆயிரம்,

மல்கோத்ரா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து, 50 ஆயிரம்,

ஈஸ்ட் இந்தியா பேக்கேஜிங் லிமிடெட் நிறுவனத் திடமிருந்து, 50 ஆயிரம்

-என்ற எண்ணிக்கையில் மொத்தம் 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, கொள்முதல் செய்யும் பணி நடைபெறுகிறது.

இத்தகைய தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலம், தமிழகத்தில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத எல்லாக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கும் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் தொலைக்காட்சிப் பெட்டிகளைச் சிலர், விற்று விடுவதாகப் புகார்கள் வந்ததின் பேரில், அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கக் காவல் துறை பணிக்கப்பட்டு, அவர்களும் அவ்வாறே தீவிர விசாரணையில் ஈடுபட்டனர். இதுகுறித்து, தமிழகம் முழுவதும் சோதனை நடத்தும்படி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு டி.ஜி.பி. திரு. ராஜேந்திரன், உத்தரவிட்டார்.

சென்னையில் காவல் ஆணையர் திரு. நாஞ்சில்குமரன் உத்தரவுப்படி, இணை ஆணையர்கள் திரு. ரவி, திரு. பாலசுப்ரமணியன் ஆகியோர் கொண்ட தனிப்படை போலீசார் வண்ணாரப்பேட்டை, எழும்பூர், சிந்தாதிரிப் பேட்டை ஆகிய இடங்களில் அதிரடி சோதனைகள் நடத்தினர்.

வண்ணாரப்பேட்டை, அசோக் நகர், செரியன் நகர் ஆகிய இடங்களில் 6 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 7

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், ஒரு ஆம்னி வேனும் பறிமுதல் செய்யப்பட்டன.

எழும்பூரைச் சேர்ந்த இருவரிடமிருந்து, 4 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், ஆட்டோ ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டன.

ரிச்சி தெருவில் சிலரிடமிருந்து, 9 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர், "பொதுமக்களிடமிருந்து அவர்களை ஏமாற்றி ஆசை காட்டி, இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை யாராவது வாங்கினால், அவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ், நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்கப்படுகிறது" என்று தெரிவித்திருக்கிறார்.

இலட்சக்கணக்கான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, ஏழைகளின் நலன் கருதி அரசு வாங்கி, இவ்வாறு குழுக்களை அமைத்து விநியோகிக்கும் நிலையில், ஒன்றிரண்டு இடங்களில் தவறுகள் ஏற்படுவதை எடுத்துக் காட்டி, திட்டமே சரியில்லை என்று எடுத்து வைக்கும் வாதம் சரியானதல்ல என்பதை எடுத்துக் கூறுவதற்காகத்தான், இத்தனை விளக்கங்களையும் இந்த மடல் வாயிலாகத் தெரிவித்திருக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

27-12-2007

3317. வலிவோடும் பொலிவோடும் வளர்ப்போம் கழகத்தை!

உடன்பிறப்பே,

நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் 13வது பொதுத் தேர்தலுக்கான உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு நிறைவு பெற்றுள்ள நிலையில் - முறைப்படி கழகத்தின் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கும் அறிவிக்கப்படுவது போன்று இந்தப் பொதுத் தேர்தலுக்கும் வருகிற பிப்ரவரி 6ஆம் நாள் முதல் கிளைக் கழகங்கள் தொடங்கி - பல கட்டங்களாகக் கழக அமைப்புக்களுக்கான நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும் என்பதற்கான அறிவிப்பு, தலைமைக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பு வருமாறு :-

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 13ஆவது பொதுத் தேர்தல் 2008 பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி முதல் தொடங்கி நடைபெறவுள்ளது. 1949ஆம் ஆண்டு தொடங்கி உள்கட்சி அமைப்புகள் முதல் தலைமைக் கழகம் வரை ஜனநாயக அடிப்படையில் முறையாக, இதுவரை 12 பொதுத் தேர்தல்களை நடத்தி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்த சிறப்புக்குரிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும். கழகச் சட்டத்திட்டங்களின்படி பல கட்டங்களாக கழக அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடைபெறும். முதல் கட்டமாக கிளைக் கழகங்களுக்கான நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பேரூர்க் கழகம் மற்றும் மாநகர வட்டக் கழகத் தேர்தல்கள், அதன் தொடர்ச்சியாக, ஒன்றிய - நகர - மாநகரப் பகுதிக் கழகத் தேர்தல்களும், பின்னர், மாநகரக் கழகத் தேர்தல்களும் நடைபெறும்.

தமிழ்நாடு தவிர்த்த பிற மாநிலக் கழகத் தேர்தல்களும் இதே காலகட்டத்தில் நடத்தப்படும். இவற்றைத் தொடர்ந்து, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழகப் பொதுக்குழு - செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் நடைபெற்ற பின்னர், புதிய பொதுக்குழு கூட்டப்பட்டு தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் கழகத் தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் நடைபெறும்."

இதுதான் ஜனநாயகப் பெரும் இயக்கமாம் நமது தி.மு. கழகத்தின் - கடந்த கால - நிகழ் கால - ஏன் வருங்கால நடைமுறையாக நிலை நிறுத்தப் பெற்ற ஆரோக்கியமான தேர்வு முறையாகும்.

இந்தியாவிலேயே - ஏன் உலகத்திலேயே ஒரு இயக்கம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, பழைய உறுப்பினர்களாக இருந்தால் அவர்கள் தங்கள் உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்துக் கொண்டு, முறைப்படி கீழேயிருந்து படிப்படியாக முதலில் ஒவ்வொரு கிராமத்திலிருந்து தொடங்கி, கிளைக் கழகத் தேர்தல்களை நடத்தி - அதன் பின்னர் கிராமப் பகுதிகளாக இருந்தால் ஒன்றியக் கழகத் தேர்தல்களையும் - நகரப் பகுதிகளாக இருந்தால் பகுதிக் கழகத் தேர்தல்களையும் நடத்தி - அதிலே வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏடுகளில் அறிவிக்கப்பட்டு, அதற்கடுத்து மாவட்டக் கழகத் தேர்தல்களை நடத்தி, அதிலே மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் ஆகியோரை தேர்ந்தெடுத்து, அந்தத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்படும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், நகரக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் வாக்களித்து கழகத்தின் தலைமைப் பொறுப்புகளான தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் முறையை மிக வெற்றிகரமாக நடத்தி வந்துள்ள இயக்கம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை எண்ணும்போது எவ்வளவு மகிழ்ச்சிகரமாக உள்ளது.

ஒரே குடும்பப் பாசத்தோடு இந்த இயக்கத்தை நடத்தி வரும் நாம் இதுவரை கழகத்தில் 12 பொதுத் தேர்தல்களை நடத்தி

முடித்து, தற்போது 13வது பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தப் பணிகளிலே ஈடுபட்டு கழக உறுப்பினர்களைச் சேர்க்கும், புதுப்பிக்கும் பணிகள் முடிவடைந்த நிலையில் அத்தனை உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கிடத் தொடங்கி, அந்தப் பணியும் எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் நிறைவுற்றுள்ளது.

மக்களாட்சியின் மாண்பினை உணர்த்தி, அதற்கு மக்களைத் தயார் செய்த மாபெரும் மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள்; ஜனநாயகத்தின் மீது கொண்டிருந்த பற்று, பாசத்தை, நம்பிக்கையை, எந்தக் காலகட்டத்திலும் குறைத்து மதிப்பிட்டவர் அல்ல! மக்கள் மத்தியிலும், நாட்டிலும், ஏட்டிலும் மட்டுமல்லாமல், அவரே முன்னின்று அருமைத் தம்பிமார்களை இணைத்துக் கொண்டு தொடங்கிய கழகத்தையும் ஜனநாயகக் கோட்பாட்டுக்குத் தலைவணங்கிடச் செய்தவர்.

ஏன்; அவரது பிரச்சினையொன்றுக்கே ஜனநாயகத்தைத் துணைக்கழைத்து; கட்சிக்குள்ளேயே; அந்தப் புனித நெறிக்கு நிலையான நினைவுத் தூண் அமைத்தவர்.

தி.மு.க. தோற்றுவிக்கப்பட்டு இரண்டொரு ஆண்டுகள் ஆனபோது, மதுரையில் கழக முக்கியஸ்தர்களிடம் ஒரு கருத்து வேறுபாடு - அது பற்றி விசாரித்து முடிவெடுக்கக் கழகப் பொதுக்குழு, மதுரையிலேயே கூடிற்று. திரு. ராஜமான் - திரு.அய்யாசாமி ஆகிய இருவருக்கிடையே கருத்து மோதல் - இதில் பொதுச் செயலாளர் அண்ணா மீதும் குறை கூறப்பட்டது. அந்த நிகழ்வில் அண்ணா எப்படி நடந்து கொண்டார் தெரியுமா?

"என் மீதே குறை கூறப்படுவதால்; என் தலைமையில் இந்தப் பொதுக் குழுவில் விசாரணை நடைபெறுவது சரியல்ல - அதனால் நான் பொதுக் குழு உறுப்பினர்களில் ஒருவராக அமர்ந்து விசாரணையைக் கவனிக்கிறேன். இன்று பொதுக்குழுவுக்கு திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பி தலைமை வகித்து இந்தப் பிரச்சினையை விசாரித்து முடிவு கூறட்டும்" என்றுரைத்து, நாற்காலியிலிருந்து இறங்கி பொதுக்குழு உறுப்பினர்களுடன் அமர்ந்து கொண்டார். அதன் பிறகு ஆசைத்தம்பி முன்னிலையில் விசாரணை நடைபெற்று, அண்ணா மீது எவ்வித அப்பழுக்கும் இல்லையென்றும் கருத்து வேறுபாடு தகராறு விளைத்த இரு

நண்பர்கள்தான் திருந்திட வேண்டுமென்றும் - ஆசைத் தம்பி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது. இப்படி நேர்மையான நீதி முறைக்கும், ஜனநாயக வழிக்கும் மதிப்பும் மரியாதையும் அளித்த அண்ணாவின் தலைமையில்தான் இந்தக் கழகத்தை வலிவும் பொலிவும் பெறச் செய்து இன்று கட்சி அமைப்புகளுக்கான 13ஆவது பொதுத் தேர்தலை நடத்த முனைந்திருக்கிறோம்.

கழகத்தின் 12வது பொதுத் தேர்தலின்போது தி.மு. கழக உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 75 இலட்சமாகும். தற்போது கடந்த சில மாதங்களாக முறையாக சேர்க்கப்பட்டு, மற்றும் புதுப்பிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு கோடியே 8 இலட்சம் ஆகும்.

மக்கள் தொகை கணக்கின்படி தமிழகத்தின் மக்கள் தொகை 7 கோடிக்கு மேல் என்கிறபோது, தமிழகத்திலே உள்ள மக்களில் சராசரியாக ஏழு பேரில் ஒருவர் நம்முடைய கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் என்பதை எண்ணும்போதும், கழகத்தின் உறுப்பினர் எண்ணிக்கை ஒரு கோடியைத் தாண்டியுள்ளது என்பதை எண்ணும்போதும் எத்துணை மகிழ்ச்சி நம் உள்ளத்தில் கிளர்ந்தெழுகிறது என்பதை வார்த்தைகளில் வடித்தெடுக்க முடியாது!

இந்தத் தேர்தல்களில் போட்டியிட விரும்புவோர் காழ்ப்புணர்வுகளைத் தவிர்த்து, கட்சிக்குள் இந்த ஐந்தாண்டு காலத்திற்கு தலைமையேற்று பணி புரிவதற்கான வாய்ப்பை யார் மேற்கொள்வது என்று முடிவெடுக்கின்ற செயல்; என்பதை மனதிலே கொண்டு, ஒரு கிளைக்கழகம் என்றால் அந்தக் கிளையிலே உள்ள உறுப்பினர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடிக் கலந்து பேசி, கடந்த முறை நான் செயலாளராகப் பணியாற்றியிருக்கிறேன், இந்த முறை நீ உன்னுடைய திறமையைக் காட்டு, நாங்களும் உனக்குத் துணையாக இருக்கிறோம் என்ற முறையில் ஒருவருக்கொருவர் தோழமை உணர்வோடு விட்டுக் கொடுத்து கழகக் கட்டுக்கோப்பு எள் முனையளவும் குலைந்திடாத வகையில் செயல்பட வேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும். தவிர்க்க முடியாமல் போட்டிகள் வர நேரிட்டால் கூட, அந்தத் தேர்தல் முடிகிற வரைதான் அந்த எண்ணம் இருக்க வேண்டுமே தவிர, தேர்தல் முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டால், பிறகு

அனைவரும் ஒரே கிளைக்கழகம் என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்படத் தொடங்கிட வேண்டும். வெற்றி பெற்றவர்களும், தாங்கள் மற்றவரைத் தோற்கடித்து விட்டோம், நாம் தான் இனி எல்லாம் என்று நினைத்து இறுமாப்புக் கொள்ளாமல், நமக்கு இந்த முறை வாய்ப்பு கிடைத்துள்ளது என்று மட்டுமே கருதி, அனைத்து உறுப்பினர்களையும் அரவணைத்து குறிப்பாக வெற்றி வாய்ப்பினை இழந்துவிட்டவரோடு அனுசரணையாகப் பழகி, கழகப் பணிகளை ஆற்றிட முன்வர வேண்டும்.

கழகத்தின் அடிமட்ட அமைப்பான கிளைக் கழகத் தேர்தல்களில் இளைஞர்கள், கழகத்தின் மூத்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்று, அவர்களது ஆதரவோடு பொறுப்புக்கு வந்திட முனைந்திட வேண்டும். இன்றைய அரசியல் வானில் நம்மைச் சுற்றிச் சுழலுகின்ற எத்தனையோ கருத்துக் கொண்ட கட்சிகள், குறிக்கோள்கள் கொண்ட இயக்கங்கள் - கொள்கை முழக்கும் தலைவர்கள் - அவர்களில் சிலர் தோழமை உணர்வுடன் - சிலர் தொட்டும் விட்டும் - சிலர் அன்றாடம் பயமுறுத்திக் கொண்டும் - சிலர் நம்முடன் வாழ்விலும் சாவிலும் - வருவது, எந்தச் சோதனையாயினும் விட்டுப் பிரியோம்; ஒட்டியே கிடப்போம் - எனத் தருகின்றார் உறுதியும் நம்பிக்கையும்!

உறவுகள், தோழமைகள், நட்புகள், சிநேகங்கள் - ஒன்றை எதிர்பார்த்தல்ல; அது வெறும் தேர்தல் உறவாகிவிடும். எனவே; கட்சியைக் கட்டுவதில் உறுதி காட்டுவோம் - ஒற்றுமை கூட்டுவோம் - உண்மையை நிலைநாட்டுவோம் - உடன்பிறப்பே; திருநெல்வேலியில் நீயும் நானும் கண்டு மகிழ்ந்தது; தேர்தல் வெற்றி விழாவா? அல்ல! அல்ல! அதை விட இனிக்கும் எழுச்சி விழா - இளைஞர்கள் எதிர்கால விடியலுக்கு வரவேற்புக் குரல் கொடுத்த வசந்த விழா.

இளைஞர் அணியின் செயலாளர் தம்பி மு.க.ஸ்டாலின் முன் நின்று நடத்திய கழகத்தின் இளைஞர் அணி மாநாட்டினை நெல்லைச் சீமையிலே இரண்டு நாட்கள் மிகவும் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம். அந்த விழாவே நம் திராவிடர் கலையை, நாகரிகத்தை விழாமல் தூக்கி நிறுத்தும் திருவிழா! காணும் இடங்களில் எல்லாம் இளைஞர்கள்தான் வெள்ளையாடை உடுத்தி, வெண்புறாக்களின் பவனி போல வந்த காட்சி நம்மைப் பெரிதும் பரவசமடையச் செய்துள்ளது.

அந்தக் கூட்டத்தைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத வேறு சில கட்சிக்காரர்கள் அதனை "ஷோ" என்றும், இளைஞர் அணி மாநாடு பிசுபிசுத்து விட்டது என்றும் தங்களுக்குத் தாங்களே கூறிக்கொண்டு, உள்ளத்திற்குள் புழுங்கிச் செத்தார்கள்.

இளைஞர் அணியின் வெற்றி மாநாட்டினைத் தொடர்ந்து கழகத்தின் மற்ற அணிகள் சார்பிலும் தொடர்ந்து மாநாடுகள் நடத்தப்படும் என்றும், இதன் அடுத்த கட்டமாக மகளிர் அணி சார்பில் மாநாட்டினை நடத்தலாம் என்றும் நானும், பொதுச் செயலாளரும், மகளிர் அணியைச் சார்ந்தவர்களும் கலந்து பேசி முடிவெடுத்திருக்கிறோம். மகளிர் அணியின் மாநாடு எப்போது, எந்த ஊரில் என்பதெல்லாம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன. இந்த விழாக்களை என்றென்றும் கொண்டாடிட நமது கலை, இலக்கிய, இன வரலாற்றை நிலை நிறுத்தவும் அவற்றைப் பீடுபெறச் செய்யவும் - அதனால் நாம் பெருமை கொள்ளவும் - சமூக உணர்வு, சமுதாய விடுதலை, சமத்துவ மனப்பான்மை - அரசியலில், சமுதாயத்தில், ஆதிக்கமற்ற மனிதநேய நாகரிகப் பண்பாடு - இவற்றையெல்லாம் வெற்றி அடையச் செய்யும் அருந்தொண்டு; அழியாத் தொண்டு - இவற்றை மட்டுமாவது நெஞ்சில் நிறுத்தி - பிஞ்சுப் பருவமுதல் பெரும் பணியாற்றித் திருநாட்டைக் காத்திட - போற்றிட - வெற்றிக் கொடி ஏற்றிட - வீரந்துள்ள அணி வகுக்கும் தீரர்கள்; ஆம், தி.மு. கழக உறுப்பினர்கள் இந்த ஆண்டுக் கணக்கின்படி ஒரு கோடியே எட்டு இலட்சம் பேர். 13வது கழகப் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு - முதலில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட கிளைகளுக்கான தேர்தல் நடைபெறவிருக்கின்றது. 12வது பொதுத் தேர்தலில் சுமார் 65 ஆயிரம் கிளைக் கழகங்கள்தான்! தற்போது அந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளது. ஒரு லட்சம் கிளைகள், ஒரு கோடிக்குமேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது தி.மு. கழகம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 8-5-1955 அன்று "காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி" என்ற தலைப்பில் "தம்பிக்கு" எழுதிய கடிதத்தில் ஓரிடத்தில் "கழகமோ, சாமான்யமானதல்ல! ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகள்!" என்று குறிப்பிடுகிறார். அண்ணா அப்படி எழுதி ஐம்பதாண்டுகள் ஓடி விட்டன. அப்போது ஆயிரம் கிளைக்கழகங்களுக்கே அண்ணா அத்தனை மகிழ்ச்சியோடு எழுதியிருக்கிறார் என்றால், அவர் கண்ட இந்தக்

கழகத்திற்கு இப்போது ஒரு இலட்சம் கிளைகள், ஒரு கோடி உறுப்பினர்கள் என்ற நிலையில் அண்ணா இருந்திருந்தால் எத்தனை மகிழ்ச்சி அடைந்திருப்பார் என்பதை எண்ணும்போது இன்பத் தேனாய் இனிக்கின்றது!

கழகத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்டுள்ள இந்த ஒரு கோடியே எட்டு இலட்சம் பேர்; தங்களுக்குள் கிளைக் கழக, பேரூர்க் கழக, ஊராட்சி ஒன்றியக் கழக, மாவட்டக் கழக, மாநகர் கழக, மாநிலக் கழக நிர்வாகிகளைத் தேர்வு செய்து கொள்ளும் திருப்பணி பிப்ரவரி திங்கள் 6-ந்தேதி முதல் ஆரம்பமாகிறது - ஆயத்த மாகுங்கள் அனைவரும், அண்ணா தந்த இந்தக் கழகத்தை வளர்க்க, வலிவூட்ட, பொலிவு தழைத்திடச் செய்ய!

அன்புள்ள,

மு.க.

9-1-2008

3318. மடலும் மருந்தின் துளிகளும்!

உடன்பிறப்பே,

எஞ்சியுள்ள ஆண்டுகள் என்று எண்ணிக் கணக்கிட்டு; பின்னர் எத்தனை திங்கள் மிச்சமிருக்கிறது என்று ஜாதகம் கணித்து ; இனி நாட்களின் கணக்குத்தான் என்று இதழ் விரிக்கும் சிரிப்புடன் திருப்தியை வெளியிட்டு - என்னோடு முடிந்து விடும் இந்த இயக்கத்தின் வரலாறு எனச் சந்துமுனையில் - சந்தை வெளியில்; காதோடு காதாகக் கருத்தறிவிப்போர்; தங்களின் மனத்தில் அலைபாயும் மனித நேயப் பண்பாட்டின்(?) தரத்தை வெளிப்படுத்துவோர் ஆவர்!

நான் கட்சி பொறுப்பேற்றுள்ள நிலையிலும் பொறுப்பு ஏற்காத நிலையிலும் - படைத்துள்ள இலக்கிய சாதனைகள், கட்சிப் பொறுப்பில் தொண்டனாக - தளகர்த்தர்களில் ஒருவனாக - தலைவர்களில் ஒருவனாக - பின்னர் தலைவனாகவே - அதன் பிறகு ஆட்சிப் பொறுப்பும் ஏற்றவனாக புரிந்துள்ள சாதனைகள், ஆற்றியுள்ள மக்கள் தொண்டு - சொன்னதைச் செய்து வாக்குறுதிகளை நிறைவேற்றி வரும் வாய்மை - தமிழ்ப் பண்பாடு காத்து, தகைசால் வரலாற்று நாயகர்களின் நினைவுகளைச் சின்னங்களாகப் பரப்பி - என்னை ஆளாக்கிய பெரியார் - வளர்த்து வழிப்படுத்திய பேரறிஞர் அண்ணா - இருவரும் எந்த மக்களுக்காகப் பணி தொடங்கினார்களோ - எந்தக் கொள்கைகளுக்காகத் தங்களை ஒப்படைத்துக் கொண்டார்களோ - அந்த நற்செயலை நாளும் நிறைவேற்றிக் கொண்டுதானிருக்கிறேன்; இந்த நிமிடம் வரையில்! என்றும் தொடரும் என்ற நம்பிக்கையோடு!

எதிரிக்கும் கை குலுக்கி,

ஏக வசனத்தில் ஏசிடுவதைக் கூட, எனைப் புகழும் போற்றிப் பா வாகக் கருதி;

ஏடாகூடமாக வசை முழக்குவோரும் அண்ணன் தம்பி பாசத்துக்குரியோரே எனப் பொறுமையும் அன்பும் பொழிந்திட அரவணைத்துக் கொண்டு தான்;

கல்லிலும் முள்ளிலும் உருட்டி எடுக்கப்பட்ட போதுகூட கனிவு காட்டப் பழகிக் கொண்டு அரசியலில் - சமுதாயத்தில் - கலைத்துறையில் பிஞ்சுப் பருவ முதல் இன்று பழுத்துவிட்ட நிலை வரையில் என் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

மாநில உரிமைகளுக்காக வாதிட -

தாய்மொழி காத்திடப் - போராட -

தன்மானக் கொள்கைகள்; தந்தை பெரியார், அறிஞர் அண்ணா நினைத்ததுபோல் செயலாக்கம் பெற்றிடப் -

பணி ஏற்றிட -

சாதி மத வேறுபாடற்ற சமத்துவபுரமாக;
சங்கம் வளர்த்த இத்தமிழகம் விளங்கிட -

அன்றாடம் சிந்திப்பவனாக -

செயல்படும் ஊழியனாக -

உன்னைப் போன்றோர் வாழ்த்து ஒன்றையே ஊதியமாகப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

வாழ்வின் பயன் என்பது நானும் என் குடும்பமும் மாத்திரம் வளம் பெற்று வாழ்வது அல்ல; ஒட்டு மொத்த சமுதாயத்தினரும் நல்வாழ்வு வாழ்வதுதான் என்ற தூய்மையான உண்மையை உள்ளத்தில் நேர்மையெனும் நீர் பாய்ச்சி - உறுதியெனும் உரமிட்டு - பண்பு எனும் பரம்படித்து, விவேகமெனும் விதை நட்டு - வாடாத பயிராக வளர்த்துக் கொண்டிருப்பவன்தான் நான்.

பயிர் வாடினால்; நான் வாடுவேன் -

இந்தப் பயிர் வளம் கொழித்திடும்போதெல்லாம்; வலிவு கூடும் எனக்கு! பொலிவு மிகுந்திடும்!

இதைப் புரிந்திருக்கும், என்னிடம் பகை காட்டும் நண்பர்கள் கூட, என்னைப் பற்றி வருந்துபவர்களைப் போல நடித்துக் கொண்டு என் வாழ்க்கையின் ஓரத்திலேயே தொடர்ந்து நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் என்னுடைய

ஒவ்வொரு அசைவிலும் அவர்களுக்குக் கவலை - அதைக் கண்காணிப்பதில் ஓர் ஆர்வம்.

இதோ பாருங்களேன்; அந்த ஆர்வத்தின் வெளிப்பாடாக "தினமணி", "எக்ஸ்பிரஸ்" ஏடுகளில் இன்று வெளிவந்துள்ள புகைப்படம்!

நான் கூட இந்தப் புகைப்படத்தைப் பார்த்து விட்டு மகிழ்ந்தேன்.

மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டதில் "தினமணி"யாருக்கு ஒரு திகைப்பு!

அதனால்தான் "புலப்படலையே" என்று புகைப்படத்துக்கு ஒரு தலைப்பு!

அந்தத் தலைப்புடன் தினமணியார் எழுதியுள்ள வாசகம் வருமாறு :-

"படிப்பதற்கு வெள்ளை கண்ணாடியையும், பேசும்போது கேமரா ப்ளாஷ் மற்றும் வீடியோ லைட் வெளிச்சத்தைத் தாங்கும் வகையில் கருப்பு கண்ணாடியையும் அணிகிறார் தமிழக முதல்வர் கருணாநிதி. சென்னையில் வெள்ளிக் கிழமை நடைபெற்ற டைகான் - 2008 விருது வழங்கும் விழாவில் படிப்பதற்காக வெள்ளைக் கண்ணாடியை அணிய முயல்கிறார்."

இவ்வாறு எழுதியதிலும் தவறில்லை - "புலப்படலையே" என்று தலைப்பு போட்டதையும் என்னைப் பொறுத்தவரையில் தவறாக நான் கருதவில்லை.

ஆனால் பொதுவாக உள்ள மக்கள் "பாவம்; பார்வையும் மங்கி விட்டது - இனி என்ன?" என்று நினைத்துக் கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டே வெளியிடப்பட்ட தலைப்பும் செய்தியும் என்கிறபோது;

"அந்தப் பொது மக்கள்; உடன்பிறப்புக்களாம் நீங்களும் சேர்ந்தே; இனி கருணாநிதிக்கு எதுவும் புலப்படாது என எண்ணி விடக் கூடாதல்லவா?"

அதற்காக இதோ இரண்டு பெருந்தலைவர்களின் படங்களைப் பார்த்திட வேண்டுகிறேன்.

இரு தலைவர்களுமே கண்ணாடி அணிந்த கண்ணியவான்கள்தான் - இவர்கள் படிக்கும் போது மட்டும் ஏற்கெனவே அணிந்திருக்கும் கண்ணாடி போதாதாம் - கைகளில் பூதக் கண்ணாடியொன்றைப் பிடித்துக் கொண்டு எழுத்துக்களின் மேல் வைத்துத்தான் படிப்பார்கள் - கண்ணருகே பத்திரிகையை வைத்துக் கொண்டு படிப்பார்கள் - அப்படிப் படிக்கும் நிகழ்வுகள் புகைப்படங்களாக ஏடுகளில் வந்துள்ளன.

ஆனால் - "புலப்படலையே" என்று தலைப்பு போடக் கூடிய "கெடு மதி" - தினமணியாரைப் போல யாருக்கும் அப்போது உதித்திடவில்லை!

உடன்பிறப்பே, இந்த நிகழ்வுகள் எதுவும் என் நெஞ்சில்; தெளிந்த குளத்தில் சிறு கல் விழுந்த சிற்றலையைக்கூடத் தோற்றுவிக்கவில்லை. உன் போன்ற உடன்பிறப்புகளின் சிந்தை நோகுமே என்பதற்காக அதனை அகற்றிட நான் இடும் மருந்தின் துளிகளே இம்மடலின் எழுத்துகள்!

அன்புள்ள,

மு.க.

20-1-2008

3319. நடுவண் அரசுக்கு நமது வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

மக்களின் கஷ்டங்களைப் போக்கத்தான் அரசு இருக்கிறது. அந்தக் கஷ்டங்களைப் பங்கிட்டுக் கொள்கின்ற மனப்பான்மையோடு தான் நாம் அரசு நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மக்களின் கஷ்டங்களில் பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அத்தியாவசிய பண்டங்களை நியாய விலைக்கடைகள் மூலமாக சலுகை விலையில் வழங்கிடுவதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

அதே எண்ணத்தோடு சாமான்ய மக்களுக்குப் பயன்படும் வகையில் கிலோ அரிசி இரண்டு ரூபாய் விலைக்கு இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த அரசு வழங்கிவருகிறது.

இதன் காரணமாக பாரதியின் கனவான தனி ஒருவனுக்கு உணவில்லை என்ற நிலைமை தமிழ் நாட்டில் இல்லை என்றாக்கியிருக்கிறோம்.

அதே மாதிரியாகத்தான் சாதாரண, நடுத்தர மக்களின் நலன் கருதி, சிமெண்ட் விலையினை குறைப்பதற்கு வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்காத நேரத்தில், நாம் அந்த முயற்சிகளை எடுத்து - மக்களின் கஷ்டங்களையும், கட்டுமானப் பணியாளர்களின் சிரமங்களையும் சிந்தித்துப் பார்த்து அவற்றைப் போக்கிடும் வகையில் மூட்டை ஒன்றுக்கு 200 ரூபாய் என்று சலுகை விலை நிர்ணயித்திருக்கின்றோம்.

வேலையில்லாதவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, 13-5-2006இல் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த 20 மாத காலத்தில் மட்டும்

2 இலட்சத்து 32 ஆயிரத்து 417 இளைஞர்கள் பணியிலே

அமர்த்தப் பட்டுள்ளார்கள்.

படித்து விட்டு வேலையில்லாமல் தமிழ் நாட்டில் இருக்கின்ற எண்ணற்ற இளைஞர்களின் துயரத்தில் பங்கு கொள்ளும் வகையில் - அவர்களுக்கு மாதந்தோறும் நிதி உதவி வழங்கும் திட்டத்தை அறிவித்து, இதுவரை

3 லட்சத்து 53 ஆயிரத்து 448 இளைஞர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

அந்த வகையில் இதுவரை 78 கோடி ரூபாய் இந்த அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

அதுபோலவே தமிழக அரசில் தொகுப்பூதியம் பெற்றுவந்த பல்லாயிரக்கணக்கான அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் கண்ணீரைத் துடைத்திடும் வகையில் அவர்களுக்கெல்லாம் கால முறை ஊதியம் வழங்கிடுவதென்று முடிவெடுத்து, இதுவரை

பள்ளிக் கல்வித் துறையில் 53 ஆயிரத்து 5 ஆசிரியர்கள்;

நகராட்சி நிர்வாகத் துறையில் பொறியாளர்கள், நகர அமைப்பு அலுவலர்கள், மருத்துவர்கள், துப்புரவுப் பணியாளர்கள் என 3 ஆயிரத்து 63 பணியாளர்கள்;

மின் வாரியத் துறையில் 6 ஆயிரம் பணியாளர்கள்;

மக்கள் நல்வாழ்வுத் துறையில் 1505 மருத்துவர்கள், 419 ஒப்பந்த மருந்தாளுநர்கள், 3636 செவிலியர்கள்;

பொதுப்பணித் துறையில் 1056 தினக் கூலிப் பணியாளர்கள்,

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் 258 தினக் கூலிப் பணியாளர்கள்

என மொத்தம் 68 ஆயிரத்து 942 தொகுப்பூதியப் பணியாளர்கள் இந்த ஆட்சியிலே இந்த 20 மாத காலத்தில், கால முறை ஊதியம் வழங்கப்பட்டு, பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு மக்கள் நலப்பணியில் இந்த அரசு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில், எங்களை மேலும் மேலும் ஊக்கப்படுத்தி வேலை வாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, அதனை வாய்மொழி

கோரிக்கையாக வைத்தால் ஒருவேளை பயன் கிடைக்காதோ என்ற சந்தேகத்தில் எதிர்க்கட்சிகளும், தோழமைக் கட்சிகளும் மறியல், ஆர்ப்பாட்டம், கண்டன அறிக்கைகள் மூலமாக உசுப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக இன்றைய தினம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விலைவாசி உயர்வைக் கண்டித்து தமிழகத்திலே மறியல் போராட்டத்தை நடத்துகின்றார்கள்.

சமையல் எண்ணெய், பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தற்போது நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகிக்கப்படவில்லை, இது வெறும் அறிவிப்போடு இருக்கிறது என்று ஆளுநர் உரை மீது கருத்து தெரிவித்த போது எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார்.

இந்தப் பொருட்கள் ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிறது என்பதை தமிழ்நாட்டு மக்களே அறிவார்கள்.

தி.மு.க. ஆட்சியில் விலைவாசி உயர்ந்து விட்டது என்று அ.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே, அவர்கள் ஆட்சியிலே என்ன விலைவாசி அதலபாதாளத்திலா இருந்தது?

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த 2001ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்களின் விலை எவ்வளவு, ஜெயலலிதா ஆட்சியில் இருந்த ஐந்தாண்டு காலத்தில் எந்த அளவிற்கு விலை உயர்ந்தது என்பதை இதோ இந்தப் புள்ளிவிவரம் கூறும்.

பொருட்கள்.	2001இல் விலை. (ஒரு கிலோ)	2006இல் விலை.	சதவிகித உயர்வு.
பொன்னி புழுங்கலரிசி	15.66	18.64	19 %
பொன்னி பச்சரிசி	16.21	19.32	19 %
கோதுமை	11.49	14.53	26 %
ஆட்டா	13.12	17.04	30 %
மைதா	12.54	16.37	31 %
ரவா	13.17	16.77	27 %
துவரம்பருப்பு	26.06	31.79	22 %

உளுத்தம்பருப்பு	32.64	48.09	47 %
கடலை பருப்பு	26.81	34.34	28 %
பாசிப்பருப்பு	30.28	42.33	40 %
கடலை எண்ணெய்	39.07	54.87	40 %
நல்லெண்ணெய்	40.78	59.61	46 %
தேங்காயெண்ணெய்	43.11	66.09	53 %
மிளகாய்	32.18	48.89	52 %
புளி	19.97	34.91	75 %

தற்போது நடைபெறுகின்ற ஆட்சியிலும், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலுமே விலைவாசிகள் ஓரளவு ஏறி உள்ளது என்பதை நான் மறுக்கவில்லையெனினும்; அதைக் கூட மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இங்கே பரவாயில்லை என்பதை பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

அரிசி

தமிழ்நாட்டில்	கிலோ 15 ரூபாய்
கேரளாவில்	கிலோ 18.50 ரூபாய்
மராட்டியத்தில்	கிலோ 16 ரூபாய்
டெல்லியில்	கிலோ 17 ரூபாய்.

துவரம் பருப்பு

தமிழ்நாட்டில்	கிலோ 38 ரூபாய்
கர்நாடகாவில்	கிலோ 42 ரூபாய்
கேரளாவில்	கிலோ 48 ரூபாய்
மராட்டியத்தில்	கிலோ 40 ரூபாய்
மேற்கு வங்கம்	கிலோ 40 ரூபாய்
டெல்லியில்	கிலோ 42 ரூபாய்.

கடலைப் பருப்பு

தமிழ்நாட்டில்	கிலோ 32 ரூ.
கேரளாவில்	கிலோ 44 ரூ.
மராட்டியத்தில்	கிலோ 37 ரூ.
மேற்கு வங்கத்தில்	கிலோ 35 ரூ.
டெல்லியில்	கிலோ 35 ரூ.

கடலை எண்ணெய்

தமிழ்நாட்டில்	கிலோ 70 ரூ.
கேரளாவில்	கிலோ 75 ரூ.
மராட்டியத்தில்	கிலோ 93 ரூ.
மேற்கு வங்கத்தில்	கிலோ 86 ரூ.
டெல்லியில்	கிலோ 121 ரூ.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் முக்கிய பொருட்களான துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில் ஆகியவற்றின் உற்பத்தி குறைந்ததாலும்,

சர்வதேசச் சந்தையில் விலை உயர்ந்ததாலும், இவற்றின் விலை கடந்த ஓராண்டு காலமாக நமது நாடு முழுதும் உயர்ந்துள்ளது.

இந்த விலை உயர்வினால் சாமானிய மக்கள் பாதிக்கப்படாமல் தடுக்கும் வகையிலும், இந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் இப்பொருட்களை நியாய விலைக்கடைகள் மூலமாக, சந்தை விலையை விடக் குறைவான விலையில் வழங்கும் சிறப்புத் திட்டத்தை நமது தமிழக அரசு தான் துவங்கி செயல்படுத்தி வருகிறது.

நாடெங்கிலும் இந்தப் பொருட்களின் விலையில் உயர்வு ஏற்பட்ட போதிலும், தமிழக அரசு மட்டும் தான் அரசு மானியம் அளித்து, இப்பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இத்திட்டம் தொடங்கப்பட்ட போது சந்தை விலைக்கும் அரசின் விற்பனை விலைக்கும் இருந்த வித்தியாசம் பின்வருமாறு:-

பொருட்கள்	வெளிச்சந்தை	அரசு நிர்ணயித்த

	விலை (14.4.2007 தேதி) ரூ.கிலோ ஒன்றுக்கு	விலை (14.4.2007 தேதி முதல்) ரூ.கிலோ ஒன்றுக்கு
துவரம் பருப்பு	40.00	34.00
உளுத்தம் பருப்பு	48.00	40.00
பாமாயில்	46.00/லிட்டர்	40/லிட்டர்

மேற்கூறியவாறு, சந்தை விலையைவிட குறைந்த விலையில் பொருட்கள் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டன. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு வெளிச் சந்தையில் துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு ஆகியவற்றின் விலை குறைந்ததையொட்டி அரசின் விற்பனை விலை மேலும் குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 13000 மெட்ரிக் டன் துவரம்பருப்பு, 8000 மெட்ரிக் டன் உளுத்தம்பருப்பு, ஒரு கோடியே 40 இலட்சம் லிட்டர் பாமாயில், 5500 மெட்ரிக் டன் மைதா, 1800 மெட்ரிக் டன் ரவை ஆகியன விற்பனை செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு இவ்வாறு குறைந்த விலையில் வழங்கப்பட்டதோடு மட்டுமன்றி இவ்வாறு நியாய விலைக் கடைகளில் இப்பொருட்கள் குறைந்த விலையில் கிடைப்பதன் மூலமாக வெளிச் சந்தையிலும் துவரம்பருப்பின் விலை ரூபாய் 40 லிருந்து ரூபாய் 38 ஆகவும், உளுத்தம்பருப்பின் விலை ரூபாய் 46 லிருந்து ரூபாய் 38 ஆகவும் குறைந்துள்ளது.

பாமாயில் விலை மட்டுமே, மலேசியா போன்ற நாடுகளில் இருப்பு குறைந்ததன் காரணமாகவும், பயோடீசலுக்காக எண்ணெய்கள் பயன்படுத்தப் படுவதாலும், சர்வதேச சந்தையில் விலை அதிகரித்து, நமது நாட்டிலும் சிறிது விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு விலைவாசி உயர்விலிருந்து பொதுமக்களைக் காக்க தமிழக அரசு எடுத்துள்ள இத்தகைய நடவடிக்கைகள் பயனளித்துள்ளன.

அதன் தொடர்ச்சியாகத்தான் ஆளுநர் உரை விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது அத்தியாவசியப் பொருட்களின் விலையை தொடர்ந்து கட்டுக்குள் வைக்கவும், சர்வதேச அளவில் பாமாயில் எண்ணெய் விலை உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டும்,

தற்போது பிப்ரவரி, 2008 முதல் மேலும் ஆறு மாத காலத்திற்கு சிறப்பு பொதுவிநியோகத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்தின் கீழ் துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு, ரவை மற்றும் மைதா ஆகியவை குறைந்த விலையில் வழங்கப்படும் என்றும், இதனால், வெளிச்சந்தை விலை ஓரளவு கட்டுப்படுத்தப்படுவதோடு, ஏழை, எளிய மக்கள் நியாய விலைக்கடைகள் மூலமாக இந்த அத்தியாவசியப் பொருட்களை தொடர்ந்து பெற இயலும் என்றும் அறிவித்தேன்.

அனைத்திந்திய அளவிலே கூட மத்திய அரசு; தமிழக அரசு கடைப்பிடிக்கும் இந்த முறையை அனைத்து மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்து வதற்கான ஏற்பாட்டினைச் செய்தால் அது நல்ல பலனை விளைவிக்கும் என்பது என் நம்பிக்கையாகும். மற்ற மாநிலங்களிலே விலைகள் குறையும்போது, தமிழகத்தில் மேலும் விலை குறையவும் அது உதவிடும். இந்த நமது கருத்தை வேண்டுகோளாகவே எண்ணி நடுவண் அரசு செயல்படுத்திட முன்வரலாம்.

அன்புள்ள,

மு.க.

6-2-2008

3320. குறைகுடம் கூத்தாடும் என்பது பழமொழி!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா அன்றாடம் அறிக்கை விடத் தவறுவதில்லை என்ற நிலையில் தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, மத்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும், தி.மு. கழக ஆட்சியை மாற்ற வேண்டும், மீண்டும் தேர்தலை நடத்தவேண்டும், அவர் மீண்டும் எப்படியாவது பதவியிலே வந்து அமர வேண்டும் என்பதாக வந்து கொண்டுள்ளதே; ஆனால் உண்மையில் அறிக்கையிலே குறிப்பிடுவதைப் போல சட்டம் ஒழுங்கு அமைதி தமிழகத்திலே கெட்டுவிட்டதா? நாடு; காடாகி விட்டதா?

நாம் பதவி ஏற்ற நாளிலிருந்து, மாநிலத்தை அமைதி தழுவும் மாநிலமாக ஆக்கிடும் நோக்குடன், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு, அமைதி மற்றும் சமூக நல்லிணக்கத்தை நிலை நாட்டத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம்.

இந்த குறிக்கோளுடன், நமது அரசு காவல்துறையை திறமையானதாகவும் மற்றும் ஒரு நவீன துறையாகவும், பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்திட மிகுந்த பொறுப்புடன் செயல்படுவதில் நாட்டிலேயே முன் மாதிரியான ஒரு துறையாகவும் மாற்றிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நம்மைப் பொறுத்தவரையிலும் எடுத்து வருகின்றோம். அதற்கெனவே மூன்று போலீஸ் கமிஷன் களை நியமித்து அவற்றின் பரிந்துரைகளையும் நிறைவேற்றி வருகிறோம். இத்தகைய ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளைத்

தொடர்ந்து குற்ற நிகழ்வுகளிலும் மற்றும் சொத்து சம்மந்தமான வழக்குகளிலும் ஈடுபட்ட குற்றவாளிகள்;

2006-ம் வருடத்தில் 1,220 பேரும்,

2007-ம் வருடத்தில் 1,550 பேரும் தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர்.

இதன் விளைவாக சொத்து சம்மந்தமான குற்ற நிகழ்வுகள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், பிற குற்றங்கள் முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்துள்ளது.

பல ஆண்டுகளாக கண்டுபிடிக்க முடியாமலிருந்த குளித்தலை மீனாட்சி கொலை வழக்கு,

கிரில் மற்றும் பீரோ புல்லிங் கொள்ளை வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

காவல்துறையினர் குற்றவாளிகள் மீது மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளினால் 2006-ம் ஆண்டு நடந்த வழக்குகளில் 89 சதவிகித வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 81 சதவிகித சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதேபோல் 2007-ம் ஆண்டு 87 சதவிகித வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 86 சதவிகித சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், காவல்துறையினர் மதுவிலக்கு சம்மந்தமான வழக்குகள், ரேஷன் அரிசி கடத்துதல், திருட்டு மணல் கடத்துதல் மற்றும் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டு விற்பனை போன்ற சமுதாய குற்றங்கள் புரிவோர் மீது தக்க நடவடிக்கை எடுத்து, அக்குற்றங்களை அறவே ஒழிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். ஆனால் எதிர் தரப்பினர் சிலரும், ஏடுகள் சிலவும், கடத்தல், களவு, கற்பழிப்பு என்று செய்திகளை வெளியிடுகிறவர்களும்; அக்குற்றங்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு, கடத்தப்பட்ட பொருள்கள் மீட்கப் பட்டதை அரசியல் காரணங்களுக்காக மறைத்து விடுவதை யாரும் மறந்து விடக் கூடாது.

மேலும், காவல்துறையினர் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து, தமிழகத்தில் தொடர்ந்து சாதி, சமய, பூசல்கள் ஏதுமின்றி அமைதி காத்து வருகின்றனர். இதுபோன்ற நடவடிக்கைகளால், சாதிப் பூசல்கள் ஏற்பட வாய்ப்புள்ள கண்டதேவி, சாக்கோட்டை தேர் திருவிழாக்கள், மேலவளவு முருகேசன் நினைவு நாள், தாமிரபரணி நினைவு நாள் மற்றும் "தேவர் குரு பூஜை" போன்ற நிகழ்ச்சிகள் அமைதியாக நடந்து முடிந்தன.

2007- ம் ஆண்டு "தேவர் ஜெயந்தி" நூற்றாண்டு விழாவின் போது தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் எம்.கிருஷ்ணசாமி மீது நடந்த தாக்குதல், முதுகுளத்தூர் ஆசிரியர் கொலை ஆகியவற்றை தொடர்ந்து கலவரம் பரவாத சூழ்நிலைகளை காவல்துறையினர் உருவாக்கி அமைதியை காத்தனர்.

மேலும், மாநிலத்தில் தொழிலாளர் பிரச்சினைகள் உடனுக்குடன் கவனத்திற்கொள்ளப்பட்டு அமளி ஏதுமின்றி பார்த்துக் கொண்டனர். அரசியல் கட்சிகள், பல்வேறு சாதி, சமுதாய இயக்கங்கள், மாநிலத்தை பாதிக்கும் நதி நீர் பிரச்சினைகள், விலைவாசி உயர்வு, சேலம் இரயில்வே கோட்டம் அமைத்தல், தூத்துக்குடி மாவட்டத்தில் டைட்டானியம் தொழிற்சாலை அமைத்தல் போன்ற பிரச்சினைகளில் தகுந்த முன்நடவடிக்கைகள் மேற்கொண்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டினர்.

இதேபோன்று, புதிய பென்சன் திட்டத்தை எதிர்த்து மத்திய, மாநில அரசு ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தத்தின் போதும்,

சேதுசமுத்திரத் திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி மாநிலம் முழுவதும் நடந்த உண்ணா விரதத்தின் போதும்,

திருவரங்கத்தில் பெரியார் சிலை சேதப்படுத்தியதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையின்போதும்,

விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் மற்றும், பிள்ளையார் சிலை கரைக்கும் நிகழ்ச்சிகளிலும்,

பாபர் மசூதி மற்றும் கோயம்புத்தூர் தொடர் குண்டு வெடிப்பு நினைவு தினங்களின் போதும்,

பல்வேறு முஸ்லீம் அமைப்புகள் இடஒதுக்கீடு கோரி நடத்திய போராட்டங்களின் போதும்,

காவல் துறையினர் திறமையாகச் செயல்பட்டு சமய நல்லிணக்கத்தை பாதுகாத்தனர்.

தீவிரவாதங்கள் ஒடுக்கப்பட்டால் தான் நாடு அமைதியான பாதைக்குச் செல்லும் என்ற உண்மையை உதாசீனப்படுத்தாமல்;

அதனால்தான் மகாராஷ்டிரா, ஆந்திரா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்து மாநில காவல்துறையினர் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது மாநிலத்தில் எந்தவிதமான தீவிரவாதச் செயல்களும் நடக்காமல் பாதுகாத்தனர்.

இந்து முன்னணியைச் சேர்ந்த தென்காசி குமார் பாண்டியன் கொலை சம்பவத்தின்போது காவல் துறையினர் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு அந்நிகழ்ச்சிகளின் பின்விளைவுகள் மாநிலத்தில் ஏதும் நடைபெறாமல் பார்த்துக் கொண்டனர்.

அமைதிப் பேச்சு இடையில் அறுந்து போய் - இலங்கையில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையையும்,

நாட்டில் தலைகாட்ட முனையும் மதவாத தீவிரவாதிகளின் நடவடிக்கைகளையும்,

அண்டை மாநிலங்கள் உட்பட பல மாநிலங்களில் வளர்ந்து வரும் தீவிரவாத செயல்களையும் கருத்தில் கொண்டு,

அச்செயல்கள் தமிழகத்தில் நுழையாமல் பார்த்துக் கொள்ளத் தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் காவல் துறையினர் எடுத்து வருகின்றனர்.

காவல் துறையினர் இவைபோன்ற தீவிரவாத அமைப்புக்களின் நடவடிக்கைகளையும், தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் நடவடிக்கைகளையும் கண்காணித்தும்,

மாநிலம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியும், மாநில எல்லைகளில் சோதனைச் சாவடிகளை அமைத்தும்,

கடலோர மாவட்டங்களில் சோதனைகளைத் தீவிரப்படுத்தியும்,

காட்டுப்பகுதிகளில் அடிக்கடி தீவிர சோதனைகளை நடத்தியும், தீய சக்திகள் தமிழகத்தில் வேரூன்றா வண்ணம் பார்த்து வருகின்றனர்.

இதுபோன்ற நடவடிக்கைகளின் விளைவாக, விடுதலைப் புலிகளுக்கு வெடிமருந்துகள், சிறிய இரும்பு குண்டுகள், அலுமினியக் கட்டிகள், அத்தியாவசியப் பொருட்கள், நவீனத் தொலை தொடர்பு சாதனங்கள், படகுகள் போன்றவற்றைக் கடத்துதல் போன்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் கடத்தலுக்கு உதவியவர்கள் 84 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது 13 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவர்களுள் 17 இலங்கை தமிழர்கள் உட்பட 40 பேர், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

அவர்கள் கடத்த முற்பட்ட வெடிமருந்துகள், ஏழரை டன் இரும்பு குண்டுகள், 4 டன் அலுமினிய கட்டிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் கடத்தலில் சம்பந்தப்பட்ட பல்வேறு வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

அண்மையில் இலங்கைக்கு வெடிமருந்து பொருட்களைக் கடத்த முயன்ற 9 பேர் மதுரையிலும், இதேபோன்று தமிழகத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பொருட்களை வாங்கி அனுப்பவும், உளவு சேகரிக்கவும் அனுப்பப்பட்ட விடுதலைப்புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்த தம்பித்துரை பரமேஸ்வரன் மற்றும் அவரது சகாக்கள் 7 பேரையும் காவல்துறையினர் திறமையாக செயல்பட்டு சென்னையில் கைது செய்தும், அவர்கள் பயன்படுத்திய டவேரா காரையும், பணம் ரூ.4,78,290-யும் கைப்பற்றினர்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இதுபோன்ற கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை காவல்துறையினர், திறமையாகச் செயல்பட்டு தடுத்து வருவதுடன், அகதிகள் போர்வையில் தீவிரவாதிகள் எவரும் தமிழகத்தில் நுழையாமல் கண்காணித்தும்

வருகின்றனர். மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் முகாம்களை அடிக்கடி சோதனை செய்து, தீவிரவாதிகள் எவரும் முகாம்களில் தங்கா வண்ணம் பார்த்து வருகின்றனர்.

மாநில அரசின் வேண்டுகோளின்படி, மத்திய அரசு அனுப்பிய இரண்டு கடற்படை கப்பல்கள் மற்றும் படகுகள் ஆகியவற்றின் உதவியுடன், கடலோர காவல் துறையினர், கடலோர காவல் படை மற்றும் இந்திய கடற்படை ஆகியோருடன் ஒருங்கிணைந்து இந்திய கடற்பகுதியில் தீவிர ரோந்து செய்து வருவதன் மூலம் இலங்கைக்கு பொருட்கள் கடத்துவதும், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், தீவிரவாதிகள் தமிழகத்திற்குள் நுழைவதும் தடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தீவிரவாதிகள் தமிழகத்திற்குள் நுழையா வண்ணம் பார்த்து வருவதோடு, அந்தத்தீவிரவாதிகள் நடவடிக்கைகளையும் கண்காணித்து அவர்களின் நடவடிக்கைகள் மாநிலத்தில் வேரூன்றாவண்ணம் காவல் துறையினர், பார்த்து வருகின்றனர்.

தேனி மாவட்டம் முருகமலைக் காட்டுப் பகுதியில் தீவிரவாதிகள் ஆயுத பயிற்சி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது, அந்த முயற்சியில் ஈடுபட்ட - 15 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த சுந்தரமூர்த்தி என்பவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து ஒரிசா மாநிலத்தில் கொள்ளையடிக்கப்பட்ட சில துப்பாக்கிகளையும் காவல் துறையினர் கைப்பற்றினர்.

ஆந்திர மாநிலத்தில் மாவோயிஸ்ட் அமைப்பில் முக்கிய பொறுப்பிலிருந்த பாண்டுரங்க ரெட்டி என்பவரின் மனைவி மாதவி என்பவரை சென்னை மீஞ்சூர் அருகில் கைது செய்தனர்.

தேனி மாவட்டம் வருசநாடு காட்டுப் பகுதியில் நடமாடி வந்த 1978 ஆம் ஆண்டிலிருந்து தலைமறைவாக இருந்த மாவோயிஸ்ட் மகாலிங்கம் மற்றும் நான்கு பேர்களை காவல் துறையினர் அண்மையில் துப்பாக்கி பிரயோகம் நடத்தி கைது செய்தனர்.

மாநிலத்தில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள 116 இலங்கை அகதிகள் முகாம்களில் 72,700 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நடவடிக்கைகளையும்,

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள 49 இலங்கை தமிழர்களின் நடவடிக்கைகளையும் இடைவிடாமல் கண் காணித்து, அவர்கள் சட்ட விரோத செயல்களில் ஈடுபடாமல் காவல் துறையினர் பார்த்து வருகின்றனர்.

தமிழக அரசு அளித்து வரும் சீரிய அறிவுரைகள் மற்றும் வசதிகளுடன் மாநில காவல் துறையினர் தங்களது நுண்ணறிவு பிரிவினரின் உதவியுடன் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டும் சமுக விரோதிகள், பிரச்சினைகளில் ஈடுபடுவோர், சட்டத்தை மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கைகளை எடுத்தும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அமைதி காத்து வருகின்றனர்.

காவல் துறையினருக்கு தக்க ஆலோசனைகள் அவ்வப்போது வழங்கப்பட்டு அவர்கள் செயல்களில் குறுக்கீடு ஏதுமில்லாமல் சுதந்திரமாக செயல்பட அனுமதித்து, காவல் துறையினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் மாநிலத்தில் அமைதியான சூழ்நிலை தொடர்ந்து நிலவி வருகிறது.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தலைவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு இருந்ததாகவும், இப்போதுதான் பாதுகாப்பற்ற நிலை இருப்பதாகவும் சட்டப் பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் எல்லாம் குற்றஞ்சாட்டினார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் நடந்தது எல்லாம் நாட்டு மக்களுக்கு மறந்தாபோய் விட்டது?

தமிழகத்தின் முதல் குடிமகனாக இருந்த ஆளுநர் சென்னா ரெட்டிக்கு திண்டிவனம் அருகே எப்படிப்பட்ட பாதுகாப்பு தரப்பட்டது?

இந்தியத் தலைமை தேர்தல் ஆணையராக இருந்த டி.என். சேஷன் அவர்களுக்கு விமான நிலையத்திலும் அவர் தங்கியிருந்த விடுதியிலும் எப்படிப்பட்ட பாதுகாப்பு தரப்பட்டது?

தற்போது அம்மையாரின் நெருங்கிய நண்பராக இருக்கும் சுப்பிரமணியம் சுவாமி அவர்களுக்கு உயர் நீதி மன்றத்திலேயே எத்தகைய பாதுகாப்பு தரப்பட்டது?

மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் திருச்சி விமான நிலையத்திலிருந்து காரைக்குடி சென்று கொண்டிருந்த வழியில் அவரது காரை மறித்து தாக்கப்பட்டது உண்டா இல்லையா?

எம்.ஜி.ஆர். நினைவு இல்லப் பொறுப்பாளராக பணியாற்றி வந்த முத்து மீது கஞ்சா வைத்திருந்ததாக வழக்கு போட்டது நினைவில்லையா?

முன்னாள் ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரி ஒருவர் மீது ஆசிட் பாட்டில் வீசி, அவரது முகத்தை நாசம் செய்தது எந்த ஆட்சியிலே?

எம்.ஜி.ஆர். மன்ற மாநிலத் தலைவராக இருந்த எம்.ஜி. சுகுமார், மற்றும் சிலர் ராமனாதபுரம் மாவட்டத்தில் தாக்கப்பட்டது அ.தி.மு.க. ஆட்சியிலே தானே?

முன்னாள் அமைச்சர் எஸ்.ஆர். ராதா தாக்கப்பட்டது எந்த ஆட்சிக் காலத்திலே?

அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த அனந்தகிருஷ்ணன் வீட்டில் புகுந்து அவரைத் தாக்கியது அ.தி.மு.க. ஆட்சியிலே தானே?

மூத்த வழக்கறிஞர் விஜயன் வழக்கிற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் கோடம் பாக்கத்தில் தாக்கப்பட்ட சம்பவம் மறந்து விட்டதா?

அதுபோலவே தி.மு.கழக மூத்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம் தாக்கப்பட்டது எந்த ஆட்சியிலே?

வளர்ப்பு மகன் சுதாகரன் மீதே ஹெராயின் வைத்திருந்ததாக வழக்கு போட்டது எப்போது?

அ.தி.மு.க. ஆட்சியிலே ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த தூத்துக்குடி ரமேஷ், மதுராந்தகம் சொக்கலிங்கம், உப்பிலியாபுரம் ரவிச்சந்திரன் ஆகியோர் தாக்கப்பட்டதையெல்லாம் மறந்துவிட்டார்களா? கும்முடிப்பூண்டி தொகுதியிலே அவர்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்த சுதர்சனம் கொல்லப்பட்டது அவர்கள் ஆட்சிக் காலத்திலே தானே?

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பீட்டர் அல்போன்ஸ் சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு வெளியிலேயே தாக்கப்பட்டது, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தானே?

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவிகள் மூன்று பேர் சென்ற பேருந்துக்கு தீ வைத்து அவர்கள் உயிரோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டதே, அது எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாலே?

இவ்வளவு ஏன்? என்னை நள்ளிரவிலே வீடு புகுந்து தாக்கி கைது செய்ததற்கு என்ன பெயர்? நான் மட்டுமா? அப்போது மத்திய அமைச்சர்களாக இருந்த தம்பி முரசொலி மாறன், தம்பி டி.ஆர். பாலு., மற்றும் தம்பி மு.க. ஸ்டாலின் ஆகியோரெல்லாம் தாக்கப்பட்டது எப்போது? ஐ.ஜி. அலுவலக வாசலிலேயே ஊர்வலமாக வந்த தொழிற்சங்கத் தலைவர் பெருமாளைத் தாக்கி அவர் சாவதற்கே காரணமாக இருந்த ஆட்சி எது? அந்த ஊர்வலத்திலே வந்த பத்திரிகையாளர்கள் எல்லாம் எந்த அளவிற்கு தாக்கப்பட்டார்கள்? எத்தனை பத்திரிகையாளர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன?

நக்கீரன் கோபால் மீது எத்தனை பொய் வழக்குகள்? எத்தனை விசாரணைகள்? எவ்வளவு அடக்குமுறைகள்? மறந்தா போய் விட்டது?

பொதுமக்களிடையே இன்று சட்டம், ஒழுங்கு குறித்து எந்தவிதமான பயமோ அச்சுறுத்தலோ இல்லை. ஆனால் சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டது என்று அன்றாடம் குரல் எழுப்புபவர்கள் தான் அதைக் கெடுப்பதற்காக எத்தனையோ முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். வெளியே கெடுக்க முடியாத நிலையில் பேரவைக்கும் வருகை தந்து அங்கேயும் முயற்சி செய்து பார்த்து, அதிலும் தோல்வியடைந்து, தொங்கிய முகத்துடன் திரும்பிச் செல்கிறார்கள்!

என் செய்வது; பூமாலையின் சிறப்பு தெரியாமல்; பிய்த்து எறியத் துணிகின்றனர்!

சட்டசபையில் பேசும் நாகரிகம் கற்றிடாமல்; குட்டிச் சுவரோரம் நின்று வெட்டிக் கதை கூறுவதே; தாம் கற்றறிந்த விதம் என்கின்றனர்! அதனால் தான்;

"அவைஅறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்."

"அவையின் தன்மையறியாமல் சொற்களைப் பயன்படுத்து கிறவர்களுக்கு அந்தச் சொற்களின் வகையும் தெரியாது, பேசும் திறமையும் கிடையாது" என்று இத்தகையோரைத்தான் திருக்குறள் சுட்டிக்காட்டி இடித்துரைக்கிறது! அதனால்தான் குக்கிராமங்களில் கூடப் பழமொழி சொல்வார்கள்; குறைகுடம் கூத்தாடுமென்று!

அன்புள்ள,

மு.க.

7-2-2008

3321. திரை விலகியதும் தெளிவாகும் புள்ளிவிவரம்!

உடன்பிறப்பே,

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்று, அதற்கு முதலமைச்சர் என்ற முறையில் நான் பதிலளிக்கும் நாளன்று எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஜெயலலிதா அன்று ஒரு நாள் மட்டும் பேரவைக்கு வருகை தந்து, விவாதத்தில் தங்கள் கட்சியின் சார்பிலே பேசுவதாகத் தெரிவித்து, அப்போது தேவையில்லாமல் அவை முன்னவர் பேராசிரியர் அவர்களையும், பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகனையும், தலைமைச் செயலாளரையும் தரக்குறைவான முறையில் விமர்சித்து, அதையொட்டி அவையிலே கலவரத்தை ஏற்படுத்துகின்ற வகையிலே பேசிட, அதற்கு என்ன பதில் வருகிறது என்பதைக் கூட கேட்கத் தயாராக இல்லாமல், தானே பேசி விட்டு, எந்தவிதமான காரணமும் இல்லாமல் தானே வெளி நடப்புச் செய்வதாகக் கூறிவிட்டு அவரும், அவரது கட்சியினரும் வெளி நடப்புச் செய்தார்கள்.

இந்தப் பிரச்சினை காரணமாக அவையின் நேரம் மிகுதியாக எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டதால், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு மற்றவர் பேசியதற்கெல்லாம் முதலமைச்சர் என்ற முறையில் என்னால் பதிலளிக்க நேரமில்லாமல் போய் விட்டது. எனவே அந்த விவாதத்திலே கலந்து கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், தோழமைக் கட்சி நண்பர்களும் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகளுக்கும் நான் பதில் கூறுவதற்காக குறித்து வைத்திருந்த கருத்துக்களை கடிதங்கள் வாயிலாக அளித்து வருகின்றேன்.

குறிப்பாக அண்மையில் நமது மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் ரூபாய் 1,510 கோடி அளவிற்கு சேதம்

ஏற்பட்டுள்ள நிலையில், மாநில அரசு ரூபாய் 200 கோடியை மட்டுமே வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கியுள்ளதாக அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் அவையில் நடந்த விவாதத்தின் போது குறிப்பிட்டார். அதற்கு அரசு சார்பில் என்ன பதில் அளிக்கப்படுகிறது என்பதைக் கூடத் தெரிந்துகொள்ள அக்கறையின்றி, அவர் தலைவியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வெளி நடப்புச் செய்து விட்டார். எனினும் அவர் எழுப்பிய கேள்விக்கு அரசு சார்பில் நான் அளிக்கும் விளக்கம் இதோ :-

வெள்ளச் சேதங்களை சரி செய்வதற்கான பணிகள் இரு வகைப்படும். ஒன்று - ஏற்பட்டுள்ள சேதங்களை தற்காலிகமாக சீரமைத்தல் மற்றும் வெள்ள நிவாரணம் வழங்குதல் ஆகிய உடனடிப் பணிகள். மற்றொன்று - பாதிக்கப்பட்ட இடங்களை நிரந்தரமாக சீரமைப்பதற்கான பணிகள்.

இவற்றில், நிரந்தர சீரமைப்புப் பணிகள் மாநில அரசின் திட்டப்பணிகள் மூலமாக அரசின் சொந்த நிதியிலிருந்து படிப்படியாக மேற்கொள்ளப்படும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடிப் பணிகளை மேற்கொள்ளவும், நிவாரணம் அளிக்கவும், பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (CRF) செலவுகள் மேற்கொள்ளப்படும்.

இதிலிருந்து பெறப்படும் நிதியானது, உடனடிப் பணிகளுக்கும், நிவாரணத்திற்கும் போதாதிருப்பின், மாநில அரசின் கோரிக்கையின் அடிப்படையில் தேசியப் பேரிடர் அவசர உதவி நிதியிலிருந்து (NCCF) மத்திய அரசு மேலும் நிதி உதவி அளிக்கும்.

2007-2008ஆம் ஆண்டிற்கு தமிழ்நாட்டின் மாநில இயற்கைப் பேரிடர் நிவாரண நிதிக்கான ஒதுக்கீடு ரூபாய் 231 கோடியாகும். இதிலிருந்து உடனடிப் பணிகளுக்காக ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உடனடி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது போக, தேசிய பேரிடர் அவசர உதவி நிதியிலிருந்து மத்திய அரசு நிதியுதவி அளிக்க வேண்டும் என்று மாநில அரசு கோரியுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் 2002, 2003, 2004 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சிக்காகவும், 2004, 2005 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்காகவும், 2005ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவிற்காகவும், கடந்த அரசும் மேற்கூறியவாறே மாநில இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து செலவழித்தது போக கூடுதல் நிதியை மத்திய அரசிடம் கோரி, தேசிய பேரிடர் அவசர உதவி நிதியிலிருந்து உதவி பெற்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறிருக்க, தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்பிற்கு மாநில அரசு தேவையான நிதியை ஒதுக்கவில்லை என்றும் மாநில அரசின் மற்ற திட்டங்களுக்கான நிதியை இப்பணிகளுக்கு பயன்படுத்தினால் மட்டுமே இப்பணிகளை மேற்கொள்ள இயலும் என்றும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் தெரிவித்த கருத்து முற்றிலும் தவறானதாகும்.

2007 டிசம்பர் மாதம் இறுதியில் பெய்த கன மழையின் காரணமாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டது. மைய அரசின் உதவிக்காக காத்திராமல் உடனடி நிவாரணப் பணிகளுக்காக 200 கோடி ரூபாய் 24.12.2007 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஊராட்சி மன்றத் தலைவர், உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று கிராம வாரியாக அமைக்கப்பட்டு பயிர்கள் சேதம் மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த மதிப்பீட்டின்படி, 1,40,617 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பாசன வசதியுள்ள பயிர்கள் மற்றும் 17,546 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த மானாவாரிப் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் விரைவில் நிவாரணம் வழங்கி முடித்திட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

1510 கோடி ரூபாய் பாதிப்பு என்று கூறிவிட்டு,

200 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்களே என்று பேரவையில் சிலர் கேட்டார்கள். முதற் கட்ட நிதி உதவி தான்; அதுவும் உடனடி செலவிற்காக வழங்கப்பட்டது. எந்த ஆட்சிக் காலத்திலும் இப்படித்தான்.

2004 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் சுனாமி பேரழிவிற்காக 9 ஆயிரத்து 800 கோடி ரூபாய் என்று மதிப்பிட்டு மாநில அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கோரியது. ஆனால் மாநில அரசு மொத்தமாகச் செலவழித்த தொகை 1 ஆயிரத்து 46 கோடி ரூபாய் தான்.

2005 ஆம் ஆண்டு அதே அ.தி.மு.க. ஆட்சியிலே இதுபோன்ற வெள்ளம் ஏற்பட்ட போது மாநில அரசு மத்திய அரசிடம் 13 ஆயிரத்து 684 கோடி ரூபாய் நிதி உதவி கோரியது. அப்போது மாநில அரசு செலவழித்தது 1,523 கோடி ரூபாய்தான். இந்த அளவிற்குக் கூட அப்போது அதிகமாக செலவழிக்கக் காரணம் அது தேர்தல் ஆண்டு என்பதுதான்.

தமிழக அரசின் சார்பில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் பல்வேறு நல வாரியங்கள் குறித்தெல்லாம் பேரவையில் பல உறுப்பினர்கள் தெரிவித்து, அவற்றின் பணிகளைப் பற்றி பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள். குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இதுவரை எந்த அளவிற்கு அந்த நல வாரியங்களின் சார்பில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கேட்டிருந்தார்கள். தமிழகத்தில் உள்ள அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் நோக்கில் ஒவ்வொரு வகைத் தொழிலுக்கும் ஒரு நல வாரியம் தொடங்கப்பட்டு அந்த நலவாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வாரியத்தின் சார்பில் அதன் உறுப்பினர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள உதவிகளின் விவரம் வருமாறு :-

1. விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்.

தொடங்கப்பட்டது 7.8.2006.

அடையாள அட்டை வழங்கப்பட்ட குடும்பங்கள் -

72 இலட்சத்து 18 ஆயிரத்து 49.

31.12.2007 வரை மொத்தம் 2 இலட்சத்து 13 ஆயிரத்து 688 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிதி - 107 கோடியே 94 இலட்சத்து 31 ஆயிரத்து 949 ரூபாய்.

2. உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம்

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

4 இலட்சத்து 88 ஆயிரத்து 239.

77 ஆயிரத்து 720 பணியாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட உதவி நிதி -

17 கோடியே 59 இலட்சத்து 31 ஆயிரத்து 750 ரூபாய்.

3. ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியம்.

பதிவு செய்து கொண்ட தொழிலாளர்கள் -

29 ஆயிரத்து 977 பேர்.

வழங்கப்பட்ட உதவித் தொகை -

2 ஆயிரத்து 155 குடும்பங்களுக்கு 39 இலட்சத்து 71 ஆயிரத்து 56 ரூபாய்.

4. சலவைத் தொழிலாளர் நலவாரியம்.

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

18 ஆயிரத்து 936.

வழங்கப்பட்ட நிதி உதவி -

1,989 குடும்பங்களுக்கு 39 இலட்சத்து 97 ஆயிரத்து 30 ரூபாய்.

5. முடிதிருத்துவோர் நல வாரியம்

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

11 ஆயிரத்து 679 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

2004 குடும்பங்களுக்கு 34 இலட்சத்து 90 ஆயிரத்து 845 ரூபாய்.

6. தையல் தொழிலாளர் நல வாரியம்

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

1 இலட்சத்து 83 ஆயிரத்து 427 பேர்.

வழங்கப்பட்ட உதவி நிதி -

35 ஆயிரத்து 380 குடும்பங்களுக்கு 7 கோடியே 30 இலட்சத்து 14 ஆயிரத்து 667 ரூபாய்.

7. கைவினைத் தொழிலாளர் நல வாரியம்.

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

27 ஆயிரத்து 945 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

1387 குடும்பங்களுக்கு 26 இலட்சத்து 90 ஆயிரத்து 300 ரூபாய்.

8. பனைமரத் தொழிலாளர் நலவாரியம்.

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

17 ஆயிரத்து 468 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

499 குடும்பங்களுக்கு 9 இலட்சத்து 6 ஆயிரத்து 975 ரூபாய்.

9. கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியம்.

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

93 ஆயிரத்து 683 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

17 ஆயிரத்து 722 குடும்பங்களுக்கு 3 கோடியே 42 லட்சத்து 38 ஆயிரத்து 497 ரூபாய்.

10. காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியம்.

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

4 ஆயிரத்து 283 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

381 குடும்பங்களுக்கு 6 இலட்சத்து 75 ஆயிரத்து 938 ரூபாய்.

11. ஓவியர் நல வாரியம்

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் - 1790.

வழங்கப்பட்ட நிதி உதவி -

93 குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 71 ஆயிரத்து 775 ரூபாய்.

12. பொற்கொல்லர் நலவாரியம்

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

7 ஆயிரத்து 506 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

376 குடும்பங்களுக்கு 6 இலட்சத்து 33 ஆயிரத்து 224 ரூபாய்.

13. மண்பாண்டத் தொழிலாளர் நலவாரியம்.

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

6 ஆயிரத்து 465 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

312 குடும்பங்களுக்கு 7 இலட்சத்து ஓராயிரத்து 537 ரூபாய்.

14. வீட்டு பணியாளர் நலவாரியம்

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் -

55 ஆயிரத்து 706 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

2 ஆயிரத்து 470 குடும்பங்களுக்கு 46 இலட்சத்து 5 ஆயிரத்து 770 ரூபாய்.

15. கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்.

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் - 5 இலட்சத்து 71 ஆயிரத்து 688 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி -

75 ஆயிரத்து 160 குடும்பங்களுக்கு 25 கோடியே 41 இலட்சத்து 70 ஆயிரத்து 238 ரூபாய்.

இவை தவிர, மீனவர் நல வாரியம், பழங்குடியினர் நல வாரியம், நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம், சீர்மரபினர் நல வாரியம், ஊனமுற்றோர் நல வாரியம், கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம், தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம் ஆகிய வாரியங்களும் புதிதாக அமைக்கப்பட்டு, உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெறுகின்றன.

இந்தியாவிலேயே முதன் முதலாக தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையிலே தான் 2006ஆம் ஆண்டு "அனைத்துச் சமுதாயத்தினராலும் ஒதுக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ள அரவாணிகளின் நலன்களைப் பாதுகாக்கத்தக்க வகையில் அவர்களின் பல்வேறு கோரிக்கைகளை முறைப்படி பரிசீலித்து முடிவுகள் மேற்கொள்வோம்" என்று அறிவித்திருந்தோம். அதனையொட்டி, அவர்களது அடிப்படை கோரிக்கையான குடும்பக் கார்டுகள் வழங்க வேண்டும் என்பதையேற்று அவர்களுக்கு குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ச்சியாக தற்போது ஆளுநர் உரையில் "அரவாணிகளின் மீது இந்த அரசு கொண்டுள்ள பரிவின் காரணமாக இவர்களுக்கென புதிய நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த வாரிய உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் தமிழக அரசு உதவிகளை வழங்க தனித்தனியே நிதி ஒதுக்கீடு செய்கிறது.

குறிப்பாக அண்மையில் தொடங்கப்பட்ட மீனவர் நல வாரியத்திற்கு மட்டும் முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. உறுப்பினர்கள் சேர்க்கும் பணியும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்ப நன்மைகளைக் கருதி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திவரும் தமிழக அரசு விவசாயத் தொழிலாளர் நலவாரியம், உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியம் முதலான 13 அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்கள், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் ஆகிய அனைத்து வாரியங்கள் மூலமும்

13.5.2006இல் இந்த அரசு அமைந்தபிறகு; 6.1.2008 வரை 19 மாதங்களில் 1 கோடியே 80 இலட்சத்து 83 ஆயிரத்து 329 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் 4 இலட்சத்து 31 ஆயிரத்து 296 அமைப்புசாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மொத்தம் 163 கோடியே 86 இலட்சத்து 31 ஆயிரத்து 551 ரூபாய் பல்வேறு இனங்களின்கீழ் உதவித் தொகைகளாக வழங்கப்பட்டுள்ளன.

எனவே மலையளவு குறைபாடுகளைக் குவித்தாலும் - அதைக் கூட்டிப் பெருக்கிக் கழித்தால் பார்க்கும்போது அவை துளியளவு தான் இறுதியாகத் தேறும் என்பதை இந்த விபரப்பட்டியல் தெரிவித்திடத் தயங்காது என்பதை குறிப்பிடுவதற்கே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு.க.

8-2-2008

3322. இடையில் வீழ்ந்து, எழுந்த இன்பத் தமிழகம்!

உடன்பிறப்பே,

தரிசு நிலத்தைப் பண்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அளிக்கின்ற திட்டம் குறித்து ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது கடுமையாக பேரவையில் குறை கூறப்பட்டது. ஏற்கெனவே பலமுறை இந்தத் திட்டம் குறித்து பேரவையில் பலமுறை விவாதிக்கப்பட்டு, அதற்கு விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு கடந்த ஆண்டு விவாதிக்கப்பட்ட போது, அது எவ்வளவு இடம் என்பது பற்றி பிரச்சினைகள் எழுப்பப்பட்டு; இரண்டு பக்கமும் எழுந்து பதில்கள் கூறப்பட்டு - இறுதியாக அப்படிப்பட்ட இடம் கையகல நிலம் என்றாலும், அதை ஏழைகளுக்கே தரப்படும் என்று நான் கூறியிருந்தேன்.

ஆளுநர் உரையில் இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் இதுவரை 1 லட்சத்து 38 ஆயிரம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 1 லட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலத்தை இந்த அரசு இலவசமாக வழங்கியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. உறுப்பினர் இதுபற்றி குறைபட்டுப் பேசியபோது, 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாக சேப்பாக்கத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய நான் குறிப்பிட்டதாக அதற்கான ஆதாரமாக முரசொலி பேப்பரையெல்லாம் தேடிப்பிடித்து பேரவையிலே கொண்டுவந்து காட்டினார்.

தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் என்று குறிப்பிட்டவுடன், அ.தி.மு.க. தலைவி “எங்கேயிருக்கிறது 50 லட்சம் ஏக்கர்” என்று கேட்டபோது, “உங்கள் ஆட்சியின் நிதி

நிலை அறிக்கையிலேயே 50 லட்சம் ஏக்கர் என்று உள்ளதே" என்று நான் அப்போது எடுத்துக் காட்டினேன்.

வருவாய்த் துறை அமைச்சர் தம்பி ஐ. பெரியசாமி சில நாட்களுக்கு முன்பே சட்டப் பேரவையிலேயே அதைப்பற்றி தெளிவாக விளக்கியிருக்கிறார். அப்போது,

"தமிழ்நாட்டில் 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பது உண்மை. தரிசு நிலம் என்றால், அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் அல்ல. அந்த 50 லட்சம் ஏக்கர் என்பது தனியாருக்கும் சொந்தமான, விவசாயம் செய்யாமல் இருக்கின்ற தரிசு நிலம்தான் 50 லட்சம் ஏக்கர் என்பது. அரசாங்கம் இப்போது முயற்சி எடுத்து, அரசு புறம்போக்கு நிலங்களைத் தான், நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு வழங்குகிறோமே தவிர, தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலங்களை - விவசாயம் செய்யாத நிலங்களை அரசு எடுத்துக் கொடுப்பதற்கு எந்த முயற்சியும் தற்போது எடுக்கவில்லை"

என்று கூறியிருக்கிறார்.

இதுதான் உண்மை.

ஆனால், 50 லட்சம் ஏக்கர் எங்கேயிருக்கிறது, தேர்தல் அறிக்கையில் எப்படி தெரிவித்தீர்கள், அறிவிப்பே பொய்யானது என்றெல்லாம் அ.தி.மு.க தலைவி கேள்வி கேட்ட போதுதான், உங்கள் நிதி நிலை அறிக்கையிலேயே 50 லட்சம் ஏக்கர் என்று சொல்லியிருக்கிறீர்களே என்று அந்த விவரத்தை நான் அப்போது எடுத்துக்காட்டினேன்.

வருவாயத்துறை அமைச்சர் பேரவையில் கூறும்போது, கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியிலே சுமார் 5000 ஏக்கர் அளவிற்குத்தானே நிலம் வழங்கப்பட்டது என்று சொன்னபோது,

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பன்னீர்செல்வம் குறுக்கிட்டு - அமைச்சர் கூறியது தவறு என்றும், ஒவ்வொரு வருடமும் 15 ஆயிரத்திலிருந்து

30 ஆயிரம் ஏக்கர் வரை வழங்கப்பட்டதாகவும், அந்தப் புள்ளி விவரத்தை மறுநாள் கொண்டுவந்து அவையிலே காட்டுவதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அவர் அவையிலே கொண்டு வந்து அந்தப் புள்ளி விவரங்களைக் காட்டுவதற்கு முன்பே, அமைச்சர் பெரியசாமி அந்த விளக்கத்தையெல்லாம் அவையிலே புள்ளிவிவரங்களோடு கொடுத்தார்.

அதன்படி அ.தி.மு.க. ஆட்சியில்

2001-2002இல் 1,336 பேருக்கு, 1,612 ஏக்கரும்,

2002-2003இல் 1548 பேருக்கு 1,887 ஏக்கரும்,

2003-2004இல் 1,442 பேருக்கு 1,768 ஏக்கரும்,

2004-2005இல் 1,047 பேருக்கு 1,524 ஏக்கரும்

2005-2006இல் 1,066 பேருக்கு 1,580 ஏக்கரும்

என்ற அளவிற்குத்தான் தரிசு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, தி.மு.கழக ஆட்சியில் தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவது பற்றி குறைகூறும் அ.தி.மு.க.வினர் அவர்களது ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில்

வழங்கப்பட்ட நிலம் 8,371 ஏக்கர்.

அதனால் பயனடைந்தோர் 6,439 பேர்.

தற்போது நடைபெறும் தி.மு. கழக ஆட்சியில்

ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் வழங்கப்பட்டுள்ள நிலம் 1,61,000 ஏக்கர்.

இதனால் பயனடைந்தோர் 1,38,000 பேர்.

இதற்குப் பிறகும் இந்தத் திட்டத்தைப் பற்றி குறை கூற அ.தி.மு.க. வினருக்கு ஏதாவது தகுதி இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தான் இதனைக் குறை கூறுகிறார்கள் என்றால், தோழமைக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஏன் இன்னமும் லட்சக்கணக்கான நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கவில்லை என்று தொடர்ந்து குறைகூறி வருகிறார்கள். அவர்களுக்கும் இதிலே விளக்கமளிக்க வேண்டுமென்பதற்காக அவர்களுடைய கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களிலே எந்த

அளவிற்கு இவ்வாறு நிலம் வழங்கப்பட்டுள்ளன என்ற விவரங்களைக் கேட்டு பெறுமாறு அதிகாரிகளிடம் தெரிவித்து, அதன்படி கிடைக்கப் பெற்ற விவரங்கள் இதோ :-

2006-2007 மற்றும் 2007 டிசம்பர் வரை

கேரளாவில் வழங்கப்பட்ட நிலம் 188 ஏக்கர்.

பயனாளிகள் 494 பேர்.

திரிபுராவில் வழங்கப்பட்ட நிலம் 1,345 ஏக்கர்.

பயனாளிகள் 1,257 பேர்.

மேற்கு வங்கத்தில் - வழங்கப்பட்ட நிலம் 26,838 ஏக்கர்.

பயனாளிகள் 1,15,950 பேர்.

(மேற்கு வங்க மாநிலத்தில் சராசரியாக ஒரு நபருக்கு கால் ஏக்கருக்கும் குறைவான நிலம்தான் வழங்கப்பட்டுள்ளது.)

ஆனால் - இதே காலக் கட்டத்தில்

தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட நிலம் 1,60,671 ஏக்கர்.
பயனாளிகள் 1,37,995 பேர்.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்குவதைப் போலவே - வீட்டு மனைப் பட்டா வழங்குவது பற்றியும் - பெரிதாக இந்த அரசு மீது குறை கூறப்படுகிறது. இந்தக் குறையைக் கூட கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள்தான் ஏன் இன்னமும் லட்சக்கணக்கிலே மனைப் பட்டா வழங்கவில்லை என்று குரல் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள். முப்பது இலட்சம் பேருக்கு மூன்று மாதங்களில் வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். போராட்டம் நடத்துவதாக அறிக்கை கொடுப்பதும், ஊருக்கு ஊர் ஆர்ப்பாட்டம் நடத்துவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. உண்மையிலேயே வீட்டு மனைப் பட்டாக்கள் விரைவில் அதிகம் பேருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்ற போது, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது பற்றி நீண்ட நேரம் விவாதித்து இந்த ஆண்டு முடிவதற்குள், அதாவது மார்ச் திங்கள் 2008க்குள், மூன்று இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள்

வழங்கியே ஆக வேண்டுமென்றும், அந்தப் பணியிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரைந்து பணியாற்ற வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டு, அவ்வாறே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் முயற்சி மேற்கொண்டு, வேறு எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு மூன்று இலட்சம் என்ற இலக்கினை மூன்றுமாத காலத்திற்கு முன்பாகவே நிறைவு செய்திருக்கிறோம்.

தமிழகத்திலே இந்த அளவிற்கு ஆளுங் கட்சியைக் குறைகூறி ஊக்கப்படுத்தும், தோழமைக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களிலே இதுபோல் முப்பது இலட்சம், இருபது இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக எந்தக் குறிப்பும் இல்லை!

கேரளாவில் 2006-2007 ஆம் ஆண்டில் வழங்கப் பட்ட வீட்டு மனைப் பட்டாக்கள் 3,773.

வழங்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு 241 ஏக்கர்.

கேரளாவில் 2007 ஆம் ஆண்டில் செப்டம்பர் 7 ஆம் தேதி வரை வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்கள் 1,772. நிலத்தின் பரப்பளவு 158 ஏக்கர்.

இந்த இரண்டு ஆண்டுகளிலும் சேர்த்து கேரளாவில் வழங்கப்பட்ட மனைப்பட்டாக்கள் 5,545.

வழங்கப்பட்ட நிலம் 399 ஏக்கர்.

திரிபுரா மாநிலத்தில் இந்த இரண்டு ஆண்டுகளிலும் சேர்த்து, வழங்கப்பட்ட மனைப் பட்டாக்கள் 722. வழங்கப்பட்ட நிலம் 411 ஏக்கர்.

மேற்குவங்க மாநிலத்தில் இந்த இரண்டு ஆண்டுகளிலும் சேர்த்து வழங்கப்பட்ட மனைப்பட்டா 3,416. வழங்கப்பட்ட நிலம் 176 ஏக்கர்.

தமிழகத்தை எடுத்துக் கொண்டால் இந்த இரண்டு ஆண்டுகளிலும் சேர்த்து வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டா 3,76,623 வழங்கப்பட்ட நிலம் 7,861 ஏக்கர்.

இதற்குப் பிறகும் தமிழகத்தில் வீட்டுமனைப் பட்டா சரியாக வழங்கப்படுவதில்லை என்று போராட்டம் நடத்துவது சரியா என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆளுநர் உரை பற்றி அறிக்கை விட்ட பிரதான எதிர்க்கட்சித் தலைவர் விவசாய விரோத நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபட்டிருப்பதாக தெரிவித்தார். ஆனால் அவையிலே வந்து பேசும் போது அவற்றையெல்லாம் பேசாமல், "யார் சட்ட மேதை" என்ற ஆராய்ச்சிக்குப் போய்விட்டார்.

விவசாயிகளுக்கெல்லாம் இந்த ஆண்டு பயிர்க் கடன் வழங்கப்படவில்லை என்றார்.

15-1-2006 இல் அ.தி.மு.க. ஆட்சியில்

3 லட்சத்து 74 ஆயிரத்து 973 விவசாயிகளுக்கு கூட்டுறவு அமைப்புகள் மூலம் பயிர்க்கடன்

ரூ. 726 கோடியே 47 லட்சம் வழங்கப்பட்டது.

15-1-2007 இல் கடந்த நிதியாண்டில் தி.மு.க. ஆட்சியில் 4 லட்சத்து 22 ஆயிரத்து

872 விவசாயிகளுக்கு கூட்டுறவு அமைப்புகள் மூலம் பயிர்க்கடன் ரூ. 818 கோடியே 4 லட்சம் வழங்கப்பட்டது.

15-1-2008 இல் நடப்பு நிதியாண்டில்

4 லட்சத்து 74 ஆயிரத்து 366 விவசாயிகளுக்கு கூட்டுறவு அமைப்புகள் மூலம் பயிர்க்கடன்

ரூ. 994 கோடியே 12 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. உண்மை இவ்வாறிருக்க இந்த ஆட்சியில் பயிர்க்கடன் வழங்கப்படவில்லை என்று ஜெயலலிதா அறிக்கை விட்டது எவ்வளவு தவறான தகவல் என்பதை புரிந்து கொள்ளலாம்.

தமிழகத்திலே உரத் தட்டுப்பாடு என்றும்

ஜெ. கூறியிருந்தார். அந்தச் செய்தியாவது உண்மையா?

29-1-2008 தேதியன்று உர இருப்புகள்

யூரியா 62,502 மெட்ரிக் டன்

டி.ஏ.பி (டை-அமோனியம் பாஸ்பேட்)

1,922 மெட்ரிக் டன்

பொட்டாஷ் 10,519 மெட்ரிக் டன்

எனவே உரத் தட்டுப்பாடு எதுவும் தமிழகத்திலே இல்லை என்பதும், ஜெயலலிதா சொல்லி வரும் பல்வேறு பொய்களில் இதுவும்

ஒன்று என்பதும் இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

அரசு மருத்துவமனைகள் சிலவற்றில் போதுமான மருத்துவர்கள் இல்லை என்ற ஒரு குறைபாடும் பேரவையிலே சுட்டிக் காட்டப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் 9,422 மருத்துவர் பணி இடங்கள் உள்ளன. இந்த அரசு பொறுப்பேற்ற போது இவற்றில் 2,603 பணி இடங்கள் காலியாக இருந்தன. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் காலியாக இருந்த 2,603 பணி இடங்களில் 2,167 பணி இடங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எனவே தற்போது மருத்துவப் பணி இடங்களில் 94 சதவிகிதம் இடங்களில் மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள். எஞ்சிய

6 சதவிகிதத்தினரும் விரைவில் நிரப்பப் படுவார்கள்.

இவை தவிர, 468 புதிய மருத்துவர் பணி இடங்களும் தோற்றுவிக்கப்பட்டு அவைகளும் நிரப்பப்பட்டு வருகின்றன.

அ.தி.மு.க. ஆட்சியில் அதிக அளவிற்கு புதிய வீடுகள் கட்டப்பட்டதாகவும், தற்போது அந்த அளவிற்கு புதிய வீடுகள் கட்டப்படவில்லை என்றும் பேரவையிலே புகாராகக் கூறப்பட்டது. இதுவும் தவறான விவரம்தான்.

2006-2007ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையில் - அன்றைய நிதி அமைச்சர் பக்கம் 16, பத்தி 42இல் கூறும் போது, 2001-2005ஆம் ஆண்டுகளில் ஊரக ஏழை மக்களுக்காக ஒரு லட்சத்து 44 ஆயிரம் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்.

அதே நிதிநிலை அறிக்கையில் பத்தி நான்கில், நகர்ப்புற ஏழை மக்களுக்காக 30 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

இரண்டையும் சேர்த்தால் 2001-2006ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகள் 2 லட்சத்து 17 ஆயிரம்.

இன்றைய ஆட்சியைப் பொறுத்தவரை

2006-2007 ஆம் ஆண்டில் மட்டும்,

ஊரக வளர்ச்சித் துறையால் மட்டுமே

50 ஆயிரத்து 471 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு - 48 ஆயிரத்து 998 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் நடப்பு நிதியாண்டான 2007-2008இல்

69 ஆயிரத்து 239 வீடுகள் கட்டும் பணிகள் ஊரக வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது மட்டுமன்றி, ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒரு லட்சத்து 988 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு உதவியுடன் 27,732 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இவைகள் தவிர உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 29,410 வீடுகள் கட்டப்படவுள்ளன.

ஒட்டுமொத்தமாக

அ.தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளில்

2 லட்சத்து 17 ஆயிரம் வீடுகள்.

தி.மு.க. ஆட்சியில் 2 ஆண்டுகளில் கட்டப்பட்டு வரும் வீடுகள் 2 லட்சத்து 77 ஆயிரத்து 840.

எனவே வீடோ, மனையோ, விவசாயத்துக்குத் தேவைப்படும் நிலமோ, எந்த மாநிலத்துக்கும் இணையாகக்கூட அல்ல, அனைத்தையும் மிஞ்சுகிற அளவுக்குத்தான் விநியோகம் செய்யப் பட்டுள்ளது. வெற்றி முகட்டை எட்டியிருக்கிறது - இடையில் வீழ்ந்து இன்று எழுந்துள்ள இன்பத் தமிழகம்!

அன்புள்ள,

மு.க.

9-2-2008

3323. விவரம் புரியாமல் வித்தாரம் பேசுவதா?

உடன்பிறப்பே,

தரிசு நிலங்களை ஏழை நிலமற்ற விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவது பற்றியும், பல ஆண்டுக் காலமாக வழங்காமல் இருந்த வீட்டு மனைப் பட்டாக்களை இலவசமாக வழங்குவது பற்றியும், மற்ற மாநிலங்களில் எல்லாம் எந்த அளவிற்கு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது என்பது பற்றியும் நேற்றைய கடிதத்தில் விளக்கமாக எழுதியிருந்தேன்.

இப்படிப்பட்ட சாதனைகளை ஐந்தாம் முறையாக நான் முதல்வராக வந்த பிறகு என்றல்ல, இதற்கு முன்பு ஆட்சியிலே இருந்த காலங்களிலும் செய்து பழக்கப்பட்டவன்தான் நான். அந்த வகையில் இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட ஒரு தியாகியின் வாரிசுகளுக்காக தி.மு.கழக ஆட்சி வழங்கிய சலுகையையும், தற்போது இந்த ஆட்சியைக் குறை கூறும் பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் அந்தச் சலுகையைத் தட்டிப் பறித்த கொடுமையையும் தொகுத்துக் கூறினால் சரியாக இருக்குமென்று கருதுகின்றேன்.

வெள்ளையர் அரசை எதிர்த்து முழக்கமிட்டுப் போராடிப் புகழ் பொறித்துத் தமிழரின் மானம்காத்த மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன். கட்ட பொம்மனின் வீரத்தைப் போற்றும் வகையில் அவனது கோட்டை அமைந்திருந்த அதே இடத்தில் 1974 ஆம் ஆண்டில் நான் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பையேற்றிருந்த அந்தக் காலகட்டத்தில், புதிதாக ஒரு கோட்டை அமைத்து அதனை நானே திறந்து வைத்தேன். அத்துடன் வீரபாண்டிய கட்டபொம்மனின் வழிவந்தோர் 202 பேருக்கு இலவச வீடுகள் கட்டித் தந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் 3 ஏக்கர் நிலம் வழங்கி வீரபாண்டிய கட்டபொம்மனையும் அவரது வாரிசுகளையும் கௌரவப்படுத்தினேன்.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் 144 வாரிசுகளுக்கு புல எண்கள் 13/1 மற்றும் 13/2 மற்றும் புல எண்கள் 482 முதல் 519 வரை 176.84.0 எக்டேர் பரப்பில் இலவச நிலப்பட்டா வழங்கப்பட்டது.

ஏழை எளியவர்கள் வாழ வழங்கப்பட்ட இந்த நிலத்தை சூறையாடுவதில் கைதேர்ந்தவராக விளங்குகிறார் ஒட்டப்பிடாரம் தொகுதி அ.தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர். இவர் கட்டபொம்மன் வாரிசுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் புல எண்.13/2A இல் 0.50.0 எக்டேர் நிலத்தை அடிமாட்டு விலைக்கு வாங்கி தனது பெயரில் பதிவு செய்து கொண்டுள்ளார். அந்நிலத்தில் 50 சென்ட் பரப்பில் பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் மூலம் பெட்ரோல் பங்க் ஒன்றை நடத்தி வருகிறார்.

கட்டபொம்மன் வாரிசுகளில் ஒருவராகிய திருமதி வீரசக்கம்மாள் அவர்களுக்கு வழங்கப்பட்ட புல எண்.485/1 இல் 1.21.5 எக்டேர் நிலத்தையும், திரு. பொன்ராஜ் என்ற வெள்ளைப் பாண்டிய மாப்பிள்ளைச் சாமி என்பவருக்கு வழங்கப்பட்ட புல எண்.485/2 இல் 0.91.5 எக்டேர் நிலம் மற்றும் புல எண்.487/7 இல் 0.29.5 எக்டேர் நிலம் ஆகியவற்றினையும் இந்த ஒட்டப்பிடாரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மோகன் தமது தாயார் திருமதி இராமலட்சுமி பெயரில் வாங்கி அதில் சரள் குவாரி உரிமம் பெற்று லாபம் சம்பாதித்து வருகிறார்.

இது ஒரு மிகப்பெரிய தவறான செயலாகும். அதிலும் சட்டமன்ற உறுப்பினரே செய்வது அடாவடிச் செயலாகும். அரசு, கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வழங்கிய இலவச நிலத்தை அவர்களிடமிருந்து வாங்குவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. இதுகுறித்து நிலம் வழங்கப்பட்டபொழுது,

"Special condition to patta Nos.949, 950,978 to 1118 that No part of land assigned to the decendants of Veerapandia Kattabomman be sold and in case of sale, the sale would be invalid and the site shall revert back to the Forest Department as per Govt. Memo No. 19600(FR.III) 76, dated 9.1.1978 (Collector's No.G4. 57594/78, dated 25.1.1978) Taluk No. R. Dis 12905/76

அதாவது-

வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலம், பட்டா எண்.949, 950, 978 முதல் 1118 வரையான நிலங்களில் ஒரு பகுதியைக் கூட விற்பனை செய்யக் கூடாது. அப்படி விற்பனை செய்தால் அந்த விற்பனை செல்லாததாகிவிடும். அந்த நிலம், அரசு மெமோ எண்.19600 (FR. III) 76 நாள் 9.1.1978-இன்படி வனத்துறையால் திருப்பி எடுத்துக் கொள்ளப்படும். (மாவட்ட ஆட்சியரின் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.ஜி4.57594/78 நாள் 25.1.1978)-இன்படி தாலுக்கா எண்.ஆர். டிஸ். 12905.76”

- என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ள விவரம் பதிவேடுகளில் இடம்பெற்றுள்ளது.

அரசு நிலத்தையே அபகரிக்கக் கருதி, விலைக்கு வாங்கிவிட்டு பின்னர் அதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்கு வந்ததும், தான் இட்ட கையெழுத்தையே தன் கையெழுத்து இல்லை என மனச்சாட்சியின்றிக் கூறி, நீதிமன்றம் தண்டனை வழங்கும் நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, அந்த நிலத்தைத் திருப்பித் தருகிறேன் எனக் கூறிய தலைவியின் வழியிலேயே அ.தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் திரு. மோகனும், அரசு, சுதந்திரப் போராட்டத் தியாகிகள் குடும்பங்களுக்கு அதிலும் குறிப்பாக விடுதலை முரசு கொட்டிய வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுகளுக்கு வழங்கிய நிலங்களை அபகரித்திருக்கிறார்.

இவ்வாறு அ.தி.மு.க.வினர் அடாவடிச் செயல்கள் மூலமும், அச்சுறுத்தல் மூலமும் ஏழை எளியவர்களிடமிருந்து நிலங்களைப் பறிக்கும் கொடுமைகள் தடுக்கப்பட வேண்டும்.

அ.தி.மு.க. தலைவியின் புனிதத்தையும், எம்.எல்.ஏ. உட்பட அவரது கட்சிக்காரர்களின் புனிதங்களையும் பொதுமக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். ஆளுங்கட்சியை புகார் கூறி அன்றாடம் அறிக்கை விடும் அ.தி.மு.க. தலைவி இதுபோல தன் கட்சியினர் செய்து வரும் தவறுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு அதன் பின்னர் நம்மைப் பற்றி குறை கூற முன் வரட்டும்.

அடுத்து, ஆதி திராவிடர்க்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்குமான இட ஒதுக்கீடுகள் குறித்தும், அவர்களுக்கு போதுமான நிதி உதவி

செய்யப்படவில்லை என்பது குறித்தும், குறிப்பாக இன்று கூட எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் ஆதி திராவிட மாணவர்கள் 12ஆம் வகுப்பில் 60 சதவிகித மதிப்பெண்கள் எடுத்தால் மட்டுமே உயர் கல்வி பயில்வதற்கான உதவித் தொகை வழங்கப்படும் என்று மத்திய அரசு உத்தரவைத் திரும்பப் பெற வேண்டுமென்று தெரிவித்து விட்டு, இறுதியாக மத்திய அரசின் தவறான முடிவுக்கு வெண்சாமரம் வீசிக் கொண்டிருக்கும் தி.மு.க. அரசை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பிரச்சினை குறித்து மாணவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்று தெரிந்தவுடனேயே வேறு எந்தக் கட்சியின் சார்பிலும் அதுபற்றி வேண்டுகோள் வருவதற்கு முன்பாகவே, பேரவையில் நான் எழுந்து, "இன்று மாணவர்கள் ஒரு முக்கியமான கோரிக்கையை முன் வைத்து கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக, மத்திய அரசு 60 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றால்தான் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்படப் போவதாக ஒரு செய்தி வந்து, அப்படி ஆணை பிறப்பிக்கக் கூடாது என்றும், பிறப்பித்திருந்தால் அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்தியும் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், இந்தத் தகவலை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அப்படி ஒரு கருத்து இருந்தால் அதை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று கடிதம் மூலமாக மத்திய அரசுக்கு வலியுறுத்தியுள்ளது என்பதை நான் அந்த மாணவர்களுக்கு கூறிக் கொள்வதோடு, ஒரு வேளை மத்திய அரசு வேறு ஏதாவது காரணங்களைச் சொல்லி 60 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றால் தான் உதவித் தொகை அளிக்க முடியும் என்று கூறுகின்ற சூழல் இருக்குமேயானால், இப்போது தமிழக அரசு வழக்கம்போல் வழங்கி வருகின்ற அந்தக் கல்வி உதவித் தொகை இப்போது எந்த நிலையிலே வழங்கப்படுகிறதோ, அப்படியே வழங்கப்படும் என்ற உறுதியை அந்த மாணவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றுரைத்து அது ஏடுகளில் எல்லாம் 1-2-2008 அன்று வெளி வந்துள்ளது.

அதுமாத்திரமல்ல; ஆதி திராவிட மாணவர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருக்குமேயானால் ஜெயலலிதா 1-2-2008 அன்று பேரவையிலே ஏதேதோ பேசி கலவரம் செய்தாரே, அதற்குப் பதிலாக இந்தப் பிரச்சினை குறித்து அங்கல்லவா பேசி, என்னுடைய பதில் என்ன என்று கேட்டிருக்க வேண்டும்.

மேலும் 1-2-2008 அன்று பேரவையில் ஆளுநர் உரைக்குப் பதிலளித்த நான் என் பேச்சின் இறுதியில், "10ஆம் வகுப்பிற்கு மேல் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, அம்மாணவர்கள் பிளஸ் 2 தேர்வில் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருந்தால் மட்டுமே வழங்கப்படும் என்ற மத்திய அரசின் நெறிமுறையால், பல மாணவ மாணவியர்கள் கல்வி உதவித்தொகை பெற இயலாத நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டினர். ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர் தொழிற் பட்டப் படிப்புகளில் சேர்வதற்கு பிளஸ் 2 தேர்வில் தேர்வு பெற்றிருந்தாலே போதும் என்ற நிலையில், இந்த புதிய நிபந்தனையால் பல மாணவர்கள் உதவித்தொகை பெற இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே, கல்வி உதவித்தொகைத் திட்டத்தை (Post Matric Scholarship Scheme) தற்போதுள்ள விதிமுறைகளின்படியே தொடர்ந்து செயல்படுத்துமாறு மத்திய சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களுக்கு 9.1.2008 அன்று கடிதம் எழுதியுள்ளேன்.

மத்திய அரசின் முடிவினை எதிர்நோக்கி, மாணவர்களின் படிப்பு தடைபடாமல் தொடரும் வகையில் பிளஸ் 2 தேர்வில் தேர்வு பெற்று தொழிற்படிப்புகளில் பயின்று வரும் அனைத்து ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும் தொடர்ந்து கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்பதையும், மத்திய அரசு விதிமுறைகள் மாற்றப்படாத பட்சத்தில் இதற்கான செலவை நமது மாநில அரசே தனது நிதியிலிருந்து ஏற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அறிவித்து, இந்த அறிவிப்பும் அனைத்து ஏடுகளிலும் வெளிவந்திருக்கின்றது.

இவ்வளவிற்குப் பிறகு, ஒரு கட்சியின் தலைவராக இருப்பவர், ஏற்கெனவே இரண்டு முறை முதலமைச்சராக இருந்தவர்,

மத்திய அரசின் முடிவிற்கு தமிழக அரசு வெண் சாமரம் வீசிக் கொண்டிருப்பதாக அறிக்கை விடுகிறார் என்றால், அவரைப் பற்றிய முடிவினை தமிழ்நாட்டு மக்களே கணித்துக் கொள்ளட்டும் என்றுதான் தெரிவிக்க விரும்புகிறேன்.

1991-1996ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த போது பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவாக இருந்ததை 96ஆம் ஆண்டு நான்காம் முறையாக நான் பொறுப்பேற்றவுடன், 54.53 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தியதோடு, 97ஆம் ஆண்டு 64 கோடி ரூபாயாகவும், 98ஆம் ஆண்டு 89 கோடி ரூபாயாகவும், 99ஆம் ஆண்டு 107 கோடி ரூபாயாகவும், 2000ஆம் ஆண்டு 156 கோடி ரூபாயாகவும் படிப்படியாக உயர்த்தினேன்.

ஆனால் 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் முதல் ஆண்டிலேயே அந்தத் தொகையை உயர்த்தவில்லை. மாறாக 152 கோடி ரூபாயாகக் குறைக்கத் தொடங்கி, 2002ஆம் ஆண்டு 125 கோடி ரூபாயாகக் குறைத்தார். கடந்த ஆண்டு தி.மு.கழகம் மீண்டும் பொறுப்புக்கு வந்த பிறகு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான நிதி ஒதுக்கீட்டினை 320 கோடி ரூபாய் அளவிற்கும், 2007-2008ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீட்டினை 386 கோடி ரூபாயாகவும் உயர்த்தியிருக்கிறோம் என்ற இந்த புள்ளி விவரம் ஒன்றே கடந்த கால அரசுக்கும், இன்றைய அரசுக்கும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர்பால் உள்ள அக்கறையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணம் மிகவும் குறைவாக உள்ளது என்று ஒரு குறைபாடு இந்த ஆட்சியின் மீது எதிர்க்கட்சியினரால் சொல்லப்படுகிறது. கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் 1996ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு ஒரு மாணவருக்கு 198 ரூபாய் என்று இருந்தது. 1997ஆம் ஆண்டு இந்தத் தொகை தி.மு.க. ஆட்சியிலே 250 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதே ஆண்டிலேயே

இந்தத் தொகை மீண்டும் 300 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. 1998ஆம் ஆண்டு இந்தத் தொகை 400 ரூபாயாக தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே உயர்த்தப்பட்டது. மாணவர்களுக்கான இத்தொகை 2001ஆம் ஆண்டிலிருந்து அ.தி.மு.க. ஆட்சி செய்த ஐந்தாண்டு காலத்திலும் ஒரு பைசா கூட உயர்த்தப்படவில்லை. 2007ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியிலே தான் இந்த 400 ரூபாய் கல்லூரி விடுதிக்கான உணவுக்கட்டணம் 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதைப் போலவே பள்ளி விடுதிகளில் தங்கிப் படிப்போருக்காக 300 ரூபாயாக இருந்த உணவுக் கட்டணம், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்படாமல் இருந்து கடந்த ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட எந்த விவரங்களும் தெரியாத நிலையில், தெரிந்து கொள்ளவும் அக்கறையற்ற நிலையில் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற வகையில் எப்படியும் தன் பெயரிலே ஒரு அறிக்கை வெளிவந்தால் போதும், அதுவே பரம திருப்தி என்ற அளவில்தான் அறிக்கை விடுகிறார். வெளியே அறிக்கை விடுவது மட்டுமல்லாமல் பேரவையிலும் வந்து அங்கேயும் உண்மைக்கு மாறான தகவலைக் கூறி கலவரத்தைத் தூண்டி விட்டு, இரண்டு கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களை மோத விட்டு, அதிலே மகிழ்ச்சி காண எண்ணிச் செயல்பட்டிருக்கிறார் என்பதை தமிழ்ச் சமுதாயம் இனியாவது புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இத்தொடரினை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

10-2-2008

3324. அடக்கம் தேவை; ஆணவமல்ல!

உடன்பிறப்பே,

தே.மு.தி.க.வைச் சேர்ந்த ஒருவரின் இல்லத் திருமணத்தில் கலந்து கொள்ள கோவில் பட்டிக்குச் சென்ற அந்தக் கட்சியின் தலைவர் திருமண விழாவில் அரசியல் பேசக்கூடாது என்று தான் இருந்ததாகவும், தமிழ்நாட்டில் நடக்கும் ஆட்சி அலங்கோலத்தைப் பார்க்கும்போது பேசவேண்டிய அவசியம் வந்துவிட்டதாகவும் கூறியிருக்கிறார். தமிழ்நாட்டு ஆட்சியிலே அப்படி என்ன அலங்கோலம்? விருத்தாசலம் தொகுதி மக்கள் இவருக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்து சட்டமன்றத்திற்கு அனுப்பியது எதற்காக? ஆளுநர் உரை மீதான விவாதம் நடந்தபோது, பேரவையிலே வந்து ஆட்சியின் அலங்கோலத்தை அங்கே பட்டியலிட்டிருந்தால், அதற்கு பதில் கிடைத்திருக்குமல்லவா? ஆறு பேர்களைக் கொண்ட ம.தி.மு.க. சார்பில் ஆளுநர் உரையிலே பேசுகிறார்கள், ஏன் சுயேச்சை உறுப்பினர் கூட ஒருவர் அங்கே பேசுகிறார். ஒரு கட்சியை நடத்தும் தலைவர், நான்தான் ஆட்சிக்கே வரப் போகிறேன் என்று சொல்லுபவர் பேரவையிலே வந்தல்லவா அவர் காணும் அலங்கோலங்களைப் பற்றிப் பேசியிருக்க வேண்டும். அதைவிட்டு எங்கேயோ சந்து முனையிலே போய் நின்றுகொண்டு சிந்து பாடினால் என்ன செய்வது?

தமிழகத்திலே அப்படி என்ன அலங்கோல ஆட்சி நடக்கிறது? ஏழை யெளிய மக்களுக்கு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறதே? அதை அலங்கோலம் என்கிறாரா? விவசாயி களுக்கு சுமார் 7000 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவுக் கடன்கள் ரத்து செய்யப்பட்டதை அலங்கோலம் என்று கூறுகிறாரா? மகளிருக்கு இலவச எரிவாயுவுடன் கூடிய அடுப்புகள் இலவசமாக வழங்கப்படும் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 60 கோடி ரூபாய்ச் செலவில் 3 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கும், இரண்டாம் கட்டமாக 160 கோடி ரூபாய்ச் செலவில் 8 லட்சம்

குடும்பங்களுக்கு வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை அவற்றில் 2 லட்சத்து 17 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கும் வழங்கப் பட்டுள்ளதே, அதை அலங்கோலம் என்கிறாரா? இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத ஏழையெளியவர்களுக்கெல்லாம் தொடர்ந்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கி வழங்கப்பட்டு வருகிறதே, அது அவருக்கு அலங்கோலமாகத் தெரிகிறதா? தொழிலாளர் களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியிலே போனஸ் என்பதே இல்லாத நிலைமை இருந்ததை மாற்றி, தற்போது அவர்கள் எல்லாம் போனஸ் பெறுகின்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோமே, அது தே.மு.தி.க. தலைவருக்கு அலங்கோலமாகத் தெரிகிறதா? நிலமற்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கப்பட்டு வருகிறதே, பல ஆண்டுக் காலமாக வழங்கப்படாமல் இருந்த வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறதே, வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவேண்டுமென் பதற்காக தமிழகத்திலே புதிய புதிய தொழிற் சாலைகளைத் தொடங்கச் செய்து பல்லாயிரக் கணக்கானோர்க்கு வேலை கிடைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறதே, அதையும் மீறி இன்னும் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மாதந்தோறும் அரசே நிதி உதவி அளித்து வருகிறதே, இவைகள் எல்லாம் தே.மு.தி.க. தலைவருக்கு அலங்கோலமாகத் தெரிகிறது என்றால் அவர் கருத்தில் கோளாறு இருக்கிறது என்றுதானே நினைக்கத் தோன்றுகிறது.

அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை சுரண்டுவதாகவும் நெல்லையிலே உள்ள மக்களிடம் அந்தத் தலைவர் கூறியிருக்கிறார். ஆட்சிக்கு வரவேண்டும், முதலமைச்சராக வேண்டுமென்றெல்லாம் நினைக்கும் அவர், ஏதோ ஒரு சாதாரணப் பேச்சாளரைப்போல குற்றச்சாட்டுகளை பொறுப்பில்லாமல் கூறக் கூடாது. மக்களைச் சுரண்டுகிறோம் என்றால் எந்த மக்களை, எப்படி என்று விளக்கம் தரவேண்டாமா? உருப்படியாக எந்தக் காரியமும் செய்யப்படவில்லை என்று பேசியிருக்கிறாரே, மேலே பட்டியலிடப் பட்டுள்ள காரியங்கள் எல்லாம் உருப்படியானவை களாக அவருக்குத் தெரிய வில்லையா? சென்னையிலே 9700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மெட்ரோ ரயில் திட்டத்தைத் தொடங்கிடவும், 1340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒகேனக்கல்

கூட்டுக் குடிநீர் திட்டத்தைத் தொடங்கிடவும் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி மு.க.ஸ்டாலின்; ஜப்பான் நாட்டிற்குச் சென்று பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக நடத்தி அடுத்த மாதம் ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளதே, அது தே.மு.தி.க. தலைவருக்கு உருப்படியான காரியமாகத் தெரியவில்லையா? 8ஆம் தேதி நடைபெற்ற ஒரே நாள் அமைச்சரவை கூட்டத்தில் 16 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு லட்சத்து 6 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத் தக்க விதத்தில் ஒப்புதல் அளிப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதே, அது உருப்படியான காரியமில்லையா? தமிழ்நாட்டு மக்களே, நீங்கள்தான் இதுபற்றி தீர்ப்பு வழங்க வேண்டும்!

தி.மு.க.விற்கு மக்கள் நலனில் அக்கறையில்லை என்கிறார் தே.மு.தி.க. தலைவர். இந்தப் பணிகள் எல்லாம் மக்கள் நலனில் அக்கறையில்லாமலா செய்யப்பட்டுள்ளது? பொய் சொல்வதற்கும் ஒரு எல்லை இல்லையா? திருமணம் ஆகாமல் ஆண்டுக் கணக்கிலே காத்திருக்கும் பெண்களுக்கெல்லாம் வாழ்வளிக்க வேண்டுமென்பதற்காக திருமண நிதி உதவித் திட்டம் கொண்டு வந்து ஒவ்வொருவருக்கும் பதினைந்தாயிரம் ரூபாய் வீதம் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு நிதிஉதவி அளிக்கப்பட்டுள்ளதே, மக்கள் நலனில் அக்கறை இல்லாத செயலா இது? அதுபோலவே கர்ப்பிணி தாய்மார்களுக்கு தலா ஆறாயிரம் ரூபாய் வீதம் நிதி உதவி அரசின் சார்பில் அளிக்கப்படுகிறதே, அது மக்கள் நலனில் அக்கறையில்லாத செயலா?

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது எந்த ஆட்சியிலே? கழக ஆட்சியில் அல்லவா? அது மக்கள் நலனில் அக்கறை இல்லாத செயலா? இந்தியாவிலே எந்த மாநிலத்திலேயாவது அமைப்பு சாரா தொழிலாளர்களுக்காக தமிழகத்திலே அமைக்கப்பட்டுள்ளதுபோல வாரியங்கள் அமைக்கப்பட்டு, அந்தத் தொழிலாளர்களுக் கெல்லாம் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறதா? தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு அரசு அலுவலர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டது உண்டா? நெசவாளர்கள் வாழ்விலும் வளம் சேர்க்க வேண்டுமென்பதற்காக இலவச மின்சாரச் சலுகையை அவர்களுக்கும் அளித்ததோடு, இலவச வேட்டி சேலைத் திட்டத்தையும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறோமே, அது மக்கள் நலனில் அக்கறை

இல்லாத செயலா? மக்களுக்கு இந்த ஆட்சியிலே எந்த நன்மையும் இல்லை என்று எந்த ஆதாரத்தை வைத்து அவர் கூறுகிறார்?

தேசிய கட்சியும் தமிழக மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று மத்திய அரசை ஆளும் கட்சி மீதும் குறை கூறியிருக்கிறார். தேசிய கட்சி தமிழக மக்களுக்கு ஏன் ஒன்றும் செய்யவில்லை? தமிழை செம்மொழியாக அறிவித்திருப்பது தற்போதுள்ள மத்திய அரசுதானே? சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற ஒப்புதல் கொடுத்தது எந்த ஆட்சியிலே? தற்போதைய ஆட்சியிலேதானே! கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் தர ஒப்புதல் கொடுத்திருப்பதும் இன்றைய மத்திய ஆட்சி தானே? எல்லாவற்றையும் ஒரேயடியாக மறைத்துவிட்டு, நான்தான் புத்தர், மற்றவர் எல்லாம் அயோக்கியர் என்ற ரீதியில் பேசுவது நல்லதா?

எழுப்பப்படும் குற்றச்சாட்டுகளை புள்ளி விவரங்களோடு மறுத்துப் பதில்கூறினால் அவருக்கு வேடிக்கையாக இருக்கிறதாம்! அவரிடம் ஆதாரம் இருந்தால், புள்ளி விவரங்கள் தெரிந்தால் தான் கூறுகின்ற குற்றச்சாட்டுகளோடு அவற்றையும் இணைத்துச் சொல்வதுதானே? எந்த விவரமும் இல்லாமல் வாயில் வந்ததையெல்லாம் பேசுவேன் என்ற பாணியில் பேசினால் என்ன செய்வது? நடிகரைப் பார்ப்பதற்காக கூடுகின்ற ரசிகர்கள் கூட்டத்தையெல்லாம் தனது கட்சிக்காரர்களின் கூட்டம் என்று எண்ணிக்கொண்டு எல்லோரையும் இழிவாகப் பேசநினைப்பது தவறு.

கச்சத்தீவு பற்றியெல்லாம் கோவில்பட்டி கூட்டத்தில் பேசியிருக்கிறார். எல்லோருக்கும் எல்லாமும் தெரிந்திருக்க நியாயமில்லை. அந்த வகையில் கச்சத்தீவு பற்றி உண்மை விவகாரங்கள் அவருக்குத் தெரிந்திருக்காது. தெரிந்தவர்களிடமாவது கேட்டுப் பேசியிருக்கலாமே?

தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்று தற்போது அறிவிக்கப்பட்டு சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதைப் பற்றியும் பேசி ஏன் இத்தனை ஆண்டுக்காலம் கொண்டு வரவில்லை என்று கண்டுபிடித்து ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். நல்லவேளை! அண்ணாவின் நினைவிடத்தைப் பார்த்து; ஏன் 1967 வரையில் சென்னை ராஜ்யம் என்பதை மாற்றி "தமிழ்நாடு" எனப் பெயரிடவில்லை எனக் கேட்காமல் போனாரே? தமிழ்ப்

புத்தாண்டு "தை முதல் நாள்" என்பதை நடைமுறைப்படுத்தத் தான் இப்போது சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை ஏன் முன்பே கொண்டுவரவில்லை என்கிறாரே, இவர் ஏன் முன்பே கட்சி ஆரம்பிக்கவில்லை என்று கேட்டு நாம் சிரிக்கலாமல்லவா?

மின் பற்றாக்குறை பற்றியும் பேசி, மத்திய அரசிடம் கேட்கலாமே என்றெல்லாம் கருத்து தெரிவித்திருக்கிறார். மின் பற்றாக்குறையைப் போக்க தமிழக அரசு தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றியும், நான் கடந்த முறை டெல்லி சென்றபோது பிரதமரிடமும், சோனியா காந்தியிடமும், அந்தத் துறையின் அமைச்சரிடமும் மின் பற்றாக்குறை குறித்து பேசி, அவர்களும் உடனடியாக தமிழகத்திற்கு 300 மெகாவாட் அளவிற்கு மின்சாரம் வழங்கிட ஏற்பாடு செய்த செய்திகள் எல்லாம் ஏடுகளில் விரிவாக வெளி வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் படிக்காமல் தே.மு.தி.க. தலைவர் தமிழக அரசுமீது குறை கூறியிருக்கிறார். அரசியல் கட்சியை தொடங்கி அதனை நடத்திடவும், ஆட்சி நடத்திடவும் விரும்புகிறவர், அன்றாடம் நாளேடுகளைப் பார்ப்பதும், அதிலே அரசு சார்பில் எடுக்கப்படுகின்ற முயற்சிகளைப் படித்து தெரிந்து கொள்வதும் முக்கியமல்லவா?

ஊழல் பற்றியெல்லாம் அவர் கூட்டத்திலே பேசியிருக்கிறார். எந்தத் திட்டத்திலே ஊழல்? ஒப்பந்த புள்ளிகள் கோருவதிலே கூட திறந்த வெளி ஒப்பந்தப் புள்ளிகள் என்று குறிப்பிட்டு, எல்லாவற்றிலும் வெளிப்படையாக ஆட்சி நடைபெறுகிறது. வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை வாங்குவதற்கான சட்டப் பேரவை உறுப்பினர்கள் குழுவிலே இடம்பெறவே மறுத்து விட்டு, இப்போது ஊழல் என்று உரைக்கலாமா? பேசுகிறவர்கள்; அவர்களே ஒருமுறை தம்முடைய முகத்தை கண்ணாடிக்கு முன் நின்று பார்த்துக் கொண்டால் நல்லது - யார் ஊழல்வாதி என்பது அப்போது தெளிவாக அவருக்குப் புரியும். அதைவிடுத்து, பிறர்மீது புழுதியை வாரி இறைக்க நினைப்பது சரியல்ல.

சிமெண்ட் பிரச்சினை பற்றி பேசும்போது, 20 லட்சம் "டன்" சிமெண்ட் குறைந்த விலைக்கு விற்கப்படும் என்று அறிவித்தார்கள்; ஆனால் 1500 "டன்" சிமெண்ட் தான் விற்பனையாகியிருக்கிறது என்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். 20 லட்சம் "டன்" சிமெண்ட் குறைந்த விலைக்கு விற்கப்படும் என்று அரசு சார்பில் எப்போதும்

கூறவில்லை. ஒரு லட்சம் டன் அதாவது 20 லட்சம் மூட்டைகள் சிமெண்ட் குறைந்த விலைக்கு விற்கப்படும் என்றுதான் அரசு சார்பில் கூறப்பட்டது. 20 லட்சம் டன் சிமெண்டிற்கும், 20 லட்சம் மூட்டைக்கும் வேறுபாடு தெரியாமல் பேசுவதா? எல்லாம் தெரிந்திருக்க வேண்டுமென்று இல்லை, பண்ருட்டியார் போன்ற தெரிந்தவர்கள் யாரிடமாவது கேட்டுக்கொண்டு, அதைக் குறித்து வைத்துக் கொண்டு பேசக்கூடாதா? அதுமாத்திரமல்ல, தனியார் சிமெண்ட் மூட்டைகள் பிளாஸ்டிக் பைகளிலே வழங்கப்படுகிறது என்றும், அரசு மூலம் வழங்கப்படும் சிமெண்ட் சாக்குப் பைகளிலே வழங்கப்படுகிறது என்றும், அதிலே ஏதோ ஊழல் என்றும் அந்தத் தலைவர் பேசியிருக்கிறார். அதிலே என்ன ஊழலைச் சொல்கிறார் என்றே புரியவில்லை.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இங்கே யார் வேண்டுமென்றாலும் கட்சி ஆரம்பிக்கலாம். தலைவர் ஆகலாம். அதிலே எந்தத் தவறும் கிடையாது. முன்பெல்லாம் கட்சி ஆரம்பிப்பது என்றால், மக்களுக்காக பணியாற்றி, உழைத்து, தியாகம் செய்து, சிறைக்குச் சென்று பாடுபட்டு, கொள்கைகளை வகுத்து, அவற்றை மக்களிடம் எடுத்துச் சென்று பரப்பித்தான் கட்சியை வளர்க்க வேண்டியிருந்தது. தற்போது அத்தகைய நிலையெல்லாம் தேவையில்லை என்றாகிவிட்டது. அதைப்பற்றி நமக்கு விருப்பு வெறுப்பில்லை. ஆனால் அப்படி கட்சி ஆரம்பித்து தலைவராக வருபவர்கள் உண்மை நிலையை பேசி, நியாயம், நேர்மையோடு பேசினால் அது நாட்டிற்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது, ஏன் அவர்களுக்கும் நல்லது! இல்லையேல் சிரிப்புக்கு ஆளாக நேரிடும். உயர்ந்திட நினைக்கும் ஒரு மனிதனிடம் வளரவேண்டியது அடக்கமே தவிர; ஆணவமல்ல!

அன்புள்ள,

மு.க.

12-2-2008

3325. எமது தமிழ்நாட்டு மக்கள் ஏமாந்த சோணகிரிகள் அல்ல!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா தனது சொந்த தொலைக்காட்சிக்கு தானே அளித்த நேர்காணல் பேட்டி ஒன்றினை அனைத்து ஏடுகளும் முக்கியத்துவம் தராத நிலையில், ஒரு நாளிதழ் மட்டும் அந்தப் பேட்டியினை முதல் பக்கத்திலேயே வெளியிட்டிருக்கின்றது.

அந்தப் பேட்டியிலே அந்த அம்மையார் எனக்கொரு சவால் விடுத்திருப்பதாக வந்த செய்தியில் - "தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசுவது குற்றம் ஆகாது என்று பொடா வழக்கில் உச்சநீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளதாக கருணாநிதி கூறுகிறார். அந்தத் தீர்ப்பை அவரால் காட்ட முடியுமா?" என்று கேட்டதாக அந்த நாளிதழ் கூறுகிறது.

25-1-2008 அன்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் விடுதலைப் புலிகள் குறித்து பேசிய பிரச்சினை குறித்து 29-1-2008ஆம் தேதியன்று தமிழகச் சட்டப் பேரவையில் கேள்வி நேரம் முடிந்ததும் காங்கிரஸ் மற்றும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தனர்.

அதன் மீது நான் பேசும்போது, "அருமை நண்பர் திருமாவளவனும் மற்றும் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுகின்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை யெல்லாம் சட்ட ரீதியாகத்தான் சந்திக்க வேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். பொடா சட்டம் பயன்படுத்தியும்கூட, அந்தப் பொடா சட்டத்தைப் பயன்படுத்தியது சரியா அல்லவா என்ற வினா எழுந்தபோது, உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு அதுபற்றி என்ன வெளியிட்டது என்றால், தடை செய்யப்பட்ட எந்த ஒரு இயக்கத்திற்கும்

ஆதரவாகப் பேசப்படும் பேச்சு குற்றம் ஆகாது என்று உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பிலே ஒருவரி வெளிவந்திருக்கிறது. குற்றம் ஆகாது என்பதற்காக இப்பொழுது இங்கே ஞானசேகரன் எடுத்துக்காட்டிய அந்த வார்த்தைகள், முன்னாள் முதலமைச்சரைப் பற்றி அல்லது இப்பொழுது விடுதலைப் புலிகளை ஆதரித்துக் கொண்டிருப்பவர்களைப் பற்றி சொல்லப்பட்ட இந்த வாசகங்களை எல்லாம் பேசலாம் என்று பொருள் அல்ல. அது எங்கே கொண்டு போய் விடும் என்பதையும் நாம் அறியாதது அல்ல. அதை நான் ஆதரிப்பவனும் அல்ல"

என்று கூறி அது அவைக் குறிப்பிலே இடம் பெற்றுள்ளது.

என்னுடைய இந்தப் பேச்சுத்தான் தவறு என்றும், உச்ச நீதி மன்றத் தீர்ப்பிலே தடை செய்யப்பட்ட எந்தவொரு இயக்கத்திற்கும் ஆதரவாகப் பேசப்படும் பேச்சு குற்றம் ஆகாது என்று தீர்ப்பில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை என்றும் பேரவையில் ஜெயலலிதா பேசினார்.

அன்றையதினமே சட்டத் துறை அமைச்சரான தம்பி துரைமுருகன் பேரவையிலேயே உச்ச நீதி மன்றத்தின் முழுத் தீர்ப்பினையும் கொண்டுவந்து, நான் குறிப்பிட்ட பகுதி எங்கே வருகின்றது என்பதையும் எடுத்துக் காட்டினார். அந்தச் செய்தி அவைக் குறிப்பிலும் இடம் பெற்றுள்ளது. மறுநாள் முரசொலியிலும் இடம் பெற்றுள்ளது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவியான ஜெயலலிதா பேரவையில் அமைச்சர் துரைமுருகன் பேசியதையும் காது கொடுத்துக் கேட்கவில்லை. மறுநாள் ஏட்டில் வெளிவந்த செய்தியைப் பார்க்கவில்லை. அவருக்கு தீர்ப்பினைக் காட்டிய வழக்கறிஞர்களிடமும் அதைப்பற்றி முழுமையாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் பேரவையில் தவறாகப் பேசியிருக்கிறார். அதுமாத்திரம் அல்ல. "இந்து" நாளிதழ் இந்தச் செய்தி பற்றி என்னிடம் சிறப்பு பேட்டி ஒன்றினைக் கேட்டு, அது 3-2-2008 தேதியன்று தெளிவாக "இந்து" நாளிதழிலே வெளிவந்திருக்கிறது. அதையும் ஜெயலலிதா படிக்கவில்லை.

இதுமாத்திரமல்ல, சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் ஜெயலலிதா பேரவையில் இவ்வாறு தவறான செய்தியினைக் கூறியிருக்கிறார் என்று ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்து, அந்தச் செய்தியும் ஏடுகளிலே வெளிவந்திருக்கின்றது.

அதற்குப் பிறகாவது முதலமைச்சராக இருந்த ஒருவர் தனது வழக்கறிஞர்களிடம் கூறி, அந்தத் தீர்ப்பினைக் கேட்டுப் பெற்று முழுமையாகப் படித்து தெரிந்து கொண்டிருக்க வேண்டும், அதன் அடிப்படையில் நேர்காணல் பேட்டியில் உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் எதையும் செய்யாமல், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தான் என்பதைப் போல, திருப்பித் திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளையாக மாறி பேரவையில் முதன்முதலில் என்ன பேசினாரோ, அதையே சொல்லி வருவது மட்டுமல்ல, எனக்கு சவாலே விடுத்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் கூற்று எவ்வளவு தவறானது என்பதை நான் ஏற்கெனவே இந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியிலே தெளிவாக்கியிருக்கிறேன் என்றபோதிலும், ஜெயலலிதாவின் நேர்காணல் பற்றி அந்த நாளிதழில் வெளிவந்த செய்திக்குப் பிறகு மீண்டும் ஒருமுறை தெளிவாக்குவது நல்லதென நினைக்கிறேன்.

16.12.2003 அன்று உச்சநீதி மன்றத்தில் நீதிபதிகள் எஸ். ராஜேந்திர பாபு மற்றும் ஜி.பி. மாத்தூர் ஆகியோர் வழங்கிய தீர்ப்பில் - ஜெயலலிதா கேட்டுள்ள வினா பற்றி - நீதிபதிகள் தெரிவித்திருக்கும் பகுதி வருமாறு :-

“நோக்கத்துடன் - செய்யப்பட்டிருந்தால் மட்டுமே பொடா சட்டம் 3(1) பிரிவின் கீழ் குற்றமாகக் கருதப்படும். கிரிமினல் நோக்கத்துடன் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே, அது பயங்கரவாதச் செயலாகக் கருதப்படும் என்று நாடாளுமன்றம் வகுத்துள்ளபோது, ஒருநபர் “பகிரங்கமாக அறிவிப்பதாலோ” (20வது பிரிவின் கீழ் உள்ளபடி) அல்லது “ஆதரவைக் கோரினாலோ” அல்லது “ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தாலோ, நிர்வகித்தாலோ, அல்லது ஏற்பாடு செய்ய உதவினாலோ அல்லது “ஒரு கூட்டத்தில் பேசினாலோ” (21வது பிரிவு), ஒரு பயங்கரவாத அமைப்பின் எந்தவிதமான நடவடிக்கைக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் நோக்கம் அல்லது திட்டம் அல்லது பயங்கரவாதச் செயலைச் செய்ய உதவும் திட்டம் எதுவும் அவருக்கு இல்லாத நிலையில் அந்த நபர் குற்றம் இழைத்துள்ளார் என்று எப்படிக் கூற முடியும்? அப்படி இல்லை என்று நாங்கள் தெளிவாக இருக்கிறோம். எனவே 20 அல்லது 21 அல்லது 22வது பிரிவுகளின் கீழ் குற்றம் என்பது தெளிவாக உணரப்பட வேண்டும். ஒரு நபர் பயங்கரவாதச் செயலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் அல்லது பயங்கர

வாதச் செயலைச் செய்ய உதவும் நோக்கத்துடன் செயல்பட்டார் என்பது தெளிவாக உணரப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும் அல்லது செய்து முடிக்க உதவி செய்யும் நோக்கம் கொண்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே, இந்தப் பிரிவுகள் பொருந்தும். இந்த முறையில் இந்தப் பிரிவுகள் புரிந்து கொள்ளப்பட்டால் தவறாகப் பயன்படுத்துகிற வழி இருக்காது"

என்று அந்தத் தீர்ப்பில் நீதிபதிகள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவின் கூற்று தவறு என்பதற்கும், நான் பேரவையில் கூறியது உண்மையானது என்பதற்கும் தீர்ப்பில் உள்ள இந்த வரிகள் போதும் என்பதை இதனைப் படிக்கும் அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் பருவ காலத்தில் மழை பெய்யத் தவறினாலும் அல்லது உழவர்களின் எதிர்பார்ப்புக்கு மேல் மழை பொழிந்தாலும்-

ஒரு கொள்ளையோ, கொலையோ நடந்து அதை நடத்திய கொடியவர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டாலும் -

ஏதாவது ஒரு குக்கிராமத்தில் குடி தண்ணீர் கிடைப்பதில் சற்று சுணக்கம் ஏற்பட்டாலும் -

எங்கேயோ ஒரு நகரத்தில் சாலை விபத்து ஒன்று நடந்தாலும் - விலைவாசியில் சற்று உயர்வு தென்பட்டாலும் - "தி.மு.க. ஆட்சியை உடனடியாக கலைக்க வேண்டும்" என்று மத்திய அரசைப் பார்த்து ஆணையிடுவதும்; நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கழக ஆட்சியினுடைய சாதனைகள், தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு தொகை தொகையாக பெருக்கெடுப்பதைப் பார்த்து ஜெயலலிதா பெருமூச்சு விடுகிறார், புலம்புகிறார், அலறுகிறார்.

ஐயோ, இந்த ஆட்சியைக் கலைத்தால்தான் தனக்கு நிம்மதி என்றும் - கலைப்பீர்களா, மாட்டீர்களா என்று தூது விட்டும் பார்க்கிறார். கலைத்தே தீருவேன் என்று தோள் தட்டி முழக்குகிறார்.

தேர்தல் நேரத்து வாக்குறுதிகளையெல்லாம் ஒவ்வொன்றாக - வரிசையாக - ஏழையெளியோர், உழவர் பெருமக்கள், உழைப்பாளி வர்க்கத்தினர் உவகை அடையும்படி தொடர்ந்து நிறைவேற்றி

வருகின்ற கழக ஆட்சி இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் தொடருமேயானால்,

திட்டமிட்டபடி புதிய சட்டமன்ற மாளிகை கட்டி முடித்து விடுவார்களே -

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றி தமிழகம் எதிர்காலத்தில் வளம் கொழிக்கும் அற்புதத்தை விளைவித்து விடுவார்களே - மெட்ரோ ரெயில் திட்டம் வரவிருக்கிறதே, சென்னையிலிருக்கும் நெரிசல் குறைந்து விடுமே -

ஊராட்சி, பேரூராட்சிகளுக்கெல்லாம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் உரிய நிதி வழங்கி பட்டிதொட்டி முதல் பட்டினங்கள் வரை வளமை கொழிக்கும் பூமியாக தமிழகம் மாறி விடுமே -

இப்பொழுதே இருபது இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய அளவிற்கு தொழிற் சாலைகள் தொடங்கும் நிலை தோன்றியுள்ளதே -

ராமனாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம், ஒக்னேக்கல் குடிநீர் திட்டம் போன்ற பெருந் திட்டங்கள் எல்லாம் முடிவுற்று அந்தப் பகுதி மக்களின் தாகம் தணிந்து விடுமே -

சென்னையில் மட்டும் மையம் கொண்டிருந்த தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி தமிழகம் முழுவதும் பரவி விடுமே -

மாநிலத்திற்குள் ஓடும் நதிகளை இணைக்கும் திட்டமும் செயல்படத் தொடங்கி விட்டதே -

அனைத்து தரப்பினருக்கும் தனித்தனியாக வாரியங்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கெல்லாம் கோடிக்கணக்கான ரூபாய்க்கான உதவி நிதிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதே-

எல்லோராலும் மறக்கப்பட்ட அரவாணிகளுக்குக் கூட வாரியம் அறிவிக்கப்பட்டு விட்டதே -

அருந்ததியருக்கு தனி உள்ஒதுக்கீடு தர அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதே - என்று

இத்தனையும் - இன்னும் எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிவடையும் என்றால் பிறகு தன்னைப்

போன்ற - தன்னலச் சுகவாசிகளுக்கு தமிழ்நாட்டில் மதிப்பு - மரியாதை - மகிமை - மாண்பு என்று எந்த மண்ணாங்கட்டி தான் மிஞ்சப் போகிறது?

அதனால் இவையெல்லாம் கண்ணுக்கு இனிய சாதனைகளாக - கருத்துக்கு இனிய பணிகளாக விதைத்து, முளைத்து, வேரோடி, செடியாகி, கொடியாகி, பூத்துக் குலுங்குகின்ற புதிய தமிழ்நாட்டை-

மக்களும் காணாமல் - மனச்சாட்சியற்ற தானும் காணாமல் - அதற்குள் சாதனை புரியும் சரித்திரப் பொன்னேடாம், தி.மு. கழக ஆட்சியை இல்லாமல் செய்து விடுவது ஒன்றுதான் - பிறவி எடுத்த பயனாகும் என்றும், தன் இனத்துக்கு தேடித் தந்த வரப் பிரசாதம் என்றும் எண்ணுகிற ஜெயலலிதா,

விடுதலைப் புலிகளை நாம் ஆதரிக்கிறோம் என்று பொய்யான ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி மத்திய அரசிடம் மண்டியிடுகிறார், மக்களைப் பயமுறுத்துகிறார்.

அன்று மகாமகக் குளத்திலே நடத்திய மாயாஜாலங்களை மறைத்தது போல் இவரது ஆட்சியில் நடத்தப்பட்ட மகா பாதகங்களை மறைத்திடலாம் என்று - அந்தப் பாதகச் செயல்களால் பழிவாங்கப்பட்ட மக்கள், அரசு அலுவலாளர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் - இவர்கள் எல்லாம் அந்தக் கொடுமைகளை மறந்து விடுவார்கள் என்றும்; தவறுக்கும் தவறான தப்புக் கணக்குகளைப் போடுகிறார்.

விடுதலைப் புலிகளுக்கும், பிரபாகரனுக்கும் எம்.ஜி.ஆர். உதவிய அளவுக்கு அதில் கடுகளவு கூட கருணாநிதி உதவவில்லை என்றும் - பிரபாகரனுக்கு இலங்கையிலே ஒரு துன்பம் என்றால் தமிழ்நாடு எரிமலை ஆகுமென்றும், பூகம்பம் ஆகுமென்றும் இந்து, எக்ஸ்பிரஸ் நாளேடுகளுக்கு அளித்த சிறப்பு பேட்டிகளிலும் எச்சரித்த ஜெயலலிதா - அய்யோ; இன்றைக்கு விடுதலைப் புலிகளை இந்த அரசு எந்த வகையிலும் ஆதரிக்காமல் இருக்கும்போதே - அவர்களின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கும்போதே - மீறி நடப்பவைகளை தடை செய்து கடுமையான தண்டனைகளை வழங்கிக் கொண்டிருக்கும்போதே - அதற்கான புள்ளி விவரங்களை ஆதாரப் பூர்வமாக அவை நடுவே எடுத்துக் காட்டிய பிறகும் - அம்மையார்

ஜெயலலிதா ஆவேசமாக அலறுகிறார், ஆட்சியைக் கலை, கலை என்று அண்டப்புளுகுகளை அள்ளிக் கொட்டுகிறார்.

என் செய்வது? சகல சுக பாக்கியங்களுடனும், சப்ர கூட மஞ்சத்தில் அவர் சயனித்திருப்பதற்கும் -

சகல சௌபாக்கியங்களுடன் உல்லாச வாழ்வில் உருண்டு புரண்டு திளைப்பதற்கும் -

அவருக்கு தேவைப்படுகிறது பதவி, பதவி, பதவி, பதவி.

அதனால்தான் மத்தியில் உள்ள அரசைப் பார்த்து கூப்பாடு போடுகிறார் உதவி, உதவி, உதவி, உதவி என்று!

மக்கள் பணியே மகேசன் பணி என்று தொண்டாற்றும் இந்த மண்ணின் மைந்தர்களை ஆட்சியிலிருந்து விரட்ட வேண்டுமாம்! மக்களின் தலைகளை உருட்டிப் பந்தாடிய மாபாவிகள் மீண்டும் மகுடம் புனைய வேண்டுமாம்!

இதை ஏற்றுக் கொள்ள எமது தமிழ்நாட்டு மக்கள்

ஏமாந்த சோணகிரிகளா? இளித்தவாயர்களா? இல்லை, இல்லை, இல்லை!

அன்புள்ள,

மு.க.

19-2-2008

3326. நெஞ்சுக்கு நீதி 5ஆம் பாகம்!

உடன்பிறப்பே,

தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை மாவட்டத்தில் எங்கேயோ ஒரு சிற்றூர் “திருக்குவளை” எனும் கிராமத்தில் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மைக்கும் மகனாகப் பிறந்து இசையே குலத் தொழில் என்று தலையில் எழுதப்பட்ட விதியை மாற்றிக் கொண்டு இவ்வுலகில் இசைபட வாழ முடியும் என்ற இதய உரம் பெற்று; அந்த உரம் பெறும் வரத்தைப் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் எனக்களித்த காரணத்தால் அந்தப் பேறு பெற்று;

அதற்கேற்ப என் அகவையும் பல வரலாற்று நிகழ்ச்சிகளும் மைல் கற்களாக அமைந்து; அவற்றையெல்லாம் ஒற்றையடிப் பாதையில் நடந்து கடந்தும் - ஈருருளியில் பயணித்தும் - ரயிலில் - காரில் - விமானத்தில் பயணம் என்று முன்னேறியும் - எல்லாப் பயணமுமே பல்லோர் நல்லோர் - எல்லாம் பெற்று இனிது வாழவே எனும் இலட்சியமுடன் அமைந்து; அந்த இலட்சியத்தின் ஒவ்வொரு கட்ட வெற்றிக்கும் வியர்வையில் நீச்சலடித்து, பெரு மூச்சுப் புயலில், அலைக்கழிந்து அல்லாடி, கண்ணீரும் செந்நீரும் கலந்த களமே “பொது வாழ்வு” எனும் இலக்கணம் கற்று; கற்றதைப் போற்றி மற்றதையும் மதித்து; இந்த 83 ஆண்டுகளை என் வாழ்நாளில் கடந்து வந்து விட்டேன்.

உடன்பிறப்பே,

“நெஞ்சுக்கு நீதி” என்ற என் வரலாற்றுத் தொடரை நீ ஒரு முறை படித்துப் பார்த்தால் - நான் கடந்து வந்துள்ள காட்டாறுகளைக் காண்பாய் -

எதிர்ப்பட்டு மிரட்டிய எரிமலைப் பொழிவுகளைப் பார்த்திடுவாய் -

ஒன்றா? இரண்டா? ஓராயிரம் கணைகள் என் உடல் முழுதும் தைத்துள்ள கொடுமையை உணர்வாய்!

இன்றைக்கு நாடாளும் பொறுப்பு எனக்கு - ஆயினும் நம்மை நாயினும் கீழாய் மதிப்போர் உண்டு - அவரெல்லாம் யார்? நம்மை குனிந்து வணங்கியவர்கள்; இன்று துணிந்து வாள் ஓங்குகிறார்கள்; நமது முதுகுக்குப் பின்னால்!

"அண்ணே, அண்ணே" என அங்கமெலாம் பதற ஆசி கோரிட அணி வகுத்தவர்கள், இன்று நமை வதைக்கும் பிணியாகிப் போனார்கள் - அடடா; எப்படியெல்லாம் பாசம் பொழிந்தவர்கள் - அன்று போட்டது "பகல் வேடம்" என்பதை எப்படி உணர்த்தி யிருக்கிறார்கள் இன்று!

வஞ்சகர் கூட்டத்துக்கு மத்தியிலும் நெஞ்சம் நிறை நட்புடன் நம்மை நேசித்தவர்கள் - ஏன்; பூசித்தவர்கள் என்றும் நினைவை விட்டு அகலாத நேர்மையின் உருவங்களன்றோ?

அந்த நல்லோரையும் - தீச்செயலில் வல்லோரையும் - இணைத்து வரையப்பட்டது தானே என் வாழ்வின் அத்தியாயங்கள்!

உடன்பிறப்பே, நீ படித்துள்ள "நெஞ்சுக்கு நீதி" நான்கு பாகங்களும் - அந்த 2500 பக்கங்களில் - என் வாழ்வில் இலட்சிய தாகத்துடன் வந்தவர்கள் - வேறு தாகத்துடன் வெளியேறியவர்கள் - எல்லோரையும் சந்திக்கும் வாய்ப்பை உனக்கு அளித்துள்ளன.

"நான்காம் பாகம்" - நள்ளிரவு கைது படலத்துடன் நிறைவடைகிறது - ஐந்தாம் பாகம் எப்போது என்ற அவா மிகுந்திட கேட்கும் உன் போன்றோர்க்கு; எத்தனை நிகழ்வுகளை - எத்தனை மனிதர்களை - எத்தனை திருப்பங்களை - நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது? அந்த என் ஆசை நிறைவேறிட - இயற்கை இடம் தரும் என்ற நம்பிக்கையுடன் தொடங்கப்படுவதுதான், இதோ; இந்த

ஐந்தாம் பாகம்! ஒரு மாதம் பொறுத்திரு; பின்னர் ஓடி வரும் ஒவ்வொரு அத்தியாயமாக; உன் அன்பு அண்ணனின் "நெஞ்சுக்கு நீதி", ஐந்தாம் பாகம்!

அன்புள்ள,

மு.க.

22-2-2008

3327. சலுகை, சலுகை;
சகல உழவர்க்கும் உவகை, உவகை!

உடன்பிறப்பே,

இதோ இந்தக் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள படத்தினைப் பார்க்கவும். ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் வழிகாட்டும் தலைவரான திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களை டெல்லியிலே உள்ள அவரது இல்லத்தில் அகில இந்திய அளவிலே உள்ள விவசாயிகளின் பிரதிநிதிகள் சந்தித்து விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நம்பிக்கையுடன் முறையிடுகின்ற காட்சிதான் இது.

இந்த நேரத்தில் தமிழகத்திலே 2006ஆம் ஆண்டு, மே திங்களில் கழக அரசு பொறுப்பேற்ற நாளிலேயே - பதவிப் பொறுப்பேற்ற அந்த மேடையிலேயே - இயற்கைச் சீற்றத்தால் விளைந்த இடர்ப்பாடுகளால் "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்ற பெருமை குலைந்து ஏற்றமிகு வாழ்விழந்து நைந்த உழவர் பெருமக்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுத்து உதவிட வேண்டியது கழக அரசின் கடமை என்பதை உணர்ந்து - நான் கையெழுத்திட்ட கோப்புகளில் ஒன்றுதான் - 7000 கோடி ரூபாய்க்கான விவசாயிகளின் கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்ததாகும். இந்திய வரலாற்றிலேயே ஒரு மாநில அரசு இத்தனை கோடி ரூபாய் அளவிற்கு அதுவும் விவசாயிகளுக்கு கடனை தள்ளுபடி செய்த வரலாறு இதுவரை கிடையாது. அந்த வரலாற்றை முதன் முதலாக கொண்டு வந்த பெருமை நம்முடைய தமிழக அரசுக்கே உரியதாகும்.

நம்மை முன்னுதாரணமாகக் காட்டித்தான் மற்ற மாநிலங்களிலும், இந்திய அளவிலும் விவசாயக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து அதன் தொடர்ச்சியாகத்தான் திருமதி சோனியா காந்தி அம்மையாரை நேற்றையதினம் விவசாயிகளின் பிரதிநிதிகள் சந்தித்து விவசாயக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை

வைத்திருக்கிறார்கள். மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை வெளி வரவிருக்கின்ற இந்த நேரத்தில் இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகளுடன் சேர்ந்து அவர்களின் கோரிக்கையை நானும் பரிந்துரை செய்திடுகின்றேன்; ஜனநாயகத்தை மதித்துப் போற்றும் மாண்புடைய அம்மையார் உழவர் வேண்டுகோளை உரிய நேரத்தில் ஏற்பார் என்ற நம்பிக்கையுடனும் உறுதியுடனும்!

இந்தப் பரிந்துரையை மத்திய அரசுக்கு முன் வைத்திடும் நேரத்தில் கடந்த இரண்டாண்டு காலத்தில் தமிழகத்திலே விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அனைவரும் நினைவு கூர்ந்திடும் வகையில் பட்டியலிட்டுக் காட்டிட விரும்புகிறேன்.

7000 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவு கடன்களை ரத்து செய்ததையொட்டி, கூட்டுறவு வங்கிகள் நபார்டு வங்கிக்கு செலுத்தவேண்டிய ரூ. 1,668 கோடி அளவிற்கான கடன் பொறுப்புகளை தமிழக அரசே முழுமையாக ஏற்றுக் கொண்டது. அதற்காகவே 2006-2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவு திட்டத்தில் ரூ. 435 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

7000 கோடி ரூபாய் தள்ளுபடியினால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டும் வகையிலும், விவசாயிகளுக்கு தொடர்ந்து பயிர்க்கடன் வழங்கவேண்டியதை உறுதி செய்யும் வகையிலும், அந்த ஆண்டு திருத்த வரவு செலவு திட்டத்தில் ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் வாங்கும் பயிர்க்கடன்களுக்கு வட்டி அதிகமாக இருப்பதை கணக்கிலே எடுத்துக் கொண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் 2006 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேயே கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கு 9 சதவிகிதமாக இருந்த வட்டி விகிதத்தை 7 சதவிகிதமாக குறைத்து அறிவித்ததோடு, அவ்வாறு 2 சதவிகித வட்டிக் குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பையும் தமிழக அரசே ஏற்றுக் கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டது.

இதோடு விட்டு விடாமல், கடந்த 2007-2008 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது, இந்த வட்டி 7 சதவிகிதம் என்று இருந்ததை மேலும் 2 சதவிகிதம் குறைத்து 5 சதவிகிதமாக நமது அரசு ஆக்கியது.

கூட்டுறவு கடன்களை ரத்து செய்ததோடு, கூட்டுறவு இயக்கத்திற்கே புத்துயிரூட்டி

2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,153 கோடி அளவிலான புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து 2007-2008 ஆம் ஆண்டில் 1,360 கோடி ரூபாய் அளவில் பயிர்க் கடன்கள் வழங்கவும் நிதி நிலை அறிக்கையில் திட்டம் வகுத்து அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மற்றும் ஒரு திட்டமாக, விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டமாக, வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில், பத்து இலட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு செய்து கொள்ள நிதி உதவி செய்யப்படும் என்று அறிவித்து கடந்த ஆண்டு 15 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் குறித்து விவசாயிகள் மத்தியிலே போதுமான விழிப்புணர்ச்சி ஏற்படாத காரணத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுஅளவில் பயன்படுத்திக் கொள்ளப்பட வில்லை. தொடர்ந்து இந்த ஆண்டும் இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்திடுவது குறித்து பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழக விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலன் காக்க 2000 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசால் அமைக்கப்பட்டு, அடுத்து வந்த ஆட்சியில் கலைக்கப்பட்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம், தற்போது மீண்டும் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், மேலும் பல சலுகைகளுடன் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காகவே 2-9-2006 அன்று சட்டப் பேரவையில் "தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலச் சட்டம்" ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அந்தச் சட்டத்தின்படி,

விபத்துக் கால உதவிகள்

விபத்தில் விவசாயி இறந்தால் ரூ.1 இலட்சம்

இரு கைகளையும் இழந்தால் ரூ.1 இலட்சம்

இரு கால்களையும் இழந்தால் ரூ.1 இலட்சம்

ஒரு கை மற்றும் ஒரு கால் இழந்தால் ரூ.1 இலட்சம்

இரு கண்களும் பார்வையிழந்தால் ரூ.1 இலட்சம்

ஒரு கை இழந்தால் ரூ. 50 ஆயிரம்

ஒரு கால் இழந்தால் ரூ. 50 ஆயிரம்

வேறு கடுங்காயம் ஏற்பட்டு உடல் உறுப்பை இழந்தால் ரூ. 20 ஆயிரம்

❖ இயற்கை மரணம் நேர்ந்தால் ரூ. 10 ஆயிரம்

❖ ஈமச் சடங்குகளுக்காக ரூ. 2500

கல்வி உதவிகள்

❖ பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற

மகனுக்கு ரூ. 1250 ;
மகளுக்கு ரூ. 1500 ;

❖ பிளஸ் டூ தேர்ச்சி பெற்ற

மகனுக்கு ரூ. 1750 ;
மகளுக்கு ரூ. 2000 ;

இதே போல

❖ ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் படிப்புகள்

இளங்கலை - முதுகலை - தொழிற்பட்ட படிப்புகள் படிக்கும்-

வாரிய உறுப்பினரின் மகனுக்கும், மகளுக்கும் விடுதிச் செலவு உட்பட உதவித் தொகைகள் ஆண்டுக்கு ரூ.6750 வரை வழங்கப்படுகின்றன.

திருமண உதவி

ஆண் உறுப்பினர்க்கு ரூ. 3000;

பெண் உறுப்பினர்க்கு ரூ. 5000;

உறுப்பினரின் மகன் திருமணத்திற்கு ரூ.3000;

மகளின் திருமணத்திற்கு ரூ.5000;

கர்ப்பிணிப் பெண்களுக்கு

உதவித் தொகை ரூ. 6000;

பெண் உறுப்பினரின் கருச்சிதைவு/
கருக்கலைப்பு நிகழ்வுக்கு ரூ. 3000;

60 வயதில் முதியோர் ஓய்வூதியம் ரூ.400.

விவசாயிகளுக்காக இத்தகைய உதவிகள் எல்லாம் இந்த வாரியத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன.

22-2-2007 அன்று தஞ்சையில் நடைபெற்ற பெரிய விழாவில் என்னால் இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதோடு, ஏழை விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, ஓய்வூதியம், ஈமச்சடங்கு உதவி மற்றும் இழப்பீடு போன்ற பல்வேறு உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

31-1-2008 வரை இயற்கை மரணம் அடைந்த 27,576 விவசாயிகளுக்கு 31 கோடியே 90 லட்சத்து 42 ஆயிரத்து 750 ரூபாயும்; விபத்து காரணமாக உயிரிழந்த 1,056 விவசாயிகளுக்கு 9 கோடியே 88 லட்சத்து, 83 ஆயிரம் ரூபாயும்; வாரியத்தில் உறுப்பினர்களே திருமணம் செய்து கொண்டால் வழங்கப்படும் நிதி என்ற அளவில் 6,997 விவசாயிகளுக்கு 2 கோடியே 65 லட்சத்து 95 ஆயிரம் ரூபாயும்; வாரிய உறுப்பினர்களின் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு திருமணம் என்ற அளவில் 36,116 பேருக்கு 14 கோடியே 74 லட்சத்து 93 ஆயிரத்து 500 ரூபாயும், முதியோர் ஓய்வூதியமாக 76,875 விவசாயிகளுக்கு மாதந்தோறும் 11 கோடியே 13 லட்சத்து 60 ஆயிரத்து 279 ரூபாயும், மகப்பேறு உதவி நிதியாக 65,721 பேருக்கு 39 கோடியே 39 லட்சத்து 9 ஆயிரம் ரூபாயும், கல்வி உதவித் தொகையாக 10,089 பேருக்கு 2 கோடியே 48 லட்சத்து 35 ஆயிரத்து 600 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக இந்த இருபது மாதத்தில் 2,24,424 விவசாயக் குடும்பத்தினருக்கு 112 கோடியே 21 லட்சத்து 19 ஆயிரத்து 129 ரூபாய் நிதி உதவி வழங்கப் பட்டுள்ளது.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்க வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் இது வரை

வழங்கப்பட்டுள்ள நிலம் 1,61,000 ஏக்கர்

பயனாளிகள் 1,38,000 பேர்.

நெல்லுக்குத் தரப்படுகின்ற விலை போதாது என்றும், அதனை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்றும் விவசாயிகள் சார்பில் கோரிக்கை வந்ததின் அடிப்படையில், மத்திய அரசு அறிவித்த விலையான குவிண்டால் ஒன்றுக்கு 775 ரூபாயுடன் மாநில அரசு சார்பில் ஊக்கத் தொகையாக 50 ரூபாய் சேர்த்து இதுவரை இல்லாத அளவான குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 825 என்று நிர்ணயம் செய்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதனால் தமிழக அரசுக்கு 82.50 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்பட்ட போதிலும், தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன் கருதி இந்த முடிவு இந்த ஆண்டு எடுக்கப்பட்டது.

விவசாயிகளின் மகிழ்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, கழக அரசு ஏற்கெனவே அமைந்த கால கட்டத்திலேயே அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கவும், இடைத்தரகர் இன்றிக் குறைந்த விலையில் நுகர்வோர் காய்கறிகளைப் பெறவும் உருவாக்கப்பட்ட உன்னதத் திட்டம்தான் உழவர் சந்தைத் திட்டம். தமிழகத்தில் கழக ஆட்சிக் காலத்தில் 103 இடங்களில் உருவான உழவர் சந்தைகள், தொடர்ந்து வந்த ஆட்சியில் அலட்சியப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டன.

விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவிகளைச் செய்திடுவது என்பது தற்போது 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு என்றல்ல, தி.மு.கழகம் எப்போதெல்லாம் பொறுப்புக்கு வந்ததோ அந்தக் கால கட்டங்களில் எல்லாம் விவசாயிகளுக்கு உதவிகளைச் செய்து வந்துள்ளது என்பதற்கும் இதோ சில உதாரணங்கள்.

1967ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்திலேயே புஞ்சை நிலங்களுக்கான வரி அறவே ரத்து செய்யப்பட்டது.

1970ஆம் ஆண்டு கழக ஆட்சியில் 15 ஸ்டாண்டார்டு ஏக்கர் நில உச்ச வரம்புச் சட்டம் இயற்றப்பட்டு, 1 லட்சத்து 78 ஆயிரத்து 880 ஏக்கர் உபரி நிலங்களைக் கையகப்படுத்தி, 1 லட்சத்து 37 ஆயிரத்து 236 ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலம்

வழங்கப்பட்டது. அதில் 61 ஆயிரத்து 985 பேர் ஆதி திராவிடர்கள். 204 பேர் பழங்குடியினர்.

1971ஆம் ஆண்டில் கழக அரசில் இந்தியாவிலேயே முதன் முறையாக குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் வீட்டு மனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டன.

1990ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாக கழக ஆட்சியில்தான் விவசாயி களுக்கு இலவச மின்சாரம் என்று அறிவிக்கப்பட்டு, அமலாக்கப்பட்டது.

விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக அதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (ட்ராக் ரெண்ட்) 2000-2001ஆம் ஆண்டில் கழக ஆட்சியில் ரத்து செய்யப்பட்டது.

விவசாயத் தொழிலாளர்கள் நலன் குறித்து ஆராய்வதற்காக தி.மு. கழக அரசு 1997ஆம் ஆண்டில் அமைத்த திரு. கோலப்பன், ஐ.ஏ.எஸ்., தலைமையிலான குழுவின் பரிந்துரைகள்படி விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தப்பட்டது.

விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் நலனில் தி.மு. கழகமும், அதன் அரசும் தொடர்ந்து பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பதற்கு இவைகளைவிட சான்று வேறு தேவையில்லை என்றே கருதுகிறேன். தொடர்ந்து இந்த அரசு விவசாயிகளின் நலன்களுக்காகப் பாடுபடும்.

அன்புள்ள,

மு.க.

23-2-2008

3328. குல விளக்கே!
கொடியேந்தி வருக கடலூருக்கு!

உடன்பிறப்பே,

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவராக ஒரு பெண்மணி, பொறுப்பேற்க வேண்டும் என்ற நமது மகளிர் சமுதாயத்தின் விருப்பம் நிறைவேறிடும் வண்ணம்; டெல்லியில் திருமதி சோனியா காந்தி அவர்கள் தலைமையில் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தோழமைக் கட்சிகளின் தலைவர்களும்; தி.மு. கழகத்தின் சார்பில் நானும் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் - குடியரசுத் தலைவர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்படும் அம்மையாரை அறிமுகப்படுத்தும் முதல் நிகழ்ச்சியை - எழுச்சி மயமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் - இந்திய மக்களின் கவனத்தைக் கவரும் வண்ணம் அந்த அறிமுக நிகழ்ச்சி அமைய வேண்டும் என்றும் தீர்மானித்து; அந்த முதல் நிகழ்ச்சியை இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த நகரில் நடத்தலாம் என்ற கேள்வி எழுந்தபோது, நான் சொன்னேன் "சென்னை"யில் என்று!

அனைவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். எல்லாச் சிறப்புடனும் அந்த அறிமுக விழா நடைபெறும் என்ற நம்பிக்கையுடன் சென்னை திரும்பினேன். திருமதி பிரதிபா தேவிசிங் படீல் அவர்களைக் குடியரசுத் தலைவர் வேட்பாளராகத் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்திய அந்த நிகழ்ச்சி; சென்னையில் அதுவரையில் நடைபெற்ற அறிமுக நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் முத்தாய்ப்பாக அமைந்தது.

இந்தியாவின் முதல் பெண் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றிட நம்மிடம் வாழ்த்துப் பெற வருகிறார். இப்போதே

அவருக்குத் தமிழகத் தலைநகராம் சென்னை மாநகரில் வெற்றிக் கிரீடம் அணிவித்து, வாழ்த்தி வழியனுப்புவோம் எனச் சிற்றூர், பேரூர், நகரங்கள் உள்ளிட்ட எல்லாப் பகுதிகளிலுமிருந்து வீதிக்கு வீதி பல வீட்டுப் புலித் தமிழர்கள்; தம் வீட்டுக்கரசிகளுடன் இணை இணையாகவும் தையலார் தனித் தனியாகவும் நியாயத்தை உணர்ந்து கர்நாடக அரசுதான் காவேரியை விடுவித்து அந்தப் பெரு நதி தமிழகத்தில் கரைபுரண்டு ஓடுகிறதோ என ஐயுறும் வண்ணம் - அந்த அணிவகுப்பு மகத்தானதாக அமைந்தது. நெஞ்சில் இன்னமும் நிற்கும் அந்த நிகழ்ச்சிக்கு மகளிர் குல எழுச்சியே முழு முதற்காரணம்.

அந்த ஆலோசனைக் கூட்டத்திற்குச் சென்று விட்டு நானும் - என்னுடன் ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், மத்திய அமைச்சர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா மற்றும் பொன்முடி, எ.வ. வேலு ஆகியோரும் விமானம் மூலம் சென்னை திரும்பு வதற்குள், ஆயிரக்கணக்கான மகளிர் ஆங்காங்கு கையில் கழகக் கொடிகளுடன் அணி திரண்டு வாழ்த்தொலிக்கத் தொடங்கி விட்டனர். திராவிட இயக்கமாம் இந்த முற்போக்குப் பாசறையில் இன்று நேற்றல்ல, ஈரோட்டுக் கிழச் சிங்கம் அன்று கொட்டிய உரிமை முரசம்; பெரும்பகுதி பெண்களின் விழிப்புணர்வுக்கும், அவர்தம் வெற்றிகரமான முன்னேற்றத்திற்காகவும் அன்றோ - அவர் வழியிலும் - அறிஞர் அண்ணாவின் அமுத மொழியிலும் இந்த இளைய தலைமுறை தனது இதயத்தைப் பறிகொடுத்து; இன்று இலட்சியம் காத்திடும் ஈட்டி முனைகளாகியுள்ளன - அதன் அடையாளமே இந்த எழுச்சி எனச் சென்னை மாநகரம் அன்று சொல்லாமற் சொன்னதாகத்தான் அன்றைய குடியரசுத் தலைவர் வேட்பாளர் அறிமுகத்துக்கான அற்புத விழா அமைந்தது.

ஆட்சி மன்றங்களில் - அனைத்திலுமே - பெண்களுக்கு உரிய இடம் வேண்டும் எனத் தொடுத்த போருக்கு முதல் வெற்றி கிடைத்ததே இந்தத் தமிழகத்திலேதான்.

இதோ; தமிழகத்து மகளிர் விழிப்புணர்வுக்குக் காரணத்தை ஆய்ந்து; இன்று அவர்கள் பெற்றுள்ள வெற்றிக்கும், பெற இருக்கின்ற மகத்தான வெற்றிகளுக்கும் தி.மு.க. காரணமாக அமைந்துள்ளது என்ற பேருண்மையை பெருமதிப்புக்குரிய

காங்கிரஸ் இயக்கத்தின் பெருந்தலைவியார் திருமதி சோனியா காந்தி அம்மையார், கடலூர் மாநாட்டுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துக் கடிதத்தில் பதிய வைத்துள்ளதைப் படிக்கும்போது நம் உள்ளமெல்லாம் உவகைக்கூத்து ஆடுகிறதல்லவா?

அந்தக் களிப்பில்தான்; கடலூருக்கு வாரீர் என்று
கவிதைகள் வாயிலாக அழைத்தேன் -
கட்டுரையோ, கடிதமோ எழுதுவதை விட கவிதை
எழுதுவது கடினம் என்பது; எழுதுகிற என்
போன்றோருக்கு மட்டுமே தெரியும்!

எப்படி அழைத்தால் என்ன; அண்ணன் அழைக்கிறான் என்றால், அது அன்பழைப்புத் தானே - அன்று சென்னையில் அணி வகுத்தோமே; அதனையும் மிஞ்சிடும் வண்ணம் அணி வகுத்திடக் கடலூர் வந்திடுக என்று அழைப்பதாகத்தானே பொருள்!

இதோ; இந்தியத் திருநாட்டின் தியாக தீபம் சோனியா அம்மையார் இதயம் திறந்து எழுதியுள்ள வாழ்த்தைப் படித்துவிட்டு; இப்படியே வாழ்த்துக்களைப் பெற வேண்டுமென்ற துடிப்புடன் புறப்படுக கடலூர் என உன்னை அழைக்கிறேன்.

The State-level Conference of the women's wing of the DMK provides a welcome opportunity to project the remarkable achievements of the DMK and its women's wing in empowering women.

The DMK, under the enlightened leadership of Dr. Kalaignar, has been an ardent champion of equal rights for women. It was the first party to implement 33 percent reservation for women in local bodies, and has pioneered a number of schemes and projects to fore the social and economic empower of women. I hope these will serve as an inspiration and model for the rest of the country to follow.

I send my warm greetings to all those participating in the conference, congratulate them on their steadfast commitment to women's rights, and hope the conference results in much fruitful discussion and action.

SONIA GANDHI,
President, A.I.C.C., New Delhi.

(தி.மு.க.வின் மகளிர் அணி மாநிலமாநாடு, பெண்களுக்கு அதிகாரம் வழங்குவதில் தி.மு.க. மற்றும் அதன் மகளிர் அணி ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க சாதனைகளை முன்னெடுத்து வைக்க வரவேற்கத்தக்க வாய்ப்பை வழங்குகிறது.

டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவார்ந்த தலைமையின் கீழ் தி.மு.க. பெண்களுக்கு சமஉரிமை பெற்றுத்தர பாடுபட்டு வருகிறது. பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கிய முதல் கட்சி அதுதான். மேலும், பெண்களின் சமூகப் பொருளாதார அதிகாரங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக ஏராளமான திட்டங்களை தி.மு.க. முன்னோடியாக செயல்படுத்தியுள்ளது. இவையனைத்தும் நாட்டின் இதரப் பகுதிகளுக்கு உணர்வூட்டுவதாகவும், முன்மாதிரியாகவும் அமையும் என்று நம்புகிறேன்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். மகளிர் உரிமைகளில் அவர்களுக்குள்ள உறுதியான கடப்பாட்டைப் பாராட்டுகிறேன். இந்த மாநாடு பெரும்பயனுள்ள விவாதத்தையும் நடவடிக்கையையும் அளிக்கும் என்று நம்புகிறேன்.

சோனியா காந்தி
தலைவர், அகில இந்திய
காங்கிரஸ் கமிட்டி, புதுடெல்லி)

இரண்டு நாட்கள் - ஆம் - ஜூன் 14, 15 சனி, ஞாயிறு கிழமைகளில் கடலூர் புதுக்கோலம் கொள்ளப் போகிறது!

இரு நாட்களும் திருநாட்கள்தான் - இருண்ட சமுதாயம் ஒளி பெற - இலட்சிய விளக்குகளை ஏற்றி வைத்திட - இன்னும் இன்னும் இன்னும் - ஏராளமான விளக்குகள் ஒளிவிட இரண்டு நாள் மாநாட்டு நிகழ்ச்சிகளை அன்புத் தம்பி பன்னீர் செல்வம்; இரு கையில் ஏந்தி தந்துள்ள அழைப்பிதழ்கள் - கழகக் கொள்கை

முரசம்; எப்படியெல்லாம் ஒலிக்கப் போகிறது என்பதை விளக்கிடும் - கேட்டிடுக!

கடலூர் மாநாடு மகளிர் சமுதாயத்துக்கு எவ்வாறெல்லாம் வழிகாட்டப் போகிறது என்பதற்கு மாநாட்டு அழைப்பிதழை ஆழமாகப் படித்தாலே நாம் கடந்து வந்த பாதையையும் - இன்னும் கடந்திட வேண்டிய பாதையின் தொலைவையும் உணரலாம்.

அரசியல் அறிவு மட்டுமல்ல;
சமுதாய உணர்வும் பெற்றிட

இந்த மாநாடு மலை முகட்டில் ஏற்றி வைக்கும் விளக்கென அமையட்டும் -

ஆம்; அரசியல் மாநாட்டுக்குத் தலைமை
வகிக்கப் போகிறவர்
கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்
திருமதி சற்குணப்பாண்டியன் -
சமுதாய மாநாட்டுத் தலைமை
திருமதி காஞ்சனா கமலநாதன்

அழைப்பிதழிலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்

தி.மு.க. மகளிர் அணி
மாநில மாநாடு

2008 ஜூன் 14, 15 - (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில்

பேரறிஞர் அண்ணா நகர்,
பெரியார் வளாகம், கடலூர்.

மூவலூர் மூதாட்டி ராமாமிர்தம் பந்தல் -

அஞ்சுகத் தாய் மேடை -
ராணி அண்ணா அரங்கம் -

வெற்றிச்செல்வி அன்பழகன் முகப்பு
சத்தியவாணிமுத்து கொடிமேடை

2008 **ஜூன் 14 - சனிக்கிழமை - அரசியல் மாநாடு**

தலைவர் : திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், பி.ஏ.,

திறப்பாளர் : திருமதி சங்கரி நாராயணன், எம்.ஏ., எம்.எல்.ஏ.,

கொடியேற்றுபவர் : திருமதி வசந்தி கணேசன், எம்.ஏ., எம்.பில்.,

பேரணியை தொடங்கி வைப்பவர் :

திருமதி நூர்ஜகான் பேகம்

தொண்டர் அணித் தலைவர் :

திருமதி காரல் மார்க்ஸ், பி.ஏ.,

துணைத் தலைவர்கள்:

திருமதி காயத்ரி சீனிவாசன், எம்.ஏ., எம்.பில்.,

திருமதி பி.இராணி, எம்.ஏ.,

2008 ஜூன் 15 - ஞாயிற்றுக்கிழமை -

சமுதாய சீர்திருத்த மாநாடு

தலைவர் :

டாக்டர் திருமதி காஞ்சனா கமலநாதன், எம்.பி.,பி.எஸ்.,

தொடங்குபவர் : புதுக்கோட்டை திருமதி விஜயா, பி.ஏ.,

படத்திறப்பு

தந்தை பெரியார் : திருமதி கனிமொழி, எம்.ஏ., எம்.பி.,

பேரறிஞர் அண்ணா : திருமதி தமிழச்சி, எம்.ஏ., எம்.பில்.,

புரட்சிக் கவிஞர் : திருமதி வசந்தி ஸ்டான்லி,
எம்.ஏ.,பி.எல்., எம்.பி.,

முத்துலட்சுமி ரெட்டி : திருமதி ராஜம் ஜான்

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் : திருமதி வண்ணை தேவகி

மாநாட்டு நிறைவுப் பேருரை

தலைவர் கலைஞர்

சிறப்புரையாற்றுவோர் :

பொதுச்செயலாளர் பேராசிரியர்

துணைப் பொதுச்செயலாளர்

தளபதி மு.க.ஸ்டாலின், பி.ஏ.,

பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுவோர்

மாண்புமிகு சுப்புலட்சுமி ஜெகதீசன் - மாண்புமிகு ராதிகா செல்வி - மாண்புமிகு கீதா ஜீவன் - மாண்புமிகு தமிழரசி - டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா - தஞ்சை காரல் மார்க்ஸ் - திருமதி பவானி ராஜேந்திரன், எம்.பி - திருமதி விஜயா தாயன்பன் - புலவர் இந்திரகுமாரி - திருமதி கோமதி சீனிவாசன் - திருமதி வாசுகி முருகேசன் - திருமதி கயல்விழி (மு.க.அழகிரி) - திருமதி சித்திரமுகி சத்தியவாணிமுத்து, எம்.ஏ. - திருமதி ஜோன்ஸ் ரூசோ - திருமதி நளினி சாரங்கன், எம்.ஏ. எம்.பில்., - மேயர் திருமதி தேன்மொழி - மேயர் திருமதி ரேகா பிரியதர்சினி - திருமதி அங்கயற்கண்ணி, பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ. - திருமதி. ராணி, எம்.எல்.ஏ. - திருமதி பிரபாவதி, எம்.எல்.ஏ. - திருவாரூர் திருமதி விஜயகுமாரி - தஞ்சை முனைவர் இறைகார்குழலி பி.எச்.டி., -திருமதி வாசுகி ரமணன், எம்.ஏ., பி.எல்., - திருமதி தன்மானம் - திருமதி வேளாங்கண்ணி பொன்னிவளவன் - செல்வி சேலம் சுஜாதா - திருமதி செல்லப்பொன்னி மனோகரன் - செல்வி ரம்ஜான் பேகம் - செல்வி வகிதா பேகம், எம்.ஏ. எம்.பில்., - திருமதி ஜெசிந்தா, எம்.ஏ. - திருமதி நாகம்மை கருப்பையா - டாக்டர் புஷ்பலீலா ஆல்பன் -திருமதி ஈஸ்வரி ராதாகிருஷ்ணன் - செல்வி தாட்சாயிணி - திருமதி பா.மகாலட்சுமி - திருமதி சீதாபதி சொக்கலிங்கம், எம்.ஏ.,பி.எட்., - திருமதி மைதிலி ராஜேந்திரன், பி.எஸ்சி., - செல்வி மணிச்சுடர், பி.எஸ்சி.,

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,
செயலாளர், கடலூர் மாவட்ட தி.மு.க.
தலைமைக் கழகம், தி.மு.க.

உடன்பிறப்பே,

அனைத்தையும் வரிவிடாமல் குறிப்பிட்டு நினைவுபடுத்தியிருக்கிறேன் -

நீட்டோலை தீட்டியிருக்கிறேன் -
வாரீர்! வாரீர்! என வாஞ்சையுடன் அழைக்கிறேன் -
என் தங்கைகள் கடலெனக் கூடும்
கழக மங்கையர் மாநாடு - வாரீர்! வாரீர்!
“மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற
காடு, மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!

வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி!
புண்ணிற் சரம் விடுக்கும் பொய்ம்மதத்தின் கூட்டத்தைக்
கண்ணிற் கனல் சிந்திக் கட்டழிக்க வந்தவளே!”
என்ற புரட்சிக் கவிஞரின் பாடலை ஓங்கி ஒலித்து- உன்
மாதர் கூட்டத்தை அழைக்கின்றேன் -
வா! வா! மகளிர் மாநாட்டுக்கு!

அன்புள்ள,
மு.க.
13-6-2008

3329. புல்லரித்ததோ; செல்லரித்ததோ!

உடன்பிறப்பே,

ஏ யப்பா எங்கிருந்து வந்தனர் இந்த மகளிர்? வெண் புறாக்கள் - நீலப் புறாக்கள் - பச்சைப் புறாக்கள் - பவள நிறப் புறாக்கள் என - பல நூறு - பல்லாயிரம் - ஒரு லட்சம் - இரண்டு லட்சம் - மூன்று லட்சம் என்று தொகை தொகையாகப் பல லட்சம் பேரல்லவா பவனி நடத்தினர்! மாலை 4 மணிக்கு வந்து பேரணியைக் கண்ணுறும் மேடையில் நானும் பேராசிரியரும், பொருளாளர், முதன்மைச் செயலாளர் மற்றும் கழக முன்னணியினரும் அமர்ந்தவர்கள்; ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்து இரவு 9.30 மணி அளவில்தான் அங்கிருந்து மாநாட்டு மேடைக்குச் சென்றோம் என்றால் பேரணியின் பேருருவைச் சொல்லவும் வேண்டுமோ! கழக முன்னணித் தம்பிமார்கள் சிலர், சென்னை மாநகர மேயர் சுப்பிரமணியம், அமைச்சர் பொன்முடி, நெல்லிக்குப்பம் புகழேந்தி, கடலூர் புகழேந்தி, திருச்சி சிவா எம்.பி., ஆகியோரும் மற்றும் சிலரும் அந்த ஊர்வலம் பற்றி தொடர்ந்து ஒலி பெருக்கியில் வர்ணனை செய்து கொண்டே இருந்தனர். மகளிர் தொண்டர் அணியின் சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சீருடை அணிந்து வந்து அவர்கள் நடத்திய அணி வகுப்பு கண்கொள்ளாக் காட்சி! இன்னும் சில மாவட்டங்களிலிருந்து மகளிர் அணியைச் சேர்ந்தவர்கள் - ஆண்கள் மட்டுமே இதுவரை வாசித்து வந்த - இசைக் கருவிகளை தாங்களே முழக்கிய வண்ணம் அந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர். பேரணி முடிந்து இரண்டு நாட்கள் ஆகிய போதிலும், இன்னமும் அந்தப் பேரணி சென்று கொண்டிருப்பது போலவே தோன்றுகிறது. அந்தப் பேரணியை நினைக்கும்போதே நமக்கு இதயம் புல்லரிக்கிறது - சிலருக்கோ செல்லரிப்பது போல இருக்கிறது.

நான் ஒன்றும் சொல்ல வேண்டாம்; அதோ அதிகாலை நடைப் பயிற்சிக்கு வந்த நண்பர்கள் சிலர் பேசிக் கொண்டதை, நான் அப்போது கேட்டதை இப்போது நீங்களும் கேளுங்களேன்!

“என்ன வீரராகவன்? கடலூர் மாநாட்டுக்குக் குடும்பத்துடன் போய் வந்தீராக்கும்! மகளிர் மாநாடு அது! அங்கே உமக்கு அனுமதி உண்டா என்ன; பெண்கள் மாநாட்டில் பெண்களை மட்டும்தானே உள்ளே விடுவார்கள்!”

“உண்மைதான் - ஆனால் ஒன்று - ஆண்கள் மாநாட்டில் பெண்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் அல்லவா; அதுபோல பெண்கள் மாநாட்டில் என்னைப்போல ஒரு சில ஆண்களை அனுமதிப்பது ஒன்றும் தவறில்லையே?”

“ஆமா; ஆமாம்! ஆணுக்குத் துணையாக அவரின் மனைவியும் - மனைவிக்குத் துணையாக அவரது கணவனும் - சில சமயங்களில் துணையே இல்லாமல் இருவரில் ஒருவரும் - குறிப்பிட்ட விழா நிகழ்ச்சிகளுக்குச் சென்று வருவது இயல்புதானே! அந்த முறையில் இலட்சக்கணக்காக - அப்படி வந்த மக்கள் வெள்ளம்தான், கடலூர் வீதிகளில் பெருக்கெடுத்தோடியது.

ஜூன் 14, 15 நாட்களில் என்றால் அது மிகைப்படுத்திச் சொல்லப்படும் ஒன்றல்ல.”

“பரவாயில்லையே, ஏற்கெனவே டீசல் விலையை ஓரளவு குறைத்து ஏழையெளிய நடுத்தர மக்களின் வயிறைக் குளிர வைப்பதற்காக - மத்திய அரசின் சார்பில் பிரதமர் அவர்கள் விடுத்த வேண்டுகோளை மனத்தில் பதித்து, தமிழக அரசு அந்தச் சுமையை, அதாவது ஆண்டு ஒன்றுக்கு 260 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுக் கொண்டு அறிவிப்பு செய்தது. தொடர்ந்து அதுபோல மகளிர் மாநாட்டில் - மகளிரின் குறையை போக்குகின்ற வகையில் - நம்ப முதல்வர் அறிவித்திருப்பது சாமான்ய மக்களுக்கு மேலும் உற்சாகத்தை அல்லவா அளித்திருக்கிறது!”

“ஆமாம் சார், ஆமாம் - ஏதோ கூடினோம், கலைந்தோம் என்று இல்லாமல் மக்களுக்குத் தேவையான அவசர அவசியப் பிரச்சினைகளில் மாநாடு தனது முழுக் கவனத்தையும் செலுத்தியிருக்கிறது என்பதற்கு

அடையாளம்தான் "கியாஸ்" விலையைக் குறைத்து அறிவித்திருப்பதாகும். எங்க வீட்டிலேயே பொம்பளைங்களுக்கு ஒரே மகிழ்ச்சி! ஏகப்பட்ட பாராட்டுகள்! இரண்டே ஆண்டுகளில் என்ன சாதனை; எவ்வளவு சாதனை!"

"எது நேரினும் - அடுத்து தொடரும் கழக ஆட்சியும் இப்படித்தான் செயல்படும் - இப்படித்தான் மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகளில் தீவிர கவனம் செலுத்தும்."

"கிலோ அரிசி 2 ரூபாய்க்கு தருவோம்" என்பதிலே மாற்றமின்றி, நடந்து கொள்வது போலவே தேர்தல் அறிக்கையிலே சொன்னது முழுவதையும் நடைமுறைப் படுத்திக் காட்டுவோம் என்று அல்லவா செயல்படுகிறார்கள்."

"சொல்வதைச் செய்வோம் - செய்வதைத் தான் சொல்வோம்" என்ற நமது தேர்தல் வாக்குறுதியில் இழைந்தோடும் இந்த இனிய நாதம்; கடலூர் மகளிர் மாநாட்டில்; இலட்சிய முழக்கமாகவே ஒலித்ததல்லவா?

மக்களின் ஆதரவு கழகத்திற்கும், கழக அரசிற்கும் நாளும் வளர்வது கண்டு மக்கள் விரோதிகள்தான் ஏதோ வக்கணை பேசுவார்கள்! இந்த என் கருத்தை ஆமோதிப்பது போலத்தான் நடைப் பயிற்சியிலே நான்கு பேர் நடத்திய உரையாடல் அமைந்தது!

அன்புள்ள,

மு.க.

17-6-2008

3330. மத்திய மாநில அரசுகள்; மக்கள் அரசுகளே!

உடன்பிறப்பே,

நமது மாநில அரசு வெளியிடுகிற நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்படுகிற சுமார் 60 ஆயிரம் கோடி ரூபாய் தவிர; மத்திய அரசு 40 ஆயிரம் கோடி ரூபாய் நமது மாநிலத்துக்கு வழங்குவதாக ஒரு புள்ளி விவரம், மத்திய அமைச்சர்கள் சிலரால் கூறப்படுகிறதல்லவா; அந்தத் தொகை; நமது மாநிலத்துக்கு எந்த வழிவகையில் வழங்கப்படுகிறது என்பதற்கான விபரங்களையும்; நமது மாநில வரவு செலவுத் திட்ட அறிக்கையின் விபரங்களையும் விளக்கிட விரும்புகிறேன். உனக்கும், மத்திய மாநிலக் கணக்கு விபரங்களை அறிந்து கொள்ள விரும்பும் உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும் உதவிடும் என்பதால் இதனை ஒரு கடிதமாகவே எழுதியுள்ளேன்.

இந்தியாவுக்குள் ஒரு மாநிலத்தின் ஆண்டுக்கான திட்டம் மற்றும் வரவு செலவுக் கணக்கும் - மொத்தமாக இந்திய அரசு மாநிலங்களுக்கு பிரித்தளிக்கும் நிதி விபரத்துக்கும் - மத்திய அரசு வழங்கும் நேரடி நிதியை எப்படி மாநில அரசு பெறுகின்ற உரிமையுள்ளது என்பதற்கும் இந்த விளக்கம் பயன்படுமென்று நம்புகிறேன்.

சிங்கம் நடந்து வரும் போது, எவ்வளவு தூரம் எப்படி நடந்து வந்திருக்கிறோம் என்பதை பின்நோக்கி திரும்பிப் பார்த்துக் கொள்ளும், அதற்குப் பெயர் “அரிமா நோக்கு’’ என்பார்களே; அதைப் போல - ஐந்தாவது முறையாக தமிழகத்தின் முதல் அமைச்சர் பொறுப்பை 13-5-2006இல் ஏற்ற பிறகு, இதுவரை மூன்று நிதிநிலை அறிக்கைகள், மூன்று ஆளுநர் உரைகள் தமிழகச் சட்டமன்றத்திலே வைக்கப்பட்டு, அவற்றில் பல்வேறு அறிவிப்புகள் செய்யப்பட்டு, அவைகளையெல்லாம் தொய்

வில்லாமல் நிறைவேற்றி வருகின்ற நேரத்தில் ஒரு முறை திரும்பப் பார்த்துக் கொள்வது உசித மென்று நினைக்கிறேன்.

2006-2007 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையில் மொத்தம் 45 அறிவிப்புகள் செய்யப்பட்டு; அவற்றில் 32 அறிவிப்புகள் மீது அரசாணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நிறை வேற்றப்பட்டு முடிந்துள்ளன. 11 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு அறிவிப்புகள் மீது மட்டும் அரசாணை வெளியிடப்பட வேண்டியுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையில் மொத்தம் 23 அறிவிப்புகள் செய்யப் பட்டன; அவற்றில் 21 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் முடிவுற்று விட்டன. 2 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆணை வெளியிடப்பட வேண்டிய அறிவிப்புகள் எதுவும் மிச்சமில்லை.

2008-2009 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையில் 34 அறிவிப்புகள் செய்யப்பட்டன; 15 அறிவிப்புகள் மீது அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் முடிவுற்று விட்டன. 11 அறிவிப்புகள் மீது அரசாணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் 8 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட வேண்டியுள்ளது. ஆக ஆளுநர் உரைகளைப் பொறுத்தவரை இதுவரை மொத்தம் 102 அறிவிப்புகள் வெளியிடப்பட்டதில் 10 அறிவிப்புகள் மீது மட்டுமே அரசாணை வெளியிடப்பட வேண்டியது பாக்கியுள்ளது.

நிதி நிலை அறிக்கைகளில் என்று எடுத்துக் கொண்டால், 2006-2007 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மொத்தம் 186 அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. அவற்றில் 129 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் முடிவுற்று விட்டன. 46 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 11 அறிவிப்புகள் மீது தான் அரசாணை வெளியிடப்பட வேண்டியுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில், மொத்தம் 170 அறிவிப்புகள் - அவற்றில் 107 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் முடிவுற்று விட்டன. 52 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள்

நடைபெற்று வருகின்றன. 11 அறிவிப்புகள் மீதுதான் அரசாணை பிறப்பிக்கப்படாத நிலை.

2008-2009ஆம் ஆண்டுக்கான அதாவது இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், மொத்தம் 122 அறிவிப்புகள் - இவற்றில் 25 அறிவிப்புகள் மீது அரசாணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் அதற்குள் முடிவுற்று விட்டன. 35 அறிவிப்புகள் மீதான அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் 62 அறிவிப்புகள் மீது அரசாணை வெளியிடப்பட வேண்டியுள்ளது. அதற்கான கோப்புகள் எல்லாம் பல்வேறு துறைகள் வாயிலாக முடுக்கிவிடப் பட்டுள்ளன.

இவை தவிர சட்டப் பேரவை நிகழ்ச்சிகளில் தனியாக உரையாற்றும்போதும், பேரவை நடைபெறாத நேரங்களில் தனிப்பட்ட முறையில் அரசு செய்தி வெளியீடுகள் வாயிலாகவும் பல்வேறு அறிவிப்புகள் செய்யப்பட்டு அவைகள் மீதும் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே தமிழ்நாட்டில் சுமார் 41 ஆயிரம் கோடி மதிப்பீட்டிலான மத்தியத் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. தங்கபாலு அவர்கள் தெரிவித்துள்ளார். இதுகுறித்து பின்வருமாறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

மாநிலங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசின் பங்களிப்பு பொதுவாக இரண்டு வகையாக கிடைக்கப்பெறுகிறது. அவையாவன :-

1. மத்திய அரசின் பல்வேறு துறைகளின் கீழ் மாநிலங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

2. மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிதி உதவி

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 31-12-2007 அன்று உள்ள புள்ளி விவரங்களின்படி, மத்திய அரசின் பல்வேறு துறைகளின் கீழ் செயல்படுத்தப்படும் 69 திட்டங்களின் மொத்த திட்ட மதிப்பீடு ரூபாய் 41 ஆயிரம் கோடியாகும். இது மத்திய அரசின் அனைத்து மாநிலங்களுக்குமான 915 திட்டங் களுக்கான மொத்த மதிப்பீடாகிய சுமார் 3 இலட்சத்து 70 ஆயிரம் கோடியில் ஏறத்தாழ

11 சதவீதமாகும். மாநிலங்களின் பட்டியலை ஒப்பிடும்போது, மற்ற மாநிலங்களையெல்லாம் விட மொத்த திட்ட மதிப்பீடு தமிழ்நாட்டிற்குத்தான் அதிகம். மத்திய அரசின் மொத்தத் திட்டங்களில் 11 சதவீதம் நமது மாநிலத்திற்குக் கிடைத்துள்ளது என்பது பெருமைக்குரியதாக இருப்பினும், இது கூடங்குளம் மற்றும் கல்பாக்கம் அணுமின் திட்டங்கள் போன்ற நீண்டகாலமாக செயல்படுத்தப்பட்டு வரும் சில பெரும் திட்டங்களையும் உள்ளடக்கிய தொகை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு திட்டங்களுக்கான மதீப்பீடு மட்டுமே ரூபாய் 17 ஆயிரம் கோடியாகும். இவை தவிர, பெரும்பாலும் தேசிய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் இரயில்வேத்துறை மற்றும் சேது சமுத்திரத் திட்டம் ஆகியவற்றின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இப்போது அனைத்துத் திட்டங்களுக்கும் சேர்த்து மொத்தமாக இதுவரை சுமார் 22 ஆயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளது.

எனவே 41 ஆயிரம் கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடுகளைக் கொண்ட திட்டங்கள் தமிழகத்திலே நிறைவேற்றப்பட மத்திய அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்றபோதிலும், இந்த 41 ஆயிரம் கோடி ரூபாயும் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுவிட்டதாக பொருள் அல்ல. 2007-2008ஆம் ஆண்டிற்கு இத்தனை திட்டங்களுக்குமான ஒதுக்கீடு எவ்வளவு என்றால் 4,747 கோடி ரூபாய் தான்.

தமிழகத்திலே 41 ஆயிரம் கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றால், தமிழகத்திற்கு அடுத்த படியாக மராட்டியத்தில் 32 ஆயிரத்து 650 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் திட்டங்கள் தவிர, மாநில அரசுக்கு மத்திய அரசிடமிருந்து நேரடியாக கிடைக்கப்பெறும் நிதி உதவியானது, மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு மற்றும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவித் தொகை ஆகியவற்றை உள்ளடக்கிய தாகும். இவற்றில் வரிப்பங்கு நமது அரசியலமைப்பு சட்ட அடிப்படையில் மத்திய அரசு மாநில அரசுக்கு கட்டாயமாக வழங்க வேண்டிய ஒன்றேயாகும். இதன் அளவு மத்திய நிதிக் குழுவால் (Central Finance Commission) நிர்ணயிக்கப்பட்டு

அதன்படி மாநில அரசின் பங்கினை மத்திய அரசு வழங்குகிறது. மாநில அரசு மூலமாக நிறைவேற்றப்படும் மத்திய அரசின் திட்டங்களுக்கான (Centrally Sponsored Schemes) உதவி, மத்திய - மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டங்களுக்கான மத்திய அரசின் பங்கு, திட்ட உதவி (Plan Assistance) மற்றும் நிதிக் குழு மானியங்கள் ஆகியன உதவித் தொகை என்ற தலைப்பின் கீழ் வழங்கப்படுகின்றன.

இந்த அரசு பொறுப்பேற்றபின் கடந்த மூன்று ஆண்டுகளில் இவற்றின் கீழ் தமிழ்நாட்டிற்கு கிடைத்த தொகை வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

வ.எண்	ஆண்டு	மத்திய வரிகளில் பங்கு	உதவித் தொகை	மொத்தம்
1	2006 - 2007	6,394	3,325	9,719
2	2007 - 2008	8,065	6,532	14,597
3	2008 - 2009	9,497	5,576	15,073

2007 - 2008 மற்றும் 2008 - 2009 நிதி ஆண்டுகளில், மதிப்புக் கூட்டு வரி அமலாக்கம் மற்றும் மத்திய விற்பனை வரிக் குறைப்பு ஆகியவற்றிற்கான இழப்பீடு, மத்திய அரசிடமிருந்து உதவித் தொகையாக வழங்கப்படுவதால், உதவித் தொகை கணிசமாக உயர்ந்துள்ளது. மத்திய வரிகளில் கடந்த ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளதால் அதிலிருந்து மாநில அரசுக்கு வழங்கப்படும் பங்கும் உயர்ந்துள்ளது.

2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் மத்திய வரிகளில் பங்கு மற்றும் உதவித் தொகை சேர்த்து 8,033 கோடி ரூபாய் என்றிருந்ததற்கு மாறாக கடந்த ஆண்டான 2007-2008ஆம் ஆண்டு 14,597 கோடி ரூபாய் என்றும், 2008-2009ஆம் ஆண்டுக்கு 15,073 கோடி ரூபாய் என்றும் உயர்ந்திருப்பதைப் பார்க்கும்போது இந்த இரண்டரை ஆண்டுகளில் மத்திய உதவித் தொகை 7,049 கோடி ரூபாய் என்ற அளவிற்கு, அதாவது இரண்டு மடங்கு அளவிற்கு பெருகியிருப்பதைக் காணலாம்.

மத்திய அரசின் சார்பாக வருகின்ற வருவாயைத் தவிர்த்து - மாநில அரசின் மூலம் கிடைக்கின்ற வருவாய் என்ற அளவில்

மட்டும் எடுத்துக் கொண்டால் வணிக வரிகள், மாநில ஆயத் தீர்வைகள், முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள், வண்டிகள் மீதான வரிகள், ஏனைய வரிகள் மற்றும் வரி அல்லாத வருவாய்கள் என்ற தலைப்பில் தமிழக அரசுக்கு வருவாய் கிடைக்கின்றது.

2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் வணிக வரிகள் மூலமாக கிடைத்த வருவாய் 16,646 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு இந்த வருவாய் 20,798 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மாநில ஆயத் தீர்வைகள் என்ற தலைப்பில் 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 3,177 கோடி ரூபாயாக இருந்த வருவாய் 2008-2009இல் 5,330 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் என்ற தலைப்பில் 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 2,085 கோடி ரூபாயாக இருந்த வருவாய், தற்போது 4,889 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் மொத்த சொந்த வருவாய்கள் என்ற தலைப்பில் எடுத்துக் கொண்டால், 2005-2006இல் அ.தி.மு.க. ஆட்சியில் 25,927 கோடி ரூபாயாக இருந்த வருவாய், 2008-2009ஆம் ஆண்டு 36,433 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

மாநில வருவாயுடன், மத்திய அரசின் மூலமாக கிடைக்கின்ற வருவாயையும் சேர்த்துப் பார்த்தால், 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த வருவாய் வரவுகள் 33,960 கோடி ரூபாய். 2008-2009இல் கழக ஆட்சியில் மொத்த வருவாய் வரவுகள் 51,506 கோடி ரூபாய். 17,546 கோடி ரூபாய் இந்த இரண்டரை ஆண்டுகளில் வருவாய்க் கணக்கில் உயர்ந்துள்ளது.

வருவாய்க் கணக்கில் செலவுகள் என்று எடுத்துக் கொண்டால், 2005-2006இல் 32,009 கோடி ரூபாயாக இருந்தது, இந்த அரசு ஏழையெளியோருக்கு பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதால், 2008-2009இல் 51,422 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மூலதனக் கணக்கை ஒப்பிட்டுப் பார்க்கையில் அ.தி.மு.க. ஆட்சியில் மூலதனச் செலவு 4,055 கோடி ரூபாய் என்பதற்கு மாறாக இந்த அரசு அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை அதிக அளவிற்கு எடுத்துக் கொண்ட காரணத்தால் 2008-2009ஆம் ஆண்டில் 9,373 கோடி ரூபாய்

என்ற அளவிற்கு உயர்ந்து, அதன் காரணமாக மொத்த நிதிப் பற்றாக்குறை நடப்பு ஆண்டு 9,792 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்புடன் இதைக் கணக்கிடுகையில் 2.98 சதவிகிதம் என்ற அளவிற்கு நிதிப் பற்றாக் குறை அமைந்துள்ளது. இவ்வாறு அரசின் செலவினம் பெருமளவிற்கு உயர்ந்துள்ள போதிலும், நிதிப்பற்றாக்குறையின் அளவு பொருளாதார நிபுணர்கள் மற்றும் மத்திய அரசு நிர்ணயித்துள்ள நிதிநிலை இலக்குகளுக்கு உட்பட்டே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசின் வருவாய்க்கு ஈடாக பல்வேறு முக்கிய துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் உயர்ந்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா? நாளை; காண்போம்!

அன்புள்ள,

மு.க.

4-8-2008

3331. மத்திய மாநில அரசுகள்; மக்கள் அரசுகளே! (2)

உடன்பிறப்பே,

மத்திய, மாநில அரசுகளின் நிதிநிலை குறித்த சில விவரங்களையும், எந்தெந்த வகையில் எல்லாம் அரசுக்கு வருவாய் கிடைக்கிறது என்பதைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதற்காக சில விவரங்களை நேற்றைய கடிதத்தில் எழுதியிருந்தேன். அரசுக்கு வருகின்ற வருவாயைப் பற்றிக் குறிப்பிட்ட நான், அந்த வருவாய் எந்தெந்த துறைகளுக்கு ஒதுக்கப்பட்டது என்பதைப் பற்றி இன்று எழுதுவதாகத் தெரிவித்திருந்தேன்.

2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் ஒவ்வொரு துறைக்கும் நிதி நிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? கடந்த ஆண்டு கழக ஆட்சியில் 2008-2009இல் அதே துறைக்கு நிதி நிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

பள்ளிக் கல்வித் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 4,110 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 7,852 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 3,742 கோடி ரூபாய். இது 91 சதவிகித உயர்வாகும்.

ஊரக வளர்ச்சித் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 2,828 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 4,599 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் ஊரக வளர்ச்சித் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 1,771 கோடி ரூபாய். இது 62 சதவிகித உயர்வாகும்.

வருவாய்த் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 970 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 2,495 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் வருவாய்த் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 1,525 கோடி ரூபாய். இது 157 சதவிகித உயர்வாகும்.

வேளாண்மைத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 801 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 1,478 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் வேளாண்மைத் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 677 கோடி ரூபாய். இது 84 சதவிகித உயர்வாகும்.

ஆதி திராவிடர் நலத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 487 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 773 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் ஆதி திராவிடர் நலத் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 286 கோடி ரூபாய். இது 59 சதவிகித உயர்வாகும்.

நீதித் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 184 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 311 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் நீதித் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 127 கோடி ரூபாய். இது 69 சதவிகித உயர்வாகும்.

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 300 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 440 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 140 கோடி ரூபாய். இது 47 சதவிகித உயர்வாகும்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 314 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 454 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 140 கோடி ரூபாய். இது 45 சதவிகித உயர்வாகும்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 2,133 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 4,474 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 2,341 கோடி ரூபாய். இது 110 சதவிகித உயர்வாகும்.

மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 1,478 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 2,741 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 1,263 கோடி ரூபாய். இது 85 சதவிகித உயர்வாகும்.

நெடுஞ்சாலைத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 2,380 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 4,179 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 1,799 கோடி ரூபாய். இது 75 சதவிகித உயர்வாகும்.

உயர் கல்வித் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 744 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 1,254 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் உயர் கல்வித் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 510 கோடி ரூபாய். இது 68 சதவிகித உயர்வாகும்.

காவல் துறை உள்ளிட்ட உள்துறைக்கு 2005-2006 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 1,541 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 2,731 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் இத்துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 1190 கோடி ரூபாய். இது 77 சதவிகித உயர்வாகும்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 188 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 1,111 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 923 கோடி ரூபாய். இது 490 சதவிகித உயர்வாகும்.

தகவல் தொழில் நுட்பத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு வெறும் 17 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 781 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் தகவல் தொழில் நுட்பத் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 764 கோடி ரூபாய். இது 4494 சதவிகித உயர்வாகும். வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் இல்லாத வீடுகளுக்கெல்லாம் அவற்றை கழக அரசு வழங்கிக் கொண்டு வருவதால் இந்தத் துறைக்கு இந்த அளவிற்கு உயர்வாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 180 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 408 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் தொழிலாளர் நலத்துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 228 கோடி ரூபாய். இது 126 சதவிகித உயர்வாகும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 1,709 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 3,302 கோடி ரூபாய். மூன்றாண்டு

காலத்தில் கழக ஆட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 1,593 கோடி ரூபாய். இது 93 சதவிகித உயர்வாகும்.

தொழில் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 241 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 516 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் தொழில் துறைக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 275 கோடி ரூபாய். இது 114 சதவிகித உயர்வாகும்.

பொதுப்பணித் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 1,257 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 2,343 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் பொதுப்பணித் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 1,086 கோடி ரூபாய். இது 86 சதவிகித உயர்வாகும்.

சத்துணவு மற்றும் சமூக நலத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 654 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 1,734 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் விரிவாக்கப்பட்ட சத்துணவு திட்டம் மற்றும் சமூக நலத் திட்டங்களுக்கு மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 1,080 கோடி ரூபாய். இது 165 சதவிகித உயர்வாகும்.

போக்குவரத்துத் துறைக்கு 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 468 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு 670 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் போக்குவரத்துத் துறைக்கு மட்டும் உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 202 கோடி ரூபாய். இது 43 சதவிகித உயர்வாகும்.

ஓய்வூதியம் மற்றும் ஓய்வு நலப் பலன்களுக்காக 2005-2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு 4,489 கோடி ரூபாய். 2008-2009ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இதற்கான நிதி ஒதுக்கீடு 7,932 கோடி ரூபாய். மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வு நலப்

பலன்களுக்காக மட்டும் அதிகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு 3,443 கோடி ரூபாய். இது 76 சதவிகித உயர்வாகும்.

இந்த அளவிற்கு தி.மு.கழக ஆட்சியில் பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறு பல துறைகளுக்கான ஒதுக்கீடுகளை அதிகமாக்கிய காரணத்தால்தான், நான் நேற்று எழுதியவாறு 2008-2009ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூபாய் 51,422 கோடியாக மதிப்பிடப்பட்டது. இது 2007-2008ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளை விட 12.75 சதவிகித வளர்ச்சியை காட்டுகின்றது. அரசின் பல்வேறு துறைகளில் காலியாக இருந்த பணி இடங்களை நிரப்புதல் மற்றும் மக்கள் நலனுக்காக அரசு அறிமுகப்படுத்தியுள்ள பல்வேறு புதிய நலத் திட்டங்கள் ஆகியவற்றுக்கான கூடுதல் செலவுகள் ஆகியவையே இதற்குக் காரணமாகும். மாநில அரசின் சொந்த வரி வருவாயில் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் 76 சதவீதமாக இருக்கும். இதைத் தான் அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா; அரசின் மொத்த வருவாயில் 94 சதவிகிதம் அரசு அலுவலர்களுக்காக செலவழிக்கப்படுகிறது என்று பேசி, அப்போதே அதனை நான் புள்ளி விவரங்களோடு மறுத்து எழுதினேன்.

நேற்றைய என் கடிதத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் நண்பர் திரு. தங்கபாலு அவர்கள் சுமார் 41 ஆயிரம் கோடி மதிப்பீட்டிலான மத்திய திட்டப்பணிகள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறியதைப் பற்றி எழுதியிருந்தேன். அது தமிழகத்தில் நிறைவேற்றப்பட மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ள 69 திட்டங்களுக்கான மதிப்பீட்டுத் தொகையாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1-4-2007 வரை கிடைக்கப்பெற்ற புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது 62 திட்டங்களுக்கான துறை வாரியான விவரங்கள் ஏற்கெனவே வெளி வந்துள்ளன. அந்த விவரத்தையும் பார்த்தால் எந்தெந்த துறைகளின் சார்பில் தமிழகத்தில் மத்திய அரசின் திட்டங்களுக்கான ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக மட்டும் 24 திட்டங்கள் 7,494 கோடி ரூபாய்க்கான மதிப்பீட்டிலும் - கப்பல் மற்றும் துறைமுகத் துறையின் சார்பாக 3 திட்டங்கள் 2,566 கோடி ரூபாய்க்கான மதிப்பீட்டிலும் - தொலை தொடர்புத் துறையின் சார்பாக 4 திட்டங்கள் 1,080 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் - ரெயில்வே துறையின் சார்பாக 20 திட்டங்கள் 2,698 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் - அணுசக்தித் துறையின் சார்பாக 2 திட்டங்கள் 16,663 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் - விமானப் போக்குவரத்துத் துறையின் சார்பாக 4 திட்டங்கள் 128 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் - நிலக்கரி துறையின் சார்பாக 2 திட்டங்கள் 4,192 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் - எரிசக்தித் துறை சார்பாக 3 திட்டங்கள் 2,750 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் - மொத்தம் 62 திட்டங்களுக்காக 37,570 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட மத்திய அரசு ஒப்புதல் அளித்து, இதுவரை இந்தத் திட்டங்களுக்காக சுமார் 22,000 கோடி ரூபாய் ஒட்டு மொத்தமாகச் செலவழிக்கப்பட்டுள்ளது. செலவழிக்கப்பட்ட இந்த 22 ஆயிரம் கோடி ரூபாயில் அணுசக்தித் துறைக்கான 2 திட்டங்களுக்காக மட்டும் சுமார் பத்தாயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது என்பதும், எஞ்சிய 12 ஆயிரம் கோடி ரூபாய் எஞ்சிய 60 திட்டங்களுக்காக மத்திய அரசினால் செலவழிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. மத்திய அரசிடமிருந்து, மாநிலங்கள், மேலும் உரிமையுடன் எதிர்பார்த்திடும் நிதி ஆதாரங்களுக்கும், திட்டங்களுக்கும் இந்த என் கடித விளக்கம் மெத்தவும் பயன்படுமென நம்புகிறேன். மத்திய அரசும், மாநில அரசும் மக்கள் அரசுகள்தான் என்பதை மெய்ப்பித்திட இந்த நியாயமான நிதி ஒதுக்கீடும் தேவை என்பதுதானே நமது மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு கொள்கையின் முக்கிய கருத்தாகும். அந்த எதிர்பார்ப்பு தவறானதல்லவே! "மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்ற தத்துவத்தின் பிரதான அங்கங்களில் இதுவும் ஒன்றல்லவா?

அன்புள்ள,

மு.க.

5-8-2008

3332. எங்கள் முகமும்; உங்கள் முதுகும்!

உடன்பிறப்பே,

இன்றைய பா.ம.க. 'தமிழ் ஓசை' நாளேட்டிலும், மார்க்சிஸ்ட் நாளேடான தீக்கதிரிலும் மத்திய தேசிய துப்புரவு பணியாளர் ஆணையத்தின் தலைவர் திருமதி சந்தோஷ் சவுத்ரி தமிழக அரசை குறை கூறியதாக ஒரு பெரிய செய்தி; முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டுள்ளது.

மனித மலத்தை அள்ளும் துப்புரவு தொழிலாளர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு ரூ. 57.80 கோடி ஒதுக்கீடு செய்ததாகவும், அதில் ரூ. 24.52 கோடி மட்டுமே மாநில அரசு செலவிட்டுள்ளதாகவும், 33.28 கோடி ரூபாய் செலவிடப்படாமல் உள்ளது என்றும் இதுதவிர இந்த ஆண்டு தமிழகத்திற்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதுவும் செலவிடப்படாமல் மொத்தம் 54.28 கோடி ரூபாய் செலவிடப்படவில்லை என்று அந்த ஆணையத்தின் தலைவர் குறிப்பிட்டதாக அந்த ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழகத்திற்காக ரூ. 57.80 கோடி ஒதுக்கீடு செய்தது என்பது ஓராண்டு காலத்திற்கானதல்ல. இது 1992ஆம் ஆண்டிலிருந்து 2007-2008ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையாகும். இந்த ஒதுக்கீட்டில் 24.52 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டதாகக் கூறுவது தவறான புள்ளி விவரமாகும். 2007-2008ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் தமிழக அரசினால் செலவழிக்கப்பட்ட தொகை 35.03 கோடி ரூபாயாகும். கையால் மலம் அள்ளும் தொழிலில் இருந்து விடுவிக்கப் படுவதற்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் மறு வாழ்வுத் திட்டத்தில் தமிழகத்திற்கு மேலும் 21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுவும் செலவழிக்கப்பட

வில்லை என்று ஆணையத்தின் தலைவர் குற்றஞ்சாட்டியதாக அந்த ஏடுகள் கூறியுள்ளன.

ஆனால் இந்த 21 கோடி ரூபாய் கடந்த மாதம் தான் அதாவது 8-7-2008 அன்றுதான் தமிழகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையைத் தான் அந்த அம்மையார் இன்னும் தமிழக அரசு செலவிடவில்லை என்று கூறி, இந்த விவரத்தையெல்லாம் தெரிந்து கொள்ளாத நிலையில் அந்த ஏடுகள் தமிழக அரசை மத்திய ஆணையத் தலைவர் குறை கூறி விட்டார் என்று வெளியிட்டுக் கொண்டு தங்களுக்குத் தாங்களே தமிழக அரசு மீது ஏதோ பழிசுமத்தி விட்டோம் என்றளவில் பெருமைப்பட்டுக் கொள்ள முயன்றுள்ளன.

இதுபோன்ற மக்கள் நல்வாழ்வு திட்டங்களில் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும் விட தமிழ் மாநிலம் அதுவும் குறிப்பாக தி.மு. கழகம் எப்போதெல்லாம் ஆட்சியில் இருக்கிறதோ அப்போதெல்லாம் இதுபோன்ற கடைக்கோடியிலே உள்ள மக்களின் துயர் தீர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வருகின்றது என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளை என்னால் சொல்ல முடியும்.

அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற நான் சாதி, சமய வேறுபாடுகளை அகற்றி சமத்துவ சமுதாயம் அமைத்திட வேண்டும்; ஏழை எளிய தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் சமூக பொருளாதார அரசியல் விடுதலையினை படிப்படியாக எய்தி முன்னேற்றம் கண்டிட வேண்டும் என்று - அசைக்க முடியாத உறுதியுடனும், ஆழ்ந்த உணர்வுடனும் - பெரியார் அண்ணா வழியில் - தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு வருகிறேன் என்பதைத் தமிழக மக்கள் நன்கறிவார்கள். சமுதாயத்திலே மிகவும் தாழ்ந்த நிலையிலே உள்ளவர்களை - பலவீனர்களிலேயும் பெரிதும் பலவீனர்களாக உள்ளவர்களை - கைகொடுத்துத் தூக்கி விடவேண்டும்; ஒத்தாசையும் உதவியும் நல்கி உயர்த்தி விடவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு முறையும் தேடித்தேடிப் பார்த்து, புதிய புதிய திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறேன்.

உதாரணமாக

தொழுநோய் இரவலர் மறு வாழ்வுத் திட்டம்;

இலவச கண்ணொளி வழங்கும் திட்டம்;

கை ரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்;

குடிசை மாற்று வாரியத் திட்டம்;

பெண்களுக்கு சொத்துரிமை சட்டம்;

ஆதி திராவிடர்க்கு இலவச வீட்டு வசதி திட்டம்;

ஏழை மகளிருக்கு திருமண உதவித் திட்டம்;

கர்ப்பிணி பெண்களுக்கு 6000 ரூபாய் வழங்கும் திட்டம்;

கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டம்;

குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் திட்டம்;

நிலமற்ற விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம்;

வேளாண் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு திட்டம்;

ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம்;

கருணை இல்லங்கள்;

சமத்துவபுரங்கள்;

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதாந்திர நிதி உதவித் திட்டம்;

50 வயது கடந்த திருமணமாகாத பெண்களுக்கு நிதி உதவித் திட்டம் - என்று இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

இந்த வரிசையில் தற்போது குறை கூறப்பட்டுள்ள, மனிதக் கழிவினை மனிதனே அகற்றும் மனித நேயத்திற்கு எதிரான தொழிலில் ஈடுபட்டுள்ளோரைக் கண்டறிந்து இவர்களை மாற்றுத்

தொழில்களில் ஈடுபடுத்தி மறு வாழ்வு அளிக்கும் தேசியத் திட்டம் 1992ஆம் ஆண்டில் மத்திய அரசால் அறிமுகப் படுத்தப்பட்டது.

1993ஆம் ஆண்டில் இது குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, தமிழகத்தில் 35,561 பேர் மறு வாழ்வு பெறுவதற்கு தகுதியானவர்கள் என்று கண்டறியப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2007-2008 நிதியாண்டு வரை 29,291 பேர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தி.மு.க. ஆட்சி நடைபெறும் காலங்களில் எல்லாம் இத்திட்டத்தில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த 1996-97ஆம் ஆண்டு 2048 பேருக்கும், 1997-98ஆம் ஆண்டு 2534 பேருக்கும், 1998-99ஆம் ஆண்டு 2430 பேருக்கும், 1999-2000ஆம் ஆண்டு 1391 பேருக்கும், 2000-2001ஆம் ஆண்டு 2,954 பேருக்கும் இதற்கான மறுவாழ்வு நிதி உதவி வழங்கப்பட்டது. ஆக ஐந்தாண்டு கால தி.மு.கழக ஆட்சியில் உதவி அளிக்கப்பட்டது 11,357 பேருக்காகும்.

ஆனால் அதற்குப் பிறகு நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியிலே 2001-2002ஆம் ஆண்டில் 544 பேர்களுக்கு மட்டுமே மறுவாழ்வு நிதி உதவி தரப் பட்டது. 2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டப்படி ஒருவருக்குக் கூட மறு வாழ்வு நிதி உதவி தரப்படவில்லை. 2003-2004ஆம் ஆண்டில் வெறும் 13 பேருக்கும், 2004-2005ஆம் ஆண்டில் வெறும் 53 பேருக்கும், 2005-2006ஆம் ஆண்டில் 228 பேருக்கும் என்றளவில் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினருக்கு மட்டுமே இத்திட்டப்படி மறுவாழ்வு நிதி உதவி வழங்கப்பட்டது. ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் உதவி அளிக்கப்பட்டது வெறும் 838 பேருக்கு மட்டுமேயாகும்.

மீண்டும் தி.மு. கழகம் 2006ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற பின்னர் கடந்த இரண்டு நிதியாண்டுகளில் மட்டும் 5,459 பேருக்கு இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் நடப்பாண்டிலும் தொடர் திட்டமாக மத்திய அரசின் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கூறியவாறு, இத்துப்புரவு தொழிலில் ஈடுபட்டுள்ளதாகக் கண்டறியப்பட்ட தொழிலாளர்களில் சுமார் 83 சதவிகிதம் பேர் மாற்றுத் தொழில் உதவி பெற்றுள்ளனர். இத்தொழிலாளர்கள் அதிகம் நிறைந்த மாநிலங்களில், இத்திட்டத்தை நிறைவேற்று வதில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

தமிழக அரசை இந்தப் பிரச்சினையிலே குறை கூறும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்தி வரும் மேற்கு வங்காளத்தில் 23,852 பேர் இந்த இழிவான தொழிலில் ஈடுபட்டவர்களாக கண்டறியப்பட்டு 2,338 பேர்களே இதுவரை மறுவாழ்வு கிடைக்கப் பெற்றுள்ளனர் என்று மத்திய அரசின் சமூக நீதித் துறை புள்ளி விவரம் தெரிவிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இது வெறும் 10 சதவிகிதமே ஆகும். இதேபோன்று, கேரள மாநிலத்திலும் கண்டறியப்பட்ட 1,339 பேர்களில் 10 சதவிகித அளவிலேயே அதாவது வெறும் 141 நபர்களுக்கு மட்டுமே மாற்றுத் தொழில் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

2007-2008ஆம் ஆண்டில் மத்திய அரசு இம் மறுவாழ்வுத் திட்டத்தை திருத்தியமைத்து இத் தொழிலில் ஈடுபட்டிருந்தோரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது. தமிழக அரசு இதற்காக ஒரு புதிய ஆய்வை மேற்கொண்டு செய்தித் தாள்களில் விளம்பரம் செய்து 22,811 பயனாளிகளைக் கண்டறிந்து 52.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் வகுத்து தேசிய துப்புரவுத் தொழிலாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் ஒப்புதலையும் பெற்று செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 13,101 பயனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்புப் பயிற்சி 18.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 20,000 பயனாளிகளுக்கு சுயதொழில் புரிய மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் அளிக்க 34 கோடி ரூபாய் மானியம் அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தூய்மைப் பணி புரிவோர் நலத்தில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு தூய்மைப் பணி புரிவோர் நல வாரியத்தை அமைத்ததோடு மட்டுமல்லாது இப்பணிகளில் பெரும்பாலும் ஈடுபடும் அருந்ததிய இனத்தவருக்கு உள் ஒதுக்கீடு

அளிப்பதற்காக நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம் அவர்கள் தலைமையில் குழுவும் அமைத்துள்ளது.

இந்த விபரங்களை யெல்லாம் தெரிந்து கொள்ளாமலும் - தெரிந்து கொள்ள முயற்சி மேற்கொள்ளாமலும் சென்னைக்கு வந்த தேசிய துப்புரவு பணியாளர் ஆணையத்தின் தலைவர், தமிழக அரசைக் குறை கூறி நிருபர்களிடம் கருத்தறிவித்ததாக வந்துள்ள செய்திக்காக வருந்துகிறேன். பொறுப்புள்ள பதவிகளில் இருப்பவர்கள் பொறுப்புடன் பேசுவது தான் முறையாகும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அம்மையார் கூறியதிலே எந்த அளவிற்கு உண்மை இருக்கின்றது என்று தெரிந்து கொள்ளக் கூட முன் வராமல், ஏதோ இந்த அரசைக் குறை கூறியிருந்தால் அதுவே மகிழ்ச்சி என்ற அளவில் கொட்டை எழுத்திலே செய்தி வெளியிட்டிருப்பதையும் பார்க்கும் போது "ஏ, தாழ்ந்த தமிழகமே" என்று அண்ணா கூறியதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

அன்புள்ள,

மு.க.

24-8-2008

3333. பண்பாளர்களும்; வீண் வம்பாளர்களும்!

உடன்பிறப்பே,

நோபல் பரிசுக்கு இணையாக, ஸ்வீடன் நாடு வழங்கும் இந்த ஆண்டுக்கான "வாழ்வுரிமை விருது" - தமிழகத்தைச் சேர்ந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் வாழும் கிருஷ்ணம்மாள் - சங்கரலிங்கம் ஜெகந்நாதன் தம்பதியருக்கு வழங்கப்பட்ட செய்தி நேற்றைய தினம் ஏடுகளில் வெளிவந்திருந்ததைப் படித்து மகிழ்ச்சி அடைந்து அவர்களுக்கு எனது பாராட்டினை ஏடுகள் வாயிலாகத் தெரிவித்திருந்தேன்.

திருமதி கிருஷ்ணம்மாள் - தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். ஏழையெளிய குடும்பத்தில் பிறந்தவர் என்றபோதிலும், கஷ்டப்பட்டு பல்கலைக் கழகம் வரை பயின்றவர். இளம் வயதிலேயே காந்தி அடிகளின் சர்வோதய இயக்கத்தில் ஈடுபட்டவர். அந்த இயக்கத்தைச் சேர்ந்த ஜெகந்நாதன் அவர்களின் ஒத்துழையாமை இயக்கத்திலே இணைந்து, முழு நேர காந்தீயத் தொண்டராகப் பணியாற்றி வந்தவர். இந்தியா விடுதலை பெற்ற பிறகுதான் திருமணம் செய்து கொள்வதென்ற உறுதியோடு இருந்து; அவ்வாறே விடுதலை பெற்ற பிறகு 1950இல் இருவரும் திருமணம் செய்து கொண்டு - 1953 முதல் 1997 வரை வினோபா பாவே அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட பூதான இயக்கத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பாக பணியாற்றி வருகின்றார்கள்.

இந்தத் தம்பதியர் 1998ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே நடைபெற்றபோது - டாக்டர் அம்பேத்கர் மக்கள் சங்கத்தின் சார்பாக - ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 550 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி, நன்னிலம் ஆகிய வட்டங்களில் உள்ள

565 ஏக்கர் நிலங்களை - ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் என்ற திட்டத்தின் கீழ் வழங்கி, அதற்கான கொடை ஆவணங்களை (Gift Deed) பதிவு செய்யும் போது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்துக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை யினை வைத்தனர். தி.மு. கழக ஆட்சியில் அந்தக் கோரிக்கை 29-4-1998 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலே வைக்கப்பட்டு, அமைச்சரவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கான ஆணையும் அப்போதே பிறப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் 12-3-2001இல் - தி.மு.கழக ஆட்சி மாறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு - டாக்டர் அம்பேத்கர் மக்கள் சங்கம் தனது முதல் கோரிக்கையைத் தொடர்ந்து மற்றொரு கோரிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பியது. அதிலே அந்த நிலங்களை ஆதி திராவிட மக்களுக்கு விற்பனை ஆவணங்கள் (Sale Deed) மூலமாக வழங்க உத்தேசித்துள்ளதாகவும், எனவே அரசின் ஆணையில் கொடை ஆவணம் என்று இருப்பதற்குப் பதிலாக "விற்பனை ஆவணம்" என்று சிறிய திருத்தம் செய்து புதிய அரசாணை வெளியிட்டு உதவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

இந்தக் கோரிக்கையை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி, அவரும் இதனை ஏற்றுக் கொள்ளலாம் என்று பரிந்துரை செய்து அரசாங்கத்திற்கு கோப்பினை அனுப்பினார். இதற்கிடையில் தமிழகத்தில் பொதுத் தேர்தல் நடைபெற்று, அம்மையார் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி அமைகிறது.

2001ஆம் ஆண்டு அம்பேத்கர் மக்கள் சங்கத்தின் சார்பில் வைக்கப்பட்ட அந்தத் திருத்த கோரிக்கை, அ.தி.மு.க. அரசின் சட்டத் துறையினால் பரிந்துரை செய்யப்பட்டு, அடுத்து வணிக வரித் துறையும் ஏற்றுக் கொண்டு, நிதித் துறையும் மறுப்பு எதுவும் சொல்லாமல் ஒப்புதல் தந்து, முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் ஒப்புதல் கையெழுத்துக்காக கோப்பு 18-6-2003 அன்று அவரது அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.

அம்மையாரின் செயலாளர் அந்தக் கோப்பு அமைச்சரவையிலே வைக்கப்படலாமா என்று அதிலே எழுதி, அதற்கான பதிலை மீண்டும் சுற்றுக்கு அனுப்புமாறு தெரிவித்து கோப்பினை துறைக்கே

திருப்பி அனுப்பி வைக்கிறார். முதல் அமைச்சரே அந்தக் கோப்பிலே அமைச்சரவையிலே விவாதிக்கலாம் என்று எழுதி கோப்பினை அனுப்பியிருந்தால், அதற்கடுத்த அமைச்சரவையிலே அது விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டிருக்கும். ஆனால் துறைக்கே கோப்பு திரும்ப அனுப்பப்பட்டு விட்டதால், அமைச்சரவையிலே விவாதிக்கலாம் என்று துறை சார்பில் பதில் எழுதி, அந்தக் கோப்பு மீண்டும் ஊர்வலமாக அனுப்பப்பட்டு, அதன் பயணம் 25-6-2003 அன்று தொடங்கி, 16-11-2004 அன்று தான் அதாவது அந்தக் கோப்பு மொத்தம் 17 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் முதல் அமைச்சர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தது.

முதலமைச்சர் ஜெயலலிதா, தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினை ஆயிற்றே, பல மாதங்களாக அவர்கள் காத்திருக்கும் பிரச்சினை ஆயிற்றே என்று கவலைப்பட்டு உடனடியாக அந்தக் கோப்பிலே கையெழுத்து போட்டாரா? இல்லை. கோரிக்கை என்ன? அம்பேத்கர் மக்கள் சங்கத்தினர் 550 ஏழை தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்குவதை பதிவு செய்யும் போது "கொடை ஆவணம்" என்பதை "விற்பனை ஆவணம்" என்று அரசாணையில் சிறு திருத்தம் செய்து புதிதாக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கை. அந்தக் கோப்பு முதலமைச்சர் அலுவலகத்திலே ஒரு மாதத்திற்குப் பிறகாவது கையெழுத்தாகியதா? இல்லை. இரண்டு மாதங்களுக்குப் பிறகாவது விடிவு பிறந்ததா? இல்லை, இல்லவே இல்லை.

முதலமைச்சர் அலுவலகத்திற்கு 2003 ஆம் ஆண்டு சென்று, முதல்வரின் செயலாளரால் திரும்ப அனுப்பப்பட்டு, மீண்டும் 2004ஆம் ஆண்டு சென்ற அந்தக் கோப்பு 2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்று, அ.தி.மு.க. ஆட்சி வீட்டுக்குச் செல்கிற வரையில் முதலமைச்சர் அலுவலகத்திலே தூங்கிக் கொண்டிருந்ததே தவிர, முதல்வரின் கையெழுத்து கிடைக்கவில்லை. 2006ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தக் கோப்பு என்னிடம் வந்து நான் 11-9-2006 அன்று அந்தக் கோப்பிலே உள்ள கோரிக்கையினை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டு அனுப்பி வைத்தேன். ஆனால் இன்றையதினம் நம்மைப் பார்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித்

தலைவர்களில் ஒருவரான பெரியவர் நல்லகண்ணு அவர்கள் தி.மு.கழக அரசு இனியாவது தூங்காமல் பணியாற்ற வேண்டுமென்று அறிவுரை கூறுகிறார்; இடித்துரையாக!

என்னை நன்றாக அறிந்த பெரியவர் நல்லகண்ணு போன்றவர்கள் அப்படிக் கூறியபோதிலும், ஸ்வீடன் நாட்டு வாழ்வுரிமை விருதைப் பெற்ற திருமதி கிருஷ்ணம்மாள் அவர்கள் இன்று காலையில் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றினை நான் காண நேரிட்டது. அந்தப் பேட்டியில் அவர் கூறியுள்ளார் - "மதுரையில் இருந்து இங்கு வந்து வேலை செய்யணும்னு சொன்னா கலைஞர் போல ஒரு மாமனிதர் எங்களுக்கு உடனிருந்து ஒவ்வொரு நேரத்திலேயும் ஒவ்வொரு காரியத்திலேயும் ஈடு கொடுக்காட்டிபோனா இந்த வேலையை இங்க செய்ய முடியாது. எங்களுக்கு இப்படிப்பட்ட பன்னாட்டு விருதும் கிடைக்காது. இதற்கு உறுதுணையாய் இருந்த கலைஞருக்கு நாங்க நன்றி சொல்ல மிக மிக கடமைப் பட்டிருக்கிறோம் நாங்கள் ரெண்டு பேரும்."

இந்தப் பேட்டியைக் கேட்டபோது, இன்றைய "ஜனசக்தி" நாளேட்டில் அந்தக் கட்சியின் தலைவர்கள் நம்மை ஏசிப் பேசி வெளிவந்துள்ள செய்திகளுக்கு பெரிதும் மாறுதலாகவும், ஆறுதலாகவும் இருந்தது.

அந்தக் கட்சியில் நான் பெரிதும் மதிக்கின்ற மற்றொரு தலைவர் திரு. ஏ.எம். கோபு அவர்கள். அவர் கூட கருணாநிதி ஆட்சியிலே சிறைக்குச் சென்றோம் என்று பேசியிருக்கிறார். அவரை சிறைக்கு அனுப்ப வேண்டுமென்று கனவிலே கூட நினைப்பவனல்ல நான். இன்னும் சொல்லப்போனால் பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள்; அவர்கள் வசிப்பதற்கு வீடு இல்லாமல் சிரமப்படுகிறார்கள் என்ற செய்தியை அறிந்ததும், 24 மணி நேரத்தில் அவர்களுக்கு அரசு சார்பில் ஒரு வீட்டினை ஒதுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தவன் நான். எனது உணர்வுகளை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

அந்தக் கட்சியின் மற்றொரு தலைவரான தா.பாண்டியன் நேற்று பேசும்போது "தேசப்பற்று மிக்க தலைவர்களை மதித்த

அன்றைய முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் எங்கே? இப்போது உள்ள முதல்வர் எங்கே?" என்று கேட்டிருக்கிறார். ஓமந்தூரார் அளவிற்கு அவரோடு என்னை ஒப்பிட்டுக் கொள்ள நான் தயாராக இல்லை. இருந்தாலும் அவருடைய பெயரையே சென்னையிலே உள்ள அரசினர் வளாகத்திற்கு பெயராகச் சூட்டி மகிழ்ந்தவன் நான் என்பதும், தேசப் பற்று மிக்க தலைவர்களை மதிக்க நான் என்றும் தயங்கியதில்லை என்றும், அதற்கான முழு பட்டியலையும் தா.பாண்டியனுக்கு தரவேண்டு மென்றால் அதற்கும் தயாராக இருக்கிறேன் என்பதையும், தியாகிகள் மணி மண்டபம் தொடங்கி, ப. ஜீவானந்தம், விஸ்வநாத தாஸ், பாஷ்யம் என்ற ஆர்யா, செண்பகராமன், பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் ராஜாஜி, பெரியவர் பக்தவத்சலம், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், பூலித்தேவன், தில்லையாடி வள்ளியம்மை என்று தேசப் பற்று மிக்க அத்தனை தலைவர்களையும் மதித்து அவர்களுக்கு உரிய இடத்தைத் தந்து பெருமையடைந்தவன்தான் இந்தக் கருணாநிதி என்பதையும் தா. பாண்டியன் அறியாவிட்டாலும், அந்தக் கட்சியிலே "தொடர்ந்து" உள்ள மற்ற தலைவர்கள் நன்றாகவே அறிவார்கள்.

அவரே மேலும் "இன்றைய முதல்வர் சொல்வதற்கெல்லாம் நாங்கள் தலையாட்டினால் கம்யூனிஸ்டுகள் மிகவும் நல்லவர்கள் என்பார். இல்லையென்றால் மோசமானவர்கள் என்பார்" என்றும் சொல்லியிருக்கிறார். தா. பாண்டியன் அவர்களே, நான் சொல்வதெற்கெல்லாம் நீங்கள் தலையாட்டினாலும், இல்லையென்றாலும் உங்களையெல்லாம் நல்லவர்கள் என்றுதான் இப்போதும் கூறுகிறேன். கம்யூனிஸ்ட்கள் மோசம் என்று எப்போதும் நான் கூறமாட்டேன். கம்யூனிஸ்ட் தலைவர்கள் மாறலாம், கம்யூனிசம் மாறாது என்பதை நன்றாக அறிந்தவன் நான்.

வீட்டு மனை வழங்க அரசு மறுக்கின்றது என்றும் தா. பாண்டியன் சொல்லியிருக்கிறார் - பல முறை அரசின் சார்பில் விளக்கம் அளித்த பிறகும். தி.மு. கழக ஆட்சி ஐந்தாவது முறையாக 2006 மே திங்களில் பொறுப்பேற்ற பிறகு இந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 6 லட்சத்து 4 ஆயிரத்து 700 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இலவச வீட்டு மனைப் பட்டா குறித்து தமிழகத்திலே இந்த அளவிற்குக் குரல் எழுப்புவோர்,

மேற்கு வங்கத்திலும், கேரளத்திலும் எத்தனை இலட்சம் பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற புள்ளி விவரத்தைத் தருவார்களேயானால், தமிழகத்திலும் அதனைப் பின்பற்றுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

பழைய உறவில் பாண்டியனுக்கு ஒரு வேண்டுகோள். நீங்கள் எழுப்பும் கேள்விகளுக்கு தரப்படுகின்ற பதில்கள் பத்திரிகைகளில் வருவதையாவது தயவுசெய்து படியுங்கள்.

அன்புள்ள,

மு.க.

5-10-2008

3334. "பத்திரிகா தர்மம்" படும்பாடு

உடன்பிறப்பே,

தொடர்ந்து உனக்கு; "நாட்டு நிலவரங்கள் - கழகத்தின் நிலை - மாற்றுக் கட்சியினர் கருத்துகளுக்கு மறுப்பும் விளக்கமும்" - என்ற வகையில் கடிதம் எழுதும் நான்; இன்றைக்கு இலங்கைத் தமிழர் இன்னல் துடைத்திடவும், அங்கே போர் நிறுத்தம் ஏற்படவும், மத்திய அரசின் துணைநாடி மயிலைப் பொதுக்கூட்டத்தில் வெளியிட்ட கருத்துகளை; தீர்க்கமாகவும் - தெளிவாகவும் - அவற்றுக்கு மாறாக திரித்தும் வெளியிட்ட சில ஏடுகளை அடையாளம் காட்டி; விழிப்பாக இருப்போம் என எச்சரிக்கவே இந்தக் கடிதம்; சில ஏடுகளின் செய்திகளைத் தொகுத்து உனக்கு எழுதியுள்ளேன். நமது எழுச்சியை, தமிழர்களின் உணர்ச்சியை, வெறிபிடித்த சிங்களவர்களால்கூட புரிந்து கொள்ள முடிகிறது; ஆனால், இங்குள்ள சிறு நரிகள், சிலந்திப் பூச்சிகள் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கின்றன. இந்த என் கடிதத்தை திரும்பப் படித்தால் உனக்கும் அவர்கள் யாரென்று தெளிவாகப் புரியும்.

புதுடெல்லியில் இருந்து வெளிவரும் 7.10.2008 நாளிடப்பட்ட "தி எகனாமிக் டைம்ஸ்" என்ற ஆங்கில நாளேட்டில், "தி.மு.க. கொடுத்த அழுத்தத்தினால் இலங்கை நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது" என்ற தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள செய்தி வருமாறு :

"இலங்கையில் ராணுவ நடவடிக்கைகளின் காரணமாக தமிழ் மக்கள் கொல்லப்படுவது அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில் மத்திய அரசு அதுகுறித்து தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளது. மேலும், ராஜ பக்சே அரசானது இலங்கை தமிழ் மக்களிடத்தும், நிராயுதபாணியாக உள்ள இந்திய மீனவர்களிடத்தும் நிதானப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

"வழக்கத்திற்கு மாறாக - தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் டெல்லியில் உள்ள இலங்கைத் துணைத் தூதுவர் பாலி தகனேகோடா என்பவரை அழைத்து ராணுவ நடவடிக்கைகளினால் இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவது குறித்து இந்தியாவின் வருத்தத்தையும், கவலையையும் தெரிவித்துக் கொண்டார்."

"மத்திய அரசின் இந்த நடவடிக்கை தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும். இந்தப் பிரச்சினையில் உள்ள அரசியல் அம்சத்தின் காரணமாக இலங்கை அரசுக்கு கடுமையான செய்தியை அனுப்பிட வேண்டுமென்று திரு.நாராயணன் முடிவு செய்தார்.

தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசின் மீது தேவையான அழுத்தத்தை செலுத்தியுள்ளார். ஞாயிற்றுக்கிழமையன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அனைவரும் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு தந்திகள் அனுப்பிட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். "

டெல்லியில் இருந்து வெளிவரும் 7.10.2008 நாளிடப்பட்ட "தி இந்து" ஆங்கில நாளேட்டில் "இலங்கை நிதானப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது" என்ற தலைப்பிட்டு வெளியிடப் பட்டுள்ள செய்தி பின்வருமாறு :

"ராணுவ நடவடிக்கையின் காரணமாக நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து இந்திய நாட்டின் கவலையையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதற்காக இலங்கை நாட்டின் தூதுவர் இன்று மத்திய அரசால் அழைக்கப்பட்டார்.

இலங்கை நாட்டின் வடக்குப் பகுதியில் ராணுவ நடவடிக்கைகள் பெருமளவிற்குப் பரவி வருவதால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் இந்தியாவிற்கு பெரும் கவலையை அளித்துள்ளது. இலங்கை அரசு நிதானமானப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் சிறுபான்மையினராக உள்ள மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதைப் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது.

மனிதாபிமான சூழல் பாழாகி வருவதும் அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டன. பாதிப்புக்குள்ளான பகுதிகளில் தேவையான உணவு மற்றும் மருத்துவப் பொருட்கள் முறையாக வழங்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

இந்திய மீனவர்கள் மீது தொடர்ந்து நடைபெற்று வரும் தாக்குதல்கள் பற்றியும் மிகுந்த கவலை தெரிவிக்கப்பட்டது.

இப்படி நடைபெறுவது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சமீபத்தில் ஏற்பட்ட புரிந்துணர்விற்கு எதிரானதாகும்.

இலங்கை கடற்படை இத்தகைய தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும். அவர்கள் மனிதாபிமான வாழ்க்கை பரிமாணங்களை மறந்துவிடக் கூடாது."

டெல்லியில் இருந்து வெளிவரும் "தி இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற மற்றொரு ஆங்கில நாளேட்டில் 7.10.2008 அன்று "இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் - பிரதமர்" என்ற தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள செய்தி வருமாறு :

"இந்தியப் பிரதமருக்கு இலங்கைப் பிரச்சினை குறித்து தந்திகள் அனுப்ப வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்கள் அறிக்கை வெளியிட்ட மறுநாளே, இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் முதல்வர் அவர்களோடு தொடர்பு கொண்டு இலங்கையில் தொடர்ந்து நடை பெற்றுவரும் படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்று உறுதி அளித்தார்.

பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் இன்று (6.10.2008) காலை 11.30 மணி அளவில் முதல்வர் கலைஞர் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசினார். அப்போது தமிழக முதல்வர் அவர்கள் இலங்கைப் பிரச்சினை குறித்தும் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கை குறித்தும் இனப்படுகொலை குறித்தெல்லாம் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்ததுடன் நின்றுவிடாமல், உடனடியாக மத்திய அரசு டெல்லியில் உள்ள இலங்கைத்

தூதரை அழைத்து இலங்கை தமிழினப் படுகொலை குறித்த கண்டனத்தை அவர் மூலமாக தெரிவித்திட வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். பிரதமர் அவர்களும் கலைஞர் கூறியவற்றை மிகுந்த அக்கறையுடன் கேட்டு முதல்வர் அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தார் - என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது."

டெல்லியில் இருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ்களில் இலங்கைப் பிரச்சினை குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி இவ்வாறாக செய்திகள் வெளியாகி உள்ளதோடு - சென்னையிலிருந்து வெளிவரும் :

"தி இந்து" நாளிதழிலும் "இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் மத்திய அரசு ஒத்துழைக்கும் என்று கலைஞர் நம்பிக்கை கொண்டுள்ளார்" என்ற தலைப்பிலும்;

"தி டைம்ஸ் ஆப் இந்தியா" நாளிதழிலும் "தமிழகத்தின் உணர்வுகளை அலட்சியப் படுத்த வேண்டாம் - மத்திய அரசுக்கு தமிழக முதல்வர்" என்று தலைப்பிட்டும்;

"தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழிலும் "கலைஞரிடம் இந்தியப் பிரதமர் நடவடிக்கை பற்றி உறுதி அளித்துள்ளார் - இலங்கையில் இனப் படுகொலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என முதல்வர் கேட்டுக் கொண்டார்" என்ற தலைப்பிலும்;

"டெக்கான் கிரானிக்கல்" நாளிதழிலும் "இலங்கைப் பிரச்சினையில் பதவியைத் துறக்கவும் தயார் என்றார் முதல்வர்" எனும் தலைப்பிலும்;

"தி எகனாமிக் டைம்ஸ்" நாளிதழிலும் "இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலை குறித்து இந்தியா இலங்கைக்குக் கண்டனம்" என்ற தலைப்பிலும்;

முறையாகவும், சரியாகவும் நடந்த நிகழ்ச்சிகள், அறிக்கைகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால், டெல்லியில் இருந்து வெளிவரும் 7.10.2008 நாளிடப்பட்ட "தி இந்துஸ்தான் டைம்ஸ்" எனும் ஆங்கில

நாளிதழில் மட்டும் சென்னை கூட்டத்தில் நான் பேசாததைப் பேசியதாகத் திரித்து செய்தி வெளியிட்டுள்ளது. அந்தப் பத்திரிகையில் எடுத்த எடுப்பிலேயே "தி.மு.க. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்து வெளிவரும் என எச்சரிக்கை" என்ற தலைப்பிட்டு, "இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இதுவரை எடுத்து வந்துள்ள அணுகு முறைக்கு மாறாக - தமிழர்கள் மீது இலங்கை ராணுவம் தொடுத்துள்ள தாக்குதல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று இலங்கைக்கு மத்திய அரசு விடுத்துள்ள எச்சரிக்கை பலனளிக்காமல் போகுமானால் - தமிழகத்தை ஆளும் தி.மு.க; மத்தியக் கூட்டணி அரசில் இருந்து விலகுவது சம்மந்தமாக பரிசீலிக்கும்" என்று நான் பேசியதாக ஒரு பொய்ச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. "இந்துஸ்தான் டைம்ஸ்" பெரியதும், பிரபலமானதுமான பத்திரிகை! அதுவே இப்படி என்றால் சில்லரைகளைப் பற்றி கேட்கவும் வேண்டுமோ!

அன்புள்ள,

மு.க.

8-10-2008

3335. தியாகுவின் நெஞ்சம் தீயோர்க்கு அமையுமா?

உடன்பிறப்பே,

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றைய தினம் விடுத்துள்ள அறிக்கையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு ஏழு ஆண்டுகள் சிறைவாசம் முடித்த 1405 ஆயுள் தண்டனை கைதிகளை விடுதலை செய்தது குறித்து அது ஏதோ ஒரு பெரிய வன்முறைக்கு வித்திடுவதற்காக செய்யப்பட்ட காரியம் என்று ஒருமாதம் கழித்து அவரது கருத்தை வெளியிட்டுள்ளார். விடுவிக்கப்பட்ட 1405 ஆயுள் தண்டனைக் கைதிகளின் துணையோடு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்காக செய்யப்படும் முயற்சி என்று அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 1405 கைதிகளை விடுவித்தது குறித்து நான் 17-9-2008 அன்றே விவரமாக பதில் எழுதிவிட்டேன். அந்தப் பதிலுக்குப் பிறகு கிட்டத்தட்ட ஒருமாத காலம் அம்மையார் வாய் திறக்காமல் இருந்துவிட்டு இப்போது திடீரென்று அந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கின்றார்.

புகழ்பெற்ற மறைந்த தலைவர்களின் பிறந்த நாளையொட்டியோ அல்லது சில முக்கிய நிகழ்வுகளையொட்டியோ சிறையிலே நீண்ட காலம் இருக்கும் கைதிகளை விடுதலை செய்வது என்பது ஜெயலலிதாவும், அவரோடு கூட்டணி வைக்கத் துடிப்போரும் சொல்வது போல ஏதோ தி.மு. கழக ஆட்சியில் புதிதாகச் செய்யப்படும் காரியமல்ல.

இன்னும் சொல்ல வேண்டுமேயானால் - யாருமே செய்யாத காரியமாக ஜெயலலிதா, தான் முதல் அமைச்சராக இருந்தபோது, தன்னுடைய பிறந்த நாளையொட்டியே 1992ஆம் ஆண்டு

அ.தி.மு.க. ஆட்சியிலே 24-2-1992 அன்று பிறப்பித்த அரசாணையில் 12 ஆண்டுகள் சிறையிலே இருந்த ஆண் ஆயுள் தண்டனை கைதிகளையும், பத்தாண்டுகள் சிறையிலே இருந்த பெண் ஆயுள் தண்டனை கைதிகளையும் விடுதலை செய்ய உத்தரவிட்டு, அதன்படி தமிழகத்தில் 230 பேர் சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் அந்த ஆண்டு ஜெயலலிதா பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளுக்காக எந்தச் சிறைக் கைதிகளையும் விடுதலை செய்யவில்லை. அம்மையார் பிறந்த நாளைவிட அண்ணா பிறந்த நாள் முக்கியமா; என்ன!

அதற்கடுத்த ஆண்டு, 1993இல், 24-2-1993 அன்று ஜெயலலிதாவின் பிறந்தநாளையொட்டியே பிறப்பிக்கப்பட்ட அரசாணைபடி, 132 சிறைக் கைதிகளை விடுதலை செய்திட உத்தரவிட்டு, அவ்வாறே விடுவிக்கப்பட்டார்கள். அந்த ஆண்டும் அண்ணா பிறந்த நாளுக்காக சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை.

1994இல் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும், ஜெயலலிதாவின் பிறந்தநாளையொட்டியே, 24-2-1994 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி 163 சிறைக் கைதிகளை விடுதலை செய்ய உத்தரவிட்டு, அவ்வாறே விடுதலை செய்யப்பட்டார்கள். அந்த ஆண்டும் அண்ணா பிறந்த நாளுக்காக யாரும் விடுதலை செய்யப்படவில்லை. பாவம்; அண்ணா!

இவ்வாறு தன்னுடைய பிறந்த நாளுக்காக தானே ஆணை பிறப்பித்து சிறைக் கைதிகளை விடுதலை செய்தவர்தான், தற்போது பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவிற்காக புதிய சலுகையாக ஏழு ஆண்டு காலம் சிறையிலே இருந்த கைதிகளையும் விடுதலை செய்ய இந்த அரசு முன்வந்து ஆணை பிறப்பித்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், அண்ணாவின் வாசகங்களை எடுத்து தன் அறிக்கையிலே முதல் பாராவிலே குறிப்பிட்டு ஜனநாயகமே பின் நோக்கிச் சென்று விட்டதாகப் புலம்பியிருக்கிறார்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரை இது உண்மையிலே அண்ணாவின் கனவுகளை நனவாக்குவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கும் அரசு. கட்சியில் மட்டும் அண்ணாவின்

பெயரைப் பயன்படுத்துவது நாமல்ல. மேலும் அண்ணாவின் பிறந்த நாளுக்காக இந்த ஆண்டு மட்டும் சிறைக் கைதிகளை விடுவித்திடவில்லை. தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த 1996ஆம் ஆண்டு 370 பேரையும் - 1998ஆம் ஆண்டு 107 பேரையும் - 1999ஆம் ஆண்டு 110 பேரையும் - 2000ஆம் ஆண்டு 89 பேரையும் பத்தாண்டு காலம் வரை சிறையிலே இருந்த ஆயுட் கைதிகளை அண்ணாவின் பிறந்த நாளையொட்டி விடுதலை செய்தோம்.

2001ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், 2001ஆம் ஆண்டினைத் தவிர்த்து 2002ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டுவரை அண்ணாவின் பிறந்த நாளையொட்டி எந்தச் சிறைக் கைதிகளையும் அவர் விடுதலை செய்யவே இல்லை. 2006ஆம் ஆண்டு தி.மு.கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்தபிறகுதான் அந்த ஆண்டில் 472 பேரையும் - 2007ஆம் ஆண்டு 190 பேரையும் பத்தாண்டு காலம் சிறையிலே ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்தவர்களை விடுதலை செய்தது. இந்த ஆண்டு அண்ணாவின் நூற்றாண்டு என்பதால், இந்த ஆண்டினை ஒரு தனிச் சிறப்பு நேர்வாகக் கொண்டு, ஏழு ஆண்டு காலம் சிறையிலே இருந்த ஆயுள் கைதிகளையும் விடுதலை செய்ய முன்வந்து விடுதலை செய்துள்ளது. இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான், ஜெயலலிதா ஒருமாதம் கழித்து அறிக்கை விடுத்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக ஒரு முடிவெடுத்து விடுதலை செய்யும்போது, அப்படி விடுதலை செய்யப்படுபவர்களில் யார் யார் எந்தக் கட்சி என்று பார்த்து விடுதலை செய்திட முடியுமா? அதிலே ஓரிருவர் தி.மு. கழகம் என்பதால் அவர்களை விடுதலை செய்யாமல் அவர்கள் மட்டும் சிறையிலே இருக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்ய முடியுமா? ஒருவர் ஆளும் கட்சி ஆதரவாளர் என்பதால் அவருக்காக தனி விதிமுறை கொண்டுவந்து அவர் மட்டும் சிறையிலே இருக்க வேண்டுமென்றா கூறமுடியும்?

சிறைக் கைதிகளை இதுபோன்ற முக்கிய நிகழ்வுகளில் விடுதலை செய்வது என்பது இந்த ஆண்டுதான் கொண்டுவரப்பட்டதா? ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அவருடைய பிறந்த நாளுக்காக விடுதலை செய்யப்பட்டவர்களில் யாருமே அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லையா?

விடுதலை செய்யப்படுபவர்கள் எந்தக் கட்சி என்றெல்லாம் பார்த்தா அப்போது விடுதலை செய்யப்பட்டது? ஏன் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடைபெற்ற மாநிலங்களில் இதுபோல் விடுதலை செய்யப்பட்டதே கிடையாதா? இன்னும் சொல்லப்போனால் கேரள மாநிலத்தில் தோழர் ஈ.எம்.எஸ். அவர்கள் முதலமைச்சராக இருந்த போதுதான் 1957 ஆம் ஆண்டு ஏழாண்டு காலம் சிறை தண்டனை அனுபவித்த ஆயுள் கைதிகளை யெல்லாம் விடுதலை செய்தார்.

ஆயுள் தண்டனை என்றாலே ஆயுட்காலச் சிறை தான் என்று உச்ச நீதி மன்றமே சொல்லிவிட்டதாக ஒரு விளக்கம் சொல்லப்படுகிறது. உண்மைதான்; 1964இல் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் இவ்வாறு கூறியது. அந்த வழக்கைத் தொடர்ந்தவர் யார் தெரியுமா? கோபால் விநாயக் கோட்சே. இவர் மகாத்மா காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர். ஆனால் அரசு இவரை ஆயுள் முழுக்க சிறையில் அடைத்து வைக்கவில்லை. 1965 ஆம் ஆண்டு அக்டோபரில் மராட்டிய காங்கிரஸ் அரசு அவரை விடுதலை செய்தது.

1977 ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தில் தோழர் ஜோதிபாசு தலைமையிலான இடது முன்னணி அரசு ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளை - பல கொலைகள், குண்டுவெடிப்புகளில் குற்றஞ்சாட்டப் பட்டவர்களை ஒரே மூச்சில் விடுதலை செய்தது. அவர்களில் நக்சலைட்டுகள், மார்க்சிஸ்டுகள், பயங்கரவாதிகள், குண்டர்கள் அனைவரும் அடக்கம் என்று பொதுவுடைமைச் சிந்தனையாளரும் எழுத்தாளருமான திரு. தியாகு அவர்கள் ஒரு கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தியாகு அவர்களே ஒரு கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு 1974 ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியிலே சிறையிலே இருந்தபோது, அந்தத் தண்டனையில் மாற்றம் கோரி, முன்னாள் மேயர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், அருமை நண்பர் க. சுப்பு அவர்களும் முதலமைச்சராக இருந்த என்னை வந்து சந்தித்தபோது, அவர் எந்தக் கட்சியின் ஆதரவாளர் என்றெல்லாம் நான் பார்க்கவில்லை. 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அவரது தண்டனையான தூக்குத் தண்டனையிலிருந்து மனிதாபிமான கண்ணோட்டத்தோடு மாற்றம் செய்தவன்தான் நான் என்பதை அந்தக் காலத்து நண்பர்களும், உண்மையான கம்யூனிச சிந்தனை கொண்டவர்களும் மறக்க மாட்டார்கள்.

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டினை யொட்டி 1405 பேர்களை விடுதலை செய்தது குறித்து ஜெயலலிதா போன்றவர்கள் வெறுப்பைக் கக்கிய போதிலும், எழுத்தாளர் தியாகு "கலைஞருக்கு சிறைத் தமிழனின் நன்றி" என்ற தலைப்பில் "நக்கீரன்" 24-9-2008 தேதிய இதழில் எழுதிய கட்டுரையில் "அறிஞர் அண்ணாவின் நூற்றாண்டை முன்னிட்டு 1405 சிறைப் பறவைகளைக் கூண்டு திறந்து சுதந்திர வானில் பறக்க விட்டுள்ளார் தமிழக முதல்வர் கலைஞர். தூக்குத் தண்டனை கைதியாகவும், ஆயுள் தண்டனைக் கைதியாகவும் பதினைந்து ஆண்டுக்கு மேல் சிறைப்பட்டிருந்தவன் என்ற முறையிலும், சிறைப்பட்டோரின் நல உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வருகிறவன் என்ற முறையிலும் கலைஞரின் இந்தச் சாதனையை உளமாரப் பாராட்டுகிறேன். போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும், கலைஞரே, உங்கள் மனிதநேய அணுகுமுறை தொடரட்டும். கலைஞரே, நீங்கள் செய்திருப்பது நன்று. சிறைத் தமிழர்களின் நன்றி. 1405 குடும்பங்கள் இழந்த ஒளியை மீட்டுக் கொடுத்தீர்கள்" என்று குறிப்பிட்டுள்ள வாசகங்கள் நெஞ்சுக்கு ஆறுதல் தரக்கூடியவை என்பதால், இவற்றை நினைத்து, அம்மையாரின் அறிக்கையை அலட்சியம் செய்வோம். என்ன இருந்தாலும் "தியாகுவின் நெஞ்சம்" தீயோர்க்கு அமையுமா?

அன்புள்ள,

மு.க.

14-10-2008

3336. நெஞ்சுயர்த்தி வந்திடுக; சென்னைக்கு!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்து அரசியல் இயக்கங்களும், அமைப்புகளும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வலியுறுத்தியதின் காரணமாக மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை மேலும் தொடர்ந்து விரைவுபடுத்திடவும் - நிலையான அமைதி இலங்கையில் உருவாகிடத் தக்க முயற்சிகளை மேற்கொள்ளவும், இனப் படுகொலையும், போரும் அல்லாத சூழ்நிலையை உருவாக்கவும் மத்திய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காக தமிழக அரசின் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று 14-10-2008 அன்று கூட்டப்பட்டு, அதற்கான அழைப்புக் கடிதங்களை ஒவ்வொரு கட்சியின் தலைவருக்கும் நானே கையெழுத்திட்டு அனுப்பினேன்.

கடிதங்கள் அனுப்பப்பட்ட செய்தி ஏடுகளிலும் வெளிவந்தது. அதிலே நான்கு கட்சிகள் மட்டும் அரசு சார்பில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைப் புறக்கணிப்பதாகச் செய்தி அறிவித்தார்கள். அவர்களைத் தவிர மற்ற கட்சியினர் அனைவரும் கூட்டத்திற்கு வருகை தந்து, இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வில் அக்கறையோடு தங்கள் தங்கள் கருத்துகளை எடுத்துக் கூறினார்கள். அவர்களுக்கெல்லாம் அந்தக் கூட்டத்திலேயே நன்றி தெரிவித்துக் கொண்டேன். இப்போதும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக அரசின் சார்பாக நான் அழைப்பு விடுத்து கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தையே கண் துடைப்பு நாடகம் என்று ஜெயலலிதா புறக்கணிப்பு செய்தார்.

அரசு கூட்டியுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை அ.தி.மு.க. புறக்கணிக்கும் என்று ஜெயலலிதா அறிக்கை விடுத்த அடுத்த கணமே ம.தி.மு.க. தலைவர் வைகோவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப் புறக்கணிப்பதாக அறிவித்தார். திரு. விஜயகாந்தும் வரவில்லை. ஜெயலலிதா புறக்கணித்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், இலங்கையில் நடைபெறுகின்ற தமிழர் இனப் படுகொலையைக் கண்டித்தும், போர் நிறுத்தம் உடனே அறிவிக்கப்பட வேண்டும் என்றும், இரண்டு வாரக் காலத்திற்குள் அதாவது அக்டோபர் 28ஆம் தேதிக்குள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையேல் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பார்த்தால் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கருணாநிதி செயல் படுகிறாரோ என்ற சந்தேகம்தான் தமிழக மக்கள் மனதில் எழுந்துள்ளது என்றும், இலங்கையில் தற்போது நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை என்றும், இலங்கையில் தற்போது நடக்கும் யுத்தம் விடுதலைப் புலிகள் என்னும் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்திற்கு எதிரான யுத்தம் என்றும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் இறந்ததற்கு இரங்கற்பா தெரிவிக்கும் கருணாநிதி என்றும் - என்னைக் கேலி செய்தும், கண்டித்தும், ஜெயலலிதா காரசாரமாக அறிக்கை விடுத்தார். இதனைப்பற்றி; காலமெல்லாம் இலங்கைத் தமிழர்களுக்காக கண்ணீர் வடித்தவரும், எனக்குக் கடிதம் எழுதி அனுப்பி விட்டு, பல்வேறு ஆபத்துகளைக் கடந்து வவுனியா காடு வரையிலே சென்று திரும்பியவருமான திரு. வைகோ அவர்கள் கடுகளவு மறுப்போ அல்லது அதுபற்றி கருத்தோ இன்றுவரை தெரிவிக்க வில்லை என்பது தான் எனக்கு ஏற்பட்ட வியப்பு!

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ. நெடுமாறன் அவர்கள் இந்த அம்மையாரைக் கண்டித்தும், மறுத்தும் உண்மையை உலகத்திற்கு உணர்த்திடும் அளவிற்கு வெளியிட்ட அறிக்கைதான் இங்குள்ள தமிழர்களுக்கு ஆறுதலாக அமைந்துள்ளது. அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை "பொழுது போக்கும் கூட்டம்" என்றும், "கபட

நாடகம்" என்றும், "மோசடி நாடகம்" என்றும் அர்ச்சனை செய்யவும் ஜெயலலிதா தயங்கவில்லை.

அவரும் வேறு சிலரும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைப் புறக்கணித்ததையே தாங்கிக் கொள்ள முடியாமல், இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தம்பி டி. விஜயராஜேந்தர் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தன் உடலிலே ஓடுகின்ற தமிழ் இரத்தம் கொதிப்பேறி ஆவேசமாக கண்டனக் குரல் எழுப்பினார். அப்போது கூட நான் அவரை அமைதிப்படுத்தி இதுபோன்ற நேரத்தில் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றும், இந்தக் கூட்டத்திற்கு வராமல் புறக்கணித்து அறிக்கை விட்டவர்கள் இலங்கையிலே படுகொலைக்கு ஆளாகின்ற அந்த தமிழர்களை மதிக்காதவர்கள் என்றோ, அவர்களை ஏற்காதவர்கள் என்றோ எண்ணிவிடக் கூடாது; அவர்களுக்கு என்னைப் பிடிக்காத காரணத்தால்தான் என் அழைப்பை யேற்றுக் கொள்ளவில்லை என்று எண்ணிக்கொள்ள வேண்டும். எனவே இதை மறந்துவிட்டு எல்லோரும் ஒற்றுமையாகக் குரலெழுப்பி இலங்கைத் தமிழர்களுக்காக – அந்தப் பூமியில் நிலையான அமைதி தோன்றுவதற்காகப் பாடுபடுவோம் என்றுதான் வேண்டிக் கேட்டுக் கொண்டேன்.

ஆனால் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டம் முடிந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எல்லாம் வெளி வந்த பிறகு கூட, நம்மீது பொழிகின்ற அர்ச்சனைகளை நிறுத்திக் கொள்ளவில்லை. அவருடைய கட்சிக்காரர்களே முகம் சுளிக்கின்ற அளவிற்கு – முணுமுணுக்கின்ற அளவிற்கு இலங்கைத் தமிழர்களைப் பற்றி தனக்குத்தான் கவலை என்பதைப் போல வரலாறு தாங்காத வடி கட்டிய பொய்களை அறிக்கைகளாக வடித்தெடுத்து இங்குள்ள ஏடுகளுக்குப் பக்கம் பக்கமாக வழங்கி வருகிறார். ஏடுகள் நடத்துவோரில் சிலர் "தமிழ் இன உணர்வு" என்ன விலையென்று கேட்பவர்களாக இருப்பதால் அந்த அறிக்கைகளை தலை வாழை இலையிலே ஊற்றப் பட்ட சுவையான பால் பாயாசமாக எண்ணி அருந்தி மகிழ்கிறார்கள்.

என் செய்வது? இலங்கைத் தமிழ் மக்களின் விமோசனத்திற்காக தமிழ் நிலத்தில் எப்பொழுது இன உணர்வு எழுந்தாலும் அந்த உணர்வு உருவாகும் பொழுதே, அதைக்

கெடுப்பதற்கு உலைவைப்போர் சிலர் உருவாகி விடுகிறார்களே; அந்த வரிசையில் வாள் சுழற்றி நம்மோடு வம்புக்கு வருகின்ற ஜெயலலிதாவை இங்குள்ள தமிழர்கள் அல்லவா அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

இன்று நேற்றல்ல; இவர் ஆட்சியிலும் சரி - நம் ஆட்சியிலும் சரி - ஈழத் தமிழ் அகதிகள் குடும்பங்கள் எப்படி நடத்தப்பட்டன என்பதற்கு ஓர் உதாரணம்;

1989ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி நடைபெற்ற போது ஈழத் தமிழ் அகதிகள் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் உயர் கல்வி பயில வேண்டுமென்பதற்காக - தமிழக அரசு மருத்துவக் கல்லூரியில் 20 இடங்களையும், பொறியியல் கல்லூரியில் 40 இடங்களையும், வேளாண்மைக் கல்லூரியில் 10 இடங்களையும், பாலிடெக்னிக்குகளில் 40 இடங்களையும் ஒதுக்கீடு செய்தது. ஆனால் 1991ஆம் ஆண்டில் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும், இந்த இட ஒதுக்கீட்டையெல்லாம் அ.தி.மு.க. அரசு தடை செய்து ஆணையிட்டது. மீண்டும் 1996இல் கழக ஆட்சி வந்த பிறகு அந்த வசதிகள் மீண்டும் வழங்கப்பட்டன. இதையெல்லாம் தமிழ்நாட்டினர் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் ஜெயலலிதா அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்.

"தமிழ் இனத் தலைவர்" என்று எனக்கு நானே பட்டம் வழங்கிக் கொண்டதாக அம்மையார் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். தன்னுடைய பிறந்த நாளுக்காக ஆண்டு தோறும் சிறைக் கைதிகளை விடுவித்தவர் அல்லவா? அவர் அப்படித்தான் சொல்லுவார். அவர் முதல்வராக இருந்தபோது திரைப்பட நகரத்திற்கு கலைத் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எம்.ஜி.ஆர். பெயரை வைக்க வேண்டுமென்று வலியுறுத்தியும், அதனைக் கேட்காமல் தன் பெயரையே சூட்டிக் கொண்டவர் அல்லவா? அவர் அப்படித்தான் சொல்லுவார். அரசு போக்குவரத்துக் கழகம் ஒன்றுக்கு "ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்" என்று பெயர் சூட்டிக் கொண்ட தன்னலமற்ற தயாபரி அல்லவா? அவர் அப்படித்தான் சொல்லுவார்.

அறிக்கைக்கு அறிக்கை - பேச்சுக்கு பேச்சு - சவாலுக்கு சவால் என்று போனால் - அவற்றை அம்மையார் எப்படி அணுகுவார் என்பது நமக்குத் தெரியும் என்பதால் அவரிடம்

அனுதாபம் காட்டிவிட்டு - இப்போது நாம் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே நிறைவேற்றப்பட்ட ஆறு தீர்மானங்கள் - ஆம், இலங்கைத் தமிழர்களுக்கு ஆறுதல் தரும் தீர்மானங்களாக - நிறைவேற்றப்பட்டிருக்கிறதே; அவற்றை நடைமுறைப்படுத்த என்ன வழி - இன்னும் எப்படியெல்லாம் அந்தக் கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுத்து இந்திய அரசின் கவனத்தை இதயப்பூர்வமாக நம்மீது திருப்புவதற்கு என்ன வழிமுறைகள் என்பதையெல்லாம் சிந்திக்கவும், அவற்றைச் செயல்படுத்த வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். அந்தச் சிந்தனையில் எழுந்ததுதான் அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒப்புதலோடு அறிவிக்கப்பட்டு - சென்னையில் வரும் 21ஆம் தேதி - நாம் நடத்தவுள்ள "மனிதச் சங்கிலி அணிவகுப்பு" ஆகும்.

நான் உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் மாத்திரமல்ல - தமிழகத்தில் உள்ள எல்லா அமைப்புகளின் தலைவர்களும் தங்கள் பங்களிப்பினை இதற்கு வழங்கிட வேண்டும். நமது வேண்டுகோள் அனைத்தும் அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானங்களாக ஏடுகளில் வெளி வந்துள்ளன. அவற்றை மத்திய அரசுக்கும் குறிப்பாக பிரதமருக்கும் சிறப்பாக சோனியா காந்தி அம்மையாருக்கும் அனுப்பி வைத்துள்ளோம்.

பிரதமர் அவர்கள் இத்திங்கள் 6ஆம் தேதியன்று மயிலை மாங்கொல்லை கூட்டம் நடைபெற்ற அன்றே, காலை 11 மணியளவில் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு என்னிடம் பேசியதோடு, நான் அப்போது அவரிடம் விடுத்த நான்கு கோரிக்கைகளையும் அலட்சியப்படுத்தாமல், அன்றைய தினம் மாலையிலேயே இலங்கைத் தூதுவரை அழைத்து பேசும்படி ஆணை பிறப்பித்து, அவ்வாறே பேசப்பட்ட அதிகாரபூர்வமான செய்தியும் அனைத்து ஏடுகளிலும் வெளிவந்தது.

இந்தியப் பேரரசு இங்குள்ள தமிழ் இனத்தவரின் வேண்டுகோளை அலட்சியப் படுத்தவில்லை என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட்ட காரணத்தால், அந்த நம்பிக்கையை ஆணி வேராகக் கொண்டு மேலும் பல வெற்றி வாய்ப்புகள் தழைக்கும் என்ற எதிர்பார்ப்போடுதான் 14ஆம் தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இலங்கையில் அவதியுறும் தமிழ்க் குடும்பங்களைக் காப்பாற்ற நித்த நித்தம் படுகொலைக்கு ஆளாகும் நமது இன மக்களைப் பாதுகாக்க - பசியால் துடிக்கும்

பச்சிளம் குழந்தைகள் ஈழத்தில் தங்கள் தாய்களின் முகங்களைப் பார்க்க - அந்தத் தாய்களின் முகங்களோ தமிழகத்தில் உள்ள நம் முகங்களை அன்றோ தேடுகின்றன என்ற உணர்வோடு;

அவர்கள் வாழ்வில் இனியாவது அமைதி துளிர் விடச் செய்ய ஆயத்தமாகட்டும் தமிழகம் என்பதை வலியுறுத்தவும்;

ஆதரவுக் கரம் நீட்டட்டும் இந்தியப் பேரரசு என்பதை அறவழியில் நினைவூட்டவும்தான் இங்கே சென்னையில் -

செங்குருதி தனில் கமழ்ந்து வீரம் செய்கின்ற மூச்சு, எங்கள் தமிழ் மூச்சு என்று முரசம் கொட்டும்

தமிழர் சேனை;
தாய்மார்கள் சேனை;
இளம் மாணவர்கள் சேனை;
இங்குள்ள கலைஞர்களின் சேனை;
இடையறாது உழைக்கும் பாட்டாளிகள் சேனை

எல்லா சேனைகளிலும் ஓரிருவர் கூட ஓய்வு கொள்ளாது அனைவரும் கலந்து கொள்வோம் அந்த அணிவகுப்பில்!

மறவாதீர் மனிதச் சங்கிலி - 21ஆம் தேதி - பிற்பகல் 3 மணிக்கு!

வட சென்னையில் சிங்காரவேலர் மாளிகையிலிருந்து தொடங்கி -

அண்ணா சாலையைக் கடந்து
தென் சென்னையைத் தாண்டி -
தாம்பரத்தையே தாண்டுமோ என்ற அளவிற்கு
தமிழர் அணி வகுக்கும்
"சங்கற்பச் சங்கிலி!"
ஈழத் தமிழரைக் காப்போம்
என்ற சங்கற்பச் சங்கிலி!

அக்டோபர் 14 - அனைத்துக் கட்சிக் கூட்டம் - நமது உணர்வைக் காட்டும் பாசறை.

அக்டோபர் 21 - அந்த உணர்வில் தோய்ந்த உறுதி படைத்த நெஞ்சங்களின் அறப்போர் படை வரிசை. மனிதச் சங்கிலி! மனித நேயச் சங்கிலி!

இலங்கையில் அமைதியை நிலைநாட்டுவோம் - என முழங்கும் முரசுகளின் வரிசை அது!

வாரீர்! வாரீர்!

மிழகம் எங்கணுமிருந்து தடந்தோள் படைத்தோரே!

தாய்க்குலமே!
கழனியில் உழைப்போரே!
கடலில் உழல்வோரே!
கலையுலகத்தினரே!
கிளம்பிற்றுக் காண்
தமிழச் சிங்கக் கூட்டமென
தலைநகர் சென்னை
நோக்கி வருக!

தமிழர் நாம் என நெஞ்சுயர்த்தியவாறு வந்திடுக சென்னைக்கு!

அன்புள்ள,
மு.க.
18-10-2008

3337. நாம் காணும் நம்பிக்கை நட்சத்திரம்!

உடன்பிறப்பே,

அரசின் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று அந்தக் கூட்டத்திலே ஆறு தீர்மானங்கள், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 15-10-2008 அன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், வெளி விவகாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய கடிதத்தோடு இணைக்கப்பட்டு டெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதே நாளில் டெல்லியில் பிரதமரைச் சந்தித்த செய்தியாளர்கள் இலங்கை பிரச்சினை பற்றியும், நாம் நிறைவேற்றிய தீர்மானங்கள் பற்றியும் கருத்து கேட்டுள்ளார்கள். அப்போது பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள்,

"இலங்கையில் நிலவும் சூழ்நிலை மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. அங்கு தீவிரமாகி வரும் போரினால் அப்பாவி பொது மக்களுக்கு ஏற்படும் இழப்புகள் - இடம் பெயர்ந்து அகதிகளாக செல்பவர்கள் அதிகரித்து வருவதும் வேதனை அளிக்கிறது. இலங்கை பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முடியாது. சமரச பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என்றுதான் நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வருகிறோம். இலங்கையின் ஒற்றுமை - ஒருமைப்பாட்டை மதிக்கும் வகையிலும், அதே நேரத்தில் சிறுபான்மையினரின் குறிப்பாக சிறுபான்மையாக உள்ள தமிழர்களின் மனித உரிமைகளை மதிப்பதாகவும் அந்தத் தீர்ப்பு அமைய வேண்டும். இந்தியா இலங்கைக்கு இடையே மீன்

பிடிக்கும் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதும் சித்ரவதை செய்யப்படுவதும் வேதனை அளிக்கிறது"

என்று தெரிவித்து அந்தக் கருத்து ஏடுகளில் இடம் பெற்றுள்ளது. தமிழர்களின் துயரத்திலும், நாம் நிறைவேற்றிய தீர்மானத்திலும் இந்தியப் பிரதமர் அவர்கள் எந்த அளவிற்கு ஈடுபாட்டோடும், நமக்கு ஆதரவாகவும் உள்ளார் என்பதை தெளிவாக்குகின்ற வார்த்தைகளாக அவரது பேட்டி அமைந்துள்ளது.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நாம் நிறைவேற்றிய தீர்மானத்தைக் கூட ஒருசில ஏடுகள் மத்திய அரசுக்கு விடுத்த மிரட்டல் என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டன. அதைப்பற்றிக் கூட காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் திரு. மணிஷ் திவாரியிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு தமிழக கட்சிகளின் கோரிக்கையை மத்திய அரசுக்கு விடுத்த மிரட்டலாக கருதவில்லை. அப்பாவி பொது மக்கள் கொல்லப்படுவதற்கு வேதனை தெரிவித்திருப்பதாகத்தான் கருதவேண்டும் என்று கூறியிருக்கிறார்.

மேலும் நமது வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் 16-10-2008 அன்றிரவு வெளியிட்ட ஓர் அறிக்கையில்,

"இலங்கையில் நிலவும் சூழ்நிலை இந்தியாவில் உள்ள எங்களுக்கு பெரிதும் கவலை அளிக்கிறது. தாங்கள் உருவாக்காத சூழ்நிலையின் பிடியில் அப்பாவி மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். அவர்கள் மீது தொடர்ந்து நடந்து வரும் தாக்குதலை நினைத்துத்தான் நாங்கள் குறிப்பாகக் கவலைப்படுகிறோம். அவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடாது. அவர்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை அனுமதிக்க வேண்டும். ராணுவ பலத்தைப் பயன்படுத்தியோ போர்க்கள வெற்றிகளாலோ இயல்பு நிலையை திரும்ப கொண்டுவர முடியாது என்று இந்தியா உறுதிபட தெரிவித்து வருகிறது. பேச்சுவார்த்தை மூலமாக அரசியல்

தீர்வு காணப்பட வேண்டும். இத்தகைய தீர்வுதான் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்துத் தரப்பினரின் உணர்வுகளையும் பூர்த்தி செய்வதாக அமையும். இந்த இலக்கை அடையவும், அப்பாவி மக்களின் கஷ்டங்களை தணிக்கவும் இந்தியா, தனது அதிகாரத்திற்கு உட்பட்டு எல்லா முயற்சிகளையும் எடுக்கும். இது தொடர்பாக பல்வேறு மட்டங்களில் இலங்கை அரசின் கவனத்தை இந்திய அரசு ஈர்த்து வருகிறது. இந்திய அரசு கவனம் செலுத்தி வரும் மற்றொரு பிரச்சினை, இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் மற்றும் படுகொலை ஆகும். இத்தகைய கொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதை உறுதிப்படுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும்"

என்றெல்லாம் சொல்லியிருப்பதைப் பார்க்கும் போது, அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றி நாம் அனுப்பிய தீர்மானங்களை யெல்லாம் நன்றாகப் பரிசீலித்து அதனையேற்றுக் கொள்ளும் வகையிலே மத்திய அரசு செயல்படும் என்ற நம்பிக்கை மேலும் வலுப்பெறுகிறது நமக்கு!

ஆனால் ஜெயலலிதாவிற்கு இதைப்பற்றி யெல்லாம் எண்ணிப் பார்க்க நேரமில்லை. 1983ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக நானும் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததை ஜெயலலிதா கொச்சைப்படுத்தி, அப்போதும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீரவில்லையே என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

காவேரி பிரச்சினைக்காக ஜெயலலிதா கால வரம்பற்ற உண்ணாவிரதம் என்று தொடங்கினாரே; பிறகு அதனைத் திரும்பப் பெற்றாரே, காவேரி பிரச்சினை தீர்ந்த பிறகா உண்ணா விரதத்தை நிறுத்தினார். இல்லையே; அந்தப் பிரச்சினை இன்னமும் முடிந்த பாடில்லையே?

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது ஓராண்டு ஈராண்டுகளாக அல்ல; 1956ஆம் ஆண்டில் சிதம்பரத்திலே நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக் குழுவிலே இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக அண்ணாவின் கருத்துப்படி ஒரு தீர்மானமாக என்னால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தை அப்போது வழி மொழிந்தவர் பெரியவர் அ. பொன்னம்பலனார். அந்தத் தீர்மானத்தின் வாசகங்கள் வருமாறு:-

"இலங்கையில் சிங்கள மொழி ஆதிக்க ஆட்சியாளர்கள் அங்குள்ள தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதோடு, சிங்கள மொழி ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த முயலும் போக்கினை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அங்குள்ள தமிழர்களின் விருப்பங்களும், முயற்சிகளும் வெற்றிபெற வேண்டுமென்று இப்பொதுக்குழு மனமார விரும்புவதுடன், தாய்த் தமிழகத்தில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களாலான எல்லா ஆதரவையும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு அளிக்குமாறும் கேட்டுக் கொள்கிறது."

உடன்பிறப்பே, 1939ஆம் ஆண்டே பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் "இண்டியன் இன் சவுத் ஏசியா" என்ற நூலில் - இந்தியாவுக்கு வெளியே வாழுகின்ற இந்தியர்களைப் பற்றி - அப்போது நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்திற்கு ஒரு செய்தி அனுப்புகிறார். அது - It was in 1939 that Jawaharlal Nehru in a message to the Indian National Congress said that, "India is weak to day; and cannot do much for her children abroad. But she does not forget them and every insult to them is humiliation and sorrow for her. A day will come when her long arm protection and her strength will compel Justice for them."

(1939ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்திற்கு அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது :-

இந்தியா இன்று பலவீனமாக உள்ளது.

அது வெளிநாட்டில் வாழும் தனது மக்களுக்கு பெரிதாக எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

ஆனால் இந்தியா அவர்களையும் அவர்களுக்கு ஏற்படும் துயரத்தையும் இழிவையும் மறப்பதில்லை. ஒரு நாள் வரும் - அன்றைக்கு இந்தியாவின் பாதுகாப்பு கரம் நீளும் - அதன் வலிமையினால் அவர்களுக்கு நீதி கிடைக்கும்.)

இவ்வாறு பண்டித நேரு அவர்கள் 1939ஆம் ஆண்டிலேயே வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்காக இந்தியாவின் பாதுகாப்புக் கரம் நீளுகின்ற நாள் ஒன்று வரும் என்று அறிவித்தாரே, அந்த நாள் இந்த நாளாக இருக்க வேண்டுமென்றுதான் மத்திய அரசை நோக்கி நாம் குரல் கொடுக்கின்றோம்.

இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு.க. எதுவும் செய்யவில்லை என்றதொரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. தி.மு. கழகம் பொறுப்பிலே இருந்தபோது 1976ஆம் ஆண்டிலும், 1991ஆம் ஆண்டிலும் இரண்டு முறை மத்திய அரசினால் ஆட்சியிலிருந்து கலைக்கப்பட்டது. அந்த இரண்டு முறையும் தி.மு.க. மீது பழி சுமத்தப்பட்டது என்றால், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தி.மு.க. நடந்து கொண்டது என்பதுதான் முக்கியமான குற்றச்சாட்டு! தலையாய பழியுமாகும்!

1976ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது, கலைக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்பதை 15-2-1976 அன்று சென்னை கடற்கரையில் அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அம்மையார் உரையாற்றியபோது –

> “தி.மு.க. அரசு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இலங்கையிலே இருக்கின்ற அரசுக்கு விரோதமாக நடைபெற்று வருகின்றது. அது இந்தியாவின் வெளி நாட்டுக் கொள்கைக்கு ஏற்றதல்ல. கழக ஆட்சியை கலைத்ததற்கு அதுவும் ஒரு காரணம்”

என்று அவரே கூறியிருக்கிறார். எனவே வேறு எதுவும் அதற்கு சான்று தேவையில்லை என்று கருதுகிறேன்.

ஆனால் அதன் பின்னர் நான்கு ஆண்டு கழித்து அதே அன்னை இந்திரா காந்தி அவர்கள் 1980இல் அதே கடற்கரைக் கூட்டத்தில் என்னைப் புகழ்ந்துரைத்து; “நட்பாயினும் – பகையாயினும் இரண்டிலும் உறுதியாக இருப்பவர் கருணாநிதி” என்று கூறியதையும், நான் வாழும் நாள் வரையில் மறக்க முடியுமா?

ஏன்; அன்னை இந்திரா, இலங்கைத் தமிழரின் இன்னல் களைய எடுத்த முயற்சிகள்தான் கொஞ்சநஞ்சமா?

1976ஆம் ஆண்டு ஆட்சிக் கலைப்புக்குப் பிறகு தி.மு. கழகம் 12 ஆண்டு காலம் பதவிப் பொறுப்புக்கு வரவில்லை. அந்த இடைக்காலத்தில் தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது இலங்கைத் தமிழர்களுக்காக எதுவுமே செய்யாமல் மவுனமாக இருந்து விடவில்லை.

தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறது என்பதற்காக இலங்கைத் தமிழர் பிரச்சினையை சில கட்சியினர் அலட்சியம் செய்கிறார்களே, அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக 1981ஆம் ஆண்டு தி.மு. கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போது, தமிழகச் சட்டமன்றப் பேரவையிலே

21-8-1981 அன்று ஒரு தீர்மானம் அ.தி.மு.க. ஆட்சியினரால் கொண்டு வரப்பட்டபோது, எதிர்க்கட்சித் தலைவராக தி.மு.க. சார்பிலே இருந்த நான் என்ன செய்தேன்? இலங்கைத் தமிழர்க்கான தீர்மானம் அ.தி.மு.க. உறுப்பினர்களால் கொண்டு வரப்படுகிறது என்பதற்காக புறக்கணித்தேனா? அவையிலிருந்து வெளிநடப்பு செய்தேனா? தீர்மானத்தை எதிர்த்தேனா? இடைவிடாது இழிதகை அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்தேனா, அம்மையாரைப்போல? கிடையாது. அ.தி.மு.க. கொண்டுவந்த தீர்மானம், இலங்கைத் தமிழர்களுக்காக என்பதால், அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து உரையாற்றினேன். அந்த உரையின் சுருக்கம் வருமாறு :

> "அரசின் சார்பில் அவை முன்னவரால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அமெரிக்கா செல்கிற வழியில் எங்களைச் சந்தித்த ஈழத் தமிழர்களின் தலைவர் அமிர்தலிங்கம் அங்கே நடைபெறும் சோகச் சம்பவங்களை யெல்லாம் எங்களிடம் விவரித்துச் சொன்னார். இலங்கைத் தமிழர்கள் தாக்கப்படுகிற நேரத்தில் எல்லாம் தமிழ் நாட்டிலிருந்து இந்தியப் பேரரசுக்கு எல்லா கட்சியில் உள்ளவர்களும், கட்சி சார்பற்ற முறையில் கட்சி வேறுபாடுகளை யெல்லாம் மறந்து அனைவரும் தமிழர்கள் என்கிற அந்த உணர்வோடு அவதிப்படுகிற தமிழர்கள் இலங்கையில் இருந்தாலும், அவர்கள் உலகத்தின் வேறு எந்தப் பகுதியில்

இருந்தாலும் அவர்களுக்கு தமிழகத்தில் இருக்கிற ஐந்து கோடி தமிழர்களின் ஆதரவு என்றென்றைக்கும் உண்டு என்ற பேருண்மையை நாம் இதிலே கட்சிகளை எல்லாம் மறந்து நிலைநாட்டியிருக்கிறோம். அந்த வகையில் தமிழர்கள் ஒற்றுமையோடு இன்றைக்கு இந்த ஒரு தீர்மானத்திலே இருக்கும் காட்சியை என்னால் காண முடிகிறது. பல கட்சிகளின் சார்பில் ஒத்திவைப்பு, கவன ஈர்ப்பு தீர்மானங்கள் இந்தப் பிரச்சினையிலே கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கருதி, அந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தாலும்கூட, அரசின் சார்பில் ஒரு தீர்மானம் வருவதுதான் பொருத்தமுடையது என்ற எண்ணத்துடன் இந்தத் தீர்மானத்தை மனநிறைவோடு வழி மொழிகிறேன்."

இவ்வாறு அ.தி.மு.க. அரசின் சார்பில் கொண்டு வந்த தீர்மானத்தை பெருந்தன்மையோடு; வழிமொழிந்தவன்தான் நான்.

நாம் எந்த அளவிற்கு அன்று பெருந்தன்மை யோடு தமிழ் உணர்வோடு நடந்து கொண்டோம், இப்போது எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா எந்த அளவிற்கு பெருந்தன்மையோடு (?) நடந்து கொள்கிறார் என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளும் வாய்ப்பு தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ளது.

இலங்கையிலே உள்ள தமிழ் மக்கள் "கடலுக்கு அப்பால் கரையுண்டு என்றிருந்தோம்; கரையே கடலானால் எங்கே போய்க் கால் வைப்போம்?" என்று இலங்கைத் தமிழ்க் கவிஞன், உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தன் பாடிய கவிதையைப் பாடிக்கொண்டு, பல ஆண்டுக் காலமாக உகுத்திடும் கண்ணீர்த் துளிகளுக்கு நாம் தரப் போகும் பதில் என்ன?

"ஆண்மைச் சிங்கத்தின் கூட்டம்" என்று பாவேந்தர் தமிழ் இனம் குறித்துப் பாடியது வெறும் சொற்குப்பை தானா?

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்" என்றாரே; அந்தத் தோள்கள் எங்கே?

உடன்பிறப்பே, இன்று இதனை நான் எழுதும் போது தேதி அக்டோபர் பதினெட்டு; - இடையிலே இன்னும் மூன்று நாட்கள்தான்! ஆம் 72 மணி நேரம்! சென்னைக்குப் புறப்படத்

தயாராகி விட்டாயா? உன்னோடு யார் யார் வருகிறார்கள்? உங்கள் மாவட்டத்திற்கென்று "மனிதச் சங்கிலி"யில் நிற்பதற்கு ஒதுக்கப்பட்ட இடம் எங்கே? தெரிந்து கொண்டுவிட்டாயா?

அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் - கழகத்தின் சார்பிலும் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் எல்லாம் அனுப்புகின்ற செய்திகள் தங்கள் தங்கள் மாவட்டத்திலிருந்து இத்தனை பேர் வருகிறோம், மனிதச் சங்கிலியில் பங்கேற்க என்ற தகவல்கள் வந்து குவிகின்றன.

நமது தமிழ் இனத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டிருக்கிறது.

எண்ணி எண்ணி ஏங்குகிறேன் - பெருமூச்சு விடுகிறேன்.

மனம் ஒரு நிலையில் இல்லை - உறங்க முடியாமல் தவிக்கிறேன்.

இனம் காப்போம்!

இனமானம் காப்போம்!

இனப் படுகொலையை என்ன விலை கொடுத்தேனும் தடுப்போம்!

அன்புள்ள,

மு.க.

19-10-2008

3338. உதவாதினி ஒரு மாதம்;
உடனே விழி தமிழா!

உடன்பிறப்பே,

1956ஆம் ஆண்டிலேயே இலங்கைத் தமிழர்களின் உரிமை, மொழி, கலாச்சாரம் இவற்றைப் பாதுகாத்திடவும் - சிங்கள மொழியினர் ஆதிக்கம் அகன்றிடவும் அங்குள்ள தமிழர் கிளர்ந்தெழுந்தனர் என்பதைக் குறிப்பிடவும்; இன்று நேற்றல்ல - இலங்கைத் தமிழர் பிரச்சினை 1956 முதற்கொண்டு உருவானதாகும் என்று நான் சுட்டிக்காட்டியதற்கு ஆதாரமாக 1956இல் சிதம்பரம் தி.மு.க. பொதுக் குழுவிலேயே நான் முன்மொழிந்து - திரு. பொன்னம்பலனார் வழி மொழிந்த தீர்மானத்தைச் சான்றாகக் கூறியிருந்தேன்.

அதைப் படித்து விட்டு சிலர் 1956ஆம் ஆண்டிலிருந்து - இருந்து வருகிற இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத கருணாநிதி; இப்போது தீர்க்கப் போவதாகச் சொல்வது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மின்வெட்டை மறைப்பதற்காகத்தான் என்று அரிய கண்டுபிடிப்பைச் செய்துள்ளார்கள். இந்தியாவில்; தமிழ் மாநிலத்தில் மட்டும் மின்சாரப் பற்றாக்குறை இருப்பதாகவும் - மற்ற மாநிலங்களில் மின்சாரத் தடையே கிடையாதென்றும் பொய் கூறி - அரசியலுக்காகப் பேசுவோரின் அறியாமை கண்டு, அப்படிப் பேசுவோரை அலட்சியப்படுத்தி விட்டு; நாம் நமது இரத்தத்துடன் ஊறிய தமிழ் உணர்வு கொண்ட ஈழத் தமிழர்களின் இன்னல் துடைக்கும் பணியினைத் தொடருவோம்.

இலங்கைப் பிரச்சினை - அங்கே தமிழ் மொழியையும் - தமிழரையும் தாழ்த்தும் பிரச்சினை - அதனை எதிர்த்து முழங்கிய பிரச்சினை - இவை யனைத்தும் 1956இல் என்றுதான் நாம் நினைத்திருக்கிறோம்;

ஆனால்; இன்னும் நீண்ட கால வரலாற்றைக் கொண்டது அந்தப் பிரச்சினை என்பதற்கு; இரண்டு நாளைக்கு முன்பு;

திராவிடர் கழகத் தலைவரும், தமிழர் தலைவருமான ஆருயிர் இளவல் வீரமணி அவர்கள் என்னிடம் அளித்த பழைய "விடுதலை" ஏடு சான்றாகத் திகழ்கிறது. 1939இல் இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் வாழும் தமிழர் பற்றி பண்டித நேரு குறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக்காட்டியிருந்தேன் அல்லவா? அதே ஆண்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்க நிர்வாகக் குழுவில் (10-8-1939) ஈரோடு நகரில் தந்தை பெரியாரும் - அவர் தலைமையில் குமாரராஜா முத்தையா, சர். ஏ.டி. பன்னீர்செல்வம், டபிள்யூ.பி.ஏ. சவுந்திரபாண்டியன், சி.என். அண்ணாதுரை (அண்ணா), என்.ஆர். சாமியப்ப முதலியார், கி.ஆ.பெ. விஸ்வநாதம், டி.ஏ.வி. நாதன், சென்னை, பி. பாலசுப்பிரமணியம், சென்னை, எஸ். நடேச முதலியார், ஏ.கே. தங்கவேலு முதலியார், காஞ்சி, பட்டுக்கோட்டை அழகிரி, என்.வி. நடராசன், சென்னை, என். ஜீவரத்தினம் சென்னை, டி. சண்முகம் பிள்ளை திருவொற்றியூர், சி.டி. நாயகம், சென்னை, எம்.ஆர். திருமலைசாமி, திருச்சி, டி.பி. வேதாசலம், டாக்டர் தர்மாம்பாள் சென்னை, வி.வி. ராமசாமி, விருதுநகர் ஆகியோர் கலந்து கொண்டு நிறைவேற்றிய முதல் தீர்மானம்-

> "இலங்கையில் உள்ள தமிழ் மக்களை இலங்கை சர்க்கார் கொடுமையாய் நடத்துவதையும், அவர்களை நாட்டை விட்டு அப்புறப்படுத்த ஏற்பாடு செய்து வருவதையும் இந்தக் குழு வன்மையாய்க் கண்டிக்கிறது."

ஆம்; 1939ஆம் ஆண்டு பெரியார், அண்ணா, அழகிரிசாமி, கி.ஆ.பெ., பன்னீர்செல்வம் போன்ற பெரிய தலைவர்களால் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானமே - 17 ஆண்டுக் காலத்திற்குப் பிறகும் செயல் முறைக்கு வர முடியாமல் - இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களைய முடியாமல் போனதென்றால் - அது பற்றி 1956லும் ஒரு தீர்மானம் தி.மு. கழகப் பொதுக்குழுவில் நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டதென்றால் - மொத்தத்தில் தமிழர் தலைவர்கள் அனைவரும் நடத்திய போராட்டத்திற்கு - சிந்திய ரத்தம் - கொடுத்த உயிர் - பறி போன உடைமை - இவையெதுவும் போதவில்லை என்பதுதானே பொருள்?

அதனால்தானே இப்போது மிச்சமிருக்கிற தமிழ் இனத்தின் பிஞ்சுகள், அரும்புகள் உள்ளிட்ட மாந்தரையாவது மீட்பதற்கு

வழிகாண - நம்மிடையே ஏற்பட்ட துன்ப துயரங்களையும் - அதிர்ச்சிகளையும் தாங்கிக் கொண்டு; ஓரணியில் திரண்டு இந்திய அரசிடம் கேட்கும் உதவியையாவது ஒற்றுமையுடன் கேட்போம் என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் சார்பில் அன்பான வேண்டுகோள் வைத்தோம். தாங்கள் நிறை வேற்றிய தீர்மானத்தை 17 ஆண்டுகளாக நிறைவேற்ற முடியவில்லையே என்று ஏங்கி; தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (என்ற நீதிக் கட்சியினர்) அந்தத் தீர்மானத்தை திரிசங்கு சொர்க்கத்தில் ஊசலாட விட்டு விடவில்லை. எனவே; அந்தத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக 1956இல் நாம் நிறைவேற்றிய தீர்மானத்தை செயல்படுத்த முனைவதே, நாம், தமிழ்ப்பால் அருந்தியவர்கள் என்பதை தரணிக்கு உணர்த்தும் செயலாக இருக்க முடியும்.

இலங்கையின் வரலாறு நமது தஞ்சை ராசராசன் எனும் பெருவேந்தன் காலத்துக்கு முன்பிருந்தே நமக்குப் பால பாடம் - இன்னும் அந்த வரலாற்றின் சில எழுச்சி மிகு பக்கங்களைப் போல அமைந்த கண்டி மன்னன் விக்கிரம ராஜ சிங்கன் அங்கே கி.பி. 1815 வரையில் ஆட்சி புரிந்த வரலாறும் - அதே ஆண்டில் கண்ணுசாமி என்ற அந்தத் தமிழ் மன்னனின் வீழ்ச்சியும் - தோற்றுப் போய் சிறைப்பட்ட கண்ணுசாமி (ஆம்; கண்டி, விக்கிரம ராஜ சிங்கன்) தமிழ்நாட்டில் வேலூரில் சிறை வைக்கப்பட்டதும் நானறிந்த வரலாறு என்பதால்; பதினாறு ஆண்டுகள் குடும்பத்துடன் சிறையிலிருந்து, சிறையிலேயே வேலூரில் மாண்டு விட்ட அந்த மன்னன் பெயரையும், வரலாற்றையும் மறந்து விடாமல் நினைவூட்ட; நான் முதலமைச்சராக இருந்த 1-7-1990 அன்று வேலூரில் கண்டி தமிழ் மன்னன் பெயரால் முத்து மண்டபம் அமைத்து திறப்பு விழாவும் நடத்தினேன்.

இதெல்லாம் வரலாற்றுத் துளிகள் - வாய் புளித்ததோ; மாங்காய் புளித்ததோ என்று பேசுபவர்களுக்கு வக்கணையாகத்தான் தோன்றும் - இலங்கைத் தீவில் அரசோச்சிய தமிழ் அரசர்களில் பண்டாரக வன்னியனின் வரலாற்றை நூலாக எழுதியவன் நான் என்ற முறையில் - இலங்கை வரலாற்றில் தந்தை செல்வநாயகம் வரையில் என் நெஞ்சில் நிற்பவர்கள் - அந்தத் தமிழ் உணர்வு தரிசாகப் போய் விடாத காரணத்தினால்தான் இன்றும் அந்தத்

தமிழர்கள் இலங்கையில் படும் துன்பங்களை எண்ணித் துடித்துப் போகிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தி.மு.க. என்ன செய்தது என்று சிலர் தொடர்ந்து கேள்வி கேட்டு வருபவர்களுக்கு சுருக்கமாக அந்தப் பட்டியலைத் தருகின்றேன்.

1981 ஆம் ஆண்டு இலங்கையிலே தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற செய்தி கிடைத்த அன்றைய தினமே, ஆகஸ்ட் 13 ஆம் தேதியன்று நான் அன்றைய இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய தந்தியில் "கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் இலங்கையின் கிழக்கிலும், தெற்கிலும் கலவரங்கள் பரவி வருகின்றன என்று கூறுகின்றன. அங்குள்ள அரசாங்கமே கலவரத்தை ஊக்குவிப்பதாகத் தோன்றுகின்றது. வட கொழும்பில் தமிழர்களின் இல்லங்கள் தாக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் ரயில்கள் தாக்கப்பட்டுள்ளன. அதில் இருந்த தமிழ்ப் பயணிகள் கொள்ளை அடிக்கப்பட்டு வண்டியை விட்டு வழியில் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள். அம்பாரை கோவில் தேர் நொறுக்கப்பட்டிருக்கிறது. இந்திய வம்சா வழித் தமிழர்களும் இலங்கை முழுதும் பல இடங்களில் தாக்கப் பட்டிருக்கிறார்கள். நிலைமை கட்டுப்பாட்டை மீறிப் போய் விட்டது. கொழும்பில் வயதான தமிழ் மூதாட்டி ஒருவர் பட்டப் பகலிலேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். தமிழர்களுக்கு நிவாரணமளிக்க முன் வரும் அமைப்புகள் இயங்க அரசாங்கம் அனுமதி தர மறுக்கிறது. கலவரங்களை அடக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. செய்திகள் உங்களுக்கு நேரடியாகக் கிடைக்கும், ஆதலால் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் தாங்கள் தங்கள் கவனத்தை செலுத்தி உதவிட வேண்டுகிறேன்" என்று கேட்டுக் கொண்டேன்.

அந்தத் தந்தியைத் தொடர்ந்து 18-8-1981 அன்று மீண்டும் ஒரு தந்தியை இலங்கைத் தமிழர்களின் துயரம் குறித்து பிரதமருக்கு அனுப்பினேன்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்து, சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்திருந்த பேரணியில் கலந்து கொள்ள தமிழக அரசின் தடை

உத்தரவை மீறி - பல்லாயிரக்கணக்கானவர்கள் 29-8-1981 அன்று குழுமினர். ஆனால் மாவட்டச் செயலாளர் சீத்தாபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் து. புருஷோத்தமன், என்.வி.என். சோமு உட்பட 250 பேரை மட்டுமே காவல் துறையினர் கைது செய்தனர். அவர்களை விடுதலை செய்யாவிட்டால் நானே போராட்டத்திற்கு தலைமை தாங்குவேன் என்று அறிவித்தேன். அ.தி.மு.க. அரசு என்னையும் கைது செய்தது. ஆம்,

இலங்கைத் தமிழர்களுக்கான பிரச்சினையில் நான் கைது செய்யப்பட்டேன்.

நான் இலங்கைத் தமிழர்களுக்காக கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழகம் எங்கும் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள் - போராட்டங்கள் நடைபெற்றன. எனது வேண்டுகோளையும் மீறி பலர் நான் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று கோரி குறிப்பாக கோவிலடி பிருந்தாவன், திருச்சி மனோகரன், திருவாரூர் கிட்டு, பெருந்துறை முத்துப்பாண்டியன், கல்லாவி ராஜேந்திரன், மேல்மாயில் ஜெகன்னாதன், சென்னை மேரி போன்றவர்கள் தீக்குளித்தனர்.

அதன் பின்னர் 1983ஆம் ஆண்டுதான் இலங்கையில் தமிழர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். அமெரிக்காவிலிருந்து வெளியாகும் "கிறிஸ்டியன் சயின்ஸ் மானிட்டர்" என்கிற ஏடு 1983இல் எழுதியது வருமாறு:-

"சிங்கள இராணுவத்தினர் 30 பேர் மன்னார் பகுதியில் உள்ள மக்களைக் கொன்று குவிக்கத் தொடங்கினார்கள். இவர்களது கொடூரத் தாக்குதல் ஆறு மணி நேரம் தொடர்ந்தது. மன்னார் நகரின் மத்திய மருத்துவமனையை இராணுவத்தினர் வெறி பிடித்துத் தாக்கினர். சாலைகளில் சென்ற வாகனங்களை நிறுத்தி அதில் உள்ளே இருந்தோரை வெளியே இழுத்துப் போட்டு அந்த இடத்திலேயே ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொன்றார்கள். அருகில் இருந்த அஞ்சலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் 15 பேரை வரிசையாக நிற்க வைத்து அவர்களை நிர்த்தாட்சண்யமாக சுட்டுப் படுகொலை புரிந்தார்கள். வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்த உழவர்களையும் சிங்கள ராணுவம் விடவில்லை.

அவர்களையும் சுட்டுத் தீர்த்தது. இந்த திடீர் தாக்குதலின் முடிவில் 150 பேர் செத்துக் கிடந்தார்கள். 20 தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள். இவர்கள் அருகில் இருந்த ராணுவ முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறினார்கள்."

25-7-1983 அன்று வெலிக்கடை சிறைச்சாலைக்குள் சிங்களவர் நுழைந்து தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்றவர்களை - கத்திகள், கோடரிகள், இரும்புக் கம்பிகள், விறகுக் கட்டைகளால் தாக்கினர். அனைத்துக் கொடுமைகளும் சிறைக் காவலர் முன்னிலையிலேயே நடைபெற்றது. அந்த ஒரு நாளில் மட்டும் 35 தமிழர்கள் படுகொலைக்கு ஆளானார்கள்.

செய்தி கிடைத்தவுடன் தி.மு.கழகம் கேளாக் காதுடையதாகவா இருந்தது? கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மறுநாளே சென்னையில் தமிழர் பாதுகாப்புப் பேரணி நடைபெறும் என்று அறிவித்தேன். 7 மணி நேர அவகாசத்தில் 8 லட்சம் பேர் அந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

27-7-1983 அன்று மீண்டும் 18 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தொடர்ந்து நான்கு நாட்கள் இலங்கையிலே நடைபெற்ற வன்முறையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலைக்கு ஆளானார்கள் என்று செய்தி கிடைத்தது.

சென்னையிலே குடியிருந்த குட்டிமணி, ஜெகன் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினேன்.

31-7-1983 அன்று முகவை மாவட்டக் கழக மாநாடு என அறிவிக்கப்பட்டது இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடாக மாற்றப்பட்டு ராமநாதபுரம் நகரிலே நடத்தப்பட்டது.

தமிழக அரசு 2-8-1983 அன்று முழு அடைப்பு என்று அறிவித்து தமிழகம் முழுவதிலும் வெற்றிகரமாக நடத்தியது.

4-8-1983 அன்று மத்திய அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டமும், 5-8-1983 அன்று ரெயில் நிறுத்தப் போராட்டமும் நடத்துவதென்று முகவை மாவட்ட மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. மத்திய அரசு தானாகவே முன்வந்து 5-8-83 அன்று தமிழகத்திலே ரெயில்கள் ஓடாது என அறிவித்தது.

7-8-1983 அன்று தி.மு.கழகச் செயற்குழு கூடி, ஐ.நா. மன்றத்திற்கு இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கோரி ஒரு கோடி கையெழுத்துக்களைப் பெற்று ஐ.நா. சபைக்கு அனுப்ப முடிவு செய்து, அவ்வாறே வழக்கறிஞர் திரு. டி.பி. ராதாகிருஷ்ணன் மூலமாக அனுப்பியும் வைக்கப்பட்டது.

மத்திய, மாநில அரசுகள் ஈழத் தமிழர் பிரச்சினையில் போதிய கவனம் செலுத்திட வலியுறுத்தி , 10-8-1983 அன்று நானும், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் எங்களுடைய சட்ட மன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்தோம்.

1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் நான்கு நாட்கள் தமிழகம் முழுதும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக கூட்டங்களை நடத்தினோம்.

எதிர்க்கட்சியிலே தான் அப்போது இருந்தோமென்றாலும், 25-8-1983 அன்று பிரதமரின் தூதுவராக ஜி. பார்த்தசாரதி என்னை சென்னையிலே சந்தித்துபேசி விட்டுத்தான் பிறகு இலங்கை சென்றார். அவர் என்னைச் சந்தித்த போது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பிரதமர் இந்திரா காந்தி விடுதலைப் போராளிகளிடம் கொண்டுள்ள பரிவையும், அந்த அடிப்படையில் அவர் வழங்கிடும் உதவிகளையும் என்னிடம் விளக்கினார்.

மூன்றாண்டு கால அமைதிக்குப் பின் 1986ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் திங்களில் இலங்கையில் சிங்கள இராணுவத்தின் கொடுமைகள் அதிகரித்தன. அம்பாறை மாவட்டத்தில் தங்கவேலாயுதபுரம் என்ற கிராமத்தில் ஒரு நாள் இலங்கை இராணுவத்தினர் நுழைந்து கண்ணில் பட்ட பெண்களையும், வயதானவர்களையும், குழந்தைகளையும் குருவிகளைச் சுடுவது போலச் சுட்டுக் கொன்றார்கள். ஒரே நாளில் அறுபதுக்கும் மேற்பட்ட தமிழர்கள் மாண்டனர். தொடர்ந்து இப்படிப்பட்ட செய்திகள் தமிழகத்திற்கு வந்து கொண்டேயிருந்ததால், 26.3.1986 அன்று சென்னையில் 'டெசோ'வின் அமைப்புக் கூட்டம் என் தலைமையிலே கூடி, மே திங்கள் 4ஆம் நாள் மதுரை மாநகரில் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 'டெசோ' சார்பில் அனைத்திந்தியாவில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களை

எல்லாம் அழைத்து இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டினை நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாடு மாத்திரமல்லாமல் இந்தியாவிலே உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் அக்கறை கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டி மத்திய அரசு தனது மெத்தனத்திலிருந்து விடுபட்டுத் தக்க தீர்வு காண முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்து வதற்காகத்தான் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

1986ஆம் ஆண்டு மே திங்கள் இறுதியில் பசும்பொன், ராமநாதபுரம் மாவட்டங்களில் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருந்த எனக்கு, இலங்கையிலே சிங்கள இராணுவத்தின் அடக்குமுறை அதிகமாகி அன்றாடம் தமிழர்கள் கொன்று குவிக்கப் படுகின்றார்கள் என்ற செய்தி வந்து, சுற்றுப் பயணத்தை இரத்துச் செய்துவிட்டுச் சென்னை திரும்பினேன். சென்னை வந்ததும், தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசனும், சிவசிதம்பரம், யோகேஸ்வரன், சம்பந்தம், தங்கத்துரை ஆகியோரும் என்னைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகளை விளக்கினார்கள். இலங்கையில் நடைபெறும் கொடுமைகளைத் தடுக்க இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்த 31.5.1986 அன்று தமிழகம் முழுவதும் முழு அடைப்பு நடத்த வேண்டுமென்றும், அனைவரும் கறுப்புச் சின்னம் அணிந்து ஆங்காங்குக் கண்டன ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்த வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தேன். அந்த ஆண்டும் என்னுடைய பிறந்த நாள் விழாவை நடத்த வேண்டாமென்றும், பிறந்த நாளுக்காக எனக்கு மாலை அணிவிப்பதற்குப் பதிலாக ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு உதவிட நிதி அளித்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

31.5.1986 அன்று தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட முழு அடைப்புப் போராட்டம் வெற்றிகரமாக அமைந்தது. அனைத்துப் போக்குவரத்துக்களும், விமானம், இரயில் போக்குவரத்து உட்பட அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. ஒரு கடை கூடத் திறக்கப்படவில்லை. சென்னையில் நாஞ்சிலார் தலைமையில் பிரம்மாண்டமான கண்டன ஊர்வலம் நடைபெற்றது.

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம், எழுதிக் கொண்டே போகலாம். 1997 ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போது, இலங்கைத் தமிழர் பிரச்சினை எழுந்த போது இதே ஜெயலலிதா என்ன சொன்னார்?

சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க கருணாநிதி முயல்கிறார் என்றும், விடுதலைப் புலிகள் தமிழகத்தில் மீண்டும் தலைதூக்கி விட்டார்கள் என்றும் உள்நோக்கத்தோடு ஜெயலலிதா கடுமையாக ஓர் அறிக்கை விடுத்தார். அதற்கு நான் பதில் கூறுவதற்கு முன்பே, பா.ம.க. வின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் அப்போது விடுத்த அறிக்கையில்

"தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க முயல்கிறார் என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மீது ஜெயலலிதா குற்றம் சாட்டுவது கேலிக்குரிய செய்தியாகும். தன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை மறைப்பதற்காக இப்படி அநாகரிகமான முறையில் குற்றம் சுமத்துவது ஒரு பொறுப்புள்ள கட்சியின் செயலாகாது. கடந்த கால ஜெயலலிதா ஆட்சி, நீதி மன்ற வளாகத்திலும், பொது இடங்களிலும் பத்திரிகைகளின் மீதும் தாக்குதல் நடத்திய, குண்டர்களின் புகலிடமாக இருந்துள்ளது என்பதை தமிழக மக்களால் என்றும் மறக்க முடியாது. இவற்றையெல்லாம் மறந்துவிட்டு தன் நாட்டு விடுதலைக்காக போராடி வரும் ஈழப் போராளிகளைக் கொச்சைப் படுத்தி, அவர்கள் இந்த ஆட்சியில் தமிழகத்தில் மீண்டும் தலைதூக்கி விட்டார்கள் என்று ஜெயலலிதா கூறுவது எந்த வகையில் நியாயம்? ஆட்சியில் அமர்ந்து சிறிது காலமே ஆன நிலையில் தமிழக முதல்வர்மீது இப்படி பொறுப்பற்ற முறையிலே வாய்க்கு வந்தபடி குறை கூறுவது ஆட்சிக் கட்டிலில் இருந்து இறங்கிய கட்சிக்குரிய நல்ல மரபாகாது. கருணாநிதி ஆட்சியில் புலிகள் மீண்டும் தலைதூக்கி விட்டார்கள் என்று ஜெயலலிதா கூறிக் கொண்டே துயருற்று அவதியுறும் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு அரசியலில் காலம் கடத்தி விடலாம் என நினைக்கின்றார் போலும். கருணாநிதி ஆட்சிக்கு வந்தவுடன் ஈழத் தமிழர்களின் குழந்தைகளுக்கு மீண்டும் படிப்புரிமை கொடுத்து தமிழக வரலாற்றில் தமிழின உணர்வுகளுக்கு எதிராக படிந்திருந்த களங்கத்தை

துடைத்தெறிந்தார். மனிதாபிமான அடிப்படையில் பார்க்கும்போது, கருணாநிதியின் அத்தகைய நடவடிக்கை பாராட்டுக்குரியது. தமிழின உணர்வு அற்ற சிலரின் வறட்டுக் கூச்சலுக்கு செவி மடுத்து அப்பாவி ஈழத் தமிழர்களை மீண்டும் பலிக்கடா ஆக்காமல் இருக்க வேண்டும் என முதல்வரை கேட்டுக் கொள்கிறேன்" என்று தெளிவாகச் சொல்லியிருந்தார்.

அனைத்துக் கட்சிகளின் சார்பில் 21ஆம் தேதி நடத்தவுள்ள "மனிதச் சங்கிலி அணிவகுப்பைப்" பற்றி அதனால் என்ன பயன் என்று ராசிபுரத்திலே போய் ஜெயலலிதா கேள்வி கேட்கிறார். இதே கேள்வியைக் கேட்டு என்ன பேசுவது என்று தெரியாமலே வேறு சிலர் பேசித் திரிகிறார்கள்!

இலங்கையில் தமிழினம் படும் துயர் கண்டு தாய்த் தமிழகம் கண்ணீர் வடிக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் மனிதச் சங்கிலி.

எந்த இனமானத் தமிழ் மகன், எந்த மண்ணைத் திருத்தி வளமிகு சோலையாக்கினானோ, அந்த மண்ணிலே அவன் தலை பந்தாடப்படுகின்ற செய்தி கேட்டு, ஆயிரம் செந்தேள் செவியிலே கொட்டியது போல் துள்ளுகிறோம், துவண்டு போகிறோம் - அதனை வெளிப்படுத்தத்தான் மனிதச் சங்கிலி.

இலங்கைக் கொடுமைக்கு ஒரு முடிவு காண இந்தியப் பேரரசு ஒருக்கணமும் தயங்காமல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தத்தான் மனிதச் சங்கிலி.

ஐந்து கோடி தமிழர்கள் மட்டுமல்ல; அயல் நாடுகளில் பரவியுள்ள தமிழ் இனம் முழுவதும் "இதற்கோர் முடிவே கிடையாதா?" என்று கொதித்துக் கேட்கின்ற நிலையை உலகத்திற்கு வெளிப்படுத்தத் தான் மனிதச் சங்கிலி?

"தென் திசையைப் பார்க்கின்றேன்; என் சொல்வேன் என்றன் சிந்தையெலாம் தோள்கள் எல்லாம் பூரிக்குதடடா!" எனப் பாடினாரே பாவேந்தர் - அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத் தமிழன் இராவணனின் புகழ் பாடும் கவிதையினைப் படிக்கும் போதெல்லாம் சிந்தையும் தோள்களும் பூரிக்கும் என்பது உண்மை! ஆனால் இன்று, சிந்தையெலாம் தோள்கள் எல்லாம் துடிக்கு

தடடா! என்ன சொல்வது? என்பதை எடுத்துக்காட்டத்தான் மனிதச் சங்கிலி!

உடன்பிறப்பே, 21ஆம் தேதி தமிழகத் தலைநகராம் சென்னையிலே நடைபெறும் இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்கான மனிதச் சங்கிலி சரியாக 3 மணிக்கு தொடங்கும்.

தமிழ் உள்ளங்கள் அத்தனையிலும் இன்று தணல் அன்றோ அள்ளி அள்ளிக் கொட்டப் பட்டுள்ளது! வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் தொலைபேசி வாயிலாக என்னிடம் தொடர்பு கொண்டு நன்றி தெரிவிக்கிறார்கள். கண்ணீரோடு நன்றி தெரிவிக்கிறார்கள். அந்தக் கண்ணீருடன் இணைந்து அவர் தம் கண்களிலே கனல் பறப்பதை அவர்தம் வாய்ச் சொற்கள் நம்மிடம் தெரிவிக்கின்றன.

தமிழன் கொல்லப்படுகிறான், அது கேட்டு தமிழனாகப் பிறந்தவனும் - இருப்பவனும் கொதிக்கிறான். இந்தச் செய்தி உலகத்திற்கு எட்ட வேண்டுமே என்பதற்காகத்தான் மனிதச் சங்கிலி. உதவாதினி ஒரு தாமதம், சென்னைக்கு விரைந்திட; உடனே எழுக தமிழா!

அன்புள்ள,

மு.க.

20-10-2008

3339. ஒவ்வொரு தமிழனும் காட்டுகின்ற உணர்வு!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாத்திடக் குரல் கொடுப்போர் வரிசையில்; வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்ட கலைத்துறைக் காவலர்களாம் திரையுலகத்துப் பெருமக்களின் ஆர்வம் ததும்பிய முயற்சியையும் - அவர்கள் உணர்த்திய தமிழ் இனப் பற்றினையும் - தமிழக வரலாறு பதிவு செய்து கொள்ளத் தவறாது என்பேன். இயக்குநர் இமயம் என ஏற்றிப் போற்றப்படுபவரும் - என்னரும் நண்பருமான தம்பி பாரதிராஜா எடுத்துக் கொண்ட முயற்சியும் - அதனைத் தொடுத்து நின்று தொண்டாற்றிய தம்பி இராம.நாராயணன் போன்றோர் நல்கிய ஒத்துழைப்பும் - இராமேசுரத்தில் கலையுலகினர்; பல்லாயிரக் கணக்கில் நிரம்பி வழிந்து - அலைமோதி அவதியுறும் அருமைத் தமிழர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக அமைந்து; இந்தியப் பேரரசின் இதயத்தை இளகிடச் செய்து; இன்னே ஆவன செய்திட முன்வரும் நிலையை உருவாக்கிட வல்லதென்பேன். மாணவ மணிகள், மகளிர் குழுக்கள், மீனவ நண்பர்கள், தொழிலாளத் தோழர்கள், வழக்கறிஞர்கள், வணிகப் பெருமக்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், வேளாண் பெருமக்கள் என அவரவர்க்குரிய திறனுடன் அலைகடலுக்கு அப்பால் கூப்பிடு தூரத்தில் துடித்துத் துவண்டு ஓலமிடும் தமிழர்களைக் காத்திட கரம் நீட்டுகின்றனர்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே”

என முண்டாசுக் கவிஞன் பாரதி; விழி காட்டி விரல் நீட்டி எச்சரிக்கிறான் சிதறிய நெல்லிக்காய் மூட்டைகளாக ஆகாதீர்; தமிழர்களே என்று!

“உள்ளத்தால் ஒருவரே; மற்று
உடலினால் பலராய்க் காண்போம்!”

என்று நெற்கதிர்க்கட்டு மீசைக்காரன் பாவேந்தன் வஞ்சகப் பகைவர்க்கு நம் வலிவை உணர்த்துகிறான்!

இந்த இரு கவிதை வரிகளையும் போர்க் கருவிகளாகத் தாங்கி; ஓரணியாகத் திரண்டு நின்று ஒற்றுமை பெற்றிட்ட வெற்றி இது என முழக்கமிடுவோம்!

நான் இரண்டு மூன்று நாட்களாக தொடர்ந்து எழுதும் கடிதங்களில்; நமது கழகம் எவ்வாறெல்லாம் ஈழத் தமிழருக்கு இன்னுயிர் தரவும் - இன்னல் களைந்திடவும் - இலட்சியக் கொடி தாங்கி நின்றது; இப்போதும் நிற்கிறது என்பதற்கான சில செய்திகளை விவரித்திருக்கிறேன்.

நாம் எடுத்த எந்தவொரு நடவடிக்கையும் இந்தியாவின் இறையாண்மைக்கு ஊறு விளையாமல் இலங்கைத் தமிழனைக் காப்பாற்றிட எடுத்தவைதான்!

நேற்றைய என் கடிதத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு.கழகம் 1986ஆம் ஆண்டு வரை என்ன செய்தது என்பதை விவரமாக எழுதியிருந்தேன். அதற்குப் பிறகும் தி.மு.கழகம் இலங்கைத் தமிழர்களுக்காக பாடுபட்டதை இந்தத் தொடரில் இடம் பெறச் செய்ய வேண்டுமென்று சிலர் வலியுறுத்தியதால் அது பற்றிய விவரங்களையும் சுருக்கமாக சொல்லிவிடுகிறேன்.

16.10.1987 அன்று தளபதி கிட்டு சென்னையில் தங்கியிருந்த வீட்டிலேயே தமிழகக் காவல் துறையினரால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அது பற்றி விசாரிக்கச் சென்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர் வைகோவும் கைது செய்யப்பட்டார். அதற்குக் கண்டனம் தெரிவித்து அறிக்கை கொடுத்தேன். இலங்கையில் இந்திய இராணுவம் தமிழர்களைக் கொல்வதை நிறுத்த உடனடியாக முயற்சி மேற்கொள்ள உதவிட வேண்டுமென்று கேட்டு எட்டு மாநில முதலமைச்சர்களுக்கும் மற்றும் இந்தியாவிலுள்ள பல்வேறு எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் தந்திகளை அனுப்பினேன். 17.10.1987 அன்று கிட்டுவைச் சந்திக்கச் சென்ற ஆர்க்காடு வீராசாமி, என்.வி.என். சோமு ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். 22.10.1987 அன்று இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற என்னுடைய தலைமையில் ஆந்திர மாநில முதலமைச்சர் என்.டி.ராமாராவ், பொதுச் செயலாளர் பேராசிரியர், சுப்ரமணியசுவாமி, உபேந்திரா எம்.பி., அஜீத் சிங்

எம்.பி. பொருளாளர் சாதிக் பாட்சா ஆகியோர் கலந்துகொண்ட பொதுக் கூட்டம் சென்னையிலே நடைபெற்றது. 24.10.1987 அன்று ரெயில் நிறுத்தப் போராட்டம் என்று கழகத்தின் சார்பில் அறிவித்ததையொட்டி, தென் பிராந்திய ரெயில்வே ஜெனரல் மானேஜர் ரெயில் போக்குவரத்து அன்றைய தினம் இரத்துச் செய்யப்படுவதாக அறிவித்துவிட்டார்.

அக்டோபர் திங்கள் இறுதியில் நடைபெற்ற இரண்டு நாள் மறியல் போராட்டத்தில் தமிழகம் முழுவதும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

6.11.1987 அன்று ஈழத் தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பின் சார்பாகப் பல்வேறு கட்சியினர், தமிழ்ப் புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மகளிர், பாட்டாளி மக்கள் கலந்து கொண்ட மனிதச் சங்கிலி ஒன்று சென்னையிலும், 11.11.1987 அன்று தமிழகம் முழுவதும் தி.மு.கழகத்தின் சார்பிலும் - மனிதச் சங்கிலி ஒன்றும் நடைபெற்றன.

இதற்கு பின்னர் ஓராண்டு காலம் இலங்கைத் தீவில் அமைதி நிலவியது. இலங்கை ராணுவத்தினால் பிரச்சினை இல்லாத அந்த நேரத்திலேகூட சகோதர யுத்தம் நின்றபாடில்லை. 1989இல் கொழும்பு நகரில் அமிர்தலிங்கம் அவர்களும் யோகேஸ்வரன் அவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதே ஆண்டில் பிளாட் இயக்கத் தலைவர் முகுந்தன் என்ற உமா மகேஸ்வரன் இலங்கையில் கொல்லப்பட்டார்.

1989ஆம் ஆண்டு தி.மு.கழகம் பதவிப் பொறுப்புக்கு மூன்றாவது முறையாக வந்த நிலையில் நான் டெல்லி சென்ற போது பிரதமராக அப்போது இருந்த வி.பி. சிங் அவர்களைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் உரையாடினேன். பிரதமர் வி.பி. சிங் அவர்களின் விருப்பப்படி, வெளியுறவுத் துறை அமைச்சர் குஜ்ரால் அவர்களுடனும், கொழும்பு இந்தியத் தூதுவர் மல்கோத்ரா மற்றும் உயர் அதிகாரிகளுடனும் 1989ஆம் ஆண்டு இறுதியில் நான் விவாதித்தேன்.

சென்னை திரும்பியதும், அந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில் 15 மற்றும்

16-12-1989 ஆகிய நாட்களில் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் விருந்தினர் விடுதியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான ஆண்டன் பாலசிங்கம், யோகி ஆகியோர் என்னைச் சந்தித்து உரையாடினர். அப்போது என்னுடன் தம்பி முரசொலி மாறன் உடனிருந்தார்.

பேச்சுவார்த்தை விவரம் குறித்து 20-12-1989 அன்று பிரதமரிடம் விளக்கினேன். மற்ற போராளிகளிடமும் பேசுமாறு பிரதமர் கூறினார். அதன்படி சந்திரஹாசன், சச்சிதானந்தன், ஈழவேந்தன், வேரம்பலம், எஸ்.சிவசுப்ரமணியம், எஸ். சிவானந்தம், சு.சிவநாயகன், ர.பத்மநாபன், த. அருணாசலம், ஞான கணேசன், பி. ஆனந்தராஜா, நீதுவான் சிவானந்தன் ஆகியோருடன் விவாதித்தேன். 4-1-1990 அன்று இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னே என்னைச் சந்தித்து நிலைமைகளை விளக்கினார். 7-1-1990 அன்று ஈராஸ் குழுவினர் பாலகுமார், சங்கர், முகிலன் ஆகியோரும் 8-1-1990 அன்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் மல்கோத்ராவும் 9-1-1990 அன்று ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவைச் சேர்ந்த இலங்கை வடகிழக்கு மாகாண முதல் அமைச்சர் வரதராசப் பெருமாள், யோகசங்கரி, சந்தன் ஆகியோரும் 17-2-1990 அன்று பாலசிங்கம், யோகி ஆகியோரும், 22-2-1990 அன்று ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., பிளாட், டெலோ இயக்கப் பிரதிநிதிகளும் என்னைச் சந்தித்து மணிக் கணக்கிலே இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும், சகோதர ஒற்றுமை குறித்தும் பேச்சு வார்த்தை நடத்தினர். என்னுடன் பேசும்போது அனைவரும் ஒற்றுமையாக இனி செயல்படுவதாக உறுதி அளித்தனர்.

அதே ஆண்டு ஜூன் திங்கள் 18ஆம் தேதியன்று டெல்லியில் பிரதமர் வி.பி. சிங் இல்லத்தில் அவருடைய விருப்பப்படியே, முதல் அமைச்சர்கள் ஜோதிபாசு, ஈ.கே. நாயனார், பிஜூ பட்நாயக், செகாவத், லல்லு பிரசாத், மகந்தா, குப்தா, சாந்தகுமார், பண்டாரி, டி.ராமச்சந்திரன் மற்றும் மத்திய அமைச்சர்கள் அருண் நேரு, முப்தி மகமது சையத், முரசொலி மாறன், குருபாதசாமி, தினேஷ் கோசுவாமி, உபேந்திரா, உன்னிகிருஷ்ணன் மற்றும் வாஜ்பாய், அத்வானி, ஈ.எம்.எஸ்., இந்திரஜித் குப்தா, பரூக்கி, ஜஸ்வந்த் சிங், சிட்டபாசு, சாமர் முகர்ஜி, டாக்டர் நகேந்திர சக்கரியா ஆகியோரிடம் ஈழப் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் விளக்கம் அளித்தேன்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் நான் கூறிய சம்பவங்களையெல்லாம் உருக்கத்தோடு கேட்டபிறகு, அனைவரும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு அளிப்போம், அதற்காக அணிவகுத்து ஒன்றாக இருப்போம் என்று எனக்கு உறுதியளித்தனர்.

மிகுந்த மகிழ்ச்சியோடு டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்திற்குத் திரும்பினேன். சென்னையிலிருந்து உள்துறை செயலாளர் தொலைபேசியில் பேசுகிறார் என்றார்கள். பேசினேன். சென்னையில் விடுதலை இயக்கப் போராளி பத்மநாபா உட்பட 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. துயரத்தை அடக்கிக்கொள்ள முடியவில்லை. சென்னை திரும்பி, வீட்டிற்குக் கூடச் செல்லாமல் நேராகச் சென்று அந்தப் போராளிகளுக்கு மலர் அஞ்சலி செலுத்தினேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு 20-7-1990 அன்று ஈழத் தமிழர்களுக்காக ஒரு நாள் முழு அடைப்பும் பொது வேலை நிறுத்தமும் நடத்த தி.மு.க. நிர்வாகக் குழு முடிவு செய்து, அதன்படி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 23-8-1990 முரசொலி மாறன் தலைமையில் கழக நாடாளு மன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்து இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டு கோள் விடப்பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்காக இந்த அளவிற்கு உண்மையாக தி.மு.கழகமும், கழக அரசும் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது எப்படியாவது ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி கழக அரசைக் கலைக்க வேண்டுமென்பதற்காக தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுபற்றிய விவரத்தையும் தெரிந்து கொள்வது நல்லது.

26-11-1990 அன்று செய்தியாளர்கள் பிரதமராக இருந்த சந்திரசேகரிடம், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாகக் கூறி, கழக அரசைக் கலைக்கப் போகிறீர்களா என்று கேட்ட போது, அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று கூறினார்.

3-12-1990 அன்று டெல்லி சென்ற என்னை செய்தியாளர்கள் சந்தித்து தி.மு.க. அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிப்பதாக அ.தி.மு.க. கூறுகிறதே, அதற்கு என்ன விளக்கம்

என்று கேட்டார்கள். அதற்கு நான் 1983 முதல் 1987 வரை (அ.தி.மு.க. ஆட்சியில்) போராளிகளின் பல்வேறு குழுக்களுக்கு தமிழ்நாட்டில் 31 பயிற்சி முகாம்கள் இருந்தது உண்மை. அவை இப்போது இல்லை. நான் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்படுவதாக குற்றம்சாட்டுகிற அ.தி.மு.க.வினர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம், 13-10-1990 அன்று ஜெயலலிதா அளித்த பேட்டியில் "இலங்கையில் தமிழ் இனம் அழிகிறது. போரிடும் விடுதலைப் புலிகளுக்கு தமிழர்கள் ஆதரவு தரவேண்டும். கருணாநிதி மௌனம் சாதிப்பது ஏன்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார் என்பதை எடுத்துக் காட்டினேன். அப்படிச் சொன்ன ஜெயலலிதா இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் நடத்திய கூட்டத்தை விடுதலைப்புலிகளை காப்பாற்றுவதற்காக நடத்திய கூட்டம் என்று கண்டித்தார்.

4-12-1990 அன்று மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்காந்த் சகாய் மற்றும் உள்துறை செயலாளர்கள் என்னைச் சந்தித்து பேசிய பிறகு, செய்தியாளர்களிடம் கூறும்போது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமான நிலையில் இல்லை, எனவே நாங்கள் உடனடியாக தமிழகம் செல்லும் திட்டம் இல்லை என்று கூறினார்கள்.

25-12-1990 அன்று சென்னைக்கு பிரதமர் சந்திர சேகர் சங்கராச்சாரியாரைச் சந்திக்க வந்தார். விமான நிலையத்தில் நானும் ஆளுநரும் அமைச்சர்களும் முறைப்படி வரவேற்றோம். அதிசயமாக விமான நிலையத்திற்கு ஜெயலலிதாவும், அவரது கட்சியினரும் வந்திருந்து பிரதமரை வரவேற்றார்கள். காஞ்சிபுரத்தில் செய்தியாளர்கள் பிரதமரிடம் ஆட்சிக் கலைப்பு பற்றி கேட்டபோது அப்படி எதுவும் இல்லை என்றார்.

அதே நாள் மாலையில் ஜெயலலிதா வீட்டில் பிரதமர் சந்திரசேகருக்கு தேனீர் விருந்து தரப்பட்டது. விமான நிலையத்தில் வழியனுப்ப வந்த ஜெயலலிதா செய்தியாளர்களிடம் பிரதமரிடம் ஆட்சிக் கலைப்பு பற்றி கூறியதாக ஒப்புக் கொண்டார்.

27-12-1990 அன்று ஜெயலலிதா ஆளுநர் பர்னாலா அவர்களைச் சந்தித்து தமிழக அரசைப் பற்றி புகார் கூறினார். 29-12-90 அன்று ஜெயலலிதா டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து

புகார் மனு கொடுத்தார். 30-12-1990 அன்று ஜெயலலிதா குடியரசு தலைவர் ஆர். வெங்கட்ராமனைச் சந்தித்து புகார் மனு கொடுத்தார். அந்தப் புகார் மனுக்களில் தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்.

3-1-1991 அன்று "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஏடு தலையங்கத்திலும் - 8-1-1991 அன்று "டைம்ஸ் ஆப் இந்தியா" ஏடு தலையங்கத்திலும் - "இந்து" நாளிதழ் செய்தியிலும் - 10-1-1991 அன்று "ஸ்டேட்ஸ்மேன்" ஏடு செய்தியிலும் ஆட்சிக் கலைப்பைக் கடுமையாகக் கண்டித்து எழுதின.

10-1-1991 அன்று நாடாளுமன்ற மக்களவையில் பிரதமர் சந்திரசேகர் தமிழகத்தில் உல்பா முகாம்கள் இருப்பதாகக் கூறினார். அதனை நிரூபிக்கத் தயாரா என்று முரசொலி மாறன் அறைகூவல் விடுத்தார். மேலும் மாறன், மத்திய அரசு கொடுத்த தகவல்கள் தமிழக முதல்வர் மூலமாக விடுதலைப் புலிகளின் தலைமையகத்துக்கு அனுப்பப்படுவதாக பிரதமர் சந்திரசேகர் சொன்ன குற்றச்சாட்டு - அதற்கு முன்பு எந்தவொரு பிரதமரும் ஒரு முதல் அமைச்சர் மீது சொல்லாத கடுமையான குற்றச்சாட்டு என்றும் கூறினார்.

28-1-1991 அன்று இலங்கைக்குச் சென்ற வெளியுறவுத் துறை அமைச்சர் சுக்லா அவர்கள் அன்றைய தினம் மதுரையிலேயிருந்த என்னை அங்கேயே வந்து சந்தித்து விட்டு இலங்கை சென்றார். 29-1-1991 அன்று டெல்லியிலிருந்து தமிழக கவர்னர் பர்னாலா அவர்களுக்கு அழைப்பு வந்தது. கழக அரசுக்கு எதிராக அறிக்கை தரும்படி ஆளுநர் வலியுறுத்தப்பட்டார். மத்திய உள்துறை இணை அமைச்சர் தமிழ்நாடு இல்லத்திற்கே வந்து நேரில் ஆளுநரைக் கேட்டுக் கொண்டார். "ரா" மற்றும் "ஐ.பி." யின் மூத்த அதிகாரிகள் ஆளுநரை வலியுறுத்தியும் அந்தப் பஞ்சாப் சிங்கம் மறுத்து விட்டது. முன்னாள் பிரதமர் வி.பி. சிங் தலைமையில் தேசிய முன்னணியின் பிரதிநிதிகள் குடியரசு தலைவரைச் சந்தித்து ஜனநாயக விரோதமாக நடந்து கொண்டு விடாதீர்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனாலும் 30-1-1991 அன்று குடியரசு தலைவர் 356வது பிரிவிலே இருந்தாலும் அதுவரை யாரும் எப்போதும் பயன்படுத்தாத அதிகாரத்தை அதாவது Otherwise என்ற ஒரு சொல்லை பயன்படுத்தி - (ஆளுநர் அறிக்கை கொடுக்காத நிலையில்)

தி.மு.கழக ஆட்சியைக் கலைத்தார். இவ்வாறு இரண்டாவது முறையாக தி.மு.கழக அரசு, இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்தமைக்காக கலைக்கப்பட்டது. தமிழகச் சட்டமன்றத்தில் 234 உறுப்பினர்களுக்கு 142 சட்டமன்ற உறுப்பினர்கள் தி.மு.க. சார்பில் இருந்த நிலையிலும் - 2-2-1991 அன்று பேரவையில் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவிருந்த நிலையிலும் ஆட்சிக் கலைப்பு செய்யப்பட்டது. இவ்வாறு இலங்கைத் தமிழர்களுக்காகவே இரண்டே ஆண்டு காலத்தில் தி.மு.கழகம் ஆட்சியை இழந்தது.

1995ஆம் ஆண்டு சிங்கள ராணுவம் இலங்கையில் தமிழர் வாழும் பகுதியில் மீண்டும் கடுமையானத் தாக்குதலை நடத்தியது. அதில் குழந்தைகள் மட்டும் 63 பேர் பலியாகினர். அதுபற்றி 13-7-1995 அன்று கூடிய செயற்குழு கூட்டத்தில் எடுத்த முடிவின்படி 17-7-1995 அன்று ஒவ்வொரு நகரத்திலும் கறுப்புச் சின்னம் அணிந்து உண்ணா நோன்பு இருந்தோம். 2-11-1995 அன்று சென்னையில் கடற்கரை காந்தி சிலை அருகிலிருந்து என்னுடைய தலைமையில் கறுப்புக்கொடி ஏந்திய பேரணி ஒன்று புறப்பட்டு அண்ணா அறிவாலயத்திற்கு வந்தது. அங்கே நடைபெற்ற கூட்டத்தில் ஈழத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் மருத்துவ உதவிக்காக தி.மு.க. அறக்கட்டளை சார்பில் 25 லட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்படும் என்று அறிவித்தேன். மறுநாளே அந்த நிதி காசோலை மூலமாக செஞ்சிலுவை சங்கத்தின் தமிழ்நாடு கிளைத் தலைவர் வி. கார்த்திகேயனிடம் தரப்பட்டது. மாவட்ட தலைநகரங்களில் 3-11-1995 அன்று கறுப்புக் கொடி பேரணி நடந்தது.

தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசு தலைவரையும், பிரதமரையும் சந்தித்து இலங்கைத் தமிழர்கள் படுகொலை குறித்து முறையீடுகளைக் கொடுத்தனர். பன்னாட்டு தமிழுறவு மன்றத்தின் சார்பில் 25-11-1995 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஈழத் தமிழர் பிரச்சினைக்காக இந்திய அரசை நடவடிக்கை எடுக்கக் கோரி 30-11-1995 அன்று முழு அடைப்பு நடத்தப்பட்டது.

ஆனால் இவ்வளவிற்கும் பிறகு, ஜெயலலிதாவும், வேறு சிலரும் இலவச யோசனையாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும் என்று சொல்வதற்குப் பதிலாக தமிழகத்திலே

ஆட்சியிலிருந்து ஏன் விலகக் கூடாதா என்று நப்பாசையோடு கேட்கிறார்கள்.

1998ஆம் ஆண்டு மே, ஜூன் திங்களில் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை ராணுவத்திற்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றது. அப்போது மத்திய அமைச்சரவையில் அ.தி.மு.க.வும் அங்கம் வகித்து வந்தது. அப்போது அ.தி.மு.க. சார்பில் பிரதமரிடம் ஜெயலலிதா உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கையெழுத்திட்டு மனு ஒன்றைக் கொடுத்தார்கள். அந்த மனுவிலே ராணுவம் நடத்தி வரும் தாக்குதல் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும், தமிழர்களின் தாயகமான வடக்குப் பகுதியையும், கிழக்குப் பகுதியையும் இணைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்தான் எழுதிக் கொடுத்தார்களே தவிர, அப்படிச் செய்யத் தவறினால் ஆட்சியில் இருந்து விலகிக் கொள்வோம் என்று எழுதித் தரவில்லை. அப்போது அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக மத்திய அரசுக்கு ஆதரவை விலக்கிக் கொண்டு முன் உதாரணம் படைக்காத நிலையில், தி.மு.கழகம் மட்டும் தற்போது பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று கேட்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்?

இங்கேயிருப்பவர்கள் இவ்வாறு வக்கணை பேசிய நிலையிலும், இலங்கைத் தமிழர்களின் பால் அக்கறையோடு நாம் அனுப்பிய தீர்மானங்களை மிகவும் அனுதாபத்தோடு ஏற்றுக் கொண்டு டெல்லியிலே உள்ள மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அன்றாடம் வரும் செய்திகள் நமக்கு மிகப் பெரிய ஆறுதலைத் தருகின்றன. நமது பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் இலங்கை அதிபர் ராஜபக்சேயுடன் தொலை பேசியில் இந்தப் பிரச்சினை குறித்துப் பேசியிருக்கிறார். மேலும் இலங்கையிலே உள்ள நிலைமைகளை அறிய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கே அனுப்பி வைக்கவும் மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக செய்தி வந்துள்ளது. தாக்குதல்களில் இருந்து அப்பாவி மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும், தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், இலங்கை இனப் பிரச்சினைக்கு ராணுவ ரீதியில் தீர்வு காண முடியாது என்றும், சட்டத்திற்கு உட்பட்டு, அரசியல் ரீதியில்

பேச்சுவார்த்தை மூலம் சமரச தீர்வு காண வேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார் என்று செய்திகள் வந்துள்ளன.

கடந்த வியாழக்கிழமையன்று ஐ.நா. மன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட 750 டன் உணவுப் பொருட்கள் இலங்கையின் வடக்குப் பகுதியில் விநியோகிக்க மறுக்கப்பட்ட நிலையில் - பிரதமர் பேசிய பேச்சின் விளைவாக - பிரதமர் பேசிய அன்றையதினமே 2 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு அந்த உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன என்றும் ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன.

எனவே நம்முடைய உழைப்பு வீண் போக வில்லை என்பது ஆறுதலை தந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் உடன்பிறப்பே, நீ மனிதச் சங்கிலியில் கலந்துகொள்ள புறப்பட்டுக் கொண்டிருப்பாய் என்று கருதுகிறேன். வரும் வழியில் போக்கு வரத்துக்கு எந்தவிதமான நெருக்கடியும் தராமல், பாதுகாப்போடு வரவும். எந்தெந்த உடன்பிறப்பு எங்கெங்கே மனிதச் சங்கிலியில் கைகோத்து நிற்கிறார்கள் என்பதை என் கண்கள் தேடும். அந்தக் கண்களில் நீ படுவாய் என்ற எதிர்பார்ப்போடு உன் விழி காண என் விழிகள் காத்திருக்கின்றன.

என் விழிகள் மட்டுமல்ல, உலகத்திலே உள்ள ஒவ்வொரு தமிழனும் - நம் இனத்திற்காக எடுக்கப்படுகின்ற மனிதச் சங்கிலி எத்தனை கிலோ மீட்டர் தூரம் நின்றது என்பதை எதிர் நோக்கியிருக்கிறார்கள். உணர்வுகள் ஒன்றுபட வேண்டிய சங்கமம் அது. தமிழ் ரத்தம் ஓடுகின்றவர்களால் மட்டுமே அதை உணர்ந்து கொள்ள முடியும்.

அன்புள்ள,

மு.க.

21-10-2008

3340. சங்கம் முழங்கிட;
வங்கக் கடலென வருக!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழனுக்காக ஒரு துளி கண்ணீர் வடிக்கவும், மெல்ல உதடசைத்து ஆறுதல் கூறவும் வழியற்றுப்போய் விழியற்ற குருடர்களாய் இங்குள்ள தமிழினம் தவித்துக் கொண்டிருக் கிறது. எழுபது ஆண்டுக் காலமாக இலங்கை வாழ் ஈழத் தமிழர்கள், உரிமை யற்றவர்களாக, உடைமைகளைப் பறிகொடுப் பவர்களாக, ஏன்; உயிரையும் கூட அர்ப்பணிப்பவர்களாக; இன்னும் சொல்லப் போனால் கற்பெனும் மான உணர்வையும் கொள்ளை கொடுப்பவர்களாக; கணவன் முன்னிலையில் அவன் கட்டிய மனைவி - கற்பிழந்தாள் - அண்ணனோ தம்பியோ கண்ணெதிரே பார்த்துக் கொண்டு அலற அலற; அவர்களின் அருமைச் சகோதரி; அக்காளோ, தங்கையோ அம்மவோ; அதனினும் கொடுமையாக முதிர்ந்த வயதுத் தாய்க் குலமும் சிங்கள முள்ளம்பன்றிகளின் முரட்டுப் பற்களுக்கிடையே சிக்கி ரத்தம் சிந்தும் கோரம்! கோரம்!

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்றே தெரியாமல்; தவழும் தளிர்கள்; தாங்கள் நகர்ந்திடும் தாழ்வாரத்திலேயே; மரணம் வெடிகுண்டு வடிவத்திலே வெடித்துச் சிதறி அந்தச் சிசுக்களின் உயிரைச் சூறையாடப் போகிறது என்பதை; நினைத்து அதிர்ந்திடுவதற்கும் நேரமின்றித் தமது ஆவி பறிகொடுக்கும் அன்னையர்கள்!

இதுதான் இன்றைய இலங்கை - இலங்கையின் நகரங்கள் - கிராமங்கள் - ஏழையர் காலனிகள் - ஏன் செல்வச் சீமான்களின் தோட்டம் துரவுகளில் கூட - அய்யோ என்ற ஓலம் - குய்யோ முறையோ எனும் கூச்சல் - இதனை இருபது கல் தொலைவுக்கு அப்பால் இங்குள்ள தமிழன் அலைமோதும் கடலோரம் நின்று காதால் கேட்கவும் - கண்ணால் பார்க்கவும் - ஒரு பயங்கரமான நிலைமை.

மேட்டில் விளையாடிய குழந்தை; நூறு அடி ஆழக் குழியில் - இரு நூறு அடி ஆழமுள்ள பள்ளத்தில் - தவறி விழுந்து விட்டதென்றால் - அதைப் பார்ப்பவர்களுக்கு பரிதாப உணர்ச்சி மட்டும் பறந்தோடி வந்தால் போதுமா? - அவர்கள் எத்துணை அதிர்ச்சி கொண்டு இயந்திரங்களை பயன்படுத்தி அந்தக் குழந்தையை வெளியே கொண்டுவரத் துடியாய்த் துடிக்கிறார்கள் - உரக் கிணற்றில் ஒரு குழந்தை விழுந்த செய்தி உலகத்தார் அனுதாபத்தையே பெற்று விடும்போது; பழந் தமிழன் வாழ்ந்த பகுதி - ஆண்ட பகுதி - நமது கரிகாலனும், ராஜராஜனும், ராஜேந்திரச் சோழனும் கடல் கடந்தும் களம் கண்டு போரிட்டு; கடாரத்தில் ஏற்றினார்களே புலிக்கொடி; அது தமிழர் புவியாண்ட கொடி அல்லவா! அந்தக் கொடி நிழலில் வாழ்ந்தோர் - ஆண்டோர் - இன்று இலங்கையிலே தாழ்ந்தோர் - மாண்டோர் என்ற கணக்கில் அல்லவா வருகின்றனர்! அந்தோ தமிழர்களே; உங்களுக்காக குரல் கொடுக்கவும் முடியாமல்; இங்குள்ள தமிழன் குறுக்கே நிற்கின்றானே!

அங்கே போர் நின்றுவிடுமோ? அமைதி திரும்பி விடுமோ? கள்ளிக்காடு சூழ அவதியுறும் இலங்கைத் தமிழன் ஆறுதல் பெற அங்கே முல்லைப் பூ பூத்து விடுமோ; என்று முட்டிக் கொண்டு அழவும் முடியாமல் - மோதிக் கொண்டு கதறவும் முடியாமல் - அய்யோ! இலங்கைத் தமிழ் இனம் காப்பாற்றப்பட்டு விடும் போலிருக்கிறதே என்று; "தமிழன் என்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா" என்ற பாடலை மறந்துவிட்டு; அல்லது மாற்றிப்பாட முனைந்து "தமிழன் என்று சொல்லடா; தழை இலைகளை மெல்லடா" என்றல்லவா பாடிட விரும்புகிறான் துரோகத் தமிழன்!

அவனுக்கு மாறாக; அந்தச் சிறு அடங்காப் பிடாரி கூட்டத்தைத் தோலுரித்துக் காட்டுகின்ற முறையிலே; அலை மோதும் கடலென ஆர்ப்பரிக்கும் தமிழர் கூட்டம்; கடந்த 21ஆம் நாள் மழை பொழிந்தாலும் கவலையில்லை; எங்கள் தமிழரை இலங்கையில் காத்திட இங்குள்ளோர் அணி திரள்வோம் என்று ஆடவர், பெண்டிர், மாணவர், தொழிலாளர் அனைவரும் ஒன்று திரண்டனரே; இருந்தாலும் மழை காரணமாக இரண்டு நாள் ஒத்தி வைத்து "மனிதச் சங்கிலி" - 24ஆம் நாள் பிற்பகல்

என்று அறிவித்ததால்; - மேலும் நாலுமடங்கு மக்களன்றோ தமிழ் முரசொலித்து வர இருக்கின்றார்கள் - வரிசை வகுத்திட இருக்கின்றார்கள்!

"பார் சிறுத்தலால் படை பெருத்ததோ -
படை பெருத்தலால் பார் சிறுத்ததோ"

என்ற கலிங்கத்துப் பரணி பாடலை நினைவூட்ட நிரம்பி வழியப் போகும் கூட்டம்!

என் அழைப்புக்கே எள் போட்டால் அந்த எள் விழ இடமின்றி வந்து நிறைகின்ற உடன்பிறப்புக்காள்!

எல்லாக் கட்சித் தலைவர்களும் தமிழ் உணர்வு ததும்பிட அழைக்கும்போது -

ஏழு கடல் ஒன்றானது போன்ற தோற்றத்தையல்லவா; தமிழர்தம் ஏற்றத்தையல்லவா; உணர்வுள்ள உலகத் தமிழர் அனைவரும் காண இருக்கிறார்கள்.

அக்டோபர் 24 - பிற்பகல் 3 மணி!

அலைகடலாய் சங்கமிப்போம் - தன்மானத் தமிழரின்

மலைமுகடு இதுவென நிலைநாட்டுவோம்!

இந்த அறப்போர் சங்கிலி பற்றி அவதூறு கிளப்புவோர் -

அறிக்கை விடுவோர் -

சிங்கள வெறியர்களிடமிருந்து தமிழ் இன மக்களைக் காத்திடும் இந்த முயற்சியைக் காயப்படுத்த முனைவோர் -

களங்கப்படுத்த நினைப்போர் -

திசை திருப்புவோர் -

அக்காள் தங்கைகளுடன் பிறந்தவர்களாக இருக்கமுடியாது -

அன்னையர் குலத்துக்கொரு அவமான மெனிலோ;

ஆனந்தக் கூத்தாடுபவர்களாயிருக்க வேண்டும்!

அவ்வளவு ஏன்?

அவர்கள் தமிழரல்லாதவர்களாயிருக்க வேண்டும் - என்கிற

இந்த முடிவோடு ஒரு வேளை மழை தொடர்ந்து - அதில் நனைய நேரிட்டாலும் நினைவு எல்லாம் என் தமிழ் இனத்தைக் காப்பதில்தான் நிலைத்திருக்கும் என்ற சூளுரையுடன் சென்னைத் தலைநகரில் -

வங்கக் கடலெனப் பெருகிடுக!

சங்கம் முழங்கிடுக!!

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் என்று!!!

அன்புள்ள,

மு.க.

23-10-2008

3341. அடிமை விலங்கு அறுபட;
அமைதியின் சுகந்தம் வீசிட;
அணிதிரண்டதே மனிதச் சங்கிலி!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்தில் நீதிக் கட்சியாக இருந்த காலந்தொட்டு - நீதிக் கட்சி தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக இயங்கிய காலத்திலும் - குறிப்பாக சொல்ல வேண்டுமேயானால் 1939இல் ஈரோடு நகரத்தில் பெரியார் தலைமையில், அறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், டபிள்யூ.பி.ஏ. சவுந்தர பாண்டியன், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம், என்.வி. நடராசன், டாக்டர் தர்மாம்பாள், என்.ஆர். சாமியப்பா ஆகியோர் கொண்ட நிர்வாகக் குழுவில் இலங்கைத் தமிழர்களுடைய உரிமைகளைக் காத்திடவும் - அந்த நாட்டில் தமிழ்மொழிக்கு உரிய தகுதி பெறவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1956ஆம் ஆண்டு சிதம்பரத்தில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவிலும் இலங்கைத் தமிழர்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்தும் - கொடி உயர்த்தியும் நிறைவேற்றிய தீர்மானத்தை அடியொற்றி இலங்கைத் தமிழர்களுக்காக - உரிமை முழக்கமிட்டுக் கொண்டிருந்த அந்தக் காலக் கட்டத்தில் - இலங்கையில் சிங்களவர் ஆதிக்கம் வலுப்பெற்று சிங்கள இன ஆதிக்க வெறியும் - அதிகார வெறியும் இரண்டற கலந்த காரணத்தால் அந்தப் பூமியில் தமிழ் இனப் படுகொலையும் ஆரம்பமாயிற்று.

அதற்குச் சான்றாகத்தான் வெளிக்கடை சிறைச்சாலையில் அடைபட்டிருந்த தமிழீழ விடுதலைத் தளபதிகள் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் ஆகிய மூவரும் சிறைச்சாலைக்குள்ளே சிங்கள வெறியர்களால் தாக்குண்டு குற்றுயிரும், குலை உயிருமாகக் கிடந்த நிலையிலும் - அவர்தம் உடல் உறுப்புகள் அறுக்கப்பட்டு

- நாக்கு துண்டிக்கப்பட்டு - கண்கள் தோண்டப்பட்டு விளைவிக்கப்பட்ட கொடுமை - இந்த விரிந்த உலகத்தில் பரந்து கிடக்கும் பல நாடுகளில் வாழ்வாதாரம் தேடிச் சென்று வசிக்கின்ற இலட்சோப இலட்சம் தமிழர்களை - தமிழ்த் தாய்மார்களை - கண்ணீர்க் கடலில் மிதக்க வைத்தது.

இலங்கைப் பிரச்சினையை கையில் எடுத்து களம் காண வேண்டிய அவசியத்திற்கு இங்குள்ள தமிழர்களை ரத்த பாச உணர்வு ஆளாக்கி விட்ட காரணத்தால் - இலங்கைத் தமிழர்களைக் காக்கும் அணியில் நின்று பணிபுரிய வேண்டிய இன்றியமையாத் தேவை நமக்கு ஏற்பட்டது.

இலங்கைத் தமிழர்களைக் காக்கவும் - அவர்தம் உரிமைகளை அறவழியில் - அமைதி வழியில் - அரசியல் ரீதியாக வாதாடி, போராடிப் பெறுகின்ற வழிமுறைகளைப் பின்பற்றி தி.மு.கழகம் முயற்சிகளை மேற்கொண்டு - அதற்கு ஒத்து வருகின்ற கட்சிகள், இலங்கை தமிழர்பால் பரிவு கொண்ட இயக்கங்கள் - அவற்றின் தலைவர்கள் - முன்னோடிகள் ஆகியோரிடம் தொடர்பு கொண்டு - அவர்களும் ஈடுபாடு கொண்டு நடத்திய பல போராட்டங்களையும் - செய்த தியாகங்களையும் உலகம் முழுதும் இலங்கைத் தமிழர்களுக்காக கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் தமிழர்தம் தூய நெஞ்சங்கள் அறியும்.

இடைக்காலத்தில் அங்கே அமைதி ஏற்படவும் - அமளிகள் முற்றுப்பெறவும் - தமிழ் இனப் படுகொலை தடுக்கப்படவும் நார்வே போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் நாம் ஆறுதலாகப் பெருமூச்சு விட்டுக் கொள்ள அவகாசம் தந்ததெனினும் மீண்டும் அங்கே தமிழ் இனப் படுகொலை தொடருகிறது. படுகொலைகளாலும், பட்டினியாலும் அங்கு தமிழ் மக்கள் மாண்டு மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

சிங்கள ராணுவம் பொழிகின்ற குண்டுகளால் தினம் தினம் அழிகின்றது தமிழ் இனம். அந்த அழிவிலிருந்து நம் இனத்தை மீட்க நாமெல்லாம் ஒன்று கூடி இந்தியப் பேரரசின் உதவியை நாடி நிற்கின்றோம். இந்தியத் துணைக் கண்டத்தில் இப்படி உதவி கேட்டு ஓலமிடும் அனாதைக் கூட்டமாக - ஒரு காலத்தில் இலங்கையையே ஆண்ட பரம்பரையாய் விளங்கிய அந்தத் தமிழ் இனம் இன்று தவியாய்த் தவித்து நிற்கிறது.

அந்தத் தவிப்பைப் போக்க ஈழத் தமிழ் இனத்தில் இளஞ்சிறார், குழந்தைகள் எனும் புல் பூண்டுகளைக் கூட அழித்து

விடத் துடிக்கும் இனப் படுகொலையைத் தடுக்க வழிகாண வேண்டுமென்பதற்குத்தான் கடந்த அக்டோபர் 14ஆம் நாள் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அரசின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினோம். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை இந்தியப் பேரரசு ஏற்று நடவடிக்கை எடுத்திடும் என்ற நம்பிக்கையோடு உரியவர்களுக்கு அனுப்பி வைத்தோம்.

இதற்கு முன்பே - அக்டோபர் 6-ந்தேதி மயிலை மாங்கொல்லையில் இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்கென பொதுக் கூட்டம் ஒன்றினைக் கூட்டி நானும் பேராசிரியரும் பேசுவதாக அறிவிக்கப்பட்டது. கூட்டம் அறிவிக்கப்பட்ட அந்நாள் காலையில் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அப்போது அவரிடம் நான் புதுடெல்லியில் உள்ள இலங்கைத் தூதரை மத்திய அரசு உடனடியாக அழைத்து, நிராயுதபாணியாக உள்ள இலங்கைத் தமிழர்களை கொல்வது குறித்து இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றும், இலங்கை அரசின் ராணுவ நடவடிக்கையும் இனப் படுகொலையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், இலங்கை அரசு அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கிட வேண்டும் என்றும், இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் எத்தகைய துன்பங் களுக்கும் இனி ஆளாகவே கூடாது என்றும் கேட்டுக் கொண்டேன்.

பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் - நான் உடனடியாக கவனிக்கிறேன், என்னை நம்புங்கள் என்று கூறினார்.

நாம் நம்பிக்கைக் கொள்கின்ற அளவிற்கு 6ஆம் தேதி மாலையே பிரதமர் அவர்கள் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகரை அழைத்து, அவர் மூலமாக டெல்லியில் உள்ள இலங்கை நாட்டுத் தூதரை வரச்சொல்லி, அவரை எச்சரித்து இப்படி தமிழகத்திலே இருந்து அபயக்குரல் வந்திருக்கிறது. கண்டனக்குரல் வந்திருக்கின்றது. தமிழர்கள் தங்களுடைய கவலையைத் தெரிவித் திருக்கின்றார்கள். நீங்கள் எங்களுடைய கருத்தை அறிந்து ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற அத்தகைய எச்சரிக்கையை இந்திய அரசு அவர்களுக்குச் செய்தது.

அதுபற்றிய செய்தி அன்று மாலையிலேயே ஏடுகளுக்கு மத்திய அரசினால் வழங்கப்பட்டது. ஏடுகளில் வந்த அந்தச் செய்தி:

The Sri Lankan Deputy High Commissioner was summoned by the National Security Advisor to-day to express India's grave concern and unhappiness at the growing casualities of unarmed Tamil Civilians as a result of Military Action. The escalation of hostilities in the North and the resultant fall out was leading to a great deal of concern in India. It was pointed out that there was need for the Sri Lankan Government to act with greater restraint and address the growing feeling of insecurity among the minority community. To stem the deteriorating humanitarian situation, the need to revive the Political Process was highlighted. It was essential that vital supplies to the affected population were not disrupted in any manner. Serious concern was also expressed at the continuing attacks on Indian fishermen, including the recent incident on September 27-28. This was not in keeping with the spirit of the understanding reached between India and Sri Lanka and recently reiterated in meetings held at the highest levels. The Sri Lankan Navy should cease such attacks and not lose sight of the humanitarian and livelihood dimensions of this issue.

(ராணுவ நடவடிக்கையின் காரணமாக நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து இந்திய நாட்டின் கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதற்காக இலங்கை நாட்டின் தூதுவர் இன்று மத்திய அரசால் அழைக்கப்பட்டார்.

இலங்கை நாட்டின் வடக்குப் பகுதியில் ராணுவ நடவடிக்கைகள் பெருமளவிற்குப் பரவி வருவதால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் இந்தியாவிற்கு பெரும் கவலையை அளித்துள்ளது. இலங்கை அரசு நிதானமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் சிறுபான்மையினராக உள்ள மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதைப் பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டது.

மனிதாபிமான சூழல் பாழாகி வருவதும் அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டன. பாதிப்புக்குள்ளான பகுதிகளில் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் முறையாக வழங்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

இந்திய மீனவர்கள் மீது தொடர்ந்து நடைபெற்று வரும் தாக்குதல்கள் பற்றியும் மிகுந்த கவலை தெரிவிக்கப்பட்டது.

இப்படி நடைபெறுவது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சமீபத்தில் ஏற்பட்ட புரிந்துணர்விற்கு எதிரானதாகும்.

இலங்கை கடற்படை இத்தகைய தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும். அவர்கள் மனிதாபிமான வாழ்க்கைப் பரிமாணங்களை மறந்து விடக் கூடாது.)

இதனைத் தொடர்ந்து 14-10-2008 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத் தீர்மானத்தை பிரதமருக்கு அனுப்பி வைத்தோம். அதே நாளில் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் செய்தியாளர்களிடம்,

"இலங்கையில் நிலவும் சூழ்நிலை மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. அங்கு தீவிரமாகி வரும் போரினால் அப்பாவி பொது மக்களுக்கு ஏற்படும் இழப்புகள் - இடம் பெயர்ந்து அகதிகளாக செல்பவர்கள் அதிகரித்து வருவதும் வேதனை அளிக்கிறது. இலங்கைப் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது. சமரசப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என்றுதான் நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வருகிறோம். இலங்கையின் ஒற்றுமை- ஒருமைப்பாட்டை மதிக்கும் வகையிலும், அதே நேரத்தில் சிறுபான்மையினரின் குறிப்பாக சிறுபான்மையாக உள்ள தமிழர்களின் மனித உரிமை களை மதிப்பதாகவும் அந்தத் தீர்ப்பு அமைய வேண்டும். இந்தியா இலங்கைக்கு இடையே மீன் பிடிக்கும் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதும் சித்ரவதை செய்யப்படுவதும் வேதனை அளிக்கிறது"

என்று தெரிவித்து அந்தக் கருத்து ஏடுகளில் இடம் பெற்றுள்ளது. தமிழர்களின் துயரத்திலும், நாம் நிறைவேற்றிய தீர்மானத்திலும் இந்தியப் பிரதமர் அவர்கள் எந்த அளவிற்கு ஈடுபாட்டோடும், நமக்கு ஆதரவாகவும் உள்ளார் என்பதை தெளி வாக்குகின்ற வார்த்தைகளாக அவரது பேட்டி அமைந்தது எனலாம்.

மேலும் நமது வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் 16-10-2008 அன்றிரவு வெளியிட்ட ஓர் அறிக்கையில்,

"இலங்கையில் நிலவும் சூழ்நிலை இந்தியாவில் உள்ள எங்களுக்கு பெரிதும் கவலை அளிக்கிறது. தாங்கள் உருவாக்காத சூழ்நிலையின் பிடியில் அப்பாவி மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். அவர்கள் மீது தொடர்ந்து நடந்து வரும் தாக்குதலை நினைத்துத்தான் நாங்கள் குறிப்பாகக் கவலைப்படுகிறோம். அவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடாது. அவர்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை அனுமதிக்க வேண்டும். ராணுவ பலத்தைப் பயன்படுத்தியோ போர்க்கள வெற்றிகளாலோ இயல்பு நிலையை திரும்பக் கொண்டு வர முடியாது என்று இந்தியா உறுதிபட தெரிவித்து வருகிறது. பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இத்தகைய தீர்வுதான் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்துத் தரப்பினரின் உணர்வுகளையும் பூர்த்தி செய்வதாக அமையும். இந்த இலக்கை அடையவும், அப்பாவி மக்களின் கஷ்டங்களைத் தணிக்கவும் இந்தியா, தனது அதிகாரத்திற்கு உட்பட்டு எல்லா முயற்சிகளையும் எடுக்கும். இது தொடர்பாக பல்வேறு மட்டங்களில் இலங்கை அரசின் கவனத்தை இந்திய அரசு ஈர்த்து வருகிறது. இந்திய அரசு கவனம் செலுத்தி வரும் மற்றொரு பிரச்சினை, இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் மற்றும் படுகொலை ஆகும். இத்தகைய கொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதை உறுதிப்படுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும்"

என்றெல்லாம் சொல்லியிருப்பதைப் பார்க்கும் போது, அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறை வேற்றி நாம் அனுப்பிய தீர்மானங்களை யெல்லாம் நன்றாகப் பரிசீலித்து அதனையேற்றுக் கொள்ளும் வகையிலே மத்திய அரசு செயல்படும் என்ற நம்பிக்கை மேலும் கூடுகிறது.

நமது பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் இலங்கை அதிபர் ராஜபக்சேயுடன் தொலைபேசியில் 18-10-2008 அன்று இந்தப் பிரச்சினை குறித்து நேரடியாகவே பேசியிருக்கிறார். அந்தப் பேச்சின் போது, இலங்கையின் வடக்குப் பகுதியில் அப்பாவித் தமிழர்கள் இரக்கமற்ற முறையில் தாக்கப்படுவது குறித்து பிரதமர் கவலை தெரிவித்தார். எந்தச் சூழ்நிலையிலும் அப்பாவி மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

என்று பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார். இடம் பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரணப் பொருட்கள் தடையின்றி வழங்கப்பட வேண்டுமென்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தமிழரின் உரிமையும் நலன்களும் பாதிக்கப்படக் கூடாதென்றும் பிரதமர் கண்டிப்புடன் தெரிவித்தார் என்று ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையிலே உள்ள நிலைமைகளை அறிய வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கே அனுப்பி வைக்கவும் மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக செய்தி வந்துள்ளது. தாக்குதல்களில் இருந்து அப்பாவி மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும், தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் தங்குதடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், இலங்கை இனப் பிரச்சினைக்கு ராணுவ ரீதியில் தீர்வு காண முடியாது என்றும், சட்டத்திற்கு உட்பட்டு, அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை மூலம் சமரசத் தீர்வு காண வேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார் என்று செய்திகள் வந்துள்ளன.

கடந்த 16-10-2008 வியாழக்கிழமையன்று

ஐ.நா. மன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட 750 டன் உணவுப் பொருட்கள் இலங்கையின் வடக்குப் பகுதியில் விநியோகிக்க மறுக்கப்பட்ட நிலையில் - பிரதமர் பேசிய பேச்சின் விளைவாக - பிரதமர் பேசிய அன்றையதினமே 2 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு அந்த உணவுப் பொருட்கள் விநியோகிக் கப்பட்டன என்றும் ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன.

தொடர்ந்து மத்திய அரசின் வெளி உறவுத் துறைச் செயலாளர் திரு. சிவசங்கரமேனன் அவர்கள் டெல்லியிலே உள்ள இலங்கைத் தூதுவரை அழைத்து இந்திய அரசின் கண்டனத்தை உடனடியாக இலங்கைக்கு தெரிவிக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.

இவற்றுக்கெல்லாம் மேலாக மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் 22-10-2008 நாடாளுமன்றத்தில் தன்னிச்சையாக வைத்த அறிக்கையில்,

“இலங்கையின் வடக்குப் பகுதியில் மனிதாபி மான சூழல்கள் மிகவும் மோசமாகிக் கொண்டு வருகின்றன. இலங்கையில் நிலவி வரும் சூழல் மத்திய அரசுக்கு மிகுந்த கவலையை அளித்து

வருகிறது. இலங்கையில் நடைபெறும் போரில் அப்பாவிப் பொதுமக்கள் படும் இன்னல்களும், இடம் பெயர்வோர் அதிகரித்து வருவது குறித்தும் மத்திய அரசு பெரிதும் கவலை கொண்டுள்ளது. எந்த நிலையிலும் அப்பாவி மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்றும், அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் இலங்கை அரசை நாம் வலியுறுத்தியுள்ளோம். மேலும், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அவர்களுக்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளோம். இலங்கையிலே உள்ள தமிழ்மக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நல்வாழ்வு குறித்து நமக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பேச்சு நடத்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை அதிபரின் மூத்த ஆலோசகருமான மாண்புமிகு பாசில் ராஜபக்சே விரைவில் இந்தியா வரவுள்ளார்.

இனப் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை தீர்வாகாது என்ற நமது ஆழ்ந்த நம்பிக்கையை நான் இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இலங்கையில் அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும். அது ஒன்றுபட்ட இலங்கையின் சட்டதிட்டத்தின்படி தமிழ்ச் சமுதாயம் உள்ளடக்கிய சிறுபான்மையினரின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் வகையிலே இருக்க வேண்டும். விடுதலைப் புலிகளுடனான போரில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகளும், அவர்களின் நல்வாழ்க்கையும் பாதிக்கப்படக் கூடாது. கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக நடைமுறை தொடர இலங்கை அரசு எடுத்து வரும் முயற்சிகளை நாம் ஊக்கு விக்கிறோம்.

இந்திய அரசு, நமது மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது. பன்னாட்டு கடல் எல்லைக்கு நமது மீனவர்கள் மதிப்பளிக்க வேண்டியது அவசியம் என்றாலும், இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்துவதை கைவிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். இது போன்ற பிரச்சினைகளை சமாளிப்பது குறித்து இரு நாட்டு அரசுகளும் இணைந்து செயல்படுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது."

இவ்வாறு நாடாளுமன்றத்தில் மத்திய அரசினால் வைக்கப்பட்ட அறிக்கையும் - பிரதமர் அவர்களும், வெளிவிவகாரத் துறை அமைச்சரும் நமது அனைத்துக் கட்சித் தலைவர்கள்

கூட்டத்தின் தீர்மானத்தின் மீது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளும் நமது வேண்டுகோளை நிறை வேற்றும் வகையிலும், இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வில் அக்கறை காட்டுகின்ற வகையிலும் அமைந்துள்ளதை அறிந்திட முடிகிறது.

ஆனாலும் இதுவே நமக்குப் போதுமான முழு மன நிறைவைத் தரக் கூடிய விளைவாகும் என்று எண்ணிட முடியவில்லை. தரப்படும் உறுதி மொழிகள் தவறாமல் நிறைவேற்றப்படவும் - இலங்கையில் தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்களாகவும், சிங்களவர்களுக்கு நிரந்தர அடிமைகளாகவும் இருக்க வேண்டுமென்ற ஆதிக்க வெறியும், சிங்கள இன வெறியும் அறவே அகற்றப்பட; தமிழர்கள் இலங்கையை ஆண்ட பரம்பரையினராம் என்ற அந்தப் பெருமையுடன் தமிழ் இனத்திற்கான மதிப்பும் மரியாதையும் தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை வாழ் மக்களுக்குப் போதுமான சமத்துவ நிலையும் உருவாகி, அங்கே மனித நேயம் மலருகிறது, இன ஒற்றுமை ஒளிருகிறது என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் ஏற்பட்டாக வேண்டும்.

எனவே இப்போது படிப்படியாக நிறைவேறி வருகிற தாய்த் தமிழக மக்களின் நீண்ட காலக் கனவு; முழுமையாக நிறைவேறிடவும் இலங்கைத் தமிழர்க்கு நிரந்தர இன்பம் வாய்த்திடவும் - அமைதியின் சுகந்தம் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நிறைந்திடவும் - அடிமை விலங்கு அறுபடவும் - ஆதிக்க சக்தி விலகிடவும் - அடுக்கடுக்கான முயற்சிகளில் அன்னைத் தமிழகத்தில் உள்ள நாம் அறவழிச் செயல் முறைகளில் ஈடுபட வேண்டுமல்லவா ; அதற்கான உந்து சக்திகளில் ஒன்றுதான் நாம் மேற்கொண்ட "மனிதச் சங்கிலி" - அந்தச் சங்கிலியில் சங்கமமான தமிழ் இன மக்களின் முக்கடலையும் வென்றிட்ட கூட்டம்! அணி வகுப்பு! ஆர்ப்பரிப்பு! அதில் இணைந்திட்ட நாம் ; இலங்கைத் தமிழரின் இன்னல் அறவே தீர்த்திடுவோம்; வாரீர்!

அன்புள்ள,

மு.க.

25-10-2008

3342. இலங்கைத் தமிழருக்காக; இங்குள்ள தமிழர் ஒன்றாவோம்!

உடன்பிறப்பே,

இலங்கையில் ஏறத்தாழ 1940ஆம் ஆண்டு முதல் உருவாகி வந்துள்ள தமிழர் உரிமை கோரும் பிரச்சினையில் அங்கு வாழும் தமிழர்களிடையே ஒற்றுமை உணர்வு இல்லாமையினாலும் - அதுவும் ஒரு காரணமாகி சிங்களவர் ஆதிக்க வெறி; அதிகாரத் தகுதியும் பெற்று ஆட்டம் போடும் நிலைமையினாலும் - இவ்வளவு காலம் எத்தனையோ எண்ணற்ற தமிழர்களின் உயிர்களைக் குடித்தும் - எத்தனையோ தமிழர்களை அகதிகளாக்கி வெளியேற்றியும்கூட - இன்னமும் நல்லதோர் முடிவை எட்ட முடியாமலே; தாய்த் தமிழகம் தவித்துக் கொண்டிருக்கிறது.

நமது திராவிட இயக்கத்தின் சார்பாக நாம் கற்ற அத்தனை அறப் போராட்ட முறைகளையும் நடத்திப் பார்த்து விட்டோம் - நம்மைப் போலவே தமிழ் உணர்வு கொண்ட தமிழகத்துக் கட்சிகள் யாவும் அடக்குமுறைகளைக் கூடச் சந்திக்கும் அளவுக்கு அறப்போர்களில் ஈடுபட்டு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு காட்டி அணி வகுத்திருக்கின்றன. தமிழகத்தில் நாம் இந்தப் பிரச்சினை காரணமாகவே இருமுறை ஆட்சியையே இழக்க நேரிட்டது.

இத்தனைக்கும் பிறகு இடையில் ஏற்பட்ட எதிர்பாராத - வேண்டத்தகாத நிகழ்வுகளால் தமிழக மக்களின் வேகம் சற்றுக் குறைந்து, சோகம் பெரிதும் மிகுந்து, அதற்கிடையே நார்வே போல அயல்நாட்டினர் அமைதி காண வேண்டி அங்கு பேச்சுவார்த்தை நடத்தி அதிலும் நல்ல முடிவு ஏற்படாமல் - இப்போது மீண்டும் இலங்கையிலே போரும் புகைச்சலும் என்றாகிவிட்ட சூழலில்தான்;

இலங்கைத் தமிழர்களின் இன்னல் களைகின்ற பணியை இன்னொரு முறையும் மேற்கொள்ளலாம் என்று கருதி - தமிழக

அரசின் சார்பில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டது. "ஒற்றுமையுடன் முடிவெடுப்போம் வாருங்கள்" என்று நாம் உருக்கமுடன் விடுத்த அழைப்பை ஏற்காமல் இரண்டொரு கட்சியினர்; அனைத்துக் கட்சியினர் கூட்டத்தைப் புறக்கணிக்கவே செய்தனர்.

இலங்கைத் தமிழர் இடர் நீக்கிடும் முயற்சியில் இங்குள்ள சிலர் இணக்கம் காட்டாமலே போய்; அந்தப் பிரச்சினையில்; தமிழக மக்களிடையே ஓர் அக்கறையற்ற தன்மையும் - இன்னும் சொல்லப் போனால் அலட்சியமும் ஏற்பட்டுவிட்டது என்பதை மனத்தில் பதித்துக் கொண்டு - இனியாவது அனைவரும் ஒற்றுமையுடனும் - உணர்வுடனும் - ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு இருப்பினும் அவற்றையெல்லாம் தூக்கிப் போட்டு விட்டு, நாம் ஒரு குரலில் ஒலிப்போம் வாரீர் என்ற அழைப்புக்கு; இப்போது கூட தகுந்த பலன் கிடைத்திருப்பதாகத் தெரிய வில்லை என்பது மிகப் பெரிய சோகமாகும்!

அக்டோபர் 14ஆம் நாள் அரசின் சார்பில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் - நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்ன?

தீர்மானம் 1 :- போர் நிறுத்தப்பட்டு ஈழத்தில் அமைதியும் சக வாழ்வும் திரும்புவதற்கேற்ற நடவடிக்கைகளை இந்திய அரசு உடனடியாக எடுத்து அதனை நிறைவேற்ற வேண்டும்.

தீர்மானம் 2 :- இந்திய அரசு, இலங்கை அரசுக்கு ஆயுத உதவி எதுவும் செய்யக்கூடாது.

தீர்மானம் 3 :- இலங்கையில் இரண்டு வாரக் காலத்திற்குள் போர் நிறுத்தம் செய்ய இந்திய அரசு முன் வராவிட்டால், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும்.

தீர்மானம் 4 :- இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உறையுள், மருந்து போன்றவற்றை வழங்க மத்திய அரசு முன் வரவேண்டும்.

தீர்மானம் 5 :- நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்டோருக்கு செஞ்சிலுவை சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகளின் மூலம் வழங்கப்பட வேண்டும்.

தீர்மானம் 6 :- தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குதலிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

★

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு நடந்தது என்ன?

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில், ஈழத் தமிழர் பிரச்சினை திசை திருப்பப்பட்டு விட்டது என்றும், அனைத்துக் கட்சித் தீர்மானங்கள் கிடப்பிலே போடப்பட்டு விட்டன என்றும், நிதி திரட்டல் என்பது மட்டுமே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வாகாது என்றும், உடனடியாக அங்கே போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். அதற்கான விளக்கங்களை அரசின் சார்பில் அளிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு பிரச்சினைகள் கிடப்பிலே போடப்பட்டுவிடவில்லை என்பதற்கான அடையாளங்கள் தான்; என்றைக்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோ, அன்றைக்கே அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதும் - அதன் தொடர்ச்சி யாக இலங்கைத் தூதுவரை அழைத்து மத்திய அரசின் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டதும் - பிரதமர் இலங்கை அதிபருடன் தொலைபேசியில் பேசியதும் - மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை தமிழகத்திற்கு அனுப்பி என்னுடன் பேசச் செய்ததும் - அனைத்துக் கட்சிகளின் சார்பில் இதுவரை நடைபெறாத அளவிற்கு சென்னை மாநகரத்தில் கொட்டும் மழையில் மிகப் பெரிய மனிதச் சங்கிலி நடை பெற்றதும் ஆகும். சென்னையில் தொடங்கி செங்கற்பட்டைத் தொடும் அளவிற்கு "கின்னஸ்" புத்தகத்தில் இடம் பெறத்தக்கவகையில் நடைபெற்ற அந்த மனிதச் சங்கிலியில் பெய்கின்ற மழையிலே நனைந்தவாறு டாக்டர் ராமதாஸ் அவர்களும் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட நிகழ்வுமாகும். அது மாத்திரமல்ல - ராமேஸ்வரத்துக்கு நம்முடைய திரைப்படக் கலைஞர்கள் அணி திரண்டு சென்று அங்கே நடத்திக் காட்டிய பேரணியும் பொதுக் கூட்டமும் ஆகும். நேற்றையதினம் (1-11-2008) கலையுலகின் அத்தனை நடிகர்களும் ஒன்று திரண்டு சென்னையிலே ஒரு நாள் முழுதும் உண்ணா நோன்பு இருந்ததும்

- இலங்கைத் தமிழர்களுக்கான நடவடிக்கைகள் கிடப்பிலே போடப்பட்டு விட்டன என்பதற்கான சம்பவங்களா? இல்லவே இல்லை.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இலங்கையில் இரண்டு வாரக் காலத்திற்குள் போர் நிறுத்தம் செய்ய இந்திய அரசு முன்வரா விட்டால், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும் என்பதும் ஒன்று! அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோதே, மத்திய அரசில் ஆளுங்கட்சியாக உள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பில் பதவி விலகுவது பற்றிய தீர்மானத்திற்கு தங்களால் உடனடியாக சம்மதம் தெரிவிக்க இயலாது, டெல்லியிலே உள்ள தங்கள் தலைமையிடம் கேட்டுக் கொண்டுதான் சொல்லவேண்டுமென்று கூறி விட்டார்கள். அது போலவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே வெளிப்படையாக எதுவும் சொல்ல முடியாத நிலையிலே இருந்தார்கள். ஏன், தற்போது பேட்டி கொடுத்துள்ள அய்யா ராமதாஸ் அவர்களின் "தமிழ் ஓசை" ஏட்டிலே தீர்மானத்தை வெளியிடும்போது கூட - தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக மிகவும் எச்சரிக்கையாக மக்களவை உறுப்பினர்கள் என்று தான் வெளியிடப்பட்டது. ஆனால் உண்மையில் அந்தத் தீர்மானம் ஏடுகளிலே வெளிவந்த பிறகு தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் - டி.ஆர். பாலு, ஆ. ராஜா, எஸ்.எஸ். பழனிமாணிக்கம், சுப்புலட்சுமி ஜெகதீசன், எஸ். ரகுபதி, கே. வேங்கடபதி, ராதிகா செல்வி, செ. குப்புசாமி, ஆ. கிருஷ்ணசாமி, தயாநிதி மாறன், டி. வேணுகோபால், ஈ.ஜி. சுகவனம், கே.சி. பழனிச்சாமி, ஏ.கே. எஸ். விஜயன், பவானி ராஜேந்திரன், கனிமொழி, திருச்சி சிவா, வழக்கறிஞர் அ.அ. ஜின்னா, வசந்தி ஸ்டான்லி மற்றும் பேராசிரியர் காதர் மொய்தீன், எல். கணேசன், செஞ்சி ராமச்சந்திரன் ஆகிய 22 பேர்கள் மட்டுமே பதவி விலகல் கடிதத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார்களே தவிர, வேறு யாரும் என்னிடமும் தரவில்லை - அவர்களின் கட்சித் தலைமையிடமும் தரவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களே அந்தக் கருத்துக்கு மாறாக இருந்த நேரத்தில் - நாமே தீர்மானம் தோல்வி அடைந்து விட்டது, திசை திருப்பப்பட்டு விட்டது என்று சொல்லிக் கொள்வதில் என்ன நியாயம் இருக்க முடியும்?

நிதி திரட்டல் பற்றியும் டாக்டர் ராமதாஸ் குறை பட்டுக் கொண்டுள்ளார். இலங்கையில் இருக்கின்ற தமிழர்கள் எந்த உதவியும் கிடைக்காமல் பசியாலும் பட்டினியாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் - உணவு இல்லாமல், உடை இல்லாமல் - ஏன் குந்தக் கூட குடிசை இல்லாமல் இருப்பவர்களுக்கு நம்மாலான இந்த உதவியையாவது செய்யாமல் இருக்கலாமா என்ற எண்ணத்தோடு தான் அதுவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலே தான் நிவாரண உதவிகளைச் செய்யும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் அதற்கும் குறை கண்டால் என்ன தான் செய்வது? அந்தப் பணியிலே ஈடுபடாவிட்டால் அதைக் கூடச் செய்யவில்லை என்று குற்றம் சாட்டுவார்கள்.

மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் நேரில் வந்த போது இந்திய அரசின் சார்பில் 800 டன் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்படும் என்றும் தமிழக அரசும் அவ்வாறே சேகரித்து அனுப்பலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் சார்பில் நேரடியாக உதவி செய்யத்தான் போகிறோம். அதையும் எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி மத்திய அரசுடன் நமது தலைமைச் செயலாளர் பேசியிருக்கிறார். உணவுத் துறை சார்பில் எந்த அளவிற்கு அரிசி வழங்க இயலுமென்று கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. அரசின் சார்பாக மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையிலும் நிதி வசூல் நடைபெற்று வருகின்றது.

திரைப்படக் கலைஞர்களும் நேற்று ஒரு நாள் உண்ணா நோன்பு நிகழ்ச்சியிலே பெரிய நடிகர்கள் முதல் அனைவரும் 45 லட்சம் ரூபாய்க்கு மேல் அறிவித்திருக்கிறார்கள். நடிகர் அஜீத், சுந்தர் சி, விவேக், நெப்போலியன், இளையராஜா, கருணா மூர்த்தி, இயக்குநர் இராம.நாராயணன், கவிப்பேரரசு வைரமுத்து, காவியக் கவிஞர் வாலி, நடிகைகள் நயன்தாரா, விஜயகுமாரி, குஷ்பூ, நடன மாஸ்டர் கலா, ஆர்த்தி, கணேஷ்கர் போன்ற கலையுலகைச் சேர்ந்தவர்கள் என்னிடமே நிதி அளித்திருக்கிறார்கள். மக்கள் தொலைக்காட்சி நிறுவனத்தின் சார்பில் அனைத்து அலுவலர்கள் 85,355 ரூபாய் நிதியினை என்னிடம் அளித்தார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பிலும், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பிலும், திராவிடர் கழகம், எம்.ஜி.ஆர்.கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், புதிய நீதிக்கட்சி, ஜனநாயக முன்னேற்றக்கழகம்

உள்ளிட்ட கட்சிகளும் நிதியளித்துள்ளன. இதனை அனைவருமே வரவேற்கின்ற ஒரு நிலையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே கலந்து கொண்டு தீர்மானங்களை நிறைவேற்ற முழு மனதோடு ஒப்புக் கொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் - இந்த நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு போய்ச் சேரும் என்பதற்கு என்ன உறுதி என்று கேள்வி கேட்கிறார். நமது தீர்மானத்தில் தெளிவாக செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா. மன்றம் போன்ற தொண்டு நிறுவனங்களின் மூலமாக அனுப்பப்படும் என்றுதான் கூறப்பட்டிருக்கிறதே தவிர, இலங்கை அரசு மூலமாக அனுப்புவோம் என்று குறிப்பிடவில்லை. இது பற்றி யெல்லாம் தொடர்ந்து மத்திய அரசோடு நமது அரசு; மணிக்கு மணி தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருக்கிறது. என்னென்ன பொருட்களை அவர்களுக்கு வழங்கிட முடியுமென்ற பட்டியலும் வெளியிடப் பட்டுள்ளது.

அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானம் தோல்வி என்று கூறியுள்ள டாக்டர் ராமதாஸ் அவர்கள் "மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன? உறுதி மொழிகள் என்ன? மத்திய அரசை செயல்பட வைப்பதில் என்ன சிக்கல்?" என்றெல்லாம் நான் விளக்க வேண்டுமென்கிறார். மத்திய அரசில் எப்படி தி.மு.க. ஒரு அங்கமோ, அதைப் போலத்தான் பா.ம.க. வும் அதிலே ஒரு அங்கம். அவருடைய புதல்வரே அதிலே முக்கிய அமைச்சராகத்தான் இருக்கிறார். எனவே மத்திய அரசை வலியுறுத்தும் பொறுப்பு என்னைப் போல அவருக்கும் உண்டு. மத்திய அரசிடம் என்னை விளக்கம் கேட்குமாறு டாக்டர் ராமதாஸ் கூறுகிறார். நான் விளக்கம் கேட்டதால் தான் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மத்திய அரசுக்கு என்று உள்ள அதிகாரங்களின் அடிப்படையிலே தான் அவர்களும் இயங்க வேண்டியுள்ளது. இன்னொரு நாட்டுப் பிரச்சினையிலே பக்கத்து நாடு ஓரளவிற்குத் தான் நேரடியாகத் தலையிட முடியும். அனைத்துக் கட்சித் தீர்மானத்தில், இந்திய அரசு முன் வராவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும் என்று நிறைவேற்றினோம். ஆனால் இந்திய அரசு முன்வராமல் இல்லை. அவர்கள் முன்வரவில்லை என்று கூறி தமிழக தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் பதவி விலகி, மற்றவர்கள் விலகாவிட்டால், அப்போது மட்டும் தீர்மானம் தோல்வி இல்லை என்றாகிவிடுமா? மத்திய அரசின் நிலையையும் அதிகார எல்லையையும் நாம் உணர

வேண்டாமா? நாம் இந்த அளவிற்கு தீர்மானம் நிறைவேற்றியதால் தான் மத்திய அரசு அதன் சக்திக்கேற்றவாறு உதவி வருகின்றது. தீர்மானத்தில் கூறியவாறு தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகி, மத்திய அரசும் கவிழ்ந்து விடுமேயானால் - அப்போது நிலைமை என்னவாகும்? இலங்கை அரசை இந்த அளவிற்குக் கூடத் தட்டிக் கேட்டு தமிழர்களுக்கு உதவிட முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது?

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நாம் நிறைவேற்றிய தீர்மானங்களை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா இல்லையா? அல்லது டாக்டர் ராமதாஸ் கூறுவது போல அப்படியே கிடப்பிலே போட்டு விட்டதா?

இந்திய வெளி உறவுத் துறை அமைச்சர், சென்னையிலே என்னைச் சந்தித்து விட்டு செய்தியாளர்களிடம் கூறியது என்ன?

- சண்டை நிறுத்தம் தொடருவதை உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் வலியுறுத்தினார்.
- இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை தீர்வாகாது. பேச்சுவார்த்தையின் மூலம்தான் தீர்வு காணப்பட வேண்டும் என்று இலங்கைத் தலைவருடன் நடத்திய பேச்சு வார்த்தையில் நாங்கள் தெரிவித்துள்ளோம்.
- இந்தியாவைப் பொறுத்தவரையில் அது இராணுவ தளவாடங்களை ஏற்றுமதி செய்வ தில்லை. இந்தியாவிற்குரிய கடல் பகுதியில் சில ராடார் கருவிகளை அமைத்துள்ளோம். அதை இந்தியாவின் பாதுகாப்பிற்குத்தான் என்பதை மறந்து விடக் கூடாது. நாங்கள் எந்த நாட்டு இராணுவ வீரர்களுக்கும் பயிற்சி அளிப்பது இல்லை.

★

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளிலே தி.மு.க.விற்கு எந்த அளவிற்கு அக்கறை உண்டு என்பதை இனிமேல்தான் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை.

இலங்கையிலே போர் நிறுத்தப்பட வேண்டும் என்பது தான் தமிழகத்திலே உள்ள ஒவ்வொரு தமிழனின் விருப்பம். ஆனால் அதனை எவ்வாறு நடை முறைப்படுத்துவது என்பதில்தான் கருத்து வேறுபாடுகள்.

டாக்டர் ராமதாஸ் அவர்கள் தனது பேட்டியில், இந்திய அரசு எச்சரித்தாலே, அறிக்கை விடுத்தாலே போதுமென்று சொல்லியிருக்கிறார். அதுவும் செய்யப்படாமல் இல்லை. பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் செய்தியாளர்களிடம், "இலங்கைப் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது. சமரசப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என்று தான் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்" என்றே கூறியிருக்கிறாரே? வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, 16-10-2008 அன்று வெளியிட்ட அறிக்கையில், "ராணுவ பலத்தைப் பயன்படுத்தியோ, போர்க்கள வெற்றிகளாலோ இயல்பு நிலையை திரும்பக் கொண்டு வர முடியாது என்று இந்தியா உறுதிபட தெரிவித்து வருகிறது. பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்" என்று சொல்லியிருக்கிறாரே?

22-10-2008 அன்று நாடாளுமன்றத்தில் வெளி உறவுத் துறை அமைச்சர் படித்த அறிக்கையிலே "இலங்கைப் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கை தீர்வாகாது என்ற நமது ஆழ்ந்த நம்பிக்கையை நான் இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இலங்கையில் அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணவேண்டும்" என்று சொல்லியிருப்பதும் போர் நிறுத்தம் அங்கே உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட கருத்துகள்தானே?

ஐ.நா. சபைக்கு தந்தி கொடுக்க வேண்டுமென்று நான் சொல்ல வேண்டும் என்றும் டாக்டர் ராமதாஸ் சொல்லியிருக்கிறார். பிரதமருக்கு தந்தி கொடுக்க வேண்டுமென்று முதலில் குரல் கொடுத்தவனே நான் தான். ஏன், அய்யா டாக்டர் எழுதியிருப்பதைப் போல 1983ஆம் ஆண்டிலேயே ஐ.நா. மன்றத்திற்கு ஒரு கோடி கையெழுத்துக்களை இந்தியத் தமிழர்களிடமிருந்து பெற்று அதனை நேரடியாக வழக்கறிஞர் டி.பி. ராதாகிருஷ்ணன் மூலமாகவே அனுப்பி வைத்த அனுபவமே நமக்கு உண்டு.

எனவே அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானம் திசை திருப்பப்பட்டு விட்டது, தோற்று விட்டது என்று நமக்கு நாமே ஒருவரையொருவர் குறை கூறிக் கொண்டிருப்பது என்பது சரியாகாது. இலங்கையிலே உள்ள ஒவ்வொரு தமிழனும் காப்பாற்றப்பட வேண்டுமென்பதே நமது நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றிட நாம் ஒவ்வொருவரும் நமது நிலைக்கும் நினைப்பிற்கும் தக்கவாறு பாடுபட்டு வருகிறோம் என்பதுதான் உண்மை.

தமிழ் மக்களிடம் பொதுவாக இந்த ஐயப்பாடுகள் எழும் என்பதற்காகவும் அந்த மக்களின் ஐயங்களைப் போக்கிட என்னிடமிருந்து விளக்கம் தரப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் காரணமாகவும், டாக்டர் அவர்கள் இவ்வாறு அறிக்கை வெளியிட்டிருப்பதாகவே நான் கருதிக் கொண்டு - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்த ஒற்றுமையைக் கட்டிக் காப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்ள அனைத்துக் கட்சியினரையும், தமிழ் மக்களையும் வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

3-11-2008

3343. இன ஒற்றுமை; அடடா; எத்தனை எத்தனை குரல்கள்!

உடன்பிறப்பே,

இலங்கையில் தமிழர்கள் படுகொலைக்கு ஆளாவதும், பட்டினி கிடப்பதும் - அகதிகளாக அடுத்த நாடுகளுக்கு ஓடுவதும் - பட்ட காயத்துக்கு மருந்து தடவிடக் கூட முடியாமல் மாண்டு மடிவதும் செய்திகளாகவும் படங்களாகவும் வந்தபோது; தமிழக அரசு தலையிட்டு மத்திய அரசுக்குச் சொல்லி அந்தப் படுகொலை களைத் தடுத்திட தக்க முயற்சிகள் எடுத்திட வேண்டாமா என்று தங்கள் அனுதாபத்தையும், ஆழ்ந்த வேதனையையும் வெளிப்படுத்தியவர்களை நானறிவேன். அந்தத் துயர கீதம், அவர்களின் தூய உள்ளத்திலிருந்து எழுவது என்பதும் எனக்குத் தெரியும்.

அதன் விளைவாகத் தான்; இயற்கையிலேயே என் இதயமும்; அதில் குருதியாக உருவாகி, ஓராயிரத்துக்கு மேற்பட்ட நாடி நரம்புகளில் புகுந்து மனிதனைக் காப்பாற்றி நடமாடச் செய்கின்ற செயலும் நான் அறியாத ஒன்றல்ல! அன்பும், இரக்கம் காட்டிச் செயல்படும் பண்பாடும், எனக்கிருப்பது போலவே என் தமிழ் மக்களில் எண்ணற்றோருக்கு இருப்பதால் அவர்களின் ஆதரவுடன் - அன்பு வாழ்த்துக்களுடன் - இலங்கைத் தமிழர்களைப் பாதுகாத்திடும் அறப்போரின் அடுத்த அத்தியாயத்தின் ஆரம்ப கட்டமாக சென்னை மயிலை மாங்கொல்லையில் நானும் பேராசிரியரும் ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றி "ஒன்றுபடுக தமிழர்களே" என்று அழைப்பு விடுத்தோம்.

அதன் தொடர்ச்சியாகத்தான் அரசு தலைமைச் செயலகத்தில் அக்டோபர் 14 ஆம் நாள் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தி ஆறு தீர்மானங்களை நிறைவேற்றினோம் - அவை அல்லற்படும் இலங்கைத் தமிழர்களிடையே அமைதியை

உருவாக்கி அதனை நிலைப்படுத்துவதற்காக நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களாகும்.

அக்டோபர் 14-ந்தேதிய தீர்மானங்கள் மத்திய அரசின் வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களாலும் - பிரதமர் மன்மோகன் சிங் அவர்களாலும் - ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழி காட்டும் தலைவியும் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவியுமான சோனியா காந்தி அவர்களாலும் எவ்வளவு மதிப்பளித்து நடைமுறைப்படுத்தப்பட முன்னெடுத்துச் செல்லப்பட்டன என்பதை அனைவரும் அறிவர். அதற்குக் காரணமாகவும் உந்து சக்தியாகவும் அமைந்தவை திரைப்படக் கலைஞர்கள் நடத்திய பேரணிகள், உண்ணா நோன்புகள், மாநில வரலாறு காணாத மனிதச் சங்கிலி அணிவகுப்பு போன்றவை களாகும்.

அக்டோபர் 14ஆம் தேதியிலிருந்து சுமார் 15 நாட்கள் அதாவது நவம்பர் 1-ந்தேதி முடிய; அனைத்துக் கட்சித் தீர்மானத்தில் "இலங்கையில் போர் நிறுத்தம்" எனும் ஒன்றைத் தவிர மற்றவை அனைத்தும் நிறைவேற்றப்படுவதற்கான அணுகு முறைகளில் இந்திய நாட்டு அரசு ஈடுபட்டுள்ளது என்பதும் நேற்றைய என் அறிக்கையில் விரிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக ஒன்றை சுட்டிக்காட்ட வேண்டுமென்றால் நேற்றைய காலை ஏடு ஒன்றில் நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி வழங்குவது என்பதை இலங்கை அரசுதான் முடிவு செய்யும் என்று ஒரு செய்தி வந்த தும் துடித்துப் போன நான் பத்து நிமிடங்களில் கடிதம் தயார் செய்து, பிரதமருக்கும், வெளி உறவுத் துறை அமைச்சருக்கும் "பேக்ஸ்" மூலமாக அனுப்பி விட்டுத்தான் தலைமைச் செயலகத்திலிருந்து காரில் ஏறினேன். அங்கிருந்து வீடு திரும்புவதற்குள் காரிலேயே செய்தி, நமது மத்திய அமைச்சர்கள் என் கடிதத்தை நேரிலே எடுத்துச் சென்று வெளி உறவுத்துறை அமைச்சரிடம் கொடுத்த அடுத்த நிமிடமே ஒரு சில நிமிடங்களில் இதற்கு மத்திய அரசு விளக்கம் அளிக்கும் என்று கூறியதாக எனக்குத் தகவல் கிடைத்தது. அதைப் போலவே நமது தலைமைச் செயலாளருக்கு மத்திய வெளி உறவுத் துறை செயலாளர் விளக்கமாக இலங்கையிலே உள்ள நமது இந்தியத் தூதரின் மேற் பார்வையில் செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா. மன்றத்தின் துணை அமைப்பு போன்றவற்றின்

மூலமாகவே நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்படும் என்ற தகவல் கிடைத்தது.

இவ்வாறு அதிர்ச்சியான ஒரு செய்தி ஏட்டில் வந்த அதே நாளில் மாநில அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டு, அதற்கு சில மணி நேரங்களில் பதிலளிக்கக் கூடிய மத்திய அரசையும் நாம் பெற்றிருக்கிறோம். எனது முந்தைய கடிதத்தில் மத்திய அரசு தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகளையெல்லாம் விளக்கியிருக்கிறேன். பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களின் இன்றைய நீண்ட அறிக்கையிலே கூட இறுதியாக ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டுமென்று நான் முன் மொழிந்ததை வழி மொழிகிறேன் என்று கூறியிருப்பது பெரிதும் ஆறுதலைத் தருகிறது.

மேலும் அவருடைய அறிக்கையிலே அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது - மத்திய அரசின் அதிகார எல்லை முதல்வருக்குத் தெரியாதா என்று கேட்டிருக்கிறார். நன்றாகத் தெரியும். தெரிந்து தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது மாத்திரமல்ல, பதவி விலகல் குறித்து வேறு எந்தக் கட்சித் தலைவர்களும் கூறாத நிலையில் நான்தான் அந்தக் கருத்தினை முதன் முதலாகத் தெரிவித்தேன். அப்போது கூட - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர், நண்பர் தங்கபாலு, எம்.பி., அவர்கள் நாம் அனைவரும் பதவி விலகி விட்டால், மத்திய அரசு அங்கே இருப்பதே கேள்விக் குறியாகி விடும், பிறகு யாரிடம் நம்முடைய வேண்டுகோளை வைப்பது என்றெல்லாம் கேட்டார். இருப்பினும் நாம் அத்தகைய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றக் காரணமே - அப்போதுள்ள சூழ்நிலையில் நமது உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய அளவிற்கு பதவி விலக நேரிடும் என்று தான் கூறியுள்ளோம். அவ்வாறு நாம் தீர்மானம் நிறைவேற்றி அதனையொட்டி கழகத்தின் சார்பில் பதவி விலகல் கடிதங்கள் என்னிடம் தரப்பட்டதும் தான் இந்த அளவிற்கு வேகமாக, நம்முடைய மற்ற தீர்மானங்களை எல்லாம் ஏற்கக் கூடிய அளவிற்கும் போர் நிறுத்தம் என்ற தீர்மானத்தைக் கூட வலியுறுத்திக் கூறுவதற்கும் காரணமாக அமைந்தது.

செய்தியாளர்களின் கேள்விக்கு பங்களா தேஷ் உதாரணத்தை நான் சொன்னதையும் திரு. ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார். பங்களா

தேஷ் உருவானபோது அன்றைய சூழ்நிலையில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் முழுப் பெரும்பான்மையை பெற்று யாராலும் கேள்வி கேட்க முடியாத தலைவராக இருந்தார். தற்போதுள்ள நிலைமை அப்படியா உள்ளது?

டாக்டர் ராமதாஸ் அவர்கள் மீனவர் பிரச்சினை பற்றியும் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார். மத்திய அமைச்சர் பிரணாப் அவர்கள் சென்னையில் என்னைச் சந்தித்து விட்டு செய்தியாளர்களைச் சந்தித்தபோது, "மீனவர் பிரச்சினையில் மனிதாபிமானம் மற்றும் வாழ்வாதாரம் ஆகியவைகளை மனதில் கொண்டு, சர்வதேச எல்லையில் இந்தியா மற்றும் இலங்கை மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான ஏற்பாடுகளை சீரிய முறையில் நடைமுறைப்படுத்த இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளது'' என்றும், "அந்த ஒப்பந்தப்படி இந்திய மீன்பிடி படகுகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட மாட்டாது'' என்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

"பல்வேறு அறிவிப்புகளுக்கெல்லாம் சொந்தம் கொண்டாடுகிற கலைஞர் இதில் மட்டும் பா.ம.க.வை நோக்கி கையை நீட்டுவதில் என்ன நியாயம் இருக்கிறது?'' என்றும் திரு. ராமதாஸ் கேட்டுள்ளார். எந்த அறிவிப்புக்கும் சொந்தம் கொண்டாட நான் தயாராக இல்லை. அப்படிக் கூறிக் கொள்வதும் கிடையாது. மற்றவர்கள் கூறுவதற்கு நான் பொறுப்பல்ல. பா.ம.க. வை நோக்கி கையை நீட்டுவதற்கும் நான் தயாராக இல்லை. டாக்டர் ராமதாஸ் அவர்கள் கேள்வி கேட்டதால் அவருக்கு பதில் சொல்ல நேரிட்டதே தவிர, அவருடைய அறிக்கைக்கு நான் பதில் தருவதும், எனக்கு அவர் பதில் தருவதும் வேண்டாத வேலை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்பது தான் முக்கியமே தவிர, இங்கே ஒருவருக்கொருவர் பதில் கூறிக் கொண்டிருப்பது அல்ல.

மத்திய அரசின் செயல்பாடுகள் நமக்கு திருப்தியை அளிக்கின்றன. தமிழர்கள் அவதிப்படுவதை உணருகின்ற அரசும், தலைவர்களும் தான் மத்தியிலே இருக்கிறார்கள். அவர்கள் நம் உணர்வை மதிக்கிறார்கள். அவர்களால் முடிந்த அளவிற்கு உதவி செய்கிறார்கள். அதனை மேலும் அதிகமாக்குகின்ற

அளவிற்கு நாம் நம்முடைய கோரிக்கைகளை எழுப்புவோம். ஆனால் இங்கே எத்தனை குரல்கள்? எதிர்க் கட்சித் தலைவர் ஜெயலலிதா நிதி திரட்டுவதையே மோசடி நாடகம், கபட நாடகம் என்கிறார். ம.தி.மு.க. வின் பொதுச் செயலாளர், திரு. வைகோ, நிவாரணப் பொருட்கள் வழங்குவோம் என்று கூறுவது தமிழக மக்களை ஏமாற்றும் வேலை என்கிறார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் திரட்டப்படும் நிவாரண நிதி அப்பாவி தமிழர்களுக்குப் போய்ச் சேரும் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்கிறார். தே.மு.தி.க. தலைவர் திரு. விஜயகாந்த் நிவாரண உதவிகள் உண்மையில் மரணப்படுக்கையில் உள்ள இலங்கைத் தமிழ் மக்களுக்குப் போய்ச் சேருமா என்பதே சந்தேகம் என்கிறார். இத்தனை குரல்களும் வேறுபட்டு, மாறுபட்டு ஒலிக்காமல் ஒன்றுபட்டு ஒலித்திட்டால் மத்திய அரசின் முயற்சிகளை மேலும் தீவிரப்படுத்திட உதவியாக அது அமையும் என்பது தான் என்னுடைய கருத்து. இல்லையேல் இலங்கைத் தமிழர்களின் "தலைவிதி" இப்படித் தான் அமையும் போலும் என்று கடந்த கால நிகழ்வுகளையும், இக்கால நிகழ்வுகளையும் எண்ணி ஏங்கி எதிர்கால விடியல் வருமா என்று கண்ணீர் விட வேண்டியதுதான்!

அன்புள்ள,

மு.க.

5-11-2008

3344. "தீக்கதிர்" கேலிச் சித்திரம்!

உடன்பிறப்பே,

கடந்த ஆட்சியான அ.தி.மு.க. ஆட்சியிலே சட்டப் பேரவையின் எதிர்க்கட்சிகளுக்கு அதிலும் குறிப்பாக தி.மு.க. வுக்கு அளிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளையும் - காட்டப்பட்ட மரியாதைகளும்- கடைப்பிடிக்கப்பட்ட அரசியல் பண்பாடுகளும்; சட்டமன்ற நடவடிக்கை ஏடுகளில் அச்சியற்றப்பட்டுள்ளன; அவற்றை எடுத்துப் படித்தாலே போதும் அந்த அவலட் சணங்களைப் புரிந்துகொள்ளலாம்.

அலுவல் ஆய்வுக் குழு என ஒன்று உண்டு. அக்குழுவில் அவையில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் இடம் பெறுவர். அந்தக் குழுவினர் கூடி, சட்டமன்ற அலுவல்களைத் தேதிவாரியாகத் தயாரிப்பார்கள். அக்குழுவில் முதலமைச்சரும் கலந்து கொண்டு கருத்துக் கூறுவார். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளவும் - அக்குழுவின் கூட்டங்களில் அ.தி.மு.க. முதலமைச்சர்கள் யாரும் இதுவரை கலந்து கொண்டதில்லை. அக்குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் ஒன்றிரண்டைத் தவிர - முதல்வர் என்ற முறையில் நான் கலந்து கொள்ளாமல் இருந்ததுமில்லை.

ஒவ்வொரு அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்திலும் - அந்தக் கூட்டத் தொடரில் எந்தெந்த நாட்களில் எந்தெந்த விஷயங்களின் மீது விவாதம் நடத்துவது என்று முடிவு எடுத்து; அவ்வாறு எடுத்த முடிவின்படியே விவாதங்கள் நடப்பது, சட்டப்பேரவையின் வழக்கமாக இருந்து வந்துள்ளது. தவிர்க்க முடியாத சூழல் என்றால் மட்டுமே அந்த நிகழ்ச்சி நிரல் - அவைத் தலைவர், அவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர்களை கலந்து கொண்டு மாற்றி அமைக்கப்படுவதும் உண்டு.

அந்த முறைப்படிதான் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் 12-11-2008 நாளன்று மின்சார வெட்டு பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

பேசுவதென்றும், மின்துறை அமைச்சர் பதில் சொல்வதென்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதே நாளில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த விவாதம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற தவிர்க்க முடியாத சூழல் ஏற்பட்டதால் - 12ஆம் தேதியன்று விடியற்காலை 3.30 மணி அளவில் நான் எழுந்து அந்தத் தீர்மானத்தை நானே என் கைப்பட விடிய விடிய எழுதினேன். அதற்கிடையே 4.30 மணி அளவில் மின்துறை அமைச்சரை எழுப்பி, அனைத்து எதிர்க்கட்சிகளைச் சார்ந்த தலைவர்களையும் தொலை பேசியில் அழைத்து, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான அரசு தீர்மானம் அன்றைய தினமே அவையிலே எடுக்கப்படவேண்டிய அவசியத்தையும் தெரிவிக்கச் செய்தேன். அவரும் அவ்வாறே ஒவ்வொரு தலைவருடன் பேசி, ஒப்புதல் பெற்றதை அந்தந்த கட்சிகளின் தலைவர்களே நன்கறிவார்கள். அப்போது கூட இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்மானம் அவையிலே விரைவாக முடிந்து விட்டால், தொடர்ந்து மின்துறை பற்றிய விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்ற அளவிலேதான் இருந்தோம்.

ஆனால் இலங்கைத் தமிழருக்கான தீர்மானத்திற்காக ஒதுக்கப்பட்ட நேரத்துக்கு அதிகமாகவே நான் உட்பட அனைவருமே உரையாற்றியதால் நண்பகல் உணவு வேளை வரையிலே நீண்டு விட்டது காலம்!

எனவே அந்த நாளில் "மின்சாரம்" பற்றிய விவாதத்தை எடுத்துக் கொண்டு எல்லோரும் கருத்தறிவிக்க நேரம் இருக்குமா என்ற சந்தேகத்தில் - "இன்று இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்மானத்துடன்; அதாவது இத்துடன் முடித்து விடலாமே; முதன் முதலாக எல்லோரும் ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யுள்ளோமே" என்ற பெருமிதத்தில் "மின்சார விவாதம்" நாளைக்கு வைத்துக் கொள்ளலாமே என்று அவைத் தலைவர் அவர்களிடமும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடமும் "ஜாடை" செய்து கேட்டேன். அவர்களும் ஒப்புதல் அளிப்பதுபோல தலை அசைத்தார்கள். அதற்குள் அ.தி.மு.க. சார்பில் திரு. செங்கோட்டையன் எழுந்து மின்சாரம் குறித்த விவாதம் பற்றிய பிரச்சினையை எழுப்ப, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றத் தலைவர் பாலபாரதியும் மின்சாரம் பற்றிய விவாதத்தை அன்றைக்கே எடுத்துக் கொள்ள

வேண்டும் என்றார். அப்போது நமது மின்சாரத் துறை அமைச்சரும் எழுந்து, அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் ஆட்சேபணை இல்லையென்றால், பேரவைத் தலைவர் அனுமதித்தால், மின்சாரம் பற்றி விவாதித்தால், இப்போதே பதில் சொல்ல அரசு தயாராக உள்ளது என்றார். அப்போது மணி 1.15 ஆகிவிட்டதால், மறுநாள் 13ஆம் தேதி மின்சாரம் குறித்த விவாதம் நடைபெறும் என்று பேரவைத் தலைவர் அறிவித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், அ.தி.மு.க.வும் மின்சாரம் பற்றிய விவாதத்தை உடனே எடுத்துக் கொள்ளாததைக் கண்டித்து வெளிநடப்பு செய்தனர்.

இதுதான் 12-11-2008 அன்று நடந்தது. ஆனால் ஏதோ பயந்து கொண்டு "மின்சார" விவாதத்தை நடத்தாமல் ஓடிவிட்டதைப் போல சில ஏடுகள் செய்தி வெளியிட்டு மகிழ்ந்தன. அதுமட்டுமல்ல; மின்சாரப் பற்றாக்குறை பற்றிய அந்த விவாதம் மறுநாள்

13-11-2008 அன்று அவையில் நடைபெற்று தக்க புள்ளி விபரங்களுடன் மின்துறை அமைச்சர் விரிவான பதில் அளித்துள்ளார்.

ஆனால் நான் வியப்படையும் வண்ணம் ஒரு கேலிச் சித்திரம்,

13-11-2008 அன்று அந்த விவாதம் நடைபெற்று முடிவடைகிறது என்றால், 14-11-2008 அன்று "தீக்கதிர்" எனும் மார்க்சிஸ்ட் கட்சி ஏட்டில்;

"ஓ; அப்படியா?" எனும் தலைப்பிட்ட ஒரு கேலிச் சித்திரம் -

"மின் வெட்டுக் குறித்துப் பேச
அனுமதி மறுப்பு - (செய்தி)"

"மின் வெட்டு குறித்துத்தான்
வீட்டுக்கு வீடு பேசுராங்களே;
சட்டசபையிலும் பேசணுமா?
இது என்ன நியாயம்?"

என்று எழுதி வெளியிட்டுள்ளார்கள் - விவாதத்திற்கு; அனுமதி மறுக்கப்பட்டதா? அல்லது விவாதம், தவிர்க்கப்படாத சூழ்நிலையில் தள்ளி வைக்கப்பட்டதா? எதிர்க்கட்சி என்றால் எது வேண்டுமானாலும் பேசலாம் - எழுதலாம் - என்று ஆகிவிட்டால்;

"மற்ற பத்திரிகைகளுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு பத்திரிகைக்கும் என்ன வித்தியாசம்?"

என்றுதான் வேதனையுடன் கேட்கத் தோன்றுகிறது!

அது மாத்திரமல்ல; 13-11-2008 மின்சாரம் பற்றிய விவாதம் நடைபெற்றபோது கூட - நான் அவையிலே இல்லாத நேரத்தில் - சட்டக் கல்லூரி பற்றிய விவாதத்தின்போது - பிரதான எதிர்க் கட்சியான அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியினை அறிந்து - அய்யோ, அவர்கள் மின்சாரம் பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று அக்கறையோடு இருந்தார்களே, வெளியேற்றப்பட்டுவிட்ட காரணத்தால், மின்சார விவாதத்தில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுமே என்று எண்ணி - நானே எதிர்க்கட்சித் துணைத் தலைவருடன் தொலைபேசியிலே பேசிட முயற்சித்து - அது கிடைக்காத காரணத்தால் - ஆளுங் கட்சியைச் சேர்ந்த தம்பிகள் மு.க. ஸ்டாலின், வீரபாண்டி ஆறுமுகம், கே.என். நேரு ஆகிய மூன்று அமைச்சர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு - எதிர்க்கட்சித் தலைவரின் அறைக்கே சென்று அ.தி.மு.க. வினரைச் சமாதானம் செய்து மின்சாரம் பற்றிய விவாதத்திலே கலந்து கொள்ள வாருங்கள் என்று அழைக்கச் செய்தேன். மேலும் பேரவைத் தலைவரோடும் தொலைபேசியிலே பேசி, வெளியேற்றப்பட்ட ஆணையைத் திரும்பப் பெற்று, அவர்களையெல்லாம் கலந்துகொள்ள வாருங்கள் என்று அவையிலேயே அழைப்பு விடுக்கவும் கேட்டுக்கொண்டேன். அவரும் என் வேண்டுகோளையேற்று அவ்வாறே அழைப்பும் விடுத்தார். ஆனால் இத்தனைக்கும் பிறகு என்ன காரணத்தாலோ அவர்கள் அவைக்கு வரவும் இல்லை. மின்சார விவாதத்திலே கலந்து கொள்ளவும் இல்லை. ஆனாலும் அண்ணா கற்றுக் கொடுத்த அந்தப் பண்பாட்டுடன் நாம் நடந்து கொண்டோம் என்ற மன ஆறுதல் எனக்குக் கிடைத்தது.

அன்புள்ள,

மு.க.

15-11-2008

3345. வரட்டும் பார்க்கலாம் வழக்கு!

உடன்பிறப்பே,

கோவையில் அண்ணா நூற்றாண்டு விழா, கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களின் சார்பில் 16-ந்தேதியன்று மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதில், நானும், பொதுச் செயலாளரும், கழக முன்னணியினரும் கலந்து கொண்டுவிட்டு சென்னை திரும்பினோம். கோவை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. பொதுக் கூட்டத்தில் மக்கள் கடலில் இறுதி எங்கே உள்ளது என்பதை எங்கள் கண்களுக்கு எட்டாத தூரம் என்பார் களே, அந்த அளவிற்கு வியாபித்திருந்தது. நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து கூட்டம் நடைபெறுகின்ற இடம் வரை சுமார் 15 கிலோ மீட்டர் தூர அளவிற்கு மக்கள் கடலில் நீந்தித் தான் எங்கள் கார் செல்ல வேண்டியிருந்தது.

இந்த நிகழ்ச்சிக்காகச் சென்றிருந்த என்னை செய்தியாளர்கள் காலையில் சந்தித்த போது - சென்னை சட்டக்கல்லூரி விவகாரத் தில் ஜெயலலிதா உங்களைக் குற்றஞ்சாட்டி, தார்மீகப் பொறுப்பேற்று நீங்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறாரே, அவரைப் போலவே வைகோவும் அதே கருத்தைச் சொல்லி இருக்கிறாரே - என்று கேட்டபோது - நான் கிண்டலாக - "இதிலே யிருந்து என்ன தெரிகிறது என்றால், என்னை ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்வதற்காக மாணவர்களின் இருசாராரையும் இவர்களே தூண்டிவிட்டு சண்டை போடச் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது" - என்று சொன்னவுடன் செய்தியாளர்கள் அனைவரும் அதனை ரசித்து சிரித்துவிட்டனர். ஏடுகளிலே அந்தக் கேள்வி பதிலை பிரசுரித்து விட்டு பக்கத்திலேயே "சிரிப்பு" என்றும் வெளியிட்டுள்ளார்கள்.

இந்தப் பதிலுக்காகத்தான் எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா என் மீது அவதூறு வழக்கு போடுவேன் என்று அவசர அவசரமாக அறிக்கை விடுத்துள்ளார். வழக்கு வரட்டும், சந்திக்கின்றேன், இந்தக் கருத்துக்கே வழக்கு என்றால், அம்மையார் மீது - அவர்

பேசுகின்ற பேச்சுக்களின் மீது - எத்தனை வழக்குகள் போட வேண்டியிருக்கும்? சட்டக் கல்லூரியில் மாணவர்கள் இரண்டு தரப்பாக நின்று மோதிக் கொண்டால், அதற்கு முதலமைச்சரா காரணம்? அதற்காக நான் ராஜினாமா செய்ய வேண்டுமா? இவரது ஆட்சிக் காலத்தில் தினம் ஒரு மோதல் - தினம் ஒரு கொலை - தினம் ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்று நடைபெற்றதே - அதற்காக இவர் எத்தனை முறை பதவி விலகி இருக்க வேண்டும்? அப்போது இவருக்கு தார்மீகப் பொறுப்பு இல்லையா? இதே கேள்விக்கு சட்டப் பேரவையில் சட்ட அமைச்சர் தம்பி துரைமுருகன் அடுக்கடுக்கான கேள்விக் கணைகளைத் தொடுத்தாரே, அதற்கு அம்மையாரின் பதில் என்ன? சட்டக் கல்லூரியிலே மாணவர்களிடையே மோதல் என்றதும், உடனடியாக அதனைத் தடுக்க முயலாத காவல் துறையின் மீது அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு - சென்னை மாநகர காவல் துறையின் ஆணையரே மாற்றப்பட்டுள்ளார். அவருக்கு அடுத்த நிலையிலே இருந்த இணை ஆணையரும் மாற்றப்பட்டுள்ளார். அதற்கடுத்த நிலையிலே உள்ள உதவி ஆணையரும், இன்ஸ்பெக்டரும் தற்காலிகப் பணி நீக்கமே செய்யப்பட்டுள்ளனர். தாக்குதலில் ஈடுபட்ட மாணவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை இருபதுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்து உடனடியாக நீதி விசாரணைக்கும் ஆணையிடப் பட்டுள்ளது. இத்தனை நடவடிக்கைகளுக்கும் பிறகு அம்மையார் என்னை ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொன்னால், அதைவிட கோமாளித்தனம் என்ன இருக்க முடியும்? அதனால்தான் கோவையிலே செய்தியாளர்கள் கேட்ட போது நான் கிண்டலாகப் பதில் கூறினேன். அதற்காக அவதூறு வழக்கு போடுவதாக அம்மையார் அறிக்கை விடுத்துள்ளார்.

சட்டமன்றத்திற்கு வந்து பதிலளிக்க வக்கில்லாத கருணாநிதி என்று அறிக்கையிலே ஜெயலலிதா சொல்கிறார். இவர் சட்ட மன்றத்திற்கு எத்தனை நாட்களுக்கு வந்தார், நான் எத்தனை நாட்களுக்கு வந்தேன் என்று கணக்கெடுத்துப் பார்க்கலாமா? அலுவல் ஆய்வுக் குழு ஒன்றுக்காவது அவர் வந்தது உண்டா? ஏன் அவையிலே முக்கிய விவாதங்களுக்கு பதில் எழுதி வைத்துக் கொண்டு படிக்கக்கூடாது என்பதாகும். அதற்குமாறாக முக்கிய விவாதங்களுக்கு இவர் எழுதி வைத்துக் கொண்டுதானே படித்தார். சட்டமன்றத்திலே இவர் ஐந்தாண்டு

கால ஆட்சியில் எத்தனை கேள்விகளுக்கு அவரது துறையின் சார்பில் பதில் அளித்திருக்கிறார்? 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த ஐந்தாண்டு காலத்தில் 6 கேள்விகளுக்குத்தான் பதிலளித்தார். 1996 முதல் 2001 வரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியிலே முதலமைச்சர் என்ற முறையில் நான் 136 கேள்விகளுக்குப் பதில் அளித்திருக்கிறேன். 2001 முதல் 2006 வரை ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது முதலமைச்சர் என்ற முறையில் 7 கேள்விகளுக்குத்தான் ஜெயலலிதா பதில் அளித்தார். தற்போது ஐந்து நாட்கள் நடைபெற்ற சட்டமன்றத்திற்கு ஒரு நாள் கூட வராத இந்த உத்தமசிரோன்மணி நான் ஒரேயொரு நாள் வராதது பற்றி சட்டமன்றத்திற்கு வர வக்கற்ற கருணாநிதி என்று குறை கூறுகிறார். இன்னும் சொல்லப் போனால், தன்னைத் தவிர தன் கட்சியிலே உள்ள யாரையும் பாராட்டவோ, புகழவோ கூடாது என்றும், அவர்களுக்கு யாரும் சால்வைகள் அணிவிக்கக் கூடாது என்றும் அறிக்கை விட்டுள்ள இவர் எத்தகைய அருங்குணங்களைக் கொண்டவர் என்பதை நன்கு புரிந்து கொள்ளலாம்.

மேலும் ஜெயலலிதா அறிக்கையிலே பசும்பொன் கிராமத்திற்கு அவர் சென்றபோது, கருணாநிதியின் மகன் அழகிரியின் ஆட்கள் கொலை வெறித் தாக்குதல் நடத்தினர் என்று சொல்லியிருக்கிறாரே, அதற்கு என்ன ஆதாரம்? எதை வைத்து அழகிரி மீது இத்தகைய குற்றச்சாட்டினை இவர் சொல்லியிருக்கிறார். இதற்காகவே இவர் மீதே அவதூறு வழக்கு தொடுக்கலாமே! அம்மையார் வாய் உதிர்த்தால், அது உண்மை, மற்றவர்கள் கூறுவதற்கு அவதூறு வழக்கா? சந்திக்கலாமே அதனை! பசும்பொன் கிராமத்திற்கும் அழகிரிக்கும் என்ன சம்மந்தம்? குறிப்பிட்ட நேரத்திற்கு பசும்பொன் கிராம பிரச்சினைக்கும் செல்லாமல், காலதாமதமாக இவர் எதற்காகச் சென்றார்? கால் தடுக்கிய காரணத்தால், அதனை அபசகுனமாகக் கருதி நிகழ்ச்சிக்கே போக மறுத்து வீட்டிற்குத் திரும்பிய ஜெயலலிதா வம்பு வளர்ப்பதற்காகத்தானே பிறகு அங்கே சென்றார்! சிறிய மண்டபத்திற்குள் அங்கே திரண்டிருந்த அத்தனை அ.தி.மு.க.வினரும் உள்ளே செல்ல முயற்சித்தால், ஜெயலலிதா தானே சிரமப்பட வேண்டியிருக்கும். அதற்காக காவல்துறையினர் உள்ளே விட மறுத்த காரணத்தால்தானே காவல் துறையினர் மீது அ.தி.மு.க.வினர் கல் எறிந்தார்கள். அப்போது அங்கே திரண்டிருந்த அத்தனை அ.தி.மு.க. வினரிடையே வேறு

யாராவது உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்தமுடியுமா? அப்படி நடத்தினால், பக்கத்திலே உள்ள அ.தி.மு.க. வினர் அதைப் பார்த்துக் கொண்டிருப்பார்களா? அ.தி.மு.க. வினர் முழுவதுமாக திரண்டிருக்கும் போது, வேறு யாராவது அங்கே சென்று தாக்குதல் நடத்திட முயல்வார்களா? பொய் சொன்னாலும் பொருத்தமாகச் சொல்ல வேண்டாமா?

பசும்பொன் கிராமத்திலே இவருக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளே செய்யவில்லையா? அதையும் குறையாகச் சொல்லியிருக்கிறார். இதைப் போன்று தொடர்ந்து சொல்லிச் சொல்லித்தான் மத்திய அரசு இவருக்கு "இசட் பிளஸ்" பிரிவில் பாதுகாப்புத் தரவேண்டு மென்று ஆணையிட்டுள்ளது. "இசட் பிளஸ்" பிரிவில் உள்ளவருக்கு ஒட்டுமொத்தமாக 54 பேர் தான் பாதுகாப்புக்காக காவல்துறை யினரை ஒதுக்க வேண்டும். இது மத்திய அரசின் உத்தரவு. ஆனால் தமிழகத்திலே இவருக்கு 84 பேர் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும் தனக்கு பாதுகாப்பு இல்லை, பாதுகாப்பு இல்லை என்று தொடர்ந்து புலம்பிக் கொண்டே வருகிறார். அ.தி.மு.கழக ஆட்சியின் போது இசட் பிளஸ் பிரிவிலே இருந்த எனக்கு 54 பேரை பாதுகாப்பிற்காக ஒதுக்கியிருக்க வேண்டியதற்குப் பதிலாக 43 பேரைத்தான் ஒதுக்கியிருந்தார்கள். இருந்தாலும் எனக்குப் பாதுகாப்பு போதவில்லை என்று நான் சொல்லிக் கொண்டா இருந்தேன்? பசும்பொன் கிராமத்திற்குச் சென்றபோது, ஜெயலலிதாவின் பாதுகாப்புக்காகவே 174 காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் பாதுகாப்பு அலுவலிலே ஈடுபட்டிருந்தார்கள். அதையும் தவிர்த்து அன்றைக்கு அந்த நினைவிடத்தில் சட்டம், ஒழுங்கு பாதுகாப்புப் பணியில் காவல் துறையினர் ஆயிரம் பேர் தனியாக ஈடுபட்டிருந்தார்கள். இவ்வளவிற்கும் பிறகு பசும் பொன்னில் பாதுகாப்பு போதவில்லை என்றால் என்ன செய்வது? அரசாங்கத்தின் சார்பில் எவ்வளவு பேரை தனியாக இவர் ஒருவருக்காக மட்டுமே ஒதுக்க முடியும்? குண்டு துளைக்காத கார் வேண்டும் என்றார். அரசின் சார்பில் ஒதுக்கப்பட்டுவிட்டது. ஆனால் அதிலே ஜெயலலிதா பயணம் செய்கிறாரா? கிடையாது. தேவையில்லாமல் அரசிடமிருந்து அதனைப் பெற்று வைத்துக் கொண்டிருக்கிறார்.

மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதிக்கு கேடுகாலம் பிறந்து விட்டது என்றும் ஜெயலலிதா அறிக்கையிலே

சாபம் கொடுத்துள்ளார். யாருக்கு கேடு காலம் என்பதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். எண்பத்தி ஆறு ஆண்டுக் காலம் வாழ்ந்து விட்ட எனக்கு; இனிமேல்; கேடு காலமல்ல; எந்தக் காலம் வந்தால் என்ன, எது வந்தாலும் தாங்கிக் கொள்ளத்தான் போகிறோம்! தி.மு.க. அரசிற்கு தமிழக மக்கள் சாவுமணி அடிக்கும் காலம் நெருங்கிவிட்டது என்றும் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். முன்னாள் முதலமைச்சராக இருந்தவர் - ஆங்கிலப் பள்ளியிலே படித்தவர் என்று சொல்லிக் கொள்பவர் - எப்படிப்பட்ட வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை ஜெயலலிதாவைப் பற்றி இதுவரை புரிந்து கொள்ளாத தமிழ்நாட்டு அரசியல்வாதிகள்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

19-11-2008

3346. கொடிய வேதனை - குமுறும் நெஞ்சம்!

உடன்பிறப்பே,

மடியில் தவழ்ந்தும் மார்பில் விளையாடியும் - தோளில் தொத்தியும் நான் தூக்கி வளர்த்த பிள்ளை - அண்ணாவின் அன்புக்கும் என் உயிருக்கு உயிராகவும் விளங்கி - இன்னும் வாழ வேண்டிய வயது இருப்பினும் என்னை மீளா சோகத்தில் ஆழ்த்தி விட்டு, மறைந்து விட்ட மாறன்; அவர் பெற்ற பையன்கள் கலாநிதி தயாநிதி எனும் புகழ், அன்பு என்ற செல்லப் பெயர் கொண்ட இந்த இருவரும் அவரின் வழித் தோன்றல்களாக என்னிரு கரம் பிடித்துத் துளிர்த்துத் தழைத்த காட்சியை என் உடன்பிறப்புகளாம் நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

ஆனால் வயது வந்த பிறகு; மாறன் எனும் பாசமிகு மதிற் சுவர் தாண்டி இருவரும் எனக்கெதிராக கிளம்பிடுவர் என்றோ; பகை பாராட்டுவர் என்றோ நான் கனவிலும் கருதிடவில்லை.

அவர்தம் போக்கும் நோக்கும், அவர்கள் "பூமாலை" எனும் "கேசட்" வியாபாரம் நடத்தியபோது இருந்ததை விட; அதன் வளர்ச்சி "சுமங்கலி கேபிள் விஷன்" ஆக, "சன் டி.வி."யாக, "சன் நெட்வொர்க்" ஆக வளர்ந்து மாறியதும் - மாறனின் பிள்ளைகளும் மாறிவிட்டார்கள். முரசொலி மாறனும் முரசொலி அலுவலக முகப்பில் சிலையாக நின்று விட்டார். அதன் பிறகுதான் "சன் டி.வி." பங்குத் தொகை பிரிக்கப்பட்டு எமக்குக் கிடைத்த பங்குத்தொகை 100 கோடி ரூபாயை துணைவியர்க்கும் பிள்ளைகள் பெண்களுக்கு மாக பங்கிட்டுக் கொண்டோம்.

சன் தொலைக்காட்சி முறையாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென்று அதனைப் பிரிக்க வேண்டிய கட்டாயம் எதனால் ஏற்பட்டது? எதற்காக அவ்வளவு அவசர அவசரமாகப் பிரிக்க முடிவெடுத்தார்கள்? சன் தொலைக்காட்சியின் இலாபம் எவ்வளவு? அதன் கணக்கு எவ்வளவு? என்று எந்த

விவரத்தையும் நான் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. அதற்கான பங்கீடு நடைபெற்றபோது கூட அதில் பங்கு பெற்றிருந்தோர், அதிலே கையெழுத்திட முன் வராத நிலையில் நான்தான் அவர்களை யெல்லாம் சமாதானம் செய்து, அந்தப் பங்கீடு எந்தவிதமான கசப்புணர்வுகளும் ஏற்படாத வகையில் நடந்தேறிட உதவி செய்தேன் என்பது அனைவருக்கும் தெரியும். பின்னர் "தினகரன்" இதழையும் இவர்கள் வாங்கி விட்டார்கள்.

அதன் தொடர்பாக 7-5-2007 அன்று "தினகரன்" நாளேட்டில் கருத்துக் கணிப்பு ஒன்று வெளிவரப் போகிறது என்று என் கவனத்திற்கு வந்தபோது, தேர்தல் இல்லாத நேரத்தில் எதற்காக இந்தக் கருத்துக் கணிப்பு, மெகா சர்வே என்றெல்லாம் தேவையற்ற பிரச்சினையைக் கிளப்ப வேண்டும், அது தேவையில்லை, அந்தக் கருத்துக் கணிப்பை தயார்படுத்திவிட்டாலுங்கூட, அதனை வெளியிட வேண்டாமென்று இரண்டு மூன்று முறை நான் நேரிலேயே தெரிவித்திருந்தேன். இது துரைமுருகன், ஆர்க்காடு வீராசாமி இருவருக்கும் கூடத் தெரியும். ஆனால் என் யோசனையை ஏற்றுக் கொள்ளாமல், 2007 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் தேதிய "தினகரன்" நாளேட்டில் அந்தக் கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டது.

தமிழகத்தின் சார்பில் தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., ஆகிய கட்சிகளைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும் நிலையில், "தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களில் சிறப்பாகச் செயல்படுபவர் யார்?" என்ற தலைப்பிலே கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டது. அந்தக் கருத்துக் கணிப்பில் தயாநிதி மாறனுக்கு 64 சதவிகிதம் பேர் ஆதரவு என்றும், நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களுக்கு 27 சதவிகிதம் பேர் ஆதரவு என்றும், டி.ஆர். பாலுவிற்கு 7 சதவிகிதம் பேர் ஆதரவு என்றும், அன்புமணி அவர்களுக்கு 1 சதவிகிதம் பேர்தான் ஆதரவு என்றும் மக்கள் ஆதரவு இருப்பதாக தினகரன் ஏட்டில் வெளியிட்டார்கள்.

இரண்டு மூன்று கட்சிகளின் சார்பில் மத்தியிலே கூட்டணியில் அமைச்சர்கள் இருக்கும்போது, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் இல்லாத ஆதரவு தயாநிதி மாறனுக்கு

இருப்பதைப் போலக் குறிப்பிடும் இந்தக் கருத்துக் கணிப்பு தேவைதானா? குறிப்பாக தோழமைக் கட்சியிலே இடம் பெற்றுள்ள அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கு 1 சதவிகிதம் பேர்தான் ஆதரவு என்று வெளியிடுவது சரியான முறைதானா? அதன் காரணமாக அந்தக் கட்சியிலே உள்ளவர்கள் தி.மு.கழகத்தின்பால் எந்த அளவிற்கு கோபம் அடைய நேரிடும்? அதே நேரத்தில் அகில இந்திய அளவில் பாராட்டுப் பெற்று நீண்ட அனுபவம் பெற்றுள்ள நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்களுக்கு 27 சதவிகிதத்தினர் தான் ஆதரவு என்றும், தி.மு.க. வைச் சேர்ந்த தயாநிதி மாறனுக்கு மட்டும் 64 சதவிகிதம் பேர் ஆதரவு என்றும் வெளியிட்டால், காங்கிரஸ் கட்சியிலே உள்ள தோழர்கள் அதனை வரவேற்பார்களா? எதற்காக வீண் வம்பை வளர்க்க வேண்டும்? தி.மு. கழகத்தின் சார்பிலேயே அமைச்சர்களாக உள்ள பாலுவிற்கு 7 சதவிகிதம் பேர் தான் ஆதரவு என்று எழுதுவதால் என்ன பயன்? இந்தக் கருத்துக் கணிப்பினை வெளியிட்டே இருக்கத் தேவையில்லை என்பது என் கருத்தாக மட்டுமல்ல, அப்போது தமிழகத்திலே உள்ள மூத்த அரசியல்வாதிகள் அனைவராலும் அந்தக் கருத்துக் கணிப்பு தவறாகக் கருதப்பட்டது.

இந்தச் செய்தியைப் படித்து விட்டு பெரிதும் வருந்திய நான், நேரடியாக கலாநிதி, தயாநிதி இருவரையும் அழைத்து, முதலில் இந்தக் கருத்துக் கணிப்பு வெளியிடுவதை நிறுத்துங்கள் என்று கோபமாகவே சொன்னேன். என்னுடைய கோபம் அலட்சியப்படுத்தப்பட்டு என் கருத்தும் அப்போது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

9-5-2007 அன்று "தினகரன்" இதழில் முதல் பக்கத்தில் தலைப்பிலே கட்டம் கட்டி ஒரு செய்தி - "கருணாநிதியின் அரசியல் வாரிசு யார்? - 11ஆம் பக்கம் பார்க்க" என்று தலைப்பிட்டு - மீண்டும் ஒரு கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டது. அந்தக் கருத்துக் கணிப்புக்கு தலைப்பே "கருணாநிதியின் அரசியல் வாரிசாக யார் வர வேண்டும்?" என்பதாகும். இதில் தமிழக அளவில் மு.க. ஸ்டாலின் தான் கலைஞரின் அரசியல் வாரிசாக வர வேண்டும் என்று 70 சதவிகிதத்தினரும், மு.க. அழகிரிக்கு ஆதரவாக 2 சதவிகிதத்தினரும், கனிமொழிக்கு ஆதரவாக 2 சதவிகிதத்தினரும் ஆதரவாக கருத்து தெரிவித்திருப்பதாகச்

செய்தி வெளியிட்டார்கள். முதல் கருத்துக் கணிப்பு தோழமைக் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கானது என்றால், இந்தக் கருத்துக் கணிப்பு குடும்பத்தாருக்கு மத்தியிலேயே குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

மு.க. அழகிரி ஆனாலும், கனிமொழி ஆனாலும் எனக்கு அரசியல் வாரிசாக வருவதற்கான முயற்சியோ, அறிவிப்போ எதிலும் ஈடுபடாத நிலையில், தேவையே இல்லாமல் வீண் வம்பினை விலை கொடுத்து வாங்குவதைப்போல அவர்களுக்கு தமிழகத்திலே இரண்டு சதவிகிதம் தான் ஆதரவு என்பதாக செய்தி வெளியிட்டார்கள். இதிலே கூட தயாநிதி மாறன், இந்தப் போட்டியில் தன் பெயரைத் தவிர்த்துக் கொண்டு, அவருக்கு எத்தனை சதவிகிதம் ஆதரவு என்பதையே வெளியிடாமல், அழகிரி, ஸ்டாலின், கனிமொழி என்ற என் பிள்ளைகளுக்கு மத்தியிலேயே ஒருவருக்கொருவர் காழ்ப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் கருத்துக் கணிப்பு வெளியிட்டார்கள். அப்போதெல்லாம் கூட, நான் இந்த ஏற்பாடுகள் எல்லாம் உள்நோக்கத்துடன் திட்ட மிட்டுத்தான் செய்யப்படுகிறது என்று நினைத்தது கிடையாது.

மு.க. அழகிரிக்கு இரண்டு சதவிகிதம் பேர் தான் தமிழகத்திலே ஆதரவு என்று கருத்துக் கணிப்பு வெளியிட்டதும், அதற்காக அழகிரி கோப மடையாமல் இருக்கலாம். ஆனால் அவருடைய ஆதரவாளர்கள் எல்லோரும் பொறுமையாக இருப்பார்களா? அதனால், அழகிரிக்கே தெரியாமல், அந்தக் கருத்துக் கணிப்பை வெளியிட்ட தினகரன் அலுவலகத்திற்குள் புகுந்து வன்முறையிலே ஈடுபட்டார்கள். அந்த வன்முறைச் செயலில் அழகிரிக்கு கொஞ்சம் கூட ஈடுபாடு கிடையாது என்றபோதிலும், அந்த வன்முறைச் சம்பவம் நடைபெறவும், அதனால் மூன்று அப்பாவி அலுவலர்கள் படுகொலைக்கு ஆளாகவுமான நிலைமை ஏற்பட்டது. அதற்கு யார் காரணம்? அந்தக் கருத்துக் கணிப்பை வெளியிட்டு ஒரு தரப்பினரை உயர்த்தி வைத்து மற்றொருவரை இழிவாகக் குறிப்பிட்டதால், அவருடைய ஆதரவாளர்கள் உணர்ச்சிவயப்பட்டு வன்முறையிலே இறங்க நேரிட்டது. கருத்துக் கணிப்பு வெளியிட வேண்டாமென்று நான் எத்தனை முறை சொன்னேன்? என் வார்த்தை கேட்கப்பட்டதா? அதன் பலன் என்னவாயிற்று? எதற்காக ஸ்டாலினை உயர்த்தி வைத்து,

அழகிரியையும், கனிமொழியையும் மட்டம் தட்ட நினைக்க வேண்டும்? ஒரே குடும்பத்திற்குள் இப்படிப்பட்ட பிரித்தாளும் சூழ்ச்சி நல்லது தானா?

மு.க. அழகிரியை அத்துடனாவது விட்டார்களா? 10-5-2007 தேதிய தினகரனில் - "கருத்துக் கணிப்பை சகிக்க முடியாமல் மு.க. அழகிரி வெறி யாட்டம் - ரவுடிகளை ஏவித் தாக்குதல்" என்ற தலைப்பிலே செய்தி வெளியிட்டார்கள். மு.க. அழகிரியா வெறியாட்டம் போட்டார்? அவரா ரவுடிகளை ஏவினார்? அழகிரியின் ஆதரவாளர்கள் அவருக்கே தெரியாமல் ஈடுபட்ட செயலுக்கு, அவரைப் பொறுப்பாக்கி, தினகரன் நாளேட்டிலேயே செய்தி வெளியிட்டார்கள். குடும்பத்திற்குள்ளே சண்டை யை ஏற்படுத்தியது மாத்திர மல்லாமல், அன்று முதல் இன்று வரை தினகரன் நாளேட்டில், என்னுடைய தலைமையிலே உள்ள தி.மு.க. அரசையும், அரசின் காவல் துறையையும் மற்றத் துறைகளையும் எந்த அளவிற்கு மோசமாக - ஏன் எதிர்க்கட்சி ஏடுகளை விட மோசமாக விமர்சனம் செய்து செய்திகளை வெளியிட்டவண்ணம் இருக்கிறார்கள்? மே திங்கள் 11 ஆம் தேதி கொட்டை எழுத்துக்களில் "அழகிரி அட்டூழியத்திற்கு முடிவு கட்டுங்கள்" என்றும் "நடவடிக்கை எடுக்கும் வரை ஓயமாட்டேன்" என்றும் கலாநிதி மாறன் கூறியதாக தினகரன் நாளேட்டில் எழுதப்பட்டிருந்தது.

அதே கருத்துக் கணிப்பின் தொடர்ச்சியாக "எந்த அரசுத் துறை அதிகாரிகள் அதிக லஞ்சம் வாங்குகிறார்கள்?" என்ற தலைப்பில் - என் பொறுப்பிலே உள்ள காவல் துறையில் தான் அதிக அளவில் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று முடிவு வெளியிட்டார்கள்.

"தினகரன் அலுவலகத்திலே நடைபெற்ற சம்பவம் குறித்து சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

10-5-2007 அன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, நான் அளித்த பதிலின் இறுதிப் பகுதி வருமாறு :-

09.05.2007 அன்று காலை 9.30 மணிக்கு, மதுரையில் சிலர் கருத்துக்கணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தினகரன் நாளிதழ் அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்து, தினகரன் இதழை தீயிட்டுக் கொளுத்திவிட்டு கலைந்து சென்றனர். இது சம்பந்தமாக,

தலைமைக் காவலர் 830 ரகுநாத கலைமணி என்பவரின் புகாரின் பேரில், ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற எண்.224/2007 பிரிவு 147, 148, 285 இ.த.ச.படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் கோபி நாதன், குமார், சேகர், பாண்டி, அருணாசலம் ஆகிய ஐந்து எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர், காலை 10.00 மணிக்கு சரவணன் என்பவர் தலைமையில் சிலர் தினகரன் அலுவலக வளாகத்திற்குள்ளேயே அத்துமீறி நுழைந்து, கற்களை வீசி, கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தினர். இது சம்பந்தமாக, தலைமைக் காவலர் 1380 மார்டின் வில்லியம் என்பவரின் புகாரின் பேரில், ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற எண். 225/2007 பிரிவு 147, 148, 332 இதசபடி வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் அழகுராஜா, பிரேம்குமார் என்ற இருவர் இதுவரை கைதாகியுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து, தினகரன் அலுவலகத்திற்கு ஊமச்சிக்குளம் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர், தலைமையில் நான்கு உதவி ஆய்வாளர்கள் உட்பட 17 காவலர்களை அனுப்பி, பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. சுமார் 11.30 மணிக்கு, சிலர் டாடா சுமோ காரில் வந்து காவல்துறை பாதுகாப்பை மீறி தினகரன் அலுவலகத்திற்குள் நுழைந்து பெட்ரோல் அடைக்கப்பட்ட பாட்டில்களை வீசி, கண்ணாடி மற்றும் அலுவலகப் பொருட்களை தீ வைத்து சேதப்படுத்தி, தப்பி சென்றுவிட்டனர். உடனடியாக, காவல் மற்றும் தீயணைப்புத் துறையினர் தீயினை அணைத்தார்கள். தீ மற்றும் புகையில் சிக்கி தினகரன் அலுவலக ஊழியர்கள் கோபிநாத், வினோத் மற்றும் முத்துராமலிங்கம் ஆகியோர் மூச்சு திணறி இறந்துள்ளனர். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் ஆலடியான் கொடுத்த புகாரின் பேரில் ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற எண். 226/2007 பிரிவு 147, 148, 120 (பி), 449, 302, 307, 436, 332 இதச படியும், பிரிவு 4 மற்றும் 5 of Explosive Substance Act and Sec. 4 of Tamil Nadu (Prevention) Damages and Loss Act 1992படியும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர், இது சம்பந்தமாக, தினகரன் நாளிதழ் செய்தி ஆசிரியர் திரு. முத்துபாண்டியன் கொடுத்த புகாரும், இதனுடன் சேர்த்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வழக்கில் டைகர் பாண்டி, பாட்சா, சரவணன், மாரி மற்றும் பிரபு ஆகிய ஐவர் இதுவரையில் தனிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். எதிரிகள் பயன்படுத்திய டாடா சுமோ TN 58 Y 6066 பதிவு எண் கொண்ட வாகனம் கைப்பற்றப் பட்டுள்ளது. இவ்வழக்கில், மற்ற எதிரிகளை கைது செய்ய ஆறு தனிப்படைகள் அமைக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாநகரில், பேருந்துகள் மீது கற்களை வீசி, கண்ணாடி களை சேதப்படுத்தியது சம்பந்தமாக, கரிமேடு காவல் நிலைய குற்ற எண். 964/2007 பிரிவு 147, 148, 427 இதச r/w 3(1) of TNPPDL Act, ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலைய குற்ற எண். 637/2007 பிரிவு 332 r/w 3(1) of TNPPDL Act, சுப்பிரமணியபுரம் காவல் நிலைய குற்ற எண். 611/2007 பிரிவு 341, 336, 427 இதச மற்றும் r/w 3(1) of TNPPDL Act படி வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இவ்வழக்குகளில் 7 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், மதுரை நகரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இதுவரை 82 பேர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து, மாநிலத்தில் உள்ள அனைத்து தினகரன் பத்திரிகை அலுவலகங்கள் மற்றும் சன் தொலைக்காட்சி அலுவலகங்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கி, இது சம்பந்தமாக எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறு, அனைத்து மாவட்ட கண்காணிப்பாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று காவல் துறை சார்பில் அறிக்கை எனக்குத் தரப்பட்டுள்ளது.

இதனைச் சொல்லும்போது - இந்த நிகழ்வுகளில் இதிலே என்னுடைய குடும்பத்தினரையும் சம்பந்தப்படுத்தியிருக்கிற நிலையில் - இந்த வழக்கினை தமிழகப் போலீசார் விசாரிப்பதற்குப் பதிலாக - மத்திய அரசு புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ. யைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்று

முடிவெடுத்து, மதுரையில் தினகரன் அலுவலகம் தாக்கப்பட்டது குறித்தும், மூன்று பேர் இறந்தது குறித்தும் சி.பி.ஐ. யைக் கொண்டு விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கிறேன்.

தமிழக அரசின் சார்பில் சி.பி.ஐ. விசாரணை கோரி உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மத்திய அரசுக்கும் தலைமைச் செயலாளர் மூலமாகக் கடிதம் எழுதப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு சட்டமன்றத்திலே நான் விரிவாக எடுத்துரைத்த பிறகும், இதனைத் தொடர்ந்து நாள் தவறாமல் அழகிரிக்கு சம்மந்தமே இல்லாத பிரச்சினைகளிலே எல்லாம் கூட அவர் மீது பழியைப் போட்டும் - அதேபோல் மத்தியிலே தயாநிதி மாறன் அமைச்சராக பொறுப்பேற்றிருந்த துறையின் அமைச்சராக கழகத்தின் சார்பில் அமைச்சராக்கப்பட்ட ஆ. ராஜா அவர்களுக்கு எதிராகவும் - தமிழகத்திலே மின்துறை அமைச்சருக்கும், வேறு குறிப்பிட்ட சில அமைச்சர்களுக்கு எதிராகவும் எந்த அளவிற்கு மோசமாக செய்தி வெளியிட முடியுமோ அந்த அளவிற்கு செய்திகளை வெளியிட்டு வருகிறார்கள். அதுபற்றி பலமுறை நான் வீட்டிலே உள்ளவர்கள் மூலமாகவும், நண்பர்கள் மூலமாகவும் தெரிவித்தும் கூட அதனைக் கேட்கவில்லை.

"தாத்தா - பேரன்" என்ற முறையில் நான் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் நான் தலைமை வகித்து நடத்திடும் கட்சியையும் ஆட்சியையும் வேண்டுமென்றே தொடர்ந்து பழி சுமத்தினால் அதனை நான் தாங்கிக் கொள்ள முடியுமா? அதுவும் கழகத்திற்குச் சொந்தமான அண்ணா அறிவாலயத்திற்குள்ளேயே இருந்து கொண்டு, அந்தக் கழகத்தைப் பற்றி இழித்தும் பழித்தும் செயல்படுவதென்றால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அதனால்தான் சன் தொலைக்காட்சி அமைந்திருந்த அந்த அலுவலகத்தை உடனடியாக காலி செய்ய வேண்டுமென்று கழகப் பொருளாளர் மூலமாகச் சொல்லி அனுப்பப்பட்டது. அப்போது கூட 5-2-2008 அன்று சன் தொலைக்காட்சி சார்பில் தி.மு.கழக அறக்கட்டளை தலைவராகிய எனக்கு எழுதிய கடிதத்தில் ஆறு மாத காலம் தொடர்ந்து அங்கேயிருப்பதற்கு அனுமதிக்கக் கேட்டிருந்தார்கள். அதையும் ஏற்றுக் கொண்டு அவ்வாறே கால அவகாசமும் தரப்பட்டது என்பதை அனைவரும் அறிவார்கள்.

இவ்வளவிற்கும் பொறுமையாக இருந்து செயல்பட்ட பிறகும், தி.மு.க. அறக்கட்டளைக்குச் சொந்தமான அந்த இடத்தை

5-7-2008 அன்று காலி செய்து விட்டு செல்லும்போது என்ன செய்தார்கள்? அந்த இடத்தை என்ன கதிக்கு ஆளாக்கி விட்டுச் சென்றார்கள் என்பதற்கு இந்தக் கடிதத்திலே இணைக்கப்பட்டுள்ள புகைப்படங்களே சான்றாகும். அந்தக் கட்டிடத்தையே புனரமைப்பு செய்ய வேண்டிய அளவிற்கு மின்சார "ஒயர்கள்" எல்லாம் தாறுமாறாக அறுக்கப்பட்டும், குளியல் அறையிலே உள்ள சாதனங்கள் எல்லாம் உடைக்கப்பட்டும் சுவர்களையும் நாசம் செய்து விட்டுச் சென்றார்கள் என்பதை இந்தப் புகைப்படங்களே வெளிப்படுத்தும்.

இந்தக் கொடுமையான காட்சியை போய்ப் பார்த்து விட்டு வருமாறு பொருளாளர் அவர்களையும், வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன் மற்றும் கழக முன்னோடிகள் சிலரையும் அனுப்பிவைத்தேன். அவர்களும் என்னுடன் சேர்ந்து கண் கலங்கினர்!

அன்புள்ள,

மு.க.

21-11-2008

3347. மாசறு பொன்னே; வலம்புரி முத்தே!

அருமைக் கண்மணியே, அன்பு மாறனே!
ஓடி விட்டன ஐந்து ஆண்டுகள் உன்னைப் பிரிந்து!

உன்னை நினைவூட்டி என் நெஞ்சில் அலை பாயும் நிகழ்வுகளை முரசொலி அலுவலக முகப்பில் நாங்கள் வைத்துள்ள சிலை; அடுக்கடுக்காகக் காட்சியாக்கும் போது; நீ தத்தித் தவழ்ந்த பருவம் - தாளமிடுவது போல் தளிர் நடை போட்ட பருவம்; என் தோளில் அமர்ந்து "கோளிலி" கோயிலுக்குப் போன பருவம்; குவளைப் பள்ளியில் உன்னைக் குந்த வைத்தது முதல் குடந்தைக் கல்லூரியில் சேர்த்து அக்காள் பெரியநாயகம் அரவணைப்பில் வளர்ந்து; சேலம் கல்லூரியில் சிறப்புறு மாணவன் எனும் செவியினிக்கும் சேதியாலே சிந்தை குளிர்ந்து; அண்ணா கண்களுக்கு ஆச்சரியக் குறியாகவும் - உன் அன்பு மாமனாம் என் கண்களுக்கு அழகும் அறிவும் கலந்த மறக்க முடியாத மா மருந்தாகவும் விளங்கி; எந்த மருந்துக்கும் இரக்கம் காட்டி இறங்கித் தொலையாத இறுதி முடிவுக்கு இயற்கை ஆளாக்கிவிட்டது உன்னை! எதை நினைத்து என்னைத் தேற்றிக் கொள்வது? யாரை நினைத்து என் மனத்தை மாற்றிக் கொள்வது? நீயும் சேர்ந்து வளர்த்த உயிர் போன்ற கழகம் இருக்கிறது! அந்தக் கழகத்திற்கென ஒலித்து என்றைக்கும் கம்பீரம் குலையாத; கையெழுத்து ஏடாகத் தொடங்கி; திராவிடரின் தலையெழுத்தை உயர்த்திப் பிடிக்க ஒலித்திடும் "முரசொலி" இருக்கிறது - ஆனால் நீயில்லையே என் கண்ணே! "மாறன் என் தம்பியல்லவோ!" என்று மார்தட்டிச் சொன்ன மாமேதை அண்ணாவின் மறைவுக்குப் பிறகு உன் மறைவு; என் போன்றார்க்கு எரிமலையின் நெருப்பலை போல் அல்லவோ; வாய்த்து வாட்டி வதைத்து விட்டது!

"ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?"

நீ எழுதிய புத்தகமா அது? தமிழனுக்குச் சோகம் வரும்போதெல்லாம் வேகமாக எழுகின்ற வினாவல்லவோ அது!

"மாநில சுயாட்சி" யென்று மாமேதையாம் நீ எழுதிய இந்த இயக்கத்தின் இலட்சியப் புதையலாம் பெரும் நூலில்;

"அறியாமை இருளில் மூடிக் கிடந்த
தமிழர்களின் விழி திறந்த பெரியார் -
அரசியல் எழுச்சி எனும்
விளக்கேற்றி வைத்த அண்ணா -
அன்பின் உருவங்களாம் எங்கள்
குடும்பச் சுடர்கள் முத்துவேலர், அஞ்சுகத்தாய் -

ஆகியோரின் நீங்காத நினைவுக்கு!"

என்று எழுதிவிட்டு;

"எனக்கு 'அ'கரம் கற்றுக் கொடுத்து ஆளாக்கியவரும் - என் ஆசானுமாகிய கலைஞர்" என்றும் கூறி,

நன்றி தெரிவித்திருக்கிறாயே; மாசற்ற உன்மனத்தில் எழுந்த நன்றியுணர்வு அல்லவா அது?

அதனாலதான் - எனறைக்கும
உன் நிழற் படத்தையோ,
உருவச் சிலையையோ,
பார்க்கும் போதெல்லாம் -

எனக்கு;

"மாசறு பொன்னே
வலம்புரி முத்தே
காசறு விரையே
கரும்பே தேனே"

எனும் சிலப்பதிகார வரிகள்தான் என்

சிந்தையைச் சிலிர்க்க வைக்கின்றன -

வாழ்க நீ இந்த
வையம் உள்ளவரை!

அன்பு,

மு.க.

23-11-2008

3348. தடைக்கல் ஆகாதீர்; தள்ளி நிற்பீர்!

உடன்பிறப்பே,

கழக அரசு செய்துவரும் சிறப்பான காரியங்களை - தமிழக மக்களுக்கு ஆற்றி வரும் நலம் பயக்கும் சாதனைகளை - கண்டிப்பதையும், கடுஞ்சொற்களால் மனம் போன போக்கில் அர்ச்சிப்பதையும் ஜெயலலிதா தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்.

நல்லவை நடக்கும்போது பாராட்ட வேண்டும்; அல்லது பழி சொல்லாமலாவது அமைதி காக்க வேண்டும்; அல்லவை கண்டால் இடித்துரைத்திட வேண்டும் - என்ற எதிர்க்கட்சிக்கான இலக்கணத்தை ஒரு கணமும் பின்பற்றிடாமல்; எப்போதும் எதிரிக் கட்சியாகவே எகிறிக் குதிப்பதும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவதும், "எல்லாம் எமக்குத் தெரியும்" என்ற "திருவிளையாடல்" திரைப்படப் பாணியில் தனது தலைக் கனத்தையும் தன்முனைப்பையும் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்வதும் ஜெயலலிதாவின் குண விசேஷம்! அதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகத்தான் அருந்ததியர்களுக்கான தனி இட ஒதுக்கீடு குறித்த அவரது அறிக்கையும் அமைந்திருக்கின்றது.

எடுத்த எடுப்பிலேயே அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு என்று அருந்ததிய மக்களை நான் ஏமாற்றிடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அருந்ததிய மக்களை மட்டுமல்ல; அருந்தமிழ் நாட்டின் அனைத்துப் பிரிவினரையும் ஏய்த்து, ஏமாற்றி, எற்றி அரசியல் நடத்தி வருபவர்தான் ஜெயலலிதா. ஜெயலலிதாவின் அரை வேக்காட்டு அறிக்கைகளையும், நாச எண்ணம் கொண்ட நடவடிக்கைகளையும் பார்க்கும் போது "இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" என்ற தஞ்சை ராமையாதாஸ் அவர்களின் பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரமில்லை" என்கிறார் ஜெயலலிதா தனது அறிக்கையில்! அதற்கு ஆதரவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 341வது பிரிவைக் குறிப்பிடுகிறார்.

அரசியல் சட்டத்தின் 341 (1) வது பிரிவு ஒவ்வொரு மாநிலத்திலும், தாழ்த்தப்பட்டோர் யார் யார் என்று இந்தியக் குடியரசுத் தலைவர் வெளியிடும் அறிவிக்கை பற்றியதாகும்; 341 (2) வது பிரிவு இந்தியக் குடியரசுத் தலைவர் வெளியிடும் அறிவிக்கையில் எதனையும் சேர்ப்பதற்கு அல்லது நீக்குவதற்கு நாடாளுமன்றத்திற்குத் தரப்பட்டுள்ள அதிகாரம் பற்றியதாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, இந்தியக் குடியரசுத் தலைவர் அறிவிக்கையின்படி, 76 சாதியினர் தாழ்த்தப்பட்டோர் எனும் பிரிவுக்குள் அடங்குவர். இன்னும் ஆதாரம் தேவையானால், 12-3-2008 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் அந்தக் கட்சியின் முன்னோடிகளான திரு. டி. ஜெயக்குமாரும், திரு. எஸ். அன்பழகனும் கலந்துகொண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்கப்பட மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் விரிவான முறையில் விசாரித்தறிந்து அண்மையில் மத்திய அமைச்சரவையில் எடுத்த முடிவின்படி அமைந்துள்ள கமிஷனின் நிலையையும் ஆராய்ந்து தேவைப்பட்டால் அவர்களையும் கலந்துகொண்டு அரசுக்குப் பரிந்துரை செய்திட உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசரை கொண்ட ஒரு நபர் குழு அமைப்ப தென்று முடிவெடுக்கப்பட்டது. அதற்கேற்ப நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கைபடி இந்த அரசு செயல்பட முனையும்போது அதற்கு மாறான முரண்பட்ட கருத்தினை ஜெயலலிதா தன் அறிக்கையிலே தெரிவித்துள்ளார்.

நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள், அரசியல் சட்டத்தின்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டிற்கான தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் எவ்வித மாற்றத்தையும் செய்திட வில்லை; எந்த சாதியையும் அப்பட்டியலில் சேர்த்திடவோ, அல்லது

நீக்கிடவோ முயற்சி செய்திடவில்லை. அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள அருந்ததியர் என்கின்ற சமுதாயத் தொகுப்பின் கீழ் - அதே பட்டியலில் இடம் பெற்றுள்ள அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, ஆதி ஆந்திரர், பகடை, மடிகா மற்றும் தோட்டி - ஆகிய ஏழு பிரிவினரை உள்ளடக்கி; தாழ்த்தப்பட்டோர் அனைவருக்கும் தற்போது மொத்தமாக வழங்கப்பட்டு வரும் 18 சதவிகித இட ஒதுக்கீட்டில், இந்த ஏழு பிரிவினரின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமான விகிதப்படி (Proportionate to the Population)

மூன்று சதவிகித இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளார். அந்தப் பரிந்துரை தமிழக அமைச்சரவையால் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது மாநில அரசின் அதிகார வரம்பை மீறிய செயலா? அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானதா? அரசியல் சட்ட மாமேதை (?) ஜெயலலிதாதான் அவனிக்கு விளக்கிட வேண்டும்!

அதிகார வரம்பை மீறுவது ஜெயலலிதாவின் வாடிக்கை. அவர் ஆட்சியில் இருந்தபோது கேபிள் டி.வி. தொழிலை மாநில அரசே எடுத்துக் கொள்ளச் சட்டம் கொண்டு வந்தாரே; அது மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதா? மத்திய அரசின் அதிகாரத்தைத் தனது கையிலே எடுத்துக்கொண்டு மாய்மாலம் காட்டினாரே; மேதகு ஆளுநர் தலையிட்டல்லவா தறிகெட்டுப் போன அந்த அதிகாரத்தைத் தடுத்து நிறுத்தினார்! அதனால்தானே தற்போது தமிழக அரசு, மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் நுழையாமல், மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு கேபிள் டி.வி. தொழிலில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களுக்கு இணையாக அரசு கேபிள் டி.வி. கார்பரேஷன் ஒன்றை பொது மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் கேபிள் இணைப்புகளை வழங்கிட வேண்டுமென்ற நோக்கத்தோடு தொடங்கியுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சாராம்சங்களை யெல்லாம் தூக்கி எறிந்து விட்டு 2001ஆம் ஆண்டில் ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டாரே; தமிழ்நாட்டில் உள்ள இந்து, எக்ஸ்பிரஸ் போன்ற நாளேடுகள் எல்லாம் அதைக் கண்டித்து அப்போது தலையங்கம் தீட்டியதே; இந்திய உச்ச நீதி மன்றமே இந்தப் பிரச்சினையில் அரசியல்

சட்டத்தை தமிழ்நாட்டில் நிலைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதே! அதன் காரணமாக முதலமைச்சர் பதவியை ஜெயலலிதா ராஜினாமா செய்ய வேண்டிய தாயிற்றே! "பச்சைத் தமிழர்" பன்னீர்செல்வம் இடைக்கால முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றாரே; இவற்றையெல்லாம் தமிழகத்து மக்கள் மறந்திருப்பார்கள் என்று ஜெயலலிதா மனப்பால் குடித்துக் கொண்டு, நான்; அருந்ததிய மக்களை ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிக்கை விடுத்துள்ளார். அனைத்து விதமான துஷ்பிரயோகங்களுக்கும் ஜெயலலிதா அசைக்க முடியாத முன்மாதிரி என்பதை சரித்திரம் முடிவு செய்து பல நாட்களாகிவிட்டன.

தாழ்த்தப்பட்டோருள் அருந்ததிய சமுதாயத்தினருக்கு முன்னுரிமை இட ஒதுக்கீடு வழங்கிட முடிவெடுத்ததற்கு ஏற்கெனவே முன்மாதிரி இருப்பதை ஜெயலலிதாவுக்கு யாரும் எடுத்துரைக்கவில்லை போலும்!

பஞ்சாப் மாநிலத்திற்கான தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் 39 சாதியினரை உள்ளடக்கி இந்திய அரசியல் சட்டத்தின்படி, அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஏற்கெனவே இருந்து வந்த மொத்த ஒதுக்கீடான 25 சதவிகித இட ஒதுக்கீட்டில்; பால்மீக்கிகள், மஷாபி சீக்கியர்கள் என்ற இரண்டு பிரிவினர்க்கு மட்டும் 12.50 சதவிகித உள் ஒதுக்கீடு 5-5-1975 முதல் ஓர் அரசு அறிவிக்கையின் மூலம் வழங்கப்பட்டு வந்தது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு பஞ்சாப் - அரியானா உயர் நீதி மன்றம், பஞ்சாப் அரசு சட்டமாக இதனை நிறைவேற்றாமல், வெறும் ஆணையாக மட்டுமே அமல்படுத்தி வந்ததை 25-7-2006 அன்று ரத்து செய்தது. எனினும் பஞ்சாப் மாநில அரசு அந்த இரு பிரிவினர்க்குமான உள் இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து நடைமுறைப் படுத்திடும் வகையில் 5-10-2006 அன்று சட்டம் ஒன்றை நிறை வேற்றியது. அது இன்றளவும் செயல்முறையில் தொடர்ந்து இருந்து வருகின்றது.

அதனால்தான் நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தமது அறிக்கையிலே "In such circumstances, this Committee is of the firm view that the State Government of Tamil Nadu may, without

any hesitation whatsoever, enact a Legislation, of course, after having a consultation with the National Commission for Scheduled Castes under Art. 338 (9) without brooking any delay, making special provisions for reservation within reservation for Arunthathiyars as had been done in the State of Punjab under Section 5 of Section 4 of the Punjab Act 22 of 2006" (இம்மாதிரியான சூழ்நிலையில் தமிழ் நாடு அரசு - பஞ்சாப் மாநிலத்தில் 2006ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டம் எண். 22ன் 4வது பிரிவில் 5வது கிளைப் பிரிவின் கீழ் வழங்கப் பட்டுள்ளதைப் போன்று - அருந்ததியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கிட எவ்விதத் தயக்கமுமின்றிச் சட்டம் இயற்றலாம். அப்படி சட்டம் இயற்றுவதற்கு முன்னர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 338 (9)வது பிரிவின்படி தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்துடன் கலந்தாலோசனை செய்திட வேண்டும்) என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் குறிப்பிட்டுள்ளபடி தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் திரு. பூட்டாசிங் அவர்களுக்கு - அருந்ததியினருக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கருத்துருவினைப் பற்றிய அறிக்கை ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு அருந்ததியர்க்கான தனி இட ஒதுக்கீடு தொடர்பாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள வழிமுறைகளைச் சிறிதும் பிசகாமல் தமிழக அரசு பின்பற்றி வருகிறது. எனவே அருந்ததிய சமுதாயத்தினருக்குக் கிடைத்திடப் போகும் விருந்தில் விஷம் கலக்கலாம் என்ற ஜெயலலிதாவின் கனவு வீண் கனவு; பகல் கனவு!

ஏதோ, தான் முதலமைச்சராக இருந்தபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டிற்குள் உள் ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையை அருந்ததிய இன மக்கள், ஆதி திராவிட மக்கள், மற்றும் தேவேந்திர குல வேளாள மக்கள் தன்னிடம் வைத்ததாகவும், அவர்களது கோரிக்கையை நிறைவேற்றுவது குறித்து சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்ததாகவும் தனது அறிக்கையிலே கதை அளந்திருக்கிறார் ஜெயலலிதா. அப்படி அவர் செய்ததற்கான அரசாங்கத்தின் கோப்பை சுட்டிக் காட்ட முடியுமா? அதற்கு அரசு ஆவணங்களோ ஆதாரங்களோ உண்டா? போகிற

போக்கில் பொய்யையும், புரட்டையும், புளுகையும் அவிழ்த்து விட்டால், அதனை நம்புவதற்குத் தமிழர்கள் என்ன இளித் தவாயர்களா? அப்படி ஒருசிலர் இருந்தால் அவர்கள் என்னை மன்னித்துக் கொள்ளவும்.

எனக்கு அருந்ததிய இன மக்கள் மீது அக்கறை இல்லாததைப் போல ஜெயலலிதா தனது அறிக்கையிலே பிதற்றியிருக்கிறார். இந்தப் பிதற்றல் கண்டு என்னிடம் பணியாற்றுகிற அருந்ததிய இளைஞன் நித்யா கூட சிரிக்கிறார், இப்படியும் ஒரு பெண்மணியா என்று! மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றிச் சுமக்கும் இழிவைத் துடைத்திட - அதனைத் தடுத்து நிறுத்திடச் சட்டம் இயற்றியது யார்? துப்புரவுத் தொழிலாளர் களுக்கும், தோல் பொருள்கள் காலணி உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கும் பல்வேறு வகையான நிதி உதவிகளை வழங்கிட நல வாரியங்களை உருவாக்கியது யார்? அவர்கள் மாற்றுத் தொழில்களை ஏற்றுச் செய்திட தக்க பயிற்சியளித்து, கடன் உதவி வழங்கி அவர்களைப் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் முன்னேற்றிட பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருவது யார்? சென்னை மாநகராட்சியில் சாக்கடைகளுக்குள் இறங்கி துப்புரவுப் பணியாளர்கள் வேலை செய்வதை மாற்றி, கழிவுநீர் அடைப்பை நீக்குவதற்கு இயந்திரங் களை அறிமுகம் செய்துள்ளது யார்? இவை அனைத்தையும் அருந்ததிய சமுதாயத்தினர் நன்கறிவர்; அதனால்தான் இத்திங்கள் 26-ந்தேதியன்று காலையில், தமிழகத்திலே உள்ள பல்வேறு அருந்ததிய சங்கங்களின் பிரதிநிதிகள் பா.ம.க. தலைவர் நண்பர் கோ.க. மணியுடன் சுமார் 50 பேர் வந்து என்னைத் தலைமைச் செயலகத்திலே சந்தித்து அருந்ததிய சமுதாயத்திற்குச் செய்யப்பட்ட இந்த உதவியை என்றென்றும் மறக்க மாட்டோம் என்று உணர்ச்சிவயப்பட்டு உறுதி கூறினர். இன்னும் குறைகளிருப்பின் அவையும் எதிர்காலத்தில் களையப்படுமென நானும் உறுதி கூறியுள்ளேன்.

வெற்று அறிக்கைகள், வீணான ஆரவாரங்கள், வேடிக்கை அரசியல் நடவடிக்கைகள் ஆகியவற்றை விடுத்து; ஆரோக்கியமான அரசியலைப் பின்பற்றி நாட்டு மக்கள் நலன் கருதி ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை இனியாவது வழங்குவது ஜெயலலிதா போன்றவர்களுக்கு நல்லது. “நல்லது செய்தல் ஆற்றீராயினும்,

அல்லது செய்தல் ஓம்புமின்!" எனும் புறநானூற்று வாசகம் அவர்களுக்கெல்லாம் நல் ஒளியும் - நல் வழியும் காட்டட்டும்!

அருந்ததிய சமுதாயத்தினர்க்குக் கிடைத்திட இருக்கும் தனி இட ஒதுக்கீட்டினைத் தடுத்திட முனைபவர்கள் யார், அதனைக் கொண்டு வர பாடுபடுபவர்கள் யார் என்பதை அந்தச் சமுதாயத்தினர் இப்போதாவது அடையாளம் கண்டு கொள்ளட்டும்!

கடைக்கோடியில் இருக்கும் அருந்ததிய சமுதாயத்தினர்க்கான தனி ஒதுக்கீட்டிற்கு தடைக்கற்களைப் போட எண்ணாமல் ஜெயலலிதா போன்றவர்கள் தள்ளி நிற்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

1-12-2008

3349. "எத்தனைக் காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?"

உடன்பிறப்பே,

"அருந்ததி" என்பது ஆதி காலத்திலிருந்து நமது நாட்டில் பழைமையாகக் குறிப்பிடப்படுகிற ஓர் நட்சத்திரம் - புராணிகர்கள் அருந்ததியைக் கற்புக்கரசி என்றும் - வசிஷ்ட முனிவரின் வாழ்க்கைத் துணைவியென்றும் குறிப்பிட்டு; அவளது உயர்வை உணர்த்தும் வண்ணம் வானத்தில் ஒரு நட்சத்திரமாக வைத்துக் கொண்டாடுகிற பழக்கம் கொண்டவராயிருந்தனர்.

இன்றைக்கும் அதே நம்பிக்கையுடன், திருமணங்களில் கூட "அம்மி மிதித்து அருந்ததி பார்த்து" என்ற பழமொழியைப் பயன்படுத்துகிற மக்களை நம்மால் பார்க்க முடிகிறது. ஒரு தெய்வீகப் பெண் என்று "அருந்ததி" புகழப்பட்டாலும் கூட அப்பெயர் கொண்ட ஒரு சமுதாயத்தினர்; இந்த நாட்டில் எவ்வளவு இழிவுடன் நடத்தப்படுகிறார்கள் - எவ்வளவு கேவலமான வாழ்க்கை அவர்களின் தலையெழுத்து என ஆக்கப்பட்டுள்ளது - அந்தோ; கொடுமையினும் கொடுமை மனித மலத்தை மனிதன் சுமக்கும் கொடுமை - அந்த "அருந்ததி" சமுதாயத் தின் கட்டாயச் சேவைகளில் ஒன்றாக்கப்பட்டு விட்டதாகும் - இழிவு நிறைந்த அந்தக் கொடுமை அகற்றப்பட வேண்டுமேயென்று நான் திடமாக முடிவெடுத்துத்தான்; அருந்ததி மக்களுக்கு இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு வழங்க வேண்டுமானால் சட்டப் பிரச்சினைகள் எப்படியிருக்கின்றன என்பதை அறிந்து ஆய்வு செய்திட; ஒரு சட்ட வல்லுநரை நியமிக்க முடிவெடுத்து; அதுபற்றி முதலில் விவாதித்திட தமிழக அரசின் சார்பில் ஓர் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை 12-3-2008 அன்றையதினம் அரசு தலைமைச் செயலகத்தில் கூட்டினேன்.

அந்தக் கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. வும் அழைக்கப்பட்டு, அக்கட்சியின் சார்பில் திரு. டி. ஜெயக்குமார்

அவர்களும், திரு. எஸ். அன்பழகன் அவர்களும் கலந்து கொண்டு; விவாதத் திலும் பங்கேற்றனர்.

மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் திரு. டி. சுதர்சனம், திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்;

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு. கோ.க. மணி, திருமதி பால சுந்தரி;

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு என். வரதராஜன், திரு. பி. சம்பத்;

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. தா. பாண்டியன், திரு. கோ. பழனிச்சாமி;

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (வைகோ) சார்பில் திரு. இளவரசன், திரு. கே.எஸ். ராதாகிருஷ்ணன்;

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (எல்.ஜி) சார்பில் திரு. எல். கணேசன், திரு. செஞ்சி இராமச்சந்திரன் ;

தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் சார்பில் திரு. பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன், திரு. பார்த்தசாரதி;

தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் திரு. கே.எம். காதர் மொய்தீன், டாக்டர் திரு. எஸ்.ஏ. சையது சதார்;

விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் திரு. தொல். திருமாவளவன், திரு. ரவிக்குமார்;

பாரதீய ஜனதா கட்சி சார்பில் திரு. ஜி. குமாரவேலு, திரு. சுப. நாகராஜன்;

திராவிடர் கழகம் சார்பில் திரு. கி. வீரமணி, திரு. கலி. பூங்குன்றன்;

புரட்சி பாரதம் சார்பில் திரு. பூவை ஜெகன் மூர்த்தி, திரு. கரு. சிவஞானம்;

தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் சார்பில் திரு. எஸ். ஹைதர் அலி, திரு. எம். தமீம் அன்சாரி;

தமிழ் மாநில தேசிய லீக் சார்பில் திரு. திருப்பூர் அல்தாப், திரு. சம்சுதீன்;

எம்.ஜி.ஆர். கழகம் சார்பில் திரு. இராம. வீரப்பன், திரு. வி. ராஜ்குமார்;

அகில இந்திய பார்வார்டு பிளாக் சார்பில் திரு. பி.வி. கதிரவன், திரு. வி.பி. ராஜா;

உழவர் உழைப்பாளர் கட்சி சார்பில் திரு. கு. செல்லமுத்து, திரு. திருநாவுக்கரசு;

புதிய தமிழகம் சார்பில் டாக்டர் திரு. க. கிருஷ்ணசாமி, திரு. வி.கே. அய்யர்;

இந்திய சமூக நீதி இயக்கம் சார்பில் பேராயர் திரு. எஸ்றா சற்குணம், திரு. எஸ். பால் அசோக்;

தமிழ்நாடு மாநில விவசாயிகள் தொழிலாளர் கட்சி சார்பில் திரு. பொன். குமார், திரு. என். சுப்பிரமணி;

இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் திரு. விஜய டி. ராஜேந்தர்;

ஆதித் தமிழர் பேரவை சார்பில் திரு. ஆர். அதியமான் (எ) சுப்பராவ், திரு. இளவேனில்;

அருந்ததி மக்கள் கட்சி சார்பில் வலசை திரு. ர. ரவிச்சந்திரன், திரு. மு. செங்குட்டுவன்;

ஆதித் தமிழர் ஜனநாயக முன்னணி சார்பில் திரு. எஸ்.டி. கல்யாண சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் நீண்ட நேரக் கலந்துரையாடலுக்குப் பிறகு, பின்வரும் முடிவு எடுக்கப்பட்டது.

“சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் அடித்தளத்திலே உள்ள ஆதி திராவிட மக்களுக்குள்ளேயே அருந்ததியர் எனப்படுவோர் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருப்பதால், அவர்களைக் கைதூக்கிவிடும் முயற்சிகளில் ஒன்றாக, தற்போது ஆதி திராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் இவர்களுக்கு தனி உள்ஒதுக்கீடு வழங்கிடவும்;

அருந்ததியர் எனப்படுவோருள் எந்தெந்தப் பிரிவினரை உள்ளடக்குவ தென்றும், அந்த மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் இட ஒதுக்கீட்டின் அளவைப் பற்றியும் விரிவான முறையில் விசாரித்தறிந்து அண்மையில் மத்திய அமைச்சரவையில்

எடுத்த முடிவின்படி அமைந்துள்ள கமிஷனின் நிலையையும் ஆராய்ந்து, தேவைப்பட்டால் அவர்களையும் கலந்து கொண்டு, அரசுக்குப் பரிந்துரை செய்திட உயர்நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதி அரசரைக் கொண்ட ஒரு நபர் குழு அமைப்பதென்றும்;

அந்தக் குழுவின் அறிக்கையை ஆறு மாத காலத்திற்குள் பெற்று அதை நடைமுறைப்படுத்துவது பற்றி அரசு முடிவெடுப்பதென்றும் அனைத்து அரசியல் கட்சிகளின் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.”

இந்த முடிவுக்கேற்ப - அருந்ததி சமுதாயத்தினருக்கு இட ஒதுக்கீட்டில் மூன்று விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்குவதெனவும் - அதனை நடைமுறைப்படுத்த நீதியரசர் எம்.எஸ். சனார்த்தனம் அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழுவை அமைப்பதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஏதாவது திருத்தம் சொல்ல வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் ஜெயலலிதா நினைத்திருந்தால்; அந்தத் திருத்தத்தை எழுதி அனுப்பி - அல்லது ஒரு நபர் குழுவிற்கு தங்கள் கட்சியின் கருத்தினை அனுப்பி - அந்தத் தீர்மானத்துக்கு வலிமை சேர்த்திருக்கலாம். ஆனால் அம்மையார் (அ.தி.மு.க.) உள்ளிட்ட அவரது கட்சித் தலைவர்களேயிருந்து நிறைவேற்றிய தீர்மானத்துக்கு எதிராக; எவ்வளவு துடுக்கான வார்த்தைகளை என் மீது தொடுத்திருக்கிறார் பார்த்தாயா?

“2006ஆம் ஆண்டு கருணாநிதி முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தி.மு.க. அங்கம் வகித்த மத்திய அரசிடம் போராடி பெற்றுக் கொடுத்திருக்கலாம் அல்லவா? எனவே இது அரசியல் மோசடி” என்று ஜெயலலிதா அறிக்கையிலே கேட்டிருக்கிறார். 1991 முதல் 1996 வரையிலும், 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரையிலும் ஜெயலலிதாதானே முதலமைச்சர். அப்போது ஏன் அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீட்டினை வழங்கிட ஒரு குழுவினை ஜெயலலிதா அமைக்கவில்லை? இப்போது நான் செய்த பணியினைக் கூட தான் செய்யாமல் இருந்து விட்டு இப்போது நாம் செய்கின்ற பணிக்கு ஜெயலலிதா குந்தகம் கூறினால், அதனை நம்புவதற்கு அருந்ததிய சமுதாயம் தயாராக இல்லை.

இன்னும் சொல்லப் போனால் 23-1-2008 அன்றே கழக

அரசின் சார்பில் வைக்கப்பட்ட ஆளுநர் உரையின் பாரா 54லும், 20-3-2008 அன்று படிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையின் பாரா 128லும் அருந்ததியருக்கு உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம் என்பதைப் படித்தாலே, அருந்ததிய சமுதாயத்திடம் தி.மு.க. விற்கு எந்த அளவிற்கு உண்மையான பற்று உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஓரம் ஒதுக்கப்பட்டுக் கிடக்கும் ஒரு பெரும் சமுதாயத்தைக் கை தூக்கி விடவும்; நீயும் மனிதன்தான் மண்ணன்று என்று விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சபதம் செய்து கொண்டு பாடுபடுகிற ஓர் ஆட்சியின் தலைமைத் தொண்டனாக ஓடியாடிப் பணியாற்றும் என்னைப் பார்த்து; "நான்; அருந்ததி சமுதாயத்தை ஏமாற்றுகிறேன்" என்று அந்தப் பரிதாபத்திற்குரிய சமுதாயத்தை ஏமாற்ற நினைக்கிறாரே ஜெயலலிதா - இதுதான் எதிர்க்கட்சிக்குரிய இலக்கணமா? - ஆளுங்கட்சியை வழி நடத்தும் ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு இது தான் எடுத்துக்காட்டா?

பழைய புராணப்படி; ஆகாயத்தில் "அருந்ததி நட்சத்திரம்" இருப்பது உண்மையானால் - அது ஜெயலலிதாவைப் பார்த்து கண் சிமிட்டிக் கேட்கும்;

"அம்மாடியோவ்! அருந்ததி பேரைச் சொல்லி கருணாநிதி அந்தச் சமுதாயத்தை ஏமாற்றுகிறார் நம்பாதீர்!" என்று நேற்றுத்தான் சொன்னீர்! இன்றைக்கு என்னமோ; " நானே நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அந்த அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை சட்டமாக்குகிறேன்" என்கிறீர் - ஓகோ; அருந்ததிய மக்களை ஜெயலலிதாதான் ஏமாற்ற வேண்டும் என்று அறுதியிட்டு உறுதி கூறுகிறீரா? - காதில் விழுகிறதா அம்மா; அதோ அந்தப் பாடல்; கேட்கிறதா?

"எத்தனைக் காலம்தான்
ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?"

அன்புள்ள,
மு.க.
3-12-2008

3350. நெடுமாறன் இப்படித் தடுமாறலாமா?

உடன் பிறப்பே,

மதுரையில் தமிழ் அறிஞர்களில் ஒருவரான திரு. பழனியப்பன் அவர்கள் நல்ல பண்பாளரும் கூட! தமிழ் இலக்கியம், கலை ஆகியவற்றில் ஈடுபாடும், ஆர்வமும் கொண்டவர் - அவருடைய அன்பு மகன்தான் நண்பர் பழ.நெடுமாறன். திராவிட இயக்கம் - தேசிய இயக்கம் - அந்த இயக்கங்களின் தலைமையுடன் பிணக்கு கொள்ளும் போதெல்லாம் புதிய புதிய பெயர்களில் இயக்கங்கள் தொடங்கியும் - புதிய கொடிகளைக் கையில் ஏந்தியும்; அவர் அரசியல் பயணம் அவ்வப்போது மேற்கொண்ட காரணத்தால்; எல்லாப் பகுதிகளிலும் - திசைகளிலும் நண்பர்களைப் பெற்றிடும் வாய்ப்பையும் பெற்றுள்ளார். என்னைப் பொறுத்தவரையில் நான் கழகத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும்போதும் - ஆட்சிப் பொறுப்பு ஏற்றிடும் நிலையிலும் - நான் போகுமிடமெல்லாம் கறுப்புக் கொடி காட்டும் போராட்டங்களை நடத்தி வந்தார். இவற்றுக்கிடையே அவரும் நானும் இணைந்து தமிழுக்காக - இனத்திற்காக - இலங்கைப் பிரச்சினைக்காக நடத்திய அறப் போராட்டங்களும் உண்டு. அவரைப் பாராட்டி நான் பல மேடைகளில் பேசியதும் உண்டு. முரசொலி கடிதங்களிலும் எழுதி மகிழ்ந்ததும் உண்டு. "பொடா" எனும் எதேச்சாதிகார சட்டத்தால் கொட்டப்பட்டு - திரு.வைகோ; அவர்கள் ஜெயலலிதா ஆட்சியில் வேலூர் சிறையில் ஓராண்டு காலம் பூட்டப்பட்டுக் கிடந்தபோது - இவரையும் அந்தப் "பொடா" தீண்டி அலைக்கழித்ததைக் கண்டித்து இவரது விடுதலை கோரிப் போரிட்டவர்களில் நான் முதன்மையானவனாகவும் இருந்துள்ளேன். இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்காக மதுரையில் வாஜ்பாய், என்.டி.ராமராவ் போன்ற அனைத்திந்திய தலைவர்களை அழைத்து நடைபெற்ற "டெசோ" மாநாட்டை நடத்தியவர்களில் நானும், பேராசிரியரும், நெடுமாறனும், தமிழர் தலைவர் வீரமணியும் முக்கிய நிர்வாகிகளாக இருந்தோம் என்பதை வரலாறு மறக்காது, மறக்க முடியாது.

ஆனால் அவருடைய இயல்பு; மாற்றிக் கொள்ள முடியாத ஒன்றாகிவிட்ட காரணத்தினால் இடம் மாறும் இலட்சியவாதியாகவே இருந்து விட்டார். எனக்குள்ள கவலையெல்லாம்; அவர் இப்படி இடம் மாறிக் கொண்டே இலட்சியத்தையும் பந்தாடிக் கொண்டிருக்கிறாரே என்பதால் மட்டுமல்ல - அப்படி "தாவும் அரசியலை'' அவரால் தவிர்க்க முடியாது என்பது உறுதியாகிவிட்ட போதிலும் - உண்மை வரலாறு களையும் - வரலாற்றுச் செய்திகளையும் - மறைப்பதற்குப் படாத பாடுபட்டு - அவருக்கே உரியதாகி விட்ட அசல் பொய்களை "அச்சு'' வாகனங்களில் ஏற்றி அவற்றை உலவ விடுகிறாரே; பண்பாளர் பழனியப்பனாரின் திருமகனாரின் இத்தகைய "திருவிளையாடல்"; இப்படித் "தெரு விளையாடல்'' என ஆகலாமா என்பதே எனக்குள்ள வருத்தமாகும்.

1969 ஆம் ஆண்டு - அண்ணா அவர்களையடுத்து நான் தமிழக முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட நிலையில்; டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டபோது; வங்கிகளை தேசிய மயமாக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறினேன்.

இந்தச் செய்தியை நான் சென்னையில் 25.11.2008 அன்று மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு மணிமேகலை விருது வழங்கிய நேரத்தில்; - அந்த மகளிர் குழுவினருக்கு நிதி உதவி செய்கின்ற பணியிலே தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஒத்துழைப்பு நல்கி வருவதை யொட்டி - அந்த விழாவில் அந்த வங்கிகளின் தலைவர்கள் எல்லாம் கலந்து கொண்ட காரணத்தினால் - வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதால் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கின்றன என்பதைக் கூற வந்தபோது - அவ்வாறு வங்கிகளை தேசியமயமாக்க வேண்டுமென்று முதல் அமைச்சர்கள் மாநாட்டில் நான் பேசியதை எடுத்துக் கூறினேன். அதனையேற்று 14 வங்கிகளை தேசிய மயமாக்கிய காரணத்திற்காக பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரை சென்னைக்கு அழைத்து - ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் - 14 பொருட்களைப் பரிசாக அவருக்கு வழங்கினேன் என்பதையும் அந்த விழாவிலே கூறினேன்.

இவ்வாறு நான் கூறியதை நண்பர் நெடுமாறன் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வார ஏட்டாளர்

ஒருவரைப் பிடித்து, பேட்டி என்ற பெயரால் நான் கூறியது வரலாற்றுப் புரட்டல், வரலாற்றைத் திரிக்கும் கருணாநிதி என் றெல்லாம் தன் வயிற்றெரிச்சலையும், காழ்ப் புணர்ச்சியையும் கொட்டித் தீர்த்திருக்கிறார். நான் கூறியதில் எதைத் திரித்துக் கூறியிருக்கிறேன்? நான் முதலமைச்சர்கள் மாநாட்டில் வங்கிகளைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று சொன்னதை இல்லை என்று மறுக்கிறாரா? அல்லது இந்திரா காந்தி வங்கிகளைத் தேசிய மயமாக்கி ஆணை பிறப்பித்தார் என்பதை மறுக்கிறாரா? வங்கிகளை தேசிய மயமாக்க பெருந்தலைவர் காமராஜரைப் போன்ற வேறு பலரும் குரல் கொடுத்தார்கள் என்று சொல்லியிருக்கிறார். அதை நான் இல்லை என்று மறுக்கவில்லையே? பல பேர் கேட்டிருக்கலாம். ஏன் அதற்கு முன்பும் கேட்டிருக்கலாம். நடந்ததைச் சொல்லியிருப்பதில் அவருக்கு என்ன குறைபாடு? நான் எந்த வரலாற்றைத் திரித்துக் கூறிவிட்டேன்?

18.4.1969 அன்று டெல்லியிலே மாநில முதலமைச்சர்கள் எல்லாம் கலந்து கொள்ளும் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டம் நடைபெற்றது. பழைய தமிழ், ஆங்கில ஏடுகளைப் புரட்டிப் பார்த்தாலே அது தெரியும். அந்தக் கூட்டத்தில் நான் ஆற்றிய உரையும் அரசாங்க கோப்புகளிலே உள்ளது. அதையும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டது பற்றியும், அதிலே பேசியது பற்றியும், என்ன பேசினேன் என்பது பற்றியும் 1986ஆம் ஆண்டிலே நான் எழுதிய "நெஞ்சுக்கு நீதி" நூலின் இரண்டாம் பாகத்திலேயே விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தச் செய்தி அப்போதே நூலில் பதிவாகி உள்ளது. 25ஆம் தேதி அன்று நடைபெற்ற மணிமேகலை விருது வழங்கிடும் விழாவில் புதிதாக திடீரென்று இந்தக் கருத்தைப் பேசிடவில்லை. "நெஞ்சுக்கு நீதி" புத்தகத்தில் பக்கம் 108இல் "நான் ஆற்றிய உரையில் தொழில் முன்னேற்றத்துக்கு சம வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்றும், பொறுப்புக்கள் பகிர்ந் தளிக்கப்பட்டால் மத்திய மாநில உறவு வளரும் என்றும், வங்கிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்றும், பொதுத் துறை; தனியார் துறையைவிட அதிக முதலீடு கொண்டிருக்க வேண்டுமென்றும், விரிவாக எடுத்துரைத்தேன். வங்கிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்று அன்றைய கூட்டத்தில் முதல் குரல் கொடுத்தது நான்தான். அதை எதிர்த்துக் காரசாரமாகப்

பேசியது துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய்தான்" என்று எழுதப் பட்டுள்ளது. நெடுமாறன் இன்று வேண்டுமானாலும் அந்த நூலில் படித்துக் கொள்ளலாம். அந்தச் செய்தி உண்மைக்கு மாறானதாக இருந்திருந்தால், இத்தனை ஆண்டுகளில் யாராவது அந்தக் கருத்து தவறு என்று சொல்லியிருக்க மாட்டார்களா?

புத்தகத்தில் எழுதியது கூட தவறு என்று நெடுமாறன் வாதிடுவாரேயானால் - "இந்து" ஆங்கில நாளிதழை அவர் நம்புவார் என்று கருதுகிறேன். 1969ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் தேதி வெளிவந்த "இந்து" ஆங்கில நாளிதழை வாங்கிப் படித்துப் பார்த்துக் கொள்ளட்டும். அந்தச் செய்திக்கு தலைப்பே "Tamil Nadu C.M. Urges Bank Nationalisation" v‹gJjh‹. mªj jiy¥ãš vGJ«nghJ, "Mr. Karunanidhi also called for the Nationalisation of Banks. This demand appears to have caused surprise among some of the Senior Officials of the Union Government" (வங்கிகளை தேசியமயமாக்கிட வேண்டுமென்று திரு. கருணாநிதி கேட்டுக் கொண்டார். இந்தக் கோரிக்கை மத்திய அரசின் மூத்த அதிகாரிகளில் சிலருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது) என்று எழுதியுள்ளது. நான்தான் வரலாற்றை திசை திருப்புகிறேன் என்றால், "இந்து" நாளிதழுமா வரலாற்றைத் திசை திருப்பியது என்று நெடுமாறன் கூறுகிறார்?

உண்மைச் செய்தி ஒன்றை - வரலாற்றில் இடம் பெற்ற செய்தியை - நான் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக நடைபெற்ற நிகழ்ச்சியிலே எடுத்துக் கூறியதற்காக ஒரு மூத்த அரசியல்வாதி இந்த அளவிற்கு பொறாமை கொண்டு ஒரு பேட்டியை கொடுக்கிறார் என்றால் - தமிழ்நாட்டு மக்கள் அவருடைய தரத்தையும் - கடந்த கால ஆட்சியிலே அவர் சிறையிலே இருந்தபோது அவரை வெளியே கொண்டு வருவதற்காக ஆளுங்கட்சியை எதிர்த்து வாதிட்ட என்னுடைய தரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நான் அந்தக் கூட்டத்தில் வைத்த கோரிக்கையை பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அப்போதே அந்த மேடையிலேயே ஏற்றுக் கொண்டு அறிவித்தார் என்று கூட நான் கூறிக் கொள்ளவில்லை. நெஞ்சுக்கு நீதி (இரண்டாம் பாகம்) பக்கம் 162 இல் எழுதும் போது, "அந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அப்போது மௌனமாக இருந்தார்கள்

என்றாலும் சில மாதங்களுக்குப் பிறகு அவருடைய தலைமையில் கூடிய அமைச்சரவையில் வங்கிகளை தேசியமயமாக்கும் முற்போக்குக் கருத்து அவசரச் சட்டமாக வெளியிடப்பட முடிவெடுக்கப்பட்டது. எனவே அந்த அவசரச் சட்டத்தை நான் வரவேற்று இதுபோன்ற முற்போக்குக் கொள்கைகள் மத்திய அரசால் நிறைவேற்றப்படும்பொழுது அதன் வெற்றிக்கு தமிழக அரசும் தி.மு.கழகமும் என்றென்றும் துணை நிற்கும் என்று அறிக்கை விடுத்தேன்" என்றும் எழுதியிருக்கிறேன்.

நெடுமாறன் போன்ற தமிழகத்திலே உள்ள மூத்த அரசியல்வாதிகள் - விவரம் புரிந்தவர்கள் - மக்களுக்கு உதவிகரமான திட்டங்களைச் சொல்வதில் உதவியாக இருக்க வேண்டுமே தவிர - எப்போதும் குதர்க்கவாதியாக இருந்து கொண்டு, ஏதாவது குற்றம் குறை சொல்ல வேண்டும் என்பதிலேயே அக்கறை காட்டுவது; பழனியப்பன் என்ற பெயரைச் சுருக்கி "பழ" என்று குறிப்பிட்டிருப்பதற்கு ஏற்புடையதாக ஆகாது என்பதை மட்டும் நண்பர் நெடுமாறன் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எனவே இப்படித் தடுமாறுவது நெடுமாறனுக்கு அழகல்ல!

அன்புள்ள,

மு.க.

8-12-2008

3351. அண்ணா சொன்ன அமுத மொழி!

உடன்பிறப்பே,

கலையில், இலக்கியத்தில், நாட்டுப் பற்றுக்கான தியாகத்தில் ஈடுபட்டு மறைந்து விட்டவர் குடும்பங்களின் வழித் தோன்றல் களைப் பெருமைப்படுத்துவதும்; அவர்களின் குடும்பம் வாடாமல் தழைத்திடச் செய்வதும் கடமையெனக் கொண்டு; ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், இல்லா விட்டாலும் ஆவன செய்து வருகிறேன் என்பதை நீயும் அறிவாய், இந்த நாடும் அறியும். இந்த அரும்பணியை மேற்கொண்டுள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்பு களாக அமைந்தவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். திராவிட இயக்கத்தில் இளமைக் காலந் தொட்டே என்னை ஒப்படைத்துக் கொண்டவன் என்றாலும்; பார்ப்பன சமுதாயத்தில் பண்பார்ந்த மேதைகளை நான் பாராட்டிப் போற்றிடத் தவறியதில்லை.

மகாகவி பாரதி தொடங்கி, மூதறிஞர் ராஜாஜி, வ.வே.சு. அய்யர், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், உ.வே.சா. கல்கி, ஏ.எஸ்.கே. அய்யங்கார், வெ. சாமிநாத சர்மா, ஆசிரியர் சாவி, நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தி போன்று நீண்ட பட்டியல் உண்டு. எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டை விரித்துரைக்க வேண்டுமென்றால் - "அக்கிரகாரத்து அதிசய மனிதர்" என்று "வ.ரா." அவர்களைச் சிறப்பித்து எழுத்தோவியம் தீட்டிய அறிஞர் அண்ணாவின் தம்பி என்ற முறையில் "வ.ரா." மறைந்த பிறகும் - எழுத்துத் துறை பிதாமகன் எனப்படும் "சாவி" அவர்களின் மூலம் அந்தக் குடும்பத்துக்கு சிறப்பு செய்தவனாவேன், நான்! 1990ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, வ.ரா. அவர்களின் துணைவியார் புவனேஸ்வரி அம்மையாரை தலைமைச் செயலகத்திற்கே அழைத்து வரச் செய்து, மாதந் தோறும் அவருக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்பதற்கான ஆணையினை அவர்களிடம் ஒப்படைத்தேன்.

17-8-1990 அன்று கலைவாணர் அரங்கில் வ.ரா. அவர்களின் நூற்றாண்டு விழாவினை அரசு சார்பில் கொண்டாடினோம்.

திருக்குறள் தந்த அய்யன் வள்ளுவனின் திருவுருவத்தைப் பலரும் பலவிதமாகச் சித்திரித்த நிலையில் ஒரே மாதிரி; அய்யனின் உருவத்தை வரைந்தளிக்க வேண்டுமென்ற பெருந் தமிழறிஞர்களின் கருத்தையேற்று; அனைவரும் ஒப்பும் வகையில் அய்யன் திருவள்ளுவர் உருவத்தை அழகுற தீட்டித் தந்து, அதனை அரசின் வாயிலாகப் பிரசுரிக்கும் வகையையும் வழங்கிய ஓவியப் பெருமகனார் வேணுகோபால் சர்மா அவர்களைப் பெருமைப்படுத்தியதுடன், அவரது குடும்பத்தினர் வாழ்வாதாரத்திற்கும் நிதியை வழங்கிய பெருமை நமது அரசுக்கு உண்டு. 17-2-1985 அன்று நான் எழுதிய "குறளோவியம்" நூல் வெளியீட்டு விழாவிற்கு வேணுகோபால் சர்மா அவர்களை தேடிப் பிடித்து அழைத்து வரச் செய்து அந்த நூல் எழுதியதன் மூலம் எனக்குக் கிடைத்த தொகையில் ரூபாய் பத்தாயிரத்தை என் சொந்த சார்பில் - நிதியாக அல்ல - காணிக்கையாக வழங்குவதாகக் கூறி அளித்தேன்.

பின்னர் 1989ஆம் ஆண்டு வேணுகோபால் சர்மா நோய்வாய்ப்பட்டுள்ளார் என்று அவருடைய புதல்வர் 24-5-89 அன்று என்னைச் சந்தித்துக் கூறியதும் உடனடியாக பத்தாயிரம் ரூபாய் வழங்கியதுடன், 7-4-1990 அன்று அவருடைய குடும்பத்தாரைத் தலைமைச் செயலகத்திற்கு அழைத்து அரசின் சார்பில் மூன்று இலட்சம் ரூபாய் நிதியினை வழங்கி மகிழ்ந்தேன்.

இப்போது கூட நூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழுக்கு "செம்மொழி"த் தகுதியை வழங்கிடுக எனக் கோரிக்கை வைத்த "பரிதிமாற்கலைஞர்" என்ற சூரிய நாராயண சாஸ்திரிகள் வாழ்ந்த வீட்டைப் புதுப்பித்து, வாழும் அவரது வழித் தோன்றல்களின் எதிர்காலத்துக்கான உதவிகளைச் செய்து, அவரது உற்றார், உறவினர், பேரன், பேத்திகள் நிரம்பிய பெருங் குடும்பத்தையும் சிறப்பித்தவன் நான்!

நான் முன்னின்று சிறப்பித்த - அன்பு பொழிந்த குடும்பங்கள்; பார்ப்பனச் சமுதாயக் குடும்பங்கள் மட்டுமல்ல; அரவணைப்பும், ஆதரவும் நல்கிய - பெருஞ்சித்திரனார் குடும்பங்கள் போலப் பலப்பல உண்டு. இளமையிலேயே நட்பினால் பிணைக்கப்பட்டு;

நடுவில் அந்த நட்புக்கு இடைவேளை ஏற்பட்டு; கழகத்தின் கலையுலகக் காவலராக இருந்து; பின்னர் பெருந்தலைவர் காமராஜரின் தளபதியாக ஆன பிறகும் "தம்பீ; நீ எங்கிருந்தாலும் வாழ்க!" என்று அண்ணா அவர்களால் வாழ்த்தப் பெற்ற நடிகர் திலகம் சிவாஜி மட்டும்; எங்கிருந்தாலும் எப்போதும் உன் இதயத்தில் இருப்பேன் என்று கூறி இப்போதும் என் இதயத்தில் இருப்போரில் ஒருவர் அல்லவா; அதனால் எங்களைப் பிரித்த கட்சி இடைவெளிகளைக் கடந்து; நிலைத்து விட்ட எங்கள் நட்பின் அடையாளமாகத்தான் இதோ அந்தக்குடும்பம் எனைச் சூழ்ந்து குலவிடும் காட்சியை இந்த நிழற்படம் விளக்குகிறது. மணவிழா அழைப்பு வழங்கிட செல்வன் பிரபுவும் - பிரபுவின் பேரக் குழந்தை - கணேசும்; குடும்பத்துச் செல்வங்களும் கூடி நிற்கும் இக் காட்சி; நல்ல குடும்பம்; பல்கலைக் கழகம் என்ற பாவேந்தரின் பாட்டுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறதல்லவா!

தமிழகக் கலைக் குடும்பத்தில் எனக்கு எத்தனை எத்தனை நண்பர்கள் - எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள் - எத்தனை எத்தனை வெற்றிகள், தோல்விகள், நட்பு - பகையெனும் நானாவித நிலைகள் - அனைத்தையும் சந்தித்து கலைக் குடும்பம்; ஒன்றையொன்றை வாழ்த்தி மகிழ்கிறதல்லவா?

"மறப்போம் - மன்னிப்போம்" அரசியலில் மட்டுமல்ல; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போதித்த அண்ணா அவர்கள்; இதனையும் மனித நேயம் வளர்க்கும் இரண்டு மருந்து மாத்திரைகளாக நமக்கு வழங்கியுள்ளார் அல்லவா? அதன் வலிமை தான் இது!

மன்னித்து மறக்க வேண்டியது; "தீது" எனும் ஒன்றைத்தான் என்பதை நான் தெரிந்து தெளிந்து நடப்பது போல்; உடன்பிறப்பே; நீயும் நடப்பாய் என்று நம்புகிறேன் - நடக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கிடையே ஒரே நாளில்; 6-12-2008 சனிக்கிழமை காலையில்; "தாத்தா எனக்கு பிறந்த நாள் இன்று, வாழ்த்து என்னை"யென்று அண்ணாவின் பேரன் மலர்வண்ணன் வரவே; என் மனத்தில் பன்னீர் தெளித்தது போன்ற உணர்வு - மழலையாக இருந்தபோது "மலர் - மலர்" என்று அண்ணா அன்பு பொங்கிட கொஞ்சி மகிழ்வாரே; அந்த மலர் வண்ணன் மனைவியுடன் - இந்தத் தாத்தாவிடம் வாழ்த்து பெற வந்தபோதும் - சிவாஜி

குடும்பத்தினர், கொள்ளு பேரன் பேத்தியென மனமகிழ வந்து மணவிழா அழைப்பிதழ் தந்த போதும்;

"நமது" குடும்பத்தில் உள்ள பேரன் பேத்திகளையும் - கொள்ளுப் பேரன் பேத்திகளையும் - சிதற விடாமல் குடும்பம் செழிப்புற்று தழைக்குமென்று பெரியோர் சொன்ன சொல் பலித்ததையும் எண்ணி மகிழ்கிறேன்.

இக்கடிதத்தில் முதல் பகுதியில் குறிப்பிட்டுள்ள ஆன்றோர், சான்றோர், குடும்பங்களை ஆதரித்துப் போற்றியதன் பயன் இதுவென எண்ணி பெருங்குடும்பமாம் நமது கழகத்தின், உன் போன்ற உடன்பிறப்புகள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

9-12-2008

3352. உன்னை நம்பித்தான் உடன்பிறப்பே!

உடன்பிறப்பே,

தில்லி, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், மிசோரம் ஆகிய ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் கண்டு; நாம் மட்டுமல்ல; இந்த நாடே ஒரு நம்பிக்கை கலந்த மகிழ்ச்சி கொண்டுள்ளது. "அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லை" என்கிற அளவுக்கு ஐந்து மாநிலங்களில்; இரண்டு மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றும், தக்க வைத்துக் கொண்டும் - மற்ற மூன்று மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி வெற்றி வாகை சூடியும்; மக்களிடம் மதச் சார்பற்ற நிலைப்பாடும், மத நல்லிணக்கப் பண்பாடும் எத்தகைய உறுதிமிக்கதாய் விளங்கி வருகிறது என்பதை எடுத்துக்காட்டி நம்மைப் போன்ற இலட்சியவாதிகளை; இன்னும் இன்னும் எழுச்சி கொள்ள வைக்கிறது!

"மதவாதி, பிற்போக்குவாதி, புராணிகர், பழைமைவாதி - இவர்களையெல்லாம் எமக்குப் பிடிக்காது; மூடநம்பிக்கை முடை நாற்றத்தைப் போக்கி சமுதாயத்தை முல்லை மலர்த் தோட்டமாக்குவதே எமது குறிக்கோள்" என்று குரலெழுப்பியோர்; இன்று ஆரூடம், சோதிடம், ஐதீகம் என்பனவற்றைச் சுற்றி அங்கப் பிரதட்சணம் செய்வோரின் 'அத்யந்த தோழர்'களாகி விட்டதை யெண்ணிப் பெருமூச்செறியும்போது; அவர்களுக்கும் ஓர் இனிய எச்சரிக்கையாக இந்தத் தேர்தல் முடிவு முகிழ்த்திருக்கிறது என்பதை நம்மால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

எத்தனை எதிர்ப்புகள் - ஏகடியங்கள் - வசைவுகள் - சாபங்கள் - சாட்டையடிச் சொல்லெடுத்துத் தொடுத்த கண்டனக் கணைகள் - கொடியேந்தியவர்கள் கொட்டிய கொடூர முழக்கங்கள் மட்டுமல்ல; உலகத்தின் முன்னேயே காட்டிக் கொடுக்கும் கயமைச் செயல்கள் - கடுகை மலையாக்கி கடும் எதிர்ப்பு காட்டி கவிழ்த்துவிடச் செய்த சூழ்ச்சிகள் - இவையனைத்தையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு; கடமையை ஆற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து;

அனைத்து முனைகளிலும் அன்னைத் திருநாடாம் - இந்திய நாட்டை ஒளிமிக்கதாக விளங்கச் செய்திட;

அனுபவச் சுரங்கமாம்
பிரதமர் மன்மோகன் சிங்கும் -
ஆற்றலின் உறைவிடமாம்;
அன்பின் பிறப்பிடமாம்
திருமதி சோனியா காந்தியும்;

தொய்வில்லாத் தொண்டு புரிந்து; சர விளக்குகளாக ஏற்றி வைத்த சாதனைகளுக்குக் கிடைத்த பரிசுதான் இந்த "ஐந்துக்கு மூன்று" என்ற வெற்றி!

இதுபோன்ற தேர்தல் நேரங்களில் - இதுவரை ஆட்சியில் இருந்த கட்சி வெற்றி பெறாது- எதிர்க்கட்சிக்குத்தான் மக்கள் வாக்களிப்பார்கள் - என்ற எதிர்பார்ப்பு ஏடுகளிலே எழுதப்படும், மக்களும் அப்படியே கருதுவார்கள். கருத்துக் கணிப்புகளும் அவ்வாறே சொல்லப்படும். ஆனால் இந்தியாவின் தலைநகரிலேயே - டெல்லியில் ஆளுங்கட்சியாக இரண்டு முறை இருந்துவிட்ட காங்கிரஸ் கட்சி, மூன்றாவது முறையாக வெற்றி பெற்று, ஆளுங்கட்சி மீண்டும் பதவிக்கு வராது என்ற ஆரூடத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. டெல்லியில் பா.ஜ.க. விற்கு 36 இடங்கள் முதல் 42 இடங்கள் வரை கிடைக்குமென்று கருத்துக் கணிப்பு வெளியிட்டார்கள். அதையும் முறியடித்து, 23 இடங்களில் மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. எனவே ஆட்சிக்கு எதிரான கருத்து மக்களிடம் இல்லை என்பதை இந்தியாவின் தலைநகரிலேயே நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் ஐந்து மாநிலங்களில் தேர்தல் நடைபெற்றதாலும் - விரைவில் ஒருசில மாதங்களில் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் வரவிருப்பதாலும் - காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் நடைபெற்ற ஐந்து மாநிலங்களிலும் பெருமளவிற்கு இழப்பு ஏற்படும் என்ற கருத்தும் சொல்லப்பட்டு - அகில இந்திய அளவில் மூன்றாவது அணி பற்றி பெரிதாகப் பேசப்பட்டு - அந்த அணியிலே ஓட்டை உடைசல்களையெல்லாம் சேர்க்கின்ற பணியிலும் ஒரு சிலர் முற்பட்டனர். அவர்களின் எண்ணங்களிலும் மண் விழுகின்ற அளவிற்கு ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் வந்துள்ளன.

தேர்தல் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல் - மக்களுக்கு வேண்டிய வற்றை நாம் தொடர்ந்து செய்து வந்தால் - அவர்கள் நம்மைக் கை விடமாட்டார்கள் என்பதற்கு நடைபெற்று முடிந்த தேர்தல்கள் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

அடுத்து ஒருசில மாநிலங்களில் நடைபெற்ற தீவிரவாதச் செயல்களும், விலைவாசி உயர்வும் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான முடிவினைத்தான் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையோடு இருந்தவர்களும் உண்டு. ஆனால் இவற்றுக்கு ஆளுகின்ற அரசு மட்டுமே பொறுப்பு என்று கருதாமல் மக்கள் வாக்களித்துள்ளார்கள். இந்தக் கருத்தைத்தான் "தினமணி" ஏடு; தனது தலையங்கத்தை முடிக்கும்போது, "நல்லாட்சி தந்தால் அந்த அரசுக்கு மக்கள் தொடர்ந்து ஆதரவு தருவார்கள் என்பதை உணர்த்தி இருக்கும் தேர்தல் முடிவுகள் இவை. மக்களாட்சி இந்தியாவில் அழுத்தமாகவும், ஆக்க பூர்வமாகவும் செயல்படுவது மகிழ்ச்சியாக இருக்கிறது!" என்று குறிப்பிட்டுள்ளது.

"இந்து" நாளிதழ் தனது தலையங்கத்திலே குறிப்பிட்டிருப்பதைப் போல "What the elections underlined was that while "anti-incumbency" is a factor, it need not be a decisive factor, the Congress demonstrated this in Delhi and the BJP in Madhya Pradesh and Chhattisgarh" (ஆளும் அரசுக்கு எதிரான மக்களின் மனோபாவம் என்பது பொதுவாக ஒரு காரணி என்றாலுங்கூட, அதுவே முடிவான காரணியாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை என்பதைத்தான் இந்தத் தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதைத்தான் டெல்லியில் காங்கிரஸ் கட்சியும், மத்தியப் பிரதேசத்திலும், சத்தீஸ்கரிலும் பா.ஜ.க. வும் எடுத்துக்காட்டியிருக்கின்றன).

இதே கருத்தினைத்தான் "எக்ஸ்பிரஸ்" நாளேட்டில் நீரஜா சவுத்திரியின் கட்டுரையும், "தினமணி" தலையங்கமும் வெளிப் படுத்துகின்றன.

ராஜஸ்தான் மாநிலத்தில் இதற்கு மாறாக ஆளும் பா.ஜ.க.விற்கு எதிராக மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்றால், அங்கே 62 தொகுதிகளில் ஆளுங்கட்சியான பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு எதிராக, அந்தக் கட்சியைச் சேர்ந்த போட்டி வேட்பாளர்கள் போட்டி யிட்டார்கள் என்கிறபோது தோல்விக்கான மற்றொரு காரணத்தையும் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

"இவர்களாவது இனி இந்தியாவை ஆள்வதாவது" என்று மரத்தடி ஜோசியம் - மதகடி ஜோசியம் - பார்த்துக் கொண்டிருந்தவர்கள்; அவர்கள் குடித்த மனப்பால் அத்தனையும் மண்ணில் கொட்டி விடச் செய்ய - இந்த மகத்தான ஜனநாயக ரீதியான - மத வெறி மாய்த்த - மத நல்லிணக்கம் பூத்த - மாபெரும் வெற்றியாக; காங்கிரஸ் அணிக்கு இது அமைந்துள்ளது.

இங்கே தமிழகத்திலேகூட - நாம் நாளொரு சாதனையும், பொழுதொரு திட்டமுமாக அறிவித்து- அவற்றை கிடப்பிலே போட்டு விடாமல் நடைமுறைப்படுத்தி வருவதைப் பற்றி எந்தவிதமான குற்றமும் சொல்ல முடியாத நிலையில் - ஆளுங்கட்சிக்கு எதிராகத்தான் மக்களின் வாக்குகள் விழும் என்ற குருட்டு நம்பிக்கையில் எதிர்க்கட்சியின் தயவுக்காக துடியாய்த் துடிக்கிறார்கள். கூட்டணியில் இடத்தைப் பிடிப்பதில் யார் முந்தி என்று போட்டி போடுகிறார்கள். இந்த எதிர்க் கட்சி ஆளுங்கட்சியாக இருந்த போது ஆடிய ஆட்டமென்ன? பாடிய பாட்டென்ன? என்பதை அவர்கள் அனுபவப்பூர்வமாக உணர்ந்திருந்த போதிலும் மறந்து விடுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல பதிலைத் தரத் தக்க விதத்திலேதான் இந்த ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ளன.

இந்த வெற்றிப்படி ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை தில்லிப் பட்டணத்தில் பாராளுமன்றத்தில் அமர வைத்து; தொடர்ந்து நாட்டுப் பரிபாலனத்தை நடத்திடுக என்று ஆணையிடும் அளவுக்கு அமைந்திடத்தான் போகிறது! அதைத்தான் நேற்று செய்தியாளர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டபோதும் பாராளுமன்றத் தேர்தல் முடிந்து டெல்லியில் ஆட்சி அமைக்கப் போவது காங்கிரஸ் கட்சிதான் என்ற பதிலை அளித்தேன். 2009இல் டெல்லியிலே மட்டுமல்ல - 2011இல் நடைபெறவுள்ள தமிழகப் பொதுத் தேர்தலிலும் ஆளுங்கட்சி கூட்டணிதான் வெற்றி பெறும், ஆட்சி அமைக்கும். உன்னை நம்பித்தான் உடன்பிறப்பே; உன் அண்ணன் இந்த உறுதி அளிக்கிறேன்!

அன்புள்ள,

மு.க.

10-12-2008

3353. தியாகிகளைப் போற்றும் தீரர் முகாம் தி.மு.க.

உடன்பிறப்பே,

"தேசத் தியாகிகளைப் போற்றும் தீரர் முகாம் தி.மு.க." - இந்த வாசகத்தைத் தெம்பு குறையாமல் உச்சரிக்கும் உரிமை தி.மு. கழகத்திற்கும் - தி.மு.க. அரசுக்கும் உண்டு. இதில் தினையளவு குறை கூடச் சொல்ல திடீர் தேச பக்தர்களுக்குத் தகுதி கிடையாது. தி.மு. கழகத்தில் உள்ள தலைவர்கள், முன்னோடிகள், உன் போன்ற உடன் பிறப்புக்களாம் செயல் வீரர்கள் பலருக்கு இந்திய நாட்டு விடுதலைக்காக நடைபெற்ற நீண்ட காலத்துச் சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்கும் வயதும், வாய்ப்பும் இல்லாமற் போயினும்; அக்களத்தில் அரிமா நடை போட்டு அந்நிய சக்தியை எதிர்த்துப் போராடிய தந்தை பெரியாரின் வழித் தோன்றல்கள் என்பதிலே தனிப் பெருமை பெற்றவர்கள் நாம் என்பதில் எந்த ஐயப்பாடுமில்லையென்பேன்.

நமது கழகம் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பே; 1949-ல் தொடங்கப்பட்ட போதும் - அதற்கு முன்பும்; தாளமுத்து நடராசன் எனும் தமிழ் மொழி காத்திடத் தம் முயிர் தந்திட்ட தன்மானச் சிங்கங்கள் தொடங்கி; செந்தமிழ் காத்திடத் தீக்குளித்து மாண்ட; சிங்கத் தமிழன் சின்னச்சாமி உள்ளிட்ட நாற்பதுக்கு மேற்பட்ட தீக்குளித்த தியாகிகளின் பட்டியல் - ஆம்; அந்த எழுச்சி மிகு பெயர்கள் நம் இதயத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் தர வேண்டிய சிறப்பினை ஓவியங்களாக - சிற்பங்களாக - மன்றங்களின் பெயர்களாக - மாநாடுகளின் கொடிமேடைகள் மற்றும் முகப்புக்களாக அமைத்து அன்றும் இன்றும் என்றும் புகழஞ்சலி செலுத்தி வருகிறோம். மொழிப் போர் தியாகிகளை மட்டுமல்லாது; கழகத் தியாகிகள் அனைவரின் கல்லறைகளிலும் கண்ணீர் காணிக்கை செலுத்திடக் கழகம் தவறியதில்லை.

நாட்டு விடுதலைப் போரில் தியாகம் புரிந்தோருக்கும், நமக்கும் என்ன வந்தது என்று பற்றில்லாப் பட்ட மரமாக நில்லாமலும்; அவர்கள் எல்லாம் வேறு கட்சியன்றோ எனத் தெளிவற்ற நிலை கொள்ளாமலும்; இன்னும் கொள்கை வேறுபாடு எம்மிடையே உள்ளதே எனப் பழைய கதைகளைச் சொல்லாமலும்; என்ன இருந்தாலும்; சிறை சென்றும், செக்கு இழுத்தும் - அடி உதை பட்டும் - அடக்கு முறைகளையேற்றும் - அவர்கள் அமைத்த பாதை - உருவாக்கிய உரிமை மாளிகை - அதில் அவர்கள் நிழலும் படாமல், நினைவும் போற்றப்படாமல் - நாம், நமது வழியில் மட்டுமே விழியைச் செலுத்தி வாழ்வது என்பது மனச்சாட்சிக்கு உகந்ததல்லவே - அதனால் திராவிடச் சமுதாய உரிமைகளுக்குப் போராடி இன்று நம் நினைவிலே வாழ்பவர்களுக்கு மட்டுமல்ல; இந்த மண்ணை மீட்டுக் கொடுத்த மாவீரர்கள், அவர்தம் வழித் தோன்றல்களுக்கும் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே நாம் வாழும் காலம் மட்டுமல்ல; இந்த நானிலத்தில் நன்றி என்ற ஓர் உணர்வு வாழும் காலம் வரையில் அந்த மாவீரர்களை - மனிதச் செல்வங்களை - மறக்காதிருக்க வழி காண்போம் என்று நம் மனத்திற் பதிய வைத்து ஆற்றிடும் செயல் தான் சென்னை மாநகராட்சி மன்றம் நம் கைக்கு வந்ததும்; 1959ஆம் ஆண்டு சென்னையில் பெருந்தலைவர் காமராஜர் சிலையை இந்தியப் பிரதமர் பண்டித நேருவைக் கொண்டு அண்ணா அவர்கள் கருதியவாறு திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சி!

அண்ணன் கண் அசைத்து விட்டால் அவர் தம்பிகளாம் நாம் - அந்த அசைவுக்குரிய அர்த்தத்தைப் புரிந்து கொள்ள மாட்டோமா? - அதனால் தானே அவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே; வேலூர் நகராட்சி சார்பில் எதிர்ப்புக் கிடையே காந்தியடிகள் சிலையைத் திறந்து வைத்த போது; "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்ற மணி வாசகத்தை வடித்தெடுத்து நமக்கு வழங்கினார்.

இதோ அண்ணா வழியில் நாம் நடத்திடும் பயணத்தில்; ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், இதுவரை ஆற்றியுள்ள அரிய சாதனைகளை அடுக்கிக் காட்டுகிறேன்; பார்!

தென்னாப்பிரிக்காவில் நமது தேசத் தந்தை காந்தியடிகளுடன் இணைந்து போராடி சிறைப்பட்டு; சிறையில் சந்தித்த அடக்கு முறைக் கொடுமையால் - உடல் நலிந்து உயிர் விட்ட தில்லையாடி

வள்ளியம்மாள் நினைவு போற்ற - தில்லையாடியில் நினைவு மண்டபம்.

"சிதம்பரனார் செக்கு இழுத்தார்" என்று வரலாறு கூறப்பட்டதே தவிர; அந்தச் செக்கு எங்கேயிருக்கிறது எனக் கண்டு பிடிக்கப்பட வில்லையே எனக் கவலையுற்று; தமிழகத்து சிறைச்சாலைகளில் எல்லாம் தேடி, கடைசியாக கோவை சிறையில் கிடந்த அந்தச் "செக்கு" கண்டு பிடிக்கப்பட்டு; சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு; அந்த வரலாற்றுச் சின்னத்தை காணும் பேறு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

1806ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய்ப் புரட்சியில் உயிர்த் தியாகம் செய்த வீரத் தியாகிகளை நினைவு கூர்ந்து 3 இலட்ச ரூபாய் செலவில் நினைவுத் தூண் அமைக்கப்பட்டு 20-12-1998இல் திறந்து வைக்கப்பட்டது.

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை நினைவுச் சின்னம் - அங்கே கட்டபொம்மனின் வாரிசுகள் 204 பேருக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டது.

காமராஜர் நினைவிடம் - மூதறிஞர் ராஜாஜி நினைவிடம் - பல லட்ச ரூபாய்கள் செலவில் அமைக்கப்பட்டன.

காந்தி மண்டப வளாகத்தில் 25 லட்ச ரூபாய் செலவில் 13-3-1998 அன்று பெரியவர் பக்தவத்சலம் நினைவிடம் எழுப்பப்பட்டது.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டப்பட்டது.

30 லட்சம் ரூபாய் செலவில் காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மண்டபம்.

15 லட்சம் ரூபாய் செலவில் ப. ஜீவானந்தம் மணி மண்டபம்

மதுரை திருமங்கலத்தில் 50 லட்சம் ரூபாய் செலவில் வீரத் தியாகி விசுவநாத தாஸ் நினைவில்லம்.

நெற்கட்டும் செவல் கிராமத்தில் 50 லட்சம் ரூபாய் செலவில் மாவீரன் பூலித் தேவன் நினைவு மண்டபம்.

திருச்சியில் வ.வே.சு. அய்யர் நினைவகம்.

நாமக்கல்லில் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் நினைவில்லம் - சென்னை கோட்டையை ஒட்டி நாமக்கல் கவிஞர் மாளிகை (பத்து மாடிக் கட்டிடம்)

காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து சட்டமாக இயற்றப்பட்டது - குழந்தைகளுக்கு மூன்று முட்டைகள்/ வாழைப்பழம் வழங்க ஆணை.

கன்னியாகுமரி கடற்கரையில் 50 லட்சம் ரூபாய் செலவில் காமராஜர் மணி மண்டபம்.

மதுரை தும்பைப்பட்டியில் 25 லட்சம் ரூபாய் செலவிலே தியாகசீலர் கக்கனுக்கு மணி மண்டபம்.

திருப்பத்தூரில் 20 லட்சம் செலவில் மருது பாண்டியர் நினைவிடம்.

பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகே கவர்னகிரியில் 1 கோடி ரூபாய் செலவில் வீரன் சுந்தரலிங்கம் நகர்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் - நேதாஜி - தியாகி கக்கன் சிலைகள்.

தியாகிகள் மணி மண்டபத்தில் தியாகி சங்கரலிங்கனார், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், "ஜெய்ஹிந்த்" என்று முழக்கமிட்ட செண்பகராமன் ஆகியோரின் சிலைகள்.

சென்னையில் விடுதலைப் பொன் விழா நினைவுத் தூண்

இவை மட்டுமல்ல; விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட தியாகிகளுக்கும் - அவர் தம் குடும்பத்தினருக்கும் இந்த அரசின் சார்பில் உதவிகள் வழங்கி வருகிறோம். அவர்களின் நலனுக்காக, விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி, வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை போன்ற பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் பல்வேறு சங்கங்கள் - குறிப்பாக சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் சுதர்சனம் ஆகியோர் விடுதலைப் போராட்ட ஓய்வூதியத்தை தமிழக அரசு உயர்த்த வேண்டுமென்று வைத்த கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு -

தி.மு. கழகம் ஆட்சியிலேயிருந்த போது 15-8-1997 முதல் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில ஓய்வூதியத்தை 1500 ரூபாயிலிருந்து 3000 ரூபாயாகவும், அதன் பின்னர் 1-5-2007 முதல் 3000 ரூபாயிலிருந்து 4000 ரூபாயாகவும் உயர்த்தினோம். அது போல் வாரிசுதாரர்களுக்கான குடும்ப ஓய்வூதியத் தையும் 1997இல் 750 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாகவும், 2007ஆம் ஆண்டு 2000 ரூபாயாகவும் கழக ஆட்சியில் உயர்த்தப்பட்டது.

தற்போது ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட தியாகிகள் 1024 பேர். குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்கள் 2251 பேர்.

மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது, அன்னாரின் மனைவிக்கு/கணவருக்கு உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத் தக்க வகையில் சிறப்புற பணியாற்றிய மேலோரின் தியாகத்தை பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித் தோன்றல்கள் 132 பேர்களுக்கும் - வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித் தோன்றல்கள் 7 பேர்களுக்கும், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் தகுதியான வழித் தோன்றல்கள் 80 பேர்களுக்கும் அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் அரசியல் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர் களுக்கு அரசு மருத்துவ மனைகளில் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. மேலும் மைய அரசிட மிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மைய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கும் இலவசமாக

பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில் / மனைகளில் / அடுக்கு மாடி வீடுகளில் ஒரு சதவிகிதம் வீதம் ஒதுக்கப்படுகிறது.

விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர் தம் ஈமச் சடங்குச் செலவுக்காக - உதவித் தொகையாக ரூ. 2000 உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்து போன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு குறையாத பதவியில் உள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல் மீது மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இவ்வாறு விடுதலைப் போரில் ஈடுபட்டவர்கள், அவரது வாரிசுதாரர்கள் வாழும்போதும், வாழ்ந்து மறைந்த பிறகும், போற்றப்படுகிறார்கள், புகழப்படுகிறார்கள். இது ஒரு மாநில அரசின் கடமை என்றில்லாமல், இந்த மண்ணைக் காத்த மாவீரர்களுக்கும், அவர்தம் வழித் தோன்றல்களுக்கும் நாம் செலுத்தும் நன்றிக் கடன் என்பதோடு மட்டுமல்லாமல்; மறைந்தும் நம் நெஞ்சங்களில் நிறைந்து வாழும் தியாகச் செம்மல்களை தி.மு.க. என்றும் மறவாது என்பதற்கு வரைந்துள்ள கல்வெட்டுக்களும் ஆகும்.

அன்புள்ள,

மு.க.

11-12-2008

3354. யார்தான் குறுக்கே நிற்க முடியும்?

உடன்பிறப்பே,

கடந்த அக்டோபர்த் திங்கள் 26ஆம் தேதியன்று முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா ஓர் அறிக்கை வெளியிட்டார்; காரசாரமாக என்னையும் கழக அரசையும் கண்டித்து!

அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு :- "இந்தியாவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக செயல்பட்டவர்களை சட்டவிரோதமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்ய வேண்டும் என்று நான் அறிக்கை வெளியிட்ட பிறகு; வைகோ, கண்ணப்பன் ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களை மட்டும் கைது செய்தால் போதாது; அவர்களைப் போலவே விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களையும் கைது செய்ய வேண்டுமென்று மீண்டும் நான் ஒரு அறிக்கை வெளியிட்ட பிறகு திரைப்பட இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்களைப் போலவே இதே குற்றத்தை முதலமைச்சர் கருணாநிதியும் செய்துள்ளார் - அதாவது ஆண்டன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் என்ற இரு தலைவர்கள் இறந்தபோது அவர்களுக்காக இரங்கற்பா எழுதியுள்ளார். அதனால் அவரது ஆட்சியைக் கலைப்பதோடு, அவரையும் மத்திய அரசு கைது செய்ய வேண்டும் என்று கோருகிறேன்."

இந்த அறிக்கை வெளிவந்து ஐம்பது நாட்கள்கூட முழுமையாக ஆகவில்லை. அம்மையாரின் கோரிக்கைப்படி கைது செய்யப்பட்டவர்களும் சிலநாட்கள் சிறையிலிருந்து வெளிவந்து விட்டார்கள். ஆனால் ஒன்று; திரு.வைகோ அவர்களைப் "பொடா" சட்டத்தின்படி கைது செய்து ஓராண்டு காலம் சிறையில் பூட்டிப் போட்டதற்கு எந்தத் திருமங்கலம் நிகழ்ச்சியும் பேச்சும் காரணம் என்று சொல்லப்பட்டதோ; அந்தத் திருமங்கலத்தில் இப்போது இடைத்தேர்தல்!

இடைத் தேர்தலுக்குக் காரணம், அந்தத் தொகுதியில் வென்று ம.தி.மு.க. சார்பில் சட்டமன்றத்தில் வீற்றிருந்த திரு.வீரஇளவரசன் திடீரென இளம்வயதில் மறைந்துவிட்டார் என்பதால்! அவரும்கூட வைகோவுடன் "பொடா" சட்டப்படி சிறைப்பட்டு தண்டனையை முழுமையாக அனுபவித்தவர்தான்! அவர் மறைந்தார் எனக் கேள்வியுற்று நானும் இரங்கல் செய்தி வெளியிட்டிருந்தேன் - அது ஏடுகளில் வெளிவந்தது - அதை எப்படி வெளியிடலாம்; தமிழ்ச்செல்வனுக்கும், பால சிங்கத்துக்கும் இரங்கல் வெளியிட்டதே தவறு என்கிறபோது - அவர்களின் மீது பற்றும் பாசமும் கொண்ட வீரஇளவரசனுக்கு இரங்கல் தெரிவித்தமைக்காக; "மத்திய அரசு, இந்தக் கருணாநிதியைக் கைது செய்து அவன் அரசையும் கலைக்க வேண்டும்" என்று அம்மையார் கோரிக்கை அறிக்கை வெளியிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

அதற்காக ஆத்திரப்படக்கூடிய - அல்லது குமுறக்கூடிய - உணர்வுள்ளவர்கள் ம.தி.மு.க. கூடாரத்தில்தான் யார் இருக்கிறார்கள்?

உடன்பிறப்பே,

"யசோதர காவியம் என்று சமண சமயக் கதையொன்று உண்டு. அதில் "அமிர்தமதி" என்ற ஒரு ராணி - அவளை மணந்தவன், அந்த நாட்டு மன்னன் "யசோதரன்" என்பவன் - சுந்தரரூபன் - சுகுமாரன் -

ராணியின் மனமறிந்து மகிழ்ச்சி அளிக்கும் மன்னன்தான் அந்த யசோதரன். அத்தகைய செங்கோலேந்தியின் சிற்றின்பக் கூடாரத்தை அலங்கரிக்கக்கூடிய பாக்கியம் அந்தச் சிங்கார ராணி அமிர்தமதிக்குக் கிடைத்திருந்தது. மன்னவனின் மஞ்சத்து மயில் என்றால் சாதாரணமா? தாதிகள் உண்டு; தயவு கேட்டு நிற்கப் பல சேவகருண்டு! தங்கம் கலந்த உணவை உண்டு - அங்கம் பூரிப்பு கொண்டு - காதல் மிஞ்சுதே சேடி காவலனைக் கூப்பிட்டு வாடி! என்று அழைத்த கணமே அவர்கள் ஓடி, ஆடிப்பாடி அரசனை அழைத்து வருவர். ஆனைமேல் அம்பாரியா? அணி தேர்ச்சவாரியா? பூனை ரோமத்தால் மிதியடியா? புலிப் பாலா! புரவிக் கொம்பா? எது கேட்பினும் தருவர் - அதற்கெனவே எடுபிடிகள் ஏராளமாக உளர். இந்தச் செல்வாக்கின் மத்தியிலே செல்லநடை போடும் சேயிழையாள் அந்த அமிர்தமதி!"

"அழகி அமிர்தமதியும், அரசன் யசோதரனும் ஒரு நாள் அந்தப்புரத்தில் இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டனர். கட்டிற் காவியம் எழுதி முடித்தனர் - கண் அயர்ந்தனர். அரசன் தூங்கும் சமயம், ராணி கண் விழித்தாள். ஆமாம்! மலர் விழித்துக் கொண்டது; வண்டோ தூங்கிக் கொண்டிருந்தது. விழித்த சமயம் அந்த இரவில் ஒருபாடல், ராணியின் காதில் ஒலித்தது! அந்தப் பாடல் வந்த பக்கம் கருத்தைச் செலுத்தினாள். அந்தப் பாடல் இசைத்தவனைக் கட்டித் தழுவ வேண்டு மென்று துடித்தாள்."

"மறுநாள் தன் தோழி குணவதியை அனுப்பினாள். அர்த்த ராத்திரியிலே பாடியவன் யாரென்று அறிந்து வர தோழியும் போய் அவனைக் கண்டாள். இசையை எழுப்பியவன் ஒரு யானைப் பாகன். அவன் எப்படிப்பட்ட அழகுடையவன் தெரியுமா? தோழி வாயிலாக யசோதர காவியக் கவிஞர் கூறுகிறார். அது இது!"

"நரம்புகள் வசித்த மெய்யன், நடையினிற் கழுதணிந்தோன், திரங்கியவிரலன், கையன், சிறுமுகன், சினவன், சீறிற் குரங்கினை யனையன், கூனன், குழிந்து புக்கழிந்த கண்ணன்!"

"இன்னும் பலவாறாக அவனது விகாரங்களை வர்ணித்து அவன் மீது ஆசை வைப்பது தகாது என்று ராணியிடம் தோழி கூறுகிறாள். அமிர்தமதியோ 'அவன் எப்படியிருந்தாலும் கவலையில்லை. அவனை அணைத்து மகிழத்தான் வேண்டும்' என்று துடிக்கிறாள். 'கனியிருப்பக் காய் பறிக்கலாமா அம்மா? சகல அழகும் பொருந்திய அரசர் பெருந்தகையின் மனைவியாகிய நீங்கள், கேவலம் குரங்கைப் போன்ற - ஒரு சாக்கடை மனிதனைக் கொஞ்சிக் குலவ விரும்பலாமா தாயே!' என்றெல்லாம் குணவதி தடுத்தாள். ஆனால் அரசியோ, அவன் எப்படியிருந்தால் எனக்கென்ன; அவன் அணைப்பிலேதான் சுகம் இருப்பதாக நான் உணர்கிறேன் என்று கூறியதோடு, அந்தப் பாடல் கற்ற யானைப் பாகனையும் வலிய வரவழைத்து, வாரி அணைத்து மகிழ்ந்தாள். நாளொருமேனியாக அந்த நாய்க்காதல் வளர ஆரம்பித்தது. ஒரு நாள் அரசனே அவர்களது... காதல் களியாட்டத்தைத் தூர நின்று பார்த்துவிட்டான். அப்போது என்ன நடந்தது தெரியுமா? அரசன் எந்தக் காட்சியைக் கண்டான் தெரியுமா? வழக்கமாக யானைப் பாகனைச் சந்திக்கும் அமிர்தமதி அன்று சற்றுத் தாமதமாக அவனிடம் வந்துவிட்டாளாம். அதற்காக அந்த யானைப் பாகன் அட்டபங்கன் என்னும் பெயருடைய அந்த அவலட்சணம்,

அமிர்தமதியின் அழகுக் கருங்கூந்தலைக் கையால் இழுத்து எறிந்து, அவளைக் கீழே தள்ளி, இரு கால்களாலும் நையப்புடைத்து 'ஏன் காலம் தாழ்த்தி வந்தாய்?' என்று கனல் கிளம்பக் கேட்கிறான்."

"கட்டளையிட்டால், யோசனை என்ற தூரம் ஓடிக் காரியமாற்றிடும் பணியாளர்களின் தலைவி - மண்டலாதிபதியின் மனைவி - ஓர் அழுகிய உடல் படைத்த யானைப் பாகன், தன்னைத் திட்டி உதைத்து அடிப்பதிலே சுகம் காண்கிறாள்."

"அவள் மலர்ப் பாதங்களை அர்ச்சிக்க ஆயிரம் பேர் காத்திருப்பர் - அவள் அந்தப் பாகனின் கால்களைக் கண்ணில் ஒத்திக்கொண்டு காலந் தாழ்ந்தமைக்கு மன்னிப்புக் கோருகிறாள்."

இதுதான், யசோதர காவியத்தின் சுவையான(?) சுருக்கம்.

உடன்பிறப்பே,

இதைப் படிக்கும்போதும், படித்த கதையை நினைத்து, நெற்றி சுருக்கிச் சிந்திக்கும்போதும்; "அமிர்தமதி" போல சில கட்சித் தலைவர்கள் நமக்குக் காட்சியாகிறார்கள் அல்லவா!

யானைகளில் வீரர்கள் அமர்ந்து காவல் புரியும் அரண்மனை - அந்தப்புரம் - அங்கே அரசனின் அரவணைப்பு - இவற்றைவிட; யானைப் பாகன் ஒருவன்; அதிலும் அழுகிப்போன மேனி - அதிலும் தாமதமாக ஏன் வந்தாய் என்று அவளைக் காலால் உதைத்து உதைத்து தண்டனை கொடுத்துவிட்டு; அதன்பிறகு அவளுடன் சல்லாபிக்கிறான்; அதைத்தான் அமிர்தமதி அடங்காத வேட்கையுடன் விரும்புகிறாள் - இப்படி சில ஜென்மங்கள் - சில அரசியல்வாதிகள் - என்று முணுமுணுக்கத் தோன்றுகிறதல்லவா?

அடித்தால் என்ன; உதைத்தால் என்ன; அமிர்தமதிக்கு அந்த யானைப் பாகனைத்தான் பிடிக்கிறதென்றால் - யார்தான் குறுக்கே நிற்க முடியும்?

அன்புள்ள,

மு.க.

14-12-2008

3355. திருமங்கலம் தேர்தலும் - திடீர் அறிவிப்பும்!

உடன்பிறப்பே,

மதுரை - திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த வீர இளவரசன் அவர்கள் கடந்த நவம்பர் 8ஆம் நாள் காலமாகி விட்டார். அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நான் செய்தி வெளியிட்டிருந்தேன். ம.தி.மு.க.வைச் சேர்ந்த அவர் மறைந்து இத்துடன் இரண்டு மாதம்கூட முடியவில்லை. எப்போதுமே ஒரு சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ மறைந்து விட்டால் - காலியான அந்த இடத்துக்கு ஆறு மாதத்திற்குள் இடைத் தேர்தல் வரும். அப்படி வரும் இடைத் தேர்தலில்; இறந்துபோன உறுப்பினரின் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் போட்டியிடுவார்கள்.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வால்மீகி என்ற காங்கிரஸ் உறுப்பினர் காலமாகிவிடவே; முதலில் உறுப்பினராக இருந்தவருக்குத்தான் அந்த இடத்தை வழங்கிட வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்து, அதன்படி அந்தத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அருணகிரி என்பவர் போட்டியிட வாய்ப்பளித்து - அதற்கான தேர்தல் பிரச்சாரத்திலும் ஈடுபட்டார். ஆச்சரியம் என்னவென்றால், அப்போது அ.தி.மு.க. காங்கிரஸ் தேர்தல் உறவு கிடையாது - அப்படியிருந்தும் ஒரு உறுப்பினர் இறந்தால்; காலியாகும் அந்த இடத்தை அந்தக் கட்சியின் உறுப்பினரே நிரப்ப வேண்டும் என்று ஒரு புதிய கொள்கையை எம்.ஜி.ஆர். வகுத்தார்.

தன் குருநாதர் வகுத்த வழியில் அம்மையார் ஜெயலலிதா நடை போடுகிறார் என்பதை நம்பிட வேண்டுமானால்; திருமங்கலத்தில் வீரஇளவரசன் மறைவு காரணமாக ஏற்பட்ட காலியிடத்தை நிரப்புவதற்கு; அவர் எந்தக் கட்சி உறுப்பினராக இருந்து மறைந்து போனாரோ; அந்தக் கட்சி உறுப்பினர்

ஒருவரைத்தான் வேட்பாளராக நிறுத்தி, அவர் வெற்றிக்காகப் பாடுபட்டிருக்க வேண்டும். அதுதான் இடைத் தேர்தல்களுக்கு என எம்.ஜி.ஆர். அவர்களே வகுத்த வழி - அதற்கேற்பவே; காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் இறந்துபோன இடத்தில்; இடைத் தேர்தலில் அந்த இடத்தை காங்கிரஸ் வேட்பாளருக்கே வழங்கி; அவரது தேர்தல் வெற்றிக்காகவும் பிரச்சாரம் செய்தார்.

ஆனால் இந்த அம்மையாரோ; திருமங்கலம் தொகுதியில் ஏற்கெனவே போட்டியிட்டு வெற்றிபெற்ற ம.தி.மு.க. வேட்பாளர் வீர இளவரசன் மறைந்ததும்; அந்தத் தொகுதி இடைத்தேர்தலில் ம.தி.மு.க.வே போட்டியிடட்டும் என்று பெருந்தன்மையோடு அறிவிக்காமல்; அந்தத் தொகுதியில் ம.தி.மு.க. நிற்பதற்கும் இடங்கொடுக்காமல்; அங்கே அ.தி.மு.க.தான் நிற்கும் என்று அறிவித்துவிட்டதோடு அதற்கான தேர்தல் பணிகளையும் முடுக்கி விட்டுவிட்டார்.

மழை வெள்ளம் புயல் எல்லாம் வந்து; மக்கள் பல மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான பாதுகாப்புப் பணிகளை, நிவாரணப் பணிகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளதே; "திடீரென்று இரண்டு மாதத்திற்குள் இடைத்தேர்தல் என்றால்; ஓர் அரசின் நிர்வாகத்திற்கு எவ்வளவு நெருக்கடி - எனவே வசதிப்படுமா?" என்றெல்லாம்கூடக் கலந்து பேச வாய்ப்பின்றி; தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு விட்டது.

நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் வர இருக்கிறதே; அத்துடன் சேர்த்து இந்த திருமங்கலம் இடைத்தேர்தலை வைத்துக் கொண்டால் என்ன; என்று கேட்பதற்கும் முடியாமல் - நாடாளுமன்றத் தொகுதிகள்; புதிதாக அமைக்கப்பட்டும் - பிரிக்கப்பட்டும் அறிவிக்கப்பட்டிருப்பதால் - அப்படி நாடாளுமன்றத் தேர்தலுடன் இந்த இடைத்தேர்தலைச் சேர்த்தால் வீண் குழப்பங்கள் நிர்வாகத் துறையில் ஏற்படும் என்பதை நாம் உணராமல் இல்லை. அதற்காக இப்படி "விடியக் கல்யாணம்; பிடிடா பாக்கை!" என்று கிராமத்துப் பழமொழியை நினைவூட்டுகிற அளவுக்கு, இவ்வளவு அவசரமாக இந்தத் தேர்தல் வரவேண்டியதின் அவசியம்தான் என்னவோ?

தி.மு.க.வைப் பொறுத்தவரையில்; தேர்தல் ஆணையத்தின் வாயிலாகப் பெற்றுள்ள ஆணையின்படி; கழகத்தின் 13ஆவது

பொதுத் தேர்தல் - கிளைகள் முதல் தலைமைக் கழகம் வரையில்; வருகிற டிசம்பர் 27க்குள் நடந்தாக வேண்டும் - அடுத்த ஆண்டுக்கு ஒத்தி வைக்க இயலாது - இவ்வாறு ஏற்கெனவே ஆணையத்துக்கு உறுதி கூறப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் வருகின்ற தமிழர் திருநாள் பொங்கல்; ஜனவரி 14-ந்தேதி வாக்கில் வருகிறது; அதற்கு முன்கூட்டியும் - பின்னரும் சில நாட்கள் மக்கள் அந்தப் பொங்கல் ஏற்பாடுகளில் ஈடுபட வேண்டியிருக்கும். அப்போதுதான் திருமங்கலம் இடைத் தேர்தல் முடிவடையும் நேரமாக இருக்கும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு; பட்ஜெட் படிக்கப்பட்டு, அதில் சலுகைகளோ, புதிய திட்டங்களோ அறிவிக்கப்பட்டால்; அது தேர்தல் ஆணைய விதிமுறைகளுக்கு முரணாகி விடக்கூடும் என்பதால், பட்ஜெட் அறிவிப்புக்கான பணிகளும், அதற்கு முன்னர் அவையில் படிக்க வேண்டிய ஆளுநர் உரையும் - சட்டமன்றத்தில் நிறைவு பெற்றிட வேண்டியுள்ளது.

இந்த நெருக்கடிகள் நிறைந்த நிலையிலே திருமங்கலம் இடைத் தேர்தல் இவ்வளவு விரைவிலா என்ற கேள்வியும், ஏன் அவசரம் என்பதற்கான காரணமும் புரியாமல் இல்லை.

உடன்பிறப்பே, பார்த்தாயா; ஓர் இடைத்தேர்தல் அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டு விட்டது என்று ஆளுங்கட்சியும் - அப்படி அறிவித்ததை எதிர்பார்த்து இருந்ததுபோல் எதிர்க்கட்சியும் - இருப்பதற்கு நம்ப முடியாத ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் வருவதற்கு முன்பு இந்தத் திருமங்கலம் இடைத்தேர்தலில் ஜெயித்துவிட்டால்; அந்த உற்சாகம் - நம்பிக்கை நாடாளுமன்றத் தேர்தலிலும் தம்மை வெற்றி முகட்டில் உட்கார வைக்கும் என்று ஜெயலலிதா கணக்குப் போட்டு; கணக்கை கணக்காகச் செய்து முடித்துவிட்டுக் களிப்பிலாழ்ந்திருக்கிறார் போலும்.

உடன்பிறப்பே, உனக்கு நினைவிருக்கிறதா? தமிழகத்தில் மொழிப்போர் நடந்துமுடிந்த பிறகு; பாளைச் சிறையில் நானும் மற்றும் பல சிறைகளில் கழக உடன்பிறப்புக்கள் ஆயிரக்கணக்கினரும் சிறையை விட்டு வெளிவராத சமயத்தில்; தர்மபுரியில் ஓர் இடைத்தேர்தல் - அந்தத் தேர்தலில்

காங்கிரஸ் வெற்றிபெற்று விட்டது. அடடே, அவ்வளவு பெரிய மொழிப்போருக்குப் பிறகும்; இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற முடியவில்லையே என்று எல்லோரிடமும் ஓர் ஏக்கம் பிறந்தது.

ஆனால், காங்கிரஸ் நண்பர்களோ அந்த தர்மபுரி இடைத்தேர்தலின் வெற்றி; 1967 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிக்கு அச்சாரம் என்றும், அறிகுறி என்றும் நம்பினார்கள்.

ஆனால் தர்மபுரி இடைத் தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி அளிக்காத மக்கள்; அதைத் தொடர்ந்து 1967-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் - தி.மு.க.வைத்தான் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் ஆட்சி அமைக்கிற அளவுக்கு வெற்றியை வழங்கினார்கள்; என்பதைக் கடந்தகால வரலாறு சுட்டிக்காட்டத் தவறவில்லை என்ற உண்மையை மறந்து விடக்கூடாது!

மறவாமலும் - மன திடத்துடனும் - பாகு மொழி - பசப்பு மொழி - பேசிப் பாராட்டிய கட்சிகள்கூட; "எஸ்மா" "டெஸ்மா" சட்டங்களை நீட்டியவர்களை உற்றுநோக்கி "உஜார் உஜார்!" என்று உரத்த குரல் எழுப்பியதை விடுத்து; இப்போது உமிழ்ந்த வாய்க்கே சர்க்கரை என உரைத்துக் கொண்டு; நம்மைப் பின்னிருந்து குத்திக் கிழித்திட முன்வருகிறார்கள் என்றால்; அத்தகையோர்க்கு; நன்றிக்கும் அவர்களுக்கும் எவ்வளவு தொலைவு? நட்புக்கும் அவர்களுக்கும் என்ன உறவு? என்று நெஞ்சு கொதித்திடக் கேட்கத்தான் தோன்றும் உனக்கு!

நம் நெஞ்சில் நெருப்பு மூட்டிடுவோர் உனக்கு உருவாக்கியுள்ள ஆத்திரம் - அதன் விளைவைக் காணத்தான் நான் அச்சம் கொண்டு; அன்பு உடன்பிறப்பே, அண்ணா தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் முக்கணைகளையும் பயன்படுத்திப் பலன் காண, பகைமுகாம் நோக்கிப் பணியாற்றிடக் கிளம்புக! என அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

15-12-2008

3356. எளிதாகப் புரிந்து கொள்வாய்!

உடன்பிறப்பே,

16.12.2008 அன்று "புரட்சி பாரதம்" என்ற கட்சியின் தலைவர் திரு.பூவை ஜெகன்மூர்த்தி அவர்கள் தலைமையில் ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்துகொண்ட எழுச்சிப் பேரணியொன்று "சிறுதாவூரில்" அமைதியான அறப்போர் ஒன்றை நடத்தி; தலித் மக்களின் நிலங்களை அபகரித்து அங்கே ஆடம்பர மாளிகை கட்டியிருப்பதாகக் குற்றம் சாட்டியதோடு; "இது தொடக்கம்தான்; அபகரிக்கப்பட்டுள்ள ஏழை தலித்துகளின் நிலங்களை மீட்க; எங்கள் போராட்டம் தொடரும்" என்று எச்சரிக்கையும் செய்திருக் கிறார்கள்.

காரணமில்லாமல் - தமிழகத்தில் கண்ட கண்ட ஊர்களில் களம் அமைத்துப் பேரணி நடத்திடக் கச்சை கட்டிப் புறப்படுகின்ற ஜெயலலிதா அவர்கள், சிறுதாவூர் பிரச்சினை என்று வந்தால் மட்டும் தன் வாய்க்குத் தானே பூட்டுப் போட்டுக் கொண்டு மௌனமாகி விடுகிறார்.

சிறுதாவூர் பிரச்சினையை முதலில் கையிலெடுத்து முரசு கொட்டுவது; ஜெகன் மூர்த்திதான் என்று பெருமைப் பட்டுக்கொள்ள முடியாது.

இதோ; ஒருவர் எப்படி வெள்ள நிவாரணத்திற்கு - இறந்தவர்களுக்கு ஒரு இலட்சம் என்பதை இரண்டு இலட்சம் என்று அரசு அளித்ததற்குத் தானேதான் காரணம் என்று சொல்லிக் கொள்கிறாரோ; அதேபோல தலித்து நிலங்களை சிறுதாவூர் சீமாட்டிகள் அபகரித்துக் கொண்டதை வெளிச்சம் போட்டுக் காட்டும் பூவை ஜெகன் மூர்த்தியையும் முந்திக் கொண்டு - மார்க்சிஸ்ட் கட்சியின் மதிப்புமிக்க மாநிலச் செயலாளர் தோழர் என்.வரதராசன் அவர்கள்; இன்றைய தமிழக அரசின் முதலமைச்சரான என்னிடம் 26.7.2006 அன்றைய தினமே சிறுதாவூர் நில அபகரிப்பு பற்றியும் - தலித் மக்கள் ஏமாந்து தவிப்பது

பற்றியும் "மகஜராக" எழுதித் தந்துள்ளார்கள். அதனால் பூவை ஜெகன்மூர்த்திக்கு முன்பே; அதாவது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மதிப்புமிகு தோழர் என்.வரதராசன் அவர்கள், சிறுதாவூரில் ஏழை பாழைகளான தலித் மக்களின் நிலங்களை அபகரித்துக் கொண்டிருப்பவர்கள் யார் என்பதையும் - அங்கே ஆடம்பர உல்லாச மாளிகை எப்படி வந்தது என்பதையும் - கண்கலங்கிடக் கலங்கிட எழுதிய மகஜராக என்னிடம் தந்து; அவர் கோரியபடி 27.7.2006 அன்றையதினம் விசாரணைக் கமிஷன் அமைத்து, விசாரணை செய்திட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தோழர் வரதராசன் அவர்கள் அளித்த மகஜரில், குன்றின் மேலிட்ட விளக்குபோல குறிப்பிடப்படும் வாசகங்களை; உடன்பிறப்பே, உனக்கு எடுத்துக் காட்டுகிறேன். எனவே, நான் கடிதத்தின் தொடக்கத்தில் கூறியுள்ளதுபோல; இந்த சிறுதாவூர் பிரச்சினையை - முதன்முதலாக எழுப்பி போர் முழக்கம் செய்யும் வாய்ப்பைப் பெற்றவர்; புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் பூவை ஜெகன்மூர்த்தி அல்ல; என்பதற்கும் - விபரீதம் நடந்து, அது மூடப்பட்டு கிடந்ததை - இருட்டிலிருந்து முதலில் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த பெருமையே தோழர் என்.வரதராசனுக்குத்தான் சேரும் என்பதற்கும்; வரதராசன் அவர்கள் 26.7.2006 அன்று தமிழக அரசிடம் அளித்த மகஜரில் குறித்துள்ள வாசகங்களே போதுமான சான்றாக விளங்குகிறது.

அது என்ன அப்படிப்பட்ட சான்று என்கிறாயா? இதோ - அவர் அன்று தமிழக அரசுக்கு அளித்த மகஜரின் விபரம் :-

" இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ்நாடு மாநிலக் குழு"

ஜூலை 26, 2006

பெறுநர்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்
தமிழக முதலமைச்சர்,
தமிழ்நாடு அரசு,
சென்னை.

அன்புடையீர், வணக்கம்.

பொருள் :காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருப்போரூர் ஒன்றியம், சிறுதாவூர் கிராம தலித் மக்கள் நிலங்கள் மோசடியாக அபகரிப்பு - பட்டா பெயர் மாற்றம், மோசடியாக செய்யப்பட்ட பத்திர பதிவு, பட்டாவை ரத்து செய்து நிலத்தை மீண்டும் தலித் மக்களுக்கு வழங்கிடவும் - சிறுதாவூர் பங்களா மற்றும் நில மோசடி குறித்து முழுமையான விசாரணை நடத்திட கோருதல் தொடர்பாக.

1967ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதலமைச்சரான திரு சி.என்.அண்ணாதுரை அவர்களால் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய தலித் மக்கள் விவசாயம் செய்து வாழ்வதற்காக 20 குடும்பங்களுக்கு விவசாய நிலம் தலா 2.50 ஏக்கர், குடிமனைக்காக 10 சென்ட் மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒரு ஏக்கர் என மொத்தம் 53 ஏக்கர் நிலம், பட்டா வழங்கப்பட்டது.

இந்நிலங்களில், சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் சாகுபடி செய்து வந்தனர். தலித் மக்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் சாகுபடி செய்து வந்ததற்கு ஆதாரமாக 1988ஆம் ஆண்டு வரை வருவாய் துறை அடங்கலில் பதியப் பெற்றுள்ளது. 1992இல் தமிழக அரசின் சிறு/குறு விவசாயிகளின் அட்டை பெற்று பயன் பெற்றுள்ளனர்.

1992ஆம் ஆண்டு வாக்கில் சிறுதாவூரில் அமைந்துள்ள சொகுசு பங்களாவில் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் வந்து தங்க ஆரம்பித்தபின்னர் மேற்படி நிலங்களில் இருந்து தலித் மக்கள் நிர்ப்பந்தமாக வெளியேற்றப் பட்டுள்ளனர். பலர் பெயரில் போலி கிரயப் பத்திர பதிவுகளும் நடைபெற்று, முறையான விசாரணை நடைபெறாமல் பட்டா மாற்றங்களும் செய்யப்பட்டு சிறுதாவூர் தலித் மக்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. கிடைத்துள்ள வருவாய்த் துறை ஆவணங்கள் அடிப்படையில் சசிகலா குடும்பத்தை சேர்ந்த பலர் பெயரில் பட்டாக்கள் மாற்றப்பட்டுள்ளன.

எனவே, சிறுதாவூர் தலித் மக்களுக்கு மீண்டும் விவசாய நிலம் கிடைத்திடவும்; போலியான பத்திரப்பதிவு மற்றும் பட்டாக்களை ரத்து செய்து சிறுதாவூர் தலித் மக்களுக்கு வழங்கிடவும் தமிழக

அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து உதவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம். போலி பத்திரப் பதிவு பட்டா மாற்றம் செய்து தலித் மக்களின் நிலங்களை மோசடி செய்தவர்கள் மீது உரிய விசாரணையும், நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

மேலும் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முதல்வராக இருந்தபோது தங்கியிருந்த சிறுதாவூர் பங்களா அமைந்துள்ள இடம் அவரது தோழி சசிகலாவின் நெருங்கிய உறவினர்களான இளவரசி மற்றும் சுதாகரன் பெயரில் பதிவு மற்றும் பட்டா உள்ளதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன. அந்த பங்களாவை சுற்றியுள்ள காம்ப்பவுண்டுக்குள் அரசு புறம்போக்கு நிலம் சுமார் 200 ஏக்கர் வளைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். ஏற்கெனவே செல்வி ஜெயலலிதா மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ள வருமானத்திற்கு அதிகமான சொத்து குவிப்பு வழக்கில் சிறுதாவூர் பங்களாவும் குற்றப் பத்திரிகையில் சொத்தாக சேர்க்கப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவால் முடக்கி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி நிலங்கள் சம்மந்தமாகவும் தமிழக அரசு முழுமையான விசாரணை நடத்தி புறம்போக்கு மற்றும் தரிசு நிலங்களை கையகப்படுத்தி சிறுதாவூர் கிராமத்தில் வசிக்கும் நிலமற்ற இதர விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் அன்புள்ள
ஒப்பம்/-
(என்.வரதராஜன்)
செயலாளர்''

எதையும் எளிதாகப் புரிந்துகொள்ளும் ஆற்றல் படைத்த இனிய உடன்பிறப்பே; இதையும் புரிந்து கொள்வாய் என நம்புகிறேன்.

அன்புள்ள,
மு.க.
16-12-2008

3357. அகதிகளும் - ஆனந்த விகடனும்!

உடன்பிறப்பே,

தே.மு.தி.க. தலைவர் திரு. விஜயகாந்த், அவிநாசியில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமைப் பார்க்கப் போனதைப் பற்றித் தெரிந்து கொண்ட பிறகுதான்; தமிழ்நாட்டில் உள்ள மற்ற அகதிகள் முகாம்களைப் பற்றியும், அதில் வாழ்ந்து வருகின்ற அகதிகளைப் பற்றியும் நான் விசாரித்துத் தெரிந்து கொண்டதைப் போல - "ஆனந்த விகடன்" பேட்டியில் கூறியிருக்கிறார்.

அடித்தட்டு மக்களின் பாதுகாப்பு அரணாக இருக்கின்ற தி.மு.கழக அரசு; தமிழகத்தில் பரனூர் போன்ற பல இடங்களில் இரவலர் மறுவாழ்வு இல்லங்கள் - அனாதைக் குழந்தைகளைப் பராமரித்து, கல்வி புகட்டி அவர்களை ஆளாக்கிட கருணை இல்லங்கள் - சாதி சமய பிணக்குகளை அகற்றி, அனைத்து சமுதாய மக்களும் சமத்துவ உணர்வுடன் வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்கிட பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் - ஆண்டாண்டுக் காலமாக மண் குடிசைகளில் வாழ்ந்துவரும் ஆதி திராவிட சமுதாய மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்து, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு அடித்தளம் அமைக்கும் சீரிய முயற்சியாக இந்தியாவிலேயே முதன்முறையாக 'ஆதிதிராவிடர் இலவச வீட்டுவசதிக் கழகம்' - ஆதரவற்ற பெண்கள் திருமண நிதிஉதவித் திட்டம் - போன்ற எண்ணற்ற சமுதாய சீர்திருத்த - சீரமைப்புத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. அவற்றில் எதைப் பற்றியும் பேட்டியெடுத்து வெளியிடாத "ஆனந்த விகடன்" இலங்கை அகதிகள் முகாம்கள் பற்றி மட்டும் பேட்டி யெடுத்ததாக வெளியிடுவதன் சூட்சுமத்தை தமிழக மக்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களின் பின்னணியைப் பற்றியும், கழக அரசு; அவர்களின் நலன் கருதி வழங்கிவரும் சலுகைகளைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் விஜயகாந்த் ஏதேதோ சொல்லியிருக்கிறார்.

அரைகுறையாக அவர் சொன்னதை "ஆனந்த விகடன்" பேட்டியென வெளியிட்டிருக்கிறது.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக முதன்முதலில் இலங்கை அகதிகள் இந்தியாவிற்கு வரத் தொடங்கினர். இந்தியாவிற்கு நான்கு கட்டங்களில் வந்த இலங்கை அகதிகள் வெவ்வேறு முகாம்களில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

முதல்கட்டமாக 24.7.1983 முதல் 31.12.1987 வரை 1,34,053 அகதிகளும்; இரண்டாம் கட்டமாக 25.8.1989 முதல் 30.4.1991 வரை 1,22,078 அகதிகளும்; மூன்றாம் கட்டமாக 31.7.1996 முதல் 30.4.2003 வரை 22,418 அகதிகளும்; நான்காம் கட்டமாக 12.1.2006 முதல் 30.11.2008 வரை 23,070 அகதிகளும்; இந்தியாவிற்கு வந்துள்ளனர்.

அவர்களில் இதுவரை சொந்த விருப்பத்தின்பேரில், முறையான பயண ஆவணங்கள் வைத்திருந்த சுமார் ஒரு இலட்சம் அகதிகள், விமானம் மற்றும் கப்பல்கள் மூலம் அவர்கள் விரும்பும் நாடுகளுக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 30.11.2008 அன்றைய நிலவரப்படி; அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்கள் மொத்தம் 19,547 அதாவது, 73,425 பேர்; முகாம்களைத் தவிர வெளியில் தங்கியுள்ள குடும்பங்கள் மொத்தம் 9,299, அதாவது 25,425 பேர்; தமிழ்நாட்டில் உள்ள 25 மாவட்டங்களில் 113 அகதிகள் முகாம்கள் இயங்கி வருகின்றன.

தமிழகத்தில் இரண்டு இடைத்தங்கல் முகாம்கள் (Transit Camps) - இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கொட்டப்பட்டிலும் - உள்ளன. இடைத்தங்கல் முகாம்களில் அகதிகள் காவல் துறையின் கண்காணிப்பில் இருக்கும்போது தினமும் மூன்று நேரம் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. மேலும், தேவையான மருத்துவப் பரிசோதனைகளுக்குப்பின் தட்டம்மை போன்ற நோய்களுக்கான நோய் தடுப்பு மருந்துகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. இலங்கையில் இருந்து வரும் இலங்கை தமிழ் அகதிகள் முதலில் தற்காலிக ஏற்பாடாக மண்டபம் முகாமில் தங்க வைக்கப்படுகின்றனர். பின்னர் அவர்கள் தமிழகத்தில்

25 மாவட்டங்களில் செயல்படும் 113 அரசு முகாம்களுக்கு அனுப்பப்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர்.

முகாம்களில் உள்ள குடில்களில் அகதிகள் தங்க வைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு குடிலும் 10 x 10 அளவுள்ளது; செங்கல் சுவர்களுடன், சிமெண்ட் தரையும் அமைக்கப்பட்டு; ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேயப்பட்டு; மின்வசதி செய்யப்பட்டுள்ளது. 10 வீடுகளுக்கு ஒரு கழிவறை என்ற விகிதத்தில் பொது கழிவறை வசதி செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிர்வாகத்தின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. முகாமில் தெருவிளக்கு வசதி, மின்மோட்டார் வசதியுடன் ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் பொது விநியோகக் கடைகள் அகதிகளின் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளன"

ஒவ்வொரு முகாமிலும் உள்ள அகதிகள் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை வெளியில் சென்று இந்திய அரசின் சட்டதிட்டத்திற்குட்பட்ட தங்களுக்குத் தெரிந்த தொழிலைச் செய்து, தங்கள் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வருவாயைப் பெருக்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு கழக ஆட்சி சார்பிலும், மைய அரசினை வலியுறுத்தியும் பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன:-

அகதிகள் முகாம்களில் தங்கியிருப்போர்க்கு வழங்கப்படும் நிதிஉதவியினை 1.8.2006 முதல் -

அகதி முகாம் - குடும்பத் தலைவருக்கு மாதந்தோறும் 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும்,

அந்தக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வயது வந்தோருக்கும் 144 ரூபாயில் இருந்து 288 ரூபாயாகவும்,

அந்த முகாம்களில் குடும்பத்திலுள்ள முதல் குழந்தைக்கு 90 ரூபாயிலிருந்து 180 ரூபாயாகவும்,

அந்த முகாம்களின் குடும்பத்திலுள்ள மற்ற குழந்தைகளுக்கு 45 ரூபாயில் இருந்து 90 ரூபாயாகவும் - உயர்த்தி வழங்கப்படுகிறது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு

வழங்கப்பட்டு வருவதைப் போலவே, அகதிகள் முகாம்களில் வாழும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தை பிறப்பதற்கு முன் 3 ஆயிரம் ரூபாயும்; குழந்தை பிறந்தபின் 3 ஆயிரம் ரூபாயும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

முகாம்களில் உள்ளோர்க்கு வண்ண அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய சமையல் பாத்திரங்கள் வழங்குவதற்கென ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்பு வழங்கப்பட்ட 150 ரூபாய் 250 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஈமச் சடங்குகள் செய்ய முன்னர் வழங்கப்பட்டு வந்த 100 ரூபாய் 500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழகமெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் அகதிகள் முகாம்களிலும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

முகாம்களில் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை பனிரெண்டு மணிநேரத்திற்கு மட்டும் மின்சாரம் எனும் நிலையை மாற்றி, இருபத்து நான்கு மணிநேரமும் மின் விநியோகம் செய்யப்படுகிறது.

அகதிகள் முகாம்களில் உள்ள மாணவர்கள் 12ஆம் வகுப்பு வரை படிக்க அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகளில் கல்வி, நோட்டுப்புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், சீருடை, மதிய உணவு, முகாம்களில் இருந்து பள்ளிக்கூடம் வரை செல்ல பேருந்துப் பயணச் சலுகை ஆகியன இலவசமாக வழங்கப்படுகின்றன. 11ஆம் வகுப்பில் பயிலும் இலங்கை அகதி மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கப்படுகிறது.

2004 - 2005ஆம் ஆண்டில் அகதிகள் முகாம்களுக்கு மொத்தம் செலவிடப்பட்ட தொகை 28 கோடி ரூபாய் என்பதற்கு மாறாக; 2008 - 2009ஆம் ஆண்டில் 48 கோடியே 58 இலட்சம் என உயர்த்தப்பட்டு செலவிடப்படுகிறது.

அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அகதிகள் முகாம்களுக்குச் சென்று, அவர்களைச் சந்தித்து, குறைகளைக் கேட்டறிந்து, அவற்றை உடனடியாகக் களைவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் உள்ள முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு இப்படி ஏராளமான சலுகைகளை வழங்கியுள்ள அரசைப் பார்த்து - ஒரே ஒரு அகதிகள் முகாமை மட்டும் பார்த்துவிட்டு, ஏதோ தனக்குத்தான் எல்லாம் தெரியும்; அரசின் எல்லாக் காரியங்களுக்கும் தானே தூண்டு கோல் என்ற பாணியில் "ஆனந்த விகடனில்" விஜயகாந்த் குறை சொல்லியிருப்பதும், அதை "விகடன்" பளபளப்பாகவும், பரபரப்பாகவும் வெளியிட்டிருப் பதும்; எவ்வளவு "விரசம்" நிறைந்த விஷயம் என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்க வேண்டுகிறேன்.

ஒரு கட்சியின் தலைவர் எனப்படுபவர் - எதிர்காலத்தில் முதலமைச்சர் என்ற நினைவிலே திளைப்பவர் - அளித்துள்ள ஒரு பேட்டி; அத்தனையும் உண்மைதானா? அல்லது அடிப்படையற்றதா? என்று அறிந்து கொள்ளும் அவா இருந்திருக்குமேயானால்; "ஆனந்த விகடன்" - விஜயகாந்த் பேட்டியில் சொன்ன விபரங்களைப் பற்றிய உண்மைத் தகவலை அறிந்து கொண்டு வெளியிடுவதற்கு முயற்சியாவது செய்திருக்க வேண்டாமா?

அன்புள்ள,

மு.க.

21-12-2008

3358. யெச்சூரியின் எச்சரிக்கை இஃது!

உடன்பிறப்பே,

வயது முதிர்ந்த கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களில் என்னைக் கவர்ந்தவர்களில் ஒருவர்- ஹர் கிஷன்சிங் சுர்ஜித் - மூப்பின் காரணமாக நலிவுற்று வீட்டிலேயே இருந்த அவரை; நான் டெல்லிக்குச் செல்லும் போதெல்லாம் வீடுதேடிச் சென்று நலம் விசாரிக்கத் தவறியதில்லை. அரசியல் சமுதாயக் கருத்துக்களை அவரிடம் பகிர்ந்து கொள்வதிலும் - அவரது அபிப்பிராயங்களுக்குத் தனித்தகுதி அளித்து மேற்கொள்வதிலும் எனக்கு ஓர் உற்சாகம் பிறப்பதும்- உத்வேகம் எழுவதும் - இயற்கையாக என்பால் இடம் பெற்றவையாகும். அவரது வரிசையில் டெல்லிப் பட்டணத்தில் நான் சந்தித்துப் பழகிய வாலிப வயதினரான மற்றொரு கம்யூனிஸ்டு தோழர் - சீத்தாராம் யெச்சூரி அவர்களாகும்.

டெல்லியில் அரசுகள் புதிது புதிதாக அமையும் போதெல்லாம், நானும் அவரும், தம்பி மாறனும், அய்யா மூப்பனார் அவர்களும், இணைந்து ஆலோசித்து முடிவுகளை மேற்கொண்ட நிகழ்வுகள் எல்லாம் உண்டு.

அரசியல் புயல் தாறுமாறாக வீசிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் வயோதிக- மற்றும் வாலிப கம்யூனிஸ்டு தலைவர்கள் பற்றிய சிந்தனை உமக்கு உதயமானது ஏன் என்று; உடன்பிறப்பே, நீ கேள்வி எழுப்பலாம் - இந்த இருவரில் மூத்தவரான ஹர் கிஷன்சிங் சுர்ஜித் அவர்கள் இப்போது உயிரோடு இருந்திருப்பாரேயானால்; அவரின் அனுபவ அறிவின் அழுத்தம் நிலைமையைச் சீர்படுத்தப் பயன்பட்டிருக்கும் என்ற கருத்து எனக்கு உண்டு. நண்பர் சீத்தாராம் யெச்சூரியைப் பொறுத்தவரையில் சிலவற்றை இயற்கைக்கே விட்டுவிட்டு; மனத்தில் உள்ள இலட்சியத்தை அது தானாகவே வெற்றி அடையட்டும் என்று காத்திருப்பவர் - என்பதை நான் நன்குணர்வேன். அதற்காக, தான் கொண்ட கொள்கை, குறிக்கோள் நிறைவேறிடத் தொண்டு புரியாமல் இருந்துவிடுபவரும் அல்ல.

உடன்பிறப்பே; அதற்கோர் உதாரணம் கூறுகிறேன்; நான் சொல்வது சரியா, தவறா என்பதை நீயே ஆய்ந்து அறிந்துகொள்ள அது உதவும்.

இந்திய அரசியல் அரங்கில் இன்றைய ஆளுங்கட்சியான காங்கிரசுக்கும், இடதுசாரித் தலைவர்களுக்கும் அமெரிக்காவுடனான அணு ஒப்பந்தம் குறித்த பிரச்சினையில் மன வேறுபாடு ஏற்பட்டு; நடுநிலையில் நானிருந்து அரும்பாடு பட்டும் - இயலாமல் - அணிமாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. அந்தத் தாக்கம் தமிழகம் வரையில் வேரோடி விட்டதால்; நமது இயக்கமும், கழக ஆட்சியும் - அவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி, தோழமைக்கும் ஆழக் குழிதோண்டப்பட்டாகி விட்டது.

ஒருகாலத்தில் கம்யூனிஸ்டுகளைப் பொறுத்த வரையில், மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்ட தேர்தல் உடன்பாடுகள், தேர்தல் கூட்டணிகள்; என்று அமைந்த நிலைமாறி - இன்று அகில இந்திய அளவில் ஒரே கூட்டணிதான் என்று திட்டவட்டமாக முடிவெடுத்துவிட்டதாகச் சொல்லி; மதவாதிகளுக்கு எமது கூட்டணியில் இடமில்லை என்று கூறிக்கொண்டே மத வெறியாளர்களுக்காக கரசேவைக்கு அயோத்திக்கு ஆதரவளித்த ஜெயலலிதாவை அணித்தலைவியாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையல்லவா இன்று!

> “சேதுசமுத்திரத் திட்டம் அண்ணாவின் கனவு - அதை அ.தி.மு.க. அரசு நிறைவேற்றியே தீரும் - தமிழகத்தை வாணிப ரீதியிலும், பொருளாதார நிலையிலும் வளப்படுத்துவதோடு - இலங்கையைச் சுற்றிக் கொண்டு போகவேண்டிய கடல் பயணத்தைப் பலகல் தூரம் குறைக்கக் கூடிய - அந்த அருமையான திட்டத்தை நிறை வேற்றாமல் விடமாட்டேன் - என்று அ.தி.மு.க. தேர்தல் அறிக்கைகளிலும் - தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் சூளுரைத்தவர் - அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா - ஆனால்; இப்பொழுது அவரே; “இராமர் கட்டிய பாலத்தை இடிப்பதை எதிர்க்கிறேன்” என்று வழக்காடுகிறார் உச்சநீதிமன்றம் வரையில்.” ஆம்; இல்லாத பாலத்துக்காக இப்படி ஒரு போர் முழக்கம்! இடி முழக்கமாக!

இணையற்ற எத்தனையோ பொறியாளர்கள், விஞ்ஞானிகள், மேதைகள், எடுத்துச் சொல்லியும் கூட; சேதுசமுத்திரத் திட்டத்துக்கு எதிராக இன்றைக்கு இராமனையும், இராமாயணத்தையும் காட்டுகிற மதவாதத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார் - இந்த நேரத்தில்தான் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகளின் நாளேடான "தீக்கதிர்" எனும், நான் தினந்தோறும் படிக்கிற ஏடுகளில் ஒன்றான அந்த ஏட்டில்;

"சீத்தாராம் யெச்சூரி அழைப்பு" என்ற தலைப்பில் 22.12.2008 அன்று வெளி வந்துள்ள கருத்தோவியம்; இது சென்னையில் "தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் 11வது மாநில மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய தோழர் யெச்சூரி வெளியிட்ட கருத்துக்கள் பலவற்றில், இதோ சிலவற்றை மட்டும் தொகுத்து வழங்கியுள்ளேன்."

அதுவருமாறு:-

"மூட நம்பிக்கைகள், மதவெறி போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதற்காக ஒரு ஊடகமாக கலாச்சாரம் திகழ வேண்டும். இலக்கிய நயத்தை ரசித்துப் போற்றுகிற அதே நேரத்தில், புராணக் கற்பனையையும் வரலாற்று உண்மையையும் பாகுபடுத்திப் பார்க்க வேண்டும். இன்றைய இலங்கை, இந்தியா உள்பட ஒரே நிலப்பகுதியாக இருந்த காலகட்டம் உண்டு. கடல் மட்டம் உயர்ந்ததை தொடர்ந்துதான் இலங்கை தனித் தீவாகியது. அதற்கு இடையே ஒரு பாலம் இருந்ததாக சொல்வது இனிய புராணக் கற்பனை. அதையே வரலாற்று உண்மையாகக் கூறி சேது சமுத்திரத் திட்டம் போன்றவற்றை முடக்க முயல்வார்களானால் அதை எதிர்த்து போராட வேண்டும்.

தசாவதாரம் புராணத்தில் உள்ள விலங்கு வடிவங்களை அறிவியல் உண்மைகளோடு இணைத்து நாம் பேசினால் மதவாதிகள் அதை விமர்சிக்கிறார்கள். ஆனால் நாம் கற்பனை எது, அறிவியல் எது என்று பகுத்தறிவோடு இதையும் பார்க்க முடியும்.

அதேபோல் ராமாயணம் என்பது ஒரே கதையல்ல. ஒவ்வொரு வட்டாரத்திலும் அந்தந்தப் பகுதியின் சமூக -

அரசியல் - பொருளாதார சூழல்களுக்கு ஏற்ப மாறுபட்ட ராமாயண கதைகள் உருவாகி உள்ளன. அதில் ராமன் போன்றவர்களை மனித உருவிலும், ஜாம்பவான், வாலி போன்றவர்களை விலங்கு உருவத்திலும் படைத்ததிலும்கூட, ஆரியர்- திராவிடர் போராட்டம் இருக்கிறது. ஆரியர் மேன்மையை நிலைநாட்ட திராவிடர்களை தாழ்வானவர்களாக சித்திரிக்க இது கையாளப்பட்டது.

இன்று ராமாயணத்தை ஒரே கதையாக்குகிற முயற்சி நடக்கிறது. ஒற்றை கலாச்சார ஆதிக்கத்திற் காகவே இவ்வாறு செய்யப்படுகிறது. புராணத்தை வரலாற்றோடும் - இறையியலை தத்துவத்தோடும் கலப்பது என்பது மதவெறி சக்தி களின் வேலை. ஆளும் வர்க்கங்களின் சுரண்டல் வேட்டைக்கு இது சாதகமாக இருக்கிறது. இதன் செல்வாக்கை தடுத்து நிறுத்த, மக்களின் உண்மையான பிரச்சனைகளை மையப்படுத்தும் படைப்புகள் நிறைய வரவேண்டும்."

உடன்பிறப்பே; யெச்சூரி எழுப்பியுள்ள இந்த மூலமுழக்கத்தில் நமது இயக்கத்தின் ஒலியும் கலந்து இணை முழக்கமாக இருக்கிற தல்லவா? யெச்சூரி அவர்கள் அணி சேர்ந்துள்ள ஜெயா கட்சியில் இது இணை முழக்கமாகக்கூட வேண்டாம்; துணை முழக்கமாகவாவது அமைந்துள்ளதா? -

அமைந்திருந்தால் அண்ணா கண்ட கனவான சேதுசமுத்திரத் திட்டத்துக்கு எதிரான வரிசையில் நின்று; நீதிமன்ற தடை பெறுவதற்கும்கூட நெடிய பயணம் நடத்துவார்களா?

யெச்சூரியின் பேச்சைப் படிக்கும் நமக்கு என்ன தோன்றுகிறது? இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் இணையும் நிலைமையினை உள்ளடக்கிய இலட்சியத்தைக் காண முடிகிறது - ஆனால் இன்று அணி சேர்ந்து ஆர்ப்பரிப்போர் எதிர்காலத்தில் "யெச்சூரி" கருத்துக்கு எதிர்க்கருத்து கூறும் அணியில் அன்றோ இருக்கப் போகின்றார்!

அன்புள்ள,

மு.க.

23-12-2008

3359. வளைந்த வாளாயினும்; விளைந்திடும் வெற்றி!

உடன்பிறப்பே,

பெயரளவில் மட்டும் ஜனநாயக இயக்கமாக இல்லாமல்; ஜனநாயகத்துக்கு நெருக்கடி ஏற்பட்ட அவசர காலத்தில்கூட; இந்தியாவிலேயே சுதந்திரக் காற்றை சுவாசிக்கக்கூடிய இடமாக இப்போது தி.மு.க. ஆட்சி நடக்கிற தமிழ்நாடுதான் இருக்கிறது என்று தோழர் ஈ.எம்.எஸ்.நம்பூதிரி பாட் அவர்களால் அனுபவரீதியாகச் சுட்டிக்காட்டப்பட்ட தி.மு.கழகத்தின் தலைவனாக நான் இருப்பதிலும்; இந்த இயக்கத்தின் ஒரு கோடிக்கு மேற்பட்ட உறுப்பினர்களில் ஒருவனாகவோ; ஒருவராகவோ; நீ இருப்பதிலும் நமக்குத்தான் எத்துனை பெருமை! எத்துனை பெருமிதம்!

1949ஆம் ஆண்டு இந்தக் கழகம் தொடங்கப்பெற்று - ஓரிரு ஆண்டுகள் கடந்து மதுரையில் அய்யாசாமி, ரஜமான் என்ற இரு நண்பர்கள்; மதுரையில் ஒரு அமைப்பின் மீது கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் எடுத்த நடவடிக்கையைக் குறை கூறிப் பொதுக் குழுவில் குற்றஞ்சாட்டி, அதை விசாரிக்க வேண்டுமென்று முறையிட்டார்கள். உடனே அண்ணா அவர்கள் எழுந்து என்ன செய்தார் தெரியுமா?

> “இரு நண்பர்களும் என் மீதே குற்றம் சாட்டுவதால் இதை நானே விசாரித்து முடிவு கூறுவது ஜனநாயகமல்ல; எனவே, இந்த விசாரணைக்கு நண்பர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் தலைமையேற்று நடத்தி முடிவு கூறட்டும்; என்றுரைத்து ஆசைத் தம்பியை நாற்காலியில் அமரச் செய்து, அண்ணா கீழே இறங்கி பொதுக்குழு உறுப்பினர்களுடன் அமர்ந்து கொண்டார். ஆசைத்தம்பி அவர்கள் அய்யாசாமி, ரஜமான் இருவரிடமும் விசாரணை செய்து - அவர்கள் சாற்றிய குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை என்றும், அண்ணா மீது

வீண்பழி சுமத்தப்படுகிறதென்றும் தீர்ப்பு வழங்கினார். அதன் பிறகே அண்ணா அவர்கள் பொதுச் செயலாளர் பொறுப்பில் அமர்ந்து, பொதுக் குழுக் கூட்டம் நடைபெறத் துணை நின்றார்."

அப்படி உட்கட்சி ஜனநாயகத்தையே பத்தரைமாற்றுத் தங்கமாகப் பாவித்து, பயிற்சி பெற்று; அந்தப் பயிற்சியைக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கிய, மக்களாட்சித் தத்துவத்தின் மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் நிழல் தொடர்ந்து நடந்து; கொள்கை கோட்பாடுகளில் நிலைபெற்று நிற்பவர்கள் நாம் -

நம்மை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் நிலையில் வளர்த்த காஞ்சித் தலைவருக்கும் - அவரைக் கண்டெடுத்து கண்ணின் மணியாக நமக்குத் தந்த தந்தை பெரியாருக்கும் - அவர்கள் இருவரும் உருவாக்கிய இயக்கத்துக்கும் இணைத்து முப்பெரும் விழா எடுப்பவர்கள்; இந்த ஆண்டு அண்ணனின் நூற்றாண்டு விழாவினைச் சென்னையிலும், திருச்சியிலும், கோவையிலும் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தோம்.

அடுத்துக் கொண்டாடும் இடமாகக் குமரி மாவட்டத்தைத் தேர்வு செய்துள்ளோம்.

அங்கேதானே கழக ஆட்சிக் காலத்தில் விவேகானந்தர் மண்டபம் உருவாயிற்று; நமது அரசின் உதவிகளோடு!

அங்கேதானே காந்தி நினைவு மண்டபமும் உள்ளது!

அங்கேதானே பெருந்தலைவர் காமராஜருக்குக் கடற்கரை ஓரத்தில் நினைவு மாளிகை அமைத்துள்ளோம்!

அங்கேதானே விண்முட்டும் அளவுக்கு அய்யன் வள்ளுவர் சிலை அமைத்துள்ளோம் -

இன்னும் ஓரிரு திங்களில், அதாவது பிப்ரவரித் திங்களில் அங்கேதான் அண்ணா நூற்றாண்டு விழா நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம்!

உடன்பிறப்பே;

இந்தக் கழகம் உன்னைப் போன்ற லட்சோப லட்சம் உடன்பிறப்புக்களின் எழில் வடிவ மல்லவா? இன்றும் இதன் இளமைப் பொலிவுக்கு நீ தரும் வலிவன்றோ காரணம்?

எத்தனை எத்தனை சோதனைகளை நீ தாங்கித் தாங்கி, எதிர்ப்புக்களைப் புறங்காணச் செய்திருக்கிறாய்!

நீயே கழகம்! கழகமே நீ! நீ சிந்திய வியர்வைத் துளிகளின் விளைவே கழகம் ஈட்டிய வெற்றிகள்! கழகம் பெற்ற பெருமைகள்! கடந்திடும் சோதனைகள்! எனவே, கழகத்தை நான்; உன் அசைவிலே, நடையிலே, பேச்சிலே, மூச்சிலே காணுகிறேன்.

அப்பப்பா! குலைந்தது கட்சி! தொலைந்தது இனிமேல்! சீந்துவார் யாருமின்றி - சீராட்டும் பாராட்டும் பெறாமல் - 'சீ' என்றிகழப்பட்டுத் தெருப்புழுதியிலே சேர்க்கப்பட்டுவிடும்! என்றெல்லாம் மாட கூடங்களில் இருந்து மமதையை மலையென மனத்தில் வளர்த்துக் கொண்டோர் ஆரூடம் கணித்த நேரத்தில்; என் ஆருயிர் உடன்பிறப்பே! நீயல்லவா நிமிர்ந்து நின்று சுடர் முகம் தூக்கி கோடிக்கதிரவன்கள் கூடிவந்ததுபோல் ஒளிபரப்பி எட்டுத் திசையும் முரசு கொட்டுக என்று முழக்கமிட்டாய்; கோடையிடிகளென! குன்றங்கள் ஒன்றோடொன்று மோதியெழுப்பிய ஒலியென!

எரிச்சல் கணை - ஏசல் பாணம் - கண்டனச் சொற்கள் - கடுமொழி - கடும் பார்வை - இத்தனையும் கொண்ட தீயசக்திகள், பிற்போக்குப் பிறவிகள், கழகம் பிறந்த காலந்தொட்டு அதனை அழிப்பதற்கு நேரம் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றன. துரோகச் சிந்தையினர் தம் சுகவாழ்வு ஒன்றை மட்டும் முன்னுக்கு நிறுத்தி தூய நற்கழகத்தை அழித்திட தங்கள் கரங்களில் சதிக்கருவி ஏந்திடவும் தயங்கவில்லை. நம்மிடமிருந்து பிரிந்து சென்றவர்களே அதற்கு வழியும் வகுத்துக் கொடுத்தனர். கழகமே நீயாக; நீயே கழகமாக ஆகிவிட்ட என் இதயமலரே! அந்த மலர் தரும் மணமே! அந்த மணம் தரும் சுகமே! உயிரினுமினிய உடன்பிறப்பே! துரோகத்தைத் தூள் செய்து பகையைப் புறங்கண்டு நீ தூக்கி உயர்த்தியிருக்கிற இருவண்ணக் கொடியைக் காணும்பொழுதும், அந்தக் கொடியின் பட்டொளியில் இயக்கச் சரித்திரத்தைப் படிக்கும் பொழுதும், ஓரம்போகியார் எனும் ஒரு பெருங் கவிஞர் எழுதிய புறப்பாடல் ஒன்றை நான் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

கவிஞர் எழுதிய போர்ப்பாடலில் இரண்டு நாட்டு மன்னர்கள் போரிடுகிறார்கள். ஆனால், நம் நிலையோ அப்படியல்ல. நம்மிடமிருந்து பிரிந்து சென்றவர்களே நமக்கு எதிரியாகி தாக்கும் நிலை.

“வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை சூடிக் காலின்
தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
ஒருகை யிரும்பிணத் தெயிறு மிறையாகத்
திரிந்த வாய்வா டிருத்தாத்
தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே!”

போர் மூண்டுவிட்ட சமயத்தில் மன்னன் ஒருவன் உடனே களம் புகுமாறு வீரர்களுக்கெல்லாம் செய்தி அனுப்புகிறான். பகை சாய்க்கும் குறியுடன் பல பகுதிகளிலிருந்தும் வீரர்கள் வந்து கூடுகின்றனர். போர் தொடங்கி விடுகிறது.

அந்தப் போரில் கலந்துகொள்ள ஓடோடி வரும் ஒரு வீரனை மட்டும் புலவர் ஓரம்போகியாரின் விழிகள் வட்டமிடுகின்றன. அவன் யானையில் அமர்ந்தோ, புரவியில் ஏறியோ அல்லது தேர் செலுத்தியோ அந்தக் களத்திற்கு வரவில்லை.

தன்னந்தனியனாக, நூலரி மாலையை அணிந்து கொண்டு, கையில் ஓர் வாளுடன் காலாட்படை வீரனாக களத்தில் நுழைகிறான். கடும் போரிடுகிறான்.

மானங்காக்கப் போரிடும் அந்தத் தமிழ் மறவர் குல திலகத்தையே ஓரம்போகியார் உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்கிறார் உயர்ந்ததோர் குன்றின் உச்சி மீது ஏறி! புலவரல்லவா? எனவே குன்றேறி நின்று போர்க்களக் காட்சி காணுகிறார்! அந்த மாட்சியைக் கவிதையாக வடிக்கிறார்!

அவர் உள்ளங்கவர்ந்த வீரன், எதிரிப்படை வீரனை நோக்கிப் பாய்கிறான். பகைவனோ யானைமீது இருந்து போரிடுபவன்! இவனோ பூமியின் தோளைத்தான் குதிரையின் முதுகெனக் கருதிக் கொண்டு வாள் சுழற்றுகிறான்.

அந்த வாள் வீச்சு! மாரிக்கால மின்வெட்டின் வீச்சு! யானை கீழே வீழ்கிறது. யானையை வீழ்த்திய அவன் வாளும் வளைந்து கோணி விடுகிறது.

யானையின் மீதிருந்து விழுந்த வீரன், எழுந்துவந்து எதிரியைத் தாக்கி அழிப்பதற்குள் வாளை நிமிர்த்தியாக வேண்டும். என்ன செய்தான் தெரியுமா? ஓரம்போகியார் உரைக்கிறார் கேள்! அந்தப் போர்க்களத்தில் அவன் வாளை நிமிர்த்துக்கொள்ள உடனடியாக எந்த வசதியும் கிட்டவில்லை.

எதிரியோ, எழுந்துவிட்டான்! விரைவில் அருகே நெருங்கி விடுவான்! பளிச்செனத் தோன்றியது ஒரு அரிய யோசனை! கோணிய வாளை எடுத்து, அங்கே தன்னால் வீழ்த்தப் பட்டுக் கிடக்கிற யானையின் மத்தகத்தில் அழுத்தி நிமிர்த்துக் கொள்கிறான்.

அவனது வளைந்துபோன வாளை நிமிர்த்துக் கொண்டான் என்பதைக் கண்டதும், எதிரிப்படையின் வீரன் எடுக்கிறான் ஓட்டம்! புறங்காட்டி ஓடுகிற அவனைப் பார்த்து அந்த வீரன் நாணி, நகைக்கத் தொடங்குகிறான்.

உடன்பிறப்பே, ஓரம்போகியார் சித்திரிக்கும் அந்தத் திறன்மிகு தீரனாகத்தான்; உன்னை - ஆம் - கழகத்தை; நான் கருதுகிறேன். கொல்ல வரும் பகையை அவன் விரட்டியதுபோல், தொல்லைதரும் துரோகத்தை நமது கழகம் வெற்றி கண்டு இளநகை புரிகிறதல்லவா?

இந்த இளநகை, கையில் வேலோ வாளோ ஏந்திப் பெற்றதல்ல! இதயத்தில் கொள்கையும், உறுதியும் ஏந்திப் பெற்றதாகும்! புறநானூற்று வீரன் தன்னந்தனியனாகக் களத்திற்கு வருகிறான் என்கிறார் புலவர்!

கழகமோ, கடமையெனும் கட்கமேந்தி, கண்ணியமெனும் கவசம் பூண்டு, கட்டுப் பாடெனும் கேடயங்கொண்டு, தனிமையில் விடப்பட்ட போதிலும் தளரா உறுதியுடனும் ஊக்கத்துடனும் எதிர்ப்புகளைப் புறங்கண்டு வெற்றிப் புன்னகை கொட்டுகிறது.

இடையிலுள்ள ஒரு எழுத்து அகன்றால் "வெற்றி"; "வெறி" ஆகிவிடும்! அதற்கு என்றுமே இடம் தராது அரசியல் பெருந்தன்மை போற்றிட வேண்டும்.

இந்தப் பண்பாட்டை நமக்கு உணர்த்தியவர் தான் நமது தலைவர் அண்ணா!

அந்தத் தலைவருக்குத் தலைவர்தான் பெரியார்!

அண்ணா அப்போது நமக்குணர்த்திய அந்தப் பண்பாட்டை அணுவளவும் பிசகிடாமல் காத்திடுவாய் எனும் நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு. இப்போது திடீரென வந்துவிட்டது திருமங்கலம் இடைத்தேர்தல்! "கொக்கு பறக்குதடி பாப்பா - அதைக் கோபமின்றி கூப்பிடடி பாப்பா! ; மக்களை ஏமாற்றும் கொக்கு - அதன் மமதை அழிய வேண்டும் பாப்பா!" என்று வீதிதோறும் பாடி, விடுதலை வேட்கையைத் தட்டி எழுப்பிய விசுவநாததாசுக்கு; நாம் எழுப்பிய நினைவு மண்டபம் திருமங்கலத்திலேதான்! அவர் இசைத்த பாடல் இன்றைக்கும் பொருத்தம் தான்! அமுதத் தமிழ்மீது கொண்டிருந்த அளவிலாப் பற்றால் அவ்வைக்கு அரு நெல்லிக்கனி அளித்த அற்றை நாள் தகடூர்த் தலைவன் அதியமானை நினைவூட்டிடும் பெயர் திருமங்கலம் அதியமானின் பெயர். அவரது துணைவியார் திருமதி லதா அவர்களைக் கழக வேட்பாளராகக் களத்தில் இறக்கியிருக்கிறோம். 2006-ல் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர் வந்த இடைத் தேர்தல்கள் இரண்டிலும் நமது கழகமே வாகை சூடியது. உடன்பிறப்பே, அந்த வெற்றி வரலாறு தொடர்ந்திட இந்த இடைத்தேர்தலிலும் வாகைசூடிடுவாய்!

அன்புள்ள,

மு.க.

25-12-2008

3360. என் தோள் வலியே நீ தான்!

உடன்பிறப்பே,

திருமங்கலம் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் முடிந்து சென்னை திரும்பிய பின் - இடதுபுறத் தோளிலும் - புஜப் பகுதியிலும் நீண்ட காலமாக அவ்வப்போது தலைகாட்டிக் கொண்டிருந்த "அதிர்ச்சி வலி" ஏற்பட்டு; அது நீடித்த தொல்லையையும் தந்து விட்டதால், டாக்டர்கள் அறிவுரைப்படி கையசைவுக்குச் சற்று "தாங்கலாக" ஒரு தொங்கும் தொட்டில் போல கட்டுப் போட்டுக் கொண்டிருந்தேன். அது புகைப்படக்காரர் கண்களுக்குத் தப்புமா; என்ன? தப்பாத காரணத்தால் தவறாமல் சில ஏடுகளிலும் அது செய்தியாயிற்று. தொலைக்காட்சிகளிலும் அதைப் பார்த்துவிட்டு தொலைபேசி வாயிலாக பலர் கேட்டுக் கொண்டே இருந்தனர்.

2001 ஆட்சி மாற்றத்தையொட்டி நள்ளிரவில்; நான் கைது செய்யப்பட்டபோது காவல்துறை நண்பர் ஒருவர் என் கையை முறுக்கிக் காரில் ஏற்றியபோது ஏற்பட்ட ஊமைக்காயம், உள்ளுக்குள்ளிருந்தே அடிக்கடி எனக்கு உபத்திரவம் தந்து கொண்டிருந்ததை உன் போன்றோர் அறிவீர்! பலநாள் சிகிச்சைக்குப் பிறகும் அந்த வேதனையின் வேகம் தணியவில்லை. விழாக்கள், கூட்ட நிகழ்ச்சிகள் - வெளியூர் பயணங்கள் - அனைத்திலும் கழக உடன் பிறப்புக்களாம் உன் போன்றோர் தரும் சால்வைகளை, கைத்தறி ஆடைகளை; காரின் இடது புறத்திலே அமர்ந்து இடது கையை நீட்டி நீட்டி- வாங்கி வாங்கி; ஒரு நிகழ்ச்சியில் எத்தனை தடவை என்று சொல்ல முடியாத அளவுக்கு அவ்வளவையும் நானே வாங்கிக் குவித்து - அதன் காரணமாக, அந்த வலி கையைச் சிறிதுகூட அசைக்க முடியாமல் - கையின் நரம்பு மண்டலம் முழுவதும் பரவி - விரல்களையும் வளைக்க முடியாமல் மிகப் பெரும் வேதனையாகிவிட்டது. இன்னமும் இதை வளர்த்துக் கொண்டு போகக் கூடாது என்று டாக்டர்கள் அறிவுரை கூறி தோள்பட்டை பகுதியில் எக்ஸ்ரே, ஸ்கேன் இரண்டும் எடுத்து

- சோதித்தப் பார்த்ததில் அப்போது ஏற்பட்ட உள் காயம் சற்று விரிவடைந்து இருந்ததும், அது நரம்புகளைத் தாக்கி இந்த வலியை ஏற்படுத்தியதும் புரிந்து; ஒரு சிறு அளவில் அவசர அவசியம் கருதி அறுவை சிகிச்சை போன்ற ஒரு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு மருத்துவமனையிலே ஓரிரு நாள் ஓய்வெடுக்க வேண்டுமென்று கூறிய போதிலும் தமிழர் திருநாள் புத்தாண்டை ஒட்டிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஒப்புதல் அளித்திருந்த காரணத்தால் இரண்டு நாட்கள் வீட்டிலேயே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறேன். அந்த ஓய்விலும், பொங்கல் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு முதல் நாள் திருமங்கலம் வெற்றி விழா - இந்த விழாக்களைக் கொண்டாட உயிரனைய உடன்பிறப்புகளாம் நீவீர் உங்கள் மகிழ்ச்சியில் எனக்கும் பங்கிருக்க வேண்டும் என்பதற்காக என்னை வந்து சந்தித்து வாழ்த்தி - வாழ்த்துப் பெற்று சென்ற நிகழ்ச்சிகளை எண்ணும்போது என் தோள் வலி மறந்தே போகிறது, பறந்தே போய்விட்டது. தோள் வலி என்பதற்கு "தோள் வலிமை" என்றும் ஒரு பொருள் உண்டல்லவா? உன் போன்ற உடன் பிறப்புகளின் அன்புப் பொழிவையும், பாசப் பெருக்கையும் நேரிலே காணும்போது இத்தகைய தோள் வலி எனக்கு இருக்கும் போது உடலிலே ஒரு பகுதியிலே வந்து புகுந்துகொண்ட தோள் வலிக்கு அஞ்சுவானேன்? வருந்துவானேன்? என்று நான் நினைப்பது எவ்வளவு பொருத்தமானது!

அன்புள்ள,

மு.க.

16-1-2009

3361. நடுவண் அரசை நம்பியிருப்போம்!

உடன்பிறப்பே,

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக் காலத்துக்கு மேலாக இலங்கையில் தமிழின மக்களின் உரிமைகளை மீட்டு எடுப்பதற்காக தொடங் கப்பட்ட அறப்போர் - தந்தை செல்வா அவர்களின் தலைமையில் நடைபெற்று - பல கட்டங்களைச் சந்தித்து இன்று உச்ச கட்டத்தை எட்டியிருக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை வலியுறுத்தி 1956 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில் நான் முன் மொழிந்ததும் - பெரியவர் பூவாளூர் பொன்னம்பலனார் வழிமொழிந்து நிறைவேற்றப் பட்டதுமான தீர்மானம் என்பதைக் கணக்கிடும்போது அந்த வாய்மைப் போரின் வழித்தடத்தில் நானும் நடந்து வந்திருப்பதையும் - அப்படி நடக்கும்போது; வசதி வாய்ப்புகளுக்கேற்ப - இலங்கைத் தமிழர்கள் அமைதியாகவும், உரிமைகளுடனும் வாழ்ந்திட என்னால் எந்த அளவுக்கு முடியுமோ; அந்த அளவுக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், அல்லது எதிர்க்கட்சியில் இருந்தாலும் பாடு பட்டிருக்கிறேன் - இன்னமும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதையும் உலகெங்கும் இருக்கிற தமிழர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

1983இல் இந்தப் போராட்டத்தின் புரட்சிகரமான திருப்பமாகவும் - தியாகத்தின் சோகச் சின்னமாகவும் அமைந்தது வெளிக் கடை சிறைச்சாலையில் குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் ஆகியோர் உள்ளிட்ட ஐம்பதுக்கு மேற்பட்டோர் கொடுமையான முறையில் கொல்லப்பட்ட நிகழ்ச்சியாகும்.

என்னை சென்னை வந்து சந்தித்து இலங்கைப் பிரச்சினை பற்றி விரிவாக எடுத்துரைத்த தந்தை செல்வா 1977இல் மறைந்த பிறகு, அவருடைய நெருங்கிய நண்பரும் - (சில ஆண்டுகளுக்கு முன்பு 1989இல் கொல்லப்பட்ட) தமிழ்ப் பெரியவருமான நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் மற்றும் அவர் துணைவியார்

மங்கையர்க்கரசி ஆகியோர் - இலங்கைப் பிரச்சினைகளை விளக்கி, அந்நாட்டில் தமிழ் மக்கள் அமைதியோடு வாழ்ந்திட இந்தியா உதவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் தூய தூதர்களாக இங்கு வந்து பெரும் பணியாற்றியபோது பிரதமர் அன்னை இந்திரா காந்தி போன்றவர்களைச் சந்தித்து அவர்களின் அந்தப் பணிக்கு நானும் துணையாக இருந்து தொண்டாற்றினேன்.

இலங்கையில் தொடர்ந்து தமிழர்களுக்கு சிங்கள அரசும், சிங்களவர்களும் கொடுத்த தொல்லை - புரிந்த கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல என்ற நிலை ஏற்பட; ஏற்பட; இலங்கைத் தமிழ் மக்களிடையே "இப்படி உயிரோடு மெல்ல மெல்லச் சாவதைவிட - ஒரேயடியாகச் சாகலாம் போரில்" என்று முடிவெடுத்திடும் நிலை உருவாயிற்று.

அதன் விளைவாக இளைஞர்கள்; விடுதலை இயக்கங்கள் சிலவற்றைத் தோற்றுவித்தார்கள். எல்.டி.டி.ஈ. என்றும் - டெலோ என்றும் - இ.பி.ஆர்.எல்.எப். என்றும் - ஈராஸ் என்றும் - டி.யு.எல்.எப். என்றும் - பிளாட் என்றும் - இ.என்.டி.எல்.எப். என்றும் - புரோடெக் என்றும் - டி.இ.எல்.எப். என்றும் - இன்னும் பல பெயர்களில் தோன்றிய அந்த இயக்கங்கள்; ஆயுதம் ஏந்தி சிங்களப் படைகளையும்; சிங்களக் குண்டர்களையும் எதிர்க்கும் போராட்டங்கள்; தொடர்ந்து இல்லாமல் அவ்வப்போது நடைபெற்று இரு தரப்பிலும் உயிர்ப்பலிகளுடன் முடிவுற்றுக் கொண்டிருந்தன.

தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சி நடைபெற்ற போதும், நமது ஆட்சி நடைபெற்ற போதும் அந்த இயக்கங்களையும் - இயக்கங்களின் தலைவர்களையும் அறிந்தவர்களில் நானும் ஒருவன் - நானும், பேராசிரியரும், தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களும், பழ. நெடுமாறன் அவர்களும், அய்யணன் அம்பலம் அவர்களும் இணைந்து நடத்திய மதுரை "டெசோ" மாநாடு; 4-5-1986 அன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகவே நடத்தப்பட்டது. அந்த மாநாட்டுக்கு அகில இந்தியத் தலைவர்கள் திரு. வாஜ்பாய், என். டி. ராமராவ், எச்.என். பகுகுணா, ராம்வாலியா, உபேந்திரா, ஜஸ்வந்த் சிங், ராச்சய்யா, சுப்பிரமணியன் சுவாமி, உன்னிகிருஷ்ணன் மற்றும் பலர் வந்திருந்து கருத்து தெரிவித்து ஆதரவும் அளித்தனர்.

இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலைக்கு முடிவு காணவும் தமிழ் மக்கள் உரிமைகளுடன் வாழவும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. எனினும் அந்த மாநாட்டில் போராளிகள் சார்பாக கலந்து கொண்ட பல குழுக்களின் தலைவர்களிடையே ஒற்றுமையில்லை என்பதை திரு. வாஜ்பாய் போன்றோர் உணர்ந்து வருந்தி அவர்களுக்கு அறிவுரை கூறினார்கள். நானும் அவர்களைத் தனியாக அமர வைத்துப் பேசி "தங்களுக்குள் சகோதர யுத்தம் தவிர்ப்போம் - ஒற்றுமையுடன் செயல் படுவோம்" என்று கையடித்து உறுதிமொழி கொடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். உறுதிமொழி வழங்கப்பட்டதும் உண்மை - அதையடுத்து டெலோ இயக்கத் தலைவர் சபாரத்தினம் கொல்லப்பட்டதும் உண்மை.

சமருக்கஞ்சா சிங்கங்கள் - சகலகலா வல்லவர்கள் - சதிகளை சாய்ப்பவர்கள் என்றாலும்; சகோதர யுத்தத்தைக் கைவிட ஒப்பாத காரணத்தால் - ஒவ்வொரு இயக்கத் தலைவர்களும் கொலையுண்ட கொடுமை நடந்து - மாபெரும் சக்தியாகப் பெருகியிருக்க வேண்டிய விடுதலைப்படை, பலவீனமுற்றது என்பதை நடுநிலையாளர்கள் மறுத்திட இயலாது.

அவர்களின் சகோதர யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று வெளிப்படையாகவே நான் வேண்டுகோள் அறிக்கை வெளியிட்டும் - வீணாயிற்று அந்த முயற்சிகள்!

நானும் பேராசிரியர் அவர்களும் இலங்கைப் பிரச்சினைக் காகவே எங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்தோம்.

என் பிறந்த நாள் விழாவில் 3-6-1986 அன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக உண்டியல் மூலம் நன்கொடையாகக் குவிந்த இரண்டு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயை எல்.டி.டி.ஈ., தவிர மற்ற அமைப்புகள் என் வேண்டுகோளையேற்று நேரில் வந்து பெற்றுக் கொண்டார்கள். அதற்குப் பின்னர் இலங்கையில் அமைதிப்படை - நடவடிக்கை - தமிழகம் வந்த இந்தியப் பிரதமர் இளம் தலைவர் - ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட மிகக் கொடுமையான நிகழ்ச்சி - இத்தனைக்கும் பிறகு; இன்னமும் இலங்கையில் தமிழ் மக்கள் அமைதியாக வாழ்வதற்கு உத்திரவாதம் அளிக்கும் நிலைமை உருவாகவில்லை.

இப்பொழுது இலங்கை ராணுவத்திற்கும் - இயக்கத்தின் தலைவர்கள் அல்லது தளபதிகளுக்கும் நடக்கிற போராட்டமாக

நாம் இதை முக்கியமாக எடுத்துக் கொள்ளாமல் - யாருக்கிடையே போர் அல்லது சண்டை எனினும் - அங்கே இலங்கையில் செத்துக் கொண்டிருப்பது அப்பாவித் தமிழர்கள்தானே என்ற தாங்க முடியாத வேதனை நம்மைத் துளைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் நமது கழகமும், மற்ற கட்சிகள் சிலவும், 14-10-2008 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றினோம் - 24-10-2008 அன்று மாபெரும் மனிதச் சங்கிலி நடத்தினோம் - டெல்லிக்கே 4-12-2008 அன்று பிரதமரிடம் சென்று அனைத்துக் கட்சியினரும் முறையிட்டோம். வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு விரைவில் அனுப்பப்படுவார் என்று பிரதமர் கூறினார்.

பிரணாப் அவர்கள் இலங்கை செல்லும் நாள் இன்னும் குறிக்கப்படவில்லை. அது நமக்கு ஏமாற்றமேயாகும்.

இதற்கிடையே பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் டாக்டர் ராமதாசு, தமிழர் தலைவர் கி. வீரமணி, விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் ஆகியோர் என்னை 12-1-2009 அன்று சந்தித்து உடனடியாக பிரணாப் முகர்ஜி இலங்கை சென்று வர ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

நான் உடனே டெல்லியில் தொடர்பு கொண்டு; பேசுவதாக உறுதி அளித்தேன்.

நான் அவ்வாறு சொன்னதையேற்றுக் கொண்டு மூவரும் சென்றார்கள்.

இந்த மூவர் குழுவினர் என்னைச் சந்தித்து விவாதித்தபோது நான் அவர்களிடம் எடுத்துச் சொல்லியவாறு உடனடியாக டெல்லியுடன் தொடர்பு கொண்டு மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலுவை, பிரதமரைச் சந்தித்து பேசுமாறு கூறி, அவரும் அவ்வாறு பேசி அதை அக்கறையோடு கவனிப்பதாக பிரதமரும் தெரிவித்து - அதைத் தொடர்ந்து மாநிலங்கள் அவை கழக உறுப்பினரும் என் மகளுமான கனிமொழி; திருமதி சோனியாகாந்தி அவர் களிடமும் மத்திய அமைச்சர் திரு. வயலார் ரவி அவர்களிடமும் நிலைமைகளை விளக்கிக் கூறி என்னுடைய கருத்துக்களையும் எடுத்துரைத்த நிலையில் - இந்தப் பிரச்சினையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்கள் கூறியிருப்பது ஆறுதலை அளிக்கிறது.

ஆனால் நண்பர் திருமாவளவன் மட்டும்; தன்னிச்சையாக யாரிடமும் அறிவிக்காமல் தானே ஒரு முடிவெடுத்து இந்தப் பிரச்சினையை வலியுறுத்தி ஒரு உண்ணா நோன்பை துவங்கியுள்ளார்.

எத்தனையோ பேரணிகள் - கண்டன ஊர்வலங்கள் - பல்லாயிரவர் திரண்ட மாநாடுகள்- உண்ணா நோன்புகள் போன்ற இத்தனையினாலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நமது உணர்வை வெளிப்படுத்தி யிருக்கிறோம்.

இலங்கைப் பிரச்சினையில் ஐம்பதாண்டு காலமாக என்னால் முடிந்ததையெல்லாம் செய்து விட்டேன், இன்னும் செய்வதற்கும் தயாராக இருக்கிறேன். என்ன செய்ய வேண்டும் என்பதை உங்கள் ஆலோசனைக்கே விட்டுவிடுகிறேன்.

இதனிடையே மத்திய அரசின் வெளி உறவுத் துறை செயலாளர் திரு. சிவசங்கர் மேனன், இன்றைக்கு இலங்கை சென்றுள்ளதும் முக்கியமானதாகவே கருத வேண்டியுள்ளது.

எனவே, இந்தியப் பேரரசு என்ன முடிவெடுக்கிறது என்பதையும் - இலங்கை அரசு அப்பாவித் தமிழர்களைப் படுகொலைக்கு ஆளாக்குவதை நிறுத்தப் போகிறதா இல்லையா என்பதையும் அறிந்திட சில நாட்கள் பொறுத்திருப்பதுதான் நலம் என்றும் - நலமான முடிவுக்கு இந்தியப் பேரரசை நாம் நம்பியிருக்கலாம் என்றும் கருதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

17-1-2009

3362. "அரக்கு மாளிகை" சதி!

உடன்பிறப்பே,

50 ஆண்டு கால வேதனை வரலாறு கொண்ட இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாட்டில் ஒட்டு மொத்தக் கருத்து என்றும் - அதே நேரத்தில் தனித்தனி கட்சிகளின் அணுகுமுறை என்றும் - பல்வேறு கோணங்களில் மக்களுக்கு திசைகள் அறிவிக்கப்பட்டு, அவர்களைத் திண்டாட்டத்திலும், திகைப்பிலும் தள்ளிவிடப்படுகிற செயல்களுக்குப் பஞ்சமில்லாமலே நடைபெற்று வருகின்றன. அனைத்துக் கட்சிகளை ஒருங்கிணைத்து அறவழியில் எத்தனை எழுச்சியைத் தமிழ் மக்கள் வாயிலாக உணர்த்த வேண்டுமோ; அந்த வழிகளில் எல்லாம் உணர்த்தி விட்டு, பிரதமரையே சந்தித்து; வெளியுறவுத் துறை அமைச்சர், இலங்கை சென்று முயற்சி மேற்கொள்வது என்ற திட்டத்துடன் இந்த அறப்போரில் ஒரு அத்தியாயம் முடிவுற்றது. ஆனால் அந்த முயற்சிகள் மேற்கொள்ளப் படாததற்கான காரணங்களை முழுமையாக அறிந்து கொள்ளாத நிலையில்; தமிழ்நாட்டில் உள்ள சில கட்சிகளின் நடவடிக்கைகள் காரணமாக - இது இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கும் பிரச்சினை என்றில்லாமல் - ஏதோ காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் பிரச்சினை என்ற கோணத்தில் திருப்பி விடப்பட்டுள்ளது. தேர்தல் கூட்டணி - வெற்றி தோல்வி - ஆட்சி மாற்றம் என்பன போன்ற அரசியல் கட்சி தத்துவப் பிரச்சினைகளில் இலங்கைத் தமிழர் பிரச்சினையையும் ஒரு சில தலைவர்கள் இணைத்துக் குழப்புவது; அவர்கள் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு பிரச்சினையை விட்டு, வெகு தொலைவு போய் விட்டதாகவே தெரிகிறது.

வெளியுறவுத் துறை அமைச்சர் இலங்கை சென்று வருவதற்கு இயலாத காரணம் எதுவும் இருந்தாலும் அதனையும் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கலாம். அல்லது எது தக்க காலம், நேரம் என்பதையாவது எடுத்துரைத் திருக்கலாம். அப்படியெதுவும் நடைபெறாதது, மாநில அரசைப் பொறுத்தவரையில் வேதனை யான நிலையாக உணரக் கூடியதுதான்.

இப்போது வெளியுறவுத் துறைச் செயலாளர் இலங்கை சென்று ராஜபக்சே அவர்களை சந்தித்துப் பேசி விட்டு வந்துள்ளார். அதன் விபரங்களும் சரியாக வெளி வரவில்லை. ஒரு வேளை பிறகு வரக்கூடும். கடந்த காலத்து ஜெயவர்த்தனே - ராஜீவ் ஒப்பந்தம் பரிசீலிக்கப் படலாம் என்பது போன்ற செய்திகள் உள்ளனவே தவிர; அதுவரையில் போர் நிறுத்தம் என்று கூட அறிவிக்கப்படவில்லை. போர்; சிங்கள ராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் என்ற பெயரால் அப்பாவித் தமிழர்கள் அன்றாடம் அங்கே உயிர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜெயவர்த்தனே - ராஜீவ் காந்தி உடன்பாடு பற்றிப் பேசி முடிக்கிற வரையில் போர் நிறுத்தப்படுகிற முயற்சியை மேற்கொள்வதில் பெரிய தவறு ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. அந்த ஒப்பந்தம் பற்றிய கருத்துக்களையும்; உடன்பாடு பற்றிய எண்ணங்களையும் - ஒப்புதலையும் இலங்கைத் தமிழர்கள் மீது இங்கிருந்து நாம் திணித்திடவும் முனைவதில்லை என்ற நிபந்தனையுடன் அணுகுவதே ஆரோக்யமானது மட்டுமல்ல; அமைதி வழியும், அமைதி நிலையும் இலங்கையில் "மறு பிறவி" எடுப்பதற்கு ஏற்றதுமாகும். இது எப்படி உருவாகும்? எப்படித் தீர்வாகும் என்ற வினாக்களுக்கு விடை கிடைப்பதற்கு முன்னர் இப்போது நம்மைப் பொறுத்தவரையில் நமது தமிழ் மாநில அரசைப் பொறுத்த வரையில் - இதனை மையமாக வைத்து ஏதேனும் விஷப் பரிசோதனைகளில் இறங்கி இதனை வீழ்த்தி விட்டுத் தாங்கள் ஆட்சிக்கு வந்து விடலாமா என்றும் அவர்களோடு சேர்ந்து நாமும் பலன் பெற முடியுமா என்றும் சில மூளைகள் யோசனையில் ஈடுபட்டிருக்கின்றன.

அம்மையார் ஜெயலலிதாவின் அறிக்கைகளில் இந்த ஆண்டு முடிவதற்குள் தமிழ் நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி மலரும் என்றும், சட்டமன்றத்துக்கும் எப்படியாவது தேர்தல் வரவழைக்க வேண்டும் என்பதுதான் அவரது விருப்பம் என்றும், விரைவில் பாராளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தல் வருவதற்கும் அவர் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருப்பதாக தனது தொண்டர்களுக்கு உறுதி அளிப்பது எதற்காக என்று எல்லோர்க்கும் புரியுமென நம்புகிறேன். மாநிலத்தில் இன்னும் இரண்டு ஆண்டுகள் வரை நீடித்திட வேண்டிய கழக ஆட்சியை; இது போன்ற பிரச்சினைகளில் வன்முறை - அராஜகம் - போன்ற கிளர்ச்சிகளை உசுப்பி விட்டு; கலைத்து விடலாம் என்று அவர் கருதுகின்றார். அப்படிக் கலைத்தால் இலங்கைத் தமிழர்

பிரச்சினைக்காக; நாம், மூன்றாவது முறையாக ஆட்சியை இழக்க நேரிடலாம்.

திட்டமிட்டு, இந்த அம்மையார் நடத்திட முனையும் "அரக்கு மாளிகை சதி"யை நாம் புரிந்து கொண்டுதானிருக்கிறோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக நாம் மீண்டும் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஜனவரி 12ஆம் நாள் என்னிடம் விவரித்து முடிவெடுக்க வேண்டுமென்று என் வீட்டுக்கு வந்த டாக்டர் ச. இராமதாசு, தமிழர் தலைவர் கி. வீரமணி, தொல். திருமாவளவன் ஆகிய மூவரும் - "முதல்வர் எடுக்கிற முடிவை ஏற்று அவ்வாறு திட்டம் வகுப்போம்" என்றுதான் உறுதி அளித்தனர். உடனடியாக டெல்லியுடன் பேசுமாறு வேண்டினர். நானும் அன்று திருமங்கலம் தேர்தல் ஓட்டு எண்ணிக்கையைக் கூட கவனிக்க நேரமில்லை; அந்த மூவருடனும் அந்தச் சமயத்திலும் ஒரு மணி நேரம் என்கிற அளவுக்குப் பேசி; அனுப்பி வைத்தேன்.

ஆனால் என்னைக் கலந்தே எதுவும் நடவடிக்கை என்று சென்றவர்கள், என்னைக் கலந்து பேசாமலே - அந்த மூவரில் ஒருவர், நண்பர் தொல். திருமாவளவன் தன்னிச்சையாக உண்ணா விரதம் என அறிவிக்கப்பட்ட நிலையில்; உண்ணாவிரதப் பந்தலில்; சிங்கள அரசைவிட இங்குள்ள காங்கிரஸ் கட்சியுடன் தான் தமக்குப் போராட்டம் என்பது போல விரிவுரைகள் ஆற்றிக் கொண்டிருந்தனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையின் உயிரோட்டத்தை எப்படி அங்கே போராளிகளுக்குள் நடந்த சகோதர யுத்தம் பலவீனப்படுத்தியதோ; அதைப் போலவே, இலங்கைத் தமிழர்களுக்காக வாதாடிடும் நமக்குள்ளேயும் "சகோதர யுத்தங்கள்" எல்லாம் மொத்தப் பிரச்சினையை மூளியாக்கி விடுகிற கதை நடப்பதற்குத்தான் - காரணமாகி வருகின்றன.

எப்படியோ; மூவர் கூடி முதல்வருடன் பேசினோமே; அடுத்த நாளே; இப்போது உண்ணா நோன்பு அறிவிக்கிறோமே என்று கூட எண்ணாது - அரசு பேருந்துகள் பல எரிக்கப்பட்டனவே இத்துணை அவசரத்துடன்; இப்போது நிறுத்திக் கொண்டிருக்கிறோமே - என்பதை சற்றுக் கூட சிந்திக்காமல் - "இலங்கை தேசியக் கொடி எரிப்பு" என்று திருமாவளவன் அறிவித்திருப்பது ஏன் என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் அவருக்குப் புரிகிறதோ இல்லையோ - இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று திட்டமிட்டு செயல்படுகிறவர்களுக்கு ஒன்று புரிகிறது; தமிழ்நாட்டையே ஸ்தம்பிக்க வைக்கும் போராட்டத்தை கருணாநிதி நடத்த வேண்டும் என்பதையும் - காங்கிரஸ் ஆட்சிக்கு இனி இங்கே இடமே இல்லை என்று சபதம் செய்வதையும் - அப்படியொரு ஒட்டுமொத்தமான அராஜகப் புரட்சி மூலமாகவாவது; கருணாநிதியை வீட்டுக்கு அனுப்பி விட முடியாதா என்ற கவலை மிகுந்த ஆவலால்தானே தவிர வேறல்ல; உடன்பிறப்பே, கேரளத்து மாவலி மன்னனை வீழ்த்தியோர் கதையை மறந்து விட முடியுமா?

கருணாநிதி, வீட்டுக்குப் போகவும் தயார் -

தமிழர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்காக காட்டுக்குப் போகவும் தயார் -

அது இலை தழை நிறைக் காடாகவும் இருக்கலாம்;

அல்லால் இடு காடாகவும் இருக்கலாம்;

எதுவாயினும் ஏற்பதில் எனக்கொரு மகிழ்ச்சியே!

அதுவும் என் நாட்டுக்காக - நண்பர்களினால்

கிடைத்தால்; இரட்டிப்பு மகிழ்ச்சியே!

"முதலில் மூவரும் கலந்து யோசிப்போம் - அதில் ஒரு முடிவெடுப்போம்" என்பது; பின்னர் தனித்தனியே முடிவெடுத்து அறிவிப்பது; அதற்கேற்ப செயல்படுவது - என்னையே இறுதியாகப் பழி கூறத் திட்டமிடுவது - நல்ல அரசியல் தந்திரங்களாக இருக்கலாம்;

அதற்கு நான் ஒருவன் மயங்கி பலிக்கடா ஆகத் தயாராக இருக்கலாம். ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்து எம்மிடம் அளித்து விட்டுப் போன இந்த இயக்கத்தை ஆம், ஒரு கோடி உறுப்பினர் கொண்ட இந்த இயக்கத்தை பலியிட முனைவோருக்குத் துணை போக நான் தயாராக இல்லை!

அன்புள்ள,

மு.க.

20-1-2009

3363. சொல்லில் செயலில் பண்பாடு!

உடன்பிறப்பே,

என் இளமைக் காலந்தொட்டு இன்று வரையிலான பகுத்தறிவு மற்றும் சுயமரியாதை இயக்கம் சார்ந்த அரசியல் பொது வாழ்வில்; சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள எந்தவொரு சமூகத்தையும் - பிரிவையும் கேலி கிண்டல் செய்தோ - தாக்கிப் பேசியோ எழுதியோ; நாகரிகக் குறைவாக நடந்து கொண்டதில்லை. அதனால்தான் சிலப்பதிகாரத்தை "பூம்புகார்" திரைக்காவியமாக நான் எழுதிய போது, அண்ணா, மு.வ., சிலம்புச் செல்வர் ஆகியோர் பாராட்டும் அளவிற்கு - பொற்கொல்லர் மீதிருந்த பழியைத் துடைக்கும் வகையில் திரைக்கதையை மாற்றியமைத்தேன்.

அதுபோலவே, என்னைப் பொறுத்த வரையில் நான் தாக்கப்பட்ட போதும் - கேலி செய்யப்பட்ட போதும் - குற்றம் சுமத்தி எரிச்சலூட்டப்பட்ட போதும்; பதிலுக்குப் பதில் என்று பண்பற்ற முறையில் பேசிப் பழகியதுமில்லை. 1957 ஆம் ஆண்டு குளித்தலைத் தொகுதியில் வெற்றி பெற்று சட்டமன்றத்தில் நுழைந்தேன். அந்த மன்றத்தில் பொன் விழா கண்ட அளவுக்கு எதிர்க் கட்சியிலும், ஆளுங்கட்சியிலும், அமைச்சர் மற்றும் முதல் அமைச்சர் பொறுப்பிலும் இருந்திருக்கிறேன், இருந்தும் வருகிறேன்.

அந்தக் கால கட்டத்தில் ஒரு நாள் 11.7.1957 அன்று எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் மேசைகளில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள சமூகங்களின் பெயர்கள் அச்சியற்றப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. அதை எடுத்து நான் படித்துப் பார்த்த போது; மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் "இசை வேளாளர்" என்று இருந்தது.

அதைத் தொடர்ந்து அன்று நடைபெற்ற அவை நடவடிக்கையின் ஒரு பகுதி வருமாறு:-

திரு. மு. கருணாநிதி: இங்கே வைக்கப்பட்டுள்ள

பட்டியலில் "சாணான்" என்றும் "வண்ணான்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் "ன்" என்ற எழுத்தை மாற்றி "ர்'' என்ற எழுத்தைபோட்டு பட்டியல் தயாரிக்க அரசாங்கம் முன் வருமா?

அமைச்சர் கக்கன்: சபாநாயகர் அவர்களே! கனம் அங்கத்தினர் திரு. மு.கருணாநிதி அவர்கள் சொன்னது மாதிரி மாற்றம் செய்ய வேண்டியதுதான் சரி....

அமைச்சர் சி.சுப்பிரமணியம்: "ன்" என்ற எழுத்தை போட்டிருப்பதினால் மரியாதை குறைந்து விடாது. சிலர் "டிரைவர்'' என்பதை "டிரைவன்" என்று மரியாதைக் குறைவாக சொல்வதாக நினைத்து சொல்வதுண்டு. இது அப்படி அல்ல. அவர்களின் ஜாதிப் பெயரின்படி போடப்பட்டிருக்கிறது. இதனால் மரியாதைக் குறைவு ஒன்றுமில்லை.

திரு. மு.கருணாநிதி : இந்தப் பட்டியலிலே மருத்துவர், இசை வேளாளர் என்றெல்லாம் மதிப்புக் கொடுத்து உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர் சி.சுப்பிரமணியம்: அதில் மதிப்பு ஒன்றுமில்லை.

அமைச்சர் கக்கன் : "I have already stated previously that the matter will be considered by the Government of Madras" (இப்பிரச்சினை குறித்து சென்னை அரசு பரிசீலனை செய்யும் என்று இதற்கு முன்னரே நான் தெரிவித்துள்ளேன்).

இவ்வாறு அமைச்சர் கக்கன் அன்று இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

சில நேரங்களில் தி.மு.க. உறுப்பினர்களோ அல்லது தி.மு.க. அமைச்சர்களோ; கடுமையான - அல்லது பிரச்சினைக்குரிய வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசிவிட்டால்; நானே சபாநாயகருக்கு வேண்டுகோள் விடுத்து; அந்தப் பேச்சுக் குறிப்பை, சட்டமன்ற நடவடிக்கை குறிப்பிலிருந்து அகற்றி விடுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். இவையெல்லாம் ஒரு கட்சியிடம், இன்னொரு கட்சி கடைப்பிடிக்க வேண்டிய கண்ணியம், பண்பாடு - அரசியல் நாகரிகம் என்பனவாகும்.

ஒரு முறை எதிர் வரிசையில் இருந்த கற்றறிந்த நண்பர்; எனக்கும் கூட நல்ல நண்பர் - அவர் ஆத்திரப்பட்டுப் பேசும்போது; முதல் அமைச்சராக இருந்த என்னை நோக்கி; "உங்கள் ஆட்சி மூன்றாந்தர ஆட்சி" என்று முஷ்டியை உயர்த்தி முரட்டுத்தனமான சொற்களைப் பயன்படுத்தி ஏசிட முற்பட்டபோது சட்ட மன்றத்தில் கழக அமைச்சர்களும் உறுப்பினர்களும் கடுங்கோபம் கொண்டு எழுந்து விட்டனர்; அவரை மறுத்துப் பேசிட!

உடனே நான் அவர்களைப் பார்த்து கையமர்த்தி உட்காரச் சொல்லிவிட்டு; "தேவையில்லாமல் ஏன் நீங்கள் ஆத்திரப் படுகிறீர்கள்? மூன்றாந்தர ஆட்சி என்று எதிர்வரிசை நண்பர் சொன்னதில் குற்றமில்லை. அவர் நமது ஆட்சியைப் பற்றி சரியாகச் சொல்லியிருக்க வேண்டுமெனில்; "நாலாந்தர ஆட்சி" என்று சொல்லியிருக்க வேண்டும் - ஆம்; பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர எனப்படும் பிரிவுகளில் இது நாலாந்தர சூத்திரர்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி என்றுதானே நண்பர் குறிப்பிடுகிறார்" என நான் சொன்னதும் அந்த நண்பர் உட்பட மன்றமே மௌனமாயிற்று - அன்றைக்கே திருச்சியிலிருந்த தந்தை பெரியாருக்கு இந்நிகழ்ச்சி இளவல் வீரமணி மூலம் கூறப்பட்டு; அவர் என்னைப் புகழ்ந்து பெருமை கொண்டார் என்று கேள்வியுற்று பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.

எனவே, பொது வாழ்க்கையில் பதில்களோ; விளக்கங்களோ; அரசியல் அறிக்கைகளோ - சூடாக மட்டுமிருந்து சுவையற்றுப் போய் விடுமேயானால்; பண்பாடும் பட்டொழிந்து போய்விடும் என்பதில் எச்சரிக்கை தேவை என்பதற்காகவே என்னைப் பற்றிய பழைய கதைகளைச் சொன்னேன்.

அறிஞர் அண்ணா பேசிய ஒரு கடற்கரை கூட்டத்தில் காலஞ்சென்ற நமது நண்பர் என்.வி. நடராசன் அவர்கள் பேசும்போது; காங்கிரஸ் சொற்பொழிவாளர் ஒருவரின் பேச்சுக்கு பதில் சொல்வதாகக் கூறி; "இனிமேல் காங்கிரஸ் மந்திரிகள் வந்தால் கல் வீசுவோம்" என்று கர்ச்சனை செய்துவிட்டார். உடனே மேடையிலிருந்த அண்ணா சட்டென எழுந்து;

ஒலி பெருக்கியைப் பிடித்துக் கொண்டு என்ன சொன்னார் தெரியுமா?

"நடராசன் இப்போது பேசிய கல் வீசுவோம் என்ற வார்த்தைகளுக்காக - முதலில் மன்னிப்பு கேட்டுக் கொண்டு, பிறகு பேசலாம்"

என்று கட்டளையே இட்டார். திரு. என்.வி. நடராசன் அவர்கள் அந்தக் கூட்டத்தில் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுக் கொண்டுதான் பேச முடிந்தது.

இப்படிப் பண்பாடும் அரசியல் நாகரிகமும் கற்றுத் தந்த ஆசானாம் அண்ணாவிடம் பயின்ற ஒருவனின் வேண்டுகோளாக;

நமது கட்சியைச் சேர்ந்தோர் உள்ளிட்ட
எல்லாக் கட்சியினருக்கும் –
நான் பணிந்து சமர்ப்பிப்பது:

“மாற்றுக் கட்சியினரையும் மதித்திடுவோம்”

“மறைந்த தலைவர்களின்
சிலைகளை மாசுபடுத்த மாட்டோம்”

“வில்லம்பு பட்ட புண் உள் ஆறும்;
ஆறாதே சொல் அம்பு பட்ட புண்
என்பதை மறவாமல் –
விரோதிகளிடமும்; பண்பு காட்டிடுவோம்”

★

தவறுகளை நாமும் திருத்திக் கொள்வோம் –

தவறு செய்பவர்களையும்; திருத்தத்
தயங்காமல் முற்படுவோம்!

இனியொரு தவறு செய்து இழிநிலை
கொள்ள மாட்டோம்

என இன்றே சபதம் ஏற்போம்.

உடன்பிறப்பே,

புதுச்சேரியில் இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களின் சிலை மாசுபடுத்தப்பட்ட அநாகரிகச் செயலைக் கண்டும் கேட்டும் இதை எழுத நேரிட்டது.

அன்புள்ள,
மு.க.
21-1-2009

1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022